397

தமிழரசு

ஜனவரி - மார்ச் 1999

C

219562

பொங்கல்
மலர்
கலைஞரின்
சிங்கப்பூர் - மலேசியா
பயணச் சிறப்பிதழ்

நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

தமிழரசு

பொங்கல் சிறப்பிதழ்
முதலமைச்சர் கலைஞரின்
சிங்கப்பூர் – மலேசியப் பயணச் சிறப்பிதழ்
திருவள்ளுவராண்டு 2030
மார்கழி – தை
ஜனவரி 1–31, 1999
மலர் : 30 இதழ் : 13&14
விலை ரூ.6

இந்த இதழில்...

★ முதல்வர் கலைஞரின் பொங்கல் வாழ்த்து 2
★ இந்நாள் திருநாள் 3
★ அறிவியல்–தொழில்நுட்பப் பயன்களை கிராமத் தொழில்களுக்கும் கொண்டு செல்வோம் 5
★ உலக மனிதனை உருக்கி வார்க்க 7
★ பொங்கட்டும் நன்மைகள் 8
★ தமிழினத் திருநாள் 9
★ திருவள்ளுவர் திருநாள் 10
★ புதுப் பொங்கல் 13
★ தமிழ்த்திருநாள் கண்ட நமச்சிவாயனார் 14
★ சிங்கப்பூர் – மலேசியாவில் கலைஞர் 17

சுற்றுப்பயணத்தின் வண்ணப்படத் தொகுப்பு I-VIII

★ சிங்கப்பூர் – மலேசியாவில் சங்கத்தமிழ் 56
★ பாவேந்தரின் தமிழ் மொழியுணர்வு 60
★ பொங்கல் போற்றுவோம்! 62
★ இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தரும் இனிய நினைவுகள் 63
★ இந்த மாதத்தில் 67
★ மனிதம் பேணுக 70
★ வள்ளுவரின் அறிவியல் 71

<u>முதல் பக்க அட்டையில்</u>
சிங்கப்பூர் – மலேசிய பிரதமர்களுடன்
முதலமைச்சர் கலைஞர்

<u>கடைசிப் பக்க அட்டையில்</u>
கோலாலம்பூர் வரவேற்பில்
முதலமைச்சர் கலைஞர்
உரையாற்றுகிறார்.



முதல்வர் கலைஞரின்

பொங்கல் வாழ்த்து

பொங்கல் விழா!

தமிழர்களின் பொன்னான விழா!

புன்னகை தவழும் விழா!

குழலும் யாழும் குழந்தையின் மழலையும், கோதையர் ஆடலும்,

குமரர்கள் வீரமும் எங்கும் நிறைந்திடும் இனிய விழா!

"அமிழ்தே வா! தைப்பொங்கல்

திருநாளே வாவா!

அகமகிழ்ச்சி கொண்டு வா

எல்லோர்க்கும் இங்கே!"

– என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அன்பொழுக அழைத்து இன்பம் கண்ட இனிய விழா!

எந்த ஒரு விழாவின் பெருமையும், உழைப்பின் விளைவாகத்தான் அமைய முடியும். அந்த உழைப்பும், உறுதியும் பெருகிட இந்தப் பொங்கல் விழா ஊக்கமளிக்கிறது.

தமிழகம் முழுவதும் சீரான மழை – செழிப்பான விளைச்சல் என இந்த ஆண்டில் வேளாண்மையின் வளம் பெருகியுள்ள வேளையில் மகிழ்ச்சியுடன் பொங்கல் விழாவினைக் கொண்டாடிடும் தமிழக மக்கள் அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் என் நெஞ்சார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழைத்த உழைப்பின் பயன்கண்டு – அப்பயனை உற்றார் உறவினர்களுக்குப் பகிர்ந்து வழங்கி – வேளாண் பெருமக்கள் தமது உழைப்பில் உதவிய கால்நடைகளுக்கும், கதிரவனுக்கும், வான் மழைக்கும் நன்றி உணர்வினை வெளிப்படுத்திடும் அரிய பண்பாட்டுத் திருநாளாக தமிழ்ச் சமுதாயத்தினால் கொண்டாடப்பட்டு வரும் இந்தப் பொங்கல் திருநாளில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் உலகளாவிய மனித நேயம் வளர்ந்திட – "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் உயரிய சித்தாந்தம் கோலோச்சிட சாதி– மத வேறுபாடுகள் மறைந்து – சமதர்மச் சிந்தனைகள் மலர்ந்து மணம் பரப்பிடத்தக்க சூழ்நிலைகள் உலகம் முழுதும் பெருகிட அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திடுவோமெனச் சூளுரைப் போமாக!

219562

இந்நாள் திருநாள்

– பேரறிஞர் அண்ணா

இன்று திருநாள்! இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங்கலோ பொங்க'லென்று மகிழ்ச்சியுடன் குரலெழுப்பி, தாமும், தம்மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத்திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத்தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுள்ளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்! 'பால் பொங்கிற்றா?' – என்று, அன்பு பொங்கக்கேட்டு, அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெல்லாம் வழியும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்றதோர் களிப்பொலி' எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகையினை விரட்டினான்! நில மடந்தைக்குப் புதிய எழிலூட்டினான் – நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண்டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம்,

பெருந்தேரோடும் நிலையை அரசர்க்கே அளிக்கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண்ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது!

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான், கல்லிலும், முள்ளிலும் நடந்தான் – காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான் – பகலெல்லாம் பாடுபட்டான் – முளைவிட்டதும் மகிழ்ந்தான் – களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான் – கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ, பொன்னாடை போர்த்துக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல்மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டு கோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வு சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் – மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை;

கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய் தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறை மணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும் – பசுந்தழை பத்து வண்டி வேண்டும் – பண்ணையாரிடம் இன்னது

கூறவேண்டும் – வேலியை இவ்விதம் சரிசெய்ய வேண்டும்' என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான் – 'மணி' அவனுக்கல்ல என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன். அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது – புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான் – தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள், இப்பொங்கற் புதுநாள்' – என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி நாற்று நட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப்பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள் – ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை – நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவின், மாண்பினைக் குறித்து, வியந்து விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும்; இசையும் கூத்தும், உடற்பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடைபெற வேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும், அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்கு பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டிவருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும்; அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கல் புது நாளே அமைந்திருக்கிறது.

இந்த ஆண்டும், நாம் விழா கொண்டாடியும், மன்றமதில் நின்று மறத் தமிழன் மாண்பினைக் கூறியும், இன்று வந்துற்ற இழிநிலையைப் போக்குவது குறித்தும் எடுத்தியம்பத்தான் போகிறோம்.

செங்கரும்பு, பலா, மா, வாழை, செந்நெல், ஆவின்பால், புத்தாடை – ஏதேதோ தரலாம், தம்பி, உனக்கு! ஆனால் என்ன செய்வது! இவைகளை எல்லாம்விட என் 'அன்பு' இம்மலர் மூலம் உனக்குக் கிடைத்திடச் செய்தலே முறை என்று எண்ணினேன். உன்னிடம் கூறவேண்டுமென்று எண்ணிய கருத்துக்கள் பல; பலப்பல; ஒரு சிலவற்றைத்தான் கதை, கட்டுரை வடிவாக்கி அளித்திட முடிந்தது. இவற்றினைப் பார்க்கும்போது, உன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் வேறு பல நற்செயலுக்கு உறைவிடமாக்கி, நமது நாட்டினுக்கு நல்கி, பொங்கலன்று காணும் மகிழ்ச்சி நாட்டின் பொதுமகிழ்ச்சி ஆவதற்கான நற்பணியாற்றிட வரவேண்டும் என்று அழைகிறேன் – உரிமையுடன் நம்பிக்கையுடன்.

'இன்று கூடவா, அண்ணா!' என்றா கேட்கிறாய்?

சரி, சரி, போ! போ! அதோ பொங்கும் இன்பத்தைப் பெறு, பொலிவு கண்டு அகமகிழ்ந்திரு; உள்ளம் நிறைந்திடும் உவகையுடன் உரையாடி களிப்புற்று இரு. நின் இல்லம் இன்பப் பூங்காவாகத் திகழட்டும்; அங்கு அறிவு மணம் கமழட்டும்; அன்பு பொங்கட்டும். அறம் தழைத்திடத்தக்க அரும்பணியாற்றிடும் ஆற்றல் எழட்டும்.

பொங்கற் புதுநாளன்று என் அன்பு நிறைந்த வாழ்த்தினை, வழங்கி மகிழ்கிறேன்.

அதோ, பெற்றோர் அழைக்கிறார்கள் போலும்; சென்று, செங்கரும்பின் சாறன்ன அன்புரை பெற்று இன்புற்றிரு!

(1956 திராவிடநாடு பொங்கல் மலரிலிருந்து) ★

வாழ்த்தும் – வணக்கமும்

'தமிழரசு'
வாசகர்களுக்கு...
முகவர்களுக்கு...
சந்தாதாரர்களுக்கு...
எழுத்தோவியங்களை
வழங்கிடும்
அறிஞர் பெருமக்களுக்கு...
எங்கள்
ஆக்கப் பணிகளில்
துவளாது துணையிருந்து
ஊக்குவிக்கும்
நண்பர்களுக்கு
அன்பார்ந்த
புத்தாண்டு – பொங்கல்
நல்வாழ்த்துக்களையும்,
வணக்கங்களையும்
தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்

அறிவியல் – தொழில்நுட்பப் பயன்களை

கிராமத் தொழில்களுக்கும் கொண்டு செல்வோம்

– முதலமைச்சர் கலைஞர்

"நமது பாரதப் பிரதமரை வரவேற்பதில் நான் பெருமகிழ்வெய்துகிறேன். அவர், இந்திய அறிவியல் காங்கிரசின் 86—வது கூட்ட தொடக்க விழாவிற்காக இங்கு வருகை புரிந்துள்ளார். அறிவியலுக்கும், அறிவியல் வளர்ச்சிப் போக்கிற்கும், விஞ்ஞானிகளுக்கும் ஊக்கம் அளிப்பது நமது நாட்டின் பொறுப்பாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த அறிவியல் கருத்தரங்கில் பாரதப் பிரதமரும் மற்ற தலைவர்களும் கலந்து கொள்வதிலிருந்தே இது வெளிப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்தியாவிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் விஞ்ஞானிகள் பலர் கலந்து கொள்வதன் மூலம் இவ்விழாவினைச் சிறப்படையச் செய்வது கண்டு நான் மகிழ்வடைகிறேன். அதிலும் குறிப்பாக, உயிரியல் மற்றும் மருத்துவத்தில் நோபல் பரிசுகளைப் பெற்ற பேராசிரியர் ஜே.டி. வாட்சன், பேராசிரியர் ஃப்ரெட்ரிக் ராபின்சன் ஆகிய இருவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். சென்னை மாநகரத்தில் இத்தகையதொரு அறிவியல் கருத்தரங்கு 40 ஆண்டுகளுக்குப் பிறகு நடப்பது மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது.

இன்று அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அதாவது உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் இந்தியாவில் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நன்கு வேரூன்றியுள்ளது. பூச்சிக் கொல்லிகள் மற்றும் ரசாயன உரங்கள் ஆகியவற்றிற்குப் புதிய மாற்றுப் பொருட்களைக் கண்டுபிடித்து செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதை அனைவரும் அறிவர்.

நாம் அடுத்த நூற்றாண்டை நோக்கி அடியெடுத்து வைப்பதால் இக்கருத்தரங்கின் நோக்கம், அதாவது புதிய உயிர் — அறிவியல் வாய்ப்புகளையும், சவால்களையும் எதிர்நோக்க ஏற்புடையதாய் அமைந்துள்ளது.

தமிழ்நாடு இத்துறையில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்துள்ளது. மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவரால் 29.7.1998 அன்று மகளிருக்கான பொன்விழா உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா நிறுவப்பட்டது.

டானிடெக் (TANITEC) மூலம் கொண்டு வரப்பட்ட கல்வித்திட்டங்களும் டிட்கோவால் அமைக்கப்பட்ட டைடல் பூங்காவும் தமிழக அரசால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

தமிழ்நாட்டில் அறிவியலுக்கும், தொழில் நுட்பவியலுக்கும் எப்போதும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்விக்கு அளிக்கப்பட்டு வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இந்நாட்டிலேயே மிகவும் சிறந்ததாக உள்ளது என்பது யாவரும் அறிந்ததே. உயிர் தொழில் நுட்பவியல் மற்றும் தொழில் வளர்ச்சியில் திறன் பெற இது பெரிதும் உதவியாக அமையும். உலக அளவில் ஈடுகொடுக்க இம்முயற்சி பெரிதும் உதவும்.

அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களான திரு. இராமானுஜம், திரு.ஜி.என். இராமச்சந்திரன் திரு.ஏ.இராமச்சந்திரன், திரு. நாயுடம்மா, திரு. சி.வி. இராமன், திரு. கே.எஸ். கிருஷ்ணன், திரு.எஸ். சந்திரசேகர், திரு. என்.வர்கீஸ் குரியன், திரு. அப்துல் கலாம் ஆகியோருக்கும்; மற்றும் பலருக்கும் நாம் பல வகையில் கடமைப் பட்டுள்ளோம்.

இப்பெருந்தகையாளர்கள் அனைவரும் இம்மாநிலத்தில்தான் கல்வி கற்றார்கள். அவர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் உலகிற்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் நமது பொது மக்களிடையே பல ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய சூழ்நிலையைப் பின்வருமாறு விளக்கியுள்ளார் :

"எமதர்ம ராஜாவின் வாகனம் உங்களுக்குத் தெரியுமா?" என்று நமது மக்களைக் கேட்டால், அவர்கள் "எருமை" என்று உடனடியாக பதிலளிப்பர்.

ஆனால், "வானூர்தியைக் கண்டுபிடித்தது யார்"? என்று கேட்டால் அவர்கள் தெரியாது என்று பதிலளிப்பர்".

தற்போது நிலைமை முற்றிலுமாக மாறியுள்ளது. மிகவும் உட்பகுதியில் அமைந்துள்ள கிராமத்தில் உள்ள சாதாரணமான ஒருவர், அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக்கூட நன்கறிந்துள்ளார். அவர்கள் கணினி மற்றும் இணையம் போன்ற சாதனங்களைப் பற்றி அறிந்துள்ளதுடன் மட்டுமல்லாது போக்ரான் மற்றும் அணுகுண்டு பற்றியும் அறிந்துள்ளனர்.

தகவல் —தொழில்நுட்பவியல் இந்த உலகத்தை ஒரு "உலக கிராமமாக" மாற்றியுள்ளது.

இவ்வாறாக அறிவியலும், தொழில்நுட்பவியலும் தற்போது அதன் உச்ச நிலையை எய்தியுள்ளன.

இப்போதும் கூட பொதுமக்களுக்கும் அவர்கள் அறிவியல் குறித்துப் பெற்றுள்ள ஞானத்திற்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது. எனவே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியலின் பயன்களைப் பெரிய தொழில்களுக்கும் கிராமத் தொழில்களுக்கும் கொண்டு செல்ல நாம் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டியுள்ளது.

"அறிவியல் மாநகருக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்காக நமது அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கருத்தரங்குகளுக்கும் பொருட்காட்சிகளுக்கும், தொழில் நுட்ப வளர்ச்சிப் பூங்கா, குழந்தைகளுக்கான அறிவியல் பூங்கா, அறிவியல் தொழில் நுட்பத் தகவல் கட்டமைப்பு போன்றவற்றிற்காக உலகத் தரத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ள கருத்தரங்கு மையமும், இவற்றில் அடங்கும். இந்த முயற்சிகள் சென்னையில் உள்ள அனைத்து நிறுவனங்களின் உடனுழைப்புடன் திட்டமிடப்பட்டுள்ளன. அவர்கள், தற்போது இந்தப் பெரிய அளவிலான கருத்தரங்கை நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகவல்கள் அனைத்தும் கிராம மக்களுக்குச் சென்றடையும் வகையில் கிராமங்களுக்குக் கணினி இணைய வசதிகளைச் செய்து கொடுக்கும், அதிலும் குறிப்பாக, தமிழில் செய்து கொடுக்கும் முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தகைய நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், கம்பியில்லாத் தந்தி மற்றும் கணினி இணையத் தகவல் தொடர்பு ஏற்பாடுகள் இந்த மாநாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையறிந்து நான் உண்மையில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்திய அறிவியல் காங்கிரஸ் அசோசியேஷனுக்காகக் கணினியில் தனியிடம் (Home Page) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இராமாநுஜம் கணினி மையம், இத்திட்டத்திற்கெனப் பதிவு செய்துள்ள பல நிறுவனங்களைக் கணினிமயமாக்கும் பணியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இத்துடன், சென்னைப் பல்கலைக் கழகம், கணித அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து சென்னையைச் சேர்ந்த புகழ்பெற்ற கணித மேதையின் பெயரில், "இராமானுஜம் அருங்காட்சியகம்" ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நான் அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மத்திய அரசின் ஆதரவை அளிப்பதன் மூலம் இந்த அருங்காட்சியகத்தைத் தேசிய சொத்தாக்குவது குறித்து பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

விருது பெற்றுள்ள அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்களனைவரும், இனிவரும் ஆண்டுகளில் நாட்டிற்குச் செய்யும் தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிவர வேண்டுமென்றும், நம் நாட்டை உயரளவில் ஒளிபெறச் செய்வீர்கள் என்றும் நாம் நம்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விழாவில், விழா மலரை வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்கிறேன்.

— மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.1.1999 அன்று இந்திய அறிவியல் கருத்தரங்கின் 86வது கூட்டத்தின் தொடக்க விழாவில் 'விழா மலரை' வெளியிட்டு ஆற்றிய உரை.

★ ★ ★

உலக மனிதனை உருக்கி வார்க்க...

– தமிழன்பன்

சூரியனையும் பூமியையும்
தொட்டுக் கொண்டு பேசினான்
கணியன் பூங்குன்றன்
தமிழ் அவன் சொற்களுள் புகுந்து
திசைகளை விரிவு படுத்தியது.

எல்லா நாட்டு
அருவிகளிலும் நதிகளிலும்,
மனித இரத்தம் ஒன்றே என்று
ஒருகோடி உதடுகளை இயற்கை திறந்தது.

ஊர் ஒவ்வொன்றிலும் வீடு ஒவ்வொன்றிலும்
கதவில்லா உறவுகள்
காத்திருந்தன மனிதன் வருகைக்காக.

பூங்குன்றன் வாக்கியங்களுக்குள் வந்து
பொன்னும் மணியும் வைரமும்
வெளிச்சம் அருந்தி வெளியே புறப்பட்டன.

அவனுடைய அகவலோசையில் அன்பின்
இதயவாசம் கமழ்ந்தது
சந்தனமும் பன்னீரும் சவ்வாதும்
'எப்படி அன்பைக் கமழ்வது?'
இப்படி எண்ணத் தொடங்கின.

பூங்குன்றன் கண்கள் இரண்டிலும்
சமமாய் உட்கார்ந்தனர்
சிறியவரும் பெரியவரும்.

தராசுகள் தயாரித்த பார்வைகளைச்
சமத்துவம்
சமூக வீதிக்குக் கொண்டு வந்தது.

வியத்தலும், மகிழ்தலும், இனிமேல் தங்களுக்கு
வேலையில்லை என்று
விலகியபோது
ஊரார் வைத்திருந்த சிலுவையும் தொட்டிலும்
உபயோகம் இழந்தன.

தீதும் நன்றும்
எங்கென்று தேடியவர்கள்
அவன் காட்டிய வழியில் நடந்து
திரும்பி வந்தனர் தங்களுக்கு உள்ளேயே.

சுரமும் வழுச்சுரமும்
இருப்பது பாடலில் இல்லை; தங்கள்
குரல்களில் என்று உணரத் தொடங்கினர்.

பட்டாம்பூச்சிச் சிறகுகளில்
ஒட்டிக் கொண்டிருக்கும் புன்னகையும்,
மழைவில்லில் தில்லானா பாடும் வண்ணங்களும்
குழந்தைகள் விழிகளைச்
சித்திரப் படுத்தும் நட்சத்திரங்களும்
திரைமறைவுகளில் ஆலோசனை செய்வதே இல்லை!
ஆனால்...

அர்த்தங்களை மாற்றி வைத்து
வார்த்தையை, வாழ்க்கையை
அழுக்காக்கி விடுகிறான் மனிதன்!
திசை மாற்றி வைப்பானோ மனிதன் என்று
தினம் தினம் விடியல்கூடத்
தடுமாறி விடுகிறது!

மழை, நெருப்பு, காற்று, நிலா
ஆகியவை
பேசும் மொழிகளில் தாமும் இருக்கின்றன
ஈரம், வெப்பம், இசை, ஒளி
என்பனவும் இருக்கின்றன.
மனிதன் பேசும் மொழிகளில்
வெறியும் சுயநலமும், அச்சமும் வீம்பும்
இருக்கின்றன.
மனிதன் மட்டுமே இல்லாமற் போகிறான்.

எங்கெங்கும்

இந்தப் பூமியின்தோல் ஒன்றேதான்
என்ற பாப்லோ நெருடாவும்,
மனிதனைப் பாடுவேன் என்று கவிதையால்
உலகைக் கழுவிவைத்த
வால்ட் விட்மனும்
பூங்குன்றன் எழுத்தாணியைப்
புதுப்பித்துக் கொண்டவர்கள்.

இங்கும்

உலகமனிதனை, உருக்கி வார்க்கக்
கொல்லுப் பட்டறை திறந்தனர்
பூங்குன்றன் பேரர்கள்!
இதோ
சத்தியச் சுத்தியல், சம்மட்டி ஓசை—
'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'

பொங்கட்டும் நன்மைகள்

- கொடுமுடிக் கவிஞர் க.அ. பிரகாசம்.

★ வெயிலென்றும் மழையென்றும் பகலென்றும் இரவென்றும்
பாராமல் உழைத்த மக்கள்
வெற்றியுடன் கொண்டாடும் பொங்கலோ பொங்கலிது
விளையட்டும் நன்மை பலவே!

★ உயிர்தரும் ஐம்பூத வகைகளும் ஆனிரைக்
குலங்களும் உயர்வு பெறவே
உலகெலாம் பொதுவாகப் போற்றிடும் பொங்கலிது
உள்ளத்தில் மகிழ்ச்சி யுறவே!

★ துயிலாமல் அயராமல் உழைப்பைநிலை யாக்கிடும்
தூயவர்கள் காணும் பொங்கல்!
துளியளவும் மாசுமரு வில்லாமல் குமுகாயம்
துலங்கவே வளரும் பொங்கல்!

★ மயிலாடக் குயில்பாட மலர்ச்சோலை தளிர்த்திட
மழைவளம் பெருக வேண்டும்
மாந்தர்கள் இயற்கையைக் காத்திடும் முயற்சியில்
மனதார இறங்க வேண்டும்!

★ தெருவெங்கும் ஊர்வலம் திருவிழாக் கோலங்கள்
தெவிட்டாத காட்சி யின்பம்
செந்நெல்செங் கரும்போடு வாழையும் மஞ்சளும்
இஞ்சியும் குவியும் எங்கும்!

★ அருமையுற இல்லங்கள் தோறும்எழில் குடிகொள்ளும்
அமைதியும் அன்பும் தோன்றும்
ஆவாரை பூலப்பூ வேம்பினைக் கூட்டியே
அருட்காப்புக் கட்டு வார்கள்!

★ பெருமையுறப் பைந்தமிழ்ப் பண்பாடு பாரெலாம்
பிறங்கவே பொங்கல் பொங்கும்
பிணியற்ற இயற்கைநல் வாழ்க்கையால் பிறர்நலம்
பேணிடும் தன்மை வேண்டும்!

★ பொருந்தியன போற்றியே பொருந்தா தனவற்றைப்
போக்கியே நல்ல நிலைமை
பொங்கவே நன்மைகள் தங்கவே இவ்வேளை
பொங்கட்டும் பொங்கல் தானே! □

தமிழினத் திருநாள்

- கவிஞர். சாமி.பழனியப்பன்

மனிதனைத் தெய்வ மாக்கி
வானகந் தன்னை இங்கே
இனிதுற மலர்விக் கின்ற
இன்னருங் குறளைத் தந்த
நனிபுகழ் வள்ளு வர்க்கு
நாம்விழா எடுப்ப தல்லால்
தினையள வேனும் வாழ்வில்
திருக்குறள் மணங்கண் டோமா?

குறள்வழி வாழ்வு கண்டால்
கொடுமைகள் மாளும்; இங்கே
அறநெறி தழைக்கும்; நல்ல
அருள்மணம் கமழும்; இன்பம்
குறைவிலா தோங்கும்; நந்தம்
குறுமனம் விரியும்; இம்மண்
குறள்தந்த மண்ணென் றேத்திக்
கூறுதல் மிகப்பொ ருந்தும்!

வான்மறை தந்தே இந்த
வையத்துப் புகழைக் கொண்ட
தேன்தமிழ் நாடென் றேநாம்
சிறப்புறப் பேசு கின்றோம்.
வான்மறை வகுத்துத் தந்த
வாழ்வியல் கொளம றந்தோம்
வீண்புகழ் பேசி நாளை
வீணுறக் களிக்கின் றோமே!

அறுபதாண் டென்கின் றோமே
அறுபதும் கழிந்த பின்னர்
மறுபடி பிறக்கும் ஆண்டு
மறுகணக் காகுமல்லால்
அறுபத்தொன் றாவ தில்லை!
ஆதலால் தமிழ ராண்டைக்
குறள்தந்த புலவன் பேரால்
கொள்வதே முறைமை ஆகும்!

தைத்திங்கள் முதல்நாள் தன்னைத்
தமிழாண்டின் தலைநா ளாக்கித்
தைப்பொங்கல் திருநாள் தன்னைத்
தமிழினத் திருநா ளாக்கி,
வித்தப் பொங்கல் நாளில்
விரிபுகழ் குறளுக் கிங்கே
நித்தில உரையாய் வாழ
நெஞ்சிலே உறுதி கொள்வோம்!

திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாள் விழா 16.1.99 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. அவ்விழாவில் திருவள்ளுவர் விருதினை டாக்டர் வா.செ. குழந்தைசாமிக்கு வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

நம்முடைய பெருமதிப்பிற்குரிய அறிஞர் பெருந்தகை குழந்தைசாமி அவர்களுக்கு திருவள்ளுவர் விருது வழங்கியது மாத்திரம் இல்லாமல், சிறந்த நூல்கள் எழுதிய ஆசிரியப் பெருமக்களுக்கு, எழுத்தாளப் பெருமக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிசுத் தொகையும் கடந்த ஆண்டினை விட இந்த ஆண்டு அதிகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

நூல்களின் பதிப்பகத்தாருக்கும் பரிசுத்தொகை

நூல்களை பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டன. அவர்கள் வரிசையாக மேடைக்கு வந்து சான்றிதழ்கள் பெறும்போதுதான், அமைச்சர் தமிழ்க்குடிமகனைப் பார்த்து – "இவர்களுக்கு எவ்வளவு பரிசுத் தொகை" என்று கேட்டேன். "இல்லை சான்றிதழ் மாத்திரம்தான்" என்றார்.

அடுத்த ஆண்டு முதல் பதிப்பாளர்களுக்கும் – வெளியீட்டாளர்களுக்கும் பரிசுத் தொகை வழங்கவேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது ஆணையாக விரைவில் வெளியிடப்படும் என்ற உறுதியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளுக்குப் பரிசை வழங்கிவிட்டு, பெற்றவளுக்கு அல்லது காப்பாற்றியவளுக்குத் தரவில்லை என்றால் அது தவறாகிவிடும். வெளியீட்டாளர்கள் ஒரு அழகிய நூலை மக்களுக்குத் தருகின்ற அந்த வாய்ப்பினைப் பெற்றவர்கள். அவர்கள் அமர்ந்திருக்கும்போதே அவர்களால் வெளியிடப்பட்ட புத்தகங்களுக்கு அல்லது அதை எழுதிய ஆசிரியர்களுக்குப் பரிசளிக்கும்போது நமக்கு வெறும் சான்றிதழ்தானா என்று அவர்கள் எண்ணி, கவலைப்படுவதேகூட பரிசுத்தொகை பெறுகின்றவர்களுக்கு நல்லதல்ல என்பதால் புத்தகங்களை வெளியிடுகின்ற பதிப்பகத்தாருக்கும் ஒரு உரிய தொகையை வழங்கவேண்டுமென்ற என்னுடைய ஆசை அடுத்த ஆண்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

அமைச்சர்கள் கலந்துகொள்கின்ற விழா என்றாலே அதிலே முறையீடுகள், கோரிக்கைகள் வைக்கப்படுவது வாடிக்கை. அதற்கொப்ப என்னுடைய தம்பி கவிஞர் வைரமுத்து அவர்கள் ஒரு வேண்டுகோளை இந்த அவையின் முன் வைத்தார். "இதுதான் சரியான நேரம்; காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்று எங்கேயோ சொல்லவேண்டியதை – யாரோ செய்து கொண்டிருப்பதை என்னைப் பார்த்துச் சொல்லி "திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க முழக்கமிடு" என்று கேட்டுக் கொண்டார்.

திருக்குறள் தேசிய நூலாக ஆக்கப்படுமேயானால், – அதற்காக நான் மகிழ்ச்சி அடையமாட்டேன். உலக நூலை, ஒரு தேச அளவில், சுருக்குவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அது உலகப் பெருநூல், உலகத் திரு நூல். அதை தேச அளவில் மட்டும், ஒரு நாட்டு அளவில் சுருக்குவது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதது. நான் இப்படிச் சொன்னதற்காக அவர்கள் திருக்குறளை தேசிய நூலாக ஆக்குவார்களேயானால், கவிஞர் வைரமுத்து போன்றவர்கள் மகிழ்ச்சியடையட்டும், நான் அனுமதிக்கிறேன்.

தமிழைச் செம்மொழியாக ஆக்க மத்திய அரசுக்கு வேண்டுகோள்

ஒரு கோரிக்கை – தமிழக அரசால் நீண்ட நெடுங்காலமாக மத்திய அரசுக்கு தொடர்ந்து வைக்கப்பட்டு வருகின்றது. தமிழைச் செம்மொழி (Classical Language) என்று ஆக்க வேண்டும். அழைக்க வேண்டுமென்ற இந்த முறையீட்டை நான் நேரிலும் மத்திய அமைச்சர்களிடம் சொல்லியிருக்கிறேன். மடல்கள் வாயிலாகவும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறேன். அதனை மத்திய அரசு விரைவில் செய்திட வேண்டுமென்ற வேண்டுகோளை அறிஞர் பெருந்தகை குழந்தைசாமி அவர்களுக்கு விருது வழங்குகின்ற விழாவில் மத்திய அரசின் காதிலே விழுமென்ற நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் செம்மொழி என்பதற்கு எந்தவிதமான பட்டிமன்றமும் நடத்தத் தேவையில்லை. அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு பேருண்மை அது. அந்த உண்மைக்கு, நாங்கள் விடுக்கின்ற வேண்டுகோளுக் கிணங்கி தமிழைச் செம்மொழியாக ஆக்குகின்ற – அறிவிக்கின்ற இந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் இந்த அவையில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு திருவள்ளுவர் விருதைப் பெறுகின்ற குழந்தைசாமி அவர்கள் கலைஞருடைய கரங்களால் இதைப் பெறுவதால் தான் பெருமை அடைகிறேன் என்று சொன்னார்கள். இது ஒரு அவை அடக்கம் என்றுதான் நான் எடுத்துக் கொள்வேனேயல்லாமல் நிச்சயமாக ஒரு துளி அளவுகூட எனக்கு ஆணவத்தை அது வழங்காது என்பதை அறிஞர் குழந்தைசாமி அவர்களே நன்கறிவார்கள்.

எழுத்தை முதலிலே வைக்கவில்லை. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று தான் தொடங்குகிறான். அது அடுத்து வருகின்ற கண் என்ற சொல்லுக்காக – எதுகை, மோனை என்பார்களே அதற்காக வைக்கப்பட்டது என்று சொல்லப்படும் சொல் அல்ல. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று அவர் சொல்வதில் இருந்தே அவர் எழுத்தை முன்வைக்க முயன்று அதிலே இலக்கணம் சரியாக வராத காரணத்தால் எண் என்று சொன்னார் என்று யாராவது சொல்வார்களேயானால் அதற்கு தான் தருகின்ற விளக்கம் இதுதான் என்று குறிப்பிடுகிறார் – எண்ணென்ப ஏனை எழுத்தென்ப என்று சொல்வதிலிருந்தே, எண்தான் மிகவும் முக்கியமானது. ஏனையவைகளில் ஒன்று எழுத்து என்று வெகு அழகாகக் குறிப்பிட்ட அந்த வாக்கியத்தைப் பார்த்து நான் மலைத்துப் போனேன்; எவ்வளவு மதி நுட்பத்தோடு, சிந்தனை ஆற்றலோடு இந்தக் கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று.

அறிஞர்களுக்கு விருது வழங்குவதில் நான் பெருமை அடைகிறேன்

பதவிகளுக்கு மேலும் சிறப்பு தேடித் தந்தவர்

அவரைப் போன்ற பெரியவர்களுக்கு, பெருந்தகைகளுக்கு, அறிஞர் பெருமக்களுக்கு விருது வழங்குவதால் நான் சிறப்படைகிறேன். பெருமையடைகிறேன். என்னுடைய சுயநலத்தின் காரணமாகத்தான் அவரைப் போன்றவர்களுக்கு இத்தகைய விருதுகள் வழங்கப்படுகின்றன என்ற உண்மையை – உண்மையான உண்மையை நான் இங்கே தெரிவிக்கிறேன்.

அவர்கள் "வாழும் வள்ளுவம்" என்கின்ற ஒரு நூலை எழுதியிருக்கிறார்கள். அந்த நூலில் எண், எழுத்து என்ற இந்த இரண்டு கருத்துக்களையும் குறித்துக் குறிப்பிடும்போது, வள்ளுவன் எண், எழுத்து என்பதிலே

அவருடைய சிறப்புக்கள், அவருக்குக் கிடைத்த புகழ், பெருமை குறித்தெல்லாம் தம்பி வைரமுத்து அவர்களும், விழாத் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்களும், தம்பி துரைமுருகன் அவர்களும் வெகுவிளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொறியியல் துறையில், தொழில்நுட்ப இயலில் பல பட்டங்களைப் பெற்றவர் அவர். நீர் வளத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர் அவர். யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகம், புதுவை மையப் பல்கலைக்கழகம் இவற்றால் டி.லிட். பட்டம் பெற்றவர் அவர்.

நீர்வளத் துறையின் பேராசிரியராகவும், தொழில்நுட்பத் துறையின் இயக்குநராகவும் விளங்கியவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்,

அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தர் ஆகிய பொறுப்பு மிகுந்த, சிறப்பு நிறைந்த பதவிகளையேற்று, அந்தப் பதவிகளுக்கு மேலும் சிறப்பு தேடித் தந்தவர்.

குழந்தைசாமி மாதிரியே தமிழ் இளைஞர்கள் வளரவேண்டும்

இவருடைய கண்டுபிடிப்புகளிலே ஒன்று இங்கே குறிப்பிட்டார்கள் – அதற்குப் பெயர் “குழந்தைசாமி மாதிரி” என்று சொன்னார்கள். அது நீர்வளத்துறை கண்டுபிடிப்பு. ‘குழந்தைசாமி மாதிரி’ நீர்வளத்துறை கண்டுபிடிப்பு மாத்திரம் இருந்தால்போதாது. குழந்தைசாமி மாதிரியே தமிழகத்திலே உள்ள இளைஞர்கள் எல்லாம் வளர வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை.

அடக்கம், அறிவுத் திறன், ஆற்றல், இவைகள் எல்லாவற்றையும் மீறிய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, சமுதாயம் மேலோங்க வேண்டுமே என்ற ஆசைக் கனவில் அன்றாடம் மிதந்து கொண்டிருக்கின்ற ஒரு அரிய மனிதரைக் காண வேண்டுமேயானால் அந்த மனிதர் குழந்தைசாமிதான் என்று நான் அடையாளம் காட்டுவேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இங்கே பேசிய சில நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல் இந்த திருவள்ளுவர் விருது வழங்குகின்ற இந்த நிகழ்வு தமிழக அரசு கொண்டு வந்த திட்டம் என்றாலுங்கூட – இன்றைக்கு நான் இந்த விருது வழங்குகின்ற காரணத்தால், நான் கொண்டு வந்த திட்டம், என்னுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த திட்டம் என்று யாரும் தவறாக எண்ணி விடக்கூடாது. என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த நேரத்தில்தான் 1986ஆம் ஆண்டு திருவள்ளுவர் விருது வழங்குகின்ற இந்த நிகழ்வு உருவாக்கப்பட்டு, தொடர்ந்து பல அறிஞர் பெருமக்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

விருது வழங்கும்போது அளிக்கப்பட்ட தொகை பத்தாயிரம் இருபதாயிரம் என்றிருந்து இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. அதைக்கூட குழந்தைசாமி அவர்கள் – அரசின் சார்பிலே ஒரு இலட்சம் என்று வழங்கிவிட்டால் பிறகு அரசினுடைய கருவூலம் என்ன ஆவது என்ற ஒரு கேள்வியை எழுப்பி உங்களையெல்லாம் திடுக்கிட வைத்தார்.

அரசின் கருவூலத்திலிருந்து கோடி கோடியாகப் போனபோதெல்லாம் கவலைப்படாத மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒரு இலட்சம் ரூபாய் நல்ல காரியத்திற்காக – பல குழந்தைசாமிகளை தமிழகத்திலே உருவாக்குவதற்காக பல விஞ்ஞான வித்தகர்களை, பல அறிவுலக மேதைகளை தமிழகத்திலே படைப்பதற்காக இலட்சம் ரூபாய் ஆண்டுக்கு ஒரு முறை என்ன, மாதாமாதம் கூட ஒரு இலட்சம் ரூபாய் வழங்கலாம்.

திருவள்ளுவர் அறிவுரைகளை ஏற்று சமுதாயம் சீர்பட முடியும்

திருவள்ளுவரின் மேன்மைகளை, குறளின் சிறப்புக்களை என்னுடைய தம்பி கவிஞர் வைரமுத்து இங்கே எடுத்துச் சொன்னபோதும் நம்முடைய குழந்தைசாமி அவர்களும், தமிழ்க்குடிமகன் அவர்களும், தம்பி துரைமுருகனும் இங்கே எடுத்துச் சொன்னபோதும் எத்தகைய வழிகாட்டியை இந்தத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை எண்ணியெண்ணி நாம் பெருமையடைகிறோம். அந்த வழிகாட்டியின் பெயரால் ஒரு விருதை வழங்குவதும் – இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய் என்று வழங்குவது மூக்கிலே விரல் வைத்து ஆச்சரியப்படத்தக்கதாக இருந்தாலுங்கூட, எதிர்காலத்திலே இந்தத் தொகையும்கூட இரட்டிப்பாக – மும்மடங்காக ஆகலாம் என்ற அளவிற்கு உயர்ந்தால்தான் திருவள்ளுவருடைய நெறிகளை, முறைகளை, அவருடைய அறிவுரைகளை இந்தச் சமுதாயம் ஏற்றுச் சீர்பட முடியும்.

திருவள்ளுவருக்கு நாம் செய்துள்ள சிறப்புகள் நமக்காகத்தான். திருவள்ளுவரை பெருமைப்படுத்துவதற்காக அல்ல. திருவள்ளுவருக்கு கோட்டம் கட்டினோம் என்றால், திருவள்ளுவருக்கு குமரி முனையிலே சிலை வைக்கிறோமென்றால், திருவள்ளுவருடைய படங்களை பேருந்துகளிலே தொங்கவிட்டு, ஒவ்வொரு படத்தின் கீழும் ஒரு திருக்குறளை எழுதினோமென்றால் இதற்கெல்லாம் காரணம், அந்த வழியிலே இந்தச் சமுதாயம் மலர வேண்டும் என்பதற்காகத்தான். அந்த மறுமலர்ச்சியை நாம் பெற்றாக வேண்டும்.

இனிவரும் உலகத்திற்காக திருவள்ளுவர் சொன்ன அரிய கருத்துக்கள்

திருவள்ளுவர் காலத்திலே இல்லாத முன்னேற்றம் இல்லாத விஞ்ஞானம் இன்றைக்கு இருக்கிறது. இதை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவைகள் எல்லாம் இல்லாத காலத்திலேயே திருவள்ளுவர் இனிவரும் உலகத்திற்காக பலவற்றைச் சொல்லியிருக்கிறார். அந்த இனிவரும் உலகத்திற்காக அவர் சொல்லியிருக்கின்ற அரிய கருத்துக்களையெல்லாம் நாம் வீணாக்கி விடாமல் அவைகளையெல்லாம் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளோடு என் உரையை நிறைவு செய்து நம்முடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய குழந்தைசாமி அவர்களுக்கும், இங்கே பரிசு பெற்ற நூலாசிரியர்களுக்கும் எழுத்தாள நண்பர்களுக்கும், பதிப்பகத்தாருக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★

புதுப் பொங்கல்

– பந்தல்குடி. சு. சுப்பையா

செங்கதிர் தொழுது நாளும்
செம்புலம் உழுத தோழா!
மங்கலம் உயர்ந்து மண்ணில்
மாண்புறு உவகை பொங்க
எங்கணும் சிறந்து நன்றாய்
ஏற்றமே தழைப்ப தற்கு
பொங்கலை வேண்டி நீயும்
பொழுதெலாம் உழைத்து நின்றாய்!

சேற்றிலே ஏரைப் பூட்டி
செழுவயல் கலக்கி நல்ல
நாற்றுகள் நட்டு பயிரை
நன்றாகக் காத்து மக்கள்
சோற்றையே விரும்பி அள்ள
சோம்பலும் சிறிதும் இன்றி
ஊற்றிலே சுரத்தல் போல
உயிரெனும் உணவு தந்தாய்!

சித்திரை மாதம் தொட்டே
சீர்மிகு வாழ்வை எண்ணி
நித்திரை ஏதும் இன்றி
நீங்கா துழைத்த தாலே
எத்தனை விளைச்சல் இங்கே
எண்ணியே உள்ளம் துள்ள
இத்தரை மீதில் தந்தாய்
இனிதாக வாழ்த்து கின்றேன்!

கனிமிகு வாழை என்றும்
கரும்புடன் மஞ்சள் என்றும்
நனிமிகு செந்நெல் என்றும்
நறுமண இஞ்சி என்றும்
பனிமிகு துயரம் நீக்கி
பற்பல காய்கள் என்றும்
அணிபெற உழைத்து ஈந்தாய்
அன்பொடு வாழ்த்து கின்றேன்!

உள்ளமெனும் பானை தன்னில்
உழைப்பெனும் அரிசி இட்டு
கள்ளமிலா அன்பு என்னும்
கனிச்சாறு வெல்ல மிட்டு
சொல்லரிய ஒருமை என்னும்
சுவைப்புதுப் பொங்கல் வைப்போம்;
நல்லதை நாடும் நாளில்
நானிலம் உண்ணப் படைப்போம்!

'பொங்குக பொங்கல் பொங்குக எங்கணும்!
பொங்குக பொங்கல் இன்பமே எய்துக.
பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!
பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!
ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க!
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!
புத்துடை உடுமின்; புத்தணி அணிமின்!
பக்தி கொண்டே பரமனைப் பணிமின்!
நந்தம் தமிழ்மொழி நலம்பெற்றோங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!
தண்கடற் பரப்பிற் சாரும் மணலிலும்
பண்புற வானில் பரவும் மீனிலும்
வாழ்க அனைவரும் வாழ்க பல்லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!'

முதன்முதலாகப் பொங்கல் விழாவைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடத் தலைப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாயனார் வழங்கிய திருநாள் வாழ்த்து இதுவாகும்.

தமிழ்த் திருநாள் கண்ட நமச்சிவாயனார்

-பேராசிரியர் க. அன்பழகன்

இந்த நூற்றாண்டின் முதற்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்வு தமிழர் என்னும் உணர்வற்றுத் தட்டுத் தடுமாறி நின்றது. தமிழ் மரபு, தமிழர் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்பவை குறித்துத் தெளிவின்றி நிலை கெட்டு நின்றனர் தமிழர். தமிழ் கற்ற புலவர்களிலேயே பலர், சமயச் சார்பால் கருத்துக் குழம்பிக் கிடந்தனர் எனில் மக்களைப் பற்றிக் கூறவா வேண்டும்? தமிழ் கற்றார் சிலர், கற்றாருள்ளும் தெளிந்தார் மிகச் சிலர், அவருள்ளும் தெளிந்ததனை வெளியிடும் துணிவுடையாரோ அரியர்.

அந்நிலையை தெளிந்தார் **நமச்சிவாயனார்**. மக்களிடையே விளங்கிய பல்வேறு விழாக்களும், சில நம்பிக்கைகளும் சமயச் சார்பான கதைகளையும் வடமொழிவழி எழுந்த வழக்குகளையும் ஒட்டியே கைக்கொள்ளப்பட்டனவாதலையும், பொங்கல் விழா ஒன்று மட்டுமே தமிழர் மரபொடு பொருந்தியும், இயற்கை நெறியோடும் உழவுத் தொழிலோடும் வேளாண்மைப் பண்போடும் விழாச் சூழலோடும் விளங்கியும், சமய வேற்றுமை கடந்து தமிழர் யாவர்க்கும் உரியதாயும் அமைதலைக் கண்டறிந்தார். வாழ்கின்ற தமிழ் மக்கள் எல்லோரும், தாய்மொழிப் பற்றும் தமிழ் மொழித் தெளிவும் கொள்ளுதற்கு இத்திருநாளே ஏற்ற நன்னாள் எனக் கொண்டார்.

பண்டைத் தமிழரின் பெருவாழ்வை – சங்கத் தமிழ் இலக்கிய மாட்சியை – தமிழர்கள் பயின்ற கூத்தை – இத்திருநாளில் விளக்கியுரைத்தும், பாடிக் கேட்டும், ஆடிக் கண்டும் மக்கள் அறிந்து மகிழ வேண்டும் என்று விரும்பினார்.

அதன் பயனாகவே, பழந்தமிழ்ப் பொங்கல் விழா, உழவரும் பிறரும் மகிழ்ந்த கொண்டாட்டம், முத்தமிழ் முழங்கும் தமிழ்த் திருநாளாய் வண்ணாங் கொண்டது. நமச்சிவாயனார் தொடங்கி வைத்த தமிழ்த் திருநாளே, தென்னவர் எழுச்சிக்கு உரமூட்டும் திராவிடர் திருநாளாகவும் கொண்டாடப்படுவதாயிற்று.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மக்களிடையே தமிழ்ப் பற்று இல்லை. மாணவரிடையே தமிழ் கற்கும் ஆர்வம் இல்லை. அறுநீர்க் குளத்தில் ஆம்பல் பூக்குமோ? காயும் வெயில் எரிக்கையில் அல்லிதான் மலருமோ? தமிழகத்தின் தலையாய பல்கலைக் கழகத்திலும் ஒரு வட்டாரப் பேச்சு மொழி என்னும் பெயருடன் செந்தமிழ் ஓர் ஒதுக்கிடத்தில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. தமிழர்கள் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ்ப் புலமை எய்துதற்குப் பல்கலைக்கழகத் தேர்வு முறையிலேயே இடமில்லை. வடமொழியும் கற்றார்க்கே தமிழ்ப் புலமை உடையார் என்னும் தகுதி கிடைக்கும் என்னும் இடர்ப்பாடும் இழுக்கும் அடர்ந்து நின்றன. பள்ளிச் சிறார் தம் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்பக் கற்றற்கான நடையில் எழுதப்பட்ட ஏடுகளும் இல்லாது தமிழ்த் துளிர்கள் கருகிக் கொண்டிருந்தன.

அந்நிலையில் இந்தக் குறைகளைக் களைவதில் முன்னின்று, தமிழுக்குப் பல்லாற்றானும் தொண்டாற்றியவர் பேராசிரியர் நமச்சிவாயனார்.

தொண்டை மண்டலத்தில் உள்ள காவேரிப் பாக்கத்தில் 1876ஆம் ஆண்டில் பிறந்து, இளமையிலேயே தமிழ்க் கல்வி கற்று, சென்னையில் ஒரு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து, பெரும் புலவர் (மகா வித்துவான்) சண்முகம் பிள்ளை என்பாரிடம் தம்மை மாணவராக ஆக்கிக் கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கேட்டுத் தெளிந்தார். பின்னர் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றிலும் மேரி அரசியார் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றிப் புலமைத் திறத்தாலும், தமிழ் ஆர்வத்தாலும் தம்மிடம் பயின்ற மாணவ மாணவியர்க்குத் தமிழ் அமுதூட்டி, இலக்கியத் தேன்சுவை பயிற்றி இளந்தமிழ் உள்ளங்களில் தமிழ் ஆர்வப் பயிர் தழைத்தோங்கச் செய்தார். அதுகாறும், தமிழ் மாணவர்கட்குத் தமிழ் வகுப்பு என்றாலே வேண்டப்படாத வேம்பாக, கசப்பு மருந்தாக இருந்தது போக, அவரது தமிழ் இனிமையால், அதுவே விரும்பிச் சுவைக்கும் கரும்பாக, இனிப்புக் கட்டியாக மாற்றங் கொண்டது என்றால் மிகையாகாது.

அக்காலப் புலவர்கள் சமய நோக்கத்துடனேயே தமிழ் ஏடுகளைப் பயின்றதன் பயனாக, அவர்களிடையே சமய வேற்றுமை தலைதூக்கி நின்றது. சாதி பற்றிய மூடநம்பிக்கையாலும் வெறுப்பு வளர்ந்தது. இவற்றால் பிறந்த சண்டைகளும், தாக்குதல்களும் பலப்பலவாதலின், புலவரிடையே ஒற்றுமையும் புலமையிலே மொழிப் பற்றும் அரிதாயின. அவர்களால் தமிழ் தழைத்து வளரத்தான் கூடுமோ? நமச்சிவாயனாரோ, தம்முடைய ஆசிரியரான பெரும் புலவர் சண்முகனாரிடம் கற்கப் புகுந்த காலத்திலேயே, தாம் சமயச் சண்டையிலும், சாதிப் பிணக்குகளிலும் ஒரு நாளும் தலையிடாதிருப்பதாக அவர் விதித்த கட்டளையை உளமார ஏற்றிருந்தார். பின்னாள்களில் அவரது எண்ணமும் செயலும் பொது நோக்குடையனவாகச் சிறக்க அஃது ஏதுவாயிற்று எனலாம். அவர், சைவந் தழுவி நின்றபோதிலும், அவரது தமிழ்த் தொண்டு, ஒரு பக்கச் சார்புடையது ஆகாது. புலவர்களிடையே தமிழ் அடிப்படையினின்று எழும் பொது உணர்ச்சியும், ஒற்றுமையும் உருவாகத் துணையாயிற்று.

தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடுவதற்கும், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பில்லாதிருந்த நிலையில் அவற்றிற்கு வாய்ப்பாக முதன்முதலாகப் புலவர் சங்கம் ஒன்று தோற்றுவிக்க முனைந்தார் அவர். சென்னைத் தமிழ்ப் பண்டித் சங்கம் பிறந்தது. புலவர்கள் ஒன்றுகூடி, உரையாடி மகிழக் கருத்து விருந்து நுகரத் தம் குறைகளை அரசினருக்கு எடுத்துக்கூறிக் களையுமாறு கேட்க, தமிழாசிரியர் தம் மதிப்பைக் கல்வித் துறையிலும் சமுதாயத்திலும் உயர்த்திக்கொள்ள இச்சங்கமே உறுதுணையாயிற்று.

அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய தமிழ் ஆசிரியர்கள் சிறந்த புலவர்களாயினும், குறைந்த ஊதியமே பெற்று வருந்தினர். நமச்சிவாயர், அரசாங்கத்தை வற்புறுத்தித் தமிழாசிரியர் தம் ஊதியத்தை உயர்த்தச் செய்தார்.

பேராசிரியர் 1917ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித் தேர்வுக் குழுவின் தலைவராகவும் 1920ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தமிழ்க் கல்விக் குழுத் தலைவராகவும் அமர்ந்தார்.

அந்நாள்களில் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம்பெற விரும்பும் ஒரு தமிழ்மகன், தமிழேயன்றி வடமொழியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என விதி இருந்தது. வடமொழியை ஒதுக்கின் பிறிதொரு மொழியில் தேர்ச்சி பெறவேண்டும். அதன் பயனாகத் தமிழ்நாட்டில் வாழும் பிற மொழியாளர்கள் 'வித்துவான்' ஆவதற்கு இருந்த எளியவாய்ப்பு தமிழர்க்கு இல்லை. 'வித்துவான்' பட்டம் பெற்றவர்களும், அச்சொல்லின் வடிவுக்கேற்பப் பெரும் பாலும் வடமொழி பயின்றவர்களே! வடமொழியும் கற்றவர் என்று கூறுவது பொருந்தாது. தமிழும் கற்றவர்கள் எளிதாகத் தமிழ் வித்துவான்கள் ஆனார்கள். உண்மையான தமிழ்ப் புலமை யுடையார் பலரும், 'வித்துவான்' பட்டம் பெறுவதற்கு இடமில்லாத நிலை! என்னே தமிழ்த் தாயின் அவலம் இருந்தவாறு!

நமச்சிவாயர் கல்விக்குழுத் தலைவராக அமர்ந்த பின்னரே, பல்கலைக்கழகத்தில், தமிழ்ப் புலமையும் அமர்வதாயிற்று. தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு, இத்தேர்வு விதிகள் இடையூறாகும் வகையை அரசினருக்கு விளக்கிக் கூறி, வலியுறுத்தி அதனை மாற்றுவதற்கு இசைய வைத்தார். அதன் பயனாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக் கற்ற அளவில், வித்துவான் பட்டம் பெறலாகும், நீதி பிறந்தது.

சாதி ஒழிப்பிற்கு நேரானவழி கலப்பு மணமே. இரத்தக் கலப்பினால் உறவு உணர்ச்சி சகோதர உணர்ச்சி உண்டாகும். சகோதர உணர்ச்சி தோன்றாதவரை வேற்றுமை உணர்ச்சி இருந்து கொண்டுதான் இருக்கும்.

– அம்பேத்கர்

இக்காலத்தில் தமிழ்ப் புலமையுடையார் பலராகப் பெருகி வாழ்தற்கு வழியமைத்துத்தந்த பேரறிவாளர் அவரே.

தமிழ்மொழி காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் ஒவ்வொரு துறையிலும் சிறக்க வேண்டுமென விரும்பி அவர் ஆற்றிய பணிகள் பல.

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் குழந்தைகள் படித்ததற்கு ஏற்ற சிறுவர் ஏடு முதல் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி வகுப்புகள் முடிய ஒவ்வொரு நிலையிலும் வகுப்பிலும் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற, உற்ற பாட நூல்கள் வரை, ஆங்கில மொழியில் அமைந்தவற்றிற்கு ஈடான பல ஏடுகளை எழுதினார் பேராசிரியர். எளிதான சில சொற்களில் தொடங்கி, வளமான கருத்துச் செறிந்த செந்தமிழ்க் கட்டுரை வரையில் இயற்றி, தமிழ்க் கல்விப் பயிர் வேர்விட்டு வளர நீர்பாய்ச்சினார். கற்றார் பலரும் படித்ததற்கு ஏற்ற நூல்களும் எழுதினார்.

நாடகத் துறையில் மேல்நாட்டு இலக்கிய வளர்ச்சியைக் கண்ணுற்ற அவர், சில நாடகங்களும் (கீசகன்; பிருதிவிராசன்) இயற்றினார். நல்ல தமிழ் நடை வளரவும் இலக்கியப் பயிற்சி செழிக்கவும், ஒரு திங்கள் ஏடு தேவை எனக் கண்டு 'நல்லாசிரியன்' என்னும் இதழைத் தொடங்கிப் பதினைந்து ஆண்டுக் காலம் பயனுற நடத்திப் பலருக்கும் அத்துறையில் வழிகாட்டியானார்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் அவர் ஆர்வம் கொண்டார். இளம்பூரணர் உரையோடு தொல்காப்பியத்தின் சொல்பொருள் அதிகாரங்களையும் இறையனார் களவியலையும் வேறு சில இலக்கியங்களையும் அவர் பதிப்பித்தார்.

அவரது தமிழ்ப் பணியின் அருமையும் பெருமையும் அவர் மறைந்த ஞான்று, தமிழ்ப் பெரியார், திரு.வி.க. அவர்கள் உள்ளங் கரைந்து பாடிய இரங்கற்பாவின் அடிகள் சிலவற்றால் விளங்கும்.

'அருந்தினை தமிழைப் பொருந்தி அமிழ்தென
என்றும் இன்மொழி நன்றே வழங்கினை
சாதியை யொழித்து நீதியில் நடந்தனை
செந்தமிழ்த் தாயின் சிந்தை மகிழக்
கால ஒப்பனை சாலச் செய்தனை

...

நின்மொழி யுன்ன நின்செயல் எண்ண
உள்ளங் குழையும் ஊனுங் கரையும்
என்பு நெக்குறும் அன்புக் கடலே
பெரிதே துன்பம் பெரிதே
காண்ப தென்றோ
மாண்புறு முகமே!'

இவ்வாறு தமிழ்ப் பெரியார் உள்ளத்தில் இடம் பெற்ற நமச்சிவாயர் தமது உள்ளத்தில் தமிழுக்குத் தந்திருந்த இடம்தான் என்னே?

'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!
உணர்விலுக குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!
மாந்தருக் கிருகணாய் வயங்குநன் மொழியே!
தரணியில் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!
தனித்தனி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!'

தனித்தினிது ஓங்குவாய் எனத் தமிழை வாழ்த்தி, தமிழ் உணர்வு வளரும் வழி போற்றித் தமிழ்த் திருநாள் விழா எங்ஙனும் தேர்ற்றித் தமிழனாக வாழ்ந்த பேராசிரியர் நினைவு தமிழொடும் வாழாதோ?

– 'நம்நாடு' பொங்கல் மலர் 1978லிருந்து. ★

சமுகத்தில் அங்கம் பெற்றிருக்கும் உறுப்பினர் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்குச் சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்கவேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம் ஆகும்.

– அம்பேத்கர்

சிங்கப்பூரில் கலைஞர்

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஆறு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4–1–1999 அன்று விடியற்காலை சிங்கப்பூர் விமான நிலையம் வந்தடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு சிங்கப்பூரில் உள்ள தமிழ் அமைப்புகளின் சார்பிலும், இந்திய தூதுவரகத்தின் சார்பிலும் வரவேற்பளிக்கப்பட்டது.

வர்த்தக வளர்ச்சிக் கழகம் சார்பில் முதலமைச்சர் கலைஞருக்கு டான் வீ வென், ஓங் பூன் குவான் ஆகியோர் பூங்கொத்துக் கொடுத்து வரவேற்றனர்.

இந்தியத் தூது வரகத்தின் சார்பில் சிங்கப்பூரில் உள்ள இந்தியத் தூதுவர் திரு.பிரேம்சிங், தூதரக இரண்டாம் நிலை அதிகாரி திரு. சந்திரசேகரன் ஆகியோரும் முதலமைச்சரை வரவேற்றனர்.

பல்வேறு தமிழ் அமைப்புகளின் சார்பில் தமிழ் முரசு ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு, தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் திரு. அமலதாசன், தமிழ் மொழிப் பண்பாட்டுக் கழகத் தலைவர் திரு. அரிகிருஷ்ணன் மற்றும் திரு. நா. ஆண்டியப்பன், கிருஷ்ணன், இந்திரா கிருஷ்ணன் ஆகியோரும் முதலமைச்சருக்கு பூங்கொத்து அளித்து வரவேற்றனர்.

முதலமைச்சரின் மகள் கனிமொழியும் மருமகன் அரவிந்தனும் விமான நிலையம் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் தமிழ் முரசு இதழ் சார்பில் முதலமைச்சர் கலைஞரின் சிங்கப்பூர் பயணம் குறித்து கருத்து கேட்டபோது முதலமைச்சர் கலைஞர் கூறியதாவது:–

"நீண்ட காலமாக தமிழகத்திற்கும் சிங்கப்பூருக்கும் கலாச்சாரத் தொடர்பு இருந்து வருகிறது. இந்தத் தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையில் என்னுடைய இந்தப் பயணம் அமையும் என்று நம்புகிறேன். இந்தப் பயணத்தில் இங்குள்ள தமிழக மக்களைச் சந்திப்பதிலும் பொதுவாக சிங்கப்பூர் பொதுமக்களைச் சந்திப்பதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு – அரசாங்கத்தின் முக்கியப் பிரமுகர்கள், தொழில் முனைவர்களுடனான சந்திப்பும் பயன் உடையதாக இருக்குமென்று கருதுகிறேன்.

சிங்கப்பூர் பயணம் என்பது என்னுடைய நீண்டக்காலக் கனவு. இது இன்று நிறைவேறுவதில் பூரிப்புக்கொள்கிறேன்".

சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் குழுத்தலைவருடன் சந்திப்பு

முதலமைச்சர் கலைஞர் அவர்களை அவர் தங்கியுள்ள மாண்டரின் ஹோட்டலுக்கு வந்து, சிங்கப்பூரில் உள்ள இந்திய வர்த்தகக் குழுவின் தலைவர் திரு. தேவேந்தர்சிங் 4–1–99 அன்று சந்தித்தார். சந்திப்பின்போது சிங்கப்பூரில் உள்ள இந்தியத் தூதுவர் திரு.பிரேம்சிங், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி, தொழில்துறைச் செயலாளர் திரு.எம்.எஸ். சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

திரு. தேவேந்தர் சிங், இந்திய அரசின் தொழில் மற்றும் வளர்ச்சிக் கொள்கை, அந்நிய முதலீட்டை ஈர்க்கும் நோக்கத்துடன் பல்வேறு மாநில அரசுகள் உருவாக்கிவரும் கொள்கைகள் ஆகியவை பற்றிச் சரியான தகவல் சிங்கப்பூர் நாட்டில் உள்ள முதலீட்டாளர்களுக்கு, குறிப்பாக இங்கு வாழும் இந்திய வர்த்தக முதலீட்டாளர்களுக்குக் கிடைப்பதில்லை என்றும் இந்த நோக்கில் பார்க்கும்போது தமிழக முதலமைச்சரின் வருகை மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என்றும் அவரிடமிருந்து இவை குறித்து அறிய இந்திய வர்த்தகக் குழுவின் உறுப்பினர்கள் மிக ஆவலுடன் இருப்பதாகவும் கூறினார். கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழக அரசு பல்வேறு வகைகளிலும், தொழிற்கொள்கையைச் சீர்திருத்தி அமைத்திருப்பதையும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருப்பதையும் முதலமைச்சர் கலைஞர் எடுத்துரைத்தார்.

சிங்கப்பூர் தகவல் தொடர்புத்துறை அமைச்சருடன் சந்திப்பு

பிறகு 4–1–99 அன்று பிற்பகல் 3 மணிக்கு சிங்கப்பூர் நாட்டுத் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு.மா போ டான் அவர்களை முதலமைச்சர் கலைஞர் சந்தித்து உரையாடினார். தகவல் தொழில்நுட்பத்துறையில் சமீபத்தில் தமிழக அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் விளக்கிய முதலமைச்சர், இத்துறையில் மிக வேகமாக முன்னேறியுள்ள சிங்கப்பூர் நாட்டு அனுபவங்கள் தமிழக அரசின் செயலாக்கத்திற்கு மிகப் பயனுள்ளதாக அமையும் என்று கூறினார். இந்திய நாட்டில் பெருமளவில் கிடைக்கும் தகவல் தொழில் நுட்பத்துறையின் நிபுணத்துவத்தைக் கோடிட்டுக் காட்டிய சிங்கப்பூர் நாட்டு அமைச்சர், இந்திய நாட்டுடன் அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவுடன் இணைந்து இத்துறையில்

செயலாற்றுவதில் சிங்கப்பூர் அரசு ஆர்வமாக இருப்பதாக உறுதி அளித்தார்.

சிங்கப்பூர் துறைமுகக் கழகத் துணைத்தலைவர் சந்திப்பு

அடுத்து சிங்கப்பூர் துறைமுகக் கழகத்தின் துணைத் தலைவர் கூன் கோக் லூன் அவர்களுடன் முதலமைச்சர் கலைஞர் சந்தித்து உரையாடினார். 1972ஆம் ஆண்டு சிறிய அளவில் ஓர் அரசுத்துறையாக தொடங்கப்பட்ட சிங்கப்பூர் துறைமுகம் மிகவேகமாக வளர்ந்து இன்று உலகிலேயே அதிக அளவு சரக்கு ஏற்றுமதி–இறக்குமதி செய்து வருவதை விளக்கிய துணைத்தலைவர், இன்னும் ஓரிரு ஆண்டுகளில் இதைத் தனியார் மயமாக்க சிங்கப்பூர் அரசு எண்ணி இருப்பதையும் கூறினார்.

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களின் விரிவாக்கப் பணிகளில் சிங்கப்பூர் துறைமுகக் கழகம் தற்பொழுது பங்குபெற்றுப் பணியாற்றி வருகிறது. மேலும் சென்னைக்கு அருகே புதிதாக அமைக்கப்படும் எண்ணூர் துறைமுகம் இந்திய அரசால் நிறுவன அமைப்பாக அறிவிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் இது சிங்கப்பூர் துறைமுகக் கழகத்திற்கு மேலும் வாய்ப்பு அளிப்பதாக அமையக்கூடும் என்றும் முதலமைச்சர் எடுத்துச் சொன்னார். மேலும் தமிழகத்தின் தென்கோடியில் உள்ள குளச்சலில் ஒரு புதிய துறைமுகம் அமைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதைச் சுட்டிக்காட்டிய முதலமைச்சர், தமிழக அரசினால் மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள சேதுசமுத்திரம் கால்வாய்த் திட்டம் இதனுடன் இணைந்து, ஒருங்கிணைந்த திட்டமாகச் செயலாக்கப்பட சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும், இதில் பங்கு பெற சிங்கப்பூர் துறைமுகக் கழகத்திற்கு வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறினார். முதலமைச்சருக்கு நன்றி கூறிய துறைமுகக் கழகத் துணைத் தலைவர், இத்திட்டத்திற்குச் செயல்வடிவம் கொடுப்பதில் சிங்கப்பூர் துறைமுகக் கழகம் பெரிதும் ஆர்வம் காட்டும் என்றும் உறுதியளித்தார்.

அதன்பின், முதலமைச்சர் கலைஞர் துறைமுகத்தின் பல்வேறு பகுதிகளையும், அங்கு நடைபெற்றுவரும் சரக்கு ஏற்றுமதி–இறக்குமதி நடவடிக்கைகளையும் விரிவாகப் பார்வையிட்டார்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சிங்கப்பூர் வானொலிக்கு அளித்த பேட்டி

கேள்வி : மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களே, எங்கள் ஊருக்கு முதன்முதலாக வந்திருக்கிறீர்கள். உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

சிங்கப்பூரும், தமிழகமும் சேர்ந்து தொழிலில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றன. இந்த நிலையில் சிங்கப்பூர் வந்திருக்கும் நீங்கள் இங்குள்ள தமிழ் மக்களுக்குக் கூறும் செய்தி என்ன?

கலைஞர் : உங்களுடைய அன்பான வரவேற்பிற்கு மீண்டும் மீண்டும் நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால் வந்தவுடன் சிங்கப்பூர் நாட்டிலே உள்ள எல்லா தமிழர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்படவில்லை. வேறு பல அலுவல்கள் இருந்த காரணத்தினால் அந்தச் சந்திப்பை உடனடியாக ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை. எனினும் அவர்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்கிற பேராவலோடு இருக்கும் எனக்காக சிங்கப்பூரில் உள்ள தமிழ் அமைப்புகள் அனைத்தும் சேர்ந்து 6–1–99 புதன் மாலை 5 மணியளவில் சிங்கப்பூர், 'சிங்கப்பூர் இண்டோர் ஸ்டேடியத்தில்' இலக்கிய உரை ஒன்றை நான் ஆற்றுவதற்காக ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு

செய்திருக்கிறார்கள். அப்போது சிங்கப்பூரில் வாழ்கிற தமிழ் உடன்பிறப்புகள் அனைவரையும் சந்திக்கின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டுமென்று நம்புகிறேன்.

கேள்வி : தமிழர்கள் இன்று தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகத்தில் பல்வேறு நாடுகளில் வாழ்கிறார்கள். தொழில் வளர்ச்சி கணினி யுகத்தில் புதிய புதிய யுக்தியை நோக்கிச் செல்கிறது. கணினியை தமிழகத்தில் இப்போது எந்த அளவிற்கு அறிமுகம் செய்யத் திட்டமிட்டிருக்கிறீர்கள்?

கலைஞர் : இது கணினி யுகம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். ஏன் என்றால் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தொலைக்காட்சி, வானொலி என்ற நிலைமை இருப்பது மட்டுமல்லாமல் கணினி இல்லாத வீடு இல்லை என்கிற சூழ்நிலை விரைவில் ஏற்படும் என்றே நான் நம்புகிறேன். அதிலும் குறிப்பாக சிங்கப்பூரில் கணினியின் பயன் எந்த அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது. அது மாத்திரமல்ல, இந்தப் பயனை நாங்களும் பெற வேண்டுமென்று விரும்புகின்ற காரணத்தால் கணினியை எப்படியெல்லாம் இங்கே பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளும் வகையில் இன்று இங்கே நான் சந்தித்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்களிடம் பேசியிருக்கிறேன். தமிழகத்தில் வரும் பிப்ரவரி திங்கள் முதல் வார இறுதியில் இந்தக் கணினி பற்றி மேலும் விரிவாகப் பேசிட, முயற்சிகளை மேற்கொள்ள ஓர் இணைய மாநாடு நடைபெறவிருக்கிறது. அனைத்துலக நாடுகளில் இருக்கிற தமிழ் அறிஞர்களும், வல்லுநர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். முதல் கட்டமாகப் பள்ளிக்கூடங்களில் கணினி மூலம் பாடம் போதிக்க வேண்டும் என்பதற்காக – தமிழ்நாடு அரசு சார்பில் முதல் கட்டமாக விதை ஊன்றுவது போல – இந்தத் திங்களில் – நூறு பள்ளிகளில் கணினியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

மேலும் வோர்ல்ட் டெல் – நிறுவனத்தின் சார்பில் ஆயிரம் இடங்களில் சமுதாய அளவில் இந்தக் கணினியைப் பயன்படுத்துகின்ற ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கேள்வி : இன்று பல அதிகாரிகளையும் அமைச்சர்களையும் நீங்கள் சந்தித்திருக்கிறீர்கள். உங்கள் நோக்கம் எந்த அளவிற்கு நிறைவேற இருக்கிறது என்று கூறுங்கள்?

கலைஞர் : என்னுடைய நோக்கத்திற்கு – என்னுடைய கருத்துக்களுக்கு இன்றைக்கே ஒரு முடிவு ஏற்பட்டு ஒப்பந்தங்களாகிவிட்டன என்று நான் சொல்ல இயலாது. சில கருத்துக்கள் என்னால் இங்கே கூறப்பட்டிருக்கிறது. அதைப்போல, சில கருத்துகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் எதிர்காலத்தில் மேலும் விரிவாக ஆராய்ந்து ஏற்ற முடிவுகளை எடுப்போம்.

கேள்வி : இலக்கியத்துறை என்று சொன்னவுடன் உங்கள் நினைவுதான் எங்கள் நெஞ்சில் என்றும் இருக்கும். குறளோவியம், சங்கத்தமிழ், பொன்னர்–சங்கர் ஆகியவைகளைத் தொடர்ந்து தமிழுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

கலைஞர் : நான் தொடர்ந்து தமிழுக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்கிற கருத்துடையவன் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். நான் முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலக்கட்டத்திலும், இப்போதிருக்கிற இந்தக் காலக்கட்டத்திலும் தமிழுக்காகத் தொண்டாற்றிக் கொண்டுதானிருக்கிறேன். தமிழ் இலக்கியங்கள் பலவற்றை படைத்திருக்கிறேன். என்னுடைய தொண்டு தொடரும்.

கேள்வி : எங்களுடைய பல வினாக்களுக்கு விடை தந்து – சிங்கப்பூர் வானொலி நேயர்களுக்கு உங்கள் பதில்களைத் தெரிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைஞர் : என்னுடைய அன்பிற்குரிய தமிழ் நேயர்களே, இப்போது உங்களை வானொலி மூலமாகத்தான் சந்தித்திருக்கிறேன். நேரில் சந்திக்கும் அரிய வாய்ப்பு 6ஆம் தேதி 5 மணிக்குக் கிடைக்கும் என்ற பேராவலோடு காத்துக் கொண்டிருக்கிறேன்.

தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் விருந்தில்

சிங்கப்பூரில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5–1–99 அன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். சிங்கப்பூர் மூத்த தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அளித்த பகல் விருந்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டபோது தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறித்தும், அதற்கு சிங்கப்பூர் அரசு எந்த வகையில் உதவிடலாம் என்பது பற்றியும் உதவிட வேண்டுமென்பது பற்றியும் உரையாடினார்.

விருந்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அவர்களும், அவரது துணைவியாரும் வாயிலில் நின்று வரவேற்றனர். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைச்சர் இயோ அவர்களுக்கு பொன்னாடை அணிவித்தார்.

விருந்தின்போது அமைச்சர் இயோ அவர்கள் சென்னை மாநகரத்தின் மேயரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகக் கூறி அவரை ஒருமுறை சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டு கொண்டார். முதலமைச்சருடன் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமியும், தொழிற்துறைச் செயலாளர் சீனிவாசனும் கலந்து கொண்டனர்.

பிரதமருடன் சந்திப்பு

5–1–1999 அன்று பிற்பகல் 4 மணி அளவில்

முதலமைச்சர் கலைஞர் சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் திரு. கோ சோக் டோங் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து 45 நிமிட நேரத்திற்கு மேல் உரையாடினார். பிரதமர் கோ சோக் டோங் அவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் பொன்னாடை அணிவித்து சந்தன மாலை அணிவித்ததோடு சந்தனத்தால் செய்யப்பட்ட வள்ளுவர் கோட்டத்தின் உருவ அமைப்பினைப் பரிசாக வழங்கினார். தமிழகத்தின் மரபுப்படி அவற்றை செய்கிறீர்களே என்று கூறி முதலமைச்சரை மிகுந்த அன்போடு பிரதமர் வரவேற்றார். 45 நிமிட சந்திப்பிற்குப் பின் வெளியே வந்த முதலமைச்சர் கலைஞரிடம் செய்தியாளர்கள் அதுபற்றிக் கேட்டபோது பிரதமருடான பேச்சு மிகவும் இனிமையாக இருந்ததாகத் தெரிவித்தார். முதலமைச்சரோடு இந்தப் பேச்சுவார்த்தையில் தொழிற்துறைச் செயலாளர் எம்.எஸ். சீனிவாசனும் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளர்கள் சந்திப்பு

சிங்கப்பூரில் உள்ள இந்திய வெளிநாட்டு தூதுவரகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் சந்திப்பு 5–1–1999 அன்று மாலை 5–30 மணிக்கு நடைபெற்றது. அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் பத்திரிகையாளர்கள் மத்தியில் முதலிலே கூறியதும், அதன்பிறகு அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அளித்த பதில்களும் வருமாறு:

"நேற்று (4–1–1999) காலை நான் இங்கு வந்தவுடன் இந்திய வர்த்தகக் குழுவின் தலைவர் திரு.தேவேந்திர சிங் அவர்கள் என்னைச் சந்தித்தார். எனது வருகை இங்குள்ள தொழில் முனைவோருக்கு தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றம் குறித்து சரியான முறையில் அறிந்து கொள்ளப் பேருதவியாக இருக்கும் என்றும் தமிழகத்தில் முதலீடு செய்ய அவர்களை ஊக்குவிக்கும் வகையில் என்னுடைய வருகை வரவேற்கத் தக்க வகையில் இருக்குமென்றும் திரு.தேவேந்திர சிங் என்னிடம் கூறினார்.

நேற்று மாலை 3 மணி அளவில் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் திரு. மா போ டான் அவர்களைச் சந்தித்து உரையாடினேன். தமிழ்நாட்டினுடைய தொழில் துறை முன்னேற்றம் குறித்தும், கணிசமான அளவில் தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழகம் முதலீடு செய்து வருவதைப் பற்றியும் இத்துறையில் மாபெரும் முன்னேற்றம் கண்டுள்ள சிங்கப்பூர் நாட்டின் அனுபவங்கள் தமிழ்நாட்டிற்கு உதவியாக இருக்குமென்றும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இத்துறையின் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தின் வலுவான நிலையைக் கருதி இருசாராருக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் ஒருங்கிணைந்து செயலாற்ற சாத்தியக் கூறுகள் வலிவாக உள்ளன என்று திரு.மா போ டான் கூறினார்.

பிறகு மாலை 4 மணிக்கு சிங்கப்பூர் துறைமுகக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. கூன் கோக் ஹூன் அவர்களைச் சந்தித்து அவருடனும் துறைமுகக் கழகத்தினருடனும் உரையாடினேன். கடந்த 25 ஆண்டுகளில் கணிசமான அளவில் முன்னேறி இன்று உலகிலேயே மிகப் பெரிய சரக்கு ஏற்றுமதி இறக்குமதித் துறைமுகமாக முன்னேறியுள்ளதைப் பற்றிக் கேட்டறிந்தேன்.

சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களின் விரிவாக்கப் பணிகளில் பங்கு பெற்று தற்போது பணியாற்றி வரும் சிங்கப்பூர் துறைமுகக் கழகத்திற்கு

குளச்சல் போன்ற துறைமுகப் பணிகளிலும் பங்கு பெற வாய்ப்புகள் உள்ளதையும் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். மேலும் சேது சமுத்திரம் கால்வாய்த் திட்டத்தைச் செயலாக்க மத்திய அரசு அளவில் மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதையும்; திட்டம் செயலாக்கப்படும் பொழுது, தூத்துக்குடி துறைமுகத்தின் திறன் இன்னும் பெரிய அளவில் அதிகரிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினேன்.

அதன்பிறகு துறைமுக வளாகம் முழுவதையும் சுற்றிப்பார்த்து நடைபெறும் பணிகளை விரிவாக அறிந்து கொண்டேன்.

இன்று 5–1–99 பகல் 1 மணிக்கு சிங்கப்பூர் நாட்டின் கலை, தகவல் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் அவர்கள் அளித்த விருந்தில் கலந்து கொண்டேன். அப்போது தமிழகத்தின் தொழில் துறையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அமைச்சர் ஆர்வம் காட்டினார்.

நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், இதன் அடிப்படையில் சுற்றுலா மேம்பாட்டிற்கு வாய்ப்புகள் சிறப்பாக உள்ளன என்றும், இத்துறையில் பெருமளவிலே முன்னேறியுள்ள சிங்கப்பூர் இதிலே பங்கு கொள்ள விரும்பினால் தமிழக அரசு அதை வரவேற்று ஆவனச் செய்யும் என்றும் சொல்லியிருக்கிறேன்.

மாலை 4 மணிக்கு சிங்கப்பூர் பிரதமர் திரு. கோ சோக் டோங் அவர்களைச் சந்தித்து 45 நிமிடங்கள் உரையாடினேன். இந்திய நாட்டின் பொருளாதாரக் கொள்கை குறித்துப் பேசினோம். அரசியல் நிலவரங்களைப் பற்றியும் பொதுவாகப் பேசினோம். 1991இல் ஏற்பட்டதைப் போல பொருளாதார நெருக்கடி (Crisis) எதுவும் தற்போது இல்லையென்றும், இந்தியாவின் பொருளாதார சீர்திருத்தங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு தொடருமென்றும் வரும் ஆண்டுகளில் இது மேலும் அதிகரிக்கும் என்றும் எனது நம்பிக்கையை விளக்கிச் சொன்னேன்.

ஆசிய அரங்கில் இந்தியா ஒரு முக்கியமான நாடு என்றும் இந்திய நாட்டின் கொள்கைகள் இந்தியாவினுடைய பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

போலி நபர்களையும் இடைத்தரகர்களையும் நம்பி தங்களது சொத்துக்களை விற்று இங்கு வந்து ஏமாந்து துயருக்குள்ளாகும் தமிழர்களின் அவல நிலை குறித்து எடுத்துச் சொன்னேன். தமிழ்நாடு அரசு இதனை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இதைத் தடுக்க முயற்சி செய்யுமென்றும், இதற்கு சிங்கப்பூர் அரசு ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். தமிழ்நாடு அரசு இதைத் தடுப்பதற்கு சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று கூறியதோடு இதைப் பொறுத்தவரை பிரதமரும் சிங்கப்பூர் அரசும் தக்க அறிவுரைகளும் எச்சரிக்கைகளும் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவரும் அப்படியே செய்வதாக உறுதியளித்தார். தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழர்கள் இப்படி ஏமாற்றப்படுவது பற்றி பிரதமரும் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

பிப்ரவரி 7,8 தேதிகளில் தமிழக அரசு நடத்தவுள்ள உலகத் தமிழ் இணையம் கருத்தரங்க மாநாட்டில் கலந்துகொள்ளும்படி சிங்கப்பூர் பிரதமரை அழைத்து ஏற்கெனவே மத்திய அரசு மூலம் கடிதம் எழுதியிருப்பதைச் சொன்னேன். மாநாட்டிற்கு முடிந்தால் தானே வருவதாகவும் இல்லாவிட்டால் ஒரு அமைச்சர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அனுப்புவதாகவும் உறுதியளித்த பிரதமர் இது ஒரு சிறந்த முயற்சியென்று பாராட்டினார்.

இவ்வளவிற்கும் பிறகு இப்போது உங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

கேள்வி : சிங்கப்பூர் பிரதமருடன் குறிப்பிட்ட தொழில் திட்டம் பற்றி பேசினீர்களா?

கலைஞர் : குறிப்பிட்ட தொழிற்திட்டம் என்று எதுவும் பேசவில்லை. நான் அவரைச் சந்தித்தது மரியாதை நிமித்தம் தான். நான் ஏற்கெனவே வந்தவுடன் சொல்லியிருக்கிறேன், நான் இங்கு வந்திருப்பது தொழிற் திட்டங்களை இறுதிப்படுத்தி ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்காக அல்ல; இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள கலாச்சார தொடர்புகளையும், உறவுகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளத் தான் வந்திருக்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் பிரதமருடன் பேசிய பேச்சு வார்த்தையில் குறிப்பிட்ட தொழில் என்று நீங்கள் கேட்பது போலச் சொல்ல வேண்டுமேயானால் பெட்ரோலிய கெமிகல் பார்க் ஒன்று தமிழ்நாட்டில் உருவாவதற்கு மாஸ்டர் பிளான் எல்லாம் தயாராகிவிட்டது என்றும், அது ஒரு கூட்டு முயற்சி என்றும், ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் அதை நிறைவேற்றுவதாக இருக்கிறோம் என்றும் அந்தக் கூட்டு முயற்சியில் சிங்கப்பூர் அரசும் பங்கு கொள்ளலாம் என்றும் சிங்கப்பூர் பிரதமரிடம் கூறியிருக்கிறேன்.

சாப்ட்வேர் தொழிலைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இப்போதே ஏராளமாக வளர்ந்து வருகின்ற காரணத்தினால் ஹார்டுவேர் தொழிலை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை எடுத்துக் காட்டி எஸ்பிட் ஹேபிடாட் அதாவது ஹார்டுவேர் பார்க் மாதிரி ஒன்றை இரண்டு அரசுகளும் சேர்ந்து ஒப்பந்தம் செய்து கொண்டு சிங்கப்பூர் அரசு நிறைவேற்றலாம் என்றும் குறிப்பிட்டேன். இவைகளைப் பற்றியெல்லாம் தொடர்ந்து பேசலாம் என்று என்னிடம் கூறியிருக்கிறார்.

தமிழகம் தொழில் துறையில் 96 வரையில் ஐந்தாவது இடத்தில் இருந்தது. கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் காரணமாக மராட்டிய மாநிலத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்திற்கு வந்திருக்கிறது என்றும், எகானமிக் டைம்ஸ் பத்திரிகையில் டிசம்பர் மாதத்தில் முதலீடு செய்வதற்கு சென்னை இந்தியாவிலேயே மிகச் சிறந்த இடம் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருப்பது

பற்றியும் பிரதமரிடம் எடுத்துக் காட்டினேன்.

கேள்வி : இந்தியாவில் அரசியல் ஸ்திரமின்மையைப் பற்றி பேசினீர்களா?

கலைஞர் : நான் என்னுடைய நாட்டைப் பற்றி இன்னொரு நாட்டில் பேசுவதும் விமர்சிப்பதும் முறையல்ல என்று கருதுகிறவன்.

கேள்வி : சிங்கப்பூர் தாழ்வாரம் பற்றி தங்கள் பேச்சிலே இடம் பெற்றதா?

கலைஞர் : சிங்கப்பூர் தாழ்வாரம் ஐந்தாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நாங்கள் ஆளுங்கட்சியாக அப்போது இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சி என்ற நிலையில் தமிழ்நாட்டின் நிலை குறித்து அக்கறையோடு அது வரும் வரும் என்று காத்துக் கொண்டிருந்தோம். என்ன காரணத்தாலோ அது தமிழ்நாட்டிற்கு வர முடியாமல் போய்விட்டது.

அந்தத் தாழ்வாரம் வர முடியாமல் போய்விட்டாலும் கூட – அதன் தொடர்புடைய ஒரு தொழில் வளாகமாவது அமைக்க சிங்கப்பூரில் உள்ள தொழில் முனைபவர்களும் அரசும் இணைந்து முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தேவையான அளவிற்கு கடற்கரைப் பகுதி இருக்கிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை அகன்ற அழகான கடற்கரை இருக்கிறது. அதில் ஏதாவது ஒரு பகுதியில் கடற்கரையை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளைப் பற்றி சிங்கப்பூர் சுற்றுலாத் துறை அமைச்சரிடம் பேசியிருக்கிறேன்.

கேள்வி : குட்டி சிங்கப்பூரை உருவாக்கப் போவதாகச் சொன்னீர்களே?

கலைஞர் : குட்டி சிங்கப்பூர் அல்ல, சின்ன சிங்கப்பூர் என்று கூறுங்கள். முதலில் நான் கூறியவாறு இப்போதே முடிவெடுத்து விட்டுப் போவதற்காக வரவில்லை. இப்போது விதை தான் தூவப்பட்டுள்ளது. நாற்றாகி, பயிராகி, விளைச்சல் தர வேண்டும். இப்போதே ஒப்பந்தம் போட்டு விட்டுப் போவதற்காக வரவில்லை.

கேள்வி : தமிழகத்திலே வீடு கட்டிக் கொடுப்பதாகக் கூறி சிங்கப்பூரிலே உள்ள தமிழர்களை அங்கேயுள்ள சிலர் ஏமாற்றுகிறார்கள். சிங்கப்பூர் தமிழர்களை இதிலிருந்து பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

கலைஞர் : பிரதமரிடம் பேசிய பிரச்சினை தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் சிங்கப்பூருக்கு வந்து ஏமாற்றப்படுவதைப் பற்றியது. இப்போது நீங்கள் சொல்கின்ற பிரச்சினை சிங்கப்பூரிலுள்ள தமிழர்கள் தமிழ்நாட்டிலே உள்ள சிலரால் ஏமாற்றப்படுவது பற்றியது. இந்த இரண்டு பிரச்சினைகளுமே கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தான்.

இந்திய தொழில் – வர்த்தக சங்க வரவேற்பில்

5–1–1999 அன்று சிங்கப்பூர் இந்திய வர்த்தக மற்றும் தொழில் சங்கம் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் கழகத்தின் சார்பில் இதுவரை எத்துணையோ வரவேற்புகள் பல தலைவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும், ஆனால் எந்தத் தலைவருக்கும் இதுபோன்ற கூட்டம் கூடியதில்லை என்றும், இந்த நிகழ்ச்சியிலே கலந்து

கொள்ள வேண்டுமென்று தொழில் அதிபர்களும், வணிகர்களும் பெரிதும் முனைப்பு காட்டினர் என்றும், அதிலே ஒரு பகுதியினரை மட்டும் தான் அரங்கத்திற்குள் இடம் இருக்கும்வரை அனுமதிக்க முடிந்தது என்றும் மற்றவர்கள் எல்லாம் விருந்து அருந்தும் இடத்திலே இருப்பதாகவும் வர்த்தகச் சங்கத்தின் செயலாளர் மிகுந்த கையொலிக்கு இடையே அறிவித்தார்.

முதலமைச்சர் கலைஞர் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும் தொழில் முனைவோரை தமிழகத்திலே தொழில் தொடங்கவேண்டுமென்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்தும் அருமையானதோர் ஆங்கில உரையை வழங்கினார். அதன் பின்னர் பல தொழில் அதிபர்கள் தங்களுக்கு தமிழகத்திலே தொழில் தொடங்குவதில் உள்ள சங்கடங்களையும் சந்தேகங்களையும் எழுப்பிய போது அவை அனைத்திற்கும் முதலமைச்சர் கலைஞர் விரிவான விளக்கத்தை அளித்தார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சாதகமான இடம் தமிழ்நாடு – கலைஞர்

“சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கும் இடையிலான கலாச்சாரத் தொடர்புகள் மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றன. பெருமளவிலான என்னுடைய தமிழ்ச் சகோதரர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே சிங்கப்பூர்வாசிகளாக மாறி இங்கேயே நிரந்தரமாக தங்கி விட்டனர். 60 ஆண்டுகளுக்கு மேலாக நான் பொதுவாழ்வில் இருந்தபோதிலும் இதுவரை நான் சிங்கப்பூருக்கு வருகை தந்ததில்லை. சிங்கப்பூருக்கு வருகை என்பது என்னுடைய நீண்ட காலக் கனவாக இருந்து வந்தது. இப்போதுதான் அந்தக் கனவு நிறைவேறியுள்ளது. என்னுடைய முதல் சிங்கப்பூர் வருகையின் ஒரு பகுதியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று சிங்கப்பூர் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. முதற்கண் உங்கள் அனைவருக்கும் என்னுடைய இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியப் பொருளாதாரத்தின் மாற்றங்களை நெருக்கமாகக் கவனித்துக் கொண்டிருக்கும் செயல்திறன் மிக்க அமைப்பாக நீங்கள் திகழ்கிறீர்கள். பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் ஏற்பட்டு வரும் பொருளாதார முன்னேற்றத்தை நீங்கள் நன்கு அறிவீர்கள். 1991ஆம் ஆண்டு இந்தியப் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதிலிருந்து, நாட்டின் வளர்ச்சிக்கான பங்கும் பொறுப்பும் மத்திய அரசிடம் இருந்து மாநிலங்களுக்கு மாற்றப்பட்டது.

தங்கள் விதியை நிர்ணயிப்பதில் முக்கியமானவைகளாக மாநிலங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. உண்மையில் நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முன்னோடிகள் கூட நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று தீர்க்க தரிசனமாகக் கணித்தனர்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக நிலவி வந்த நிலைமை வேறு வகையானது. ஆனால் புதிய ஆயிரமாவது ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சியில் மாநிலங்கள் முன்னோடிகளாக விளங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பாரம்பரியமாக தொழில் வளர்ச்சியில் முற்போக்கான கொள்கையை தமிழ்நாடு பின்பற்றி வருகிறது. இது மாநிலத்தில் நிலவிவரும் முதிர்ச்சியடைந்த, தரம் வாய்ந்த தொழில் அடிப்படையில் பிரதிபலிக்கிறது. ஒட்டுமொத்த வளர்ச்சி, வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் சமூக நீதி ஆகியவற்றில் தொழில் மயமாக்கலின் நன்மைகளை முதன்முதலாகப் புரிந்து கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

தமிழ்நாடு பெருமளவிலான இயற்கை மற்றும் மனித வளங்களைப் பெற்றுள்ளது. பல தொழிற்துறைகளுக்கு அது சந்தைத் தலைவராகத் திகழ்கிறது. கார் உற்பத்தி, கார் உதிரிபாகங்கள், ஜவுளித் தொழில், தோல் தொழில் ஆகியவற்றை அதற்கு உதாரணங்களாகக் கூறலாம். தேசிய உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இத்துறைகள் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன எனினும் தொடக்க காலத்தில் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் பல்வேறு காரணங்களால் பிற்காலங்களில் அளிக்கப்படவில்லை. 80ஆம் ஆண்டுகளிலும், 90ஆம் ஆண்டுகளிலும் தமிழகம் பின் தங்கியிருந்தது. இப்போது அந்தப் பிரச்சினை மிகத் திறமையுடன் தீர்க்கப்பட்டு வருகிறது. தொழிற்துறையில் தமிழகம் மீண்டும் வெற்றி நடை போடுகிறது.

1996ஆம் ஆண்டு நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபிறகு தமிழ்நாட்டை அதன் முந்தைய புகழ்மிக்க நிலைக்கு கொண்டு வருவதற்கான பல்வேறு ஆக்கபூர்வ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எங்கள் முயற்சிகளின் பயன்கள் ஏற்கெனவே வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி விட்டன.

மும்பையில் உள்ள சுயேச்சை அமைப்பான இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் பல்வேறு மாநிலங்களுக்கும் வரும் முதலீட்டை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கண்காணித்து வருகிறது. அவர்களுடைய புள்ளி விவரங்களின்படி 1996 மே மாதத்தில் தொழில் முதலீட்டுத் திட்டங்களில் தமிழ்நாடு 5வது இடத்தில் இருந்தது. ஆனால் 1998 நவம்பர் மாதத்தில் அது மராட்டியத்திற்கு அடுத்தபடியாக 2வது இடத்திற்கு உயர்ந்துள்ளது. இத்துடன் நாங்கள் திருப்தியடைந்து விடவில்லை. நாங்கள் ஏராளமான முயற்சிகளை எடுத்து வருகிறோம். முதல் இடத்தை எட்டுவதற்காக நாங்கள் மிகவும் கடுமையாக உழைத்து வருகிறோம்.

முதலீட்டாளர்களுக்கு உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நிலத்தை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சுய தேவைப் பூர்த்தியடைந்த தொழிற் பூங்காக்கள் பலவற்றை நாங்கள் உருவாக்கி வருகிறோம். இந்த தொழிற் பூங்காக்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. இது தொழில் முனைவோர் தாமதமின்றி நிலத்தைப் பெறுவதற்கு வகை செய்கிறது.

நாங்கள் கவனம் செலுத்தி வரும் மற்றொரு பகுதி சிவப்பு நாடா முறையை அகற்றுவதாகும். கடந்த ஆண்டு தொழில் நகரிய மேம்பாட்டு ஆணைய சட்டத்தை நாங்கள் நிறைவேற்றினோம். அந்த நகரியங்களில் உருவாகும் தொழில்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் ஆணையமே அளிப்பதற்கு அது வகை செய்கிறது. என்னுடைய தலைமையில் ஒற்றைச் சாளர முறை ஒன்றையும் நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறை மாற்றங்களுடன், தொழில் வளர்ச்சி அமைப்புகளான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ), மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்), தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் ((சிட்கோ) ஆகியவற்றை நாங்கள் பெற்றிருக்கிறோம். இவை பாதுகாப்புச் சேவைகளை அளிப்பதோடு, முதலீட்டாளர்களுக்கு நிதியுதவியும் வழங்குகிறது. மேலும் சில பகுதிகளை உந்துதல் அளிக்க வேண்டியவை என்று கண்டறிந்துள்ளோம். அப்பகுதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து முதலீட்டாளர்களுக்கு உதவிசெய்யும் வகையில் பகுதி முக்கியத்துவம் வாய்ந்த கொள்கைகளை நாங்கள் வகுத்துள்ளோம். கடந்த 2 ஆண்டுகளில் நாங்கள் வகுத்த இந்த கொள்கைகளில் சில தகவல் தொழில்நுட்ப (ஐடி.) கொள்கை, மலர் வளர்ப்புக் கொள்கை, ஒரே தலைமுறைக் கொள்கை போன்றவையாகும். இது ஒரு தொடரும் நடைமுறையாகும்.

இவை எல்லாம் முக்கியமானவைதான் என்றாலும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் ஆக்கபூர்வமான ஒற்றை ஊக்குவிப்பு நல்ல தரமான உள்கட்டமைப்புதான். அந்த வகையில் உள்கட்டமைப்பின் போதுமான நிலை மற்றும் தரத்தைப் பொறுத்த வகையில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில் சமீபத்தில் நடத்திய ஆய்வில் இது தெளிவாகியுள்ளது. எனினும் நாங்கள் பெருமைகளால் ஓய்ந்து விடவில்லை. உள்கட்டமைப்பின் பல்வேறு பிரிவுகளில் நாங்கள் கடுமையாக முதலீடு செய்து வருகிறோம். அவை மின்சாரம், சாலைகள், துறைமுக வசதிகள் ஆகியவை ஆகும்.

உண்மையில் எங்கள் மாநிலத்தில் செய்யப்பட்டு வரும் முதலீடுகளில் 50 சதவிகிதம் உள் கட்டமைப்பு பணிகளிலே செய்யப்பட்டு வருகிறது. அவற்றில் 50 சதவிகிதத்திற்கு மேல் மின்சாரத் துறையில் முதலீடு செய்யப்படுகிறது குறுகியகால அடிப்படையிலும், நீண்டகால அடிப்படையிலும், மின்உற்பத்தித் திறனை அதிகரிக்கத் திறமையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள 7000 மெகாவாட் மின்சார உற்பத்தித் திறனுக்குமேல் கூடுதலாக அடுத்த 7 ஆண்டுகளில் 12,000 மெகாவாட் மின் உற்பத்தித்திறனை

உருவாக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். இதற்கு சுமார் 400 மில்லியன் (40 ஆயிரம் கோடி) ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெருகி வரும் தேவையை ஈடுசெய்வதற்கான இத்தொகை மாநிலத்தின் நிதிநிலையைப் பொறுத்த வரையில் எங்களுடைய திறனுக்கு அப்பாற்பட்டது என்பதை நாங்கள் உணர்கிறோம். எனவே இதில் தனியார் துறை பங்கு பெறுவதை நாங்கள் தீவிரமாக ஊக்குவித்து வருகிறோம்.

மின் உற்பத்தியைப் பெருக்கப் பெருமுயற்சி

நாங்கள் 20 குறுகிய கால மின்திட்டங்களை வகுத்துள்ளோம். இந்திய அரசு அளித்த எரிபொருள் இணைப்பின் அடிப்படையில் அவற்றுள் 6 திட்டங்கள் நன்கு உருவாகி வருகின்றன. மற்ற தனியார் துறை திட்டங்களில் பல வேகமாக உருவாகி வருகின்றன. எங்கள் மாநிலத்தில் நாங்கள் பழுப்பு நிலக்கரி இருப்பை பெருமளவில் பெற்றுள்ளோம். எனவே அடுத்த 5 ஆண்டுகளுக்குள் பழுப்பு நிலக்கரி அடிப்படையிலான 1500 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டத்தை அமைக்க உத்தேசித்துள்ளோம். இத்திட்டம் ஒரு தனியார் துறை நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான தேர்வு சர்வதேசப் போட்டிக் கோரிக்கை அடிப்படையில் செய்யப்பட்டது. இந்தத் திட்டத்திற்கான பணி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. சமீபத்தில் சென்னைக்கு அருகே 2000 மெகாவாட் மின்சார உற்பத்திக்கான நிறுவனத்தை நாங்கள் தேர்வு செய்தோம். இத்திட்டம் இறக்குமதி செய்யப்பட்ட திரவ இயற்கை வாயுவை அடிப்படையாகக் கொண்டது. இங்கு மீண்டும் வெளிப்படையான சர்வதேசப் போட்டிக் கோரிக்கை முறையிலேயே நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது. புதிய திட்டங்களிலிருந்து மின்சக்தி கொண்டு செல்லும் லயன்கள் அமைத்தல், பழைய அனல்மின் நிலையங்களை நவீனமயமாக்குதல் ஆகியவையும் தனியார் துறைக்கு அளிக்கப்படவுள்ளன. மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கைகள் மூலம் எதிர்காலத்தில் முதலீட்டாளர்களுக்கு மின்சாரப் பற்றாக்குறை பற்றி எந்தக் கவலையும் ஏற்படாது என்று என்னால் உறுதியளிக்க முடியும்.

உள்கட்டமைப்பின் இரண்டாவது முக்கியப் பகுதியான சாலைகள் மேம்பாட்டுக்கும், உயர்நிலைப்படுத்துவதற்கும் பெருமளவிலான முதலீடு தேவைப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் இத்துறையில் நாங்கள் செய்திருக்கும் முதலீடு முந்தைய 4 ஆண்டுகளில் செய்யப்பட்ட முதலீடுகளை விட மூன்று மடங்கைவிட அதிகமாகும்.

எங்கள் மாநிலத்தில் மீட்டர் கேஜ் ரயில்பாதைகளை அகலரயில் பாதைகளாக மாற்றும் திட்டங்களில் 50:50 என்ற அடிப்படையில் செலவைப் பகிர்ந்துகொள்ளும் முயற்சியையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்த ரயில்பாதை மாற்றம் பொருட்களையும், சரக்குகளையும் விரைவாகக்கொண்டுசெல்ல உதவும்சென்னை–பறக்கும் ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டம் ரூ.750 கோடி செலவில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவும் விரைவாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கான செலவில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டம் 2002 மார்ச் மாதத்தில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதே அடிப்படையில் இத்திட்டத்தின் மூன்றாவது கட்ட வடிவமைப்பு பற்றி ஏற்கெனவே நாங்கள் ஆலோசனைகளைத் தொடங்கிவிட்டோம்.

துறைமுகங்களை மேம்படுத்தும் முயற்சிகள்

இந்த உலக மயமாக்கல் காலத்தில் துறைமுகங்கள் ஒரு முக்கிய உள் கட்டமைப்பாகும். அவற்றின் பங்கு முக்கியமானதாகும். தமிழ்நாடு சென்னையிலும் தூத்துக்குடியிலும் இரு பெரிய துறைமுகங்களைப் பெற்றுள்ளது. உலகின் சிறந்த துறைமுக நிறுவனமாகக் கருதப்படும் சிங்கப்பூர் துறைமுகக் கழகம் பற்றி நான் அறிவேன். அக்கழகம் சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய இரு துறைமுகங்களின் நடவடிக்கைகளிலும் விரிவாக்கத்திலும் இணைந்து செயல்பட்டு வருகிறது. கடலூரிலும், குளச்சலிலும் உள்ள சிறிய துறைமுகங்களை மேம்படுத்தும் முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

கடலூர் துறைமுகத்திற்கான கோரிக்கைகள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. குளச்சல் துறைமுகத்திற்கான சாத்யபூர்வ அறிக்கை தயாராகி வருகிறது.

எண்ணூரில் ஒரு புதிய பெரிய துறைமுகம் உருவாகி வருகிறது. நாங்கள் ஒரு திரவ இயற்கை வாயு டெர்மினலையும் பெரிய பெட்ரோ கெமிக்கல் பூங்காவையும் எண்ணூரில் அமைத்து வருகிறோம்.

சென்னையில் ஒரு புதிய சர்வதேச விமான நிலையத்தை அமைக்கவும் நாங்கள் தீவிரமாக செயல்பட்டு வருகிறோம். இது ஏற்கெனவே உள்ள ஒரு விமான நிலையத்தைவிடக் கூடுதலான ஒன்றாகும்.

தகவல் தொழில்நுட்பத்தின் சூரியோதையப் பிரிவில் தமிழ்நாடு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதில் சென்னையில் கிடைக்கும் முக்கிய நிலை திறனே நாட்டிலேயே மிகப் பெரியதாகும். நாங்கள் ஆண்டுக்கு 23 ஆயிரம் பொறியாளர்களை உருவாக்குகிறோம். அவர்களில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொறியாளர்கள் தகவல் தொழில்நுட்பத்திலும் அது தொடர்பான பிரிவுகளிலும் தேர்ச்சி பெற்றவர்கள். உண்மையில் பொறியாளர் பிரிவுக்கு எங்கள் பங்களிப்பு தேசிய அளவில் 14 சதவிகிதமாகும். மக்கள் தொகையில் 6.4 சதவிகிதமே இருந்தபோதிலும் பொறியியல் துறையில் கூடுதலாக பங்களிப்பைச் செய்துள்ளோம்.

மிகப்பெரிய தொழில்நுட்பப் பூங்கா

தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் சங்கம் சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைப்பதற்கான இந்தியாவில் உள்ள மென்பொருள் நிலைய இடங்களில் சென்னை முதலிடம் வகிப்பதாகத்



தெரிவித்துள்ளது. நாங்கள் முன்னேற்றமான ஆக்கபூர்வ தகவல் தொழில்நுட்பக் கொள்கையைப் பெற்றுள்ளோம். இது தகவல் தொழில்நுட்பத் தொழிற்துறையால் வரவேற்கப்படுகிறது. நாட்டிலேயே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அனைத்து வசதிகளுடன் சென்னைக்கு அருகே அமைத்து வருகிறோம். தகவல் தொழில்நுட்பத் தொழிலில் வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு, தொழில் துறையின் கூட்டுறவுடன், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தை நாங்கள் சமீபத்தில் அமைத்துள்ளோம்.

டாக்டர் சாம் பிட்ரோடா தலைமையிலான வேர்ல்ட் டெல் நிறுவனத்தின் கூட்டுறவுடன் மாநிலம் முழுவதும் 1000க்கு மேற்பட்ட இணைய (இன்டர் நெட்) மையங்களை அமைக்க நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இது மக்கள் தொகை முழுவதும் மிக அருகாமையில் இணையத்தை எட்ட வகை செய்யும். மேலும் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து பள்ளி நிலையில் கல்வித் திட்டத்திலேயே தகவல் தொழில்நுட்பத்தைச் சேர்க்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். அடுத்த 10 ஆண்டுகளில் மாநிலத்தில் உள்ள 100 சதவிகிதம் மக்களையும் கணினி அறிவு பெற்றவர்களாக ஆக்கும் இலக்கை நோக்கிச் செயல்பட்டு வருகிறோம்.

தமிழ்நாட்டுக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான தொழில் மற்றும் வர்த்தக உறவு வேகமாக முன்னேறி வருவதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லா இந்திய மாநிலங்களிலும் அதிக அளவில் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் கூட்டுத் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது தமிழ்நாட்டில்தான் என்று கூறப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நாங்கள் மேற்கொள்ளும் தொழில்மய முயற்சிகளில் பங்கு பெற இங்குள்ள மேலும் பல வர்த்தகர்களுக்கும், தொழில் முனைவோருக்கும் அறிவுரை கூறும்படி சிங்கப்பூர் இந்திய வர்த்தக மற்றும் தொழிற் சங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

வெளிநாடுகளிலிருந்தும், நாட்டின் பிற மாநிலங்களி லிருந்தும் வரும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் சாதகமான இடமாக தமிழ்நாடு மிக வேகமாக உருவாகி வருகிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாநிலத்தை, முதலீட்டாளர்களை மேலும் மேலும் கவரும் வகையில் உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். முதலீட்டாளர்களுக்கு நட்புறவான, வெளிப்படையான முடிவுகள் எடுக்கும்முறை மற்றும் ஆட்சியின் மூலம் அதை உருவாக்கி வருகிறோம்.

தேசிய அளவில் உயர் கல்வியில் பெருமிதம் கொள்ளும் இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாட்டில் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இந்தியா விலேயே மிகவும் கணினிக் கல்வி பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். உங்கள் முதலீட்டைக் கொண்டு வருவதற்கு நாங்கள் முழு அளவில் உதவி செய்வோம் என்று உறுதியளிக்க நான் விரும்புகிறேன். நீங்கள் வெற்றிபெற நாங்கள் எப்போதும் உங்களோடு இருப்போம். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துக்கள்.

வரவேற்பு விருந்தில்

அதன் பின்னர் முதலமைச்சர் கலைஞர் விருந்து அருந்தும் இடத்திற்கு வந்தபோது, அரங்கத்திலே இருந்ததைப் போல மூன்று மடங்கு தொழிலதிபர்களும், வர்த்தகர்களும் திரண்டிருந்த காட்சியினைக் காண முடிந்தது. அதில் பெரும்பாலானவர்கள் முதலமைச்சரின் தமிழ் உரையைக் கேட்க வேண்டுமென்று பெரிதும் வலியுறுத்தியதால் முதலமைச்சர் கலைஞர் அங்கேயும் ஒரு சில நிமிடங்கள் தமிழிலே உரையாற்றினார். முதல்வரின் உரைக்கு முன்பு சிங்கப்பூர் வர்த்தகச் சங்கத் தலைவர் குப்தா அவர்கள் முதலமைச்சரை வரவேற்ற தோடு, முதல்வருக்கு சால்வை அணிவித்து ஆள் உயர மாலை ஒன்றையும் அணிவித்தார். முதல்வர் தனது சுருக்கமான உரையிலே கூறியதாவது:

"தமிழகத்திற்கு வருகின்ற பல தலைவர்கள், வெளி மாநிலத் தலைவர்கள் தமிழில் பேச முடியாமைக்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வார்கள். ஆனால் இங்கே நான் தமிழில் பேசுவதற்காக தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் உரையாற்றுவதற்கான ஏற்பாடு இன்னொரு அரங்கில் செய்யப்பட்டிருந்தது. அங்கே நான் நீண்ட நேரம் ஆங்கிலத்தில் உரையாற்றி – அதன் அடிப்படையில் பல கேள்விகள் கேட்கப்பட்டு அவைகளுக்குப் பதிலும் சொல்லியிருக்கிறேன். இங்கே நடந்திருக்க வேண்டிய உரை அங்கே நடந்து விட்டது. எப்படி தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய சிங்கப்பூர் தாழ்வாரம் கர்நாடகத்திற்குப் போய்விட்டதோ, அதைப்போல.

திரு. குப்தா அவர்கள் அவருடைய உரையிலே குறிப்பிட்டதைப் போல சிங்கப்பூரில் உள்ள பல தொழில் முனைவோர்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் தொழில் நடத்தினாலுங்கூட, தமிழகத்தில் தான் அதிக முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. நேற்றும் இன்றும் நான் மிகுந்த நேரத்தைச் செலவழித்து தொழில் அதிபர்கள் சிலரையும், அரசாங்க பிரமுகர்கள் பலரையும் மாலையில் பிரதமரையும், வேறு சில அமைச்சர்களையும் சந்திக்கும் அரிய வாய்ப்பைப் பெற்றேன். என்னுடைய வருகை சிங்கப்பூருக்கும் தமிழகத்திற்கும் நெடுங் காலமாக உள்ள கலாச்சார உறவை உறுதிப்படுத்துவதாக இருந்த போதிலுங்கூட, அதே நேரத்தில் தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஆசையும் அதோடு இணைந்திருக்கிறது. பல தொழில்களைப் பற்றி விவாதித்திருக்கிறோம். குப்தா அவர்களும் அவருடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் மீண்டும் விளக்க விரும்பவில்லை. நாங்கள் உங்களையெல்லாம் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்வது, கலாச்சாரத் தொடர்போடு தொழில் தொடர்பையும் பெருக்கிக் கொள்கிற வகையில், நீங்கள் தமிழகத்திற்கு உதவிட வேண்டுமென்பது தான்.

முதன் முதலாக, நான் என்னுடைய அறுபதாண்டு காலப் பொதுவாழ்க்கையில் வரவேண்டும், வரவேண்டும் என்று விரும்பி – ஆனால் வரமுடியாமல் பல தடங்கல் ஏற்பட்டு இப்பொழுது தான் சிங்கப்பூருக்கு வந்திருக்கிறேன். நான் கேள்விப்பட்டேன் – நண்பர் ராஜாராம் போன்றவர்கள் சொன்னார்கள் – இதுவரையில் நடைபெற்ற இதுபோன்ற விருந்துகளில் இந்த அளவிற்கு முந்திக் கொண்டு மக்கள் வந்ததில்லை; வர்த்தகர்கள் வந்ததில்லை; சிங்கப்பூர் பிரமுகர்கள் வந்ததில்லை, இந்த நிகழ்ச்சிக்குத் தான் இந்த அளவிற்கு வந்திருக்கிறீர்கள் என்று இங்கே சொன்னார். இங்கே வந்ததைப் போலவே நீங்கள் முந்திக் கொண்டு உங்கள் தொழிலை தமிழகத்தில் தொடங்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீண்ட நேரம் உணவிற்கு முன்னால் உங்களைக் காக்க வைக்காமல் இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்".

ஒரு சில தொழிலதிபர்கள் எழுப்பிய ஐயங்களும், முதலமைச்சர் கலைஞர் அளித்த விளக்கங்களும்

கேள்வி : சிங்கப்பூர் நாட்டில் தமிழ்க் கல்வி பயில விரும்புவோர் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தேவையான எண்ணிக்கையில் தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்கள் இல்லை. இக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, சென்னைப் பல்கலைக் கழகம் தொலைக் கல்வி முறை மூலம் இங்கு தமிழ் பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்க உதவி செய்வீர்களா?

கலைஞர் : தமிழக அரசு இதைப் பற்றி பரிசீலித்துத்தான் எந்த முறையில் அதைச் செய்ய முடியும் என்பது குறித்து முடிவெடுத்து அறிவிக்க இயலும். உடனடியாக நான் இத்தருணத்தில் உறுதியளிக்க முடியாது. இருந்தாலும் நான் உங்களுடைய உணர்வைப் புறக்கணிக்கவில்லை.

கேள்வி : பல்வேறு கட்டமைப்புத் திட்டங்களில் தமிழ்நாடு பெருமளவு முதலீடு செய்து வருவது குறித்து தனது உரையில் குறிப்பிட்ட முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட கட்டமைப்புத் திட்டங்களில் சிங்கப்பூர் நாட்டு அரசும், நிறுவனங்களும் பங்குபெறுவது குறித்து இங்கே அமைச்சர்களுடன் நடந்த கலந்துரையாடலில் பேசினாரா?

கலைஞர் : இதுகுறித்து கடந்த இரண்டு நாட்களாக சிங்கப்பூர் நாட்டு அமைச்சர்களோடு பேசும்போது இந்நாடு தமிழகக் கட்டமைப்புத் திட்டங்களில் பங்கு பெறும் சாத்தியக் கூறுகள் குறித்து நான் எடுத்துரைத்தி ருக்கிறேன்.

கேள்வி : தமிழகத்தில் சிறிய அளவில் முதலீடு செய்து தொழில் தொடங்க வருபவர்களுக்கு தமிழக அரசு பெரிய முதலீட்டாளர்களுக்கு அளிக்கும் அனைத்துச் சலுகைகளையும் வழங்குமா?

கலைஞர் : சிறிய அளவில் தொழில் தொடங்க வருபவர்களையும் வரவேற்க தமிழகம் தயாராக இருக்கிறது. பெரிய அளவில் தொழில் தொடங்க வருபவர்களைத் தான் வரவேற்போம், சிறிய அளவில் தொழில் தொடங்க வருபவர்களை வரவேற்க இயலாது என்று நாங்கள் எந்த வரையறையும் செய்யவில்லை.

கேள்வி : தமிழகத்தில் சிறிய அளவில் முதலீடு செய்ய, ஒரு வழியாக தமிழக அரசு கட்டமைப்பு வசதிகளை செயலாக்கும் பொருட்டு பங்குகள் மூலம் நிதி திரட்டுமா?

கலைஞர் : இதைப்பற்றிய பரிசீலனை தமிழக அரசில் இருந்து வருகிறது. தொழில்களைத் தொடங்குவதற்காக இந்த முயற்சி தேவைப்படுமேயானால் அதைப் பயன்படுத்த நாங்கள் தயங்க மாட்டோம்.

கேள்வி : தென்னாப்பிரிக்க நாட்டில் நல்ல முறையில் வசதிகளைக் கொண்ட ஆலைகளில் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக நலிவு நிலை ஏற்படும்போது அந்நாட்டு அரசு மானியம் அளித்து உதவுகிறது. அது போல் அந்த நலிந்த ஆலைகளை தமிழகத்திற்குக் கொண்டு வந்து இயக்க ஏற்பாடு செய்வீர்களா?

கலைஞர் : ஏற்கெனவே தமிழகத்திலும் அகில இந்திய அளவிலும் பல நலிவுற்ற தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றைச் சீர்செய்யும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ள போது புதிதாக மேலும் நலிவுற்ற ஆலைகளை இறக்குமதி செய்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? குறிப்பிட்டு நல்ல தொழிற்சாலைகளாக இருந்தால் உங்கள் யோசனையைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

கேள்வி : முதலீடு செய்ய வருபவர்கள் மத்திய அரசு அளவிலும், மாநில அரசின் பல்வேறு துறைகளிலும் தேவையான அனுமதிகள் தனித்தனியாக பெறவேண்டியி ருப்பதால் கால தாமதம் ஏற்படுகிறது. இதனை எளிதாக்க தமிழக அரசு முன் வருமா?

கலைஞர் : நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போலத் தொழில் முனைவோருக்குத் தேவையான அனுமதிகளைப் பெற்றுத் தர ஒற்றைச் சாளர

முறையை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம். இது தொழில் செய்ய முனைவோருக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கால தாமதத்தைத் தவிர்க்க உதவிடும். எனவே இதுகுறித்து சங்கடம் வருமோ என்று யாரும் அஞ்சத் தேவையில்லை.

கேள்வி : முதலீடு செய்ய வருபவர்களை ஊக்குவிக்க ஒரு தொடர்ச்சியான அணுகுமுறை தேவை. ஐந்தாண்டுகளாக அப்படிப்பட்ட செயல்பாடு இல்லை. அதற்காக சிங்கப்பூரில் முதலீட்டை ஊக்குவிக்கும் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்த தமிழக அரசு முன்வருமா?

கலைஞர் : தொடர்ச்சியான அணுகுமுறை ஐந்தாண்டுகளாக இல்லை என்று வருத்தப்படுகிறீர்கள். அதற்காக ஒரு அலுவலகம் இங்கே திறக்கப்பட வேண்டுமென்றும் கூறுகிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் ஐந்தாண்டுக்காலம் என்பது எந்த ஐந்தாண்டுகள் என்று தெரியவில்லை. இருந்தாலும் உங்களுடைய கருத்து நிச்சயமாக கருதப்படவேண்டிய ஒன்று.

கேள்வி : சிங்கப்பூருக்கு முதன்முறையாக பயணம் மேற்கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பயணத்தின் முடிவு வெற்றியா? தோல்வியா?

கலைஞர் : நான் படை எடுத்து வரவில்லை – வெற்றி தோல்வி குறித்து பதில் சொல்வதற்கு. பாசத்தைக் காட்டத் தான் வந்திருக்கிறேன். எனவே பாசத்தை இருசாராரும் பரிமாறிக் கொள்கிறோம்.

கேள்வி : உங்களின் பயணம் எதிர்பார்த்த விளைவுகளைக் கொடுத்திருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?

கலைஞர் : நிச்சயமாகச் சொல்ல முடியும். நீண்ட நெடுங்காலமாக சிங்கப்பூருக்கும் தமிழகத்திற்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பை உறுதி செய்து கொள்ள இந்தப் பயணம் பயன்படும் என்ற நம்பிக்கையோடு வந்தேன். அது பயன்பட்டிருக்கிறது. அதைப் போலவே தொழில் துறை தமிழகத்திலே வளர இங்கேயுள்ள தொழில் முனைவோரும் சிங்கப்பூர் அரசும் உதவி செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையோடும் வந்தேன். அதிலும் எனக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

6–1–99 அன்று காலை 11 மணியளவில், சிங்கப்பூரில் உள்ள இந்திய வர்த்தக வழிகாட்டுக் குழுவின் உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் முதலமைச்சர் கலைஞர் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களை வரவேற்றுப் பேசிய இந்திய வர்த்தகக் குழுத்தலைவர் திரு. தேவேந்திர சிங், "முதலமைச்சரின் வருகை சிங்கப்பூரில் உள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு, இந்திய நாட்டின் பொருளாதார நிலை பற்றியும், தமிழகத்தில் முதலீடு செய்வதற்குள்ள வாய்ப்புகள் பற்றியும் சரியான தகவல்கள் அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியாக இருக்கும்" என்று கூறினார். இதற்குப் பதிலளித்த முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் தற்போதுள்ள தொழில் நிலை குறித்தும், தமிழக அரசின் தொழிற் கொள்கை குறித்தும் விளக்கிக் கூறினார்.

"தமிழ்நாட்டில் தொழில் துறையில் முதலீடு செய்ய வருவோருக்கு அரசு அனைத்து உதவிகளையும் விரைவாக வழங்கும்" என்று முதல்வர் உறுதியளித்தார்.

தமிழ்நாட்டில் கணிசமான அளவு முதலீட்டில் வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறை, வீட்டு வசதியைப் பெருக்குதல், மின்சார உற்பத்திக்கான வாய்ப்புகள் ஆகியவை குறித்து கலந்துரையாடலின்போது விவாதிக்கப்பட்டது.

பல்வேறு சர்வதேச நிறுவனங்களின் சமீபத்திய மதிப்பீட்டின்படி, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலீடு செய்வதற்கு மிகச் சிறந்த இடமாகத் திகழ்வது பற்றி அண்மையில் வெளியான அறிக்கைகளின் நகல்கள் குழுவினருக்கு வழங்கப்பட்டது.

இறுதியில் முதல்வருக்கு நன்றி கூறிய திரு.தேவேந்திர சிங், முதலமைச்சரின் இன்றைய பங்கேற்பும், உரையும் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு மிகவும் நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூரில் தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில் முதலமைச்சர் கலைஞர் 6–1–1999 அன்று ஆற்றிய உணர்ச்சிமிகு உரை

"சிங்கப்பூரில் 4ஆம் தேதி காலையில் வந்து இறங்கிய நான், வணிகத்துறை நண்பர்கள், தொழில் முனைவோர், அவர்கள் சார்ந்துள்ள குழுக்கள் சந்திப்புடன் சிங்கப்பூர் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் திரு. மா போ டான் அவர்களையும் தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் இயோ அவர்களையும், சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் துணைத் தலைவர் திரு. கூன் கோக் லூன் அவர்களையும், நேற்று மாலையில் சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் மாண்புமிகு கோ சோக் டோங் அவர்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.

இப்போது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். அவர்களிடமெல்லாம் நான் பேசினேன். இப்போது பேசாமல் உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது. அந்த நிலையில் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கெழுதகை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல், என்னுடைய அறுபதாண்டு காலப் பொதுவாழ்க்கையில் இந்தச் சிங்கப்பூருக்கு வரவேண்டும், வரவேண்டும் என்று பலமுறை முயற்சியெடுத்தும் கூட வர இயலாத சூழல் ஏற்பட்டு – கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் மாத்திரம் கலந்துகொள்ள ஒரு நாள் வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றுத் திரும்பினேன்.

இப்போது சிங்கப்பூரில் மூன்று நாட்களும் மலேசியாவில் மூன்று நாட்களும் என்று தமிழகத்திற்குத் தேவையான சில பிரச்சினைகளைப் பேசுவது மாத்திரமல்லாமல், எனக்கு மிகமிகத் தேவையாக இருக்கின்ற உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் உங்களையெல்லாம் "என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே" என்று அழைக்கும்போது நீங்கள் மாத்திரம் உணர்ச்சி வயப்படவில்லை; மகிழ்ச்சி அடையவில்லை; நான் எந்த அளவிற்கு உணர்ச்சி வயப்படுகிறேன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

இன்று சிங்கப்பூரில் நடைபெறுகின்ற இந்த விழா மேடையில் எனக்கொரு புது அனுபவம். எப்போதும் நான் பேசுகின்ற விழா மேடையானாலும், மாநாடு ஆனாலும் மேடையிலே பல தலைவர்கள் இருப்பார்கள், அமைச்சர்கள் வீற்றிருப்பார்கள், எங்கள் கட்சியின் முன்னணித் தளபதிகள் வீற்றிருப்பார்கள். இன்று என்னைத் தன்னந்தனியனாக மேடையிலே நிறுத்தி நீங்கள் வேடிக்கை பார்க்கிறீர்கள். என்னை நீங்கள் தன்னந்தனியாக நிறுத்தினாலும் உங்களை நான் தன்னந்தனியனாக ஆக்கமாட்டேன் என்ற உறுதியை இந்த நல்ல நிகழ்ச்சியில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பு மழையில் நனைய வாய்ப்பளித்தமைக்கு நன்றி

"*மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்*" என்று சிலப்பதிகார வரிகள் செப்புவதைப் போல இன்றைக்குச் சிங்கப்பூர் தமிழர்கள் பலர் அந்த வரிகளை மாற்றி "*மாமழை தூற்றுதும், மாமழை தூற்றுதும்*" என்று கூறுகின்ற அளவிற்கு வரவேண்டுமென்று நினைத்த இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்கள் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனால், இந்த மழையிலும் நான் உங்கள் அன்பு மழையில் நனைவதற்கு ஒரு வாய்ப்பை அளித்தமைக்காக என்னுடைய நன்றியை உங்கள் காலடிகளில் காணிக்கையாக்குகிறேன்.

நான் உங்களில் ஒருவன். தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் திருக்குவளை என்கிற ஒரு கிராமத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த நான் இங்கே வந்தமர்ந்ததும் மேடையை உற்றுப் பார்த்தேன். அதிலே வைக்கப்பட்டுள்ள பதாகையைக் கவனித்தேன். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்று எழுதியிருக்கும் இந்தச் சொற்றொடர்கள் எல்லாம் உங்களுடைய அன்பு எனக்கு வழங்கியது. அந்தச் சொற்றொடரின் தொடர்ச்சியாக இருக்கின்ற 'கருணாநிதி' என்பதுதான் எனக்குச் சொந்தமானது. மற்ற சொற்கள் எல்லாம் உங்களுக்குச் சொந்தமானவை – நீங்கள் வழங்கியவை. அந்தப் பாச உணர்வோடு சில கருத்துக்களை இந்த மேடையில் நின்று உங்களோடு பரிமாறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

உலகம் ஒன்றே ஆனாலும் தனித்தனி நாடுகள் உள்ளன

இன்று உலகம் விஞ்ஞான யுகத்தில் மிக மிகச் சுருங்கிக்கொண்டே வருகிறது. ஒரு காலத்தில் லிங்கன் கொல்லப்பட்ட செய்தி ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் இலண்டன் மாநகருக்கே கிட்டியது என்று

சொல்கிறார்கள். அந்த அளவிற்குத் தகவல் தொடர்பு பஞ்சமாக இருந்த கால கட்டம் அது. ஆனால், இன்றைக்கு உலகத்தையே சுருங்க வைக்கக்கூடிய வசதி வாய்ப்புகள், தகவல் தொடர்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. குளோபலிசேஷன் (Globalisation) என்று சொல்கிற இந்த ஆங்கில வார்த்தைக்கு உலக மயமாக்குதல் என்று பொருள். எனினும் Think Globally Act Locally என்றும் சொல்கிறார்கள்.

உலக மயமாகிக் கொண்டிருப்பதால் நாட்டின் எல்லைக் கோட்டை யாரும் அழித்துவிட விரும்புவதில்லை. ஒரே உலகம் என்று சொல்லப்பட்டாலும் தனித்தனி நாடுகள் இருக்கின்றன. அந்தத் தனித்தனி நாடுகளில் தனித்தனித் தேசிய இனங்கள் இருக்கின்றன. அந்தத் தேசிய இனங்கள் வாழ்கின்ற தனித்தனி மாநிலங்கள் இருக்கின்றன.

**இந்திரா காந்தியின்
வார்த்தையால்
நான் அடைந்த மகிழ்ச்சி**

ஆனால், நம்முடைய சங்க காலத்துப் புலவர் கணியன் பூங்குன்றன் *"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* என்று ஒரே உலகத்திற்கு அழைப்பு விடுத்தார். பிரகடனம் செய்தார். அதை இந்தியாவின் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ருஷ்ய நாட்டிற்குச் சென்றிருந்தபோது *"யாதும் ஊரே யாவரும் கேளிர்"* என்ற இந்தத் தமிழ்ச் செய்யுளின் முதல் வரியை எடுத்துச் சொல்லி, இந்தப் பாடலைப் பாடியவர் தமிழ்நாட்டுப்புலவர் என்று சொன்னபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனால் மன்னித்துக் கொள்ளவேண்டும் – தமிழர்களில் சிலர் கேளிர் என்பதை கொஞ்சம் நீட்டி யாதும் ஊரே யாவரும் கேளீர் – எல்லா ஊரும் நம்முடையதே, அதை எல்லோரும் கேளுங்கள் என்று அந்தப் பொருளினைக் கருதுகின்ற நிலை இருப்பதையும் நான் எண்ணி நாணாமல் இருக்க முடியவில்லை. யாதும் ஊரே யாரும் கேளிர் என்று ஒரே உலகச் சிந்தனையோடு அன்றைக்குப் பாடல் எழுதிய கணியன் பூங்குன்றன் கூட, தன்னுடைய ஊரை மறக்கவில்லை. அந்தப் புலவனுடைய பெயர் கணியன். அவன் பிறந்த ஊர் பூங்குன்றம். அந்தப் பூங்குன்றத்தின் பெயரை மறக்காமல் தன் பெயரான கணியன் என்பதுடன் இணைத்து கணியன் பூங்குன்றன் என்று தன்னை அழைக்குமாறு செய்தார்.

அதைப் போல உலகத்தில் வாழ்கிற நாம் நம்மைத் தமிழர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்வது கணியன் பூங்குன்றன் தான் பூங்குன்றத்திற்குச் சொந்தக்காரன் என்பதை அடையாளம் காட்டிக் கொண்டதைப் போன்றதாகும். அந்த உணர்வின் காரணமாகத்தான் சிங்கப்பூரில் கூட Speak Mandarin என்ற பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. மொழி என்பது உள்ளங்களோடு உறவாட, தொடர்பு கொள்ள ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்பது மொழி ஆய்வாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் உணர்ந்த ஒரு உண்மை. மொழி ஒன்று தான் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் பொதுவானது.

நிகழ்காலம், கடந்த காலம், எதிர்காலம் என்ற இந்த மூன்று காலங்களுக்கும் தொடர்புடையது மொழிதான். நமது தமிழ்மொழியைப் பொறுத்தவரை மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் தோன்றியது என்ற வரலாற்றுப் பெருமை கொண்டது.

**தொல்காப்பியத்திற்கும்
முற்பட்டது தமிழ்மொழி**

தொல்காப்பியத்தின் கால கட்டம் 3,000 ஆண்டுகள் என்றாலுங்கூட அதற்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன என்றே சொல்லவேண்டும். எப்போதும் ஒரு மொழி உருவான பிறகுதான் அந்த மொழி சார்ந்த இலக்கியங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றிய பிறகுதான் இலக்கணம் அதற்காக வகுக்கப்படும். அப்படித்தான் 3000 ஆண்டு காலத்தைக் கொண்ட தொல்காப்பிய இலக்கணம் வரையப் பட்டிருந்தால் அதற்கு முன்பே மூத்த மொழியாக நம்முடைய தமிழ் மொழி இந்த உலகத்தில் விளங்கி இருக்கின்றது. தொல்காப்பியத்திலே கூடப் பல இடங்களில் இலக்கணத்தை வகுத்துச் சொல்கின்ற நேரத்தில் – முன்னோர் சொல்லியிருப்பது போல – என்ற எடுத்துக்காட்டுகள் வரும்.

உதாரணமாக

*"நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனரே"*

– என்று தொல்காப்பியம் கூறுகிறது.

அதாவது கடந்த காலத்தில் உரைத்திருக்கிறார்கள் என்று தொல்காப்பியத்திலே இலக்கணம் குறிப்பிடுகிற தென்றால் தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது நம்முடைய தமிழ் மொழி.

**தொல்காப்பியமும்
திருக்குறளும்**

அத்தகைய தமிழ்மொழிக்கு சொந்தக்காரர்களாகிய நமக்குக் கிடைத்த மற்றொரு கருவூலம் உலகம் போற்றும் கருவூலம் – உலகப் பொதுமறையாகப் பாராட்டப்படுகின்ற கருவூலம் திருக்குறள். அது ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. மதச்சார்பற்ற பொதுவான இலக்கியம், மறை, கீர்த்தி வாய்ந்த இலக்கண இலக்கியங்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் என்பதை நிலை நாட்டுகின்ற அடையாளங்களாகத்தான் தொல்காப்பியமும் திருக்குறளும் நிலவுகின்றன.

உங்களுக்குத் தெரியும். உலகப் புகழ் எய்திய கிரேக்கப் பாரம்பரியம் இப்போது இல்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரமும் இப்போதில்லை. ஆனால், இன்னமும் இலங்கையில் தொல்காப்பியத் தமிழைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ர–என்ற எழுத்து சொல்லின் முதலில் வரக்கூடாது என்பது இலக்கணவியல். ஆனால் நாம் "ரத்தம்" என்றுதான் ர–என்ற எழுத்தைச் சொல்லின் முதலில் வைத்து எழுதிக் கொண்டிருக்கிறோம். இலங்கையில் இ–என்ற எழுத்தைச் சேர்த்து "இரத்தம்" என்றுதான் எழுதுவார்கள். எனவே இலங்கைவாழ் தமிழர்கள் இன்னமும் தொல்காப்பிய காலத்தை மறக்கவில்லை. இது ஒரு எடுத்துக்காட்டு.

**புரட்சிக்கவிஞன் பாரதிதாசனின்
அழகிய சித்தரிப்பு**

நம்முடைய தமிழுக்கு எத்தனையோ பொருள் உண்டு. இனிமை என்றும் புதுமை என்றும் பழமை என்றும் எத்தனையோ பொருள் உண்டு. எத்தனையோ சிறப்பு உண்டு. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அழகான வரி ஒன்றினால் சித்தரித்தார். "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாரதிதாசன் எழுதினார். அது என்ன தமிழுக்கும் என்கிற அந்த உம் தேவைதானா என்றால் தேவைதான். ஏனென்றால் அமுது என்று ஏற்கெனவே ஒன்று இருக்கின்றது. அமுதுக்கு அமுது என்று பெயர் இருக்கின்ற காரணத்தால் தமிழுக்கும் அதுதான் பெயர் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார்.

**அமிர்தம் குறித்து
திருக்குறளில் விளக்கம்**

நான் அமிழ்து என்று சொல்கிற நேரத்தில் பலருக்கு – பகுத்தறிவு எண்ணம் படைத்தவர்களுக்கு – அப்படியானால் அந்த எண்ணம் எனக்கில்லை என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது – பகுத்தறிவு எண்ணம் உள்ள எல்லோருக்குமே இதென்ன கருணாநிதி திடீரென்று அமிர்தம் என்பதை நம்புகிறானே – அமிர்தம் என்றால் தேவாமிர்தம் என்று சொல்வார்களே அதுவல்லவா என்று எண்ணக்கூடும். ஆனால் வள்ளுவர் அமிர்தம் என்றால் என்ன என்பதை விளக்குகிறார். அவரே அமிர்தத்தை ஒரு அதிகாரத்திலே குறிப்பிடுகிறார்.

மக்கட்பேறு என்ற 7வது அதிகாரத்தில் திருவள்ளுவர்

*"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"*

– என்று குறிப்பிடுகிறார்.

உழவுத் தொழில் செய்துவிட்டு வீட்டிற்குக் கணவன் வருகிறான். அருந்துவதற்கு என்னவிருக்கிறது என்று



கேட்கிறான். ஆருயிர் மனையாள் கூழ்க் கலயத்தைக் கொண்டுவந்து எதிரே வைக்கிறாள். இன்றைக்கும் இதுதானா என்று அலுத்துக்கொண்டே கேட்டு, அதைக் குனிந்து பார்க்கிறான். அப்பொழுது தாழ்வாரத்தில் தவழ்ந்து கொண்டிருந்த மழலைக் குழந்தை தவழ்ந்து, தவழ்ந்து, தவழ்ந்து வந்து அந்தக் கலயத்திற்குள்ளே தன் பிஞ்சுக் கையை விடுகிறது. இன்றைக்கும் இதுதானா என்று கேட்டவன் “ஆகா, கூழ் அமிழ்தமாகி விட்டது” என்கிறான். ஏன்? குழந்தையினுடைய சிறுகை அந்தக் கூழை அளாவிவிட்டக் காரணத்தால் அது

“அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்”

– என்று குறிப்பிடுகிறார். குழந்தையினுடைய கை கூழிலே பட்டால்கூட அதை அருந்த முதலிலே அலுத்துக் கொண்டவன், ஆதங்கப்பட்டவன் அது அமிழ்தமாகி விட்டதென்று அகமகிழ்கிறான்.

திருவள்ளுவர் குறிப்பிடும் அமிழ்தம்

இந்த அமிழ்தம் எந்த அமிழ்தம் – எதைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர்? மேருமலையை மத்தாகக் கொண்டு வாசுகி என்கிற நீண்ட பாம்பைக் கயிறாகக் கொண்டு அந்தப் பாம்பின் தலைப்பக்கத்தைக் கோழையான(?) அசுரர்களும் வால் பக்கத்தை வீரர்களான(?) தேவர்களும் பிடித்துக் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்து அப்பொழுது தோன்றியதுதான் அமிழ்தம்.

அமிழ்தமும் தோன்றியது, அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தில் விஷமும் தோன்றியது. பாடுபட்ட(?) தேவர்கள் அமிர்தத்தை எடுத்துக் கொண்டார்கள். அசுரர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை விரும்பாத காரணத்தால் அந்த விஷத்தின் வேகம் உலகத்தையே அழித்துவிடுமென்று பயந்து எல்லோரும் சிவனிடம் சென்று முறையிட்டார்கள்.

நான் எழுதிய கதையல்ல இது; ஏற்கெனவே இருக்கின்ற புராணக்கதை இது!

முறையிட்டவுடனே விஷத்தினால் உலகம் அழிந்து விடக் கூடாதென்று கருதிய ஆண்டவன் சிவன், அந்த விஷத்தையெடுத்துப் பருகினான். பருகும்போது பக்கத்திலே இருந்த பார்வதி தேவியார் முழுமையாக விழுங்கிவிட்டால் சிவனுக்கு ஆபத்து வருமேயென்று பயந்து, அது தொண்டைக்குள் போகும்போதே கழுத்துக் கண்டத்தைப் பிடித்துவிட்டாள். விஷம் அங்கேயே நின்றுவிட்டது.

விஷம் நின்ற இடம் சிவனுடைய கழுத்திலே ஒரு கண்டமாக மாறிவிட்டது. அது முதல் உலகத்திலே இருக்கின்ற எல்லா ஆண்களுக்கும் கழுத்திலே ஒரு கண்டம் முடிச்சு போன்ற பகுதி ஏற்பட்டது. இப்படி உருவானதுதான் அமிர்தம் என்ற சொல். அப்படி உருவான அந்த அமிர்தத்தை நானும் குறிப்பிடவில்லை. வள்ளுவரும் குறிப்பிடவில்லை.

எதை அமிழ்தம் என்கிறார்? நான் 7ஆவது அதிகாரத்திலே மக்கட்பேறில் அமிழ்தம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறாரே அந்த அமிழ்தத்தை 2ஆவது அதிகாரத்தில் எப்படி குறிப்பிடுகிறார் தெரியுமா?

வான் சிறப்பு என்ற அந்த அதிகாரத்தில் அமிழ்தம் பற்றிக் குறிப்பிடும்போது;

“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று”

– வானத்திலிருந்து உலகம் உய்ய வழங்கப்படுகின்ற காரணத்தினால் மழையை அமிழ்தம் என்று அழைக்கிறோமென்று குறிப்பிடுகிறார்.

உலகத்தை, மனிதர்களை வாழவைக்க, வானத்திலிருந்து உலகத்திற்கு வழங்கப்படுவதால் அதை அமிழ்தம் என்று அழைக்கிறோமென்று குறிப்பிடுகிறார்.

ஆக வள்ளுவர் குறிப்பிட்ட அமிழ்தம் தேவாசுரர்கள் திருப்பாற்கடலிலே எடுத்த அமிழ்தம் அல்ல, அவர் மழையின் வாயிலாக எடுத்த அமிழ்தம் – மழைதான் மக்களுக்கு அமிழ்தம் – மழை இல்லாவிட்டால் மக்களுக்கு வாழ்வில்லை. மக்கள் இயங்க முடியாது. எனவே, அதுவே அமிழ்தம், அந்த அமிழ்தம்போலக் குழந்தையின் பிஞ்சு விரல் பட்ட கூழ் மாறிவிட்டது என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றுதான் நாம் கொள்ளவேண்டும்.

நம்முடைய மொழியின் சிறப்பை நாம் படித்தறிந்திருக்கிறோம். கேட்டறிந்திருக்கிறோம். நம்முடைய மொழிக்குள்ள தனிச்சிறப்பு – மொழி – அது பெயர்ச்சொல்லாகவும் பயன்படும்; வினைச் சொல்லாகவும் பயன்படும். ஒருவரைப் பார்த்து – மொழி – என்று சொன்னால் அங்கே அது வினைச் சொல். என்னுடைய மொழி என்று சொன்னால் அங்கே அது பெயர்ச்சொல். ஆனால் ஆங்கிலத்திலே இந்த நிலை இல்லை. அது உலகத் தொடர்புடைய மொழியானாலுங்கூட, அதிலே இல்லாத அந்த ஆற்றலைத் தமிழ் பெற்றிருக்கிறது.

ஆங்கிலத்திலே Language என்கிறோம். அதற்கு வினைச் சொல்லாக வேறு சொற்கள்தான் இருக்கின்றன. say என்றோ, tell என்றோ speak என்றோ தான் சொற்கள் இருக்கின்றன. நம்முடைய தமிழ் மொழிக்குத்தான் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் மொழி என்ற சொல் அமைந்திருக்கின்றது.

வாடிக்கொண்டும் வாழ்ந்துகொண்டும்
இருக்கும் தமிழர்கள்

இத்தகைய சிறப்புக்குரிய மொழிக்குச் சொந்தக்காரர்களான தமிழர்கள் உலகில் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்ந்துகொண்டும் இருக்கிறோம். வாடிக்கொண்டும் இருக்கிறோம்.

நான் இங்கே வந்து அமர்ந்ததும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆரூர் தோழர் ஒருவர் ஆர்க்காடு வீராசாமி மூலமாக ஒரு மடலை என்னிடம் தந்தார். அதைப் படித்துப் பார்த்தேன். என்ன எழுதியிருக்கிறாரென்றால் முன்பெல்லாம் இங்கே சாதாரண சாமான்ய தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தமிழர்கள் தாயகத்திற்குத் திரும்ப வேண்டுமென்றால்,கப்பலிலேசென்றுவந்தோம்.இப்போது விமானத்திலேதான் செல்ல வேண்டியிருக்கிறது. காரணம், சிதம்பரம் கப்பல் எரிந்த பிறகு எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. எனவே, முதலமைச்சர் அவர்களே உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இல்லாவிட்டால் நீங்களே மற்றொரு சிதம்பரனாராக மாறி அந்தக் கப்பல் பயணத்தை எங்களுக்கு ஏற்பாடு செய்துகொடுங்கள் என்று எழுதியிருக்கிறார். கடிதம்தான் அது. வந்து அமர்ந்ததும் என் உள்ளத்தைக் கவலை கொள்ளச் செய்த கடிதம். கவனிக்கப்பட வேண்டிய கடிதம் அது என்பதை நான் உணருகிறேன்.

என்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய அரசிலே எனக்கு எந்த அளவிற்குச் செல்வாக்கு இருக்கிறது என்பதை இதைப் பயன்படுத்துவதிலே நான் காணுகின்ற வெற்றியைப் பொறுத்துத்தான் நீங்கள் கணிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்று – நேற்றைய தினம் பிரதமரைச் சந்தித்தபோது கூட – இங்கு சில எத்தர்களால் ஏமாற்றப்பட்டுச் சிங்கைக்கு அழைத்து வரப்பட்டு “பெரிய வேலை வாய்ப்பில் ஈடுபடுத்துகிறேன் கவலைப்படாதே” என்று கூறப்பட்டு, அதை நம்பி, தன்னுடைய நிலபுலன்களையெல்லாம் விற்று விட்டு, நகை நட்டுகளையெல்லாம் அடமானம் வைத்துவிட்டு சிங்கைக்கு வந்து, அழைத்தவர்கள் எங்கே போனார்கள் என்று தெரியாமல், சில தனியார் கம்பெனிகளிலே வேலைக்கு அமர்ந்து, அவர்களால் கைவிடப்பட்டு சிங்கை வீதிகளிலே அலைந்து கொண்டிருக்கின்ற தமிழர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். எனவே, தமிழன் உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டும் இருக்கிறான். வாடிக்கொண்டும் இருக்கிறான்.

வாடிக் கொண்டிருக்கின்ற தமிழனுக்கு ஒரு வழி காண வேண்டுமென்று நேற்று உங்களுடைய பிரதமரிடத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவரும் இதை மிகுந்த அக்கறையோடு கேட்டு நிச்சயமாகத் தகுந்த தீவிரமான நடவடிக்கை எடுக்க நான் உதவுகிறேன் என்றார். இதை – ஏமாந்த தமிழர்களுக்கு ஒரு நல்ல செய்தியாக நான் அறிவிப்பதோடு இனியும் ஏமாறாமல் இருக்க உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாவின் வார்த்தைகளை
வேதமாகக் கொண்டுள்ளோம்

தமிழ்ச் சமுதாயம் பல இடங்களில் பல இனங்களோடு சேர்ந்து வாழ வேண்டியிருக்கின்றது. இனம் கண்டு வாழ வேண்டியிருக்கின்றது. சிங்கப்பூரானாலும், மலேசியாவானாலும், எங்களுடைய தலைவர், எங்கள் **அண்ணன், பெரியார் வழி வந்த பேரறிஞர் அண்ணா** அவர்கள் – “ஆங்காங்கு வாழும் தமிழர்கள் அந்த மண்ணுக் குரியவர்களாக – அந்த மண்ணின் நலன்களில் நாட்டம் உடையவர்களாக – அதே நேரத்தில் மொழியை, இனத்தை, மொழி உணர்வை, இன உணர்வை மறக்காதவர்களாக வாழவேண்டும்” என்று சொன்ன அந்த வார்த்தைகளை நான் வேதமாக என்னுடைய நெஞ்சிலே செதுக்கி வைத்திருக்கிறேன். அதை இங்கே வெளியிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

அண்ணா அவர்கள் எத்தனைப் புலவர்கள் சங்க காலக் கட்டத்திலே வாழ்ந்தார்கள் என்று கணக்கெடுத்துப் புறநானூற்றுப் புலவர்களுடைய பட்டியலை மாத்திரம் வெளியிட்டு, தம்பிக்கு எழுதிய கடிதத்திலே சுட்டிக் காட்டியிருந்தார். நான் அதைப் படித்துப் பார்த்தவுடனேயே அண்ணா புறநானூற்றுப் புலவர்களை மாத்திரம் குறிப்பிட்டிருக்கிறார். அகநானூற்றுப் புலவர்களையும் சேர்க்க வேண்டுமேயென்று அந்தக் கணக்கையும் எடுத்து நான் சேர்த்துப் பார்த்தேன். ஏறத்தாழ அந்தப் புலவர்களின் எண்ணிக்கை 210ஐ எட்டுகிறது; 210பேர் அகநானூறு, புறநானூறு பாடல்களை எழுதியிருக்கிறார்கள்.

அவர்களுடைய பெயர்களைச் சொன்னால் அந்தக் காலத்தில் எப்படிப்பட்ட பெயர்களை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்ற அந்த உண்மை நமக்குத் தெரியும்.

அகநானூறு – புறநானூறு பாடிய புலவர்கள்

1. அடை நெடுங்கல்வியார்
2. அண்டர்மகன் குறுவழுதி
3. அரிசில்கிழார்
4. அள்ளூர் நன்முல்லையார்
5. அந்தி இளங்கீரனார்
6. அம்மூவனார்
7. ஆடுதுறை மாசாத்தனார்
8. ஆலங்குடி வங்கனார்
9. ஆலத்தூர் கிழார்
10. ஆலியார்
11. ஆவூர் கிழார்
12. ஆவூர் மூலங்கிழார்
13. ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக்கண்ணத்தனார்
14. ஆலம்பேரிச் சாத்தர்
15. நக்கண்ணையார்
16. இடைக்காடனார்
17. இடைக்குன்றூர்க் கிழார்
18. இரும்பிடர்த்தலையார்
19. ஈழத்துப் பூதன் தேவனார்
20. உலேச்சனார்
21. உறையூர் இளம்பொன் வாணிகனார்
22. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
23. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
24. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
25. உறையூர் முதுகூத்தனார்
26. உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்
27. உரோடகத்துக் கந்தரத்தனார்
28. உலோச்சனார்
29. ஊட்டியார்
30. ஊன்பொதி பசுங்குடையார்
31. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
32. எயினந்தை மகனார் இளங்கீரனார்
33. எருவை வெளியனார்
34. எருவை வெளியனார் மகனார் கடலனார்
35. ஐயாதிச் சிறுவெண்டரையர்
36. ஐயூர் முடவனார்
37. ஐயூர் மூலங்கிழார்
38. ஒக்கூர் மாசாத்தனார்
39. ஒக்கூர் மாசாத்தியார்
40. ஒருசிறைப் பெரியனார்
41. ஒரு உத்தனார்
42. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
43. ஓரம்போகியார்
44. ஒரேருழவர்
45. ஔவையார்
46. கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி
47. கண்ணகனார்
48. கணியன் பூங்குன்றன்
49. கபிலர்
50. கயமனார்
51. கருங்குழலாதனார்
52. கருவூர்க் கதப்பிள்ளை
53. கருவூர்க் கண்ணம் புல்லனார்
54. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்
55. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
56. கல்லாடனார்
57. கழாத் தலையார்
58. கழைதின் யானையார்
59. கள்ளில் ஆத்திரையனார்
60. கடுந்தொடைக் காவினார்
61. கணக்காயனார் மகனார் நக்கீரனார்
62. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்
63. காரிகிழார்
64. காவட்டனார்
65. காவற்பெண்டு
66. காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
67. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
68. காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்
69. காவன் முல்லைப்பூதனார்
70. குட்டுவன்கீரனார்
71. குடபுலவியனார்
72. குடவாயிற் கீரத்தனார்
73. குண்டுகட் பாலியாதன்
74. குறமகள் இளவெயினி
75. குறுங்கோழியூர்க்கிழார்
76. குன்றூர்க்கிழார் மகனார்
77. குறுங்குடி மருதனார்
78. குன்றியனார்
79. கூகைக் கோழியார்
80. கூடலூர்க்கிழார்
81. கோடைபாடிய பெரும்பூதனார்
82. கோதமனார்
83. கோப்பெருஞ்சோழன்
84. கோவூர்க்கிழார்
85. கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார்
86. சங்கவருணரென்னும் நாகரியர்
87. சாகலாசனார்
88. சாத்தந்தையார்
89. சிறுவெண்டரையார்
90. சீத்தலைச் சாத்தனார்
91. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
92. சேரமான் கணைக்காலிரும்பொறை
93. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
94. சேந்தம் பூதனார்
95. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
96. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
97. சோழன் நல்லுருத்திரன்
98. சோழன் நலங்கிள்ளி
99. தன்காற்பூட் கொல்லனார்
100. தங்கால் முடக்கொற்றனார்
101. தாமப்பல கண்ணனார்
102. தாயங்கண்ணனார்
103. தாயங்கண்ணியார்
104. திருத்தாமனார்
105. தும்பி சோகினனார்
106. துறையூர் ஓடைக்கிழார்
107. தொடித்தலை விழுத்தண்டினார்
108. தொண்டைமான் இளந்திறையன்
109. நரிவெரூஉத் தலையார்
110. நல்லிறையனார்
111. நன்னாகனார்
112. நக்கீரனார்
113. நல்லாவூர் கிழார்
114. நல் வெள்ளியார்
115. நன்பலூர் சிறுமேதாவியார்
116. நெட்டிமையார்
117. நெடுங்கழுத்துப்பாணர்
118. நெடும்பல்லியத்தனார்
119. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்
120. நொச்சி நியமங்கிழார்
121. நோய்ப் பாடியார்
122. பக்குடுகை நன்கணியார்
123. பரணர்
124. பாண்டரங்கண்ணனார்
125. பாண்டியன் அறிவுடைநம்பி
126. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

127. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.
128. பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி
129. பாலை பாடிய பெருங்கடுங்கோ
130. பெருந்தேவனார்
131. பாரி மகளிர்
132. பிசிராந்தையார்
133. பிரமனார்
134. புல்லாற்றூர் எயிற்றியனார்
135. புறத்திணை நன்னாகனார்
136. பூங்கணுத்திரையார்
137. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
138. பெருங்குன்றூர்க் கிழார்
139. பெருங்கோழிநாய்க்கன் மகள் நக்கண்ணையார்
140. பெருஞ்சித்திரனார்
141. பெருந்தலைச்சாத்தனார்
142. பெரும்பதுமனார்
143. பெருந்தேவனார்
144. பேய்மகள் இளவெயினி
145. பேரெயின் முறுவலார்
146. பேரி சாத்தனார்
147. பொத்தியார்
148. பொய்கையார்
149. பொருந்திலிளங்கீரனார்
150. பொன்முடியார்
151. போந்தைப் பசலையார்
152. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
153. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
154. மதுரை இளங்கண்ணி கௌசிகனார்
155. மதுரை இளம்பாலாசிரியர் சேந்தன் கூத்தனார்
156. மதுரை எழுத்தாளனார்
157. மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்
158. மதுரைக் கணக்காயனார்
159. மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார்
160. மதுரைக் கள்ளின் கடையத்தன் வெண்ணாகனார்
161. மதுரை கவுணியன் பூதத்தனார்
162. மதுரை காஞ்சிப் புலவர்
163. மதுரை செங்கண்ணனார்
164. மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்
165. மதுரைத் தமிழ்க் கூத்தனார்
166. மதுரை நக்கீரர்
167. மதுரைப் படைமங்க மன்னியார்
168. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்
169. மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்
170. மதுரைப் பூதனிள நாகனார்
171. மதுரைப் பேராலவாயார்
172. மதுரைப் போத்தனார்
173. மதுரை மருதனிள நாகனார்
174. மதுரை வேளாசான்
175. மருதனிள நாகனார்
176. மருதம் பாடிய இளங்கடுங்கோ
177. மாங்குடிக் கிழார்
178. மாதி மாதிரத்தனார்
179. மார்க்கண்டேயனார்
180. மாமூலனார்
181. மாற்பித்தியார்
182. மாறோக்கத்து நப்பசலையார்
183. மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்
184. முடங்கிக் கிடந்த சேரலாதன்
185. முரஞ்சியூர் முடிநாகராயர்
186. மோசிகீரனார்
187. மோசி சாத்தனார்
188. வடம நெடுந்தத்தனார்
189. வடம வண்ணக்கண் தாமோதரனார்
190. வடம வண்ணக்கண் பெருஞ்சாத்தனார்
191. வடம வண்ணக்கண் பேரிசாத்தனார்
192. வடமோதங்கிழார்
193. வன்பரணர்
194. வண்ணப்புறக் கந்தரத்தனார்
195. வான்மீகியார்
196. விரிச்சியூர் நன்னாகனார்
197. விரியூர் நக்கனார்
198. வீரை வெளியனார்
199. விற்றூற்று மூதெயினனார்
200. வெள்ளாடியனார்
201. வெள்ளி வீதியார்
202. வெண்ணிக் குயத்தியார்
203. வெள்ளெருக்கிலையார்
204. வெள்ளைக்குடி நாகனார்
205. வெள்ளை மாளர்
206. வெறிபாடிய காமக்கண்ணியார்
207. வேம்பற்றூர்க் குமரனார்

– இதுவே, அகநானூறு – புறநானூறு பாடிய புலவர்கள் பட்டியலாகும்.

வள்ளுவர் குறளுக்கு நான் எழுதிய உரை

பெரியார் வந்த பூமி இது. அறிஞர் அண்ணா அவர்கள் வந்து உரையாற்றிய பூமி இது, ஆன்மீகக் கருத்துக்களை இங்கே வந்து வழங்கிய குன்றக்குடி அடிகளார் வுந்த பூமி இது. இங்கே அடியேனும் வந்து உங்களைக் காணுகின்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

நம்முடைய இலக்கியங்களிலே இன்றைக்கு நான் முதலிலே குறிப்பிட்டதைப் போலப் பொதுமறையாக இன்றைக்கும் போற்றப்படுவது குறள். இந்தத் திருக்குறளுக்கு நான் உரை எழுதியிருக்கிறேன். குறளோவியம் மாத்திரமல்ல; உரையும் எழுதியிருக்கிறேன். அந்த உரை எழுதும்போது கற்பனையாக அல்ல, வேண்டுமென்றே வலிந்து அல்ல, இப்படித்தான் வள்ளுவர் எழுதியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு நானே மாத்திரமல்ல; பல புலவர்களோடு கலந்து பேசி நான் இந்த உரையை எழுதியிருக்கிறேன். நான் எழுதியதைக்கூடத் திருத்த வேண்டிய நிலைமை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஏற்கெனவே,

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"

– என்ற குறளுக்குப் பரிமேலழகர் போன்றவர்களும், அதைப் பின்பற்றி டாக்டர் மு.வ. போன்றவர்களும் எழுதியுள்ள உரை என்னவென்றால், தெய்வத்தைக்கூட தொழாமல் கணவனையே தெய்வமாகக் கொண்டு வணங்குகின்ற பெண் "மழையே வா – மழையே பெய்" என்று சொன்னால் மழை பெய்யுமென்று எழுதியிருக்கிறார்கள். இது ரொம்ப ஆபத்தானது. ஏனென்றால் மழை பொழியாத காலத்திலே வீட்டுக்காரியைக் கூப்பிட்டு மழை வரச்சொல் என்று சொல்லி அது வரவில்லை என்றால் என்ன ஆகும்? எனவே அந்த உரை பொருந்தாது என்று

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அப்போதே கூறியிருக் கிறார்.

புரட்சிக் கவிஞரின் குறள் விளக்கம்

அவர் என்ன கூறினாரென்றால் தெய்வத்தைக்கூடத் தொழாமல் கணவனைத் தொழுகின்ற பெண் எப்படிப்பட்டவள் என்றால் நாம் மழை பெய் என்றவுடன் மழை பெய்தால் அந்த மழை எந்த அளவிற்குச் சிறந்ததோ அந்த அளவிற்குச் சிறப்பானவள் என்று எழுதினார். இந்தக் குறளுக்கு நான் உரை எழுதும்போது எனக்கு இந்தக் கருத்தை மேலும் மெருகேற்ற வேண்டுமென்று தோன்றியது. அந்தப் பெண்ணுக்கு மேலும் உரிமை அளிக்கவேண்டுமென்று தோன்றியது. அந்த உரிமையை வள்ளுவர் அளித்திருக்கிறார் என்று எனக்குப் புரிந்தது.

தெய்வத்தைக்கூட தொழாமல் கணவனைத் தொழுகின்ற பெண் – பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்ற அடிமை ஆவாள். மழை பெய் என்று சொன்னால் – பெய்துவிடுமா? பெய்துவிடாது. இயற்கை நிலை அது. ஆணையிட்டுப் பெய்யக் கூடியதல்ல மழை. ஆணையிட்டுப் பெய்கின்ற மழையைப் போன்றவள் பெண் என்று சொன்னால் அவள் ஒரு அடிமையாகத்தான் இருப்பாள். ஆகவே, பெய்யெனப் பெய்யும் மழையாக அவள் ஆகிறாள். தெய்வத்தைக்கூடத் தொழாமல் கணவனையே தெய்வமாகக் கருதிக் கொண்டிருக்கின்ற பெண் இருக்கிறாளே, அவள் பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போன்ற அடிமையாவாள் என்ற அந்தக் கருத்தைத்தான் 'கலைஞர் உரை' என்ற புதிய நூலிலே நான் எழுதியிருக்கிறேன்.

என் மூலம் வாழ்த்தும் தமிழக மக்கள்

நீண்டநேரம் இலக்கிய உரை இங்கே உங்கள் முன்னிலையில் உங்களுக்காகச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. இறுதியாக நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தமிழக மக்கள் உங்களை என் வாயிலாக வாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள். உங்களுடைய வாழ்த்துக்களையெல்லாம் என் நெஞ்சிலே ஏந்தி அவர்களுக்குக் காணிக்கையாக்க நான் இருக்கிறேன்.

நாளைய தினம் மலேசியப் பயணத்தை மேற்கொள்கிறேன். மலேசியப் பயணத்தில் சில தொழில் துறைப் பிரச்சினைகளைப் பற்றியும் நீண்ட காலமாகத் தமிழ் நாட்டிற்கும் அந்த நாட்டிற்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பு பற்றியும் அங்கேயும் பேசவிருக்கிறேன். நம்முடைய தொடர்பு என்றென்றும் அறுந்து போகாமல் தொடர்ந்து கொண்டே இருக்கக்கூடிய ஒரு உறவாகும். உங்களையெல்லாம் பார்க்கிறேன். மகிழ்கிறேன். என்னுடைய பேச்சு நிறைவுபெறப் போகிறதே, உங்களைப் பிரிய நேரிடுகிறதே என்கின்ற அந்தக் கலக்கத்தோடு, நான் உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். என்றென்றும் நாம் உடன்பிறப்புகளாக –ஓரின உணர்வுமிக்கவர்களாக வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்".

சிங்கப்பூரில் இந்திய வர்த்தகக் குழுவினர் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் கூட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் கலைஞர் அவர்களை சிங்கப்பூர் இந்திய வர்த்தக சங்கத்தலைவர் தேவேந்திரசிங் அழைத்துச் சென்ற போது எடுத்த படம்.

சிங்கப்பூரிலுள்ள இந்திய வர்த்தகக் குழுவினர் ஏற்பாடு செய்த, நெறிகாட்டும் குழுவினருடன் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாடும் காட்சி.

மாண்டரின் ஓட்டலில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரையாற்றுகிறார்.

மாண்டரின் ஓட்டலில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு சிங்கப்பூர் 'தமிழ்முரசு' இதழின் ஆசிரியர் திருநாவுக்கரசு அவர்கள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கவுரவித்த காட்சி.

சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஜார்ஜ் இயோ அளித்த விருந்தின்போது சிங்கப்பூர் தமிழகம் இடையேயான வர்த்தகம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்த படம்.

சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஜார்ஜ் இயோ அளித்த விருந்தில் முதலமைச்சர் கலைஞர்.

சிங்கப்பூர் 'மாண்டரின்' ஓட்டலில் நடைபெற்ற வரவேற்பு விருந்தில், முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் இந்திய வர்த்தக மற்றும் தொழில் கழகத்தின் தலைவர் குப்தா அவர்கள் உரையாடிய காட்சி.

சிங்கப்பூர்–இந்திய வர்த்தகக் கழகம் சார்பில் நடைபெற்ற வரவேற்பு விருந்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன், இராஜாராம் அவர்கள் கலந்துரையாடிய போது எடுத்த படம்.

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இலக்கியச் சொற்பொழிவு ஆற்றிய காட்சி.

முதலமைச்சர் கலைஞரின் இலக்கிய உரை கேட்க, அரங்கம் நிரம்பி வழியும் வண்ணம் திரண்டிருந்த சிங்கப்பூர் தமிழர்கள்.

சிங்கப்பூரில் 'தி ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்' என்ற ஆங்கில நாளேட்டை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் படித்துக் கொண்டிருந்தபோது எடுத்த படம்.

சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் குழுத்தலைவர் தேவேந்தர் சிங்கை முதலமைச்சர் கலைஞர் சந்தித்த காட்சி.

சிங்கப்பூர் அரசின் சார்பில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மா போ டான் மாண்புமிகு கலைஞரை வரவேற்றல்.

மாண்புமிகு சிங்கப்பூர் பிரதமர் திரு. கோ சோக் டோங் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அளித்திடும் நினைவுப்பரிசு.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் சுழலும் படிக்கட்டில் நின்றவாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளிவரும் காட்சி.

முதலமைச்சர் கலைஞரை மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு வரவேற்றபோது எடுத்த படம்.

கோலாலம்பூரில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, இந்திய ஹைகமிஷனர் சகாய் அவர்கள் மாலையணிவித்து வரவேற்கிறார்.

கோலாலம்பூரில் செய்தியாளர்களைச் சந்திக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை கோலாலம்பூரில் மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் வரவேற்ற காட்சி.



முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் ஆலோசனை நடத்திய காட்சி.

மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில் துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் மற்றும் அந்நாட்டின் தொழிற்துறை உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆலோசனை நடத்திய காட்சி.

கோலாலம்பூரில் உள்ள ஒரு கோபுரத்தினுள் இருந்தவாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாநகரின் எழில்மிகு தோற்றத்தை கண்டு களிக்கும் காட்சி.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவரது துணைவியார் ஆகியோருடன் மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு அவரது துணைவியார்.

மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் அளித்த விருந்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்து கொள்ள வருகை தந்த காட்சி.

மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அலுவலகத்தில் உயர் அலுவலர்களுடன் பேச்சு வார்த்தை.

மலேசிய நாட்டுப் பிரதமர் டாக்டர் மகாத்தீர் முகமது அவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொன்னாடை அணிவிக்கும் காட்சி.

மலேசியப் பிரதமருக்கு, முதலமைச்சர் கலைஞர் நினைவுப் பரிசு வழங்குகிறார்.

மலேசிய நாட்டுப் பிரதமருடன் கலந்துரையாடும் முதலமைச்சர் கலைஞர்

வண்ணப்படங்கள் : யோகா

மலேசியாவில் கலைஞர்

சிங்கப்பூரில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு முதலமைச்சர் குழு, **7.1.1999** அன்று காலை சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் புறப்பட்டு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை வந்தடைந்தது. மலேசியா விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கோலாலம்பூர் நகருக்கும் விமான நிலையத்திற்கும் சுமார் **70** கிலோ மீட்டர் தூரம் இருந்தபோதிலும் விமான நிலையத்தில் எராளமான தமிழர்கள் திரண்டு வந்து முதலமைச்சரை வரவேற்றார்கள்.

மலேசிய அமைச்சர் டத்தோ திரு. சாமிவேல், தனது துணைவியாருடன் விமான நிலையம் வந்து முதலமைச்சரை வரவேற்றார்.

விமானத்தில் இருந்து இறங்கியதும், பிரத்தியே கமாகச் செய்யப்பட்ட ஒரு சிறு கார் போன்ற வண்டியில் முதலமைச்சரை அமர வைத்து ஊர்வலம் போல விமான நிலையத்திற்குள்ளே அழைத்து வந்தார்கள். பின்னர் அங்கிருந்து ஒரு சிறு புகைவண்டியில் முதலமைச்சர் அவர்களும், அவரது குழுவினரும் ஏறிக்கொண்டார்கள். அந்தப் புகைவண்டியில் ஒரு கிலோமீட்டருக்கு மேல் பயணம் செய்து, பின்னர் அதிலிருந்து இறங்கி மீண்டும் அந்தப் பிரத்தியேகக் காரில் ஏறி விமான நிலையத்திற்கு வெளியே வருகை தந்தார். அங்கிருந்து கோலாலம்பூர் நகருக்கு கார் மூலம் பயணப்பட்டார் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்.

விமான நிலையத்தில்

வரவேற்புக்குப் பின் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடையே உரையாற்றிய முதல்வர் **கலைஞர்** அவர்கள் கூறியதாவது :-

"சிங்கப்பூர் நாட்டில் கடந்த மூன்று நாட்களாக என்னுடைய பயண நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துக் கொண்டு இன்று காலையிலே மலேசியா நாட்டின் தலைநகரான கோலாலம்பூர் வந்து சேர்ந்துள்ளேன். விமான நிலையத்திலே மாண்புமிகு அமைச்சர் டத்தோ திரு.சாமிவேல் அவர்கள் தலைமையில் இந்திய ஹை கமிஷனர் திரு. சகாய் மற்றும் அதிகாரிகள் உட்படப் பலரும் வரவேற்றார்கள். இரண்டாவது முறையாக மலேசியா நாட்டிற்கு நான் இப்போது வந்துள்ளேன். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் நான் மேற்கொண்டுள்ள பயணம் முக்கியமாக தமிழகத்திற்கும் இந்த இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வருகிற கலாச்சாரத் தொடர்பை உறுப்படுத்திக் கொள்வதற்காகத்தான். எனவே இந்தப் பயணம் அதற்கு மெத்தவும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து தொழில்துறை வளர்ச்சியில் தமிழகத்திற்கு எந்த அளவிற்கு பயன் கிடைக்கும் என்பதை நினைவுபடுத்துவதற்கும் நான் இந்தப் பயணத்தை பயன்படுத்திக் கொள்வதாக இருக்கிறேன். அந்த வகையில் சிங்கப்பூரில் அங்குள்ள வர்த்தகப் பிரமுகர்கள், அமைச்சர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோருடன் உரையாடியிருக்கிறேன். எனவே இந்தப் பயணத்தில் நல்ல பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதே நம்பிக்கையுடன்தான் நான் கோலாலம்பூருக்கும் வந்திருக்கிறேன். இன்றும் நாளையும், நாளை மறுநாளும் மலேசியப் பிரதமரையும், அமைச்சர்களையும், தொழில் முனைவோர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படும்போது அவர்களிடத்தில் தமிழகத்தில் தொழில் தொடங்க அவர்கள் உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகள், சலுகைகள் ஆகியவற்றைத் தருவதற்கு தமிழகம் தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவிப்பேன்:

இதற்கிடையே இங்கு வாழ்கின்ற தமிழ் பெருமக்களைச் சந்திப்பதற்காக ஒரு பொது நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பொது நிகழ்ச்சியில் நான் கலந்துகொள்வதன் மூலம் மலேசியாவில் உள்ள தமிழ் பெருமக்களைச் சந்திக்கும் மகிழ்ச்சிகரமான வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன். ஏனென்றால் மலேசியாவிற்கு உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போதுதான் நான் வந்திருக்கிறேன். அப்போது நீண்ட நேரம் தமிழ் மக்களிடத்தில் உரையாற்றுவதற்கான உரிய நேரம் கிடைக்கவில்லை. இப்போது அந்த நேரம் கிடைக்கும் என்ற நிலை இருப்பதால் அந்த நிகழ்ச்சியில் மலேசியாவில் வாழ்கின்ற தமிழ் பெருமக்களைச் சந்திப்பேன் என்று கூறி என்னுடைய வருகை பயன்பெற மலேசியாவில் உள்ள தமிழ் மக்கள் எனக்குத் துணை புரியவேண்டுமென்று அவர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்".

தொழில்துறை அமைச்சருடன் சந்திப்பு

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 7.1.1999 அன்று மாலை மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில்துறை அமைச்சர் **டத்தோ ரபீதா அஜிஸ்** அவர்களை, அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.

முதலில் முதலமைச்சர் கலைஞரை வரவேற்ற அமைச்சர் டத்தோ ரபீதா அஜிஸ் தனது செயலாளருடனும் தமிழக தொழில் துறைச் செயலாளருடனும் தனியே உரையாடினார். பின்னர் அங்கே நடைபெற்ற கலந்துரையாடலில் அதிகாரிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் வருகை குறித்தும், தொழில் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞரும், மலேசிய தொழில் அமைச்சரும் பேச்சுவார்த்தை குறித்து விளக்கினார்கள்.

அமைச்சர் டத்தோ சாமிவேல் விருந்து

மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமி வேல் அவர்கள் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் தனது இல்லத்தில் 7.1.1999 விருந்து அளித்தார். அப்போது அண்மையில் திருமணம் நடைபெற்ற மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேல் அவர்களின் மகனுக்கும், மணமகளுக்கும் முதலமைச்சர் கலைஞரும், அவரது துணைவியாரும் வாழ்த்துக் கூறிப் பரிசலித்தனர்.

அந்த விருந்தில் மலேசிய அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

விருந்துக்கு வந்த முதலமைச்சரைப் பொதுப்பணித் துறை அமைச்சர் **டத்தோ சாமிவேலு** அவர்கள் வரவேற்று உரையாற்றும்போது கூறியதாவது :

*"மாண்புக்கும் மரியாதைக்கும் உரிய தமிழர்களின் தனிப்பெருந்தலைவர் பெருமதிப்பிற்குரிய **கலைஞர்** அவர்கள் குழுவிற்குத் தலைமையேற்று மலேசியாவிற்கு இரண்டாவது முறையாக வருகை தந்திருக்கிறார். அவரை மலேசிய அரசின் சார்பிலும், மலேசிய மக்களின் சார்பிலும் வரவேற்கின்றேன். தலைவர் அவர்களே! உங்களுடைய வருகை நூற்று முப்பது ஆண்டுகளாக நமது இரு நாடுகளுக்குமிடையே குறிப்பாக மலேசியாவிற்கும், தமிழகத்திற்குமிடையே நட்புறவு, கலச்சார உறவு, கலை உறவு என்று இருந்த எல்லா உறவுகளையும் புதுப்பிக்கக் கூடிய உறவாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன். இந்த வருகை மலேசியாவில் இருக்கிற தமிழர்களுக்கெல்லாம் பெருமை தரக்கூடியதாகும். உங்களுடைய வருகையின் மூலம் மலேசியாவில் தமிழர்கள் மேலும் பெருமை கொள்வுார்கள்.*

"எறும்புபோல் சுறுசுறுப்போடு உழையுங்கள்; கரும்பு போல் செய்தி கிடைக்கும்!"

– கலைஞர்

– இவ்வாறு டத்தோ சாமிவேல் கூறினார்.

இந்த விருந்தில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் நன்றியுரையில் கூறியதாவது :

"அருமை நண்பர் டத்தோ சாமிவேல் அவர்கள் பேசும்போது நூறு ஆண்டுகளுக்கு மேலாக மலாய் நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே இருந்து வருகிற உறவை, கலச்சார தொடர்பை புதுப்பித்துக் கொள்வதற்காக நான் இங்கே வந்திருப்பதாக குறிப்பிட்டார். மன்னிக்க வேண்டும். திருத்திக் கொள்ள வேண்டும். அந்த உறவு பழுதடைந்தால்தான் புதுப்பிக்க வேண்டும். அந்த உறவை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் வந்திருக்கிறேனே யல்லாமல் அது பழுதடைந்துவிட்டதானதைப் புதுப்பிக்க வந்திருக்கிறேன் என்று நான் கூற விரும்பவில்லை.

இந்த இரு நாடுகளுக்குமிடையே, இந்த நாட்டு மக்களுக்கிடையே, இருநாட்டுக் கலாச்சாரத்திற்கு மிடையே இருக்கிற நல்ல உறவைப் போல எனக்கும் அன்பிற்குரிய நண்பர் டத்தோ சாமிவேலு அவர்களுக்கும் நீண்ட காலமாக நட்பு உண்டு. அந்த அன்பை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே அவர் குறிப்பிட்ட கலாச்சார உறவை உறுதிப்படுத்துகின்ற வகையிலும் இன்றைக்கு இந்த இனிய விழா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து விருந்தளிக்கிறார்கள்.

இந்த விருந்தை அளித்தால் மாத்திரம் போதாது. தமிழகத்திலே தொழில் வளம் பெருக நான் எடுத்துள்ள முயற்சிக்கு அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்களும் மற்றவர்களும் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று சில முக்கியமான பிரமுகர்களை, குறிப்பாக தொழில்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு ரபீதா அஜிஸ் அவர்களைச் சந்தித்து மாலையில் எங்கள் குழுவின் சார்பில் ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கு மேலாக தமிழகத்திலே தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்ற பிரச்சினைகளையெல்லாம் பேசியிருக் கிறோம்.

நாளைய தினம் டத்தோ திரு.சாமிவேல் அவர்களோடும் அதன்பிறகு மலேசிய நாட்டு மாண்புமிகு பிரதமர் அவர்களோடும் பேசவிருக்கின்றேன்.

நாளை மாலையில் நடைபெறவிருக்கின்ற மலேசிய தமிழ் மக்கள் நிகழ்ச்சியில் கலந்துரையாட இருக்கிறேன். தொழில் முனைவர்கள் மத்தியிலும் உரை நிகழ்த்த இருக்கிறேன் என்று கூறி நீங்கள் இங்கே அளித்துள்ள இனிய வரவேற்பிற்கு மீண்டும் மீண்டும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> “கலை கலைக்காகவே என்று சொல்ல இயலாது; விளக்கு எப்படி விளக்குக்காக இல்லையோ, அதைப் போலக் கலை என்பது மக்களுக்காகத்தான்!”
>
> – கலைஞர்

சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மலேசியாவில் **8.1.99** அன்று காலையில் மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம் சென்று பொதுப்பணித்துறை அமைச்சருடனும் மற்றும் பொதுப்பணித் துறையின் துணை அமைச்சர், செயலாளர், அதிகாரிகள் ஆகியோருடனும் கலந்துரையாடினார். ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொழில் முனைவோர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. முதலமைச்சர் **கலைஞர்** இந்தக் கூட்டத்தில் பேசும்போது, தமிழகத்தின் தலைநகரமான சென்னையைப் பொறுத்தவரை இரண்டு பிரச்சினைகள் உண்டு; ஒன்று குடிநீர் பிரச்சினை. இரண்டாவது போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும் என்ற பிரச்சினை. குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை நாங்கள் தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு ஆந்திர முதல்வர் திரு.சந்திரபாபு நாயுடு அவர்களின் உதவியோடு கிருஷ்ணா தண்ணீரை சென்னை பெற்று வருகிறது. போக்குவரத்து நெரிசல் தொடர்பாக பலமுறை டத்தோ சாமிவேலு அவர்கள் சென்னை வரும் போதெல்லாம் தொடர்ந்து விவாதித்து இரண்டொரு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை ஏறத்தாழ முழுமை அடைந்த நிலையில் உள்ளன என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தின் முடிவில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களும் டத்தோ சாமிவேலு அவர்களும் செய்தியாளர்களைச் சந்தித்தனர். எடுக்கப்பட்ட முடிவினை பத்திரிகையாளர்களிடம் இருவரும் விளக்கினர்.

மலேசிய நாட்டு பிரதமருடன்

9.1.1999 அன்று காலை **10.00** மணிக்கு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மலேசிய நாட்டின் பிரதமர் டாக்டர் மகாத்திர் முகமது அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து 35 நிமிடங்களுக்கு மேலாக உரையாடினார். சந்திப்பு தொடங்கியதும் முதலமைச்சர் **கலைஞர்** மலேசிய நாட்டின் பிரதமருக்கு பொன்னாடையையும் சந்தன மாலையையும் அணிவித்து சந்தனத்தால் ஆன வள்ளுவர் கோட்ட மாதிரி ஒன்றையும் சங்கத் தமிழ், குறளோவியம் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களையும் அளித்தார்.

கடந்த இரண்டு தினங்களாக தொழில்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோருடனும் தாம் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி முதலமைச்சர் பிரதமரிடம் விளக்கினார். தமிழ்நாட்டின் தென்கோடியில் உள்ள குளச்சல், துறைமுகத் திட்டத்தை அமைக்கச் சிறந்த இயற்கை வசதிகளைப் பெற்றிருப்பதற்காகவும், இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமரிடம் விளக்கி, அவ்வறிக்கையை அவரிடம் **கலைஞர்** அளித்தார்; மலேசிய நாடு இந்த முயற்சியில் ஆர்வம் காட்டினால், இரண்டு அரசுகளும் குளச்சல் துறைமுகத் திட்டத்தை அரசு மட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முன்வரும் என்று பிரதமரிடம் **கலைஞர்** சொன்னார்.

தமிழ்நாட்டில் உள்ள பாலாற்றில் மழைக் காலத்தில் மட்டும் வெள்ளம் பெருகி தண்ணீர் வீணாவதைத் தடுக்க, நிலத்தடி நீரை தக்க முறையில் பயன்படுத்த மலேசிய தொழில்நுட்பம் பற்றி முதலமைச்சர் **கலைஞர்** கேட்டார். அதற்கு பிரதமர் தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றை தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைப்பது பற்றி பரிசீலனை செய்வதாக பதில் அளித்தார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னேறி வரும் தமிழ்நாட்டில் பிப்ரவரி 7,8 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள “உலகத் தமிழ் இணையம்–கருத்தரங்கு மாநாடு” நிகழ்ச்சிகளில் நேரில் கலந்துகொள்ள வருமாறு பிரதமரை **கலைஞர்** அழைத்தார். பிரதமர் இதுவரை தான் தமிழகம் வந்ததில்லை என்றும் முடிந்தால் இந்த மாநாட்டில் பங்குபெறுவதாகவும், அடுத்த முறை இந்தியாவிற்கு வரும்போது நிச்சயமாக தமிழ்நாடு வருவதாகவும் முதலமைச்சரிடம் கூறினார்.

தமிழ்நாட்டிற்கும் மலேசியாவிற்கும் வெகு காலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளை, வரலாற்றுச் சான்றுகளோடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் விளக்கிச் சொன்னதை மலேசிய பிரதமர் ஆர்வத்துடன் கேட்டார். பிரதமருடன் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் இன்றைய சந்திப்பு நேச உணர்வுடனும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைந்திருந்தது.

★ ★ ★

கோலாலம்பூரில், தமிழ் அமைப்புகள் அளித்த வரவேற்பில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.

“பெருமதிப்புக்கும் மரியாதைக்கும், பாசத்திற்கும் உரிய டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் தமிழ்க்கடல் வரப்போகிறது, தமிழ்க் கடல் வரப்போகிறது என்று கூறினார்கள். ஆமாம், என் எதிரே கடலே வந்து நிற்கிறது. இந்தக் கடலில் நான் இருக்கின்ற இந்த மேடை ஒரு தெப்பமாக மிதந்து கொண்டிருக்கின்றது.

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளுக்குக் கலாச்சார உறவை உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அத்துடன் தொழில் துறை, வணிகத் துறை, கல்வித் துறை ஆகியவற்றின் தொடர்புகளை வலுப்படுத்துகின்ற வகையிலும் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தில் ஐந்தாவது நாளாக இன்று உங்களையெல்லாம் சந்திக்கும் நல்ல வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

தமிழகத்தில், இந்தியத் திருநாட்டில் நான் மேற்கொண்டிருக்கின்ற அரசியல் இயக்கத்திற்கு எத்தனையோ சோதனைகள், வேதனைகள் வந்தன என்றும், அவற்றை அங்குள்ள மக்கள் மாத்திரமல்லாமல் கடல்கடந்து வாழ்கிற நீங்களும் உங்களுடைய அன்பால் ஆதரவால் தாங்கிக் கொண்டு அந்த இயக்கத்தைத் தூக்கி நிறுத்தியிருக்கிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

தொலைவில் இருந்தாலும் உங்களுடைய கருணைப் பார்வை என் மீதும் நான் தலைமையேற்றி ருக்கின்ற அரசியல் இயக்கத்தின் மீதும் என்றைக்கும் மாறாமல் இருந்துகொண்டு வருகின்றது. இதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. இருப்பினும் அரசியல் வெப்பத்தைத் தணித்துக் கொள்ள நான் அடிக்கடி இலக்கிய அரங்கிற்குச் செல்வதை என்னுடைய வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். கோடையில் இளைப்பாறிக் கொள்ளும் குளிர் தருவாக – தரு நிழலாக இருப்பது எனக்கு இலக்கியம்தான் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

அந்த இலக்கியத்தை இந்த மாமன்றத்திலே இன்றைக்கு உங்களோடு பரிமாறிக் கொள்வதற்காக உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

எனது எழுதுகோல்

என்னுடைய ஆருயிர் நண்பர் மறைந்த கண்ணதாசன் ஒருமுறை என்னைப் பற்றிக் கூறும்போது – “கருணாநிதி, உன்னுடைய செங்கோலை ஒருவேளை யாராவது பறித்தாலும் பறிக்கலாம், ஆனால் உன் கையில் இருக்கின்ற எழுதுகோலை எவராலும் பறிக்கமுடியாது” என்றார். அந்த நம்பிக்கை எனக்கு என்றைக்கும் உண்டு. அந்த நம்பிக்கையை எனக்குத் தருவதற்காக உங்களைப்போன்ற உடன்பிறப்புக்கள் இலட்சோப இலட்சம் பேர் இந்த உலகத்தின் பல பகுதிகளிலே உண்டு. அந்தத் துணிவோடு தான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

தமிழகத்திற்கும், மலேசிய நாட்டிற்கும் சிங்கப்பூர் நாட்டிற்கும் இன்று நேற்றல்ல – நீண்ட நெடுங்காலமாக நம்முடைய சாதனைச் செம்மல் சாமிவேலு அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போலத் தொடர்பும் உறவும் சொந்த பந்தமும் உண்டு. அந்த அடிப்படையில்தான் உங்களையெல்லாம் சந்திக்க இரண்டாவது முறையாக நான் வந்திருக்கிறேன். இங்கே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது நான் வந்தேன். அப்போது விமான நிலையம் கோலாலம்பூர் நகருக்கு அருகே இருந்தது. அதனால் பல்லாயிரக்கணக்கில் நீங்கள் விமான நிலையத்திற்குத் திரண்டு வந்துஎன்னைக் கசக்கிப்பிழிந்து அந்த மண்டபத்திற்குள் சாறாகக் கொண்டு வந்து சேர்த்தீர்கள். அதே சிரமம் அருமை நண்பர் சாமிவேலு அவர்களுக்கும் வேறுசில அமைச்சர்களுக்கும் அன்றைக்கு ஏற்பட்டதை நான் நன்றாக அறிவேன். இன்றைக்கு அந்த இன்பத் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்றுவதற்காக நம்முடைய சாமிவேலு அவர்கள் உபாயம் செய்து கொல்லைப்புற வழியாக என்னை அழைத்து வந்துவிட்டார்.

பொதுவாகக் கொல்லைப்புற வழியாக வருவது எனக்குப் பிடிப்பதில்லை. அது அரசியலில் ஆகட்டும், இலக்கியமாகட்டும், அதிலே கொல்லைப்புற வழியை நான் என்றைக்கும் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால் உங்களுடைய அன்பு, பாசம் நீங்கள் என் மீது கொண்டிருக்கின்ற உணர்வு மிக்க உறவு, அதன் காரணமாக நான் இங்கே முழுமையாக வந்தால்தான் ஏதாவது பேசமுடியும் என்பதற்காக – ஒருவர் கையை, ஒருவர் காலை என்று ஆளுக்கொரு உறுப்பை எடுத்துக்கொண்டால் கருணாநிதி இங்கே வந்ததாகத் தகவல் என்பதைத்தான் சாமிவேலு அவர்களால் இங்கே கூற முடியும்! எனவேதான் இந்த வழியைத் தேர்ந்தெடுத்து உங்களைச் சந்திக்கின்ற அரிய வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

நான் சிங்கப்பூரில் தமிழ் மக்களிடையே உரையாற்றும் போது ஒன்றைச் சொன்னேன் – சிங்கப்பூரில் பிரதமரைச் சந்தித்தேன், அமைச்சர் பெருமக்களைச் சந்தித்தேன், வணிகப் பெருமக்களைச் சந்தித்தேன், அவர்களுடைய குழுக்களை, நிறுவனத்தினரை எல்லாம் சந்தித்து அவர்களோடு பேசினேன். ஆனால் இப்போது உங்களைச் சந்திக்கின்றேன், பேச முடியாமல் நிற்கிறேன். உங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தால் போதும்போல் இருக்கிறது – என்று சொன்னேன்.

அங்கே சொல்லிவிட்டு இங்கே சொல்லாவிட்டால் நீங்கள் என்னைப் பற்றி என்ன கருதுவீர்கள் என்பதற்காக அல்ல; உண்மையிலேயே ஒரு நாள், இரண்டு நாள் அல்ல – இங்கேயே நின்றுகொண்டு உங்களுடைய திருமுகங்களை எல்லாம், என்மீது நீங்கள் வீசும் அன்புப் பெருக்கையெல்லாம், உங்களுடைய கனிவான பார்வையை யெல்லாம் அனுபவித்தவாறு விழி மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தால் என்ன என்ற நிலையில்தான் உங்கள் முன்னால் உங்களுடைய அன்பன், உங்களுடைய சகோதரன் – உங்கள் அடிமை, நான் நின்று கொண்டிருக்கின்றேன்.

இலக்கிய உரை இங்கே நான் ஆற்றுவேன் என்று கடந்த நான்கைந்து நாட்களாக நடத்தப்படுகின்ற விளம்பரங்களில் நம்முடைய டத்தோ அவர்களால் குறிப்புக் காட்டப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு இலக்கியம் என்பதைத் தவிர வேறு வரலாறு கிடையாது. வரலாறு இருக்கிறது, ஆனால் எழுதப்படவில்லை. எழுதப்படாத காரணத்தால் தான், இந்தியாவின் வரலாறே தமிழகத்திலிருந்து எழுதப்பட வேண்டுமென்று மனோன்மணீயம் சுந்தரனார் சுட்டிக்காட்டியதையும், அது குறித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியதையும் நான் பலமுறை நினைவுப்படுத்தியிருக்கிறேன். இந்தியநாட்டு வரலாறு கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்டதற்குப் பதிலாகக் காவிரிக்கரையிலிருந்து எழுதப்பட வேண்டுமென்பது தான் வரலாற்றுப் பேராசிரியர்களுடைய துணிவான – திட்டவட்டமான – தெளிவான முடிவாகும்.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு
> மனிதனுக்கும் இருக்கிறது
> இயற்கையிலேயே! இருக்கும்
> அறிவு தெளிவு பெற,
> பகுத்தறிவு பெருக கல்வி
> கேள்வி மிக முக்கியம்.
> – கலைஞர்

அப்படி எழுதப்படாத காரணத்தால் நமக்கென்று வரலாறு கிடையாது; எழுதப்படாத காரணத்தால் வரலாறே இல்லை என்று ஆகிவிடுமா என்றால் கிடையாது. வரலாறு உண்டு. ஆனால் எழுதப்படவில்லை. நமக்குக் கிடைத்த இலக்கியங்கள்தான் வரலாற்றுச் சான்றுகளாக இருக்கின்றன. நான் நம்முடைய பழைய வரலாறுகள், சேர. சோழ. பாண்டியர்களுடைய வரலாறுகளைப் பற்றி நினைப்பதற்கு முன்பு அண்மையில் 200 ஆண்டுக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை – தமிழகத்திற்கும் மலேசியாவிற்கும் ஏற்பட்ட தொடர்பு எத்தகையது என்பதை விளக்குவதற்காகக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில், வெள்ளையரை எதிர்த்து முதலிலே களம் சென்று கட்கம் ஏந்தி இறுதியாக சுதந்திரத்திற்காகத் தன்னையே பலி கொடுத்துக் கொண்ட பூலித்தேவன், தொடர்ந்து வீரபாண்டிய கட்டபொம்மன், தொடர்ந்து மருது பாண்டியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து 1802ஆம் ஆண்டு மருதுபாண்டியர்களின் வழித்தோன்றல்கள், அவர்களுடைய உறவினர்களை – அந்தப் புரட்சிக் காரர்களை – போராளிகளை எஞ்சிய விடுதலைப்போர்த் தளபதிகளைத் தூத்துக்குடியிலிருந்து கப்பலில் ஏற்றி ஜேம்ஸ் வால்ஷ் என்பவர் லெப்டினென்ட் ராக் ஹெட் என்பவரின் தலைமையில் மொத்தம் 73 பேரை 76 நாட்கள் பயணம் செய்ய வைத்து, கடைசியாகக் கொண்டுவந்து விட்ட இடம் பினாங்கு. மலேசியப் பகுதியிலே உள்ள பினாங்கில்தான் அவர்கள் கொண்டுவந்து விடப்பட்டார்கள். இது 'சவுத் இண்டியன் ரிபல்லியன்' என்ற தலைப்புள்ள புத்தகத்தில் காணப்படுகின்ற உண்மை.

நாடு கடத்தப்பட்டோர்

தூத்துக்குடியிலிருந்து 73 பேர் 76 நாட்கள் கப்பலில் பயணம் செய்தார்கள். அவர்களுடைய கைகளிலே கால்களிலே விலங்கு மாட்டப்பட்டிருந்தது. நான்கைந்து பேர்களின் கைகள்தான் கட்டப்படவில்லை. காரணம் – அவர்கள் கப்பலில் சமையல் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் விலங்கிடப்பட்டு பினாங்கில் 76 நாள் பயணத்திற்குப் பிறகு சேர்க்கப்பட்டார்கள். நான் அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட அந்த நூலிலே உள்ள 73 பேரின் பெயர்களையும் உங்கள் முன்னால் படிக்க விரும்புகிறேன். அதுதான் நாம் அவர்களுக்கு ஆற்றுகின்ற கைமாறு. அவர்களுக்காக நாம் செய்கின்ற வீர வணக்கம். 73 பெயர்களைப் படிக்கும் போது கொஞ்சம் உங்களுக்கு அயர்வு ஏற்படலாம். ஆனால் அயர்வு ஏற்படக் கூடாது. அயர்வில்லாமல் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்ட மான மறவர்களின் பெயர்களைப் படிக்கின்ற நேரத்தில் அயர்வுக்குப் பதிலாக உணர்வு ஏற்பட வேண்டும். எனவே படிக்கின்றேன்:

1. வேங்கம் பெரிய உடையத்தேவர், சிவகங்கை
2. துரைசாமி (தந்தை பெயர் மருதுபாண்டியன்)
3. வேரப்பூர் பொம்ம நாயக்
4. ஜெகநாத அய்யர், ராமனாதபுரம்
5. ஆண்டியப்பத் தேவன்
6. சடமாயன்
7. கோனியாமி தேவன்
8. தளவாய் குமராசாமி நாயக், பாஞ்சாலங்குறிச்சி
9. மேலூர் குமாரத் தேவர்
10. பாண்டியன்புத்தூர் பாண்டியன்
11. முத்துவீரா, அரங்குளம்
12. சாமி, மணக்காடு
13. ராமசுவாமி
14. இருளப்பதேவர், நாங்குனேரி
15. பாண்டியன் நாயக், கம்பாடி
16. மாடத்தேவன்
17. மாலயில்மாடன்
18. சின்ன பிச்சத் தேவன்
19. வீரபாண்டியத் தேவன்
20. வீரப்பெருமாள் தேவன்
21. கருப்பத் தேவன்
22. சுலோமோனியா

23. நந்தசாமி
24. பெருமாள்
25. சின்ன பிச்சத்தேவன் உடையத்தேவன்
26. சின்ன பிச்சத்தேவன் மகன் தேவிநாயக்
27. முத்துராமத் தேவன்
28. மண்டத் தேவன்
29. பேயன்
30. அழகநம்பி
31. வைகுண்டத் தேவன்
32. சிரியண்ணத் தேவன்
33. கோனியாலும்
34. முல்லைவடிவு
35. சந்தானம்
36. வீரபத்திரன்
37. சிலம்பன்
38. பேயன்
39. ராமசாமி
40. இருளப்பன்
41. குமாரசாமி
42. வீரபாண்டியன்
43. வெங்கட்டராயன்
44. உடையார்
45. முத்துராக்கு
46. முத்துராக்கு, அணக்குளம்
47. சொக்குத்தலவான்
48. இருளப்பத் தேவன்
49. மல்லையநாயக்கன்
50. சுலோமணி நாயக்கன்
51. தொமச்சிநாயக்
52. சுலோமணிநாயக்
53. ராமசாமி
54. பிச்சாண்டி நாயக்
55. கல்லுமாடம் தளவாய்
56. சின்னமாடன்
57. வைத்திமூர்த்தி
58. தளவாய்பிள்ளை
59. சுப்ரமணியம்
60. பெத்தண்ணநாயக்
61. கிருஷ்ணமநாயக்
62. மயிலேனன்
63. வயலமுத்து
64. ராமன்
65. பாளையநாயக்
66. குமரன்
67. வெள்ளைய கொண்டன்
68. ராமன்
69. அழகுசொக்கு
70. சேக் உசேன்
71. அப்பாநாயக்
72. ராமீன், சூளை
73. குப்பண்ண பிள்ளை

இப்படி 73பேர் 1802ஆம் ஆண்டு பினாங்கில் இறக்கிவிடப்பட்ட பிறகு, இதில் மூன்றில் ஒரு பங்குப் பேர் பல்வேறு காரணங்களால் இறந்துவிடுகின்றனர்.

இவர்களைக் கப்பலேற்றி அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் 1818ஆம் ஆண்டு பினாங்குக்கு வருகிறான். அங்கே அவன் கண்ணில் பரட்டைத் தலையோடு, பராரி கோலத்தோடு, ஒடிந்து விழும் உடல் அமைப்போடு, எலும்பும் தோலுமாக, வாலிப வயதினன் – ஆனாலும் வயதானவனைப் போன்ற தோற்றமுடைய ஒருவனை அங்கே பார்க்கிறான். பார்த்தவுடன் அவன் யார் என்று தெரிகிறது; சந்தேகத்தோடு அவனைப் பார்த்து – "உன்பெயர் துரைசாமி தானே?" என்று கேட்க, அவன் "ஆமாம்" என்கிறான். அந்தத் துரைசாமி யார் தெரியுமா? நான் படித்தேனே பட்டியல் – அதில் இரண்டாவதாகப் படித்த மருதுபாண்டியனின் இளையமகன் – வீரப்போரிட்டு மடிந்தானே வெள்ளையரை எதிர்த்து, அந்த மருது பாண்டியனின் மகன் துரைசாமி தான் அவன். அவன் தான் ஈளை கட்டி இருமலோடு – பரட்டைத் தலையோடு –பராரிக் கோலத்தோடு பரங்கியருக்கு முன்னால் நின்றான்.

இதைப்பற்றி அந்தப் பரங்கியன், ஜேம்ஸ் வால்ஷ் என்ன எழுதியிருக்கிறான் என்பதையும் நான் உங்களிடம் படித்துக்காட்ட விரும்புகிறேன் – 'துரைசாமி என்ற பெயரைக் கேட்டதும் என் நெஞ்சில் யாரோ கட்டாரியால் குத்தியது போன்ற உணர்வைப் பெற்றேன். நான் சிறைபிடித்துக் கப்பலிலே 15 வயது பையனாக ஒப்படைத்த கைதிதான் இன்று பினாங்கில் என்முன் நின்றான். வெளித் தோற்றத்திலே மாற்றங்கள், ஆனால் உள்ளம் அதே உள்ளம். கடந்த கால நினைவுகளை என் முன்னால் எதிரொலித்தது. என்பெயரை அவன் சாதாரணமாகத் தெரிந்து கொண்டதும் என்னுடைய பழைய

கால நட்பை நினைவு கூர்ந்து தன்னுடைய குடும்பத்தாரிடம் ஒப்படைக்கும்படி ஒரு கடிதத்தைக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நம்பிக்கை வயப்பட்டான். ஆனால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசின் ஆணையின்படி அது விதிக்கு மாறானது என்பதால், நான் அந்த உதவியைச் செய்ய முடியவில்லை' என்று எழுதியிருக்கிறான்.

மருதுபாண்டியன் மகன் துரைசாமியின் வாரிசுகள்

இவ்வாறு மருதுபாண்டியனின் மகன் துரைசாமி பிச்சைக்காரக் கோலத்தில் இருந்து தன்னைச் சிறைப்பிடித்துத் தூத்துக்குடியிலிருந்து அனுப்பிய ஜேம்ஸ் வால்ஷ் இடமே ஒரு கடிதத்தை உறவினர்களிடம் தரமுடியுமா என்று கொடுத்தபோது "அதை வாங்க மறுத்துவிட்டேன்" என்று வருத்தத்தோடு குறிப்பு எழுதியிருக்கிறான். அந்தத் துரைசாமி என்ன ஆனாரோ, எப்படியானாரோ; இன்று துரைசாமியின் வாரிசுகளாக வந்தவர்கள் எத்தனைப்பேர் இந்த மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்களோ எனக்குத் தெரியாது.

வீரப்பரம்பரையின் வழித்தோன்றல் துரைசாமி விடப்பட்ட நாடு மட்டுமல்ல இது. தமிழகத்தின் சோழ மன்னன் இந்தக் கடல் பரப்பில், கடாரம் வரையில் வந்து சென்றான் என்ற வரலாறு நமக்கு உண்டு. இன்றைக்கும் மலேசிய நாட்டின் மாநிலங்களில் ஒன்றாக இருக்கிற – கடா தான் அந்தக் காலத்து கடாரம். அதை நினைவுப்படுத்தும் வகையில் இன்றைக்கும் திருவாரூருக்கு அருகே கடாரங்கொண்டான் என்ற ஊர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. அந்த ஊர் வழியாகச் செல்லும்போதும் கடாரங்கொண்டான் என்ற பெயரைக் கேட்கும் போதெல்லாம் சோழமன்னனுடைய நினைவு மாத்திரமா வருகிறது? அந்தக் கடாரம் இருக்கின்ற பகுதியிலே என்னுடைய தமிழ் மக்களாகிய நீங்கள் எல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்களே என்கின்ற அந்த நினைவும் அல்லவா எனக்கு வருகின்றது!

சோழ மன்னர்கள் மாத்திரமல்ல; பாண்டிய மன்னனுடைய தூதுவர்கள் ஒரு காலத்தில் ரோமாபுரியிலே அகஸ்டஸ் மன்னனுடைய மாளிகையிலே அத்தாணி மண்டபத்திலே பாண்டிய நாட்டுத் தூதுவர்களாக வீற்றிருந்தார்கள் என்ற வரலாறும் நமக்கு உண்டு.

தமிழ்நாட்டு முத்துக்களை கிளியோபாட்ரா, தான் குடிக்கின்ற மதுவிலே போட்டு குலுக்கிக் குடித்தாள் என்கின்ற அந்த வரலாறும் நமக்கு உண்டு. இதெல்லாம் நம்முடைய வாழ்வின் சிறப்பை, வீரத்தை விளக்கக்கூடிய வரலாறுகள். இப்படி இந்து மகாக் கடலையும் சுற்றியுள்ள கடல்களையும் தாங்கள் நீச்சல் அடிக்கின்ற ஏரிகளாக மாற்றிக்கொண்டு வாழ்ந்தவர்கள்தான் தமிழர்கள். இன்று பல கல் தொலைவு பயணம் என்பதும் – பல கல் தொலைவில் கலாச்சாரத் தொடர்புகள் ஏற்படுவது என்பதும் எளிதாகிவிட்டது. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய தகவல் தொடர்புகள், கலாச்சாரத் தொடர்புகள் உறுதிப்படுத்துவதும், ஒன்றோடொன்று சந்திப்பதும் இயலாத காரியங்களாக இருந்தன. நான் சிங்கப்பூரில் கூடக் குறிப்பிட்டேன். ஆப்ரகாம் லிங்கன் கொலை செய்யப்பட்ட செய்தி இலண்டன் நகரிலே ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் கிடைத்ததாம். தந்திக் கம்பி வசதிகள் இருந்த அந்தக் காலத்திலும் கூட ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் அந்தச் செய்தி கிடைத்திருக்கின்றது. அந்த அளவிற்குத் தகவல் தொடர்பு தொலை தூரத்தில் இருந்த காலம் மாறி, இன்றைக்கு நான் இங்கே பேசிக் கொண்டிருக்கும்போதே அதை இங்கிலாந்தில் கேட்கலாம். ஒலிபரப்புவார்களோ என்னவோ எனக்குத் தெரியாது; ஆனால் கேட்கலாம்!

உலகம் இன்றைக்குச் சுருங்கிவிட்டது. விஞ்ஞானம் இன்றைக்கு உலகத்தைச் சுருங்க வைத்துவிட்டது. ஒரே உலகம் என்றாலுங்கூட – உலகம் சுருங்கிவிட்டது என்றாலுங்கூட ஒரே உலகம் என்று சொல்வோம். ஆனால் அதே நேரத்தில் நாம் நம்முடைய நாட்டின் எல்லைகளைக் காப்பாற்றுவோம், அழிக்காமல் இருப்போம் என்கின்ற அந்த உணர்வு ஒவ்வொரு நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கின்றது.

உலகத்தில் உள்ள மொழிகளையெல்லாம் விட நம்முடைய மொழி மூத்தமொழி. இதை நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை; உண்மையைத்தான் சொல்கிறேன். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்ற பழமொழியின் நிலையிலே இதை நான் சொல்லவில்லை; உள்ளபடியே இது பொன்குஞ்சுதான். மூத்த மொழிதான் நம்முடைய தமிழ்மொழி.

ஒருமுறை தந்தை பெரியார் அவர்கள், தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று சொன்னபோது சிலர் கோபித்துக் கொண்டு ஒரு மேடையிலே ஒரு முறை நான் பேசும்போது எனக்கொரு சீட்டு அனுப்பினார்கள். பெரியார் இப்படிச் சொல்கிறாரே என்று கேட்டிருந்தார்கள். அதற்கு நான் தந்தை பெரியார் காட்டுமிராண்டி என்று சொன்னது உண்மைதானே என்றேன்; திடுக்கிட்டார்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி இது. அதாவது கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பு காட்டுமிராண்டிகளாகத் தான் மக்கள் இருந்தார்கள். அந்தக் காலத்திலேயே இந்த மொழி பிறந்தது என்று நான் கூறினேன். அதைப் போலவே திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு கீர்த்தி வாய்ந்த இலக்கியங்கள் நமக்குச் சொந்தமானவை. உலகப் புகழ் பெற்ற கிரேக்கப் பாரம்பரியம் இப்போதில்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரம் இப்போதில்லை. ஆனால் புயலுக்கும், சூறாவளிக்கும், பெரு வெள்ளத்திற்கும், ஊழிக்கும், பூகம்பத்திற்கும், நில நடுக்கத்திற்கும் ஆடாமல் அசையாமல் இருக்கின்ற ஒரு

மொழியாக நம்முடைய தமிழ்மொழி இருக்கிறது. அதனால்தான் இன்னமும் இலங்கையில் தொல்காப்பிய காலத்துத் தமிழைத்தான் பேசுகிறார்கள். நம்மால் இலங்கையை நினைக்கமுடியாமல் இருக்குமா, தமிழில் சொல்லின் முதலில் 'ர' என்ற எழுத்து வரக்கூடாது என்பது இலக்கணம். நானே கூட 'ர' என்றுதான் எழுதுகிறேன். ஆனால் இலங்கையிலே 'ர'விற்கு முன் 'இ' என்ற எழுத்தைச் சேர்த்து இரத்தம் என்று எழுதுகிறார்கள் எனும்போது, அவர்கள் என்னை விட மேலானவர்கள்தான்.

இரண்டு அம்புகள்!

இந்தத் தமிழில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அந்த இலக்கியங்களை வெறும் வர்ணனை இலக்கியம், கற்பனை இலக்கியம் என்றில்லாமல், அறிவுரைகளைத் தருகின்ற பல இலக்கியங்களைப் புலவர்கள் மாத்திரமல்ல, அரசர்களே எழுதியிருக்கிறார்கள். அரசர்கள் மாத்திரமல்ல, வணிகப் பெருமக்களும் புலவர்களாக மாறி எழுதியிருக்கிறார்கள். பெண்களே கூடப் பெரும் புலவர்களாக இருந்து எழுதியிருக்கிறார்கள். அகநானூறு, புறநானூறு பாடல்களை எழுதிய புலவர்கள் ஏறத்தாழ 210 பேர்கள் என்ற கணக்கை நான் சிங்கப்பூரில் பேசும்போது குறிப்பிட்டேன். அந்த அளவிற்கு அரசர்களும், வணிகர்களும், மகளிரும் புலவர் பெருமக்களாக இருந்து தமிழை வளர்த்து – தமிழ்ப் பண்பாட்டை வளர்த்திருக்கிறார்கள்.

ஒன்றைச் சொல்கிறேன், நீங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டு ஒப்பீடுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு அம்புகளைப் பற்றிச் சொல்லப்போகிறேன். ஒரு அம்பு இராம பிரானுடைய அம்பு. இன்னொரு அம்பு ஓரியின் அம்பு. ஓரி என்றால் உங்களுக்குத் தெரியும். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாரி, ஓரி, காரி என்பவர்கள் வரிசையிலே ஒருவன். நம்முடைய சாமிவேலு அவர்களுடைய மகன் பெயர் கூட வேள்பாரி தானே! அந்த வரிசையிலே கொல்லி மலை மன்னனாக வாழ்ந்தவன் ஓரி மன்னன். அவனுடைய ஆற்றலை, திறமையைப் பாடுகின்ற புலவன் அவன் ஒரு அம்பை எய்தால் அது என்ன செய்யுமாம்? புறநானூற்றில் கபிலர் பாடுகிறார் :

'வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்கும்
கொலைவன் யார்கொலோ கொலைவன்
மற்றிவன்
விலைவன் போலான் வெறுக்கைநன் குடையன்
ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
சார லருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்லோ வல்லன் கொல்லோ'

இதில் ஓரி என்பதுதான் உங்களுக்குப் புரியும். இது புறநானூற்றுத் தமிழ். இதற்கு என்ன பொருள் தெரியுமா? ஓரி மன்னன் வில் வளைத்து நாண் ஏற்றி அம்பெய்தால் அந்த அம்பு முதலில் ஒரு யானையைத் துளைத்து, அதைத் தாண்டிச் சென்று ஒரு புலியை வீழ்த்தி, அந்தப் புலியை ஊடுருவிச் சென்று ஒரு கலைமானின் தலையை உருட்டி, அதையும் தாண்டிச் சென்று உரல் போன்ற பன்றியை வீழ்த்தி, அதையும் தாண்டிச் சென்று தரையில் இருக்கின்ற உடும்பின்மீது சென்று தைக்கும். இதுதான் அதற்குப் பொருள். ஓரி விழா கொல்லிமலையில் நடைபெற்றது. நானும், மறைந்த குன்றக்குடி அடிகளாரும் கலந்துகொண்டோம். இந்தப் பாடலை ஒருவர் பாடிவிட்டுப் பேசும்போது சொன்னார். யானையைத் தாக்கிய பிறகு எப்படி உடும்பின் மீது அந்த அம்பு பாய முடியும்? யானையின் உயரமென்ன, உடும்பின் உயரமென்ன? யானையின் மீது பாய்ந்தால் அம்பு அதற்கு நேராகத்தானே செல்லும்? எப்படி உடும்பின் மீது பாய்ந்தது என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

நான் உரையாற்றும்போது அதைப்பற்றிச் சொன்னேன். ஓரி வாழ்ந்த இடம் கொல்லிமலை. கொல்லிமலையின் உச்சியிலிருந்து அம்பெய்தால் – முதலில் யானை நின்றால் அந்த மலைச்சரிவில் யானை, புலி, மான், பன்றி கடைசியாக உடும்பு என்று மேலிருந்து கீழ்நோக்கி அம்பு செல்லும்போது எல்லாவற்றையும் வீழ்த்தக்கூடிய ஆற்றல் அந்த அம்புக்கு உண்டு என்று குறிப்பிட்டுவிட்டுச் சொன்னேன்.

இன்னொரு அம்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா – இராமபிரான் எய்த அம்பு. அது ராவணனைக் குறி பார்த்து எய்யப்பட்ட ராம பாணம் – ராவணனுடைய பத்துத் தலையையும் அறுத்துவிட்டு, அவனைக் கொன்று விட்டு, அவன் உடலைத் துளைத்து, பிறகு அங்கிருந்து புறப்பட்டு தன்னுடைய உடலிலே (அம்பின் மீது) இருக்கின்ற இரத்தத்தைக் கழுவிக் கொள்வதற்காகக் கடலுக்குச் சென்று இரத்தத்தையெல்லாம் கழுவிக்கொண்டு பிறகு அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பி வந்து ராமனுடைய அம்புறாத்தூளியிலே உட்கார்ந்துகொண்டது என்று கூறப்படுவதை – அந்த அம்பை நம்புகிறீர்களே, இந்த அம்பை நம்பக் கூடாதா என்று கேட்டேன்.

இப்படி இயற்கையோடு எய்த அம்பு ஓரியின் அம்பு. இயற்கைக்கு முரண்பட்ட அம்பாக இராமனின் அம்பு சித்தரிக்கப்படுகிறது. இதை நான் அன்றைக்கு எடுத்துக்காட்டினேன்.

அரசர்கள் புலவர்களாக இருந்துவிட்டு நாட்டு மக்களுக்குத் தேவையானதைச் சொன்னார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
....
....
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே!'

எப்படியாவது படிக்கவேண்டும், 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' என்று கூறிய பாண்டிய மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழிய மன்னன், கீழானவன் என்று கூறப்படுகிறவன் படித்துவிடுவானேயானால், அவன் மேலே இருப்பவனை வெல்வான் என்று எழுதியிருக்கிறான். புலவர்களுக்கும் அரசனாக அவன் வீற்றிருந்தான்.

அரசன் கோப்பெருஞ்சோழன் பாடிய பாடலில் குறிப்பிடுகிறான்.

'அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர்ஆக மடவம்ஆக நாமே...'

பொருளுக்காக, பணத்துக்காக, செல்வத்துக்காக, ஏதோவொரு இலாபத்திற்காக அன்பையும், அருளையும் பாசத்தையும் விடுத்துவிட்டுப் பிரிந்து செல்பவர்கள் – இவனைப் பிரிந்த காரணத்தினால் நமக்குப் பொருள் கிடைத்தது, ஆகவே நாம் அறிவுடையவர் என்று சொல்லிக் கொள்வார்களேயானால் அப்படி தம்மை அறிவுடையவர் என்று கூறிக் கொள்பவர்கள் அறிவுடையவராகவே இருக்கட்டும், நாம் மூடர்களாகவே இருப்போம். எவ்வளவு பொருள் பொதிந்த பாடல். பொருளுக்காக அன்பையும் அருளையும் விட்டுப் பிரிகிறவன் தாங்கள் பெரிய கெட்டிக்காரன் புத்திசாலி என்று கருதிக்கொண்டால் அப்படிப்பட்டவன் புத்திசாலியாகவே இருக்கட்டும் – நாம் பொருளுக்காக எந்தக் காரியத்தையும் செய்யாமல் மூடர்களாகவே இருப்போம் என்று கோப்பெருஞ் சோழன் அன்றைக்குப் பாடியிருக்கிறான். இது பொருளுக்காக மனைவியைப் பிரிந்து செல்கிற ஒரு ஆணுக்கும் – அவனால் படுகின்ற கவலையின் காரணமான பெண்ணுக்கும் பொருந்தும். இந்த மண்ணுக்கும் பொருந்தும் என்ற காரணத்தினாலேதான் இதை நான் குறிப்பிட்டேன்.

புதுமையான கருத்துக்கள்

புதுமையான கருத்துக்களை – பொதுவுடைமைக் கருத்துக்களை எடுத்துச் சொன்ன புலவர்களும் இருந்திருக்கிறார்கள். பக்குடுக்கை நன்கணியார் என்பவர் அப்படிப்பட்டவர்களில் ஒருவர். உடுத்தியிருக்கின்ற உடையைக் கூட நன்றாக அணியமாட்டார். அவ்வளவு எளிமையான கோலத்திலே உள்ளவர். அவர் கூறுகிறார்.

'ஓரில் நெய்தல் கறங்க ஓர் இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் – பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப
படைத்தோன் மன்ற, அப்பண் பிலாளன்
இன்னாது அம்ம, இவ்வுலகம்
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே'

– என்று புறநானூற்றில் நன்கணியார் பாடியிருக்கிறார். இதற்கு என்ன பொருள்?

ஒரு வீட்டிலே மகிழ்ச்சியும் இன்னொரு வீட்டிலே துயரமும் – ஒரு வீட்டிலே நல்ல முரசின் ஒலியும் இன்னொரு வீட்டிலே இழவு முரசின் ஒலியும் கேட்கின்ற இந்த வேறுபாடு நாட்டிலே இருக்கலாமா? இருக்கக்கூடாது. இப்படிப்பட்ட வேறுபாட்டை உண்டாக்கியவன் நிலைப் படுத்தியவன் பண்பாளனாக இருக்க முடியுமா என்று கேட்டு இல்லாமை ஒழிய வேண்டும் என்ற அந்தப் பொதுவுடைமைக் கருத்தை இந்தப் புலவர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஔவையார் காட்டிய தாய்!

பெண்பாற் புலவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். சங்கக் காலத்தில் அவ்வையார் மிகச் சிறந்த புலவர். அவருடைய பாடல் ஒன்று. பாடலைச் சொன்னால் அது உங்களுக்குப் புரியாது இருந்தாலும் கூறுகிறேன்.

'வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்
தன்னோர் அன்ன இளையர் இருப்பப்
பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் அறுவை போர்ப்பித் திலதே'

(புறநானூறு – ஔவையார்)

இந்தப் பாட்டிற்கு என்ன பொருள் என்றால், வெள்ளாட்டு மந்தை போலப் பல இளைஞர்கள் மன்னன் பின்னால் போனாலுங்கூட, மன்னன் எல்லோரையும் விட அதிகமாகத் தேறலை (தேறல் என்றால் ஒருவகையான உணர்வை ஊட்டக்கூடிய பானம்) என்னுடைய மகனுக்குத்தான் கொடுத்தான். அப்படிக் கொடுத்து, அதைக் குடித்த என்னுடைய மகன் இதுவரையில் இன்னும் பாடையில் படுக்கவில்லையே – போர்க்களத்திலே உயிர் துறக்கவில்லையே என்று வீரத்தாய் ஒருத்தி கவலைப்படுகிறாளாம். இதை அவ்வையார் பாடிக் காட்டியிருக்கிறாள். அந்தத் தாயின் மன நிலையைப்பற்றி, இதைப் புரியும்படியாக நான் சங்கத் தமிழிலே எழுதியிருக்கிறேன். அதை உங்கள் முன்னால் வைக்கிறேன்

'பனிமுட்டை அடை காக்கும்
பசும்புல்லின் தரை மீது
மணித் தேர் அசைவது போல்
மாதொருத்தி நடந்துவந்தாள்
கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை மிக்காள்
காக்கைப் பாடினி பொன்முடியார்க்குத் தமிழில்
அவள் அக்காள்!
அதியமான் நெடுமானஞ்சி – வேள்பாரி வள்ளல்
நாடன்

சேரமான் மாவெண் கோவன்,
கானப்பேர் தந்த வழுதி – மற்றும்
சோழனாம் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப் பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற
அறிவொளி ஔவை நல்லாள்.

காலைக் கதிரவன்போல் கை சிவக்கக் கொடை
வழங்கும்

காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ்நாடு!
ஓலை கொண்டொருவன் போர் வந்துவிட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்றும் பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப் புறம்
விடுத்து

வாளைக் கூரேற்றி வான் நோக்கி நிமிர்கின்ற
வீரமறவர்களின் தாய்வீடு

பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதமென்று
நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடை
சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை
மலரவைத்தாள்.

தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னாள் – களம் சென்றார் வீரம்
சொன்னாள்.

களத்தில்,
சாதல் இன்னே வரட்டுமென்று சென்றுவிட்ட
தலைமகனும்

சந்தனத்துக் கட்டை போல மணக்கட்டும்
இலக்கியத்தில் எனக்கூறிப்

பாதம்முதல் உச்சிவரை குளிர்கின்ற தாய்க்குலத்தை
எண்ணியெண்ணிப் பெருமை கொண்டாள், தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால் பனித்துளிகள்
அழிந்துவிடும்.

போரடியில் நெல்மணி போல் பகைவர்களின் சிரம்
வீழும்

அமர்க்களத்தில்!
இதை நினைத்து நடக்கின்றாள் ஔவையம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை! அழகம்மை!

காலூன்றிப் பணியொற்றி வருகின்ற தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய் வந்து நின்றாள்;
அடி தும்பை மலர் முடிதாங்கி
துவண்டுவிட்ட காலிரண்டும் வாழைத் தண்டாய்க்
குளிர்ந்துவரும் நேரத்தில் நீரன் வந்தாய்
விற்புருவம் என்றுன் ஆளன்
அழைத்திட்ட காலம் போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற இள நங்காய்!
விழியிரண்டும் வேலென்றார் அன்று;
வழி இருண்டு போனதென்று
கோல்கொண்டாய் இன்று!

தமிழ்நாட்டு முத்தெல்லாம் தீர்ந்ததென்று பல்
கழற்றிப்

பிறநாட்டு வாணிபத்தைச் செய்தவளே!
எங்கெழுந்தாய் ஏன் பதைப்பு
என்ன வாட்டம் எனக் கேட்டுக்
குறும்பு செய்தாள் ஔவையம்மை!
வேலி போட முடியாது இளமைக்கென்று தெரிந்த
பின்னும்

கேலி பேசும் உன் போக்குப் புரியவில்லை
என மறித்து அந்தத்தாய் பேசலானாள் –
புண்பட்ட என்னகத்தில் புலமைத் தாயே! உந்தன்
கேலி

பண்பட்ட தமிழ் மருந்தாய் பாய்வதை நான்
உணருகின்றேன்.

கண்கெட்ட கிழவி எந்தன் கரம்தொட்டு வணங்கிச்
சென்ற

காளையை நான் மறக்கவில்லை.

மண் மூட்டி எழுந்து நிற்கும் மாங்கன்றின் தளிர்தான்
மேனி

பொன்கொட்டிக் கொடுத்தாலும் வளையாத
மனவலிமை

புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்
அந்த மகன் ஆசை மகன் அணிவகுத்தான்
சொந்த மண்ணின் நலங்காக்கப் பணி வகுத்தான்
முடிக்கவில்லை முதியவளும்
பொறுக்கவில்லை ஔவைக்கு –
குறுக்கிட்டாள்.

களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து கூறி,
கண்கலங்காத் தாய் வீரம் காட்டுதலே தமிழர் மரபு
முதியவளே மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றாய் – வியக்கின்றேன்
என்றாள்.

முழுதும் கேள் பெருமாட்டி
பழுதொன்றும் காணமாட்டாய் என் நிலையில்
அழுதழுது என் விழிகள் வீங்கியதை
மறுக்கவில்லை.

பொழுதெல்லாம் கவலையினால் புலம்புவது
பொய்யல்ல

ஏனென்று தெரிந்துகொள்வாய்
நானொன்றும் மறைக்கவில்லை
சொல் என்றாள் ஔவை;
சொன்னாள் அவள்!

கொற்றக் குடை சாயாத கொடித்தேர் மன்னர்
கற்றறிந்த பாவாணர் கடமைமிகு மாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர் அறிவாய் நன்று
அவர் படையில் இருக்கின்றோர் பல்லோர் வீரர்!

ஆட்டுக்கடா அணிவகுத்துச் செல்வது போல்
அரசன் பின் நடப்பதற்குத் தயங்கமாட்டார்
ஆயிரம்பேர் மன்னர்க்குப் பின்னால் இருந்தும்
அவர் மட்டும்என் மகன்பால் அளவற்ற
அன்புகொண்டார்

போர்முனையில் ஓய்வெடுத்துக் கிடக்கும்போது
தேறல் என்னும் உற்சாகச் சாறுதனைத் திறல்மறவர்
அருந்துதற்குத் திரண்டு நிற்பார்.

அப்போது மன்னரவர் என் மகனை அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து மகிழ்வார்.

என்வாட்டம் இப்போது கேட்பாயம்மா!
என்புகளைத் தெப்பமாக்கி நரி மிதக்கும்
போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!

அத்தலையில் ஒரு தலையாய் என்மகன் தலையும்
இருந்தாலன்றோ இறைவனளித்த தேறலுக்கும்
பெருமையுண்டு!
மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றான்
மண்டையில் தேறலும்அதிகம் பெற்றான்
மாண்டனன் போரில்; புகழ்
பூண்டனன் எனும் காட்சி
காண்டிடல் அரிதோ எனக் கலங்கினேன் அம்மா
தவறா என்றாள்!
அந்தத் தாயாக நான் இல்லையே என்று
அகமிக நொந்தாள் ஔவைப் பிராட்டி!'

இது ஔவையின் அந்தக் கடினமான பாட்டுக்கு எளிய முறையிலே நான் எழுதிய சங்கத் தமிழ் ஆகும்.

தாயும் மகளும்!

இன்னொரு பெண்பாற் புலவர் நக்கண்ணை என்பவர், சோழ இளவலைக் காதலிக்கிறாள். அந்தக் காதல் நிறைவேறவில்லை. அதைத் தாய் தடுக்கிறாள். அவசரப்படாதே என்று தாய் சொல்லுகிறாள். அதற்கொரு எளிய நடைக் கவிதை. நக்கண்ணையிடம் தோழி வந்து ஆறுதல் சொல்லித் தேற்றுகிறாள்.

'ஆய்ந்து பார் ஆரணங்கே
காய்ந்து சினந்து கடிந்துகொண்டாலும் அன்னை,
தேய்ந்திடு நிலவாய் நின்காதல் ஆகாதிருக்கவே
எச்சரிக்கின்றாள் உன்னை!
வளர்பிறையாய் உம் காதல் வளர்ந்து
குளிர் நிலவாய் அமுதமழை பொழிந்தால்
குலமகளே உமைவாழ்த்தாமல்
உன்தாயின் மனமென்ன;
நிலமகழ்ந்து எடுத்திட்ட
இரும்பாகப் போமோ
கருவுற்ற காலத்தில் அவள் நாவினைக்
கசப்பாக்கித் தொல்லை தந்த போது
திருவுற்ற அந்தத் தாய்
புளிப்பாலே கசப்பு போக்கி – உன்
புன்னகை காணத் தவமிருந்தாள்!

ஆலின் இலைபோன்ற அவள் அழகு வயிற்றை
– ஒரு
சாலின் வடிவாக்கி நீ அலங்கோலம் தந்தபோதும்,
உன்கோலம் காண்பதற்கே – அவள்
உயிர்வாழ்ந்து கொண்டிருந்தாள்
மணி வயிற்றுக்குள்ளிருந்து நீ
மாறிமாறி உதைத்த போதும்,
வலி பொறுத்துக் கொண்டபடி
அணியென்ன பூட்டலாம் அந்தக் காலுக்கென்று
ஆயிரம் சிந்தனை செய்திருந்தாள்!

ஊதையில் துரும்பெனத் தாயுடல்அலைக்கழித்து
உலகில் நீ பிறந்துருண்டு அழுதபோது – இன்ப
போதையில் துன்பமெலாம் மறந்திருந்தாள்!

இன்றவள், உன்
பாதையில் பாடம் சொல்லல் ஒரு பாபமா
பூவைத்துப் பொட்டிட்டு முத்தமாரி பெய்தபோது
– நீ
ஆண்டெண்ணிக் கிடந்த
பூவையாய் ஆவது எப்போதென்று அன்னை,
கோவையாய்ச் சிவந்த உன் இதழைக்
கிளியொன்று
கொத்துமென்று தெரியாத பேதையா என்ன?
ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடை
கூறவில்லை அன்னை
ஆழம்தெரிந்து இறங்கென்று கூறுகின்றாள்;
அவ்வளவே!

அதற்குள் நீ அவன் வருமட்டும்
வழிபார்த்துக் காத்திருந்து
அல்லும் பகலும் உறக்கமின்றி வாடி வதங்கி,
உடலைக் கெடுத்துக் கொள்கின்றேன் என்றால்
உனை உயிராக நினைக்கின்ற பெற்றோர்
ஒப்புவரோ?
உன்தோழி கெஞ்சுகின்றேன்; உடனே கேள்!
உறங்கிஎழு, உற்சாகமாக இரு!
உறையூர் எங்கும் ஓடிவிடாது – உன்
அறையூரில் அடங்கத்தான் போகிறது!'

– என்று இந்தப் பாடலை எளிமையாக்கியதுதான் சங்கத்தமிழ்.

என்னுடைய சுற்றுப்பயணம் குறித்து கவிஞர் வைரமுத்து காலையில் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு – சிங்கப்பூர் பேச்சைப் பத்திரிகையிலே படித்துப் பார்த்தேன், நீங்கள் அந்தப் புறநானூற்றுத் தாய் பற்றிய பாடலை அங்கே சொல்லவில்லையே என்றார். அதற்கு நான், ஆமாம் சொல்லவில்லை வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசினேன் என்று கூறினேன்.

மலேசியாவில் அவசியம் அதைச் சொல்லவேண்டுமென்றார். ஏற்கெனவே ஒரு முறை சொல்லிவிட்டேனே என்றேன். எத்தனை முறை சொன்னாலும் கேட்பார்கள், சொல்லிவிட்டு வாருங்கள் என்றார். சொன்னால் கேட்பீர்களா?

புறநானூற்றுப் பாடல்

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்ற புறநானூற்றுப் புலவர் பாடிய பாடல் –

'நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவென், யானெனச் சினைஇக்

கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே!'

இதில் ஏதாவது உங்களுக்குப் புரிகிறதா? மகன் போர்க்களம் போகிறான். அங்கே முதுகிலே காயம் பட்டு இறந்துவிட்டான் என்று கேள்விப்பட்டதால் வருத்தப்பட்டு அங்கே போய்ப் பார்க்கிறாள். முதுகில் காயம் இல்லை. மார்பில் காயம்பட்டுக் கிடக்கிறான். பார்த்து மகிழ்ச்சி அடைகிறாள். இதுதான் பாடல்! இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், அது நம்முடைய குற்றமே தவிர, எழுதியவர்களின் குற்றமல்ல. அந்தக் காலத்தில் தமிழ் அப்படி இருந்திருக்கின்றது. இன்றைக்கு அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக நாம் இருக்கிறோம். அந்த ஆற்றல் இல்லாத காரணத்தால் அதை எளிய முறையில் மாற்றித் தரவேண்டுமென்பதற்காக நான் எழுதிய பாடல் என்ன தெரியுமா?

இன்றைக்கும் அதைப் பார்க்காமல் என்னால் சொல்ல முடியும். இங்கே வீடியோ படக்காட்சியில் பார்த்தீர்களே – நான் எழுதி, நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் 'மனோகரா' படத்தில் பேசும் வசனம் –

"பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து, கண்ணே முத்தே, தமிழ்ப் பெண்ணே, என்றெல்லாம் குலவிக் கொஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, வீரனே! என் விழி நிறைந்தவனே! தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ, அவனை! அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து சபை நடுவே நிறுத்தி, சந்தோஷம் கொண்டாட வேண்டுமென்ற உங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?"

– எனக்கு எப்படி இது மனப்பாடம் – அப்போது எழுதியது என்று கருதலாம். எப்படி மனப்பாடம் என்றால் சங்கிலி போல் ஒன்றோடொன்று சொற்கள் கோர்த்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் ஒரு சொல்லுக்குப் பிறகு இன்னொரு சொல் தானாக வந்து சிக்கிக்கொள்ளும்.

அப்படித்தான் 45ஆம் ஆண்டு ஈரோட்டில் பெரியாருடைய அலுவலகத்திலே தொண்டனாக இருந்தபோது குடியரசு பத்திரிகையில் துணையாசிரியராக இருந்தபோது எழுதப்பட்டது தான் இங்கே படித்துக் காட்டினேனே கடினமான அந்தப் புறநானூற்றுப் பாடல். தாய் தன்னுடைய மகன் போர்க்களத்தில் முதுகிலே காயம்பட்டான் என்று வருந்தி, களத்திலே சென்று அவனைத் தேடி மகிழ்ச்சி அடைந்தாள் என்று – இதனை எளிய நடையில் அன்றைக்கு நான் எழுதியது தான் "குடிசைதான் ஒரு புறத்தில்" என்ற கவிதை –

இதோ அந்தக் கவிதை –

'குடிசை தான்! ஒரு புறத்தில் கூரிய வேல்வாள்
வரிசையாய் அமைந்திருக்கும் – வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்
வடித்துவைத்த படைக்கலம்போல் மின்னும்
புலியின் குகையினிலே அழகில்லை –
புதுமையல்ல!
கிலியும் மெய்சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும்
தலைகாட்டா
மானத்தின் உறைவிடம் – மறவன் மாளிகை

இல்லத்தின் வாயிலிலே கிண்ணத்துச் சோறோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள்
வழியனுப்ப
பொக்கை வாய்தனைத் திறந்து

பிடியன்னம் எடுத்துப்போட்டாள் பெருநரைக்
கிழவியொருத்தி!
ஓடிவந்தான் ஒருவீரன் "ஒருசேதி பாட்டி!"
என்றான்.
"ஆடிவந்த சிறுமிபோல் பெருமூச்சு
வாங்குகின்றாய்
ஆண்மகனா நீதம்பி! அவசரம் வேண்டாம்!
மூச்சுக்குமூச்சு இடைவேளை ஏற்படட்டும்; பின்,
பேச்சுக்குத் துவக்கம் செய்" என்றாள் – அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி!

"வேடிக்கை நேரமல்ல பாட்டி – உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு!
மடிந்தான் உன்மகன் களத்தில்" என்றான் –
மனம்
ஒடிவந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை!
"தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு
– களமும் அதுதான்
காயம் மார்பிலா முதுகிலா கழறுவாய்" என்றாள்
'முதுகிலென்றான்',
கிழவி துடித்தனள்
இதயம் வெடித்தனள்
வாளை எடுத்தனள்
முழவு ஒலித்த திக்கை நோக்கி முடுக்கினாள்
வேகம்.

"கோழைக்குப் பால் கொடுத்தேன்; குப்புற வீழ்ந்து
கிடக்கும்
மோழைக்குப் பெயர் போர்வீரனாம்; முன்பொருநாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்குப் பதில்சொல்ல மார்பைக்
காட்டி
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளன்;
அவருக்குப் பிறந்தானா? அடடா மானமெங்கே –
குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்துபட்டான் வெட்கம்!
வெட்கம்!
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் – இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்!
அதுவும் மானம் மானமென்றே முழக்கும்!
மதுவும் சுராவும் உண்டு சாவும்

மானமற்ற ஆரியத்தின் வம்சமா நீ – ஏடா
மறத்தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
மார்பு கொடுத்தேன் – மகனாய் வளர்த்தேன் –
தின்று கொழுத்து
திமிர்பாய்ந்த தோள்களெங்கே?
தினவெடுக்கவில்லையா? அந்தோ!
வேலுக்கு வழிசொல்ல வகையற்ற கோழையே!
என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்!"
என்று கதறினாள், எண்பதை நெருங்கிய ஏழைக்
கிழவி!
சென்றடைந்து செருமுனையில் சிதறிக் கிடக்கும்
செந்தமிழ்க் காளைகளைப் புரட்டிப் பார்த்தாள்;
அங்கு
நந்தமிழ் நாட்டைக் காக்க ஓடிற்று ரத்த வெள்ளம்!
பிணக்குவியலிலே பெரு மூச்சுவாங்க நடந்தாள்.
மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சி அடையவில்லை
– மகன்
பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு –
அவன்
இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!
இதைக் கண்டாள்; இதயங்குளிர்ந்தாள்.
"எதைக் கண்டாலும் இனிக்கவலை இல்லை
என்மகன் வீரனாய் இறந்தான்" என்றாள்.
"அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை,
அடடா!
கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே?...'

– இதுவே அந்தக் கவிதை.

(முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தக் கவிதையை உணர்ச்சிப் பெருக்கோடு மனப்பாடமாகக் கூறியதைக் கூட்டத்தினர் பலத்த கையொலிக்கிடையே வரவேற்று மகிழ்ந்தனர்.)

ஒன்றை மாத்திரம் நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். வீரத்தமிழ், அழகுத் தமிழ், நளினத் தமிழ், இன்பத் தமிழ் மாத்திரம் இருந்தால் போதாது. அறிவியல் தமிழும் வேண்டும். அதை வளர்க்கின்ற முயற்சியிலே நாம் மென்மேலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். அதைத்தான் சாதனைச் செம்மல் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் இங்கே ஒரு கணினிப்பெட்டியை வழங்கும்போது அறிவியல் துறையிலே தமிழை வளர்க்க இந்த முயற்சி என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதற்காகத்தான் தமிழகத்திலே வருகின்ற பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தமிழ் இணையத்தை விரிவாகப் பெருக்கிட ஒரு பெரு முயற்சி செய்யப்படுகிறது. ஏற்கெனவே இந்த வட்டாரத்திற்கு வந்த தமிழகத்தின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் இதுபற்றிக் கலந்து ஆலோசித்திருக்கிறார். இது குறித்து நானும் தம்பி 'முரசொலி' மாறனும் கலந்துபேசி ஒரு குழுவை அதற்காக அமைத்து, உலகத்தில் இருக்கின்ற பல்வேறு தமிழ் அறிஞர்களையும் அழைப்பதென்றும், ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற முக்கியப் பிரமுகர்களை டத்தோ போன்றவர்களையெல்லாம் அழைத்து தமிழ் இணையம், அறிவியல் தமிழ், தகவல் தொடர்புத் தமிழ், இண்டர்னெட்டில் இன்றைக்கு 'வோர்ல்டு டெல்' மூலமாகத் தமிழகத்தில் ஆயிரம் இடங்களில் கணிணியைப் பொறுத்துவதன் மூலமாகத் தமிழைப் பரப்புகின்ற முயற்சியில் இன்னும் நான்கைந்து மாதங்களில் ஈடுபடவிருக்கிறோம். மேலும் இந்த ஆண்டு 100 பள்ளிகளில் மாணவர்களுக்குக் கணிணி மூலமாகப் பாடம் சொல்லித் தரவிருக்கிறோம். இந்த அதிவேக முற்போக்கான தகவல் தொடர்பு மற்றும் தமிழ் இணையத்தின் முன்னேற்றத்திற்காகத்தான் பிப்ரவரியில் தமிழகத்திலே மாநாடு நடத்தவிருக்கிறோம்.

யோசனைகளைச் சொல்லுங்கள்

இங்கே என்னை வரவேற்றுக் கவிதை படித்த கவிஞர் பூபாலன் ஒரு வேண்டுகோள் விடுத்தார். உலகத் தமிழ் மாநாட்டை நடத்துங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

மாநாடு நடத்தினால் மாத்திரம் போதாது, தமிழை நம் மனம் நாட வேண்டும், அதுதான் மாநாடாக இருக்கும். அறிவியல் தமிழை நாம் நாடவேண்டும். அதைச் சொல்லும்போது டத்தோ என்னைப் பார்த்துச் சொன்னார். உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழகத்திலே நடத்துங்கள் – நாங்களும் நிதி திரட்டித் தருகிறோமென்றார். நான் நிதிக்காக மாத்திரமல்ல; அந்த மாநாடு இதுவரை நடைபெற்ற மாநாடுகளைப் போல இல்லாமல் அறிவியல் தமிழை வளர்க்கின்ற மாநாடாக அது சிறந்து விளங்கிட, டத்தோ போன்றவர்கள் தங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லவேண்டும்.

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளிலே வாழ்கின்ற பெருமக்கள், அறிவார்ந்த தமிழகப் பெருமக்கள், புலவர் பெருமக்கள், ஆராய்ச்சியாளர்கள், உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்கிடையே இன்றைக்கு மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்ற பெருமக்கள் அனைவரும் தங்களுடைய அரிய யோசனைகளைச் சொல்லவேண்டும். அப்போதுதான் தமிழகம் சிறக்கும். தமிழகம் சிறந்தால் உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம் சிறப்பார்கள். என்றென்றும் உங்களுடைய அன்புக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்ட கருணாநிதி – உங்கள் முன்னால் அந்தச் சூளுரையை மேற்கொண்டு ஒன்றுபடுவோம், நாம்.

நம்மிடத்திலே இல்லாதது ஒரே ஒரு **மை தான்.** நம்மிடத்திலே **உண்மை** இருக்கிறது. **வாய்மை** இருக்கிறது. **இனிமை** இருக்கிறது. **தூய்மை** இருக்கின்றது. எல்லாம் இருக்கிறது தமிழர்களே! ஆனால் நம்மிடையே **ஒற்றுமை என்கிற மை தான் இல்லை** என்று கூறி, உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்".

கோலாலம்பூர் செய்தியாளர்கள் சந்திப்பு

7.1.1999 அன்று காலை மலேசிய நாட்டின் தலைநகராம் கோலாலம்பூருக்கு வந்து சேர்ந்தேன். அன்று மாலை மலேசிய நாட்டின் தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் திருமதி. ரபீதா அஜிஸ் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினேன். தமிழ்நாடு தற்பொழுது கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பெருமளவில் முயற்சிகள் மற்றும் முதலீடுகள் செய்து வருவதாகவும் இவற்றில் மலேசிய நாட்டு நிறுவனங்கள் கணிசமான அளவுக்குப் பங்கு பெற்றுள்ளதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்டினேன். மலேசிய நாட்டில் போதிய அளவில் திறமை வாய்ந்த பணியாளர்களும், தொழிலாளர்களும் இல்லாத காரணத்தால் வெளிநாடுகளுக்குச் செல்லும் மலேசிய நிறுவனங்களை இந்தியாவிற்கும் குறிப்பாக தமிழ்நாட்டிற்கும் அனுப்புவதில் ஆர்வம் காட்டுவோம் என்று அமைச்சர் உறுதியளித்தார். அதிக அளவில் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் ஆடை தயாரித்தல் போன்ற தொழில்களுக்குத் தமிழ்நாடு ஊக்கம் அளிக்குமா என்று என்னிடம் கேட்டார். வேலை வாய்ப்புகளை அதிக அளவில் வழங்கும் எந்தத் தொழிலையும் தமிழ்நாடு அரசு ஊக்குவித்து அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும் என்றும் நான் அவரிடம் விளக்கினேன்.

8.1.1999 அன்று காலை 10 மணிக்கு பொதுப் பணித்துறை அமைச்சர் டத்தோ திரு சாமி வேலு அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் பங்கு கொண்டேன். இதில் மலேசிய நாட்டின் தனியார் துறை நிறுவனங்களும் பங்கு பெற்றன. மலேசிய நாட்டின் பொதுப்பணி மற்றும் குடிநீர் வழங்கும் துறைகளின் பணிகள் குறித்து வீடியோ காட்சிகள் மூலம் விளக்கிக் காட்டப்பட்டன.

சென்னை மாநகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைத் தீர்க்கும் விதத்தில் சென்னை துறைமுகத்தையும், விமான நிலையத்தையும் இணைக்கும் வகையில் சுமார் **25** கி.மீ. நீளத்தில் ஒரு உயர்மட்ட விரைவுச் சாலை அமைப்பது குறித்து விரிவாக விவாதித்தோம். இன்னும் நான்கு மாதங்களில் கட்டுமானத் தொழில் வளர்ச்சி வாரியத்தின் மூலம் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்து தமிழ்நாடு அரசுக்கு அனுப்புவதாகவும், அதனைப் பரிசீலனை செய்த பின் இத்திட்டத்தை செயலாக்கும் முறை குறித்து தமிழ்நாடு அரசு முடிவெடுக்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மழைக் காலங்களில் மட்டும் பெருக்கெடுக்கும் பாலாற்றின் தண்ணீர் வீணாவதைத் தடுக்க நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள, இத்துறையில் அனுபவம் பெற்றுள்ள மலேசிய நாட்டின் தொழில் நுட்ப உதவியைக் கோரினேன்.

8.1.1999 அன்று மாலை 5 மணிக்கு புத்ரா உலக வணிக மையத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினேன். இந்த நிகழ்ச்சி உணர்ச்சி பூர்வமானதாக அமைந்திருந்தது.

8.1.1999 இரவு **8.30** மணிக்கு மலேசிய இந்திய வர்த்தகத் தொழில் கூட்டுறவுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த தொழில் முனைவோர் கூட்டத்தில் உரையாற்றினேன். தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்துறையில் இங்குள்ள தொழில் முனைவோருக்குள்ள சிறந்த வாய்ப்புகள் குறித்து அவர்களிடம் விளக்கிப் பேசினேன்.

இன்று **(9.1.1999)** காலை 10 மணிக்கு மலேசிய நாட்டின் பிரதமர் டாக்டர் மகாத்திர் முகமத் அவர்களை

அவரது அலுவலகத்தில் சந்தித்து 35 நிமிடங்களுக்கும் மேலாகக் கலந்துரையாடினேன். கடந்த இரண்டு தினங்களாக தொழில்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோருடன் நடைபெற்ற உரையாடல்கள் பற்றி விளக்கிச் சொன்னேன். தமிழ்நாட்டின் தென் கோடியில் உள்ள குளச்சல், துறைமுகம் ஒன்றை அமைக்க சிறந்த இயற்கை வசதிகளைப் பெற்றிருப்பதாகவும் இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஏற்கெனவே தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமரிடம் விளக்கி அவ்வறிக்கையை அவரிடம் அளித்து, மலேசிய நாடு இந்த முயற்சியில் ஆர்வம் காட்டினால் இரு அரசுகளும் இத்திட்டத்தை அரசு மட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறைவேற்ற தமிழ்நாடு அரசு முன்வரும் என்றும் சொன்னேன். தமிழ்நாட்டில் பாலாற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருகி தண்ணீர் வீணாவதைத் தடுக்க, நிலத்தடி நீரைத் தக்க முறையில் பயன்படுத்த, மலேசியத் தொழில்நுட்பம் பற்றிக் கேட்டேன். அதற்குப் பிரதமர், தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைப்பது பற்றி பரிசீலனை செய்வதாக பதிலளித்தார். தகவல் தொழில் நுட்பத் துறையில் முன்னேறி வரும் தமிழ்நாட்டில் பிப்ரவரி 7–8 தேதிகளில் சென்னையில்

நடைபெறவுள்ள உலகத் தமிழிணையம் – கருத்தரங்க மாநாடு நிகழ்ச்சிகளில் நேரில் கலந்து கொள்ள வருமாறு பிரதமருக்கு அழைப்பு விடுத்தேன். பிரதமர் இதுவரை, தான் தமிழகம் வந்ததில்லை என்றும், முடிந்தால் இம்மாநாட்டில் பங்கு பெறுவதாகவும் அடுத்த முறை இந்தியாவுக்கு வரும்பொழுது நிச்சயமாகத் தமிழ்நாடு வருவதாகவும் என்னிடம் கூறினார். தமிழ்நாட்டிற்கும் – மலேசியாவிற்கும் வெகு காலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளை வரலாற்றுச் சான்றுகளோடு நான் விளக்கிச் சொன்னதைப் பிரதமர் ஆர்வத்துடன் கேட்டார். பிரதமருடனான இன்றைய சந்திப்பு நேச உணர்வுடனும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைந்திருந்தது.

இந்த இருநாடுகளில் நான் மேற்கொண்ட சுற்றுப் பயணத்திற்கு பெரிதும் உதவியாக இருந்த இந்திய நாட்டின் தூதுவர்கள் இருவரும் முறையே மலேசிய நாட்டில் மாண்புமிகு சகாய் அவர்களும், சிங்கப்பூர் நாட்டில் மாண்புமிகு பிரேம்சிங் அவர்களும் எனக்குப் பெரும் துணையாக இருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிங்கப்பூரில் எனக்கு பொதுமக்களுடைய தொடர்புகளை ஏற்படுத்தி வரவேற்பிற்கு ஏற்பாடு செய்த தமிழ் அமைப்புகள் அனைத்திற்கும் குறிப்பாக திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் அமைந்த குழுவிற்கும், இங்கே நம்முடைய டத்தோ திரு. சாமிவேலு தலைமையிலே அமைந்த தமிழ் அமைப்புகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருநாடுகளிலும் நடைபெறுகின்ற தமிழ் நாளேடுகளில் என் வருகைப் பற்றியும், தமிழ் மக்கள் காட்டுகின்ற ஆர்வம் பற்றியும் வெளியிட்டதோடு, தமிழ்நாட்டின் எதிர்கால நலனுக்கும் வளத்திற்கும் உதவிடக் கூடிய வகையில் எழுதிய கட்டுரைகளுக்காகவும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய வருகை பற்றிய செய்திகளை வெளியிட்ட, மலாய் மொழி, தமிழ்மொழி, ஆங்கில மொழி ஏடுகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : *அறிவியல் தமிழில் வளர்ச்சிபெற வேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள். எந்தெந்தத் துறையில் அறிவியல் தமிழ் மேலும் சிறப்பாக வளர வேண்டுமென்று விரும்புகிறீர்கள்?*

கலைஞர் : எல்லாத் துறைகளிலும் அறிவியல் தமிழ் வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. ஆனால் படிப்படியாக ஒவ்வொரு கட்டமாக அதை வளர்க்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இப்போது ஏற்பட்டுள்ள விஞ்ஞான ரீதியான வாய்ப்புகளுக்கு அறிவியல் தமிழைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் பிப்ரவரி மாதத்தில் கருத்தரங்க மாநாடு நடைபெறவிருக்கிறது.

கேள்வி : *தமிழ் கலைக் களஞ்சியம் முதல் பதிப்பிற்குப் பிறகு அச்சடிக்கப்படவில்லை. மீண்டும் அதில் முனைப்பு காட்டப்படுமா?*

கலைஞர் : இதிலே சில தொய்வுகள் இருப்பது உண்மைதான். விரிவாகச் சொல்ல வேண்டுமேயானால் 1974இல் தமிழ் அகர முதலி தயாரிப்பதற்காக தேவநேயப் பாவணார் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அது தன்னுடைய பணியைத் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தது. பிறகு ஆட்சி கலைக்கப்பட்டது. அந்த இடைக்காலத்தில் பணி தொடங்கப்படவில்லை. 3ஆவது முறையாக 89இல் முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு பாவாணர் மறைந்து விட்டாலும் மீண்டும் அந்தப் பணியைத் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது தமிழ் வளர்ச்சித் துறை மூலமாக தமிழை வளர்க்க தன்னால் இயன்ற முயற்சிகளை எல்லாம் எடுத்துக் கொண்டுள்ளோம்.

கேள்வி : *ஆங்கிலத்திற்கு தமிழுக்கு சொற்களை மாற்றம் செய்யும்போது வெவ்வேறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் சிக்கல் ஏற்படுகிறது. ஒரே மாதிரியான சொல்லை ஏற்படுத்த முயற்சிக்கப்படுமா?*

கலைஞர் : சிக்கல் இருப்பதை நான் உணராமல் இல்லை. இதைப்போக்க விரைவில் யோசித்து நல்ல முடிவெடுக்கப்படும்.

கேள்வி : *மலேசியாவை சுற்றிப் பார்த்திருப்பீர்கள். இங்கேயுள்ள சாலைகளைப் பார்த்தீர்களா?*

கலைஞர் : சாலைகளையும் பார்த்தேன். சோலைகளையும் பார்த்தேன். தமிழகத்திலே பல இடங்கள் பாலைகளாக இருப்பதையும் எண்ணி வருந்தினேன். சிங்கப்பூர், மலேசியா போல் தமிழகத்தையும் ஆக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் சிங்கப்பூர் சிறியநாடு, மலேசியா சிங்கப்பூரை விடப் பெரிய நாடு எனினும் இந்தியாவைப் போல் அவ்வளவு பெரிய நாடு அல்ல. சின்னக் குழந்தைகளுக்கு குறைந்த செலவிலே நல்ல ஆடைகளை வாங்கி விடலாம். ஆனால் பெரிய அளவில் வளர்ந்து விட்ட மனிதனுக்குச் சட்டை தைப்பதென்றால் அதிக செலவாகும். அந்த நிலையில்தான் இந்தியாவும், தமிழ்நாடும் இருக்கின்றது.

கேள்வி : *மலேசியத் தமிழர்களுக்கு என்ன கூறுகிறீர்கள்?*

கலைஞர் : என்னுடைய இதயத்தை அவர்களுக்குத் தந்திருக்கிறேன். அதை அவர்கள் தெரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

கேள்வி : *இந்திய நாடாளுமன்றத்திற்கு விரைவில் தேர்தல் வர வாய்ப்பு இருக்கிறதா? அரசியல் திருப்பங்கள் ஏற்படுமா? அடிக்கடி உங்கள் ஆட்சியைக் கலைப்பதைப் போல மிரட்டி கொண்டேயிருக்கிறார்களே, அதைப்பற்றி உங்கள் கருத்து?*

கலைஞர் : மிரட்டுவதற்காக நான் என்றைக்குமே கவலைப்படுவதில்லை. என்னுடைய ஆட்சி இரண்டு முறை ஏற்கெனவே கலைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் என்னுடைய தலைமையிலே உள்ள கழகம் வீழ்ந்து விடவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் குறித்து கேட்டீர்கள். இன்னொரு நாட்டிலே வந்து இந்திய நாட்டு அரசியலைப் பேசுவது முறையல்ல.

கேள்வி : உங்களுடைய வருகையைத் தனிப்பட்ட *வருகை என்று ஜெயலலிதா விமர்சனம் செய்திருப்பது பற்றி உங்கள் கருத்து?*

கலைஞர் : நான் கருத்துக் கூற விரும்பவில்லை.

கேள்வி : *மலேசியாவிற்கு வருகை மேற்கொண்ட* ***அண்ணா*** *அவர்கள் இங்கேயுள்ள மூன்று இனத்தவர்களையும் வெற்றிலை பாக்கு சுண்ணாம்புடன் ஒப்பிட்டுப் பேசினார். சுண்ணாம்பு கலந்தால் தான் வாய் சிவக்கும் என்றார். உங்கள் நோக்கில் அது பற்றி?*

கலைஞர் : நானும் அதைத்தான் கூறுகிறேன். மூன்றும் சேர்ந்தால்தான் வாய் சிவக்கும். அத்துடன் புகையிலையைப் போட்டு விடக்கூடாது. அது உடம்பிற்கு நல்லதல்ல, புகையிலை பகையிலையாக மாறிவிடும்.

கேள்வி : *தமிழ்நாட்டில் நீங்கள் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறீர்கள். சமத்துவபுரம் போன்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிறீர்கள். ஆனாலும் தமிழ்நாட்டில் சாதிக்கலவரம், மதக் கலவரம், வன்முறை போன்றவை தொடருகிறதே, இவைகளைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமா?*

கலைஞர் : இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான **ஆண்டுகளுக்கு முன்பே வந்த தொற்றுநோய் அது.** அதன் காரணமாக ஏற்படுகிற சண்டை சச்சரவுகள், கலவரங்கள், மோதல்கள் எல்லாம் நீங்கள் அறிந்ததுதான். அதிலிருந்து மக்களை விடுவிக்க சாதிக் கொடுமையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அரசின் சார்பில் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. சொல் அளவில் அது இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் செயல் அளவில் பிராமணர், செட்டியார், ஆதிதிராவிடர், முதலியார், வன்னியர், முக்குலத்தோர் என்று பல பிரிவுகளாக இருக்கின்ற எல்லா சமுதாயத்தினரையும் ஒரே இடத்தில் குடி அமர்த்த வேண்டும் என்பதற்காக **சமத்துவபுரம் திட்டம்** தொடங்கப்பட்டிருக்கின்றது. இத்திட்டம் மேலும் மேலும் வளர்ந்திட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கேள்வி : *மலேசியாவில் தமிழ் இலக்கியம் அதிக அளவில் வளர்ந்து வருவதைப் பற்றி?*

கலைஞர் : மலேசியாவின் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி அதிகமாக வளர்ந்த

காரணத்தால் தான் அண்மையில் மலேசிய கவிஞர் ஒருவர் தமிழகத்திலே தமிழக அரசால் சிறப்பிக்கப்பட்டார் என்பதை நீங்களே அறிவீர்கள்.

கேள்வி : *இன்னும் அதிகமான எழுத்தாளர்கள் சிறப்பிக்கப்படுவார்களா....?*

கலைஞர் : மேலும் மேலும் நீங்கள் அந்த முயற்சியைத் தொடர்ந்தால் மேலும் மேலும் நாங்கள் ஆதரவு தருவோம்.

கேள்வி : *இந்தியாவில் மருத்துவப் படிப்பை படிக்க விரும்பும் மலேசிய மாணவர்கள் அங்கே வெளியிடப்படும் போலி விளம்பரத்தால் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். அவர்களை ஏமாற்றத்திலிருந்து காப்பாற்ற தமிழக அரசின் உத்தரவாதம் என்ன?*

கலைஞர் : போலிகளைக் கண்டு ஏமாறுவது தமிழனுக்கு வழக்கம். அதை நீக்குவதற்குச் சட்டப்படி என்ன செய்ய முடியும் என்பதை நிச்சயமாக யோசிப்போம். நீங்கள் கூறியதைப்போல மருத்துவக் கல்லூரி விஷயமாக இந்தியத் தூதுவர் எனக்களித்த விருந்தின்போது ஒரு நண்பர் அந்தக் கோரிக்கையை என்னிடம் கொடுத்துள்ளார். ஏற்கெனவே மலேசிய மாணவர்கள் போன்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு இடம் அளிக்கின்ற ஒரு நிலை தமிழ்நாட்டில் இருந்தது. பின்னர் அந்த நிலை மாற்றப்பட்டு விட்டது. இப்போது ஈழத்திலிருந்து இலங்கையிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம்தர அவர்களுக்கென குறிப்பிட்ட சில இடங்கள் கொடுத்து வருகிறோம். தாங்கள் சொல்கின்ற குறையைப் பற்றி நீங்கள் குறிப்பு அனுப்பினால் யோசித்து முடிவெடுக்க முடியும்.

கேள்வி : ***மலேசியாவில் உள்ள இந்தியர்களில் 90 சதவிகிதம் பேர் தமிழர்கள், எனவே தமிழ் தெரிந்த இந்தியத் தூதுவர் நியமிக்கப்படுவாரா?***

கலைஞர் : தூதுவராக வருபவர்கள் தமிழைத் தெரிந்து கொண்டால் நல்லது.

கேள்வி : *த.மா. க. உடன் உங்கள் கூட்டணி எப்படி இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு மூப்பனார் அவர்கள் கண்மூடித்தனமாக தி.மு.கவை ஆதரிக்கப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார். எனவே உங்கள் கூட்டணியின் எதிர்காலம் பற்றி.*

கலைஞர் : யாரும் யாரையும் கண்மூடித்தனமாக ஆதரிக்கக் கூடாது என்று மூப்பனார் அல்ல, நானல்ல, தந்தை பெரியாரே கூறியிருக்கிறார்.

கேள்வி : *கவியரசு கண்ணதாசன் உங்களுடைய இனிய நண்பர். கவிஞர் வைரமுத்து உங்கள் மாணவர். இவர்கள் இரண்டு பேரைப் பற்றி தாங்கள் ஒப்பீடு செய்தால் எங்கள் இலக்கிய உலகிற்கு இன்பமாக இருக்குமே!*

கலைஞர் : நீங்கள் உங்கள் கேள்வியில் ஒப்பீடு செய்து விட்டீர்களே. கண்ணதாசன் என்னுடைய நண்பர், வைரமுத்து எனக்கு மாணவர் என்று!

கேள்வி : *தமிழ் அறிஞர்களாக விளங்கும் தாங்கள் இன்று முதல் அமைச்சராக இருப்பது தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை. இந்த அளவிற்கு சாதனை செய்து வரும் தங்கள் அரசு ஆஸ்தான கவிஞர் நியமனத்தில் தயக்கம் காட்டுவது ஏன். சுரதா போன்ற சிறந்த கவிஞர்களெல்லாம் இருக்கிறார்களே?*

கலைஞர் : அரசனே கவிஞராக இருக்கும்போது அரசவைக்கவிஞர் ஒருவர் தேவையில்லை என்று கருதுகிறேன். நீங்கள் குறிப்பிடும் சுரதா அவர்களுக்கு வருகிற பிப்ரவரி 13ஆம் தேதி பொற்கிழியும் கலைஞர் விருதும் முரசொலி அறக்கட்டளை வழங்குகின்றது என்ற செய்தியை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : ***இப்போது முதலமைச்சர் என்ற முறையில் அதிகப் பொறுப்புகள் இருக்கும் இந்த நேரத்திலும் தமிழ் எழுத்துப்பணியை எப்படித் தொடர நேரம் கிடைக்கிறது?***

கலைஞர் : அது ஒன்றுதான் என் களைப்புக்கு மருந்தாக இருக்கிறது.

கேள்வி : *தொழில் துறையில் சலுகைகளை எந்தெந்த துறைகளுக்கு அளித்து முதலீட்டாளர்களைக் கவர நினைக்கிறீர்கள்?*

கலைஞர் : மின்சாரத்துறை, சுற்றுலாத்துறை மற்றும் குடிநீர் போன்ற வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டங்களை எல்லாம் வரவேற்கிறோம். பெரிய தொழில்கள் என்று மட்டுமல்லாமல், சிறிய நடுத்தர தொழில்களைத் தொடங்க வருபவர்களுக்கும் சலுகைகள் அளிக்கப்படும். முக்கியமாக குளச்சல் துறைமுகத்தை உருவாக்க – ஏற்கெனவே பெரிய துறைமுகமாக இருந்தது – இது மாநில அரசின் பொறுப்பில் உள்ளது. அதை விரிவாக்கினால் பல இடையூறுகள் நீங்கும். வசதி, வாய்ப்புகள் வளங்கள் பெருகும்.

கேள்வி : *மின்திட்டங்கள் பற்றி குறிப்பாக மலேசியா நாட்டைச் சேர்ந்த பெட்ரோமாஸ் நிறுவனம் விளக்குவீர்களா?*

கலைஞர் : எங்களுடைய ஒப்பந்தங்கள் எல்லாமே ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகும். நீங்கள் கேட்கும் எல் அண்டு ஜி ஒப்பந்தம் குறித்து ஏற்கெனவே தேவையான விளக்கங்களையெல்லாம் பெட்ரோமாஸ் நிறுவனத்திற்கே தமிழக அரசால் வழங்கப்பட்டு விட்டன. இதைப் பற்றி மலேசிய பிரதமர் அவர்களோ அமைச்சர்களோ நான் சந்தித்தபோது எதுவும் கூறவில்லை. பத்திரிகை யாளர்களாகிய நீங்கள் தான் கேட்கிறீர்கள்.

கேள்வி : *தி.மு.கவின் பெரும் தலைவர்களில் நீங்கள் ஒருவர். பெரிய கொள்கை முழக்கத்தோடு ஆட்சியை அமைத்தவர்கள் நீங்கள். வாழ்க்கை முழுவதையும் பொது வாழ்க்கைக்காக அர்ப்பணித்துக் கொண்ட தலைவர் நீங்கள். உங்கள் பேச்சிலே தி.மு.க. ஆதின மடமல்ல, வாரிசு அரசியல் அல்ல என்றெல்லாம் கூறியிருக்கிறீர்கள். அப்படியென்றால் தி.மு.க.வை வழி நடத்தப் போகின்ற அடுத்த இளம் தலைவராக யாரை அடையாளம் கண்டு வைத்திருக்கிறீர்கள்?*

கலைஞர் : நான் என்னுடைய ஆயுள் எவ்வளவு நாட்கள் என்று கணக்கிட்டு ஆரூடம் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பலபேர் ஆரூடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்குப்பிறகு யார் என்று நான் இப்போதே நிர்ணயிக்க வேண்டிய அவசியம் கிடையாது. எனக்குப் பிறகு கழகம் இருக்கும். கழகத்திலே ஜனநாயகம் இருக்கும் அந்த ஜனநாயகம் எனக்குப் பிறகு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்பதை நிர்ணயிக்கும்.

கேள்வி : *இங்கே மரபுக் கவிதை புதுக்கவிதை இரண்டிற்குமிடையே சர்ச்சை நடந்து கொண்டே யிருக்கிறது. தாங்களாவது தீர்வு கூறுவீர்களா?*

கலைஞர் : நான் தீர்ப்பு சொல்லி அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு எந்தக் கவிஞர்களும் இப்போது தயாராக இல்லை. மரபுக் கவிதையிலும் ரசிக்கத் தக்க கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன. புதுக் கவிதையிலும் ரசிக்கத் தக்க கவிதைகள் ஏராளமாக இருக்கின்றன. எந்த கவிதையை எழுதினாலும் அது உள்ளத்தைத் தொடக்கூடிய அளவிற்கு இருந்தால் அது வரவேற்கத் தகுந்தது.

கேள்வி : *தமிழ் நூல்கள் விலை அதிகமாக உள்ளது. அதன் தயாரிப்பாளர்களுக்கு மானியம் தரப்படுமா?*

கலைஞர் : நாள்தோறும் தாள் விலை ஏறிக்கொண்டேயிருக்கின்றது. உங்கள் பத்திரிகையின் விலை கூட சென்ற ஆண்டு இருந்த விலை இந்த ஆண்டு உயர்ந்து விடுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால் ஒரு காலத்தில் ஓரணா, இரண்டணா என்று விற்கப்பட்ட பத்திரிகைகள் எல்லாம் நாளேடுகள் எல்லாம் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று விற்கப்படுகிறது. தாள் விலை ஏறுகின்ற காரணத்தால் நூல்களின் விலையும் ஏறத்தான் செய்யும். அதற்கான மானியம் வழங்குவது என்பது இயலாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க ஆயிரம் கோடி ரூபாய் மானியம் தரவேண்டி உள்ளது. உணவு தானியத்திற்கு நியாய விலைக் கடைகளைத் திறந்து அதற்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மானியம் ஆகிறது. ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்க நூறு கோடி ரூபாய் ஆகிறது. மானியம் ஒவ்வொன்றுக்கும் அளித்தே மக்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் நாட்டில் நூல்களுக்கு மானியம் வழங்குவது என்பது இயலாத காரியம்.

கேள்வி : *பொங்கல் திருநாள் எதற்காகக் கொண்டாடப்படுகிறது?*

கலைஞர் : பொங்கல் திருநாள் தமிழர் திருநாளா என்பது நீண்ட நாள் விவாதம். அண்ணா அவர்கள் வந்தபோதே, அதைப்பற்றி கோடிட்டுக் காட்டியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில் இரண்டையும் கொண்டாடலாம். தெலுங்கர்களுக்கு ஆண்டுப் பிறப்பு உகாதி நாளாகக் கொண்டாடப்படுகிறது. மலையாளிகள் ஓணம் கொண்டாடுகிறார்கள். எனவே தமிழர்களுக்கு பொங்கல் என்று ஒரு நாள் இருப்பதில் தவறு இல்லை. பொங்கலையும் கொண்டாடலாம். தமிழர் திருநாளையும் கொண்டாடலாம். சித்திரை தான் தமிழ் ஆண்டுப் பிறப்பு என்று கூறுவதால் நீண்ட நாட்களாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் அதையும் ஏற்றுக் கொள்ளலாம். தை முதல் நாள் புத்தாண்டு நாள் என்ற கருத்தும் வலுவானதுதான்.

கேள்வி : ***மதச்சார்பற்ற நிலை என்று சொன்னால் இந்தியாவின் எதிர் காலம் எப்படி இருக்கும்?***

கலைஞர் : இந்தியாவின் எதிர் காலம் மதச் சார்பின்மையில்தான் நிலை பெறும், மதச் சார்பின்மைக்கு தீங்கு வந்தால் ஏற்படும் மோதல் காரணமாக இந்தியாவின் ஒற்றுமை சிதறுண்டு போகும். இந்தியாவின் இறையாண்மைக்கே குந்தகம் உண்டாகும்.

சென்னையில் முதலமைச்சர்

சிங்கப்பூர் – மலேசிய நாடுகளில் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 9.1.1999 இரவு 11.30 மணியளவில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கினார். விமான நிலையத்தில் முதலமைச்சரை அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், கடலென திரண்டிருந்த மக்களும் வரவேற்றார்கள்.

●

சிங்கப்பூர் மலேசியாவில்

சங்கத்தமிழ்

— கவிஞர் வைரமுத்து

மூன்றுபக்கம் தண்ணீரால் சூழப்பட்டிருந்தால் அது தீபகற்பம்.

நான்குபக்கம் தண்ணீரால் சூழப்பட்டிருந்தால் அது தீவு.

முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களின் வருகைக்குப்பிறகு, அவரது தமிழ்மழையில் வழிய வழிய நனைந்தபிறகு, சிங்கப்பூரும்–மலேசியாவும் திகைத்துப் போய்க் கேட்கிற கேள்வி இதுதான்:

"நான்குபக்கமும் தமிழால் சூழப்பட்டால் அதற்கு என்ன பெயர்?"

முத்தமிழறிஞர் கலைஞரின் வருகையால் சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து, மிதந்து, மகிழ்ந்த செய்திகளை அறிந்து, அறிந்து மகிழ்கிறேன்.

முதல்வர் கலைஞர் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் இருபெரும் நோக்கங்கள் கொண்டது.

ஒன்று : பண்பாட்டு உறவுகளை உறுதிப்படுத்தல்.

இரண்டு : தொழில் உறவுகளை உயர்த்திப் பிடித்தல்.

தன் இதயத்தால், இலக்கியத்தால் தமிழ்ப் பண்பாட்டு உறவுகளை உறுதிப்படுத்தி வந்திருக்கிறார்.

அவர் தன் பதவியால் – பட்டறிவால் தொழில் உறவுகளை உயர்த்திப் பிடித்து திரும்பியிருக்கிறார்.

சின்னத் தீவுதான் சிங்கப்பூர்.

கடலின் தேகத்தில் ஒரு மச்சம்.

ஆனாலும் ஆசியப் பொருளாதாரத்தில் தனிநபர் வருமானத்தில் அதுதான் உச்சம்.

கிழக்கு மேற்காக 42 கிலோ மீட்டரும், தெற்கு வடக்காக 23 கிலோ மீட்டரும் கொண்ட சின்னஞ்சிறிய தீவுதான் சிங்கப்பூர்.

ஆனால் தமிழையும் தன் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக்கித் தமிழுக்குத் தன் அரியாசனத்தில் சரியாசனம் தந்திருக்கும் தித்திப்புத் தீவு சிங்கப்பூர்.

அங்கு வாழும் தமிழர்கள் பெரும்பாலும் இனப்பற்று, மொழிப்பற்று இரண்டையும் உயிரோடு கலந்தவர்கள்.

கலைஞரையும் அவர் தமிழையும் இதயத்தோடு கலந்திருப்பவர்கள்.

வடதுருவத்து எஸ்கிமோ, வெயிலைப் பார்க்க ஆசைப்படுவதைப் போல அவரைப் பார்க்க ஆசைப்படுகிறவர்கள்.



"சிங்கப்பூருக்கு வருவது என் நீண்ட காலக் கனவு" என்று சிங்கப்பூர்த் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கலைஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், அது ஒருவர் கண்ட கனவு.

சிங்கப்பூருக்குக் கலைஞர் வரவேண்டுமென்பது பல்லாயிரம் தமிழர்கள் கண்ட கனவு.

இருதரப்புக் கனவுகளும் ஒருபொழுதில் பலித்தன.

ஆகாயமங்கை அவிழ்ந்த இருட்கூந்தலை அள்ளிமுடிக்கும் ஓர் அதிகாலையில் (4.1.99) 'சங்கி' விமான நிலையத்தில் தரையிறங்குகிறது தமிழ்.

சிங்கப்பூர் முழுக்க ஓர் ஆனந்த மின்சாரம் அலையலையாய்ப் பரவுகிறது.

அரசாங்கச் சந்திப்புகளில் அவர் அன்பைப் பரிமாறுகிறார்; தொழில் முனைவோர் சந்திப்பில் அவர்தம் அச்சம் களைந்து நடைமுறைத் தடைகள் உடைபடும் என்கிறார்.

"நல்ல நிலம் தமிழ் நிலம்; நம்பிக்கையோடு விதை தூவுங்கள்" என்கிறார்.

"சுரண்டலுக்கு இடம்தர மாட்டோம்; நியாயமான லாபத்திற்குக் குறுக்கே நிற்கமாட்டோம்" என்று கடிதோச்சி மெல்ல எறிகிறார்.

அவர் முகம் பார்க்கவும், குரல் கேட்கவும், வெள்ளி நாணயம் போல் துள்ளி வரும் அவரது தெள்ளுதமிழ் கேட்டுத் திளைக்கவும், அவரது அசைவுகளில் ஆனந்தம் காணவும், அவரில் தங்களை அடையாளம் காணவும் தவிக்கிறார்கள் தாய்த் தமிழர்கள்.

அந்த நாள் வந்தது.

நிமிடங்கள் பொன்னாகும் சிங்கப்பூரில் ஒரு வேலை நாளில் (6.1.99) பிற்பகல் 4.30 மணிக்கு அத்தனை பெரிய திருக்கூட்டம் கலைஞருக்கன்றி வேறு யாருக்குக் கூடக்கூடும்?

அரங்கில் ஒலிமுழங்க – அத்தனை கண்களிலும் மின்னல் துலங்க – அத்தனை கரங்களும் அனிச்சைச் செயலாய்க் கரவொலி வழங்க – ஆனந்தத்துக்கும் அழுகைக்கும் மத்தியில் இதயம் குழைய – சிங்கப்பூர்த் தமிழர்களின் கனவு மெல்ல மெல்ல நடந்து மேடையேறுகிறது.

அளவாகத் தமிழ்பேசி அளவற்ற பணிபுரியும் சிங்கப்பூர் "தமிழ்முரசு" ஆசிரியர் திருநாவுக்கரசு முன்மொழிகிறார். நாற்காலியற்ற – ஒலிபெருக்கி மட்டுமே கொண்ட தனிப்பெரும் மேடையில் தமிழ் பேசத் தொடங்குகிறது தமிழ்.

சிங்கைத் தமிழர்களுக்குக் கலைஞரைப் பார்த்த பரவசம்.

கலைஞருக்கோ சிங்கைத் தமிழர்களின் பாசப் பரவசம்.

கண்ணீரில் நீந்திக் கரையேற முடியாமல் வார்த்தைகள் மூழ்கி மூழ்கித் தலைகாட்டுகின்றன.

இப்போது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். பேசாமல் உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கிறது" என்று தொடங்குகிறார்.

நிறைந்து போயிருந்த சபை நெகிழ்ந்துபோய் நிற்கிறது.

"என்னை நீங்கள் தன்னந்தனியனாக நிறுத்தினாலும் உங்களை நான் தன்னந்தனியனாக ஆக்கமாட்டேன் என்ற உறுதியை இந்த நல்ல நிகழ்ச்சியில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் அன்று உறவுமொழியால் கொடுத்த உறுதிமொழியை என் சிங்கப்பூர் நண்பர்கள் தொலைபேசியில் சொல்லிச் சொல்லித் திளைக்கிறார்கள்.

மழையாய் இருந்தும் மலைபோல் வந்து குவிந்த கூட்டத்திற்கு நன்றி தெரிவித்துத் தன் பேச்சின் மையம் நோக்கி நகர்கிறார்.

தொல்காப்பியரைத் தொட்டுக்கொள்கிறார்; பழந்தமிழ் இலக்கியத்தில் பயணப்படுகிறார்.

இந்திராகாந்தி அவர்களால் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட கணியன் பூங்குன்றன் வரியில் கரைந்து போகிறார்.
புரட்சிக்கவிஞருக்கு பூபாளம் இசைக்கிறார்.

"உங்களுக்குத் தெரியும். உலகப் புகழ் எய்திய கிரேக்கப் பாரம்பரியம் இப்போது இல்லை. எகிப்திய மொழிக் கலாச்சாரமும் இப்போதில்லை. ஆனால் இன்னமும் இலங்கையில் தொல்காப்பியத் தமிழைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 'ர' என்ற எழுத்து சொல்லின் முதலில் வரக்கூடாது என்பது இலக்கணவியல். ஆனால் நாம் 'ரத்தம்' என்று 'ர' என்ற எழுத்து சொல்லின் முதலில் வைத்து எழுதிக்கொண்டிருக்கிறோம். இலங்கையில் 'இ' என்ற எழுத்தைச் சேர்த்து "இரத்தம்" என்றுதான் எழுதுவார்கள். எனவே இலங்கைத் தமிழர்கள் இன்னமும் தொல்காப்பியக் காலத்தை மறக்கவில்லை; இது ஒரு எடுத்துக்காட்டு" என்று இலக்கியத் தேனில் இலக்கண மருந்து குழைக்கிறார். பெயர்ச்சொல்லே வினைச்சொல்லாக்வும், வினைச்சொல்லே பெயர்ச்சொல்லாகவும் வழங்கும் விந்தை தமிழுக்குரிய தனிச்சிறப்பு என்று பெருமிதம் பேசுகிறார்.

எந்த மண்ணில் இருந்தாலும் மண்ணுக்குரிய மக்களாக இருங்கள்; ஆனால் இனமொழி அடையாளங்களை இழந்து விடாதீர்கள் என்று செல்லமாய்க் கன்னங்கிள்ளி ஈரவார்த்தைகளால் எச்சரிக்கிறார்.

அறிஞர் அண்ணா பட்டியலிட்டுக் காட்டிய புறநானூற்றுப் புலவர்களோடு அகநானூற்றுப் புலவர்களையும் அணிவகுத்து நிறுத்துகிறார்.

கடல்பாடிய – ஆனால் கடல்தாண்டிப் போகும் வாய்ப்புப் பெற்றிருக்க முடியாத புலவர்களைக் கடல்கடந்து சுமந்து சென்று பாசத்தோடு பதிவு செய்கிறார்.

அடை நெடுங்கல்வியார் முதலாக ஒக்கூர் மாசாத்தனார் ஈறாக – பாட்டுப் புலவர்களின் பெயர்களை உச்சரித்து உச்சரித்து உயிர் ஊறுகிறார்.

எத்தர்களால் ஏமாற்றப்பட்டு சிங்கப்பூர் சிராங்கூன் சாலையிலே அனாதையாக அழுதுகொண்டிருக்கிற உழைக்கும் தமிழர்களுக்காக சிங்கப்பூர் பிரதமரோடு பேசியிருக்கிறேன் என்று இலக்கியத்தை உயர்த்திய இடத்தில் இனத்தையும் உயர்த்திப் பிடித்திருக்கிறார்.

75 வயது கொண்ட கலைஞர் 65 நிமிடங்களில் இருபது நூற்றாண்டுத் தமிழை அளந்து தந்திருக்கிறார்.

பிரசவத்திற்குப் பிறகு மீண்டும் வேலைக்கு போகிற தாய் தன் மார்பில் ஒட்டிய குழந்தையைப் பிரியாமல் எப்படிப் பிரிவாளோ அப்படிப் பிரிகிறார்.

சிங்கப்பூர்த் தீவு ஒரு புள்ளியாய்த் தேய்ந்துவிட மலேசிய வானத்தில் மறைகிறது விமானம்.

மலேசியா !

பூமியில் தெறித்து விழுந்த சொர்க்கத் துண்டு.

மண்ணில் விரிக்கப்பட்ட பச்சைப்பட்டு.

உலக மலைகளுக்கு அழகுப்போட்டி வைத்தால் எப்போதும் முதலிடம் மலேசியாவுக்குத்தான்.

செம்பனை மரங்கள் மீதும், ரப்பர் மரங்கள் மீதும் ஒரு நாளில் சில முறைகள் கருமேகம் மழை பொழியும்; வெண்மேகம் துவட்டி விடும். சற்றொப்ப 3 இலட்சத்து 30 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் கொண்ட அந்த மண்ணில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 54 பேர் மட்டுமே வசிக்கிறார்கள்.

மலேசியாவின் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலுவும் அவரது துணைவியார் டத்தின்ஸ்ரீ இந்திராணி சாமிவேலுவும் விமான நிலையம் வந்து வரவேற்க – கோலாலம்பூரிலிருந்து புது விமான நிலையம் 70 கிலோமீட்டர் என்றபோதிலும் அலையலையாய்த் தமிழர்கள் அங்கும் கூடி ஆரவாரிக்க – கலைஞர் எழுச்சியோடு வரவேற்கப்படுகிறார்.

விமான நிலையத்திற்குள்ளேயே ஒரு சிற்றூர்தியில் சிறுஊர்வலம். தாய்த் தமிழகத்தில் கலைஞருக்குத் தரப்படுவது போன்ற அதே உற்சாகம்; அதே மகிழ்ச்சி; ஆனால் அதை விடப்பரவசம்.

மலேசியத் திருநாட்டின் பன்னாட்டு வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ ரபிதா அஜீஸ் அவர்களோடு உரையாடிவிட்டு அதன்பிறகு தொழில் திட்டங்கள் குறித்து விவாதித்துவிட்டுச் செய்தியாளர் சந்திப்பு.

பெரும் பொறுப்புகளிலிருக்கும் தலைவர்கள் உள்நாட்டில் வார்த்தைகளைக் கையாள்வதை விடவும் வெளிநாட்டில் சொற்களை அளந்து கையாளவேண்டும் என்பார்கள். தன் ஒவ்வோர் அசைவிலும் கலைஞர் எவ்வளவு கவனமாய் இருக்கிறார் என்பதற்கு அவர் பேட்டிகளில் அங்கங்கே சாட்சிகள் பார்த்தேன்.

டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் கலைஞர் தமிழ் மீது காதல் உள்ளவர். அற்புதமான ரசிகர். குழந்தைபோல் மனம்விட்டுப் பேசிக் குதூகலிப்பவர். எனக்கு விருந்து தந்த வேளைகளிலெல்லாம் கலைஞர் தமிழை ஓசையோடு அவர் ஒப்பித்திருக்கிறார்.

அவர் முகமன் பொழிகிறபோது மலாய் நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ள உறவைப் புதுப்பித்துக் கொள்ளவே கலைஞர் வந்திருக்கிறார் என்று குறிப்பிட்டிருந்திருக்கிறார்.

அவரை வலிக்காமல் மறுத்திருக்கிறார் கலைஞர்.

"மன்னிக்க வேண்டும். உறவு பழுதடைந்தால்தான் புதுப்பிக்க வேண்டும். உறவை உறுதிப்படுத்திக் கொள்ளத் தான் வந்திருக்கிறேனே அல்லாமல் அது பழுதடைந்து விட்டது – அதனால் புதுப்பிக்க வந்திருக்கிறேன் என்று நான் கூற விரும்பவில்லை".

அவர்தம் கூர்த்த மதி, நேர்த்தியான வார்த்தைகளில் ஆர்த்திருக்கிறது. வல்லபாய்படேல் வெளிநாடு போனபோது

வினவினார்களாம்:

"What is your Culture?" என்று

"Our Culture is Agriculture" வல்லபாய்படேல் விடையிறுத்தாராம்.

இந்திய அரசியல் குறித்துக் கூரிய கேள்வி கேட்கப்பட்டபோது இன்னொரு நாட்டிலே வந்து இந்திய அரசியல் பேசுவது முறையல்ல என்று விடையிறுத்து தாய்நாட்டின் பெருமையை விட்டுக் கொடுக்காத தேசியவாதியாகத் திகழ்ந்திருக்கிறார் கலைஞர்.

மூன்றாம் உலகநாடுகள் முதலில் தன்னிறைவு பெறவேண்டியது மின்சாரத்திலும், தண்ணீரிலும் தான் என்பதை உள்ளத்தின் ஆழத்தில் எழுதிவைத்திருக்கிற முதல்வர் பல திட்டங்களை முன்வைத்திருக்கிறார்.

தொழில் முதலீட்டுத் திட்டங்களில் ஐந்தாம் இடத்திலிருந்த தமிழ்நாட்டை இரண்டே ஆண்டுகளில் இரண்டாம் இடத்துக்கு உயர்த்தியப் பெருமையை அடக்கத்தோடு அறிவிக்கிறார்.

கோலாலம்பூர் உள்ளரங்கம்

அவர் தங்க முகம் காணத் தமிழர்கள் காத்திருக்கிறார்கள்.

மலேசிய மண்ணின் தமிழ் வரலாற்றில் இப்படி ஓர் இலக்கியத் திருக்கூட்டம் அதற்கு முன்பு நிகழ்ந்ததில்லையாம்.

இன்னொருமுறை கலைஞரே சென்றாலொழிய அந்தத் திருக்கூட்டத்தை வெல்ல முடியுமென்பதற்கு உத்தரவாதமும் இல்லையாம்.

அரங்கம் பிதுங்கப் பிதுங்க – உள்ளே இடமில்லாமல் கூட்டம் வெளியே வழிய வழிய – சாலைப் போக்குவரத்து ஆங்காங்கே நகராமல் நின்றுபோக – அரங்கத்தின் ஜன்னல் கண்ணாடி உடைந்து சிதற – கூட்டம் – கூட்டம் – பெருங்கூட்டம் – வெள்ளம் போல் தமிழர் கூட்டம்!

அரங்கத்தின் நெடுவழியில் அழைத்துச் சென்றால் கலைஞரை மேடை கொண்டு சேர்க்க முடியாது என்று கலைஞரை மாற்றுவழியில் அழைத்து வந்தாராம் டத்தோஸ்ரீ சாமிவேல்.

"இப்போது தமிழ்க்கடல் வரப்போகிறது" என்று அறிவித்தாராம்.

உணர்ச்சி பொங்கப் பொங்க உரையாற்றத் தொடங்கிய கலைஞர் "தமிழ்க்கடல் வரப்போகிறது என்று டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் கூறினார்கள். ஆனால் என் எதிரே கடலே நிற்கிறது" என்று அரங்கின் பெருங்கூட்டத்தைச் சுட்டிக்காட்டி "இந்தக் கடலில் நான் இருக்கின்ற இந்த மேடை ஒரு தெப்பமாக மிதந்து கொண்டிருக்கிறது" என்று சொன்னதும் கடல் கை தட்டியதாம். அந்த அலையோசை அடங்க அதிக நேரம் ஆனதாம்.

"இந்திய நாட்டு வரலாறு கங்கைக் கரையிலிருந்து எழுதப்பட்டதற்குப் பதிலாகக் காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட வேண்டும் என்பதுதான் வரலாற்றுப் பேராசிரியர்களுடைய துணிவான திட்டவட்டமான தெளிவான முடிவாகும்" என்று தொடங்குகிறது அவரது சங்கநாதம்.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் பலரும், மலேசியத் தமிழர்களும் அதுவரை அறிந்திராத ஒரு வரலாற்றுச் செய்தியை கோலாலம்பூரில் குறிப்பிடுகிறார்.

வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீரத் தலைவர்களாம் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டியர்கள் ஆகியோரின் வழித்தோன்றல்கள் விடுதலைப் போரைத் தொடர்ந்து விடக்கூடாது என்பதற்காக வெள்ளை ஏகாதிபத்தியம் அந்த விடுதலை வீரர்களின் வழித்தோன்றல்கள் – தளபதிகள் 73 பேரை – ஒரு கப்பலில் ஏற்றி 76 நாட்கள் பயணிக்க வைத்து 1802இல் கடைசியாய்க் கொண்டு வந்து விட்ட இடம்தான் பினாங்கு என்று வரலாற்றின் இரத்தம் வடியும் ஒரு செய்தியை அங்கே அவர் சுட்டிக் காட்டியபோது அந்த அவையே இமைக்க மறந்த கண்களோடு நிலை குத்தி நின்றதாம்.

அப்படித் தாய் மண் என்ற தொப்புள் கொடியை விட்டுத் துண்டிக்கப்பட்ட அந்த எழுபத்து மூன்று பேரின் பெயர்ப்பட்டியலை உணர்ச்சி பொங்கும் குரலில் அவர் வாசித்துக் காட்டுகிறார்.

அவையில் ஆங்காங்கே கண்கள் சுமந்தனவாம் கண்ணீர்க் குடங்கள்.

விழா முடிந்து வெளியேறியதும் கலைஞருக்குப் பாதுகாப்பாய் இருந்த மலேசியக் காவலர் பால்ராஜ் என்பவர் "நானும் முக்குலத்தைச் சேர்ந்தவன்தான். நான்கூட மருதுபாண்டியரின் வாரிசாக இருக்கலாம்" – என்று கலைஞரைத் தொழுது அழுதாராம்.

தொடர்ந்து அந்தப் பேரவையில் கலைஞரின் சங்க இலக்கியம் சதுராடியது; குறளோவியம் கும்மி கொட்டியது.

தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளும் பண்பாட்டுத் தடயங்களும் அவர் பேச்சில் ஆரவாரத்தோடு வந்து அணி வகுத்து நின்றன. வரிவடிவம் மாறினாலும் ஒலி வடிவம் மாறாத தமிழை – திருவள்ளுவன் நாவிலிருந்து வெளி வந்த அதே தமிழை – காக்கைபாடினியார், நச்செள்ளை, உச்சரித்த அதே தமிழை – கபிலரும், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் அவ்வையாரும் நக்கண்ணையும் உச்சரித்த அதே ஒலிவடிவத் தமிழை – வாழும் தமிழ்ச் சங்கமாக வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர் உச்சரிக்க உச்சரிக்க – கற்கண்டுக்குள் கால்புதைந்த எறும்புகளாய்த் திளைத்துச் சுவைத்தாம் திருக்கூட்டம்.

வீரத் தமிழ், அழகு தமிழ், நளினத் தமிழ் மட்டும் போதாது. அறிவியல் தமிழும் வேண்டுமென்று தமிழை 21ஆம் நூற்றாண்டுக்கு ஆற்றுப்படுத்துகிற அறிவு முழக்கத்தோடு அவர் உரை நிறைகிறது.

அதன்பிறகு தான் அவையோருக்கு அது இரவா பகலா என்று தெரிகிறது.

கலைஞரின் இந்த வெளிநாட்டுப் பயணம் குறைந்த காலத்தில் நிறைந்த பயன் நிகழ்த்தியிருக்கிறது.

சிங்கப்பூர் பிரதமரையும், மலேசியப் பிரதமரையும் சந்தித்துத் தமிழ்நாட்டுக்குத் தொழிலூக்கம் பெற்றது ஒரு பயன்.

சென்னை விமான நிலையத்துக்கும் துறைமுகத்துக்கும் உயரச்சாலை அமைக்கும் சிந்தனை இரண்டாம் பயன்.

தமிழ்நாட்டுக்குள் தொழில் முனைவோரின் அச்சம் களைந்தது மூன்றாம் பயன்.

சிங்கப்பூர் மலேசியத் தமிழர்களுக்கு இன்னும் 10 ஆண்டுகளுக்குத் தேவையான உற்சாக ஊட்டம் தந்தது நான்காம் பயன்.

நம் பண்பாட்டு உறவுப் பாலங்களை உறுதி செய்து கொண்டது ஐந்தாம் பயன்.

அன்று கடாரம் கொண்டவன் கூட அந்த மண்ணை மட்டுமே வென்றான். கலைஞரோ மனங்களை வென்றிருக்கிறார். மண்ணை வென்றவன் தற்காலிக வெற்றி பெறுகிறான்.

மனங்களை வெல்லுகிறவனே நிரந்தர வெற்றி பெறுகிறான்.

கலைஞர் வெற்றி – நிரந்தர வெற்றி.

நன்றி : 'முரசொலி'

பாவேந்தரின் தமிழ் மொழியுணர்வு

முனைவர் சரளா இராசகோபாலன்

ரஷ்ய நாட்டுக் கவிஞராகிய ரசூல் கம்சதோவ் தாய்மொழிப் பற்றாளர். அவர் தன் பாடலில், எனது

"அவார்மொழி நாளை அழியுமெனில்
நான் இன்றே இறப்பேன்" – என்று பாடினார்.

இன்று உலகெங்கும் பரவிய மொழியாகக் கருதப்படும் ஆங்கிலம் ஒரு காலத்தில் அந்நாட்டிலேயே இகழப்பட்டது. இலத்தீன் மொழியும் பிரெஞ்சு மொழியும் அந்நாட்டில் கொடிகட்டி ஆண்டன. அதன்பின்னர் ஆங்கிலேயரிடம் தோன்றிய தாய்மொழிப்பற்றே அந்நிய மொழிகளை அகற்றிவிட்டு, தாய்மொழியை அரியணையில் அமர்த்தியது. இலத்தீன் மொழி இங்கிலாந்தில் ஆதிக்கம் செலுத்தியபோது? இதனை வெறுத்த கல்விக்கூடத்தின் தலைமை ஆசிரியர் ஒருவர், "நம்முடைய மொழி நம் உரிமையையும், விடுதலையையும் வெளிப்படுத்துகின்றது. இலத்தீன் மொழி நம்முடைய அடிமைத் தன்மையையும், இழிவையும் நினைவூட்டுகின்றது" என்று கூறிவிட்டு, "இலத்தீனை நான் மதிக்கின்றேன். ஆனால் ஆங்கிலத்தை நான் தொழுகிறேன்" என்று கூறினார். (மேற்கோள் சி. இலக்குவனார் பழந்தமிழ்)

"அயர்லாந்து வேண்டுமா? அல்லது காலிக் மொழி வேண்டுமா என்று என்னிடம் கேட்டால் நான் அயர்லாந்தை விட்டு விடுவேன். காலிக் மொழி வேண்டும் என்பேன்" என்றார் வேலரா என்ற மொழிப்பற்றாளர்.

இந்தத் தாய்மொழிப்பற்று, 'தமிழ்விடுதூது என்னும் நூலின் ஆசிரியருக்கு இருந்தது. தமிழின் சிறப்பிற்காகவே எழுதப்பட்ட முதல் நூலாகக் கிடைப்பது தமிழ்விடு தூதுதான்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" (151)

– என்று பெயர் தெரியா அந்தத் தமிழ்ப் பற்றாளர் அன்றே பாடினார்.

இந்த தாய்மொழிப் பற்றாளர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவராகப் பாவேந்தர் விளங்கினார். தமிழ் மாநிலத்தில் வாழ்வோர் பலர் பெறாத மொழியுணர்வு பிரெஞ்சு மாநிலத்தில் பிறந்து, வளர்ந்து, கல்விகற்று, வேலை பார்த்த பாவேந்தர்க்கு உண்டானது வியப்பே. தமிழ்நாட்டிலிருந்த தமிழ்த்தேனின் சுவை, புதுவையிலிருந்த வண்டிற்குத்தான் தெரிந்தது. இதற்குச் சில காரணங்களைக் குறிக்கலாம்.

1950–இல் வேலூரில் பொங்கல் விழா நடைபெற்றது. விழா நிகழ்ச்சிக்கு முன் நடந்த உரையாடலில் மயிலை சிவமுத்து, சென்னைக்காரரான தனக்கு நெய்தல் நிலம்தான் பிடிக்கும் என்றார். கந்தசாமிப் பிள்ளை, தஞ்சைக்காரரான தனக்கு மருதநிலம்தான் பிடிக்கும் என்றார். சேலத்துக்காரரான ஒருவர் தனக்குக் குறிஞ்சி நிலம்தான் பிடிக்கும் என்றார். பாவேந்தரோ தனக்குத் தமிழ்நிலம்தான் பிடிக்கும் என்றார். இந்நிகழ்ச்சி பாவேந்தரின் குருதியில் தமிழுணர்வு தோய்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

பாவேந்தரின் பேச்சும் தமிழ்; மூச்சும் தமிழ்; உடலும் தமிழ்; உயிரும் தமிழ்; எழுத்தும் தமிழ்; இசையும் தமிழ்; இயக்கம் அனைத்துமே தமிழ்; அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் ஓரிரவை ஒரே இரவில் இயற்றியதைப்போல் தமிழியக்கதைப் பாவேந்தரும் ஒரே இரவில் படைத்தார். பிறர் தமிழைப் பயன்கொண்டு பாடினர். இவர் தமிழையே பாடினார்.

வானத்திற்கும் ஒளிக் கதிரவனுக்கும் உள்ள தொடர்புபோல், கூர்வாளுக்கும் படை வீரனுக்கும் உள்ள உறவு போல், நறுமணத்திற்கும் வண்ணப் பூவிற்கும் உள்ள நெருக்கம்போல், இன்னிசைக்கும் மகரயாழுக்கும் இருந்த இசைவுபோல், நல் ஒளிக்கும் கண்ணுக்கும் இருந்த தொடர்புபோல், கன்னல் தமிழுக்கும் பாவேந்தருக்கும் தொடர்பு இருந்தது.

பாவேந்தரே தமிழாக இருப்பதால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்,

அடலேறு மொழித் தமிழே! இன்பக்
கடலேறு மலைத் தமிழே! சோலை
மடலேறு சுவைத் தமிழே! நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக் கின்றாய்
– வணங்குகின்றேன்"

என்று கவியரங்கில் பாடினார்.

தமிழியக்கக் காதலாலே முட்டைக்குள் புலிக்குஞ்சைப் பொரித்தான் என்று கவிஞர் குடியரசு இவரைப் பற்றிப் பாடினார். (தமிழரசு 1–5–90).

"புலவர் தமிழைப் பொதுமக்களின் தமிழாகப் பாடினார். பக்தி இயக்கம் போல் தமிழ் இயக்கம் கண்டார். இவரது புரட்சி மனம் தமிழில் முளைத்துச் சமூகத்தின் பிற துறைகளுக்கும் கிளைத்தது. தமிழுக்கு ஊறு என்றால் உயிர் கொடுத்தேனும் காக்க வேண்டும் என்று முழங்கினார்" என்று சாலை இளந்திரையனார் பாவேந்தரின் தமிழ் உணர்வைச் சிறப்பித்துள்ளார்.

தமிழை முதன்மையாக நினைத்த பாவேந்தர், இயற்கை தோன்றியபோது தமிழ்மொழியும் தோன்றியது. எல்லா மொழிகளுக்கும் முதன்மையாகத் தமிழ் தோன்றியது. மூவேந்தரால் வளர்க்கப் பெற்ற தொன்மையது என்று அதன் தொன்மையை விரித்துக் கூறினார்.



இயற்கை தோன்றிய அன்று, தமிழன தோன்றினான். தமிழும் தோன்றியது என்பது பாவேந்தரின் சிந்தனை விளக்கம்.

"புனல் சூழ்ந்து வடிந்துப் போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங் கூழ்மு ளைத்தே
வகுத்தது; மனித வாழ்வை
இனியாற் றமிழே நீதான்"

– என்று தமிழின் தொன்மையை எடுத்துரைத்தார்.

இயற்கைப் பொருட்களுடன் தோன்றிய தமிழை,

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்"

என்று பெருமிதத்துடன் பாடினார்.

தமிழின் இனிமையைக் கவிஞர்கள் சொல்லிச் சொல்லி இன்புற்றனர். தமிழ் விடு தூதின் ஆசிரியர்

"தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே யென் முத்தமிழே புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே"

– என்று தமிழின் சுவையை எடுத்துரைத்துள்ளார்.

அவருக்குப் பின்னர் தோன்றிய பாரதியார்,

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டான்
இங்கமரர் சிறப்புக் கண்டார்" – என்றும்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்றும் பெருமிதத்துடன் கூறினார்.

அவருடைய தாசராகிய பாவேந்தர், தமிழ் என்ற சொல்லை நினைக்குந்தோறும் உச்சரிக்குந்தோறும் மகிழ்ந்தார். தமிழைத் தேனாக உருவகிக்கும் கவிஞர், நயம்பட,

"தமிழ் 'படித் தேன்' அதை உண்ணத்தான்
தமிழ் படித்தேன் நான்" (இளைஞர் இலக்கியம் ப.11)

– என்று இளைஞர்கள் தமிழின் சுவையை உணரும் வண்ணம் சுவையாக எடுத்தியம்பிப் படிக்கத் தூண்டினார்.

தமிழ்மொழியைப் போல் இனிமையுடைய மொழி வேறு எங்கும் கிடையாது என்று பெருமிதம் உற்றார் பாவேந்தர்.

"தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை"

– என்று பெருமிதத்துடன் மொழிந்தார்.

தமிழின் இனிமைபை–சுவையைக் கழைக்கூத்தாடியின் மூலம் பாவேந்தர் நயம்படத் தெளிவாக்கியுள்ளார். கழைக்கூத்தாடி ஒருவன் எலும்புக் கூட்டின் மேல் மருந்து தடவி உயிர்ப்பிக்க விரும்புகிறான். அந்த எலும்புக்கூடு வேறெதுவுமில்லை. தமிழ்நாடு தான். அது உயிர்ப்புறவும், விழிப்புறவும் எழுந்து நடமாடவும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் செய்வதற்கு எத்தகைய மருந்து, எவ்வாறு செய்யப்படுகிறது? என்று விளக்க வரும் கவிஞர், தான் விரும்பிய இனிமையான பொருட்களெல்லாம் சேர்த்து செய்யப்பட்டது என்றார். "மாம்பழம், ரஸ்தாளி, பலாச்சுளை, பிழிந்த சாறும், தேன்பால், இளநீர், வழுக்கை, இடித்த தினை மா, பொடித்த பருப்பு ஆகியவற்றைக் கலந்து இளஞ் சூடாக்கிப் பக்குவப்படுத்தினால் கிடைக்கும் மருந்தாம் அது. அந்த மருந்து எத்தகையதாம்? கழைக்கூத்தாடியின் பேச்சால் குறிக்கிறார் கவிஞர்.

"உள்ளே தொட்டால் உசிரில் இனிக்கும்
தெள்ளு தமிழ் தெள்ளுதமிழ் இதுதான்"

– என்றார். இந்த மருந்தை நினைக்கும்போது நம் உயிரும் இனிக்கத்தான் செய்கிறது.

இயற்கையிலிருந்து கிடைக்கும் இனிமை எல்லாவற்றையும் விட, தமிழ் இனிமையுடையது என்பது கவிஞரின் கருத்து.

"கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்"

– என்று பாவேந்தர் இனிமையுடைய பொருள்கள் அனைத்தினும் தமிழ் இனிமையுடையது என்றார்.

பாவேந்தரின் தமிழுணர்வு வியத்தற்குரியது. தமிழ் இன்பத்தில் தோய்ந்த அவர், தமிழின் இனிமையை அனைவரும் நுகர விரும்பினார். தமிழின் தொன்மையை அறிவுறுத்தி, தமிழர்கள் தங்கள் மொழியை அறிய – விரும்ப, வழிவகுத்தார். தமிழியக்கம் தோற்றுவித்து தமிழ் உயர வேண்டும் என விரும்பினார்.

★ ★ ★

பொங்கல் போற்றுவோம்!

- இளைய அருணா

ஆனைகட்டிப் போரடிச்சது மறந்து போச்சுதே
அம்பாரமா வைக்கப்போரு குறைஞ்சு போச்சுதே
காவாயிலே எந்தநாளும் துள்ளும் மீன்களைக்
கையினாலே அள்ளிக்கொண்ட காலம் போச்சுதே
துள்ளும்காளை அடக்கிநாளை வெற்றி கண்டுமே
தோளுயர்த்தும் ஆம்பளைக சுருங்கிப் போச்சுதே
பொம்பளைங்க கண்டாங்கியை மறந்து விட்டாங்க
பாம்படங்க காதில்மின்னும் நெலை மறந்தாங்க
அம்பாரியா நெல்குவிச்சு உரலில் குத்திடும்
உடல்உழைப்பு மறந்துபோச்சு ஓடி ஓடியே
வியர்வைசிந்திக் களையெடுக்கும் காலம் போச்சுதே
தலையைப்பின்னித் தாழம்பூவைத் தளுக்காய்ச் சூடிய
தன்மையெல்லாம் எங்கே போச்சு? இங்கே காணமே?
பிணையடிச்சு சூட்டுநெல்லு வீடு சேர்த்திடும்
பொழப்புஎல்லாம் பறந்தேபோச்சு தலை தெறிக்கவே
ஓடும்காலம் மாறுமுண்ணு நியதி யாச்சுதே
ஓய்வுஇன்றி சிறகடிக்கும் காலம் ஆச்சுதே
ஆடும்மாடும் விடைபெறுகிற காலம் வந்ததே
அனைத்துக்குமே மிஷினுஎன்ற கோல மாச்சுதே
காரியங்கள் யாவினுக்கும் கை கொடுத்திடும்
கவலைநீக்கக் கரம் உயர்த்தி வியர்வை சிந்தியே
சூரியனைக் கும்பிடுவோம் சுபிட்சப் பொங்கலாய்
சோம்பலின்றி வாழ்ந்துநாளைப் பொங்கல் போற்றுவோம்!



இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தரும் இனிய நினைவுகள்

இரா. கோதண்டராமன்

இன்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கும் முன்னதாகவே, அதாவது 1967—இல் தமிழகத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தித் தத்தளிக்கச் செய்த சம்பவங்கள் இரண்டே இரண்டுதான்!

ஒன்று தமிழகத்தின் பொற்காலம் உதயம் ஆனதன் அறிகுறியாக அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இது ஜனநாயகத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று நாடே உற்சாக வெள்ளத்தில் மிதந்தது.

அதுபோலவே நமது உள்ளங்களில் ஆயிரம் ஆயிரம் மகிழ்ச்சி நீருற்றுக்களைப் பீறிட்டெழச் செய்து நம்மைப் பெருமிதம் கொள்ளவைத்த இன்னொரு நிகழ்ச்சித்தான், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு.

இது முதல் முதலாகத் தமிழகத்தில் உலகளாவிய தமிழ் மாநாடு என்பதும் தலைநகராகிய சென்னையிலேயே இது கொண்டாடப் பெற்றது என்பதும் இதற்குரிய தனிச்சிறப்புகளாகும்.

பிற்காலத்தில் இரண்டு முறை இதுபோன்ற மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. எனவே, அவற்றிற்கு இந்த மாநாடு வெறும் முன்னோடி என்று கொள்வதற்கில்லை. இது மகத்துவம் வாய்ந்தது. இத்தனை ஆரவாரமாய் நடைபெறும் என்று அதன் நிதர்சனம் விசுவரூபம் எடுத்தபோது நம் நெஞ்சில் எட்ட முடியாத உயரத்துக்கே போய்விட்டது. இன்பத் தேன் ஓடும் தமிழ் மாநாடு என்று இசைபாட வைத்தது. தமிழ் உணர்வைத் தூண்டா விளக்காய் ஏற்றி வைத்த அதன் கோலம் தெரிந்தது. மிகத் துல்லியமாகத் தெரிந்தது. எல்லோரது இதயங்களிலும் பதிந்துபோகும் அளவிற்கு!

பார்த்தவரை ஈர்த்துப் பரவசப்படுத்தும் நிகழ்ச்சிகள். எண்ணத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சிகள்! ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு முத்துச்சுடராய் ஒளிர்ந்தபோது இந்த சமுதாயம் தமிழோடு நெருங்கி வந்தது. இன்னும் சொல்லப் போனால் விழியுயர்த்தி அதன் வெளிச்சத்தைப் பார்த்ததும் மலைத்துப் போய் வசம் இழந்து நின்றது!

பொதுவாக மூன்று முறை இம்மாநாடு நடத்தப்பட்டதென்றால், முதலில் நடந்த மாநாட்டை விஞ்சும் வகையில் அடுத்த மாநாடு அமையும் சாத்தியக்கூறு உண்டு. அதற்கும் அடுத்த மாநாடு முந்தைய இரண்டு மாநாடுகளையும் விட சிறப்பும் செம்மையும் பெற்று விளங்கிடக் கூடும். இது பரிணாம வளர்ச்சிப் போல! ஆனால் என்ன காரணத்தினாலோ அப்படி அமையாமல் போனது. இதில் நிச்சயம் ஊமைக் காரணங்கள் ஒளிந்திருக்கின்றன. அதைவிட ஒரு தத்துவமும் இழையோடி நிற்கிறது. உலகின் புவியீர்ப்பு சக்தியின் இயக்கம் வேறு வேறு மையங்களுக்கு ஏற்ப வேறு வேறாய் மாறுபட்டு விடுகிறது! அதுபோலவே உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பும் மாட்சியும் அது நடந்தேறிய இடங்களுக்கும் காலங்களுக்கும் ஏற்ப மாறுபட்டு இருக்கிறது.

அதனால்தான் சென்னையில் இதன் போக்கில் இருந்த அதே பொலிவு அடுத்த இடத்தில் குன்றியிருக்கக் கூடும். மதுரையில் தெரிந்த அதன் பாங்கு தஞ்சையில், சரிந்திருக்கக் கூடும். எதனால் இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு மிகப்பெரிய வெற்றி கண்டது என்பதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். இரும்பை உருக்கி வார்ப்பதற்கு உலைக்களம் மட்டும் போதாது. அதற்குமேல் அதைத் திருத்தி வடிவமைக்க திறம் வாய்ந்த கொல்லர்கள் தேவையல்லவா? அவர்கள்தான் அண்ணாவும், கலைஞரும்.

அவர்களைப் பற்றி சொல்ல நினைப்பது பச்சைக் கிளிக்கு வர்ணம் பூச முயல்வது போல என்றாலும் கலைஞர் பற்றிச் சிலவற்றை நினைவுகூர்வதில் தவறில்லை.

கலைஞர் என்றால் —

எத்தனையோ சாதனைகளைத் தமக்குள் குவித்து வைத்திருக்கும் பொன்னேடு! இளமையின் கனவுகளையும், துடிப்புகளையும் விரைந்து செயல்படுத்தித் தன்னை வைகறையிலேயே அடையாளம் காட்டிக் கொண்டவர். ஏதோ, கவிதைப் படைப்பிலும் புத்தக வெள்ளியீட்டிலும் கிட்டும் ஊசிமுனை அறிமுகம் அல்ல — சற்று பிரமிப்பூட்டும் வல்லமை.

உந்துதல் வந்தால் என்றில்லை. உணர்வு பூர்வமாய் வார்த்தைகள் தெறித்து விழுவதில் விளைந்த முன்னேற்றம் அவர் 'கவிதையல்ல' என்றாலும் அது கவிதையாகிவிடும். அவர் நிகழ்வுகளைத் தொடுத்துத் தந்தால் — அது சிலிர்க்க வைக்கும் சிறுகதை ஆகிவிடும். வெள்ளித் திரையின் வீர வசனங்கள் பலரைத் துள்ளி நிமிர வைத்து விடும். இந்த எண்ணங்களின் பின்னணியும் காரணங்களும் தான் மாநாட்டு முழுப் பொறுப்பையும் அண்ணாவால் கலைஞரிடம் ஒப்படைக்க வைத்தன.

முதலில் கவிதைப்போட்டி அறிவிக்கப் பெற்றது. வந்து சேரும் கவிதைகளை ஆராய ஒரு கவிதைக் குழு ஏற்படுத்தப்பட்டது.

கருத்தரங்கில் சமர்பிக்க ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்பட்டன. அதற்கென்று புலவர் குழு கூடிற்று. இவை தொடர்பான வேலைகளை அகவேலைக் குழு கவனித்துக் கொண்டது.

அகவேலைக் குழுவுக்குரிய பணிகள் எவை எவை என்றும் புறவேலைக் குழுவுக்குரிய வேலைகள் என்ன என்ன என்றும் சிலம்பொலி செல்லப்பனார் பங்கிட்டுத் தந்தார்.

ஏனைய வேலைகளில் உருவச் சிலை அமைத்தல், ஊர்வலம் ஏற்பாடு செய்தல், மலர் வெளியிடுதல்

ஆகியவற்றைத் தலைமையகம் ஏற்றுக் கொண்டது.

எங்கும் ஒளிமயம், எதிலும் கைவண்ணம் என்று தீவுத் திடலைக் கோலாகலமாக்கிட நீல நாராயணன், சூளைபாலன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சி தொடங்குவதற்குமுன் தமிழ்ச்சுடர் ஏந்தி திருச்சியில் இருந்து ஓடி வந்தே கொடுப்பதற்கு மாணவர்கள் ஒப்புதல் தந்தனர்.

தமிழ்ப்பணியில் ஊக்கம் காட்டியவர்கள், இந்த வாய்ப்பு தமிழுக்குச் சேவை செய்வதற்கென்றே தரப்பட்ட அங்கீகாரம் என்ற உணர்வோடு தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் அலுவலக வேலையில் பம்பரமாய்ப் பணியாற்றினர்.



சென்னை நகரே விழாக்கோலம் பூணும் அளவுக்கு எல்லா வகையிலும் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. நமது கற்பனைகள் அனைத்தையும் ஒன்று திரட்டி குறிப்பிட்ட ஒரே இடத்தில் மட்டும் என்றில்லாது சென்னை மாநகரெங்கும் சித்திரங்களாகி உருவெடுத்து மிளிறி வைத்தோம்.

ஆரவாரமும் குதூகலமும் நிறைந்த சாலைகளும், ஆங்கு விதம் விதமான விளக்கொளிகளும், அவற்றின் விநோதமான நிழல்களும், காற்றில் மிதந்து வரும் மெல்லிசை ஒலியும், தோமறு கோட்டியும், தோரண வாயில்களும், அலங்கார வளைவுகளும், தீவுத்திடலின் கோலாகலங்களும்....

எல்லாம் ஒரே குரலில் "மாநாடு என்றால் இதுதான் மாநாடு" என்று நம்மை உரத்து சொல்ல வைத்தன.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல முதல்நாள் ஊர்வலம் அனைவரையும் ஒரு கணம் கண்களை நிறுத்திக் கட்டிப்போட்டது.

மௌண்ட்ரோடை அடைத்தது போல பத்தடி இடைவெளி விட்டு ஒரு படை வீதம் ஏராளமான படை அணிவகுத்து அசைந்து வந்த காட்சி இதுவரை இந்த தலைநகரம் கண்டிராத ஊர்வலம். தட்டிவிட்ட குதிரை தடங்கல் இன்றி தலைநிமிர்ந்து செல்லும் தோரணை, வெண்ணெய் நிறத்தில், கடல் நீலத்தில் என்று வண்ண வண்ணச் சீருடைகள்!

அலை அலையாய் கரங்களை நளினமாய் அசைப்பதில் கையாண்ட புதியபாணி, சங்கீத லயத்தின் பிரக்ஞையோடு பழகிய

பாதங்கள். ஒளிவெள்ளத்தில் ஊர்ந்து வந்த ஜாலம், இவை காண்போரைப் புல்லரிக்கச் செய்தன. அவர்கள் இப்படி நிர்ணயம் தவறாமல் நடைபயிலவும் அடிபெயர்க்கவும் அதை மேடை மீது அமர்ந்து பார்த்திருந்த குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேனும் நம் தமிழரசுத் தலைவர் அண்ணாவும் பிரமிப்புடன் பார்த்தார்கள்.

நடைபெறுகிற ஒவ்வொரு ஊர்வலமும் இப்படி நிரந்தரமாய் நெஞ்சில் பதிந்துவிடுமா, என்ன? அல்லது உலகமே வியந்து மெச்சவும் அந்த வியப்புகாலம் முழுவதும் நிலைத்து நிலவவும் அமைந்திடுமா?

இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் முத்திரை பெற்ற நிகழ்ச்சியே இந்த மெய்சிலிர்க்கும் ஊர்வலமும் **கலைஞரின்** வர்ணனையும்தான். தரத்திலாகாட்டும் — பரிமாணத்திலாகாட்டும், ஏன், மேற்கத்திய நடனம் போல பிரத்யோகத் துடிப்பு குலையாமல் அவர்கள் நடந்து வந்த புதிய நிலை கூட அதுதான் ஒயில் கூட்டிற்று என்பதைப் புலப்படுத்தும்.

இதற்கப்புறம்தான் மற்றைய நினைவுகள். மாலை நேரங்களில் வந்து குவிந்து கிடக்கும் கவிதைகளை இருபது முப்பது பேராசிரியர்களுடன் ஆய்வு நடத்தும் மாபெரும் தமிழ் அறிஞர் ம.கி. தசரதனார், மாநாட்டு மலருக்கான கட்டுரைகளைத் தேர்ந்தெடுக்கும் சிலம்பொலி செல்லப்பனார் அன்றாட நிகழ்ச்சிகளை விவாதித்துக் கொண்டிருக்கும் திரு. கி. வெங்கடசுப்ர மணியனார், முரா. பெருமாள் முதலியார், கோ. முத்துப் பிள்ளை முதலானோர். தீவுத்திடலில் பணிகளுக்கான கடிதங்களைத் தீட்டும் புறவேலைக்குழு இவர்களின் உழைப்பில் மாநாடு மனம் பரப்பிற்று. அழைப்பிதழ்களானாலும் அவசரக் கடிதங்களானாலும் அலுவலக ஊழியர்கள் நள்ளிரவில் கூட அதைக் கொண்டு சேர்ப்பித்தனர்.

ஊர்வலம் முடிவுற்றபோது, அதுவரை மூச்சுத் திணற நின்றிருந்த நிலைமாறி ஆறுதலாய் கைகளை வீசிப்பார்த்துக் கொண்டிருந்தபோது, "பிரமாதம்.. ஆனால் ஆச்சரியம் பாருங்கள், இந்த நெரிசலில் ஆயிரம்விளக்கு பகுதி வரை அலைபாய்ந்த கூட்டத்தில் நல்லவேளை ஒருவர் கூட மிதிபடவில்லை" என்றார் ஒரு பத்திரிகை நிருபர்.

அன்று மட்டும் தொலைக்காட்சி இருந்திருந்தால் அந்த ஊர்வலத்தையும், கருத்தரங்கையும் ஊரே பார்த்து ரசித்திருக்கும். அன்றாடம், தீவுத்திடலில் நடைபெற்ற நாடகம், நடனம், நையாண்டி மேளம், ஒயிலாட்டம், கரகாட்டம் என்று பல நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்திருக்க முடியும். நாட்டியப் பேரொளி பத்மினியின் நடனத்தையும் பார்த்திருக்கலாமே!

கடைசியாக ஒன்று! வெளிநாட்டில் இருந்து வந்த தமிழர்கள் மெத்தவும் நெகிழ்ந்தே போனார்கள். நம்மிடம் நேசத்தோடு அளவளாவி அன்பைப் பொழிந்தார்கள். தாங்கள் கற்பனை செய்திருந்த கோலத்துக்கும் மேலாக அவர்களுக்குத் தரப்பட்ட உபசாரம் அவர்களை மோவாயில் விரல் வைத்து ஆச்சரியம் காட்ட வைத்தது.

மொத்தத்தில் இந்த மாநாட்டுக்கு நிகரான ஒன்று எதுவும் இல்லை! இது முத்தை நறுந்தமிழைத் தமிழன் மூச்சென்று கொள்ளானோ என்னும் அளவுக்கு அனைவரையும் தமிழ்ப் பற்றுக் கொள்ளச் செய்யும் மாநாடு எவர் மீதும் எதன் மேலும் பிடிப்பு இல்லாமல் வாழ்ந்தவர்களுக்கும் தமிழ் மீது தனிமோகம் கொள்ளச் செய்ததே இதன் வெற்றிக்குச் சான்றாகும். ★

> **ஒவ்வொரு தேசமும் சுய இராஜ்யத்தைக் கருதித் தனியாக வாழ விரும்புவதைப் போன்று, ஒவ்வொரு சாதியும் சுய இராஜ்யம் கருதித் தனியாக வாழவே விரும்புகின்றது.**
>
> **— அம்பேத்கர்**

இந்த மாதத்தில்...

ஜனவரி 1

கி.மு. 45 ஜூலியஸ் சீஸர் செய்த காலண்டர் சீர்திருத்தத்தின் படி 365 நாட்கள் கொண்டது ஒரு ஆண்டு என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி ஜூலியஸ் காலண்டரின் முதல் பிறந்தநாள். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அவரது மறைவிற்குப்பின் இம்முறையை கடைப் பிடிப்பதில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக ஒவ்வொரு பிப்ரவரிக்கும் 30 தேதிகள் இருந்தன.

கி.பி. 1842 சென்னையில் புதிய கலங்கரைவிளக்கம் அமைக்கப்பட்டது.

1942 வாஷிங்டனில் 26 நாடுகள் கூடி "ஐக்கிய நாடுகள்" என்ற அமைப்பை அறிவித்த நாள்.

1948 ஜெனீவாவில் 1947ஆம் ஆண்டு 23 நாடுகள் கூடிப் பேசிக் கையெழுத்திட்ட உடன்படிக்கையின்படி அமைக்கப்பட்ட "பொது வாணிபக் காப்பு வரி ஒப்பந்தம்" (General Agreement on Trade and Tariff) இன்று முதல் நடைமுறைக்கு வந்தது. நாடுகளிடையே வர்த்தகம் செய்வதிலுள்ள இடர்ப்பாடுகளைக் குறைப்பது, குறிப்பிட்ட காப்புவரிச் சலுகைகள், இறக்குமதி, ஏற்றுமதியில் ஒதுக்கீடுகள், முறையற்ற வாணிபப் போட்டிகளைத் தவிர்ப்பது முதலானவை இதன் நோக்கமாகும்.

ஜனவரி 2

1930 லாகூரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் ஜனவரி 26ஆம் தேதியைக் குடியரசு தினமாகக் கொண்டாட வேண்டுமென்ற தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டது.

ஜனவரி 3

1588 பஞ்சாபில் அமிர்தரசிலுள்ள பொற்கோயிலைப் பற்றி எல்லோரும் கேள்விப்பட்டிருக்கலாம். இதற்கு அடிக்கல் போடப்பட்டது இன்று தான். இக்கோயிலைக் கட்ட அடிக்கல் நாட்டியவர் மியான்மிர் எனும் முஸ்லீம் துறவி.

1968 இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் மிகக் கோலாகலமாக இன்று துவங்கியது. மாலையில் நடந்த அலங்கார ஊர்திகள் ஊர்வலத்தைக் குடியரசுத் தலைவர் ஜாகிர் ஹூசேன் துவக்கி வைத்தார்.

ஜனவரி 4

1948 பர்மா குடியரசு மலர்ந்தது. பிரிட்டிஷ் காமன்வெல்த்துடன் எவ்விதத் தொடர்புமில்லாத தனிக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஸாவோ ஷியூ தாயிக் என்பவர் ஜனாதிபதியாகத் தொடர்ந்து பதவியிலிருந்தார். தாகின் நூ பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார். தொழில்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

ஜனவரி 5

1925 அமெரிக்காவில் வையாமிங்கைச் சேர்ந்த திருமதி. நெல்லி டெய்லோ ராஸ் முதல் பெண் கவர்னராகப் பதவி ஏற்றார்.

ஜனவரி 6

1939 பெர்லின் கெமிக்கல் இன்ஸ்ட்டிடியூட்டைச் சேர்ந்த பேராசிரியர் நட்டோஹான் என்பவர் அணுவைப் பிளக்க முடியுமென்று அறிவித்தார்.

ஜனவரி 7

1927 கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் விமானப் போக்குவரத்து இம்பீரியல் ஏர்வேஸ் கம்பெனியால் லண்டனிலிருந்து கெய்ரோவிற்குத் துவங்கப்பட்டது.

ஜனவரி 8

1889 தகவல் தொகுப்பு நிகழ்ச்சி நிரலுக்காக வடிவமைக்கப்பட்ட முதல் கம்ப்யூட்டர் காப்புரிமம் செய்யப்பட்டது. நியூயார்க்கைச் சேர்ந்த டாக்டர் ஹெர்மன் ஹொல்லரிக் என்பவர் இதை வடிவமைத்தார். மக்கள் தொகைக் கணக்கீட்டின் முடிவுகளை அறிவிக்க மின் சக்தியினால் இயக்கப்படும் "மாதிரி கம்ப்யூட்டரை" அவர் தயாரித்தார். இந்தக் கம்ப்யூட்டர், அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கீட்டுக் குழுவிற்காகத் தயாரிக்கப்பட்டது.

ஜனவரி 9

1811 ஸ்காட்லாந்தில் பெண்கள் கோல்ஃப் விளையாட்டு முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது.

1929 டாக்டர் அலெக்ஸாண்டர் ஃபிளெமிங் முதன்முதல் தனது உதவியாளரான ஸ்டூவர்ட் கிராட்டாக் என்பவருக்கு பென்சிலின் மூலம் சிகிச்சை அளித்தார்.

ஜனவரி 10

1863 இலண்டனில் பாதாள ரயில் பாதை ஃபாரிஸ்டன் தெருவிற்கும் பாட்டிங்டனுக்குமிடையே திறந்து வைக்கப்பட்டது.

ஜனவரி 11

1955 நமது நாட்டின் முதல் நியூஸ் பிரிண்ட் ஆலையான "நேபா" உற்பத்தியைத் துவக்கியது.

ஜனவரி 12

1979 கான்பூரில் தொலைக்காட்சி நிலையம் துவங்கப்பட்டது.

ஜனவரி 13

1921 மழை பெய்யும் போது காரின் முகப்புக் கண்ணாடியில் வழியும் மழை நீரைத் துடைத்துவிடும் விண்ட்ஸ்கிரீன் வைப்பர் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜனவரி 14

1953 யூகோஸ்லேவியாவின் முதல் ஜனாதிபதியாக மார்ஷல் டிட்டோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1986 முதல் இந்திய தலைமைத் தளபதியான கே.எம். கரியப்பாவிற்கு பீல்ட் மார்ஷல் பதவி அளிக்கப்பட்டது.

ஜனவரி 15

1949 ஜெனரல் கே.எம். கரியப்பா இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாகப் பதவி ஏற்றார். இப்பதவிக்கு வந்த முதல் இந்தியர் இவரே. எனவே இந்த நாள் படையினர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

ஜனவரி 16

1909 தென் துருவமான அண்டார்ட்டிகாவின் காந்தப் பகுதிக்கு 88°23' அருகில் வரை சர். எர்னஸ்ட் ஹென்றி ஷாக்கிள்ட்டன் சென்றடைந்தது இந்த நாளில் தான்.

ஜனவரி 17

1981 மிஸோராம் தனி மாநிலம் உதயமானது.

ஜனவரி 18

1949 கம்யூனிஸ்ட் நாடுகளிடையே பொருளாதார வாணிப வளர்ச்சிக்காக மாஸ்கோவில் 'காம்கான்' (Comcon) எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

ஜனவரி 19

1956 நமது நாட்டிலுள்ள இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் தேசிய உடைமையாக்கப்பட்டது.

ஜனவரி 20

1972 அருணாசல பிரதேசம் தனி மாநிலமாக உருவானது.

ஜனவரி 21

1954 அணுசக்தியினால் இயங்கும் 'நாட்டிலஸ்' எனும் அணு நீர் மூழ்கிக் கப்பலை அமெரிக்கா வெள்ளோட்டம் விட்டது.

ஜனவரி 22

1960 பஸிபிக் மாகடலில் மிக ஆழமான பகுதியான 'மாரியானா அகழி'யின் தரைப் பகுதியை 'டிரைஸ்ட்டி' எனும் முக்குளிப்புக் கோளத்தில் ஜாக்யூஸ் பிக்கார்டும் டோனால்ட் வால்ஷும் சென்றடைந்தனர். இப்பகுதி 35,800 அடி ஆழமுடையது. அதாவது 10.7 கி.மீ. ஆழம். அங்கு இவர்கள் 20 நிமிடங்கள் இருந்தனர்.

ஜனவரி 23

1965 துர்க்காபூர் இரும்பு எஃகு தொழிற்சாலை துவங்கப்பட்டது.

ஜனவரி 24

1950 சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக பாபு ராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவின் தேசியகீதமாக 'ஜனகணமன' அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 25

1983 கலிபோர்னியாவில் வாண்டன்பர்க்கிலிருந்து "இராஸ்"(IRAS) எனும் அகச்சிவப்பு வானியல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது. புவியை 300 நாள்களாகச் சுற்றி வந்த இது ஏராளமான புதிய தகவல்களைத் திரட்டிக் கொடுத்துள்ளது.

பூமிதான இயக்கத்தலைவர் வினோபாவிற்கு "பாரத் ரத்னா" விருது வழங்கப்பட்டது.

ஜனவரி 26

1862 இந்தியாவில் தபால் தந்தி முறை அறிமுகம் செய்யப்பட்டது.

1950 இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இந்திய ஜனநாயகக் குடியரசு உதயமானது.

பாபு ராஜேந்திர பிரசாத் இந்தியக் குடியரசின் தலைவராகப் பதவி ஏற்றார்.

இந்திய அரசின் சின்னமாக சிங்கங்கள் கொண்ட அசோகச் சின்னம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஜனவரி 27

1921 கல்கத்தா பாங்க், பம்பாய் பாங்க் முதலான பாங்குகள் ஒன்றிணைக்கப்பட்டு 'இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா' உருவானது.

ஜனவரி 28

1988 நம்நாட்டில் தொலைபேசி வசதி ஏற்பட்டு 100 ஆண்டுகள் நிறைவுற்றதை நினைவூட்டும் வகையில் 2 ரூபாய் மதிப்புடைய தபால் தலை வெளியிடப்பட்டது.

ஜனவரி 29

1780 ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கே என்பவரால் 'தி பெங்கால் கெஸட்' எனும் வார இதழ் கல்கத்தாவில் துவங்கப்பட்டது. ஆங்கிலத்தில் வெளிவந்த இது இந்தியாவின் முதல் வார இதழாகும்.

ஜனவரி 30

1948 தேசப்பிதா காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட நாள். இந்த நாள் தியாகிகள் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது. சர்வோதய தினமாகவும் கடைபிடிக்கப்படுகிறது.

ஜனவரி 31

1958 அமெரிக்காவின் முதல் செயற்கைக்கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது. புவியைச் சுற்றி 'வான் ஆலன் பெல்ட்' கதிர்வீசல் இருப்பதை இந்தக் கோள் கண்டுபிடித்தது.

ஆதாரம் : ***"இந்த நாளில் அன்று" நாலிலிருந்து...***

மனிதம் பேணுக

கவிஞர் தா. பகவதி

உலகம் வியத்தகு நாடக மேடை
உலவும் மாந்தரே உருவக பாத்திரம்

நல்லார் சிலபேர் அல்லர் சிலபேர்
நல்லவை அல்லவை அறியாச் சிலபேர்

நாளும் எங்கும் எழும் போராட்டம்
நாடும் வீடும் நடுங்குவ தறிக

நான் எனும் எண்ணமே காரணம் என்க
நாம் எனக் கொள்க நலமது விழைக

நல்ல மனத்துள் விளைவது மனிதம்
நயத்தகு வாழ்க்கை நம்பும் தத்துவம்

பிறர்மனம் நோகாப் பெற்றினைப் பெறுவது
பேதம் அற்றது பேராற்றல் மிக்கது

நல்லவை செய்ய இயலா ததும்
அல்லவை செய்யா அறவழி காண்பது

நம்மிடை உள்ள நுண்பொருள் அறிக
நோக்கம் நலமெனில் அனைத்தும் நலமே

அன்பும் அறிவும் ஆள்வினை ஊக்கமும்
அருளும் அடக்கமும் அரிய ஒழுக்கமும்

பொறுமையும் பண்பும் போதிய நாணமும்
பொலிவுடன் வாழப் போதுமென் [illegible]

இதுவே மனிதம் இதுவே புனிதம்
இதுவே உலகின் இன்றைய தேவை

எனவே நீவிர் மனிதம் பேணுக
இனிய வாழ்க்கையின் எல்லைகளை தொடுக

வள்ளுவரின் அறிவியல்



ஆரூர்தாஸ்

“பூமி தட்டை வடிவமானது! ஒரு முனையிலிருந்து மறுமுனை தட்டையான (Flatness) தோற்றங்கொண்டது!”

பதினைந்தாவது நூற்றாண்டுவரையில், உலகில் நிலவியிருந்த இந்தக் கருத்தைப் பொய்யாக்கி, “பூமி உருண்டை வடிவமானது! அது தனக்குத்தானே சுழன்றவண்ணம் சூரியனையும் சுற்றி வருகிறது. ஆகவே உலகில் ஒருவன் புறப்பட்டுச் சென்ற இடத்திற்கே மீண்டும் வந்து சேர்வான்!” என்ற உண்மையை முதன்முதலில் சொன்னவர், கி.பி. 1473இல் போலந்து நாட்டில் பிறந்த காப்பர் நிக்கஸ் (Coper Nicus) என்பவர்!

இந்தப் புதிய கண்டுபிடிப்பை அன்றைக்கு எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

காப்பர் நிக்கஸின் இந்தக் கருத்து உண்மைதானா? – சரிதானா? என்று உலகைச் சுற்றிவந்து கண்டறிய மெகல்லன் (Magellan) விரும்பி, அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

இவர் போர்ச்சுகல் நாட்டில் பிறந்து, ஸ்பெயினில் குடியேறியவர்!

இவரது முயற்சிக்கு உதவிபுரிய யாருமே முன் வராத நிலையில், ஸ்பானிஷ் மன்னரான ஐந்தாம் சார்லஸ் மெகல்லனை அழைத்து, உலகம் சுற்றி வந்து, பூமி உருண்டை வடிவங்கொண்டது என்ற காப்பர் நிக்கஸின் கூற்றை மெய்ப்பித்துக் காட்டும்படி கூறி, அதற்கு வசதியாக, உலகப் பெரும் பயணத்திற்குத் தேவையான சாதனங்கள் அமைந்த ஐந்து கப்பல்களை அளித்து அவரை ஆயத்தப்படுத்தினார்!

அவற்றில் ஒரு கப்பலின் பெயர் விக்டோரியா!

கி.பி. 1519ஆம் ஆண்டில் ஒரு நாள்! அது போர்ச்சுகல் துறைமுகத்தின் திருநாள்!

புதிய நிலப்பரப்புக்களையும், பூமி உருண்டை வடிவமானது என்பதையும் கண்டறியும் பொருட்டு, மெகல்லன் ஸ்பெயினின் மேற்குத் திசையிலிருந்து கீழ்த்திசை நோக்கிக் கலங்களைச் செலுத்தித் தனது பெரும் பயணத்தைத் தொடங்கினார்!

பயணத்தின் பாதி வழியில் இருக்கும்பொழுது, தன் இதயத்தில் எரிந்து கொண்டிருந்த சுடர் விளக்கிற்குத் தூண்டுகோலாயிருந்து துணை புரிந்த ஐந்தாம் சார்லஸ் மன்னர் இறந்து, அவரது புதல்வர் ‘இரண்டாம் பிலிப்’ பட்டம் சூட்டப் பெற்றதன் நினைவாக, தான் புதிதாகக் கண்டுபிடித்த ஒரு தீவிற்கு ‘பிலிப்பைன்ஸ்’ என்றும், அப்பெருங்கடல் பகுதிக்கு ‘பஸிஸிக்’ என்றும் பெயர்ச் சூட்டினார்.

‘பஸிபிக்’ என்ற இலத்தீன் மொழிச் சொல்லுக்கு சமாதானம் (Peace) என்று பொருள்!

அதுவே பிற்காலத்தில் ‘பஸிபிக் பெருங்கடல்’ என்று பெயர் பெற்று வழங்கலாயிற்று!

உலகின் முக்கால் பங்குப் பகுதியைக் கடல் வழியாகச் சுற்றி, ‘பூமி உருண்டை வடிவமானது தான்’ என்ற காப்பர் நிக்கஸின் கூற்று (Copa Theory) உண்மைதான் என்று கண்டறிந்த நிலையில், கடைசியாக, ஜாவா, சுமித்ரா, ஜாகர்தா, போர்னியோ ஆகியவற்றை உள்ளடக்கிய ‘இந்தோனேஷியா’ பக்கம் ஒரு புதிய தீவை வந்தடைந்தபொழுது, அங்கிருந்த ஆதிவாசிகள், தங்களுக்கு ஆபத்து விளைவிக்க வந்த யாரோ ஒரு அந்நியர் என்று கருதி, கடல் வீரரும், மேதினி உருண்டைதான் என்ற உண்மையை நிரூபித்த மேதையுமான மெகல்லனைக் கொன்றுவிட்டனர்! சமுத்திரங்களை ஆண்ட சக்ரவர்த்தி சாய்ந்துச் சவமானார்!

மூன்று ஆண்டுகட்குப் பின்னர், 1519இல் புறப்பட்டுச் சென்ற ஐந்து கப்பல்களில் நான்கு புயலுக்கும் இயற்கைச் சீற்றத்திற்கும் பலியாகி ஆழியில் அமிழ்ந்ததுபோக, விக்டோரியா என்ற ஒரே ஒரு கப்பல் மட்டுமே கி.பி. 1522இல் கீழ்த்திசை முகத்திலிருந்து ஸ்பெயினை வந்தடைந்து, ‘பூமி உருண்டை வடிவம் கொண்டு சுழல்கிறது’ என்ற உண்மையை நாட்டோர்க்கு நிரூபித்துவிட்டு நங்கூரம் பாய்ச்சியது! விரிந்து பரந்த உலகமே வியந்து பாராட்டியது!

இந்த வரலாற்று நிகழ்விற்கு ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகட்கு முன்னரே, தமிழகத்தில் வாழ்ந்த திருவள்ளுவர், நெய்தல் வேலை செய்த நேரம் போக மீதி வேளைகளில் ஓலையில் உலகப் பொதுமறையை வரைந்து, 'உலகம் உருண்டை வடிவில் சுழல்கிறது' என்று சொல்லி விட்டார்!

இவ்வரிய அறிவியல் கருத்து 1330 குறட்பாக்களில் ஒன்றாக இடம் பெற்றிருக்கின்றது! அதுவும் உழவுத் தொழிலோடு தொடர்புகொண்டு!

104வது அதிகாரத்தில், 'உழவு' தலைப்பில் 1031வது குறள்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை".

இதில் 'சுழன்றும்' என்ற சொல்லுக்கு சுற்றி அலைந்தாலும் எனப்பொருள் கொண்டு, "உலகத்தினர் வேறு பல் தொழில்களைச் செய்து அலைந்து திரிந்தாலும், உழவுத் தொழிலின் பின்னால்தான் நிற்கின்றனர். அதனால், என்ன துன்பமுற்றாலும் உழவுத் தொழிலே தலையானது – தலை சிறந்தது" என்றுதான் பலரும் தெளிவுரை வழங்கியிருக்கின்றனர்.

பொருளுக்கேற்ப, கருத்திற்கேற்ப, இடத்திற்கேற்ப குறள் வெண்பாவின் ஏழு சீர்களும் தனியே பிரிக்கப்பட்டு, உரை செய்யக் கூடியது என்பதை வைத்து எண்ணிப்பார்க்குமிடத்து, இவ்வாறும் சீர் பிரிக்கப்படலாம்:–

1. சுழன்றும் உலகம் ஏர்ப் பின்னது
2. உலகம் சுழன்றும் ஏர்ப் பின்னது

சுழலும் உலகம் (பூமி) உழவுத் தொழிலின் பின்னே உள்ளது. (அல்லது) என்னதான் உலகம் சுழன்று கொண்டிருந்தாலும், இறுதியில் ஏர்த்தொழிலான உழவின் பின்னால்தான் நிலைபெற்றிருக்கின்றது! இவ்வாறும் பொருள் கொள்ளலாம் அல்லவா! 'ஏனைய தமிழ் நூல்களைப் போன்று, திருக்குறள் வெண்பாவிற்கு இது ஒன்றுதான் தெளிவுரை, விளக்கவுரை; இதனைத் தவிர்த்துப் பிறிதொன்றும் இல்லை' என எவரும் உறுதிபடக் கூற இயலாவண்ணம் அமையப் பெற்றிருக்கும் பெருமை திருக்குறள் ஒன்றினையேச் சாரும்!

அவரவர் கொண்டுள்ள கொள்கைக்கேற்ப, கருத்திற்கேற்ப, தமிழறிவிற்கேற்ப பொருள் வழங்கவல்லது குறள் ஒன்றே! ✪

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப. இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906

தூய பட்டு
தூய சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

பதிவு எண் : M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

நமது அன்றாட
பழக்கவழக்கங்களால்,
எய்ட்ஸ் வராது.

அதற்கு நீங்களே
ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

இந்த இதழில்

கன்னியாகுமரி மாவட்டச் சிறப்பிதழ்

★ தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டுத் தொடக்க விழா... 2
★ நான்காவது தமிழ்... 12
★ தகவல் தொழில்நுட்பத்தில் தமிழுக்கு ஒளிமயமான எதிர்காலம்... 15
★ இணையத்தில் தமிழ்... 17
★ தமிழ் இணையம் 99 முடிவுகள்... 18
★ தமிழ்நாடு முழுவதும் சமுதாய இணைய மையங்கள் முதலமைச்சர் அறிவிப்பு... 20
★ திருவாமூர் சமத்துவபுரம்... 26
★ குடியரசு தின விழா... 31
★ கன்னியாகுமரி மாவட்டம்... [illegible]
★ குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை... 34
★ கண்கவரும் கன்னியாகுமரி... 37
★ வளர்ச்சிப்பாதையில் கன்னியாகுமரி மாவட்டம்... 40
★ மாவட்ட ஆட்சியருடன் நேர்காணல்... 44
★ வேளாண்மை வளர்ச்சி.. 47
★ அழகு மிளிரும் ஆலயங்கள்.. 50
★ குமரி மாவட்டக் குடிநீர்த் திட்டங்கள்... 55
★ சாலை போக்குவரத்தில் சாதனை... 57
★ சமூக நலத்திட்டங்கள்... 58
★ அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்... 59
★ வனவளம் கொழிக்கும் கன்னியாகுமரி... 62
★ மின்வசதி... 63
★ பால் வளம்... 64

திருக்குறள்

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

அறவழியில் நிலையான பயனை விரும்புகிறவர் உடனடிப் பயன் கிடைக்கிறது என்பதற்காக அறவழி தவறி நடக்க மாட்டார்.

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு – 2030
தை – மாசி
பிப்ரவரி 1–15, 1999
மலர் : 30 இதழ் : 15
விலை ரூ.3

முதல் பக்க அட்டையில்
தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு

கடைசிப்பக்க அட்டையில்
குடியரசு தின விழா (26–1–1999)

கிராமப்புற மக்களை இண்டர்நெட்டில் இணைக்கும் சாதனை

- மேதகு ஆளுநர்
செல்வி எம்.பாத்திமா பீவி பாராட்டு

"தொழில்நுட்ப நெடுஞ்சாலையின் ஒருங்கிணைந்த பகுதியாக தமிழை உருவாக்கும் பணியை நிறைவாக்கும் இந்த மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள அமைச்சர்கள், பிரமுகர்கள் மற்றும் வல்லுநர்களை நான் வரவேற்கிறேன்.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தகவல் அளிப்பதை மிகவும் எளிதாக்குதவன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தை ஒட்டு மொத்த வளர்ச்சிக்குப் பயன்படுத்த முடியும். இன்று இண்டர்நெட் உலகில் உள்ள 170 நாடுகளைப் பல்வேறு மொழிகள் பேசுபவர்களை இணைக்கிறது. 1969ஆம் ஆண்டு இண்டர்நெட் அறிமுப்படுத்தப்பட்டதிலிருந்து தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று வருகிறது. 1990ஆம் ஆண்டுகளில் இண்டர்நெட் தனி நபர்களின் பயன்பாட்டுக்கு வந்தது. அதன் மூலம் ஆயிரக்கணக்கானோர் ஒவ்வொரு நாளும் அதில் இணைந்து வருகின்றனர்.

தமிழக அரசுக்குப் பாராட்டு

இம்மாநிலத்தின் விஞ்ஞானப் பாரம்பரியத்தின் மூலம் தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத்தில் முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாநில அரசு தகவல் தொழில்நுட்பத்திற்காகத் தனித்துறையே அமைத்துள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் மனிதவளத்தை பெருமளவில் ஈடுபடுத்தவும், பாரம்பரிய மிக்க கல்வித்துறை சிறப்பைப் பயன்படுத்தவும், தகவல் தொழில் நுட்பத்தில் தீவிரமான வளர்ச்சியை எட்டவும் மாநில அரசு மிகவும் ஆர்வத்துடன் உள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகம் குறையாமல் பராமரித்துவரும் தமிழ்நாடு அரசை நான் பாராட்டு கிறேன். அந்த வகையில் 'தமிழ் இணையம் 99' மற்றொரு பாராட்டுக்குரிய நடவடிக்கையாகும்.

தகவல் தொழில்நுட்பத்தில் தனியார் துறையின் போட்டி மனோபாவத்தின் மூலம் ஆதாயம்பெற மாநில அரசு விரும்புகிறது. அதிலும் தனி நபர்களும், தனியார் துறையும் சமன்பொருள் மேம்பாட்டுக்கு, குறிப்பாக தமிழ் மொழியில் இண்டர்நெட் ஏற்படுத்தியதில் ஆற்றியுள்ள பங்கை மகிழ்ச்சியுடன் அங்கீகரிக்கிறது. இதில் ஒரே தன்மை ஏற்படாமல் உள்ளது.

ஒரே மாதிரியான குறியீடுகள்

உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை நேசிக்கும் சிறப்புக்குரியவர்கள். உலகில் இண்டர்நெட் அன்றாடப் பணிகளில் ஒன்றாகத் திகழ்வதில் ஒரே மாதிரியான குறியீடுகள் தேவை. அதை உருவாக்கும் முயற்சிகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டுள்ளது. இதில் வெற்றி பெறுவதன் மூலம் எதிர்காலத்தில் தமிழ்நாடு தமிழ் இணையத்தின் மைய வழிகாட்டியாகத் திகழ முடியும்.

இந்த நேரத்தில் சர்வதேச அளவில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் பாராட்டுகிறேன். மற்ற எந்த இந்திய மொழியையும் விட தமிழ் இண்டர்நெட்டில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஒரே மாதிரியான குறியீடுகளை உருவாக்குவதன் மூலம் தமிழ் இணையம் பெறும் வெற்றி அதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள தமிழ் இணைய மக்கள் ஒருங்கிணைந்து தமிழ் மற்றும் தமிழ்நாடு பற்றிய தகவல்களை பகிர்ந்து கொள்ளமுடியும்.

இதில் தமிழ்நாட்டின் பெருமளவிலான ஆங்கிலம் அறியாத கிராமப்புற மக்களை இண்டர்நெட்டில் இணைக்கும் திறமையே குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

சர்வதேச அறிஞர்கள் தமிழில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் வகையில் தமிழ்மொழி தகவல் நெடுஞ்சாலையில் முக்கிய இடம் பெறச் செய்யும் இந்த முயற்சி ஒரு முற்போக்கான நடவடிக்கை; இதன் மூலம் தமிழ்மொழி மிகவும் மேம்பாடடையும். இந்த நிலைமை அனைத்தும் உருவாவதற்கு கற்பிப்பதிலும், கற்பதிலும் தமிழ்மொழியை நவீனப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்த பெருமை முழுவதும் முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும்.

மக்களின் பெரும் நன்மைக்கு உதவும் வகையில் மாநில நிர்வாகத்தின் பல்வேறு பகுதிகளையும் நவீனப்படுத்துவதில் உறுதியும் திறமையும் கொண்டுள்ள மாறன் அவர்களைப் பாராட்டுகிறேன்".

★ ★ ★

தகவல் தொழில் நுட்பத்தின் மின்னல் வேக வளர்ச்சியில் தமிழ்மொழி பின்தங்கி விடக்கூடாது

- முதலமைச்சர் கலைஞர்

இன்று நடைபெறுகின்ற இந்த மாநாட்டுக் கருத்தரங்கம் எந்தக் குறிக்கோளோடு நடைபெறுகிறதென்பதை வரவேற்புரையிலிருந்து எனக்கு முன்னால் சிறைப்புரை ஆற்றியவர்கள் உரை வரை கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றது. தகவல் தொழில்நுட்பத்தினைத் தமிழகத்தில் சீராக வளர்ப்பதற்கு வழிகாட்டத்தக்க வகையில் என்னுடைய தலைமையில் மாநில அளவிலான தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக்குழு (State Level Task Force on Information Technology) 8-10-1998 அன்று அமைக்கப் பட்டது. இதன் துணைத் தலைவராக மத்திய தொழில்துறையின் முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மென்பொருள் தொழில் மேம்பாடு, பள்ளிகளில் கணினி அறிமுகத்திற்குப் பாடத் திட்டத்தை உருவாக்குதல் - அனைத்துத் துறைகளிலும் கணினியைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு உதவும் வகையில் டாக்டர் அனந்த கிருஷ்ணனின் தலைமையில் துணைக்குழு ஒன்றும் 8-10-1998 அன்றே அமைக்கப்பட்டுள்ளது.

உலகத்தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டினை நடத்த முடிவு

பணி முனைப்புக்குழு, துணைக்குழு ஆகியவற்றின் முதல் கூட்டம் 28-11-1998 அன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குரிய பணிகளைத் தீவிரப்படுத்துதல் தொடர்பாக பல்வேறு முடிவுகள் மேற்கொள்ளப் பட்டதுடன், இந்த "உலகத்தமிழ் இணையம் - கருத்தரங்க மாநாட்டினை இந்த நாட்களில் சென்னையில் நடத்திடவும்" அன்றே முடிவெடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டின் வரவேற்புக்குழு முரசொலி மாறன் தலைமையில் 2-12-1998 அன்று அமைக்கப்பட்டது.

விவாதிக்கப்படவிருக்கும் மூன்று முக்கியப் பொருள்கள்

எனவே இந்த முயற்சிகள் இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டதல்ல; சென்ற ஆண்டில் இருந்தே உலகத்தில் உள்ள எல்லா அறிஞர்களையும் தொடர்பு கொண்டு அதன் தொடர்ச்சியாக இன்று இந்த மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்றும், நாளையும் நடைபெறும் இந்த உலகத்தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டில் மூன்று முக்கியப் பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

- தமிழ் விசைப்பலகை வடிவமைப்பைத் தரப்படுத்துதல்.
- தமிழ் வரிவடிவக் குறியீட்டு முறையைத் தரப்படுத்துதல்.
- இண்டர்நெட் மல்டி மீடியா பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல்.

இதைக் குறித்துத்தான் இந்த கருத்தரங்கத்திலே விவாதிக்கப் படவிருக்கின்றது. இந்த மாநாட்டிற்கு வருகை தந்துள்ள பிரதிநிதிகளின் பட்டியலைப் பார்த்தேன். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும், குறிப்பாக மலேசியா, இலங்கை,சிங்கப்பூர், மொரிஷியஸ்.

- இங்கெல்லாம் தமிழ் வழங்கப்படுகிறது. இதில் மொரிஷியஸ் தவிர்த்த நான் குறிப்பிட்ட மூன்று நாடுகளில் - மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு ஆட்சி மொழி என்பதை நான் பெருமிதத்தோடு இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த நாடுகளிலிருந்தும் - தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட அந்த நாடுகளிலிருந்தும் தூதுக் குழுக்கள் வந்திருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல; ஆனால் அங்கிருந்து மாத்திரமல்ல,

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, அயர்லாந்து, குவைத்

- இப்படி உலகின் பல நாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் இங்கே வருகை புரிந்திருக்கின்றார்கள். அதுவும் அவர்கள் எல்லாம் சொந்தச் செலவிலே வந்திருக்கிறார்கள் என்பதுதான் போற்றத்தக்க, புகழத்தக்க, நமக்குச் செலவில்லை என்று நாம் மகிழத்தக்க ஒன்றாகும்.

பல நாடுகளிலிருந்து ஆர்வத்தோடு வந்துள்ள பிரதிநிதிகள்

இதைப் பார்க்கும்போது - இப்படி ஆர்வத்தோடு பல நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள பிரதிநிதிகளையெல்லாம் பார்க்கும்போது என் உடல் புல்லரிக்கிறது! உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது. இந்த அறிஞர் பெருமக்களுக்கும், ஆர்வலர்களுக்கும் என் சார்பாகவும் தமிழக அரசின் சார்பாகவும் வணக்கத்தையும், நன்றியையும் மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிங்கப்பூர் நிபுணர் குழுத் தலைவர் கோவிந்தசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இந்தக் கருத்தரங்க மாநாட்டிற்கு முன்னோடியாக 1997இல் சிங்கப்பூரில் அதன் தேசியப் பல்கலைக்கழகம் நடத்திய தமிழ்நெட் 1997 என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் டாக்டர் Tan Tin Wee அவர்களும், கோவிந்தசாமி அவர்களும் முக்கிய பங்கேற்றதை நினைவு கூர்கிறேன்.

அந்தக் கருத்தரங்கிற்குத் தமிழக அரசின் சார்பாக தமிழக அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களை அன்றைக்கு நான் அனுப்பி வைத்ததையும் கோவிந்தசாமி அவர்கள் இங்கே நினைவுபடுத்தினார்கள்.

அந்த மாநாட்டில் கணிப்பொறி இணையத்திலும், தகவல் நெடுஞ்சாலையிலும் ஒருவருக்கொருவர் தொடர்பின்றி ஏற்பட்டுள்ள குழப்பத்தை கருத்தரங்கத்திலே கலந்து கொண்டவர்கள் அன்றைக்குச் சுட்டிக் காட்டினர்.

அதாவது அவர்கள் நோயைக் கண்டறிந்தவர்கள். மருந்தை அப்போது காணவில்லை.

நோய்க்குரிய மருந்தைக் காணத்தான் இந்த மாநாடு

அந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கத்தான் - அதற்குப் பரிகாரம் காணத்தான் - இம்மாநாட்டையும் கருத்தரங்கையும் நாம் கூட்டியிருக்கிறோம் என்று சொன்னால் அது தவறல்ல, மிகையாகாது.

அறிஞர் பெருமக்களாகிய நீங்கள் ஒரு முடிவினை எடுத்து அதை இந்த மேடையில் நானும், மலேசிய நாட்டு அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களும், இலங்கை நாட்டு அமைச்சர் தொண்டைமான் அவர்களும், சிங்கப்பூர் சார்பாக வந்துள்ள கோவிந்தசாமி அவர்களும், மொரிஷியஸ் நாட்டு அமைச்சர் ராமசாமி சிதம்பரம் பிள்ளையும், புதுவை முதலமைச்சர் ஜானகிராமனும் ஏற்றுக்கொண்டு விட்டால் அதைத் தமிழ்கூறும் நல்லுலகே ஏற்றுக்கொண்டதாகப் பொருள் என்று நான் கருதுகிறேன்.

மென் பொருட்களைத் தயார் செய்யும் தனியார் துறையும் இதை வரவேற்கும் என்பதில் அய்யமில்லை.

நாளைக்கு நீங்கள் எடுக்கப் போகின்ற முடிவைத்தான் சொல்கிறேன்.

ஏனெனில் தமிழக அரசு பிரமாண்டமான முறையில் தகவல் புரட்சியை மக்களிடத்திலே எடுத்துச் செல்வதில் தீவிரமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறியை நுழைத்திட தமிழக அரசு திட்டமிட்டு செல்படுகிறது.

இம்மாநாடு அங்கீகரிக்கும் மென்பொருள்களைத் தான் தமிழக அரசு இனிமேல் வாங்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவே - அதுதான் மலேசியாவிலும், இலங்கையிலும், மொரிஷியசிலும், சிங்கப்பூரிலும் மற்றும் தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் பயன் படுத்தப்படும் என நம்புகிறேன்.

இலக்கிய ரீதியாக நமக்கு கிடைத்துள்ள சான்றுகள்

- எனவே தனியார் துறை இதைக் கவனிக்கத் தவறாது என்றும் கருதுகிறேன். ஆனால் ஒன்று - கருத்தரங்கில் ஒருமித்த முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு தமிழர்கள் ஒன்று கூடினால் (கூடுவது சிரமம்) தகராறுதான். போர்தான் என்பதை அனுபவ ரீதியாக நாமெல்லாம் அறிவோம். இன்றல்ல, அந்தக் காலத்திலேயே ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் போட்டுக் கொண்ட சண்டை நமக்கு இலக்கிய ரீதியாக கிடைத்திருக்கின்றது.

நான் இங்கே நடைபெறுகின்ற இந்தக் கருத்தரங்கத்தை சிங்கப்பூரில் நோயைக் கண்டுபிடித்தோம். இங்கே மருந்து கண்டுபிடிக்க கூடியிருக்கிறோம் என்று சொன்னேன். ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன்.

சிறந்த மருத்துவர்கள் - திறமைமிக்க மருத்துவர்கள் - ஆற்றல் வாய்ந்த மருத்துவர்கள் நான்கு பேர் கூடினால் ஒருமித்த கருத்தையெடுப்பது கஷ்டம். மருத்துவர்களைப் போலத்தான் இங்கே நீங்கள் கூடியிருக்கிறீர்கள். எனவே தான் ஒருமித்த கருத்தை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழை ஒருபோதும் தூங்க விடக்கூடாது

ஒரு நிகழ்ச்சி. வரவேற்புக் குழுத்தலைவர் முரசொலி மாறனின் தம்பி முரசொலி செல்வத்திற்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதயத்தில் வலி ஏற்பட்டு ஆபத்தான கட்டத்திலே சென்னை பொது மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டார். நான் அப்போது மதுரையிலே ஒரு கூட்டத்திலே பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு தகவல் வந்து அங்கிருந்து காரிலே புறப்பட்டு சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறேன். அதற்கிடையே அன்றிரவு நடைபெற்ற நிகழ்ச்சி - இதய வலி ஏற்பட்டவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக தூங்க வேண்டும், எனவே அவரை தூங்க வைக்க என்ன செய்யலாமென்று இரவு பத்து மணிக்குத் தொடங்கிய மருத்துவர்களின் ஆலோசனை - நான்கைந்து தலை சிறந்த மருத்துவர்கள் - இதய சிகிச்சைக்காகவே தனியாகப் படித்த மருத்துவர்கள் விவாதித்தார்கள். ஒருவர் 'வேலியம்' (Valium) கொடுத்தால் தூக்கம் வரும். அதைக் கொடுக்கலாம் என்கிறார். இன்னொருவர் அந்த மருந்தைக் கொடுக்கக் கூடாது என்கிறார். இல்லையில்லை. பெதடின் இஞ்செக்ஷன் கொடுக்கலாம் என்று இன்னொரு மருத்துவர் கூறுகிறார். ஏறத்தாழ இரண்டு மணி நேரம் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அந்த அறையிலிருந்து நர்ஸ் வெளியே வந்தார். பேஷண்ட் என்ன செய்கிறார் என்று மருத்துவர்கள் கேட்க, நன்றாகத் தூங்கி விட்டார் என்று நர்ஸ் சொன்னார். பேஷண்ட் தூங்கலாம், அறிஞர் பெருமக்களே, தமிழைத் தூங்கவிட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

நீங்கள் தமிழ் அறிஞர்கள் - தமிழ் ஆர்வலர்கள் மட்டுமல்ல, கணிப்பொறி வல்லுநர்களும் கூட.

எனவே, உங்களிடம் Scientific temper - விட்டுக் கொடுக்கும் விஞ்ஞான மனப்பான்மை இருக்கும் என்று நம்புகின்றேன். நீங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எத்தனையோ இரவுகள் கண்விழித்து, உங்கள் மென்பொருளைக் கண்டு பிடித்திருப்பீர்கள். எனக்குத் தெரியும். எனவே, ஒவ்வொருவரும் தன் குஞ்சுதான் பொன் குஞ்சு என்று கருதக்கூடும். அதில் தவறில்லை. ஒருவகையில் நானும் ஒரு படைப்பாளிதான்! உங்கள் உணர்வுகள் எனக்குப் புரிகிறது.

ஆனால் - தகவல் புரட்சி காட்டுத் தீயாக பரவிக் கொண்டிருக்கின்றது என்பதை மறந்துவிடக் கூடாது. இன்று கண்டுபிடிக்கப்பட்டது. அடுத்த மாதம் பழசாகி விடுகிறது - அத்தகைய வேகமான முன்னேற்றங்கள் மின்னல் வேகத்தில் நடைபெற்று கொண்டிருக்கின்றது. இந்த மின்னல் வேக வளர்ச்சியில் நாம் பின்தங்கி விடக்கூடாது. நம் மொழி, தமிழ்மொழி பின்தங்கி விடக்கூடாது.

தரநிர்ணயம் செய்திட வல்லுநர்களே வாரீர்!

எனவே தர நிர்ணயம் செய்திட வாரீர்! என்று உங்களையெல்லாம் அழைக்கின்றேன். இது தமிழ்நெட் 1999. இதில் குறைகள் இருந்தால் தமிழ்நெட் 2000த்தில் அவற்றைச் சரி செய்து கொள்ளலாம் என்று கூறி, உங்கள் நல்ல முடிவுகளை எதிர்பார்த்து நாளை சந்திக்கிறேன். நாளைதான் சந்திக்கிறேன்.

நாளைதான் முக்கியமான நாள்.

முடிவுகள் எடுக்கப்படும் நாள்.

முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கும் நாள் -

அந்த முடிவுகளை நிறைவேற்ற தமிழக அரசு என்ன செய்யுமென்று நான் அறிவிக்கவிருக்கும் நாள். கணிப்பொறியும், இணையமும் நமக்குத் தோழனாக,

தொண்டனாக, அறிவு புகட்டும் ஆசானாக மாற்ற இன்றும் நாளையும் எடுக்கப்படும் முடிவுகள் உதவும் என்று கூறிக்கொள்கிறேன்.

உலகெங்கும் உள்ள தமிழர்கள் ஏற்றுக்கொண்ட தமிழ் வாழ்த்து

இங்கே தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது.

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்"

- என்ற தமிழ்த்தாய் வாழ்த்து. அந்தத் தமிழ்த்தாய் வாழ்த்தை நான் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலத்தில்தான் அறிமுகப்படுத்தினேன். இப்போது உலகமெங்கும் இருக்கின்ற தமிழர்கள் தங்களுடைய தமிழ்த்தாய் வாழ்த்தாக இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய இந்த தமிழ்த்தாய் வாழ்த்தில் இரண்டொரு வரிகளைக்கூட நீக்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் நம்மொழியை வாழ்த்துகின்ற நேரத்தில் பிறமொழியை இகழக்கூடாது என்பதற்காகத்தான் "ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்வியந்து" - என்ற வரிகளை நீக்கிவிட்டோம். ஆரியம் உலக வழக்கு அழிந்து, ஒழிந்து விட்டது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை என்பதற்காக அது சேர்க்கப்படவில்லை - அதுமாத்திரமல்ல; மங்கல விழாக்களில் "அழிந்து", "ஒழிந்து" என்ற சொற்கள் வேண்டாம் என்பதற்காகவும் அதை மாற்றியமைத்தோம். இன்று உலகமெங்கும் இருக்கின்ற தமிழர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தாக இந்த வாழ்த்து அமைந்திருக்கின்றது.

தமிழனாய் நிமிர்ந்தவர்கள் தலைநிமிர்ந்து கர்ச்சிக்க வேண்டும்

பாரதியார் சொன்னார் -

"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்"!

- என்று சொன்னார். கலைச் செல்வம் என்றால் வெறும் கலை மாத்திரமல்ல; தொழிற்கலை, விஞ்ஞானக் கலை போன்றவைகள் எல்லாம் கூட அந்தக் கலைச் செல்வத்திலே அடங்கும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார் -

"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சல சலவென எவ்விடத்தும் பாய்ச்சி விட வேண்டும்!
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பல கழித்தோம்;
குறைகளைந்தோமில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்"

- என்று பாரதிதாசன் பாடினார்.

நான் தமிழன்;
எனது நாடு தமிழ்நாடு;
எனது மொழி தமிழ்மொழி;
தமிழ் மொழியாளர் எல்லாம் என் உறவினர்;
என் சமூகம் தமிழர் சமூகம்;
என் சாதி தமிழ்ச் சாதி;
தமிழர் நலமே என் மதம்;
என் கடமை தமிழ்நாட்டு ஊழியம்;
என் தெய்வம் தமிழணங்கு;
என் மந்திரம் தமிழ்;
என் தோத்திரம் எந்தாய் வாழ்க!

- என்று தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தலை நிமிர்ந்து கர்ச்சிக்க வேண்டும் என்று கூறியவர் சுத்தானந்த பாரதியார்.

இவற்றையெல்லாம் இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு தமிழ் பரவிட, எனக்கு முன்னால் இங்கே சிறப்புரை ஆற்றியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல, எல்லா துறையிலும், தமிழைப் பயன்படுத்துகின்ற நல்வழியை, உற்ற வழியை, உரிய வழியை நாளைக்குக் காணுங்கள், கண்டு அறிவியுங்கள் என்று கேட்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

- உலகத் தமிழ் இணையம் 99
கருத்தரங்க மாநாட்டில் 7-2-99 அன்று
முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
ஆற்றிய உரை.

●

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!
தமிழ் என்று தோள்தட்டி ஆடு! – நல்ல
தமிழ்வெல்க வெல்கஎன்றே தினம்பாடு!

- பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ் இணையம்

உலகத் தமிழர்களை இணைக்கும் பாலம்

- கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சியின் விரைவுக்கு எடுத்துக்காட்டாகவும் அறிவியல் வளர்ச்சியை மேலும் விரைவுப்படுத்தும் உந்து கருவியாகவும், செய்திகளை மின்னணு ஆற்றல் மூலம் ஒளி வேகத்தில் பரப்புவதன் மூலம் தகவல் தொடர்பு புரட்சி ஏற்படுத்தி இருப்பது கணிப்பொறியாகும்.

பல நூற்றாண்டுகளாக உருக்கொண்டு வந்த கணக்கீடு கருவிகள், நூற்றாண்டுகள் முன் Calculator என்னும் கணிப்பானாக உருவாகி, அதைத் தொடர்ந்து காந்தப்புலத்தில் மின்னணுப் பயன்பாடு மூலம் கணினி (Computer) ஆக வடிவெடுத்து இன்று பருமனும் சுருங்கி, ஆற்றலும் பெருகி, அதன் ஐந்தாவது தலைமுறை வளர்ச்சி பெற்றுள்ளது. இதனுள் உருவாக்கப்பட்ட "நினைவுகொள்' திறன் அடியான பல்வகை ஆற்றலால் பயன்மிகுந்து, பயன்பாடும் பேரளவினதாக உள்ளது. எந்த நாடும் அதனைத் தவிர்த்து வளர்ச்சியும் முன்னேற்றமும் காணமுடியாது.

இன்றையத் தமிழ் கூறும் நல்லுலகு என்பது வடவேங்கடம் தென்குமரி இடையே மட்டும் இல்லை. அலாஸ்காவிலிருந்து, ஆஸ்திரேலியா வரை தமிழ் பேசுவோர் பாரெங்கும் பரவியுள்ளனர். தென்னகத்தில் இயற்கையின் ஐவகை நிலங்களிலே வாழ்ந்த தமிழன் இன்று 5 கண்டங்களிலும் வாழ்கிறான். தமிழகத்தில் ஐந்தரை கோடித் தமிழரும், அயல்நாடுகளில் ஒன்றரை கோடித் தமிழரும் வாழ்கின்றனர். தமிழ் பேசும் மக்களில் ஏறத்தாழ 95 இலட்சம் பேர் பிறநாடுகளின் குடி மக்களாகவோ அல்லது அந்நாடுகளில் தங்கி வாழ்பவராகவோ உள்ளனர். சிலநாடுகளில் தமிழ் ஆட்சி மொழியாகவும் உள்ளது. உலகத் தமிழர் அனைவரும் இணையலாகும் வலுவான தொடர்பு சாதனமாக இணையம் விளங்குகிறது. உலகத்தமிழரின் நலன் நாடும் தமிழக அரசு இந்தத் தொடர்புத் திறனை மேம்படுத்தவே தமிழ் இணைய, மாநாடு நடத்த முன் வந்துள்ளது.

ஆசியாவிலேயே முதல் முறையாக முன்னூறு ஆண்டுகட்கு முன் தமிழ்மொழி எழுத்து அச்சு வாகனமேறி, தகவல் தொடர்பில் முன்னிலை பெற்ற நாள் முதலாய் ஒவ்வொரு அறிவியல் தொடர்பு சாதனத்தையும் தமிழ் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்த வகையில் கணினித் துறையிலும் பன்னாட்டுத் தமிழர்களும் தமிழைத் தகவல் புரட்சியின் ஆற்றல் மிகு கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். உலக மொழிகளில் குறிப்பாக இந்திய மொழிகளில் கணினி பயன்பாட்டிற்கு மிகவும் ஏற்புடையதாக அமைந்துள்ள மொழி 'தமிழ்' என்று இந்திய அறிவியலாளர் கழகம் சான்றுரைத்துள்ளது. கணினியில் தமிழ் எழுத்து வடிவங்களை உருவாக்குவதிலும், கணினியில் தமிழைப் பயன்படுத்துவதிலும் உலகெங்கும் தமிழ் ஆர்வலர்கள் பலரும் கடந்த 15 ஆண்டுகளாக இடையறா முயற்சியில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

கணினி பயன்பாட்டில் பரந்து உலகத்தையே சுருங்கச் செய்து ஒரு சிற்றூராக உருவாக்கிடும் செய்தி பரிமாற்றத்துக்கு வழிசெய்யும் தகவல் தொடர்பு இணையம் (Internet) இன்று பெரும் அளவிலும் அதிக வல்லமையுடனும் ஆங்கிலத்தின் மூலம் செயற்படும் நிலை உள்ளது.

எனினும் கணினித்துறையில் தமிழ் சிறப்பாகக் கால்பதித்ததன்தொடர்ச்சியாக கணினியின் அடுத்த கட்டவளர்ச்சியான "இணையம்" என்னும் தகவல் நெடுஞ்சாலையில் பிற இந்திய மொழிகள் இடம்பெறும் முன்னரே தமிழ் பயணம் தொடங்கியுள்ளது. இணையத்திற்குள் தமிழோசை இன்று இனிமையாக உரத்த ஒலியில் கேட்கிறது. தமிழ் தொடர்பான இணையத்தளங்கள் (WEBSITES) ஏறத்தாழ 3000 உள்ளன. திருக்குறளில் இருந்து இன்றைய

திரைப்பாடல்கள் வரை இந்தத் தளங்களில் இடம்பெற்றுள்ளன. உலகின் பல பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான இணைய இதழ்கள் மின் அம்பலத்தில் அரங்கேறி வருகின்றன. சென்னையிலிருந்து உலகத் தமிழருக்காக அமைக்கப்பட்ட "இன்தாம்", என்ற இணையத்தளம் பல இதழ்களை இணையத்தின் மூலம் நடத்தி வருகிறது. தமிழ் வழிப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் உலகெங்கும் தொழில் முனைவோராகவும், வணிகராகவும் உள்ள தமிழர்கள் பற்றிய விவரங்களையும் விரிவாக இது வழங்கி வருகிறது. இது போலப் பலவகை தகவல்களைத் தமிழ் இணையங்கள் பரப்பி வருகின்றன.

என்றாலும் கணினியில் தமிழ் எழுத்துக்களை உள்ளீடு செய்யும் குறியீடுகள் பல்வேறு வகைப் படுதலின் ஒன்றி உள்ளீடு செய்ததைப் பிறவகைக் குறியீடுகளைப் பின்பற்றும் கணினிகளில் உரிய வடிவில் பெற - தோன்றச் செய்ய முடியாத நிலை உள்ளது. அதனால் இணையம் மூலம் தமிழில் தரப்படும் தகவல் உலகெங்கும் பரவ இன்று முடிவதில்லை. இதனைக் கருதியே தமிழக முதல்வர் கலைஞர் இணையம் பயன் உடையதாக வளர்வதற்கு இன்றியமையாத பொதுவான ஒரு குறியீட்டு முறையையும், உள்ளீடு செய்வதற்குரிய வசதியான விசைத்தட்டையும் (Key Board) உருவாக்க விரும்பி பன்னாட்டு கணினி அறிஞர்களையும் கலந்து ஆய்வு செய்து முடிவு காண்பதற்கு டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒருநிபுணர் குழு அமைத்தார்கள். இதில் முதல்வர் கலைஞர் கொண்டுள்ள தீவிரமான ஈடுபாடு மிகவும் பாராட்டப்படுவதாகும்.

மாநாட்டின் மூலம் நல்ல முடிவு

ஒரு பக்கம் தமிழ் இணையம் தகவல் அளிப்பில் வளர்ச்சி பெற்றாலும் இணையத்தில் ஆங்கில மொழியின் தெளிவான பயன்பாட்டிற்கு நிகராகத் தன்னைத் தரப்படுத்திக் கொள்ளவில்லை. அவ்வாறு தரப்படுத்த மூன்று முக்கியப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டிய நிலை உள்ளது. இந்த மாநாட்டின் மூலம் அவைபற்றி நல்ல முடிவு காணப்பட முடியும் என்று நம்புகிறேன்.

1. தமிழ் மொழி விசைப் பலகை வடிவமைப்பைத் தரப்படுத்துதல்,

2. தமிழ் வடிவக் குறியீட்டு முறையைத் தரப்படுத்துதல்,

3. பல ஊடகப் (Multi Media) பயன்பாடுகளில் தமிழைச் செயல்படுத்துதல்.

தமிழ் கணினிகளில் அமைந்துள்ள விசைப் பலகைகளில் வெவ்வேறு இடங்களில் எழுத்துக்களை அமைத்துள்ளனர். எனினும் இவற்றை 3 வகையான விசைப்பலகை முறைகளுக்குள் அடக்கலாம்.
1. தட்டச்சு விசைப் பலகை (Typewriter Keyboard)
2. ஒலியியல் விசைப்பலகை (Phonetic Keyboard)
3. ரோமன் எழுத்து முறை விசைப்பலகை. உலகெங்கிலும் இந்த 3 வகைகளும் வழக்கில் உள்ளன.

இந்த மூன்று வகைகளிலும் குறை நிறைகள் உள்ளன. எனினும், இவற்றை ஆராய்ந்து சீரான ஒரே அமைப்புடைய விசைப் பலகையை உருவாக்கினால் எதிர்காலத்தில் தமிழ்க் கணினியைப் பயன் படுத்துவோர் குழப்பமின்றிப் பயன்படுத்த முடியும்.

கடந்த ஆண்டுகளில் கணினியில் தமிழ் இடம் பெறவேண்டும் என்ற ஆர்வத்தில் உலகெங்கும் வாழும் பலர் தமிழ் எழுத்தை உள்ளீடு செய்யும் முறையை தாம் கருதியவாறு உருவாக்கி உள்ளனர். நூற்றுக் கணக்கான உள்ளீடு முறை கொண்டவையாக அவை காணப்படுகின்றன. இதனால் ஒரு மென்பொருளில் உள்ளீடு செய்த தமிழ்ச் சொற்களை மற்றொரு மென்பொருள் அவ்வாறே ஏற்காது. வெளியிடுவதும் மாறுபடும். ஆங்கிலத்தில் 'A' வுக்குரிய பொத்தானை அழுத்தினால் எவ்வித மென் பொருளிலும் கணினித் திரையில் 'A' தான் வரும். ஆனால் தமிழில் ஒவ்வொரு கணினியிலும் உள்ள வெவ்வேறு 'கோர்' அடிப் படையில் பதிவு (உள்ளீடு செய்வதால்) வெவ்வேறு எழுத்து தோற்றமளிக்கும். ஆங்கிலத்தில் உள்ள எல்லா மென்பொருள்களும் ஏ.எஸ்.சி.ஐ.ஐ. என்ற ஒரே உள்ளீடு குறியீட்டு முறையைப் பயன்படுத்துவதால் - அனைவரும் பயன்கொள்ள முடிகிறது. ஆனால் தமிழுக்காக இதுவரை ஒருமைப்படுத்தப்பட்ட குறியீட்டு முறை அனைவரும் ஏற்று கைக்கொள்ளும் வகையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்திய அரசின் மின்னணுவியல் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள உயர் கணிப்பொறி மேம்பாட்டு மையம், இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொதுவானதொரு குறியீட்டு முறையை (ISKY) அமைத்துள்ளது. இது தேவநாகரி எழுத்து முறையை அடிப்படையாக வைத்து வடிவமைக்கப்பட்டது. பிற இந்திய மொழி எழுத்துக்களிலிருந்து தமிழ் எழுத்து வரிசை (நெடுங்கணக்கு) வேறுபட்டு நிற்பதால் தமிழுக்கு இதனைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுவதாகப் பலரும் கருதுகின்றனர். சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளைச் சேர்ந்த தமிழ்க் கணினி அறிஞர்கள் ஒரு குழு அமைத்து, 3 வகை விசைப்பலகைகளிலும் பயன்படுத்தும் வண்ணம் தமிழ் மென்பொருள் குறியீட்டு முறை (TSCIE) ஒன்றை அமைத்துள்ளனர்.

உலகப் பயன்பாடுகளைப் பெற
மென்பொருள் குறியீட்டு முறை

இவை இரண்டைத் தவிர மூன்றாவது சிந்தனையும் உள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் உலகத்தர அமைப்பு நிறுவனம் பதினாறு நுண்ணறை (16 bit) அடிப்படையில் UNICODE என்ற முறையை அறிமுகப்படுத்த உள்ளது. அதற்கேற்ப அனைத்துத் தமிழ் எழுத்துக்களையும் எட்டு நுண்ணறை (8 bits) கணினிகளில் இடம் பெறச் செய்வதால் பல்வேறு உலகப் பயன்பாடுகளைப் பெறலாமென்றும் அதற்கேற்ப மென்பொருள் குறியீட்டு முறை அமைக்கப்பட வேண்டுமென்றும் ஒரு கருத்து உள்ளது.

பல் ஊடகப் பயன்பாட்டைப் பொறுத்தவரை தமிழில் மிகக் குறைவான செயல்பாடுகளே நிகழ்ந்துள்ளன. தமிழில் பல் ஊடகக் குறுந்தட்டுகள் (CD) விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் வெளிவந்துள்ளன. தமிழ்க்குறுந்தட்டுகள் பெருகினால் தமிழ்க் கணினி வழிக் கல்வியை இன்னும் சிறப்பாக்கலாம். தமிழ்க் கலைக் களஞ்சியங்களும் மற்றும் பல்வகைத் தொகுப்புகளும் இதில் இடம் பெறச் செய்யலாம். ஒரு தமிழ் நூலகத்தையே சில குறுந்தட்டுகளில் அடக்கி விடலாம். இந்த முயற்சியில் நூல் வெளியீட்டாளர்களும், கல்வியாளர்களும் ஈடுபட வேண்டும்.

கணினித் தமிழ்ப் பயன்பாட்டு வளர்ச்சிக்காக - விசைப் பலகையைத் தரப்படுத்தி உலகெங்கும் ஏற்கப்படுவதனால் விளையும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் விசைப் பலகையிலும் மென்பொருள் குறியீட்டிலும் ஒரு முறையை நாம் முடிவு செய்வதற்காகவே இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

- என்னும் வள்ளுவரின் அறிவுரைக்கேற்ப பன்னாட்டு கணினி நிபுணர்களும், தமிழ் ஆர்வலர்களும் கலந்து ஆய்வு செய்தே ஒரு தகுந்த முடிவுக்கு வர உள்ளனர்.

விரைந்திடும் 21ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி அமர்ந்து விரையப் போகும் சொகுசு வாகனமாக இணையம் விளங்கப் போகிறது. Internet என்ற ஆங்கிலச் சொல்லை இணையம் என்று தமிழ் மரபுக்கேற்பவும், இன்றையச் சூழலுக்கு ஏற்பவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது உலகத் தமிழர்களை இணைக்கும் பாலம். உலகின் செல்வாக்கு மிகுந்த மொழிகளுக்கு இணையாகத் தமிழை உயர்த்தும் ஏணி. தமிழில் உள்ள இணையில்லாத இலக்கியச் செல்வங்களையும் அறிவியல் கருவூலங்களையும் இணையம் போற்றிப் பாதுகாக்கும் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். கணினியின் மூலம் தமிழ்மொழிப் பயன்பாடு மிகும் என்பதில் ஐயமில்லை. இணையத்தின் மூலம் யாண்டுமுள தமிழ் உள்ளங்கள் இணைவதாக! வாழ்க தமிழ்!!

-தமிழ் இணையம் - 99
கருத்தரங்க மாநாட்டில்
கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்
ஆற்றிய உரை

★ ★ ★



இது ஒரு புதிய புரட்சியின் தொடக்கம்!

மலேசிய அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு

தொல்காப்பியத்திற்கு முன் தோன்றிய மூத்த மொழியான நம் தமிழ்மொழி உலக மொழியாக ஆக வேண்டும் என்ற அவா நமக்குப் பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்தல் வேண்டும் என்று ஒரு பாவலர் பாடினார்.

உலக மொழிகளிலே மிகவும் பழமை வாய்ந்தது, சிறப்பு வாய்ந்தது, சீர் உடையது, இனிமையானது தமிழ்மொழி. இந்தச் சிறப்புகள் எல்லாவற்றையும் விட உலகத்தில் ஒரு ஏற்புடைய மொழியாக தமிழ் ஆகவேண்டும், ஆக்கப்பட வேண்டும் என்பதில் முதல்வர் கலைஞர் காட்டி வரும் அக்கறைக்கு இன்றைய மாநாடு ஓர் அடிக்கல் நாட்டு விழாவாக அமைந்துள்ளது என்று சொன்னால் மிகையாகாது.

தமிழ்மொழி உலகமெலாம் பரவுவதற்கு "தமிழ் இணையம்" முறையாகச் செயல்பட்டால் அந்த வெற்றி நிச்சயமாக தமிழுக்குக் கிட்டும். 21-ஆம் நூற்றாண்டின் நுழைவாயிலில் நிற்கின்ற நாம் இது ஒரு புதிய புரட்சியின் தொடக்கம் என்று சொல்லலாம். முதல்வர் கலைஞர் திட்டமிட்டு மேம்படுத்த முனைந்துள்ள தகவல் தொழில்நுட்ப புரட்சியானது தமிழ் வளர்ச்சிக்கோர் புதிய மார்க்கத்தை வகுக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

அந்த புரட்சியின் வாயிலாக தமிழகம், தமிழ்மொழி இவை இரண்டும் பல புதிய மாறுதல்களைக் காணக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த மாறுதல்களின் தொடக்கம்தான் தமிழ்இணையம் 99.

தமிழ்மொழியின் வாயிலாக, நமது ஆற்றலை பயன்படுத்தி பேரளவில் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புகள் இந்த இணையத்திற்குக் கிட்டும். இதன் மூலம் பல புதிய சவால்களும் மாற்றங்களும் ஏற்படும்.

ஆங்கிலத்துக்கு நிகராகத் தமிழ்

இனி தமிழகத்திலே உள்ள பல்கலைக்கழகங்கள் தங்களுடைய பட்டப்படிப்புகளை உள்நாட்டு தமிழர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாடுகளிலே வாழுகின்ற தமிழர்களுக்கும் இணையத்தின் வழி கற்பிப்பதோடு மாத்திரமல்லாது அதன் மூலம் நல்ல வருவாய் பெறுவதற்கான வாய்ப்புகளும் கிட்டும்.

அடுத்த நூற்றாண்டில் தமிழ், ஆங்கில மொழிபோல் ஒரு பொருளாதார மொழியாக, வாணிகத்துறையில் முக்கிய பயனீட்டு மொழியாக, வருமானத்தை ஈட்டித்தரும் மொழியாக இந்த இணையத்தின் மூலம் ஆகும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

★ ★ ★

தமிழர்களைத் தமிழ்மொழி வழியாக ஒன்றிணைக்க வேண்டும்

- இலங்கை அமைச்சர்
திரு. **தொண்டமான்**

உலகமெங்கிலும் தமிழர்கள் பரவி இருக்கின்றனர் என்பதைப் பார்க்கும்போது தமிழுலகத்திற்கு அஸ்தமனமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். எனவே அப்படிப்பட்ட தமிழர்களை தமிழ்மொழி வழியாக ஒன்றிணைக்க வேண்டியது அவசியமும், கட்டாயமும் ஆகும். தகவல் தொழில் நுட்பம் அவர்களை ஒருங்கிணைத்து உள்ளது.

இதுவரை செய்துள்ள சாதனைகள் எல்லாம் மிகக்குறைவுதான். இன்னும் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையின் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மாற்றத்திற்கு ஏற்ப ஏற்பட்டுள்ள சவால்களையும், வாய்ப்புகளையும் சந்திக்க தமிழ்நாடு தயாராகிவிட்டதும் தெரிகிறது. இப்போது தமிழ்நாடும் உலகத்தின் தகவல்தொழில்நுட்பத் துறையில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டு உள்ளது.

தமிழகத்தை இந்தியாவிலேயே முன்னணி தொழில்வளமிக்க மாநிலமாக மாற்றவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளது கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். கணினி தொழில்நுட்பத்தை எதிர்காலத்தில் வருகின்ற சவால்களைச் சந்திக்கிற வகையில் மிகவும் திறமையுடன் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ★

உலக சமுதாயத்தை இணைக்கும் தகவல் தொழில்நுட்பம்

- மொரீஷியஸ் அமைச்சர்
திரு. **ராமசாமி சிதம்பரம் பிள்ளை**

மொரீஷியஸ் இந்து பெருங்கடலில் உள்ள ஒரு தீவாகும். அங்கு 12 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் 10 சதவீதம் பேர் தமிழர்கள் ஆவர். பல கலாச்சாரத்தைக் கொண்ட மக்களும் நல்லிணக்கத்துடனும் ஒருவருக்கொருவர் மதிப்பளித்தும் வாழ்ந்து வருகிறார்கள்.

எனது பெயரான ராமசாமி சிதம்பரம்பிள்ளை தமிழ்ப் பெயர் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. நான் மொரீஷியசில் உள்ள மூன்றாவது தலைமுறைத் தமிழன். எனது தாத்தா சிதம்பரத்தில் இருந்து மொரீஷியசுக்குச் சென்று குடியேறினார். மொரீஷியசில் எங்களின் சாதிப்பெயரை குடும்பப் பெயருடன் வைத்துக் கொண்டேன்.

இண்டர்நெட்டின் பயன்பாட்டுடன், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பம் உலக சமுதாயத்தை மாற்றிக் கொண்டிருக்கிறது. வணிகம், கல்வி, கலாச்சாரத்தில் வாய்ப்பு பெருகி வருகிறது. உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கிடையே தகவல் தொடர்பை இண்டர்நெட் உண்டாக்கி வருகிறது.

நான்காவது தமிழ்

– திரு. முரசொலி மாறன் எம்.பி., தலைவர் வரவேற்புக் குழு

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு– 1780களில்–பிரிட்டனில் தொழிற் புரட்சி வெடித்தது.

மனிதன் செய்த வேலைகளைச் செய்வதற்கு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விவசாய சமுதாயம் (Agricultural Society) கொஞ்சம் கொஞ்சமாக இயந்திரங்கள், இயங்கும் தொழிலையும், தொழிற்சாலைகளையும் சார்ந்த சமுதாயமாக (Industrial Society) மாறிற்று.

இப்போது தோன்றியிருப்பது தகவல் தொடர்புப் புரட்சி (Information Revolution)!

குக்கிராமத்தில் எப்படி யாரும் செய்தித்தாளைப் படித்து உள்ளூர்ச் செய்தியைத் தெரிந்து கொள்ளவேண்டியதில்லையோ– எப்படி ஒரு செய்தி மின்னல் வேகத்தில் பரவுகிறதோ– அதுபோலப் பூவுலகு முழுதும் நொடிப் பொழுதில் செய்தித் தொடர்பு கொள்வது சாத்தியமாகிவிட்டது.

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளில் விவசாய சமுதாயம் தொழில் துறை சமுதாயமாக மாறுவதற்கு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆனது. ஆனால் தகவல் தொடர்புப் புரட்சியைப் பயன்படுத்திக் கொண்டு அதைச் சார்ந்த தகவல் சமுதாயமாக (Information Society) மாறுவதற்குக் கால் நூற்றாண்டே போதுமானதாகிவிட்டது.

நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தமையால் 'முதல் தொழிற் புரட்சி'யைத் தவறவிட்டோம்.

தகவல் தொடர்புப் புரட்சியைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால் அதற்கு இந்தத் தலைமுறையைச் சார்ந்த நாம் ஒவ்வொருவரும் காரணமாகி விடுவோம்.

தகவல் தொடர்புப் புரட்சியின் வாகனம் கணிப்பொறி!

இண்டர்நெட் என்கிற இணையம் அந்தப் புரட்சியை உலகெங்கும் எடுத்துச் செல்கிற மின்னல்வேக 'ஜெட்' விமானம்!

இன்றைய நவீன உலகில் நீங்கள் படிப்பறிவு பெற்றவர்களாகக் கருதப்பட வேண்டுமானால் உங்களுக்கு ஆங்கில மொழி, கம்ப்யூட்டர் மொழி ஆகிய இரு மொழிகளும் தெரிந்திருக்க வேண்டும் – என்பது நிலைமை.

ஏன்? தமிழால் முடியாதா?– என்று கேட்கக்கூடும்.

முடியும்– என்று நிரூபித்துக் காட்டிவிட்டனர் தமிழர்கள்!

பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றிக் காப்பாற்றி வரப்பட்டிருக்கும் தமிழ்! இன்று கணிப்பொறித் திரைமூலம் தகவல் நெடுஞ்சாலையில் பயணம் செய்துகொண்டிருக்கிறது.

தமிழ்மொழி உலகின் பல நாடுகளில் பேசப்படுவதாலும் – அங்கெல்லாம் ஆட்சி மொழியாக

தொழிற் புரட்சிக்கு அடிப்படை இயந்திரங்கள் என்றால் தகவல் தொடர்புப் புரட்சிக்கு அடிப்படை கணிப்பொறி (Computer) ஆகும்.

1958இல் அன்றைய சோவியத் நாடு ஸ்புட்னிக் என்கிற விண்வெளிக் கோளை வானில் செலுத்தியது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பியது.

இவை காரணமாக விண்வெளிப் பயணம் சாத்தியமாயிற்று என்பது ஒரு புறம் இருக்க; இதன் விளைவாகப் பூமியைச் சுற்றி வரும் செயற்கைக் கோள்கள் மூலம் பூமிப் பந்தின் எல்லா பகுதிகளோடும் உடனடியாகத் தொடர்பு கொள்ளமுடியும் (Global Satellite Communication) என்கிற மகத்தான சாதனை பிறந்தது. ஆம்; மார்ஷல் மாக் லூகன் (Marshall Mc Luhan) சொன்னதுபோல, இந்தப் பூமிப் பந்தே ஒரு குக்கிராமமாக மாறிவிட்டது.

அமெரிக்க அதிபர் ஆப்ரகாம் லிங்கன் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி இலண்டன் மாநகரத்திற்குத் தெரிவதற்கு 5 நாட்கள் பிடித்தன.

இப்போது இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு அஞ்சல் போய்ச் சேர்வதற்கு 10 நாட்கள் ஆகின்றது.

உள்நாட்டு அஞ்சல் போய்ச் சேர்வதற்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகின்றன.

கணிப் பொறியிலே கடிதத்தை தட்டச்சு செய்து, அதை E-Mail என்கிற மின் அஞ்சலாக அனுப்ப வேண்டுமா?

அமெரிக்காவிற்கு மட்டுமல்ல; அண்டத்தின் எந்தப் பகுதிக்கும் செல்ல இரண்டு நொடிகள் போதும்.

இருப்பதாலும்–உலகெங்கிலும் பரவிக் கிடக்கும் தமிழர்களின் முயற்சியால், இன்று தமிழ் கணிப்பொறியில்–வேறு எந்த இந்திய மொழியையும் விட– நம்பமுடியாத அளவிற்கு

அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

கணிப்பொறி என்பது ஒரு தொலைக்காட்சி பெட்டியைப் போல. வெறும் தொலைக்காட்சி பெட்டியின் திரையில் எதுவும் தோன்றாது. அலைவரிசைக்கேற்ப நிகழ்ச்சிகளை– ஒளிநாடாக்களை–இயக்கினால்தான் இந்தப் பெட்டியின் திரை மனமகிழ் வெள்ளித் திரையாக மாறும்.

அதுபோல சாஃப்ட்வேர் என்கிற மென்பொருள் இருந்தால்தான் கணிப்பொறியோடு பேசமுடியும்; இண்டர்நெட் என்கிற இணையத்தின் மூலம் உலகெங்கிலும் தொடர்பு கொள்ள முடியும்.

ஆங்கிலத்தில் எல்லா மென்பொருள்களும் ASCII என்ற ஒரே உள் குறியீட்டு முறையைப் (Coding Standard) பயன்படுத்துகின்றன–அதாவது ஒரே அலைவரிசையில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவது போல!

ஆனால், தமிழிலோ ஒவ்வொருவரும் தங்களுக்கு உசிதம் என்று தோன்றிய மென்பொருளைத் தயாரித்துவிட்டார்கள்– ஒருவருக்கொருவர் போதிய தொடர்பின்மை காரணமாக! இன்று சுமார் 350 மென்பொருள்கள் கணிப்பொறியில் உலாவந்து கொண்டிருக்கின்றன.

இது உண்மையிலேயே பெருமைக்குரிய செய்திதான்!

ஆனால் ஒவ்வொருவரும் ஒரு தமிழ் வடிவக் குறியீட்டு முறையைக் கையாண்டு கொண்டிருக்கிறார்கள் (அதாவது–ஒவ்வொருவரும் தனித்தனி அலைவரிசையில் ஒலி பரப்புவது போல).

விளைவு என்ன?

இன்று இண்டர்நெட் இணையத்தில் '350 தமிழ்கள்' இடம்பெற்றிருக்கின்றன.

அதாவது–ஒரு மென்பொருளில் தயாரிக்கப்பட்ட தமிழ்ச் சொற்களை மற்றொன்று ஏற்றுக்கொள்ளாது.

இதனால் கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்தும் தமிழர்கள் தனித்தனித் தீவுகளாகத் தொடர்பின்றி நிற்கிறார்கள்.

அதுபோலவே நூறுக்கு மேற்பட்ட விசைப்பலகை வடிவங்கள் (Key-board configurations) புழக்கத்தில் உள்ளன.

மேலும், வெளிநாட்டுத் தமிழ் ஆர்வலர்கள் இந்திய அரசின் மின்னணுத் துறையினரால் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறி மேம்பாட்டு மையம் (C-DAC) இத்துறையில் செய்துள்ள முயற்சிகளை அறியாமலும் செயல்பட்டு வந்திருக்கின்றனர்.

எனவேதான் தனித்தனித் தீவுகளாகச் செயல்படும் மென்பொருள்களை ஒன்றிணைத்து அவற்றின் குறியீட்டு அமைப்பையும், விசைப்பலகை வடிவத்தையும் பொதுமைப்படுத்தும் இன்றியமையாத பணியைத் தமிழ்நாடு அரசு இப்போது மேற்கொண்டிருக்கிறது.

அதாவது, இதுதான் தமிழுலகு ஏற்றுக்கொண்ட குறியீடும், விசைப்பலகை அமைப்பும் என்று உலகளாவிய தர நிர்ணயம் செய்யப்பட இருக்கிறது. அதன் விளைவுதான் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மொரீஷியஸ், அமெரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற உலகின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் ஆர்வலர்களையும், கணிப்பொறி வல்லுநர்களையும் தமிழக அரசு ஒரு இடத்தில் திரட்டி, அவர்களிடையே ஒத்த கருத்தினை உருவாக்கும் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த உன்னதப் பணியினை மேற்கொண்டிருக்கிறது.

இதைச் செய்து முடித்த பிறகுதான்
– பனை ஓலையில் இடம் பெற்று
பாங்குற வளர்ந்த தமிழ்மொழி
எந்தவிதத் தடையுமின்றிக்
கணிப்பொறித் திரை மூலம்
உலகெங்கும் வலம் வரமுடியும்!

கன்னியாகுமரியில் வாழும்
தமிழன் காஷ்மீரில் வாழும்
தமிழனோடு மட்டுமின்றிக்
கலிஃபோர்னியாவில் வாழும்
தமிழனோடும், மூவாயிரம்
ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த
தொல்காப்பியனோடும் தொடர்பு
கொள்ளமுடியும்!

கிறித்துவ சகாப்தத்திற்கும்
முற்பட்ட சங்க இலக்கியங்களை
மட்டுமல்ல; உலகத்தின் அறிவுக்
களஞ்சியங்களையெல்லாம்
கணிப்பொறிக்குள் தமிழில்
திணித்துவிட்டால்—நகரத்தில் வாழும்
தமிழன் மட்டுமல்ல பட்டிக்காட்டில்
வாழும் தமிழனும் அவற்றையெல்லாம்
மேய்ந்து அறிவுச் சுடரை
அடையமுடியும்.

தமிழில் பேசி உரையாடும்
ஆற்றலும் கணிப்பொறிக்கு
வந்துவிட்டால் தமிழ்நாடு மட்டுமல்ல!
தமிழ் கூறும் நல்லுலகே ஒரு
குக்கிராமமாக மாறிவிடும்!

இயல்—இசை—நாடகம் என்று
வகுத்து, தமிழை முத்தமிழ்
என்பார்கள்.

இப்போது நான்காவது தமிழ்
உருவாகிறது. அதன் பெயர்தான்
கணிப்பொறித் தமிழ்

அந்த நான்காவது தமிழைச்
செப்பனிட்டுப் பொதுமைப்படுத்தி
தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்க
இருக்கும் பன்னாட்டுத் தமிழர்
தலைவர்களையும், தமிழ்
அறிஞர்கள்யும், கணிப்பொறி
வல்லுநர்களையும்; இவ்விதம்
நான்காவது தமிழ் உதயமாகிட உரிய
முயற்சி மேற்கொண்டிருக்கும்
கலைஞரையும், அவர்தம் அரசையும்,
'நம் முயற்சி வெல்க! வாழ்க!!' என்று
வாழ்த்துவது தமிழர் கடமையாகும்.

இனி நான்காவது தமிழ் அடுத்த
தலைமுறையினரைச் சென்று
சேர்ந்திட முயற்சி மேற்கொள்வது நம்
கடமையும், அரசின் கடமையுமாகும்.

★ ★ ★

உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு

வாழ்த்துச் செய்திகள்

சென்னையில் நடைபெறுகின்ற - தமிழ்நெட் 99 - தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் பற்றிய சர்வதேச மாநாடு மற்றும் கருத்தரங்கு, உலகின் பல்வேறு பகுதிகளில் கம்ப்யூட்டரில் தமிழின் பயன்பாட்டை மேம்படுத்த வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மாநாட்டின் அமைப்பாளர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, மாநாடு சிறப்புற நடந்தேறவும் என் உளமார்ந்த வாழ்த்தினை தெரிவிக்கின்றேன்.

திரு. கே. ஆர். நாராயணன்
மேதகு குடியரசுத்தலைவர்

1999 பிப்ரவரி 7-8ஆம் நாட்களில், சென்னையில் ''தமிழ் இணையம் 99'' என்கிற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டைத் தமிழ்நாடு அரசு நடத்த உள்ளதென்பதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகீழ்த்திசை மொழிகளுக்கு ஒருபெரும் சவாலை ஏற்படுத்தியுள்ளதோடு என்றுமில்லாத அளவிற்கு ஒரு வாய்ப்பை அவற்றிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இலக்கண விளக்கத்துடன் சொற்றொடர் அமைப்போடும் அமைந்துள்ள இந்த மொழிகள் குறைந்த அளவு முயற்சியுடன் கணினியில் தொகுக்கும் அளவிற்கு வளம் பெற்றுள்ளன.

இந்தியாவின் மிகப் பழமையான, வளம் நிறைந்த மொழியான தமிழைக் கணினியில் கொண்டு செல்ல இயலும். தமிழ்மொழியில் புலமையுடன் விளங்கும் மக்கள் கணினியை மிக எளிதாகப் பயன்படுத்தி, வளர்த்துவிடும் தகவல் தொழில் நுட்பத்தின் பயனை நுகர முடியும்.

உலகத்தரத்தின் மேம்பாட்டிற்கு ஏற்பத் தமிழைக் கணினியில் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் படிப்படியாக - முறையாக தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் அனைத்துத் துறைகளிலும் வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

திரு. கிருஷ்ணகாந்த்
மேதகு குடியரசுத் துணைத் தலைவர்

தமிழ் இணையம் 99 என்னும் தகவல்தொழில்நுட்பவியலில் தமிழ் குறித்த உலகத் தமிழ் இணையக்கருத்தங்க மாநாட்டை 1999ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7,8ஆகிய நாட்களில், சென்னையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்திய நாட்டின் எதிர்காலம் தகவல் தொழில்நுட்பவியலில்தான் உள்ளது என்று ஏற்கெனவே கூறியுள்ளேன் எனினும், தகவல் தொழில்நுட்பவியல் வாயிலாகக் கிடைக்கின்ற பற்பல நன்மைகளையும் இந்தியர்கள் அனைவரும் பெற்றிட உறுதி செய்யும் பொருட்டு, தகவல் தொழில் நுட்பவியலில், நமது மாநில மொழிகளின் வளங்களைப் பெருக்குதல் நம் முன் உள்ள உடனடி தேவையாகும். தமிழ் ஒரு உயர் தனிச் செம்மொழியாகும். தற்காலத்தில் எழுகின்ற பல்வேறு அறைகூவல்களையும் எதிர்கொள்ளும் வகையில் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கி, அவற்றைத் தன்வயப்படுத்திக் கொள்வதில் தமிழ்மொழிக்குள்ள ஆற்றலின் வாயிலாக, அதன் செழுமை பன்மடங்கு உயர்கிறது. தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பவியல் துறையில் தொழில் கல்வித்தகுதி பெற்றவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் தோன்றி, பெரும் வெற்றியைப் பெற்றுள்ளார்கள். இவர்கள் இந்தியாவிலும் மற்றும் உலகெங்கும் உள்ள நாடுகளில் பரந்து செயல்பட்டு வருகிறார்கள்.

தகவல் தொழில்நுட்பவியல் புரட்சியில் தமிழைப் பெரும்பங்கேற்கச்செய்வதன் வாயிலாக, தகவல் தொழில்நுட்பவியல் பொதுமக்களையும் சென்றடையச்செய்வதற்கு, தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறை இக்கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது எனக்கு பெரும் மனநிறைவை அளிக்கிறது.

இக்கருத்தரங்கிற்கும், இதில் பங்குபெறுவோர் அனைவருக்கும் என் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக!

திரு. ஏ.பி. வாஜ்பாயி
மாண்புமிகு இந்தியப் பிரதமர்



தகவல் தொழில் நுட்பத்துறையில் தமிழ்மொழிக்கு ஒளிமயமான எதிர்காலம்

திரு. எம். அனந்தகிருஷ்ணன்
துணைத் தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்விக் குழு

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இந்தியாவிலும் மற்றும் உலக அளவிலும் நூற்றுக்கணக்கான தமிழறிந்த கணினி விஞ்ஞானிகள் முனைப்போடு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். தற்பொழுது இந்தியாவில் உள்ள கணினி நிபுணர்கள் இதற்கான புதிய அணுகுமுறையை வழிவகுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். பள்ளி மாணாக்கர்கள், ஆசிரியர்கள், அலுவலகங்களில் பணிபுரிவோர், வியாபாரிகள் மற்றும் பொருளீட்டாளர்கள் கணினியில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு, கலாச்சாரம் போன்ற அம்சங்களில் தமிழ் மொழியில் சிடி. ரோம் பொருட்கள் நாள்தோறும் வந்த வண்ணம் இருக்கின்றன. புதிய புதிய வியாபாரம் தொடர்பான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. தமிழ்நாடு அரசு, மக்களுக்குப் பெரிய அளவில் கணினி அறிவைப் புகுத்திட முடிவெடுத்துள்ளதால், கணினியில் தமிழைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அரசின் நடவடிக்கை, ஆக்கப்பணிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளுக்கான படிவங்கள், தொலைதூரக் கிராமத்து மக்கள் கூட அவ்வப்பகுதிகளிலேயே 'இணையம்' (இன்டர்நெட்) மற்றும் கணினிகள் வாயிலாக தமிழிலேயே பெற்றிட வாய்ப்பு உள்ளது.

கடந்து பத்து பதினைந்து வருடங்களாக தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்குரிய முயற்சிகள் சீராக உயர்ந்து வருகின்றன. ஆரம்பத்தில் தமிழ் எழுத்து வடிவங்களை (Font) வடிவமைப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வந்தது. இவை வெவ்வேறு காலகட்டத்தில் 'மென்பொருட்கள்' மற்றும் வன்பொருட்களுக்குப் பயன்படுத்துவதற்காகவும், அச்சுக் கோர்வைக்காகவும் பயன்படுத்தப்பட்டது. வேறு சில சிறப்புக் காரணங்களுக் காகவும், உதாரணமாக தமிழ் மொழியைக் கற்பிப்பதற்காகவும், எளிய விளையாட்டுகளுக்காகவும் இந்த ஃபாண்ட் வடிவமைப்பு பயன்படுத்தப்பட்டது.

'இன்டர்நெட்' மற்றும் 'ஈ—மெயில்' உலக அளவில் பெரிய வளர்ச்சியடைந்து தகவல் பரிமாற்றத்தில் புதிய சாதனை படைத்து வரும் வேளையில் இந்தியாவிலும் கடந்த ஐந்து வருடங்களில் அவைகள் பெரிய அளவில் பயன்படுத்துவதால் அதில் தமிழைக் கொண்டுவர முயற்சிகள் அதிகரித்துள்ளன. நூற்றுக்கணக்கான தமிழ் தகவல் பக்கங்கள் (வெப் சைட்ஸ்) திறக்கப்பட்டு நாளேடுகள், வார—மாத—நாளிதழ்கள் 'இணையத்தில்' (இன்டர்நெட்டில்) கிடைக்கின்றன. தமிழ் இலக்கியங்கள்—புதிய பழைய இலக்கியங்கள் பல்வேறு தகவல் பக்கங்களில் (வெப்சைட்ஸ்) சேர்க்கப்பட்டுள்ளன. பல தமிழ் மென்பொருட்களை 'இணையத்திலிருந்து' எளிதில் நகல் எடுத்துக் கொள்ளலாம்.

ஈ—மெயில் தொடர்புகளுக்காகவும், பல தகவல் பக்கங்களைத் தொடர்பு கொள்ள பாரம்பரிய கலாச்சார இசை கற்றுக்கொள்ள, கணினி விளையாட்டு விளையாடுவதற்குச் சொல்பிழை கண்டுபிடித்தல், தமிழ் அகராதி போன்றவைகளைப் பயன்படுத்திட ஏதுவாகச் சில நிபுணர்கள் தமிழை மட்டுமே பயன்படுத்தி மென்பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். தகவல் தொழில் நுட்பத்தின் வேகமான வளர்ச்சியின் மூலம் பல புதிய கண்டுபிடிப்புகள் உருவாகவுள்ளன. இதனால், தமிழில் அச்சுக்கோர்வை,

தகவல் பரிமாற்றங்கள், ஈ-மெயில் தகவல் தொடர்புடைய கணினி மூலம் குறிப்பாணைகள் மற்றும் கணினி மூலம் மொழி கற்றல் போன்றவை வெகுவாக முன்னேற்றம் அடையும். தகவல் தொடர்புடைய சாதனங்கள் வலுவடையும். அச்சுத்துறையில் தமிழைப்பயன்படுத்துவதில் மிகப்பெரிய நவீன மாற்றங்களும் முன்னேற்றமும் அடையும்.

இது தொடர்பான பணிகளை மேற்கொள்ளத் துவங்கும் வேளையில் முக்கியமாக தமிழில் தொகுத்தல், பிரித்தல், முறைப்படுத்தி அதை திரும்பப் பெறுதல் போன்ற பணிகளில் நிபுணர்களுக்குச் சவாலாக அமையும் முக்கியப் பணிகளாகும். எதிர்காலத்தில் முக்கியமான பணிகள் என்று எடுத்துக்கொண்டால், மொழியினைத் தொகுத்தல், இயந்திர உதவியுடன் மொழிமாற்றம் செய்தல், ஒருவரது பேச்சை அறிதல், நூலக ஆவணக்காப்பகம் அமைத்தல் போன்ற பணிகளாகும். இவ்வகை வளர்ச்சியின் மூலம் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழி பயன்படுத்துவதற்கான ஒரு சிறந்த எதிர்காலம் உள்ளது எனலாம்.

இவ்வகையான பெருமுயற்சிகளின் பலன்களை முழுமையாகப் பெறவேண்டுமானால், ஒரே வகையான தொழில்நுட்ப முறைகள் கடைப்பிடிக்க வேண்டும். கணினியில் தகவல்களை ஏற்றுதலில் – உதாரணமாக விசைப்பலகை (கீ-போர்டு) மற்றும் தமிழ் எழுத்துக்கள் மற்றும் எழுத்து வடிவ அமைப்புகளின் குறியீடுகள் ஒரே மாதிரியாக வரையறுக்கப்படல் வேண்டும். இதை நிர்ணயிப்பதில் பிப்ரவரி 7, 8 தேதிகளில் நடைபெறவுள்ள பன்னாட்டு இணையம் 99 கருத்தரங்க மாநாடு முடிவெடுக்கும்.



தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு

உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு 7.2.99 அன்று சென்னையில் தொடங்கியது. இருநாள் மாநாட்டிற்கு மேதகு ஆளுநர் பாத்திமா பீவி அவர்கள் தலைமையேற்றார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாநாட்டினைத் தொடக்கி வைத்தார். தமிழ் இணையம் - 99 கருத்தரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ எஸ். சாமிவேலு, மாண்புமிகு இலங்கை கால்நடை வளர்ப்பு மற்றும் தோட்டக் கட்டுமானத்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், மாண்புமிகு மொரீஷியஸ் கல்வி-விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ராமசாமி சிதம்பரம்பிள்ளை மற்றும் மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் திரு. ஆர்.வி. ஜானகிராமன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்கள். வரவேற்புக் குழுத் தலைவர் திரு. முரசொலிமாறன் எம்.பி. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

கருத்தரங்க மாநாட்டில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகளை திரு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் 8.2.99 அன்று நிறைவுவிழாவில் அறிவித்தார். அதன் பின்பு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் நிறைவுவிழா பேருரையாற்றினார். விருந்தினர்களுக்கு முதலமைச்சர் அன்று இரவு விருந்து அளித்துச் சிறப்பித்தார்.

●

இணையத்தில் தமிழ்

திரு. சுஜாதா, தமிழ் எழுத்தாளர், வரவேற்புக்குழு உறுப்பினர்

இண்டர்நெட் இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ்தான்.

இதற்கு சில காரணங்கள் உண்டு.

துவக்க காலத்திலிருந்தே தமிழ் சொற்தொகுப்புக்கான மென்பொருள்கள் கணிப்பொறிக்காக அமைக்கப்பட்டன. என் நினைவில் தமிழ் சொல்தொகுப்பு மென்பொருள்களை 1978லிருந்து பார்த்து வருகிறேன்.

கான்பூர், சென்னை ஐ.ஐ.டி. நிறுவனங்களில் இந்த ஆரம்பகால முயற்சிகள் நிகழ்ந்தன.

தமிழ் மற்ற திராவிட மொழிகளை விட எளிமையானது. எழுத்துக்கள் குறைவு. நவீனத் தமிழ் எழுத்துக்களை ஒட்ட வைக்காமல் எழுதுகிறோம். நேராக தனித்தனியாக எழுதப்படும் ஒரே ஒரு இந்திய மொழியும் தமிழ்தான். இதனால் கணிப்பொறி விசைப்பலகையில் தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் அடக்குவது மிக எளிது. 'ஃபோனட்டிக்' என்று சொல்லப்படும் ஒலியின் வகை விசைப் பலகையில் தமிழ்ச் சொற்களை "அப்பர் கேஸ்" என்னும் மேல் உயர்த்தும் விசையை பயன்படுத்தாமலேயே உள்ளிட முடிகிறது. மேல்நாடுகளில் பணிபுரியும் தமிழர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடம் கணிப்பொறி வசதியுடன் தமிழ் ஆர்வமும் இருக்கிறது. அவர்கள் உற்சாகமாக பல முயற்சிகள் எடுத்து இண்டர்நெட் இணையத்தில் தமிழைக் கொண்டு வருவதில் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகிறார்கள். இவ்வாறான காரணங்களால் தமிழ் மொழி இணையத்தில் விரைவாக - விரிவாகப் பரவியுள்ளது.

இன்று தமிழ் மொழிக்கென்றே நூற்றுக்கணக்கான "வலை மனைகள்" உள்ளன. சிறுகதைகள், கட்டுரைகள், சினிமா, கர்நாடக இசை, சங்க இலக்கியங்கள், திருக்குறள், கம்பன், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், கலைஞர் போன்ற தனிப்பட்ட ஆர்வலர் குழுக்கள் நூற்றுக்கணக்கில் இணையத்தில் உள்ளன. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் வலை மனை, பேச்சுத் தமிழைக்கூடக் கற்றுத்தருகிறது. பேசியே காட்டுகிறது.

தமிழிலேயே வலையில் தேடும் "ஸர்ச் என்ஜின்" என்னும் தேடியந்திர மென்பொருள் ஒன்று இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் ஒரு தமிழ் வார்த்தையை உள்ளிட்டால் அந்த வார்த்தை உலகவலையில் எங்கிருந்தாலும் தேடிக் கொண்டுவந்து பட்டியலிடும் மென்பொருள் இது. இதெல்லாம் நமக்கு முழுவதும் மகிழ்ச்சி தரவேண்டும்தான். ஆனால், ஒரே ஒரு சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

ஆரம்ப ஆர்வத்திலும் - ஏன், அவசரத்திலும் தமிழை இணையத்தில் உள்ளிடுவதில் சுறுசுறுப்பாக இருந்தவர்கள் தர நிர்ணயம் பற்றிக் கவலையேபடாமல் தத்தம் மனதுக்குப் பட்ட வழியில் தமிழை இணையத்தில் உள்ளிட்டார்கள். அதற்கான விசைப்பலகையிலோ உள்குறியீட்டிலோ எல்லோரும் ஒத்துப்போக வேண்டும் என்கிற தேவையை அவர்கள் உணரவில்லை.

இதனால் அவர்கள் ஆர்வத்துடன் உள்ளிட்ட எல்லாத் தமிழ் தகவல்களையும் எல்லோராலும் அணுக முடியாதபடி ஆகிவிட்டது. "என் வலை மனையில் தமிழ் இருக்கிறது. அந்தத் தமிழை நீங்கள் பார்க்க என் எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டும். அதை விலைகொடுத்து வாங்குங்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். சிலர் தம் எழுத்துக்களை வலைமனையிலிருந்து இலவசமாக இறக்குமதி செய்து கொள்ள அனுமதித்தார்கள். இதனால் ஏற்பட்டதை ஒரே வார்த்தையில் சொல்லப் போனால், "குழப்பம்". தமிழ் ஒரே மொழிதான். ஆனால், இண்டர்நெட்டில் அது வெவ்வேறு வேடங்களில் உலவியது. இந்தக் குழப்பத்தைத் தீர்த்து வைக்க சிங்கப்பூரில் 1997-இல் நடைபெற்ற தமிழ் இணையக் கருத்தரங்கத்தில் முழுவதும் விவாதிக்கப்பட்டது.

அந்தக் கருத்தரங்கத்தில் கணிப்பொறிக்கான விசைப்பலகையையும் கணிப்பொறி நினைவகத்தில் தமிழ் எழுத்துக்களை உள்ளிட ஏற்பட்ட உள் குறியீடு களையும் தர நிர்ணயம் செய்தே ஆக வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அவரவர் பணிக்குத் திரும்பியதும் தீர்மானத்தை மறந்து பழையபடி தங்கள் விருப்பப்படியே தமிழை உள்ளிடத் துவங்கினார்கள். இதன் காரணத்தை ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது.

இதையெல்லாம் சில நாட்களாக வெளியிலிருந்து கவனித்து வந்த தமிழக அரசு இப்போது தர நிர்ணயம் செய்தே ஆகவேண்டும். இல்லையேல் நிலை கட்டுக்கடங்காமல் போய் எல்லா முயற்சிகளும் விரயமாகிவிடும் என்று தீர்மானித்து 1999க்கான இணையக் கருத்தரங்க மாநாட்டிற்குப் பொறுப்பேற்று சென்னையில் நடத்துவதாகத் தீர்மானித்தது.

✦ ✦ ✦

தமிழ் இணையம் 99

உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டு அறிக்கை

கணிப்பொறி தொழில்நுட்பமும் இணையத் தொடர்புகளும் வளர்ந்து வரும் இன்றைய நிலையில், இணையத்தின் வாயிலாக உலகெங்கும் உள்ள தமிழர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் மூலம் தமிழ் மொழியை இந்த வளர்ச்சிகளில் முழு அளவில் ஈடுபடுத்த வேண்டும். அவர்களிடையே இணையத் தொடர்புகளை விரிவாக்கப்பட வேண்டும். இத்தகைய தேவைகளைக் கருதி, பிப்ரவரி 7,8 தேதிகளில் சென்னையில் தமிழக அரசு கூட்டிய இந்த உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டில் (தமிழ் இணையம் 99) கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. விசைப்பலகை தரப்படுத்துதல் பற்றிய பரிந்துரைகள்:

கணிப்பொறியில் தமிழில் உள்ளீடு செய்வதற்கான விசைப்பலகைகளின் வளர்ச்சியில் ஒரு பெரும் புரட்சியே உருவாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் ஏராளமான விசைப்பலகைகள் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இவை ஆங்கில எழுத்து வழி விசைப்பலகைகள், தட்டச்சு வழி விசைப்பலகைகள், ஒலியியல் விசைப்பலகைகள் என மூன்று வகைகளில் அடங்கும். இவற்றில் மொழி இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்ட, குறைந்த முயற்சியில் நிறைந்த தகவல்களை உள்ளிடவல்ல எளிய ஒலியியல் விசைப்பலகை பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. விசைப்பலகையை தரப்படுத்தும் முயற்சியில் கீழ்க்கண்ட கருத்துக்கள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

1. மிகுதியாக பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் சுட்டு விரல் இடங்களிலும், குறைவாக பயன்படுத்தும் எழுத்துக்கள் சுண்டு விரல் இடங்களிலும் இடல் வேண்டும்.
2. குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் வடமொழி எழுத்துக்கள் சாவியின் மேற்பகுதியில் இடவேண்டும்.
3. குறில் நெடில் உயிர் எழுத்துக்கள் அடுத்தடுத்து இடல் வேண்டும்.
4. இண எழுத்துக்களாகிய ஙக, ஞச, ணட, நத போன்றவை அடுத்தடுத்து இடல் வேண்டும்.

மேற்கண்ட கருத்துக்களைச் செயல்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ள ஒலியியல் விசைப்பலகை தரப்படுத்தல் படவேண்டி பரிந்துரை செய்யப்படுகின்றது. இந்த முயற்சியில் உலகில் பல பகுதிகளிலும் உள்ள ஆய்வாளர்களின் படைப்புகள் தொகுக்கப்பட்டு வெளியிடல் வேண்டும்.

ஒலியில் விசைப்பலகை பலராலும் ஏற்கப்பட்டு முழு அளவில் பயன்பாட்டிற்கு வரும்வரை, தமிழ்நாடு அரசின் மூலம் அமைக்கப்பட்ட விசைப்பலகைக் குழுவால் பரிந்துரைக் கப்பட்ட தட்டச்சு வகை விசைப்பலகை புழக்கத்தில் இருக்கலாம் என பரிந்துரைக்கப்படுறது.

தமிழக அரசின் விசைப்பலகைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட ஆங்கில எழுத்து வகை விசைப் பலகை, ஆங்கில எழுத்தைக் கொண்டு தமிழ்



Key - Board Recommended by the Sub-Committee of the State - Level Task Force Committee on I.T., T.N. Govt.

Monolingual Glyph Encoding

	0	16	32	48	64	80	96	112	128	144	160	176	192	208	224	240
	0	1	2	3	4	5	6	7	8	9	A	B	C	D	E	F
0			Space	0	@	றி	`	ஜீ		ஞா		ஜு	ஞு	இ	ணை	ஞ்
1			!	1	கி	ளி	ணீ	ஹீ	1	'	ா	து	ஜூ	ஈ	த	ட்
2			"	2	ஙி	ஸி	தீ	க்ஷீ	2	’	ி	நு	தூ	உ	ந	ண்
3			#	3	சி	ஷி	நீ	•	3	“	ீ	பு	நூ	ஊ	ப	த்
4			$	4	ஞி	ஜி	பீ		4	”	ு	மு	பூ	எ	ம	ந்
5			%	5	ணி	ஹி	மீ		5	ஸ்ரீ	ூ	யு	மூ	ஏ	ய	ப்
6	Control		&	6	தி	க்ஷி	யீ		6	ஸ	ெ	ரு	யூ	ஐ	ர	ம்
7			'	7	நி	கீ	ரீ		7	ஷ	ே	•	ரூ	ஒ	ல	ய்
8	Characters		(	8	பி	ஙீ	லீ		8	ஜ	ை	லு	லூ	ஓ	வ	ர்
9			)	9	மி	சீ	வீ		9	ஹ	©	வு	வூ	ஔ	ழ	ல்
A			*	:	யி	ஞீ	ழீ		0	க்ஷ		ழு	ழூ	ஃ	ள	வ்
B			+	;	ரி	[	ளீ	{	10	ஸ்	டி	ளு	ளூ	க	ற	ழ்
C			,	<	லி	\	றீ	|	100	ஷ்	டீ	று	றூ	ங	ன	ள்
D			-	=	வி	]	னீ	}	ஙு	ஜ்	கு	னு	னூ	ச	க்	ற்
E			.	>	ழி	^	ஸீ	~	ஞு	ஹ்	சு	கூ	அ	ஞ	ங்	ன்
F			/	?	ளி		ஷீ	DEL	ஙூ	க்ஷ்	டு	சூ	ஆ	ட	ச்	

183 = Bullet

115 = Pulli

தகவல்களைக் கணிப்பொறிக்கு உள்ளிட விரும்பும் சிறுபான்மையினரின் பயன்பாட்டுக்குப் பரிந்துரைக்கப் படுகிறது.

2. பரிந்துரைக்கப்பட்ட ஒலியியல் விசைப்பலகையில் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3. கணிப்பொறி தமிழ் குறியீட்டுத் தர அமைவுகள்

(i) கணிப்பொறியிலும், இணையத்திலும் தமிழ் மொழியைச் செவ்வனே பயன்படுத்துவதற்குத் தேவையான மென்பொருட்களை உருவாக்குவதற்குத் தேவையான குறியீட்டு முறைகளை ஒருமிக்கப்படுத்தப்பட்ட வழிகளில் செயல்படுத்தப் பட வேண்டும்.

(ii) ஆங்கிலமும், தமிழும் ஒரே சமயத்தில் செயல்படுத்தப்படும் மென்பொருட்களுக்கு ஏற்ப, சிற்பக்குறியீட்டுத் தொகுப்பு (Bilingual Glyph Encoding System) அட்டவணை பரிந்துரைக்கப் படுகிறது.

(iii) தனித்தமிழில் செயல்படும் மென்பொருட்களுக் கேற்ப கீழ்க்கண்ட சிற்பக் குறியீட்டுத் தொகுப்பு (Monolingual Glyph Encloding System) அட்டவணை பரிந்துரைக்கப்படுகிறது.

4. தமிழுக்காக தற்போதுள்ள எழுத்துக் குறியீட்டுத் தொகுப்பை (Tamil Character Encoding System), தமிழ் எழுத்துக்களின் குறிப்பிடத்தக்க இயல்பு களுக்கும், தனித் தேவைகளுக்கும் ஏற்ப மாற்றி அமைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமிழக அரசு இதற்கான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ள ஒரு நிபுணர் குழு அமைக்க வேண்டும். UNICODEன் மாற்ற நிலை வரும் சமயத்தில், கீழ்க்கண்ட தமிழ் எழுத்துக் குறியீட்டு முறை அட்டவணையைக் கருதலாம்.

5. தற்போது புழக்கத்தில் உள்ள தமிழ் வழி மென்பொருட்களை மேற்கண்ட இரு சிற்பக்குறியீட்டு முறைகளுக்கேற்ப மாற்றியமைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய மாற்றுப்பணி விரைவில் கைகூட தமிழ்நாடு அரசு தேவையான உதவிகளை அளிக்க வேண்டும்.

6. வருங்காலத்தில் கணிப்பொறியிலும், இணையத்திலும் ஏற்படும் புரட்சிகரமான பலவித வளர்ச்சிகளுக்கு இணையாக, தமிழ் மொழியைச் செயல்படுத்த உள்ள வாய்ப்புகளை நிறைவேற்ற, தீவிர ஆய்வுகளை உடனடியாக உலகளவில் மேற்கொள்ள வேண்டும். இதற்காக தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட தமிழ் இணைய நிறுவனத்தையும், உலகளவில் ஒரு தமிழ் இணைய வகைத் தொடர்பு அமைப்பையும் உருவாக்கவேண்டும்.

7. இத்தகைய அமைப்பின் மூலம் தமிழின் செவ்விலக் கியங்களும், தமிழ் இலக்கண விதிகளும் இணையத்தில் இடம் பெறவேண்டும். தமிழில் இணைச்சொல் அகராதி, பிழைத் திருத்தும் வசதி, மின் அஞ்சல், கையெழுத்து உணர்தல், ஒலி உணர்தல், எழுத்துரு உணர்தல், ஓலைச்சுவடிகளை அறிதல், மேலும் பல தேவைகளுக்கேற்ப மென்பொருள்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை தமிழ் ஆட்சிமொழியாக உள்ள அரசுகளும், உலகளாவிய தனியார் நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் ஊக்குவிக்க வேண்டும்.

8. உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட வேண்டும்.

★ ★ ★

தமிழ்நாடு முழுவதும் சமுதாய இணைய மையங்கள் அமைக்கப்படும்!

– முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு



இங்கே நம்முடைய அனந்தகிருஷ்ணன் அவர்கள் நேற்றும் இன்றும் நடைபெற்ற கருத்தரங்கில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளையெல்லாம் அறிவித்திருக்கின்றார்கள். வரவேற்புக்குழு தலைவர் தம்பி மாறன் இங்கே உரையாற்றும்போது நேற்று முதலமைச்சர் அவர்கள் இரண்டு தமிழர்கள் ஒன்றாக இருக்க முடியுமா என்ற ஐயப்பாட்டை எழுப்பி அந்தக் கேள்விக் குறியோடு போய்விட்டார். இன்றைக்கு முதலமைச்சர் ஏமாறப்போகிறார் என்று குறிப்பிட்டார். நான் அறிஞர் பெருமக்களிடம் என்றைக்கும் ஏமாறமாட்டேன் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் – அதனை ஆதரித்து அமர்ந்திருக்கின்ற உங்களுடைய திருமுகங்கள் – வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்து வாழ்த்துக்களை கூறியிருக்கின்ற – மேடையிலே அமர்ந்திருக்கின்ற நல்லவர்கள் – இதையெல்லாம் காணும்போது நான் முதலமைச்சராக கோட்டையிலே நாற்காலியிலே அமர்ந்திருக்கின்ற அந்த மகிழ்ச்சியை விட – இங்கே நாற்காலியில்நீங்கள் சூழ அமர்ந்திருக்கும் போது நான் நாற்காலியிலே அமர்ந்திருப்பதாகக் கருதவில்லை. கோபுரத்தின் உச்சியிலே அமர்ந்திருக்கின்ற அந்த மகிழ்ச்சியை அடைகிறேன்.

தமிழர்கள் ஒன்றுகூடி ஒரு நல்ல முடிவினை எடுத்தார்கள் என்பது உலகத்திலே இருக்கின்ற ஏழு அதிசயங்களுக்கும் அப்பாற்பட்ட எட்டாவது அதிசயமாக இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. எனவே தான் அளவற்ற மகிழ்ச்சியோடு நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டினால் என்ன பயன் விளையப்போகிறது – இந்தக் கருத்தரங்கு சாதிக்கப் போவதென்ன – என்றெல்லாம் எண்ணியவர்கள், எழுதியவர்கள், பேசியவர்கள் உண்டு. இன்றைக்கு எடுக்கப்பட்ட முடிவுகளுக்குப் பிறகும் கூட, விமர்சிப்பவர்கள் இருக்கக்கூடும். ஒரு பழமொழி உண்டு. கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல என்று. அந்தப் பழமொழியை எதற்குப் பயன்படுத்து கிறார்கள் என்றால், ஒரு நல்ல காரியம் செய்வதற்காக சென்ற போது அங்கிருந்து பயங்கரமான பூதம் புறப்பட்டுவிட்டது என்பதற்காக – நல்லது செய்யப் போய், கெடுதலாக வந்தது என்பதற்காக பயன்படுத்துகின்ற பழமொழி அது. ஆனால் ஒரு கவிஅரங்கத்திலே தலைமை வகித்து நான் ஒரு கவிதையைப் பாடும்போது குறிப்பிட்டிருக்கிறேன்,

'கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்பாரே
அதன் பொருள் என்ன புரிகிறதா?
கிணறு வெட்ட 'மண்' குவியும் – அது ஒரு பூதம்.
பூமிக்குள் அடைந்திருந்த 'காற்று'
வெளிக்கிளம்பும் – மறு பூதம்
பொங்கி வரும் புது 'நீர்' – அடுத்த பூதம்
பொலிவுமிகு 'வான்' தெரியும் நீர் மீது – நாலாம் பூதம்.
புவியாளும் ஆதவனின் 'தீ' க் கதிரால்
அந்நீரும் தூய்மையாகும் – ஐந்தாம் பூதம்
இந்தப்
பஞ்ச பூதம் வருவதைத் தான் பழையவர்கள்
அழகாய்ச் சொன்னார்
கிணறு வெட்ட பூதம் புறப்படும் என்று!'

நேற்றும் இன்றும் கருத்தரங்கில் கலந்து கொண்ட அறிஞர் பெருமக்கள் கிணறு வெட்டினார்கள். பஞ்ச பூதம் – நீர், நிலம், காற்று, நெருப்பு, வான் இவைகள் எல்லாம் புறப்பட்டதைப் போல் – அனந்த கிருஷ்ணன் அவர்கள் இங்கே அரிய முடிவுகள் எடுக்கப்பட்டதை விளக்கியிருக்கிறார்கள்.

இன்று வருகை தந்து உரையாற்றிய அன்பிற்குரிய 'சாம்பிட்ரோடா' அவர்களும் நேற்றையதினம் உரையாற்றிய மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். உரிய நேரத்தில், உரிய இடத்தில் இந்தக் கருத்தரங்க மாநாடு நடைபெறுவதாக மாத்திரமல்ல – தமிழைப் பொருளாதார மொழி ஆக்குவதற்கு உலக அங்கீகாரம் வேண்டும், அதனைப் பெற தமிழ், பரவலாகப் பயன்படுத்தக்கூடிய மொழியாக வேண்டும். தமிழ் இணையம் ஆக்கப் பூர்வமாகச் செயல்பட்டால் தமிழ் நிச்சயமாக உலக உபயோக மொழியாக உருவாகும் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலும் அதை நோக்கி முன்னேறுகின்ற வகையிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

இலங்கை அமைச்சர் திரு.தொண்டைமான் அவர்கள் நேற்று உரையாற்றும்போது – தமிழர்கள் வாழும் உலகில் சூரியனே அஸ்தமிப்பதில்லை என்ற வகையில் உலகம் முழுதும் தமிழர்கள் பரவியுள்ளார்கள். இந்தத் தமிழர்களை தமிழ்மொழி மூலம் இணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கணினியிலும் இணையத்திலும் பயன் படுத்தப்படும் தமிழ் மொழி தமிழ் மக்களுக்கு அந்நியமாகப் போய்விடக் கூடாது. தமிழ்மொழி ஆளுமையும் கணினி அறிவும் ஒன்றாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் மையக் கருத்தாக வைத்துத் தான் நேற்றும் இன்றும் ஆய்வரங்கம் நடைபெற்று நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பச் சிக்கல்களுக்கு இந்தக் கருத்தரங்கு நல்ல முடிவுகளை மேற்கொள்ளும். அதனால் உலகத் தமிழ் மக்களிடையே தடையற்ற இணைப்பு ஏற்படும் என்று மொரிஷியஸ் தீவின் கல்வி அமைச்சர் திரு.ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். அதையும் மறவாமல் அந்த நிலை நோக்கி நடை போடுகின்ற வகையிலே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இன்று நாம் இங்கே "தமிழ்நெட் 99" நடத்துகிறோமென்றாலும் – இதற்கு விதை போடுவதைப் போல – திரு. கோவிந்தசாமி அவர்கள் தமிழ்நெட் 97 என்று சிங்கப்பூரில் நடத்தி, அதனுடைய தொடர்பாக இந்த மாநாடு இங்கே நடைபெறுகின்ற நேரத்திலே வந்திருந்து எடுக்கப்பட்ட முடிவுகளை வரவேற்றிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாகும்.

இந்த மாநாட்டிலே தமிழக அரசின் Information Technology Task Forceஇன் துணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அனந்த கிருஷ்ணன் அவர்களும், அந்தக் குழுவினரும்; மாநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட செயற்குழுவும் இணைந்து இங்கே திரு. அனந்தகிருஷ்ணன் விளக்கிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

இது உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்கள் அதாவது – **உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உருவாக்கிய திட்டம் என்பதில் பெருமையடைகிறேன்.**

ஆங்கிலம் படைத்திருக்கும் சாதனைகள் மீது ஒட்டு மாங்கனி போல தமிழை ஒட்ட வைக்கவேண்டிய திறமை, தமிழ் மண்ணுக்கு இருப்பதையும், அதே நேரம் தமிழ் மொழியின் தனித் தன்மைக்கு ஒரு சிறிதும் ஊறு நேரா வண்ணம் அதைக் காத்திட வேண்டுமென்றும் மலேசிய அமைச்சர் திரு. டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதை மனதிலே வைத்துக் கொண்டு இன்றைய தினம் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

விசைப் பலகை அமைப்பைப் பொறுத்தவரையில் ஒரு ஒத்தக் கருத்து உருவாகியிருக்கின்றது. Phonetic என்கிற ஒலி இயல் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்பட்ட விசைப் பலகைக்கே ஒத்த கருத்து உருவாகி யிருக்கின்றது; அது பரிந்துரைக்கப் பட்டிருக்கின்றது.

ஆனால் இது குறித்து சிலருக்கு அதிருப்தி இருக்கலாம் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஏனெனில் ஏற்கெனவே பழகியவர்கள் தங்கள் பழக்கத்திலிருந்து மாற்றிக் கொள்வது இங்கு மட்டுமல்ல, உலகமெங்கிலும் மிகவும் கஷ்டமான காரியம்தான்.

ஆனால் நான் விசாரித்து அறிந்த வரையிலே பரிந்துரைக்கப்பட்டிருக்கும் இந்த விசைப் பலகையைப் பயன் படுத்துவதற்கு எந்தவித மறு பயிற்சியும் Re-training வேண்டாமென்றும்; இரண்டு

அல்லது மூன்று நாட்கள் முயன்றாலே போதும் என்றும்; சொல்லப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்ல –

இதன் அனுகூலம் என்னவென்றால் “ஷிப்ட் கீ”யை உபயோகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறார்கள். கிரந்த எழுத்துக்களுக்கு மட்டும் தான் அந்த “ஷிப்ட் கீ”யை உபயோகப்படுத்த வேண்டும்.

இதுவே “the best and the efficient” என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

தனியார் துறையும் இது போன்ற விசைப் பலகைகளை விரைவில் தயார் செய்து அளிக்க ஒப்புக் கொண்டிருப்பது அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிடுகிறேன்.

எதையும் வலுக்கட்டாயமாகத் திணிப்பதில் எனக்கோ, இந்த மேடையில் வீற்றிருப்பவர்களுக்கோ நம்பிக்கை இல்லை.

“மக்கள் குரலே மகேசன் குரல்” என்கிற தத்துவத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற இயக்கத்தைச் சேர்ந்தவன் நான்.

எனவே பெருவாரியானவர்கள் இந்த விசைப் பலகை முறையை ஆதரித்தால் அதுவே தானாக நிலைத்து நின்று விடும் என்பதில் எனக்குச் சந்தேகம் சிறிதுமில்லை.

மாற்றங்கள் நிச்சயம் தேவை தான் என்று எடுத்துரைக்கப்பட்டால் அது நிச்சயமாக கவனத்தில் கொள்ளப்படும்.

அடுத்தது–

ஆங்கில வழி உள்ள Romanised விசைப் பலகை Key Board – அதாவது ஆங்கில மொழியில் உள்ள சின்ன `a'வை அடித்தால் “அ” என்ற தமிழ் எழுத்தும், Capital `A'வை அடித்தால் “ஆ” என்ற தமிழ் எழுத்தும் – சின்ன `k'வை அடித்தால் “க” என்ற தமிழ் எழுத்தும் வரக்கூடிய விசைப் பலகை ஆகும்.

வெளிநாட்டில் தமிழைப் பேச மட்டுமே தெரிந்தவர்கள், இந்த முறையை நம்பி இருக்க வேண்டி இருக்கிறது. எனவே இதில் கை வைக்கவில்லை.

வெளி நாட்டில் வாழும் தமிழர்களுக்குத் தமிழை எழுதத் தெரியாத காரணத்தால் அவர்கள் இந்த முறையைக் கையாள வேண்டியிருக்கிறது. எனவே இதில் நாம் குறுக்கிட வேண்டிய அவசியமில்லை.

அடுத்தபடியாக

குறியீட்டு முறைகள்– Coding System.

இந்தக் குறியீட்டு முறை எப்படி ஒரு பிரச்சினையாக ஆயிற்று என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரசியலில் – சமுதாயத்தில் – நாம் எல்லாம் இட ஒதுக்கீடு வேண்டுமென்று கூறி வெற்றி பெற்றவர்கள்.

இன்னமும் அதில். திருப்தி அடையாமல் உச்ச நீதி மன்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள்.

அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கோரிக் கொண்டிருப்பவர்கள்.

இந்தக் குறியீட்டு முறையிலும் இட ஒதுக்கீடு முறை வந்து புகுந்திருப்பது ஒரு ஆச்சரியமான விஷயம் தான்.

Uni Code என்கிற சர்வதேச அமைப்பு நம்முடைய தமிழ் மொழிக்கு இப்போதுள்ள Eight Bit முறைப்படி ஒவ்வொரு மொழிக்கும் 256 இடங்களைத் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் Control Characters களுக்கும் plus - minus - equal to - என்ற அடையாளங்களுக்கும் 1,2,3,4,5 என்கிற எண்களுக்கும் 64 இடங்கள் போய் விடுகின்றன. ஆக, தமிழுக்காக இட ஒதுக்கீடு செய்திருப்பது – அந்த 64

போக 192 இடங்கள் தான். நமக்குத் தேவையோ 512 இடங்கள். ஆக இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையில் இப்போதைக்குத் தீர்வு ஏற்படாது.

இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் இப்போதுள்ள Eight Bit System, 16 Bit System ஆக அமையும் என்றும்; அப்போது அந்த Uni Code இல் 65,000 இடங்கள் உருவாகும் என்றும்; அப்போது வேண்டுமானால் 512 இடங்களை நாம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்படித் தான் சொல்ல முடியும் – சொல்லியிருக்கிறார்கள் என்று – எனக்குத் தெரியுமென்று சொல்ல முடியாது. அப்படி 512 இடங்கள் ஒதுக்கப்பட்டால் இப்போது “கா”வை அடிக்க ‘க’வுக்கு ஒரு இடமும், ‘க’ வுக்குப் பக்கத்தில் கால் வாங்க ஒரு இடமும் இருக்கிறது. இது இல்லாமல் ‘கா’ வுக்கே தனி ஒரு இடம் வந்து விடும்.

எனவே அந்த 512 இடங்கள் கொடுத்திருந்தால் இப்போது குறியீட்டு முறைகள் பற்றி நாம் விவாதிக்க வேண்டிய அவசியமே இருக்காது. எனவே அந்த இடங்களைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அதற்காக;

தமிழக அரசு International Unicode Consortium (இண்டர்நேஷனல் யூனிகோட் கன்சார்ஷியம்) உறுப்பினர் ஆவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே அறிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே,

நம்முடைய தமிழ் ஆட்சி மொழிகளாக இருக்கும் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் அதில் உறுப்பினர்களாக இருப்பதால் அவர்களும் நம்முடைய வருங்கால இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் துணை புரிவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

எனவே அதுவரையிலே நாம் இருக்கிற இடங்களை வைத்துக்கொண்டு அவைகளை வரிசைப்படுத்தி ஒரு குறியீட்டு முறையை உருவாக்க வேண்டும்.

அதற்காக தமிழுக்காக மட்டுமே பயன்படக் கூடிய Mono lingual encoding முறை இப்பொழுது பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அடுத்து,

தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமான **bi-lingual encoding system** தேவை என்றால் இதையே சிறு மாற்றங்களோடு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த முடிவுகள் கல்லால் செதுக்கப்பட்ட மாற்ற முடியாத முடிவுகள் அல்ல. உலகில் நிலையானது எதுவென்றால் மாறுதல் என்று காரல் மார்க்ஸ் சொன்னான். எனவே எதையும் மாற்றலாம். அதனால் தான் இந்த முடிவுகள் கல்லால் செதுக்கப்பட்ட மாற்ற முடியாத முடிவுகள் அல்ல என்றேன்.

இவைகளை எல்லாம் DRAFT CODE என்று தான் நான் அழைக்க விரும்புகிறேன். வெறும் DRAFT தான்.

உடனடியாக இவைகள் ஏடுகள் மூலமாகவும் இண்டர்நெட் மூலமாகவும் உலகமெங்கும் தெரிவிக்கப்படும். தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள தமிழ் ஆர்வலர்கள் இதைப் பார்த்து – உபயோகித்து அதில் தங்களுக்கு ஏற்படும் அனுபவங்களைக் கொண்டு அவர்கள் விரும்புகிற மாற்றங்களை உடனுக்குடன் தெரிவிக்கலாம்.

அதற்காக தமிழக அரசு – மலேசிய அரசு – சிங்கப்பூர் அரசு – பாண்டிச்சேரி அரசு – இலங்கை அரசு ஆகிய ஐந்து

அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழு விரைவிலே அமைக்கப்படும்.

அந்தக் குழுவினர் தெரிவிக்க இருக்கின்ற அந்த மாற்றங்களை எல்லாம் ஆராய்ந்து மூன்று மாதக் காலத்தில் இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும்.

மீண்டும் இது போன்ற ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

தேவையானால் வீடியோ Conferencing மூலம் தமிழ்நாட்டில் நானும், மலேசியாவில் டத்தோ அவர்களும், இலங்கையில் தொண்டைமான் அவர்களும், சிங்கப்பூர் பிரதிநிதியும் சேர்ந்து இறுதி முடிவினை அறிவிப்பது உகந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

எனவே, மே மாத இறுதிக்குள்ளாக உலகமெங்கும் இருக்கும் ஆர்வலர்களும் நிபுணர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்த முயற்சியில் ஏதாவது சிரமங்கள் இருந்தால், குறைகள் இருந்தால் அவைகளைத் தெரிவிக்கலாம்.

டத்தோ சாமிவேலு அவர்கள் பேசும்போது – The Tamils the world over will look to Tamil Nadu as the repository of Tamil learning என்று சொன்னார்கள்.

அதைப் போலவே – மதிப்பிற்குரிய மொரீஷியஸ் நாட்டின் அமைச்சர் ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் I view this Conference as a land mark event, because it is setting the foundation to the creation of a Tamil Virtual World என்று சொன்னார்கள்.

தமிழ்நாட்டில் ரூ.430 கோடியில் 10,000 சமுதாய இணைய மையங்கள்

*தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்களை தமிழக அரசு வேர்ல்டு—டெல் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கிறது. இதற்கான திட்ட அறிக்கையை முதலமைச்சர் **கலைஞர்** அவர்களிடம் வேர்ல்டு—டெல் நிறுவனத்தின் தலைவர் சாம்பிட்ரோடா 9.2.99 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.*

இதன் பின்னர் திரு. சாம்பிட்ரோடா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்களை அமைப்பதற்கு நூறு மில்லியன் டாலர் (430 கோடி) தேவைப்படுகிறது. இதில் ஒரு பங்கினை தமிழக அரசின் சார்பில் அளிக்குமாறு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் கோருகிறோம்.

வருகிற 12ஆம் தேதி எங்கள் நிறுவனத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் இலண்டனில் நடைபெறுகிறது. அப்போது இந்தத் திட்டத்திற்கான முதலீட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

இந்த முதலீட்டுக்கு 11 சதவிகிதமோ அல்லது 26 சதவிகிதமோ தமிழக அரசு எடுத்துக் கொண்டு முதலீடு செய்யலாம். நாங்கள் பெரும் பகுதி முதலீட்டினை ஏற்போம். இந்திய சட்டத் திட்டத்திற்கு ஏற்ப இந்த முதலீடு இருக்கும்.

இதனை நிர்வகிக்க தனி நிர்வாகம் அமைக்கப்படும். இதற்காக இங்குள்ள சிறு முதலீட்டாளர்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த திட்டப்படி முதல் ஓராண்டில் தமிழ்நாட்டில் 1500 சமுதாய இணைய மையங்களையும் நான்கு அல்லது ஐந்தாண்டுகளில் 10 ஆயிரம் மையங்களும் அமைக்கப்பட வாய்ப்புகள் உள்ளது.

இதற்காக நாங்கள் உலக வங்கி உதவியை கோர மாட்டோம். ஏனென்றால் இது பொருளாதார நோக்கிலான திட்டம். எனவே இதற்கு உதவியோ மானியமோ கோர மாட்டோம். தனிப்பட்டவர்களிடம் தற்போது இந்தியாவில் 33 இலட்சம் கம்ப்யூட்டர்கள் அளவிற்கு உள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இது ஒரு கோடியாக உயரும்.

தமிழ்நாட்டில் அமையும் சமுதாய இணைய மையங்களுக்கிடையே இணைப்பு தருவதற்காக தனி கேபிள் தொடங்கப்படும்.

நேற்று நடந்த மாநாட்டில் ஒரே மாதிரியான விசைப் பலகையை உபயோகிப்பது என்று எடுத்த முடிவு இந்த மையங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம் மற்றும் சமுதாயப் பணிகளில் இவை பொது மக்களுக்கு பயன்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை உருவாக்கித் தருமாறு முதல்வரிடம் கேட்டுள்ளோம். ஜூன் மாதத்திற்குள் உருவாக்கித் தருவதாக முதலமைச்சர் கலைஞர் உறுதியளித்துள்ளார்.

★ ★ ★

அதன் அடிப்படையில் வெளி நாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயிலுவதற்காக ஒரு **Virtual University** ஐ இண்டர் நெட் என்ற இணையத்தின் மூலம் துவக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் என்று அதற்கு உங்கள் அனுமதியோடு பெயர் சூட்டுகிறேன்.

திரு. ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் மேலும் கூறினார் – Today we have a unique opportunity through the magic of electronic communication, the interne t, tu consolidate ourties என்று கூறினார்கள். அதற்காகத்தான் இந்த இணையப் பல்கலைக்கழகம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கணிப் பொறி மூலம் எதையும் செய்யலாம்; எதையும் சாதிக்கலாம். எனவே அதற்கு முழு முதல் தேவை Software என்கிற மென் பொருள்களாகும். எனவே, அந்த வாய்ப்பை நாம் உருவாக்க வேண்டும்.

தமிழில் மென்பொருளை உருவாக்கும் வாய்ப்பை ஊக்குவிப்பதற்காக "தமிழ் மென் பொருள் வளர்ச்சி நிதி" Tamil Software Fund என்கிற நிதியை தமிழக அரசு உங்கள் அனுமதியோடு உருவாக்கவிருக்கிறது.

தமிழ் மென்பொருள் உருவாக்குவதற்குத் தனியார்களை மட்டும் நம்பியிராமல் அதில் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் தங்கள் பங்கினைச் செலுத்த வேண்டும் என்பதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

தமிழின் வளர்ச்சியை இணையத்தில் மேம்படுத்தும் பொருட்டு – தமிழ் பேச்சுச் செயலாக்கம் (Voice Processing), **தமிழ் கையெழுத்துச் செயலாக்கம் (Hand writing Processing)**, ஒலி வழி எழுத்துரு அறிதல் (Optical Character Recognition) இணையத்தின் வலையை தமிழிலேயே தேடி அறிய செயலாக்கம் (Web Browsing); மற்றும் Multi Media போன்ற மென் பொருள்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள – **சென்னை அண்ணா பல்கலைக் கழகம், கோவை பாரதியார்** பல்கலைக்கழகம், திருச்சி ரீஜினல் பொறியியல் கல்லூரி ஆகியவைகளில் மூன்று ஆய்வு இருக்கைகள் **(CHAIRS)** உருவாக்கப்படும்.

தமிழ் இணையத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள்ள "தமிழ் இண்டர்நெட் ரிசர்ச் அண்டு டெவலப்மெண்ட் சென்டர்" ஒன்று உருவாக்கப்படும்.

இத்தகைய பணிகளையெல்லாம் மேற்கொள்ள தமிழக அரசின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல் துறை புரட்சியைப் பாமர மனிதனிடத்திலே கொண்டு செல்ல வேண்டும்.

அதுதான் நமது குறிக்கோள்.

இன்று நாம் எடுக்கும் முடிவுகள் ELECTRONIC GOVERNMENT - உருவாவதற்கான முதல் படியாகும். அத்தகைய அரசு ஒரு TRANSPARENT GOVERNMENT ஆகவும் இருக்கும். அதாவது ஒளிவு மறைவு இல்லாத வெளிப்படையான இப்போது இருக்கின்ற தமிழக அரசைப் போல இருக்கும்.

World Tel நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் சாம் பிட்ரோடா நாளை எங்களைச் சந்தித்து அவர்களது திட்டத்தை விளக்க இருக்கிறார்.

இந்த மாநாட்டினுடைய முடிவுகளுக்காகவும் நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம். ஏனென்றால் இண்டர்நெட் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைத்து, அதை சிறு நகரங்களிலும், கிராமங்களிலும் பொருத்தினால் அது தமிழ்நாட்டு மக்களை ஆங்கிலம் தெரிந்து கொள்ளும்படி மறைமுகமாக வற்புறுத்துவது போல ஆகிவிடும்.

எனவே, தமிழ் இண்டர்நெட் வசதியோடு இன்னும் ஓராண்டில் தமிழ்நாடு முழுதும் ஆயிரம் சமுதாய இண்டர்நெட் இணைய மையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே; அரசாங்கத்தின் எல்லா படிவங்களும் (Forms) இன்னும் ஓராண்டுக் காலத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் இணைந்து கிடைக்க வழிவகை செய்யப்படும்.

மதிப்பிற்குரிய மொரீஷியஸ் அமைச்சர் ராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்கள் A Tamil global Village is in the making என்று சொன்னார். அதையே நானும் சொல்கிறேன். A TAMIL GLOBAL VILLAGE IS IN THE MAKING.

அதை உருவாக்க நாம் எல்லாம் பாடுபடுவோமாக. நன்றி – வணக்கம்.

– உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டின் நிறைவு விழாவில் 8.2.99 அன்று முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

★ ★ ★

ஜாதி ஒழிந்த ஒரு சமுதாயத்தை மத வேறுபாடற்ற நாட்டை உருவாக்குவோம்!

- முதலமைச்சர் கலைஞர்

திருவாரூரில் நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியில் கடலூர் மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்டங்கள் - திறந்து வைக்கப்படுகிற கட்டிடங்கள் - அடிக்கல் நாட்டப்படுகிற திட்டங்கள் - இவைகளுக்கிடையே என்னுடைய நீண்டநாள் கனவான சமத்துவபுரம் தொடக்க விழா - இத்தனையையும் இணைத்து நடைபெறுகின்ற இந்த நிக்ழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் காண்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

ஒரு கோடியே 15 ஆயிரம் ரூபாய் செலவில் சமத்துவபுரம் உருவாக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப் பட்டிருக்கின்றது. 8 கோடியே 47 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் 13,887 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் படுகின்றன. அடையாளத்திற்காக ஏழெட்டு பேர்களுக்கு இங்கே வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கெல்லாம் இந்த விழா நிறைவுற்று - அதிகாரிகள் வாயிலாக வழங்கப்பட இருக்கின்றது. 56 கோடியே 87 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் 343 திட்டங்களுக்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது. 23 கோடியே 19 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. 1,459 திட்டங்களும், கட்டடங்களும் இன்றைக்குத் தொடங்கப்பட்டுள்ளன.



ஆக மொத்தம் 89 கோடியே 55 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு திட்டங்கள் இந்த கடலூர் மாவட்டத்தில் இன்றைய விழா வாயிலாக மக்களின் பயன்பாட்டிற்காக அறிவிக்கப்பட்டுள்ளன. தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அதற்கான அடிக்கற்களும் நாட்டப்பட்டுள்ளன.

நால்வரில் உழைத்த பக்தசிகாமணி அப்பர் பிறந்த ஊர் திருவாரூர்

திருவாரூர் என்கிற சிறப்பு மிகுந்த இந்த ஊரில் - மேலும் இந்த ஊருக்குச் சிறப்பு சேர்க்கின்ற வகையில் சமத்துவபுரம் உருவாகியிருக்கின்றது. முதலில் இங்கே பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் தன் வரவேற்புரையில் அப்பர் பிறந்த ஊர் திருவாரூர் என்று குறிப்பிட்டார். இந்தத் திருவாரூரில் பிறந்த அப்பர் நால்வரில் ஒருவர். சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர், அப்பர் என்ற இந்த நால்வரில் உழைத்த பக்தசிகாமணி யார் என்றால் - அவர் அப்பர்தான். சுந்தரர் திருநாவலூரில் பிறந்தவர். அந்த ஊரும் இதற்கு அருகே உள்ளதுதான். அவர் மிகுந்த மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்தார். அந்த மகிழ்ச்சியின் அடிப்படையில் பல பதிகங்களை அவர் பாடியிருக்கிறார். திருஞானசம்பந்தரோ பல்லக்கில் ஏறிச் செல்கிற அளவிற்கு அவர் வாழ்ந்தார். ஆனால் அப்பர் - முதலில் அவருடைய பெயர் திருநாவுக்கரசர் - பிறகு தான் அப்பர் என்று அழைக்கப்பட்டார். இவர் உழவாரப் பணியை மேற்கொண்டு கோவில்களில் மண்டிக் கிடக்கின்ற புல் பூண்டுகளை அகற்றி ஆலயங்களைத் தூய்மைப் படுத்துகின்ற உழவாரப் பணியை மேற்கொண்டு - அதற்கென்றே கையில் ஒரு கருவியை வைத்துக் கொண்டுதான் அப்பர் காட்சி தருவார்.

மாணிக்கவாசகரும் அமைச்சராக இருந்தவர். பாண்டிய மன்னனிடம் குதிரை வாங்கி வருவதாகக் கூறி பெற்ற பணத்தில் குதிரை வாங்காமல் கொடுத்த பணத்தில் ஆலயத்தைக் கட்டி முடித்து - அதன் பின்னர் அதற்காக மன்னனின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டது. எனவே இந்த நான்குபேரில் திருநாவுக்கரசர்தான் உழைத்து தன்னுடைய பக்தியை வெளிப்படுத்தியவர்.

அப்படிப்பட்ட, உழைத்த உத்தமர் அப்பர் பிறந்த ஊர் இந்த திருவாரூர் என்கிற போது - அந்த உழைப்புக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற அந்த வகையில்தான் - உழைக்கும் மக்களுக்காக சமத்துவபுரத்தை இந்த ஆட்சி இங்கே உருவாகியிருக்கிறது.

5.7.1998 அன்றுதான் இந்த சமத்துவபுரத்திற்கு நான் தான் அடிக்கல் நாட்டினேன். மிக விரைவாகப் பணிகள் முடிவுற்று இன்று நாமெல்லாம் பாராட்டத்தக்க அளவிற்குத் திறக்கப்படுகிறதென்றால் - இந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பு மிகுந்த பணியும், மாவட்டத்தின் அமைச்சர் தம்பி பன்னீர் செல்வத்தின் பணியும் சட்டப் பேரவை உறுப்பினர் ராமசாமியின் பணியும் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழகத்தின் 12வது சமத்துவபுரமாக இந்த சமத்துவபுரம் அமைந்துள்ளது

இந்தச் சமத்துவபுரங்களை அமைக்க ஏன் இந்த அரசு முயற்சி எடுத்து - இதுவரையில் 11 சமத்துவபுரங்களை ஆங்காங்குத் திறந்து வைத்து - 12வது சமத்துவபுரமாக இதை அமைத்திருக்கிறது என்பதை தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே 100 குடியிருப்புகள் அமைந்துள்ளன. இதில் ஆதிதிராவிடர்களுக்கு 40 வீடுகளும் - பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு 25 வீடுகளும் - இதர வகுப்பினருக்கு ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அல்லாத ஓரளவு முன்னேறிய வகுப்பினருக்கு 10 வீடுகளும், இந்த 100 வீடுகளில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

இந்த நூறு வீடுகள் கட்டுவதற்கான அரசு மானியம் 35 இலட்ச ரூபாயும் - கூட்டுறவு வீட்டு வசதி சங்கக் கடன் தொகையாக 10 இலட்சம் ரூபாயும் - குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வாயிலாக 2 இலட்சம் ரூபாயும் ஆக - இந்த நூறு சமத்துவபுர வீடுகளைக் கட்டிட மொத்தம் 47 இலட்சம் ரூபாயும் இந்தச் சமத்துவபுரத்தில் சாலை வசதி பணிகளுக்காக 9 இலட்சம் ரூபாயும் - சிறு பாலங்கள் அமைக்கும் பணிகளுக்கு 2 இலட்சம் ரூபாயும் - மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு 8 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயும்

மின் இணைப்பு கொடுக்க 81 ஆயிரம் ரூபாயும் - தெருவிளக்குகள் அமைக்க 35 ஆயிரம் ரூபாயும், சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு 4 இலட்சம் ரூபாயும் - வணிக வளாகம் கட்டுவதற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் - சத்துணவுக்கூடம் கட்டுவதற்கு ஒரு இலட்சத்து 45 ஆயிரம் ரூபாயும் - நியாயவிலைக்கடை அமைக்க ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாயும் - நூலகக் கட்டடம் கட்ட 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், தொலைக்காட்சிப் பெட்டி அறை அமைக்க 21 ஆயிரம் ரூபாயும், பேருந்து நிழற்குடை அமைக்க 35 ஆயிரம் ரூபாயும் - கழிவு நீர் கால்வாய் கட்டும் பணிகளுக்காக 2 இலட்சம் ரூபாயும் - மின் அழுத்த மாற்றி அமைக்க 5 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயும் - சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக 1 இலட்சம் ரூபாயும் - சிறுவர் பூங்கா அமைக்க 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் - மரக்கன்றுகள் நட மற்றும் மரப்பாதுகாப்பு சுவர் அமைக்க 57 ஆயிரம் ரூபாயும் - சாலைப் பலகைகளை அமைக்க 7 ஆயிரம் ரூபாயும் - மற்றும் இந்த சமத்துவபுரம் அமைக்கப்பட்டிருக்கும் நிலத்தின் மதிப்பாக 9 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் ஒரு கோடியே 15 ஆயிரம் ரூபாய் செலவில் இந்த 12வது சமத்துவபுரம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதைப்பற்றி இன்னமும் குறை சொல்பவர்களும் - விமர்சிப்பவர்களும் தமிழகத்தில் சிலர் இருப்பதாக முன்னால் பேசிய அமைச்சர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. குறை இருந்தால் அதை சுட்டிக் காட்டினால் அந்தக் குறைகளை தீர்க்கக்கூடிய முயற்சியில் ஈடுபடக்கூடிய அரசுதான் இந்த அரசு. அதற்காக சமத்துவபுரம் கட்டுவதே தவறு என்று யார் சொன்னாலும் அதை நான் கேட்பதாக இல்லை.

சமத்துவப்புரம் அமைப்பதால் சாதி வித்தியாசம் போய்விடுமா என்று கேட்பவர்கள் - சமத்துவபுரத்தால் தங்களுடைய பிழைப்புகெடுகிறதே என்று எண்ணுகிறார்களே தவிர - வேறு யாரும் சமத்துவபுரத்தை குறைசொல்ல மாட்டார்கள்.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "ஸ்டேட்ஸ்மென்" ஏடு பாராட்டியுள்ளது

இங்கே உள்ளவர்கள் இதைப் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கல்கத்தாவிலிருந்து வெளிவருகின்ற "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை இந்த சமத்துவபுரத்தை பற்றி எழுதியுள்ள ஒரு கட்டுரையை உங்கள் முன்னால் நான் படித்துக்காட்ட விரும்புகின்றேன்.

13.10.1998 - "ஸ்டேட்ஸ்மென்" எழுதியிருப்பதாவது

The Dravidian movement originally committed to social justice and atheism, played a crucial role in the emancipation of dalits and upliftment of backward classes".

"திராவிட இயக்கம் சமூக நீதி மேம்பாட்டிற்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டுள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் எழுச்சி பெறவும், பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காணவும் முக்கியப் பங்காற்றியுள்ளது."

"If the caste based parties are left alone, there will be fewer clashes"

சாதி அடிப்படையிலான கட்சிகள் தனித்து விடப்பட்டால் சாதி மோதல்கள் குறைந்துவிடும்" இப்படி எழுதுவது யார் தெரியுமா? கல்கத்தாவிலிருந்து வெளிவருகின்ற "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை.

சாதிமோதலுக்கு காரணம் என்ன? ஒரு ஊரிலே இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட சாதியார் இன்னொரு ஊரிலுள்ள ஒரு குறிப்பிட்ட சாதியாரோடு மோதிக்கொள்ள வேண்டுமென்று அவர்களாகவே முடிவு எடுத்து மோதிக் கொள்வதில்லை. யாராவது ஒருவர் சாதிகளை வைத்து பிழைக்க வேண்டுமென்று எண்ணுகிறவர், சாதிகளை வைத்துதான் தலைவராக ஆக வேண்டுமென்று எண்ணுகிறவர், சாதிகளை வைத்துப் பிறரை மிரட்டி பிளாக்மெயில் செய்ய வேண்டுமென்று எண்ணுகின்ற ஒருவர் இந்த சாதிகளுக்குத் தலைமையேற்று சாதிச் சண்டைகளைக் காண்டி



விடுகிறார்கள் என்பதை இங்கே உள்ள நாம் அறிந்திருக்கிறோமோ இல்லையோ கல்கத்தாவிலுள்ள "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை அறிந்து எழுதுகிறது.

இத்திட்டத்திற்கு ஆதரவு அளிக்க "ஸ்டேட்ஸ்மென்" ஏடு வேண்டுகோள்

மேலும் அந்தப் பத்திரிகை எழுதுகிறது.

"Instead of exploiting the situation for narrow political ends, mature leaders of political parties should extend whole hearted support to Karunanithi's concept of Samathuvapuram, a Government sponsored settelement scheme where families of different castes and communities live in harmony as neighbours"

இதன் தமிழாக்கம் :

"குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அமைதியை குலைக்கும் சூழ்நிலைகளைக் கைவிட வேண்டும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முதிர்ந்த தலைவர்கள், பல்வேறு சாதி மதங்களைச் சேர்ந்த குடும்பங்கள் நல்லிணக்கத்துடன் அடுத்தடுத்து சேர்ந்து வாழத்தக்க வகையில் அரசு சார்பில் சமத்துவபுரம் எனும் பெயரில் குடியிருப்புகளைக் கட்டி வழங்கி வரும் கருணாநிதியின் கொள்கைக்கு முழு ஆதரவு அளித்திட வேண்டும்" - என்று இங்கேயுள்ள அரசியல் கட்சித் தலைவர்களுக்கு "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகை வேண்டுகோள் விடுக்கின்றது.

மேலும்,

"The shceme has made a small beginning and deserves to be expanded particularly in the violent prone southern districts"

இதன் தமிழாக்கம் :

"இத்திட்டம் சிறிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது.இதுமேலும் விரிவுப்படுத்தத்தக்கதாகும்.

குறிப்பாக தென் மாவட்டங்களில் அதிக அளவில் சமத்துவபுரங்கள் அமைக்கப்பட வேண்டும்" என்று மிகத் தெளிவாக தூய்மையான உணர்வோடு எழுதியிருக்கிறது.

இந்தச் சமத்துவபுரத்தில் எந்தெந்த வகுப்பினர் வாழ்கிறார்கள் என்ற நான் 11 சமத்துவபுரங்களைத் திறந்தபோதெல்லாம் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கும் சொல்கிறேன். எதிர்காலத்தில் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் இந்தச் சமத்துவபுரத்தில் வாழ்கிற மக்கள் எங்களுக்கு நல்ல மகிழ்ச்சியைத் தர வேண்டுமென்று அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சமத்துவபுரத்தில் உள்ள 100 வீடுகளில் ஆதிதிராவிடர் 39 பேர், அருந்ததியர் ஒருவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் 25 பேரில் வன்னியர் 17 பேர், மருத்துவர் 2 பேர், சலவைத் தொழிலாளி வகுப்பைச் சேர்ந்தோர் ஆறுபேர்.

பிற்படுத்தப்பட்டோர் 25 பேரில் கவரா நாயுடு 7 பேர், கருமார் 2 பேர், செங்குந்தர் 2 பேர், யாதவர் 4 பேர், வாணியச் செட்டியார் 3 பேர், கருணீகர் 2 பேர், முஸ்லீம் 4 பேர், கன்னடியன் ஒருவர், இதர வகுப்பினர் ரெட்டியார் 6 பேர், பிராமணர் 4 பேர். இந்த நூறு வீடுகளில் நான்கு பிராமணர்களும் வாழ்கிறார்கள்.

ஆதிக்கக்காரர்கள் அந்த ஆதிக்க உணர்விலிருந்து விடுபட்டுள்ளார்கள்

இதைச் சொல்வதற்குக் காரணம்;எட்டிநில், தூரப் போ, கிட்டே வந்தால் தீட்டு, பாவம், ஆண்டவன் கோபத்துக்கு ஆளாவாய் என்றெல்லாம் சொன்ன ஆதிக்கக்காரர்கள் இன்றைய தினம் அந்த ஆதிக்க உணர்விலிருந்து விடுபட்டு அவர்களும் பாரதியாரைப் போல, வா.ரா.வைப் போல "எல்லோரும் ஓர் குலம். எல்லோரும் ஓர் இனம்" என்று சொல்கின்ற அளவுக்கு முன்வந்திருக்கிறார்கள் என்றால் சமத்துவபுரத்தால் விளைந்த நன்மை இது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

ஆனால் ஒரு மாவட்டத்திலே ஒரு சமத்துவபுரம். எதிர்காலத்திலே எல்லா மாவட்டங்களிலும் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று பத்துக்குக் குறையாத சமத்துவபுரங்களை நாம் உருவாக்கினாலும் கூட எனக்கு முன்னால் இங்கே பேசிய அமைச்சர் பெருமக்கள் சுட்டிக் காட்டியதைப் போல தமிழ்நாடே சமத்துவபுரமாக ஆக வேண்டும். அது இந்த வீடு கட்டி மாத்திரம் சமத்துவபுரமாக ஆனால் போதாது. அவரவர்களும் சமத்துவ உணர்வைப் பெற்றாக வேண்டும். ஆண்டவன் மக்களை படைத்தான் என்று சொல்கின்றோம். ஆனால் அந்த ஆண்டவனுடைய படைப்புக்கு விரோதமாக அவன்

படைப்பிலேயே வேறுபாடு காண்கிறோம். இது நியாயமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஜாதி ஒழிய வேண்டும் என்று சொன்னதை ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ?

பாரதியாரைப் புகழ்ந்து ஆண்டுதோறும் விழா நடத்துகிறோம். ஆனால் அந்த பாரதி சொன்னானே "ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்ற அந்தப் பாட்டை மாத்திரம் நமக்கு வசதியாக மறந்துவிடுகிறோம். இது நியாயமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உத்தமர் காந்தியடிகளுக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கிறோம். காந்தி ஜெயந்தி கொண்டாடுகின்றோம். காந்தியின் பெயரால் மண்டபங்கள் கட்டுகிறோம்; காந்தியின் படங்களுக்கு மாலை அணிவிக்கிறோம்; வணங்குகிறோம். உத்தமர் காந்தி என்று பாராட்டிப் போற்றி புகழ்கிறோம் ஆனால் அந்த காந்தியடிகள் ஜாதிகள் ஒழிய வேண்டுமென்று சொன்னாரே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோமா என்றால் இல்லை. அதைப் போலவே பெரியாருடைய பெயரை, அண்ணாவின் பெயரைச் சொல்கிறோம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரைச் சொல்கிறோம்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம்
ஜாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே"

- என்று புரட்சிக்கவிஞர் பாடினாரே அந்தப் பாட்டை வேகமாக முழங்குகிறோம்.

ஆனால் அவற்றை மனதார ஏற்றுக் கொண்டிருக்கிறாமோ என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே மேடையில் ஒன்று, வீட்டிலே ஒன்று, மக்களுக்கு முன்னால் ஒன்று, மறைமுகமாக ஒன்று என்று இல்லாமல் ஜாதி ஒழிந்த ஒரு சமுதாயத்தை, மத வேறுபாடற்ற ஒரு நாட்டை, மத நல்லிணக்கம் வாய்ந்த ஒரு நாட்டை, ஒரு மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்கு நாம் பாடுபட்டால்தான் எத்தனை நல்லத் திட்டங்கள் தீட்டினாலும் அவைகள் ஒழுங்காக மக்களைப் போய்ச்சேர முடியும். கோடிக் கணக்கிலே திட்டங்களைத் தீட்டி அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர்ந்ததா என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப்பதா? அல்லது ஜாதிப்பூசல், மதப் பூசல் காரணமாக ஏற்படுகின்ற அமளிகளை ஒடுக்க, சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநாட்ட ஒவ்வொருவரும் நாம் அந்த யோசனையிலே ஈடுபடுவதா என்று எண்ணிப் பார்க்கும்பொழுதுதான் மக்களுக்காகத் தீட்டப்படுகின்ற திட்டங்கள், அவர்களுக்குப் போய்ச் சரிவரச் சேர வேண்டுமேயானால் அந்த மக்கள் சமுதாயம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்; சமத்துவமாக வாழ வேண்டும். அதுதான் இந்த அரசின் குறிக்கோள்.

சாதி சமய பேதங்களில் வீழ்ந்து நம்மை நாமே கெடுத்துக் கொள்ளக்கூடாது

தி.மு. கழக அரசு நான் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று 96 முதல் இதுவரையிலே இந்த இரண்டரை ஆண்டுகளில் ஆற்றியிருக்கின்ற பணிகளையெல்லாம் நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தம்பி கோ.சி. மணி இங்கே குறிப்பிட்டதைப் போல், வீராசாமி குறிப்பிட்டதைப் போல் தம்பி துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல் மற்றும் அமைச்சர்களாக வீற்றிருக்கின்ற தம்பிமார்களெல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சமுதாய நலத்திட்டங்கள், ஏழை, எளியோர்க்கான திட்டங்கள், பெண்களுக்கான திட்டங்கள், திருமண உதவித்திட்டங்கள், மாணவர்களுக்குப் பேருந்திலே இலவச பஸ்பாஸ் தருகின்ற திட்டமானாலும், இலவச மின்சாரம் இந்தியாவிலே முதன்முதலாக தமிழ்நாட்டிலேதான் தி.மு.கழக ஆட்சியிலேதான் 89ஆம் ஆண்டு விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை. இப்பொழுதுதான் பஞ்சாப் மாநிலத்திலே தமிழ்நாட்டைப் பின்பற்றி இலவச மின்சாரம் வழங்குகிறார்கள்.

இவ்வளவு காரியங்களைச் செய்கிறோம். இன்னும் சொல்லப் போனால் நீங்கள் என்னைக் கூட நம்ப வேண்டாம். மாவட்டத்திலே, ஒன்றியத்திலே, நீங்கள் சுற்றி வந்தால் எந்த ஊரிலாவது எந்தவொரு வேலையாவது நடந்து கொண்டிருக்கிறதா? இல்லையா? ஒன்று, சாலை போடுவார்கள். அல்லது வாய்க்கால் வெட்டுவார்கள் அல்லது பள்ளிக்கூடம் கட்டுவார்கள். ஒரு பகுதியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் நிறைவேறும்; 'நமக்கு நாமே திட்டம்' இன்னொரு பகுதியில் நிறைவேறும். இவைகளெல்லாம் இன்னும் பயன்படுகின்ற வகையிலே மக்களைப் போய்ச் சேர வேண்டுமேயானால் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஜாதி, சமய பேதங்களிலே வீழ்ந்து, நம்மை நாமே கெடுத்துக் கொள்ளக் கூடாது. அதுதான் இந்தத் திட்டங்களின் முழுப் பயனை மக்கள் பெற்றார்கள் என்பதற்கு அடையாளம் என்[illegible]தை எடுத்துச் சொல்லி, அந்தப் பயனை நீங்கள் வழங்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு அருமைத் தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும், பெரியோர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– பண்ருட்டித் தொகுதி திருவாமூரில் 12ஆவது சமத்துவபுரத்தை 24–1–1999 அன்று திறந்துவைத்து ஆற்றிய உரை.

★ ★ ★

குடியரசு தின விழா

தமிழக அரசின் சார்பில் குடியரசு தின விழா 26.1.99 அன்று சென்னை காமராஜர் சாலையில், காந்தி சிலை முன் எழுச்சியுடன் கொண்டாடப்பெற்றது.

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் சாலைகளில் கூடிநின்ற பொதுமக்கள் வழங்கிய வரவேற்பையும், வாழ்த்தையும் பெற்றுக்கொண்டு அணிவணக்க மேடை அருகே வந்தார்.

முதலமைச்சரின் வருகையைத் தொடர்ந்து தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள், அணி வணக்க மேடை அருகே வருகை தந்தார்.

இதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, தீரச் செயல்புரிந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த இரா. வேல்முருகன், வேலூர் மாவட்டம் வாணியம்பாடியைச் சேர்ந்த செல்வி சுகுணா, செல்வி கவிதா ஆகியோரைப் பாராட்டி ரூ.2000 மதிப்புள்ள அண்ணா வீரப்பதக்கத்தினையும், ரூ.2000 காசோலையையும் அவர்களுக்கு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும் புதுடெல்லியில் நடைபெற்ற மத நல்லிணக்க மலர்ப் பேரணியில் தமிழகத்தின் சார்பில் பங்கேற்று முதல் பரிசு பெற்ற கலைமாமணி முனைவர் தீ.சோமசுந்தரம் அவர்களின் கலைத் திறமையை பாராட்டும் வகையில், அவருக்கு தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் சிறப்பு விருதினையும், பொற் பதக்கத்தையும் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து தரைப்படை, இராணுவம், வான்படை, கப்பற்படை, தேசிய மாணவர் படை, தமிழக காவலர் படை, ரெயில்வே காவலர்படை என அணிவகுத்து வந்த பல்வேறு பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் அவர்கள் அணிவணக்க மேடையில் நின்று ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து நடன நிகழ்ச்சிகளும், அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைப்பெற்றது.

கன்னியாகுமரி மாவட்டம்

தலைநகர்	: நாகர்கோவில்
பரப்பு	: 1,684.4 ச.கி.மீ.
மக்கள் தொகை	: 16,00,349
ஆண்	: 8,03,839
பெண்	: 7,96,510
வளர்ச்சி விகிதம் (1981–91)	: 11.79%
எழுத்தறிவு	: 11,48,778
மக்கள் நெருக்கம் (ச.கி.மீ.)	: 945
பிறப்பு விகிதம்	: 22.5%
இறப்பு விகிதம்	: 5.9%

நகராட்சி–4

நாகர்கோவில், குளச்சல், குழித்துறை, பத்மநாபபுரம்.

சட்டசபைத் தொகுதிகள்–7

கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், திருவட்டார், விளவங்கோடு, கிள்ளியூர்.

பாராளுமன்றத் தொகுதி–1

நாகர்கோவில் (திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியில் இம்மாவட்டத்தின் சில பகுதிகள் அமைந்துள்ளன).

வருவாய் நிருவாகம்

கோட்டங்கள்–2.: நாகர்கோவில், பத்மநாபபுரம்

வட்டங்கள்–4 : தோவாளை, அகதீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு.

பேரூராட்சிகள்–67

1. கன்னியாகுமரி 2. அகஸ்தீஸ்வரம் 3. அஞ்சுகிராமம் 4. அழகப்பபுரம் 5. சுசீந்திரம் 6. மைலாடி 7. தென்தாமரைக்குளம் 8. தேரூர் 9. கொட்டாரம் 10. மருங்கூர் 11. தாழக்குடி 12. அழகியபாண்டியபுரம் 13. ஆரல்வாய்மொழி 14. பூதப்பாண்டி 15. தர்மாபுரம் 16. கணபதிபுரம் 17. மேலச்சங்கரன்குழி 18. ராஜாக் கமங்கலம் 19. ஆசாரிப்பள்ளம் 20. புத்தளம் 21. தெங்கம்புதூர் 22. திங்கள்நகர் 23. மண்டைக் காடு 24. வெள்ளிமலை 25. வில்லுக்குறி 26. ஆளூர் 27. மணவாளக் குறிச்சி 28. ரீத்தாபுரம் 29. கல்லுகூட்டம் 30. நெய்யூர் 31. வெள்ளிச்சந்தை 32. இரணியல் 33. குமாரபுரம் 34. கோதைநல்லூர் 35. முளகுமூடு 36. நுள்ளிவிளை 37. திருவிதாங்கோடு 38. கப்பியறை 39. வாள்வச்சான் கோட்டம் 40. விளாவூர் 41. திக்கணங்கோடு 42. ஆத்தூர் 43. பொன்மனை 44. பேச்சிப்பாறை 45. திற்பரப்பு 46. திருவட்டார் 47. வேர்க்கிளம்பி 48. காட்டாத்துறை 49. குலசேகரம் 50. பழுகல் 51. இடைக்கோடு 52. கடையால் 53. பாகோடு 54. களியக்காவிளை 55. அருமனை 56. விளத்துறை 57. புதுக்கடை 58. பைங்குளம் 59. மெதுகும்மல் 60. கொல்லங்கோடு 61. ஏழுதேசம் 62. பாலப்பள்ளம் 63. நல்லூர் 64. கிள்ளியூர் 65. கருங்கல் 66. கீழக்குளம் 67. உண்ணாமலைக்கடை.

ஊராட்சி ஒன்றியம் – 9, ஊராட்சி – 88.

1) அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 13: 1. இரவிபுதூர் 2. கோவளம் 3. குலசேகரபுரம் 4. கரும்பத்தூர் 5. கரியமாணிக்கப்புரம் 6. லீபுரம் 7. மகாராஜபுரம் 8. வடக்கு தாமரைக்குளம் 9. நல்லூர் 10. பஞ்சலிங்கபுரம் 11. ராமபுரம் 12. சுவாமித்தோப்பு 13. தேரேகால்புதூர்

2) ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 12: 1. அத்திக்காட்டுவிளை 2. எல்லூர்விளை 3. காந்திபுரம் 4. கணியாகுளம் 5. கேசவன் புத்தன்துறை 6. மேலக்கிருஷ்ணன் புத்தூர் 7. மணக்குடி 8. வடக்குசூரங்குடி 9. புத்தேரி 10. பெரு விளை 11. ப்றக்கை 12. பள்ளம்துறை.



3) தோவாளை ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 16: 1. அருமநல்லூர் 2. பூமநகரி 3. செண்பகராமன்புதூர் 4. தெரிசனங்கோப்பு 5. ஈசாந்திமங்கலம் 6. இறச்சகுளம் 7. ஞாலம் 8. கடுக்கரை 9. காட்டுபுதூர் 10. மாதவலையம் 11. சகாயநகர் 12. தடிக்காரன் கோணம் 13. திடல் 14. திருப்பதிசாரம் 15. தெள்ளாந்தி 16. தோவாளை

4) பத்மநாபபுரம் ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 8: 1. இனயம் புத்தன்துறை 2. கொல்லஞ்சி 3. மத்திக்கோடு 4. மிடாலம் 5. முள்ளங்கினவிளை 6. நட்டாலம் 7. பலூர் 8. திப்பறமலை

5) குருத்தன்கோடு ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 8: 1. சுக்கோட்டுதலை 2. கட்டி மாங்கோடு 3. குருந்தன்கோடு 4. முட்டம் 5. நட்டான்கோடு 6. சைமன் காலனி 7. தலக்குளம் 8. தென்கரை

6) மேல்புரம் ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 10 : 1. தேவிகோடு 2. மலயாடி 3. மாங்கோடு 4. மஜலுமூடு 5. மருதங்கோடு 6. முழுக்கோடு 7. புலியூர்சாலை 8. வன்னியூர் 9. வெல்லம்கோடு 10. விளவங்கோடு

7) முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 8 : 1. அடைக்காக்குழி 2. சுழல் 3. குளப்புறம் 4. மங்காடு 5. முஞ்சிறை 6. நடைக்காவு 7. தூத்தூர் 8. வாவரை

8) திருவட்டார் ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 8: 1. ஆயக்கோடு 2. அருவிக்கரை 3. பாலமோர் 4. செருகோல் 5. குமரன்குடி 6. கண்ணனூர் 7. சுருளோடு 8. ஏத்தக்கோடு

9) தக்கலை ஊராட்சி ஒன்றியம்

ஊராட்சிகள் – 5: 1. அதிவிளை 2. சடையமங்கலம் 3. கல்குறிச்சி 4. முத்தலக்குறிச்சி 5. மருதூர் குறிச்சி

கல்வி

பள்ளிகள்–701. கல்லூரிகள்–16.

தொழிற்சாலைகள்

இந்திய அருமண் தொழிற்சாலை, மணவாளக் குறிச்சி: கயிற்றுப் பாய் மற்றும் தரை விரிப்புகள், அம்மாண்டிவிளை: கன்னியாகுமரி நூற்பாலை, ஆரல்வாய்மொழி

> சாதிக்குள் திருமணங்கள் நடப்பதே, சாதிகள் அழியாமல் இருப்பதற்குக் காரணம்.
>
> – அம்பேத்கர்

விவசாயம்

நெல், தேங்காய், பருப்பு வகைகள், காய்கறிகள், வாழைப் பழங்கள், ரப்பர், தேயிலை, முந்திரிப்பருப்பு முக்கிய விளைபொருட்கள்

ஆறுகள்

பழையாறு, பறளியாறு, கோதையாறு

மழையளவு

சராசரி 1,456 மி.மீ.

சான்றோர்கள்

அதங்கோட்டாசான், கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை, சதாவதானி செய்குத்தம்பி பாவலர், பொதுவுடமை வீரர் ஜீவானந்தம், நேசமணி, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்.

வழிபாட்டிடங்கள்

பகவதியம்மன் கோவில், கன்னியாகுமரி; தாணுமாலையன் கோவில், சுசீந்திரம்; நாகராஜாகோவில், நாகர்கோவில்; பகவதியம்மன் கோவில், மண்டைக்காடு; சவேரியார் கோவில், கோட்டாறு; ஞானி பீர்முஹமது மகுதி, தக்கலை

சுற்றுலாத் தலங்கள்

கன்னியாகுமரி, தக்களை பத்மநாபபுரம் அரண்மனை, சுசீந்தரம், திற்பரப்பு அருவி, பேச்சிப்பாறை அணைக்கட்டு, வட்டக்கோட்டை

வரலாறு

கேரளத்தின் ஒரு பகுதியாய் இருந்த இம்மாவட்டம் 1956 நவம்பர் ஒன்றாம் தேதி தமிழ்நாட்டுடன் இணைந்தது.

அமைவிடம்

தமிழகத்தின் தென்கோடி முனையில் அமைந்துள்ளது. கிழக்கிலும், வடக்கிலும் திருநெல்வேலி மாவட்டம்; மேற்கில் கேரள மாநிலம் மற்றும் தெற்கில் இந்துப் பெருங்கடல், 68 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது.

குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை

– மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்

திரு. வ. முல்லைவேந்தன்

முக்கடல் சந்திக்கும் குமரிமுனையில், வான்புகழ் வள்ளுவருக்கு வான் முட்டும் சிலை அமைக்கும் முடிவு 1975ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டது. கன்னியாகுமரியில் கடலிலுள்ள பாறையில் அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு அருகில் உள்ள பாறையின் மீது 133 அடி உயரமுள்ள சிலை எடுக்கப்படும் என்று



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

சிலை அமைப்புக்கான ஆயத்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 1976ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் கலைஞர் அவர்களின் தலைமையில் சிறப்புடன் நடைபெற்ற தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டது. அதன்பிறகு சிலை அமைப்புப் பணி தொய்வடைந்து, 1976ஆம் ஆண்டிற்கு பிறகு 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக முதலமைச்சராக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இப்பணிக்கான ஆய்வு நடத்தப்பட்டது. திருவள்ளுவர் சிலை அமைக்கின்ற பாறையின் தன்மை, திருவள்ளுவர் சிலையை தாங்கும் திறன் போன்றவை ஆய்வு செய்யப்பட்டன. இத்திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதால் நியூயார்க்கில் உள்ள சுதந்திரதேவி சிலை போன்று கட்டுமானப்பணிகள் தொழில்நுட்பத் திறன் கொண்டதாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் மூலம் திருவள்ளுவர் சிலையினைக் கருங்கல்லால் அமைப்பது ஏற்புடையது என்றும், இந்தியக் கலாச்சாரத்திற்கு ஏற்புடையதாயிருக்கும் என்றும் கருதப்பட்டது. இது குறித்துப் பொதுப்பணித்துறையைச் சார்ந்த அலுவலர்கள் கொடுத்த அறிக்கையை அரசு ஆராய்ந்து, பின் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரி கடற்பாறையில் கருங்கல்லில் அமைத்திடும் ஆயத்தப் பணிகள் தொடங்கப் பட்டன.

திருவள்ளுவர் சிலை வடிவமைக்கின்ற பணியினைச் சென்னை திரு.கணபதி ஸ்தபதி அவர்களைக் கொண்டும், திருவள்ளுவர் சிலை அமைக்கின்ற பாறையினை சமன் செய்தல், கடற்கரையிலிருந்து சிலை அமைக்கின்ற இடத்திற்கு சிலைக்கான செதுக்கப்பட்ட கற்களை எடுத்துச் செல்லுதல் மற்றும் திருவள்ளுவர் சிலையினை அமைப்பதற்கான பொருட்கள் எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமும் மேற்கொள்ள அரசு முடிவு எடுத்தது.

இதன்படி, 133 அடி உயர திருவள்ளுவர் சிலையினைக் கருங்கல்லால் வடிவமைப்பதற்கு திரு.கணபதி ஸ்தபதி அவர்களுக்கு ரூ.360.15 இலட்சமும், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்காக ரூ.137.50 இலட்சமும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6ஆம் நாள் கன்னியாகுமரியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவர் சிலையை அமைக்கின்ற பணியினைத் தொடங்கி வைத்தார்கள். அதன்பின் திருவள்ளுவர் சிலை வடிவமைப்பதற்கான பணிகள் 27–1–1991 முதல் தொடங்கப்பட்டன.

திருவள்ளுவர் சிலையின் விவரம் :

திருவள்ளுவர் சிலையின் பீடத்தின் உயரம் : 38 அடி

பீடத்தின் மேல் சிலையின் உயரம் : 95 அடி

ஆகமொத்தம் சிலையின் உயரம் : 133 அடி ஆகும்.

திருவள்ளுவர் சிலை வடிவமைப்பதற்குத் தேவையான செதுக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை : 3,681

133 அடி உயர திருவள்ளுவர் சிலையின் மொத்த எடை 7000 டன்.

ஒரு கல்லின் சராசரி எடை 3 டன் முதல் 8 டன் வரை இருக்கும்.

திருவள்ளுவர் சிலைக்குத் தேவையான கற்கள் செதுக்குகின்ற பணிகள் தமிழ்நாட்டில் சென்னை சோழங்கநல்லூர், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்று

வருகின்றன. 1990ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்ட இப்பணிகள் 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான காலத்தில் மிகவும் தொய்வடைந்து பணிகள் நின்றுவிட்ட நிலையில் இருந்தன.

மாண்புமிகு முதலமைச்சராக கலைஞர் அவர்கள் மீண்டும் 4ஆவது முறையாகப் பொறுப்பேற்றதும், 25-6-1997 அன்று அவரது தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணிகளை முடித்திட முடிவு செய்யப்பட்டது. திரு.கணபதி ஸ்தபதி' அவர்கள் மேற்கொண்டு வருகிற சிலையமைப்புப் பணிகளுக்குத் திருத்திய செலவின மதிப்பீடு ரூ.614 இலட்சமும், தமிழ்நாடு கட்டுமானப்பணிகள் கழகத்திற்குரிய திருத்திய செலவின மதிப்பீடு ரூ.172 இலட்சமும் வழங்க 30-7-1997 அன்று அரசு அங்கீகரித்தது. '

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18-4-1998 அன்று கன்னியாகுமரிக்கு வருகை தந்து சிலையமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டுப் பணிகளை விரைவுபடுத்திட அறிவுரைகள் வழங்கினார்கள்.

நானும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் உயர் அலுவலர்களும் அவ்வப்போது பணிகளை நேரடியாக ஆய்வு செய்து பணிகள் தொய்வின்றி நடைபெற முடுக்கி விடப்பட்டுள்ளன.

133 அடி உயரத்தில் அமைக்கப்படுகின்ற திருவள்ளுவர் சிலைக்கான பீடத்திற்கான உயரம் 38 அடி உயரப் பணிகள் முடிக்கப்பட்டு, பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள 95 அடி உயர சிலைக்கான பணிகளில் தற்போது 20 அடி உயரப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 133 அடி உயரத்தில் அமைக்கின்ற சிலைக்கான பணியில் இதுவரையில் 58 அடி உயர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் குமரிமுனையில் குறள் ஆசானின் 133 அடி உயரசிலை அமைக்கின்ற பணிகள் முடிக்கப்படும்.

★ ★ ★

கண் கவரும் கன்னியாகுமரி



திரு. என். சுரேஷ் ராசன்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

குமரி மாவட்ட மலராக "தமிழரசு" வெளிவருவதற்கு என் வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து இப்பகுதி 1956ஆம் ஆண்டு தமிழ்நாட்டோடு இணைக்கப்பட்டு, தனி மாவட்டமாக அமைக்கப்பட்டது. இதன் தலைநகர் நாகர்கோவில். நான்கு வட்டங்கள் கொண்ட சிறிய மாவட்டமாகும்.

இந்தியாவில் மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டதற்கு பின்புதான் கன்னியாகுமரி மாவட்டம், தாய்த் தமிழகத்தோடு சேர்ந்தது. தாய்த் தமிழகத்தோடு சேர்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அதில் முக்கியக் காரணம், மொழியும் ஒரு காரணம் என்பதை கன்னியாகுமரியின் வரலாற்றை ஊன்றிப் படித்தவர்கள் நன்றாக அறிவார்கள்.

இந்த மாவட்டத்தின் பெயரை உச்சரிக்காத இந்தியர்கள் இருக்கமாட்டார்கள். "இமயம் முதல் குமரி வரை" என்ற சொற்றொடரை பயன்படுத்தாதவர்கள் இருக்க முடியாது. இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள குமரிமுனையின் மிகப் பெரிய சிறப்பு இந்துமாக்கடல், அரபிக் கடல், வங்காளக் கடல் இம்மூன்றும் சந்திக்கின்ற இடமாகக் காட்சி அளிப்பது தான். இதைத்தான் முக்கடல் முத்தமிட, முத்தமிழ் தவழ்ந்திட குமரித் தெய்வம் கொலுவீற்றிருக்கும் கன்னியாகுமரி என்று தமிழார்வம் கொண்டவர்கள் பேசுவார்கள்.



சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் உல்லாசமாக இன்பப் பொழுது போக்குவதற்காக கடற்கரை, குன்று, அருவி, ஏரி, விலங்குகள் நிறைந்த காடு, பள்ளத்தாக்கு, வரலாற்று நினைவுச்சின்னம் ஆகியவற்றை கண்டு களிக்கின்றனர்.

மேற்கூறிய அத்தனை அம்சங்களும் கொண்ட சுற்றுலா மையம்தான் 'கன்னியாகுமரி'.

இயற்கையழகு கொஞ்சும் குமரி முனையில் பௌர்ணமி நாளில் கீழ்க் கடலில் முழுநிலவு உதிக்கும்போது, மேற்கடலில் சூரியன் அஸ்தமிக்கும் அற்புதக்காட்சியினை ஒரே நேரத்தில் காணமுடியும்.

கன்னியாகுமரி, எல்லா சிறப்புக்களைவிட, இது ஒரு "சுற்றுலா மையம்" என்பதே ஒரு சிறப்பாகும். ஒரு இடம் அல்லது மையம் சுற்றுலா முக்கியத்துவம் பெற வேண்டுமென்றால் அந்த இடம் ஏதாவது ஒரு வகையில் சிறப்பிடம் வகிக்க வேண்டும். ஒன்று பயணியரைக் கவரும் வரலாற்றுச் சின்னம் அங்கு இருக்க வேண்டும் அல்லது கவர்ச்சி மிக்க இயற்கை எழில் கொண்டதாக இருக்க வேண்டும் அல்லது வழிபடக்கூடிய புனிதத் தலமாக இருக்க வேண்டும். சுற்றுலா முக்கியத்துவம் உள்ள ஓரிடத்தில் உண்ண, உடுக்க, தங்க, ஓய்வெடுக்கத்தக்க வசதிகள் நிறைந்த தங்கும் விடுதிகளும், உணவகங்களும் இருத்தல் அவசியமாகிறது. இவைகள் தவிர வேறுசில சிறப்புக் கூறுகளும் சுற்றுலா மையத்தைச் சிறப்படையச் செய்கின்றன. அவற்றுள் மகிழ்ச்சியூட்டும் தட்பவெப்ப நிலை, கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இயற்கைக் காட்சிகள், வரலாற்று - பண்பாட்டுப் பெருமை, இனிய மனங்குளிரும் வாழ்க்கை வசதிகள், அவ்விடத்திற்கு எளிதில் செல்லக்கூடிய வசதி ஆகியன மிகவும் குறிப்பிடத் தக்கனவாகும்.

கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இயற்கைக் காட்சி கடற்கரைக்குச் சற்று தூரத்தில் கடல் நீரில் இரட்டைப் பாறைகள் உள்ளன. ஒரு பாறையின் மீது, இந்தியாவின் பண்பாட்டை அமெரிக்காவில் பெருமைபடுத்திய புகழுக்குரிய பெரு மனிதர் சுவாமி விவேகானந்தர் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல விவேகானந்தர் தவம் செய்து மோட்சம் சென்றார் என்ற பேச்சும், குமரி அம்மன் தவம் செய்த பாதம் பதிந்த இடம் என்ற பெருமைக்குரிய பேச்சும் உள்ள இடத்தைப் பயணிகள் பார்க்க, கடலில் செல்ல வேண்டிய ஒரு மகிழ்ச்சியான கப்பல் பயணம். இதனால் கோடிக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து போவதும், இந்தப் பாறையைப் பற்றி உலகம் முழுவதும் பேசுவதும் இதன் சிறப்பு.

இத்தகைய இயற்கைக் காட்சி அமைந்த இன்னொரு பாறையில் மேலும் சுற்றுலா பயணிகளைக் கவர்ந்திழுக்க, எங்கள் இலக்கிய வேந்தர், சங்கத் தமிழைச் சாமானியனும் படிக்க எளிமை காட்டி எழுதிய எழுத்தோவியர்; அது போல உலக பொது மறை நூல் என்ற பெருமை பேசக்கூடிய திருக்குறளை பயணிகள் பயணம் செய்யும் பேருந்துகளில் படிக்க வைத்தவர்; அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் இந்த முப்பாலையும் ஆண்பால், பெண்பால் அனைவரும் நின்று நிதானித்துப் படித்துப் பயன்பெற கோட்டம் கட்டியவர், ஆமாம் வள்ளுவர் கோட்டம் கட்டியவர் கலைஞர். அவர் ஆணைப்படி அந்த வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு, இன்னொரு



பாறையில் வானளாவிய சிலை அமைக்கும் அதற்கான பணிகள் விரைந்து நடைபெற்று கொண்டிருக்கின்றன.

இந்திய அளவில், தமிழகம் அயல்நாட்டுப் பயணிகளைப் பெருமளவு கவர்ந்திழுக்கும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு இந்தியாவில் சுற்றுலா வளர்ச்சியில் மூன்றாவது இடத்தை எட்டியுள்ளது.

அதுவும் குறிப்பாக, கன்னியாகுமரி அயல்நாட்டு பயணிகளை அதிகமாக கவர்ந்திழுக்கும் இடமாகும். இந்த இயற்கைப் பாறையில் கட்டப்பட்டிருக்கும் விவேகானந்தர் சிலை அமையப் பெற்று எப்படி புகழ் பாடுகிறதோ 'அதே போல் இந்த வள்ளுவர் சிலையும் புகழ்பாடும்'. அந்தப் புகழைப் பாடவைத்த நம் தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் புகழும் பெருமையும் குமரிக் கடலின் அலையோசையை போல் நீங்காமல் பாடும், இந்தப் புகழ் மகுடம் தமிழ் தாய்க்கு வைத்த மகுடம் என்று சொன்னால் ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டும்.

அயல்நாட்டுப் பயணிகள், உள்நாட்டுப் பயணிகள் பேசுவது மட்டுமல்ல. அந்த மாவட்டத்து மக்களும் பேசுகின்ற சாதனைகளை கலைஞர் அரசு செய்துள்ளது. ஆம். மேல்மணக்குடி, கீழ்மணக்குடி இந்த இரண்டு ஊர்களில் வாழ்கின்ற மீனவச் சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாலம் அமைக்க ரூ.4 கோடி ஒதுக்கி, அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அது மட்டும் இல்லாமல் ஒரு ரப்பர் தொழிற்சாலை வேண்டும்; ஒரு மருத்துவக் கல்லூரி இவைகள் வேண்டும் என்பதும் இந்த மக்களின் கோரிக்கை. அதற்கான வேலைகளும் நடைபெற்று வருகிறன.

இங்கு குளச்சலில் ஒரு துறைமுகம் அமைக்க வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் அவா. அதையும் அமைக்க வேண்டும் என்பதற்காக நம் தமிழக முதல்வர் அவர்கள் இவ்வாண்டு (1999) ஜனவரியில் சிங்கப்பூர் பயணம் மேற்கொண்டபோது அங்குள்ள அரசாங்கத்திடம் இத்திட்டத்தைத் தெரிவித்து அதைச் செயல்படுத்திட பங்கேற்குமாறுக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

நீர்வளம், நிலவளம் கொண்ட இயற்கை எழில்கொஞ்சும் மாவட்டம் இது. முக்கடல், முத்தமிழ், முக்கனி, (மா, பலா, வாழை) இம்மாவட்டத்தின் தனிச் சிறப்புகளாகும். இம்மாவட்டத்தில் அறிஞர்கள் ஆழ்ந்தச் சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பிறந்து பல்வேறு ஊர்களில் வாழ்ந்தாலும், இந்த குமரி மண்ணுக்கு பெருமை சேர்க்கின்ற பெருந்தகையாளர்களாக வாழ்ந்து வருகிறார்கள். மறைந்தும் மறையாதவர்களாக இன்றும் என்றும் போற்றக்கூடியவர்களாக இம்மாவட்டத்திற்குப் புகழ் சேர்க்கிறார்கள்.

★ ★ ★

வளர்ச்சிப் பாதையில் கன்னியாகுமரி மாவட்டம்

வை. பாண்டியன் இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர்

கன்னியாகுமரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ளது. இம்முகமையின் மூலம் 1996–97, 1997–98 & 1998–99ஆம் ஆண்டுகளில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம், நமக்கு நாமேத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மாவட்ட பன்முகப்படுத்தப்பட்டத் திட்டம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினரது தொகுதி மேம்பாடுத் திட்டம், மாநில நிதிக்குழுத் திட்டம், பத்தாவது நிதிக்குழுத் (மாவட்ட ஊராட்சி) திட்டம், புகையில்லா அடுப்பு மற்றும் சாண எரிவாயு கலன் அமைக்கும் திட்டம், கிராமப்புறங்களில் மத்திய ஊரக சுகாதார கழிப்பிடம் கட்டுதல், கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடுத் திட்டம், கிராம இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம், கைவினைஞர்களுக்குத் தொழிற்கருவிகள் வழங்குதல் ஆகியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், ஊராட்சித் தலைவர்கள் மூலமாகவும் செயல்படுத்தப் படுகின்றன. இவ்வேலைகளை ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்கின்றனர். 96–97ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை மொத்தம் ரூ.16 கோடி மதிப்பீட்டில் 2,254 வேலைகள் எடுக்கப்பட்டு 1431 வேலைகள் ரூ.14 கோடி செலவில் முடிக்கப் பட்டுள்ளன. 'மீதமுள்ள அனைத்து வேலைகளையும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கத் திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

வேலையற்ற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்திட உதவும் திட்டம் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இத்திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை மொத்தம் 898 வேலைகள் ரூ.11¼ கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. ரூ.9 கோடி செலவில் 542 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர வேலைகள் அனைத்தும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

இந்திரா குடியிருப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நலிவடைந்த பிரிவினருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டி கொடுத்தலாகும். இத்திட்டத்தில் 1996–97ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை மொத்தம 1384 பயனாளிகளுக்கு ரூ.302 இலட்சம் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மலைசாதியினர் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதர இன மக்களுக்கும் தகுதியின் அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. ரூ.32,000 மதிப்பீட்டில் கழிவறையுடன் கூடிய வீடாக கட்டப்படுகிறது. கட்டப்படும் அனைத்து வீடுகளுக்குப் புகையில்லா அடுப்பு அமைத்து தரப்படுகிறது.

மில்லியன் கிணறுத் திட்டம்

இத்திட்டத்தில் 1996–97 முதல் 1998–99ஆம் ஆண்டு வரை மொத்தம் 89 சிறு பாசன வேலைகள் எடுக்கப்பட்டு 88 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கு ரூ.92.32 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு 90 சதவிகிதம் தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களின் ஏழ்மை நிலையைப் போக்க நிலையான வருவாய் அளிக்கும் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி கிராம மக்களின் வறுமை நிலையை நீக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் ஒரு நபருக்கு 6000 ரூபாய்க்கு மிகாமல் மானியக் கடன் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் மலை சாதியினருக்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. பிற இனத்தவர்களுக்கு 33.33 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ்பட்ட மக்கள் பயனடையத் தேர்வு செய்யப்படுகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் நிதியாண்டு ஆரம்பத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டக்குழு சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவர் தலைமையில் உறுப்பினர்களுடன் அரசு பிரதிநிதி முன்னிலையில் பயனாளிகள் தேர்வு செய்கிறது. இத்திட்டத்தில் 1996–97 முதல் இந்நிதியாண்டு வரை 15,864 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 15,296 நபர்களுக்கு ரூ.5 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டம்

இத்திட்டம் 1997–98ஆம் நிதியாண்டில் இருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முழுமையான நோக்கம் "தனக்குதானே உதவி" என்பதாகும். ஒவ்வொரு கிராம மக்களும் தங்களுடைய கிராம சபை கூட்டத்தின்போது தங்களுடைய கிராமத்திற்கு எந்தெந்த வேலைகள் தேவை என்பதைச் சரியாக உணர்ந்து தாங்களாகவே தேர்வு செய்து பொதுமக்கள் பங்கு தொகையுடன் முடிக்கும் ஒரு உன்னதமானத் திட்டமாகும். இத்திட்டத்தின் மக்கள் பங்கு தொகை 25 சதவிகிதம் கண்டிப்பாக இருக்கவேண்டும். மீதமுள்ள 75 சதவிகிதமும் அரசுப் பங்குத் தொகையாக அமையும். மக்கள் பங்குத் தொகை என்பது பணமாகவோ பொருளாகவோ அல்லது மனித சக்தியாகவோ அமையலாம். இத்திட்டத்தில் மக்கள் தங்கள் கிராமத்திற்கு எந்த வகையான வேலைகள் தேவைப்பட்டாலும் தேர்வு செய்து செயல்படுத்தலாம். இத்திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 133 வேலைகள் ரூ.29 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு 61 வேலைகள் ரூ.17.63 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 7 சட்டமன்ற தொகுதிகள் அடங்கியுள்ளன. சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் அவரவருடைய தொகுதியில் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சியை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் திட்டங்களை செயல்படுத்த தேர்வு செய்வார். 1997–98 முதல் 98–99ஆம் ஆண்டு வரை மொத்தம் 14 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து முடிக்கப் பெரும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுநாள் வரை ரூ.5.57 கோடி மதிப்பீட்டில் 660 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.3.28 கோடி செலவில் 315 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்து வேலைகளும் இந்நிதி ஆண்டிற்குள் முடிக்கப்படும்.

மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட திட்டம்

இத்திட்டம் ஊரகப் பகுதிகளிலும் நகர்ப்புறத்திலும் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் இத்திட்டத்தில் அனைத்து வேலைகளையும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் பரிந்துரையின்பேரில் தேர்வு செய்யப்படுகின்றன. கிராம ஊராட்சிகளுக்கு 60 சதவிகிதத் தொகையும், நகர்ப்புற ஊராட்சிகளுக்கு 40 சதவிகிதத் தொகையும் விடுவிக்கப்படுகின்றன. நகர்ப்புறங்களுக்கு அந்தந்த மன்றங்களின் தேவையைக் கருத்தில்கொண்டு மாவட்ட ஆட்சியரால் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட அனைத்து வேலைகளுக்கும் மன்ற அங்கீகாரத்துடன் நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 1997–98 ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 464 வேலைகள் ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டு 335 வேலைகள் ரூ.6.10 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இதர வேலைகள் அனைத்தும் இந்நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடுத் திட்டம்

இத்திட்டத்தில் ஒரு பாராளுமன்ற/ராஜ்ய சபை உறுப்பினர்களுக்கு ஒரு நிதியாண்டிற்கு ரூ.1 கோடி அவரவர் தொகுதி மேம்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. தற்போது இத்தொகை ரூ.2 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற–ராஜ்ய சபை உறுப்பினர்கள் அவரவர் தொகுதி மேம்பாட்டிற்குத் தேவையான வேலைகளைப் பரிந்துரை செய்வதன் அடிப்படையில் வேலைகள் செயல்படுத்தப்படுகின்றன. 1996–97 முதல் இதுநாள் வரை இம்மாவட்டத்தில் ரூ.9.13 கோடி மதிப்பீட்டில் 848 வேலைகள் தேர்வு செய்யப்பட்டு 335 வேலைகள் ரூ.6.06 கோடி செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம்

தமிழ்நாட்டில் தான் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. 1997–98ம் ஆண்டிற்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூ.25 இலட்சமும் 1998–99ம் ஆண்டிற்கு 35 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 7 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகள் அடங்கியுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களின் தொகுதிக்குத் தேவையான வேலையை பரிந்துரை செய்வதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் அளித்து சம்பந்தப்பட்ட துறை மூலம் பணிகள் எடுத்து முடிக்கப்படுகின்றன.

1997-98ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை இத்திட்டத்தில் மொத்தம் 358 வேலைகள் ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 150 வேலைகள் ரூ.3.14 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

மாநில நிதிக்குழு திட்டம்

மாவட்ட ஊராட்சிகளுக்கு மாநில நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் நிதி வழங்கப்படுகிறது. அதன்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் செயல்படுத்தப்படும் வேலைகளை மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி உறுப்பினர் பரிந்துரையின் பேரில் எடுக்கப்படுபவை. இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1997-98ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ரூ.28.58 இலட்சம் மதிப்பீட்டில் 43 வேலைகள் எடுக்கப்பட்டு ரூ.1.8 இலட்சம் மதிப்பீட்டில் 5 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. அனைத்து வேலைகளும் 31.3.99க்குள் முடிக்க திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.

10வது நிதிக்குழு (மாவட்ட ஊராட்சி)

இத்திட்ட வேலைகளும் மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் ஊராட்சி உறுப்பினர் பரிந்துரையின்பேரில் எடுக்கப்படுபவை. இத்திட்டத்தில் 1996-97 மற்றும் 1997-98ஆம் ஆண்டிற்கு 100 வேலைகள் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 84 வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன.

புகையில்லா அடுப்பு மற்றும் சாண எரிவாயு கலன் அமைக்கும் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமச் சுற்றுப்புறம் மாசுபடுவதை தடுக்கும் நோக்கமாகும். அதனடிப்படையில் கிராமப்புற பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளுக்கு இதுவரை 6540 சூளா அடுப்புகள் ரூ.2.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

சாிமவாயு கலன் அமைக்கும் திட்டம் அல்லது சாண எரிவாயு அடுப்பு திட்டத்தில் பயனடைய குறைந்தது பயனாளிகளுக்கு 2 மாடுகள் இருத்தல் அவசியம். இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.10,000 கடன் வழங்கப்படுகிறது. இதில் ரூ.2200 மானியத்தொகையாகும். இத்திட்டத்தின் மூலம் எரிபொருள் சேமிக்கப்படுவதுடன் சுற்றுப்புறச் சுகாதாரம் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1998 டிசம்பர் மாதம் முடிய 120 கலன்கள் ரூ.2.8 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மத்திய ஊரகச் சுகாதாரத் திட்டம்

இத்திட்டத்தில் கிராமப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குக் கழிவறை கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மேலும் அரசு பள்ளிகளுக்கும் கழிவறைகள் கட்டிக்கொடுக்கப் படுகின்றன. தனி நபர் கழிவறை கட்ட அரசு மானியமாக ரூ.2000 வழங்குகிறது. பள்ளிகளுக்குக் கழிவறை கட்ட அரசு 70% பங்குத் தொகையும் வழங்குகிறது. மீதமுள்ள 30% தொகையை சம்பந்தப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்கம் பங்குத் தொகையாக வழங்கவேண்டும்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட புத்தேரி சாலை உடைப்பைப் பார்வையிடுகிறார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராசன் அவர்கள் உடன் உள்ளார்.

இத்திட்டத்தில் 1996-97 முதல் 1998-99ஆம் ஆண்டிற்கும் 56 பள்ளி கழிப்பிடங்கள் எடுக்கப்பட்டு 32 கழிவறைகள் ரூ.13.5 இலட்சம் செலவினத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா)

இத்திட்டத்தில் ஒரே தொழில் தெரிந்த நபர்கள் குறைந்தது 15 பேர்களை கொண்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அமைக்கப்பட்ட குழுக்களுக்குத் தலா ரூ.25,000ம் சுழல் நிதி தொழில் நடத்துவதற்காக விடுவிக்கப்படுகின்றது. இத்திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு முதல் 98ம் ஆண்டு டிசம்பர் வரை 109 குழுக்கள் அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டு 100 குழுக்கள் அமைக்கப்பட்டு 22.68 இலட்சம் ரூபாய் சுழல்நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பின்தங்கிய பெண்கள் நல்ல வருவாய் பெற்று அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

கிராம இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல் (டிரைசம்)

கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திடவும் சுயதொழில் தொடங்க வகை செய்யவும் இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. பயிற்சி காலத்தில் ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில் பயன்பெற, 18 வயது முதல் 35 வயது வரையுள்ள நபர்கள் தகுதியுடையவர்கள். இத்திட்டத்தில் பனைநார் தொழில், மீன்பதப்படுத்தும் தொழில், சிப்பி கோர்த்தல், காகிதக் கூழ் பொம்மை செய்தல், ஆயத்த ஆடை தயார் செய்தல், தையல் பயிற்சி போன்ற பல்வேறு தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1256 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1206 நபர்கள் பயிற்சி முடித்துள்ளனர். ஊக்கத்தொகை ரூ.41.23 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

கைவினைஞர்களுக்குத் தொழிற்கருவிகள் வழங்கும் திட்டம்

கிராமப்புறங்களில் உள்ள பல்வேறு கைவினைஞர் களுக்கும் தொழில் செய்வதற்கு ஏதுவாக நவீனக் கருவிகள் வாங்கி வழங்க மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப் படுகிறது. ரூ.2000 மதிப்புள்ள கருவிகள் வழங்கப்படும். 1996-97ஆம் ஆண்டுக்கு ரூ.9.71 இலட்சம் மதிப்பீட்டில் 500 நபர்களுக்கு நவீன தொழிற்கருவிகள் வாங்கி வழங்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தை வளங்கொழிக்கச் செய்யும் வகையில் பல்வேறுப் பணிகளை இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. ●

மாத்தூர் தொட்டிப் பாலம்



கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையமைத்தல் குறித்துப் பேசுகையில் - ''வாரா வாரம் திங்கட்கிழமை, பொறியாளர்கள் மற்றும் சிலையமைக்கும் ஸ்தபதி ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி அப்பணிகளின் முன்னேற்றங்களைக் கேட்டு துரிதமாக பணியாற்றிட அறிவுறுத்துகிறேன். இந்தத் திங்கள் நடைபெற்ற கூட்டத்தில் கூட, பணிகள் குறித்துப் பேசுகையில், அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதால் பணி பாதிக்கப்படுகிறது என்பதை அறிந்தவுடனேயே, அதுகுறித்து, அத்துறையின் உயர் அதிகாரிக்கு நேர்முகக் கடிதம் எழுதி கன்னியாகுமரியில் சிலையமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற மின் தடை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளேன்'' என்றார்.

''சுற்றுலாப் பயணிகள் அதிகம் வந்துபோகும் கன்னியாகுமரியை அழகுபடுத்துவதற்கு பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன?'' என்றார்.

''நாகர்கோவில் நகரில் சாலை நெரிசலை தவிர்க்கும் வண்ணம் சில இடங்களில் ஒரு வழிப்பாதை அமைத்ததில் நிர்வாகத்திற்குப் பொதுமக்களிடமிருந்து நல்ல வரவேற்பு.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொருத்தமட்டில் இங்கு சாதி-மதச் சண்டைகள் கிடையாது. மேலும் தீண்டாமை என்பது அறவே இல்லை. மாவட்ட நிர்வாகம் முழு மூச்சாக வளர்ச்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு செயல்படுத்தி வருகிறது.

'சிறிய பிரச்சினை என்று தெரிந்தால்கூட உயர் அலுவலர்கள் உடனே அங்கு சென்று உரிய நடவடிக்கை எடுக்கிறோம். பிரச்சினை என்று தெரிந்தவுடன், அதை அறிந்து, துரிதமாக செயல்பட்டு முளையிலேயே கிள்ளி விடுகிறோம்'.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்களில் சில கிராமங்களைத் தவிர அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மீதமுள்ள கிராமங்களுக்கு இந்த வருட இறுதிக்குள் வழங்கப்படும் .

தொடர்ந்து பேசுகையில்- 'இம்மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினரால் கட்டப்படும் கட்டடங்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்குள் வெகு விரைவில் - மூன்று, நான்கு மாதத்திற்குள் கட்டி முடித்திருக்கின்றனர்.

கேரள மாநிலத்தின் எல்லை இருப்பதால், உணவுக் கடத்தல் போன்ற சமூக விரோதச் செயல்களைத் தடுத்திடும் வண்ணம் 'செக்போஸ்டுகள்' அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்து, ஆற்றிலிருந்து மணல் திருடுவதை தடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். இது தொடர்பான சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று கூறினார்.

குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று என்னவென்றால் பட்டா மாற்றல் ஆகும். பட்டா மாற்றுதலில் நிறைய மனுக்கள் நிலுவையில் இருந்துவந்தது. நான் பொறுப்பேற்றபிறகு தாசில்தாருடன் கலந்து ஆய்வு செய்து, மாதத்தில் இரண்டு தேதிகளில், மனுக்கள் பெற்று, அந்த இடத்திலேயே 'ஓவர் த டேபிள்' என்று சொல்லுவார்களே - அதைப்போல் அந்த இடத்திலேயே பட்டா மாற்றம் செய்யப்பட்டு மக்களுக்கு இடையூறு களைப் பெரிய அளவில் குறைத்துள்ளோம்' என்றார் பெருமிதத்தோடு.

பொதுச் சுகாதாரம், குடிநீர் வழங்கல், பொது விநியோகம் மற்றும் வளர்ச்சிப் பணிகளில் நான் அதிக கவனம் செலுத்துகிறேன் என்றார்.

வளர்ச்சிப் பணிகளில் தமிழகத் திலேயே முதலிடம் பெறுவோம் என்று மிகுந்த நம்பிக்கையோடு கூறி முடித்தார்.

தொகுப்பு : எஸ்.எம். பஷீர் & ஆர். ராஜசேகரன்

வேளாண்மை வளர்ச்சி

கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் நலன் கருதி வேளாண்மை துறையின் மூலம் பல அரசு மானியத் திட்டங்கள் ஆண்டுதோறும் செயல்படுத்தப் படுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் (அதாவது 1996–97, 1997–98 ஆண்டுகளில்) நெல், பயறு விதைப் பெருக்கத்திட்டம், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித்திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித்திட்டம், தேசியப் பயறு அபிவிருத்தித் திட்டம், தென்னை அபிவிருத்தி திட்டம், பண்ணை மகளிர் மேம்பாடுத்திட்டம் போன்ற பல திட்டங்கள் ரூ.1.60 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இது போன்றே நடப்பு ஆண்டான 1998–99லும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறன.

மேலும் 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இயற்கையின் சீற்றத்தால் சாகுபடி செய்த பயிர்கள் வெள்ளத்தால் சேதம் அடைந்தன. நெல், வாழை, தென்னை, மரவள்ளி, ரப்பர் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.13.59 இலட்சம் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண் தொழில்புரியும் சிறு, குறு விவசாயிகள் ஆதிதிராவிடப் பழங்குடி விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் நலன் கருதியும், உணவு உற்பத்தியினை பெருக்கி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் தமிழக அரசால் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைப் பார்ப்போம்:–

நெல்விதை பெருக்கத் திட்டம்

நெல் பயிர் உற்பத்தியின் ஆதாரமான உயர்விளைச்சல் நெல் இரக விதைகளை விவசாயிகளுக்கு வழங்கிட அரசு விதைப்பண்ணை மற்றும் தேர்வு செய்யப்பட்ட விதைப்பண்ணை விவசாயிகள் நிலங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டு விதைச்சான்றளிப்புத் துறையினரால் சான்று வழங்கப்பட்டு மின் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 700 மெ.டன் சான்று பெற்ற நெல்விதை விநியோகிக்கப்பட்டன. இத்திட்டத்திற்காக ரூ.52.38 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ.25.36 இலட்சம் ஒதுக்கிடு செய்யப்பட்டு இதுவரை ரூ.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயறுவிதை பெருக்கத் திட்டம்

பயறுவகை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் வயலில் விதைப்பண்ணை அமைத்து கடந்த இரண்டு ஆண்டுகளில் 20 மெ.டன் உளுந்துவிதை கொள்முதல் செய்து விதைச் சான்றளிப்புத் துறையினரால் சான்றளிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இத்திட்டத்தில் ரூ.3.864 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டு 11 மெ.டன் சான்றுபெற்ற உளுந்துவிதை விநியோகத்திற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் வேளாண் விரிவாக்க பணிகளுக்காக, ஆராய்ச்சித் திடல்கள் அமைக்க கருத்தரங்குகள், விவசாயிகள் பேரணி, கல்விச் சுற்றுலா பணியாளர்கள், விவசாயிகள் பயிற்சி மற்றும் விளம்பரப் பணிக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.7.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டத்தில் ரூ.2.82 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம்

மாவட்ட சராசரி அரிசி உற்பத்தியைவிடக் குறைவாக உள்ள வட்டாரங்களில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இராஜாக்கமங்கலம், கிள்ளியூர், முஞ்சிறை, மேல்புறம் ஆகிய வட்டாரங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தில் மானிய விலையில்

நெல்விதை விநியோகம் செய்யவும், மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகள் வழங்கவும், ஒட்டுநெல் செயல் விளக்கப்பாத்தி அமைக்கவும், வயல்வெளிப் பள்ளிகள் நடத்தவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.18.45 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.15.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.9.6 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தேசிய பயறு பெருக்கத் திட்டம்

பயறுவகைப் பயிர் உற்பத்தியைப் பெருக்க விதை விநியோக மானியம், கொள்முதல் மானியம், மினிகிட்டுகள் வழங்கல், செயல் விளக்கங்கள் அமைத்தல், விவசாயக் கருவிகள் மானியத்தில் வழங்குதல் போன்ற பல்வேறு இனங்களுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.3.5 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.1.8 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் நலிவடைந்துவரும் எண்ணெய்வித்துப் பயிரான நிலக்கடலையை அதிகப் பரப்பில் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விதை கொள்முதல் விதை விநியோகம் மற்றும் ஆராய்ச்சித் திடல்கள் அமைக்க கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.1.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தென்னை அபிவிருத்தித் திட்டம்

தரமான நெட்டை தென்னங்கன்றுகளை புத்தளம் அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,20,000 நெற்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு தென்னை நாற்றுப்பண்ணையில் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ரூ.9.615 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 60,000 கன்றுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.2.8 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நெட்டை குட்டை தென்னங்கன்று உற்பத்தித் திட்டம்

தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கமாக நெட்டை மற்றும் குட்டை மரங்களில் ஒட்டுசேர்த்து உற்பத்தி செய்யும் நெற்றுகள் மூலம் வீரிய ஒட்டு தென்னங்கன்றுகள் கன்னியாகுமரி அரசு தென்னை நாற்றுப் பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.11 இலட்சம் செலவிடப்பட்டு சுமார் 1 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கப் பட்டது. நடப்பு ஆண்டில் 51,000 நெற்றுகள் கொள்முதல் செய்ய ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடை பெறுகின்றன.

தென்னையில் உயிரியல் முறையில் பயிர் பாதுகாப்பு

தென்னையைத் தாக்கும் கருந்தலைப்புழு மற்றும் காண்டாமிருக வண்டை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் ஒன்றும், பச்சை பூஞ்சாணம் வளர்ப்பு மையம் ஒன்றும் பூதப்பாண்டியில் இயங்கிவருகிறது. இந்த மையங்களில் உற்பத்தி செய்யப்படும் ஒட்டுண்ணிகள் மற்றும் பச்சை பூஞ்சாணம் தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் ரூ.1.037 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதுவரை ரூ.0.95 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

தென்னை வளர்ச்சி வாரியத்திட்டம்

தென்னை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில் காய்ப்பு குறைந்த பலன் இல்லாத தென்னை மரங்களை வெட்டி மாற்றி புதிய கன்று நடுவதற்கும், காய்ப்பிலுள்ள மரங்களுக்குப் பயிர் பாதுகாப்புச் செய்து உரம் வைக்கவும், தென்னந்தோப்புகளில் கூடுதல் வருவாய் பெற ஊடுபயிர் செய்வதற்கும் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.18.3 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.4 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உழவர் பயிற்சி நிலையம்

வேளாண் தொழில்நுட்பப் பயிற்சிகள் விவசாயிகளுக்கு திருப்பதி சாரம் உழவர் பயிற்சி நிலையம் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகை, பயிற்சி உபகரணங்கள், செயல் விளக்கங்களுக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ.77 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.37 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

வேளாண் தொழில்புரியும் பெண்கள் முன்னேற்றத்திற்காக பெண் வேளாண்மை அலுவலர்களைக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டம்தான் பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டம், முதல் கட்டமாக அகஸ்தீஸ்வரம் மற்றும் கல்குளம் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட சிறு குறு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க, ஊக்கத்தொகை வழங்க, இடுபொருட்கள் வழங்க செயல்விளக்கங்கள் செய்ய மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.13.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் ரூ.6.6 இலட்சம் ஒதுக்கப்பட்டு இதுநாள் வரை ரூ.5.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

விசை உழுவை மற்றும் டிராக்டர் விநியோகம்

சிறுகுறு மற்றும் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு டிராக்டர் மற்றும் விசை உழுவைகள் ரூ.30,000 மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில் 20 விசை உழுவைகள் விநியோகிகப் பட்டுள்ளன.

பயிர் விளைச்சல் போட்டி

நெல் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. வெற்றிபெறும் முதல் இரண்டு போட்டியாளர்களுக்குப் பரிசுத்தொகை வழங்கப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் பரிசுத்தொகை ரூ.24,000 வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் ரூ.12,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலை ஓரம் மரம் நடும் திட்டம்

மழை வளம் காக்க மாண்புமிகு முதலமைச்சரின் சாலை ஓரம் மரம் நடும் திட்டத்தின் கீழ், அகஸ்தீஸ்வரம், பூதப்பாண்டி, குருந்தன்கோடு வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்கு உட்பட்ட ரோடுகளின் இரு ஓரங்களிலும் 25 கி.மீ. தூரத்திற்கு வேம்பு மற்றும் புளியங்கன்றுகள் 1997–98ஆம் ஆண்டில் ரூ.7 இலட்சம் செலவில் நடவு செய்யப்பட்டன.

வேளாண்மைத் தகவல் தொடர்பு மையம்

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் பகுதி–2இன் கீழ், பூதப்பாண்டி மற்றும் தக்கலையில் வேளாண்மை தகவல் தொடர்பு மையங்களும் பறக்கையில் வேளாண்மை விரிவாக்க மையம் ஒன்றும் ரூ.49 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் நாகர்கோவிலில் வேளாண்மை விரிவாக்க மையம் கட்டடம் கட்ட ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணி ஆரம்பிக்கும் நிலையில் உள்ளது.

கணிப்பொறி மையம்

நடப்பு ஆண்டில் நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் ரூ.9 இலட்சம் செலவில் கணிப்பொறி மையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

★ ★ ★

அழகு மிளிரும் ஆலயங்கள்

குமரி மாவட்டத்தில் மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோவிலான சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் நான்கு இந்திய சமயங்களின் கூட்டு உருவமாகக் காட்சிதரும் நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், திருசரம்கோப்பு ராகேஸ்வரர் கோவில், இராமாயணக் கதை முழுவதையும் மரப்பலகைகளில் செதுக்கி வைத்துள்ள பத்மநாபபுரம் இராமசாமி கோவில், கல்லிலே எழுப்பப்பட்டக் கலைக்கூடமான திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் ஆலயம், கல்லைக்குடைந்து அமைக்கப்பட்ட திருநந்திக்கரக் குடவரைக் கோவில், எழில் கொஞ்சும் அருவியின் அருகே அமைந்துள்ள திருப்பரப்பு மகாதேவர் ஆலயம், மான் மழுவுடன் சிவன் சங்கு சக்கரத்துடன் திருமால், சதுர்புஜங்களுடன் பராசக்தி மூவரும் ஒரே கருவறையில் கருங்கல் பகவதி கோவில், பதினான்கு அடி உயரத்தில் கண்ணன் திருவுருவைக் கொண்ட திப்பரமலை கிருஷ்ணன் கோவில், பாரதத்தாயின் பாதச் சிலம்பொலியென முக்கடலும் கூடி முழங்கும் கன்னியாகுமரியில் நின்று அருளும் குமரி அம்மனின் பேராலயம் – இந்த அழகுமிகு ஆலயங்கள் யாவும் அழியாவரம் பெற்ற கலைச்செல்வங்களாக குமரி மாவட்டத்திலே காட்சி தருகின்றன.



மும்மூர்த்திக்கென்று எழுப்பபப்பட்ட ஒரே ஆலயமான சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம் கல்லிலே கலையழகினைக் காட்டி நிற்கும் பல மண்டபங்களைத் தன்னகத்தே கொண்டது. பதினெட்டு அடி உயரத்தில் கைகூப்பி வணங்கிய நிலையில் காட்சி தரும் அனுமனது சிலை, அழகிலும், கம்பீரத்திலும் பாரத நாட்டிலேயே சிறந்து விளங்குகின்றது. அந்த அனுமனின் அரசயிலை ஒரேக் கல்லில் செதுக்கப் பட்டது. அதேபோன்று ஒரே கல்லில் வடித்தெடுத்த இசைத்தூண்கள் பல்வேறு இசைக்கருவிகளின் நாதங்களை எழுப்பி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகின்றன. இந்த ஆலயத்தில் காணப்படும் திருமலை நாயக்கன் கற்சிலையிலே முக்குத்துளை சிரசு வரை செல்கிறது. காதிலுள்ள துவாரம் வழி செலுத்தும் கம்பி மறுகாது வழியாகவும், நாசித்துவாரம் வழியாகவும்வரும் வகையில் செதுக்கப்பட்டுள்ளது. இதைப் போன்று மிக நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்ட சிற்பங்கள் பலவற்றை இங்கே நாம் கண்டு களிக்கலாம். சுசீந்திரம் ஆலயத்தில் பாண்டியர்களும், சோழர்களும், சேரர் வழி வந்த வேணாட்டு அரசர்களும், விஜய நகர, நாயக்க மன்னர்களும், தங்கள் கைவண்ணங்களை அழகுறக் காட்டியுள்ளனர். இந்த ஆலயம் திராவிடக் கட்டக்கலை அமைப்பில் சிறப்புடன் திகழ்கின்றது.

நாகர்கோவில் நகரத்தின் நடுவண் அமைந்துள்ளது நாகராஜர் ஆலயம். இக்கோவிலின் பெயரால் இந்தகர் அழைக்கப்படுவது, ஒரு தனிச்சிறப்பாகும்.

நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் நான்கு இந்திய சமயங்களின் கூட்டுருவமாக நமக்குக் காட்சி தருகின்றது.

திருவட்டாறு ஆதிகேசவப்பெருமாள் ஆலயத்தில் கல்லிலும் மரத்திலும் அமைக்கக்கப்பட்ட பலகலைச் செல்வங்களைக் கண்டு களிக்கலாம். மூலவரின் முன்னால் உள்ள ஒற்றைக்கல் மண்டபம் 18 அடி சதுரமும், மூன்று அடி உயரமும் கொண்ட ஒரே கல்லின் மேல் எழுப்பப்பட்டுள்ளது. இதை அக்காலத்திய பொறியியல் திறனுக்குச் சான்றாகச் சொல்லாம்.

பத்மநாபபுரம் இராமசாமி கோவிலின் வெளிப்பிரகாரத்தில் இராமாயணக்கதை முழுவதும் நாற்பத்தி ஐந்து மரப்பலகைகளில் நாடக ரூபமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மர வேலைப்பாட்டில் உள்ள நாட்டின் தலைசிறந்த கலைச்சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம்.

கன்னியாகுமரியில் நீலத்திரை கடலோரத்தில் முக்கடல் சங்கமத்தில் முக்கண்ணனை நோக்கித் தவம் செய்து நிற்கிறாள் அன்னை பராசக்தி.

கொந்தளிக்கும் கடலின் நடுவே பாறையின் மேல் கம்பீரமாகக் காட்சி தருவது சுவாமி விவேகானந்தரின் நினைவாலயம். இருபதாம் நூற்றாண்டில் எழுந்தக் கலைக்கூடம் இது.

பகவதிக்கோவில் மண்டைக்காடு

மண்டைக்காடு சரித்திர பிரசித்தமான குளச்சல் துறையிலிருந்து சுமார் இரண்டு மைல்கள் தெற்காக, கடற்கரை ஓரத்தில் இருக்கும் சிற்றூராகும். புகழார்ந்த பகவதியம்மன்கோவில் இவ்வூரின் நடுவிலிருக்கிறது. தேவியின் சிலை மண் புற்றால் ஆனதாகும். இச்சிலை நாடோறும் வளர்ந்து கொண்டேயிருப்பதாக மக்களலால் நம்பப்படுகிறது.

செவ்வாய்கிழமைகளில் ஜாதிமத வேறுபாடின்றி எல்லா மக்களும் இக்கோவிலில் வணங்குவதைக் காணலாம்.

பூதப்பாண்டி

சங்க இலக்கியங்களில் ''ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்'' என புகழப்படும் பாண்டிய மன்னன் பூதப்பாண்டியன் பெயரால் அவனுடைய மகன் "பசும் பொன் பாண்டியனால்'' ஸ்தாபிக்கப்பட்ட ஊர் இது. சரித்திர, இதிகாசங்களில் இடம் பெறும் பழமையும் பெருமையுமிக்க பூதலிங்க சுவாமி'' கோவில் இவ்வூரில் இருக்கிறது.

இக்கோவிலில், ''ஸ்ரீகோவில்'' பாறையைக் குடைந்து ஆக்கப்பெற்றது. அப்பாறையிலேயே ஸ்ரீலிங்கமும் செதுக்கப்பெற்றது. முன்னாலுள்ள அர்த்த, மகா மண்டபங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டவை.

ஆயக்குடி

வாழ் திருத்தலங்களில் ஆய்க்குடியும் ஒன்று. இது முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தது.

அருணகிரியாரால் பாடல்பெற்ற திருத்தலங்களில் இதுவும் ஒன்று என்பதில் வாழ்பட சேனைபட என்று துவங்கும் திருப்புகழால் விளங்கும்.

219582



நாகராஜர் திருக்கோயில், நாகர்கோவில்

SUCHINDRUM ANJANEYAR
சுசீந்திரம் ஆஞ்சநேயர்

தென்காசி... மதுரை நெடுஞ்சாலையில் தென்காசியிலிருந்து நாலாவது மைலில் கிழக்காகப் பிரியும் குறுஞ்சாலையில் 3வது மைலில் இருக்கிறது ஆய்க்குடி.

வடிவீஸ்வரம்

நாகர்கோவில் நகரிலுட்பட்ட மூதூர் வடிவீஸ்வரம் அழகம்மன் கோவில் என்று வழக்கில் கூறப்படும், வடிவழக நாகர் அழகேஸ்வரி கோவில் இங்கு இருக்கிறது.

கிருஷ்ணன் கோவில்

நாகர்கோவில் நகரத்தில் இருக்கும் சிறப்பு வாய்ந்த கோவில்களில் ஒன்று.

தழுவிய மகாதேவர் கோயில்

வாணிபமும், தொழிலும் வளர்க்கும் வடசேரி, நாகர்கோவில் நகரின் வியாபாரக் கேந்திரமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தின் மிகப்பெரும் சந்தை இங்குதானிருக்கிறது. இங்கே வாணிகப் பேராரவாரம் எட்டாத் தொலைவில், அமைதியான சூழலில் அமைந்திருக்கிறது புகழ்பெற்ற மகாதேவர் கோவில்.

திருப்பன்றிகோடு மகாதேவர்

உலகத்தாரை துன்பத்தில் ஆழ்த்திய சிவபெருமான் பன்றியின் கோட்டை (கொம்பை) முறித்து ஆபரணமாக தன் மார்பகத்தில் அணிந்ததாகவும், பன்றியின் கோடறுத்தயிடமாகையால் இத்தலம் திருப்பன்றிகோடு என வழங்கப்படுவதாகவும் ஐதீகம்.

திற்பரப்பு

தொல்பொருள் புகழும், கவின்பெருவளப்பும் கொண்ட இத்தலம், குமரி மாவட்டத்தின் வடமலைப்பகுதியிலிருக்கிறது. உயர்ந்த மலைகளும், செறிந்த காடுகளும் காட்டிடையே ஓடிவரும் தெளிந்த கோதையாறும், பொங்குப் புனலருளியும் சூழ்ந்த இயற்கையெழில் கொழிக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது மகாதேவர்கோவில். கோவில் பிரகாரத்திலிருந்து பார்க்கும்போது மலையும், காடும், நதியும் அருவியுமான தோற்றம் கண்ணைக் கவருகிறது.

தெரிசனங்கோப்பு இராகவேஸ்வரர்

நாகர்கோவில் நகரிலிருந்து, வடகிழக்குத் திசையில் எட்டுகல் தூரத்திலிருக்கும் தெரிசனங்கோப்பு வயல் வெளிகளும், மலைகளும், காடுகளும் சூழ்ந்த எழில் கொழிக்கும் சிற்றூராகும். அதன் அருகாமையிலிருக்கும் செம்மலை "தாடகைமலை" என அழைக்கப்படுகிறது.

இங்கு ஐயன் இராகவேஸ்வரராகவும், அம்மை உலக நாயகியாகவும் தோற்றம் தரும் திருக்கோவில் உள்ளது.

ஆரல்வாய்மொழி

ஆரல்வாய்மொழிக்கணவாய், திருவிதாங்கூரின் கைபர், நாஞ்சில் நாட்டின் தலைவாசல், இதன் வழி உட்புகுந்த படைகள் நாஞ்சில் நாட்டை போர்க்களமாகிய வரலாறுகள் பலவுண்டு. பகைக்குலப் படைகளை புகுமுன் தடுத்ததால் இக்கணவாய்ப் பகுதி பிணவாய் பகுதியாக மாறிய வரலாறுகளும் உண்டு.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆரல்வாய்மொழியின் வடக்காக மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் இருக்கிறது. இக்கோவிலின் பிரதான தெய்வம் சாஸ்தாவாகும்.

சோழராஜா கோவில்

நாகர்கோவில் நகரின் வடகிழக்குப் பகுதியில் இருக்கிறது. இச்சிறிய ஆனால் சிறப்புமிக்க கோவில், தமிழ்நாட்டினுடையதாகவும், குறிப்பாக "பொழில்மல்கு" கோட்டாற்றினுடையவும் வரலாற்றுக்கதையில் இடம்பெற்றது இக்கோவில். சோழப்பேரரசர் இராஜேந்திரசோழ தேவரால் புதுப்பிக்கப்பெற்றது. இங்கு இறைவன் இராஜேந்திர சோழேஸ்வரராக வீற்றிருக்கிறார்.

நீலகண்ட சுவாமிக்கோவில்

திருவிதாங்கூர் நாட்டின் முன்னாள் தலைநகரம் பத்மனாபபுரம் என்று இன்று வழங்கப்படும் அன்றைய கல்குளம். முற்கால வேணாட்டின் தலைநகராயிருந்த இப்பகுதியில்தான் மாவீரர் மகாராஜா மார்த்தாண்ட வர்மா முடிசூட்டியது. அரசு கட்டிலிருந்து அவர் நடத்திய படைகள் விரிந்து பரந்த திருவிதாங்கூர் அரசை ஏற்படுத்தியது. வெற்றிகொண்ட பெருநாட்டை அனந்தபுரத்துப்பள்ளிகொள்ளும் பத்மநாபருக்கு மாமன்னர் அற்பணித்த பின்னர் தலைநகர் திருவனந்தபுரத்திற்கு மாறியது. கல்குளம் பத்மனாபபுரம் எனப் புதுப்பெயர் பூண்டது. ஆனால் அன்று கட்டிய அரண்களும், வெட்டிய அகழிகளும், அரசு கட்டிலிருந்த அரண்மனையும் இன்றும் இருக்கின்றன.

இங்கு ஐந்தடுக்கு கோபுரமும், அழகு சிலைகளும், அற்புதக் கலையழகும் கொண்ட இக்கோவில் கிழக்கு திசை நோக்கிக்கட்டப்பட்டிருக்கிறது. கோவிலில் முன்னால் அழகிய பெரிய தெப்பக்குளமுண்டு.

கேரளபுரம்

நாகர்கோவிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில், தக்கலை அருகில் இருக்கும் சிற்றூர் கேரளபுரம். நாயக்கர் படைகளை எதிர்த்து, குளியாகுளம்

ஜீவா மணிமண்டபம்

பொதுவுடமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபத்தினை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18.4.98 அன்று நாகர்கோவிலில் திறந்துவைத்தார். விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் பெருமக்கள் ஆர்க்காடு திரு.வீராசாமி, திரு.வ.முல்லைவேந்தன், திரு.என்.சுரேஷ்ராசன் ஆகியோர் பங்கேற்றனர்.



போரில், வெஞ்சமர் நடத்திய திருவிதாங்கூர் படைத்தளபதி, மாவீரன் இரவிக்குட்டிப் பிள்ளையை நாட்டுக்களித்து பெருமை பெற்ற ஊர் இது. இங்கே 'வீர கேரளவரத்து மகாதேவர்' கோவில் இருக்கிறது. இக்கோவில் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கும் முந்திய காலத்தை சேர்ந்த வீரகேரளவர்மர் எனும் சேர அரசரால் கட்டப்பட்டதாக கருதப்படுகிறது.

உச்சியில் பல்வேறு பிரதிமைகள் அமைக்கப்பட்ட வட்ட வடிவமான ஸ்ரீகோவிலும், கோவிலின் பிரதான வாயிலும் கேரள கோவில்கள் ஒப்ப ரிஷிப மண்டபம் முதலானவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பிரதான சன்னிதியின் அருகில் தெற்குப் பார்த்து நடராஜர் சிலைகள் சிவகாமி சிலை இருக்கின்றன. பிரகாரத்தில் சிவன், உமை நிற்கும் விநாயகர், கங்காளநாதர், சுப்பிரமணியர், சாஸ்தா மாணிக்கவாசகர் ஆகியோரின் பிரதிமைகள் இருக்கின்றன. வெளிப்பிரகாரத்தில் தென்கிழக்கு மூலையில் நிற்கும் அரசமரத்தினடியில் அமர்ந்திருக்கும் அற்புதப் பிள்ளையார் சிலை இக்கோவிலின் தனிச்சிறப்பாகும்.

பறக்கை

சுசீந்திரத்திலிருந்து தென்மேற்கு திசையில் ஒரு மைல் தூரத்திலிருக்கும் ஓர் எழில்சேர் சிற்றூர் பறக்கை. பத்தாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படும். மதூதனப்பெருமாள் கோவில் இவ்வூரின் கீழ்திசையில், கண்டன்குளத்தின் மேற்கு கரையில் இருக்கிறது.

மருகூர் முருகன் கோவில்

நாகர்கோவில் - கன்னியாகுமரிப் பெருவழிப் பாதையில் சுசீந்திரத்தில் இருந்து வடகிழக்காக மூன்று மைல் தூரத்திலுள்ள "மருங்கூர் திருமலை முருகன் கோவில்" மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்தது. முருகன் கோவிலின் மருங்கில் (மிக அருகில்) அமைந்த ஊர் ஆதலால் மருங்கூர் என்று பெயர் பெற்றது.

சேர, சோழ, பாண்டியர், சரித்திர வரலாறுகள் இந்த மருங்கூர், இடையாற்று மங்கலம் என்றும் மங்கலக்கால் என்றும் அறிவிக்கப்படுகிறது. குமரியில் இராஜராஜ சோழரால் கட்டப்பட்ட "குகை நாதேசுவரர் கோவில் வடக்குப் பிரகாரக் கல்வெட்டு" "மானமுள்ள ஐவேலன் மங்கலக்கால்" என்று குறிப்பிடுகிறது.

மருங்கூரிலும் சுற்றுப்புறங்களிலும் இரும்பு கலந்த மண் உள்ளது. இதை இன்றும் காணலாம். இந்த மண்ணை உருக்கி, இரும்பு எடுத்தாகவும், இதில் பலவித போர்க் கருவிகளும், பலவித பொருட்கள் செய்ததாகவும், மீதியான இரும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததாகவும், அயல் நாட்டு இரும்பு பெருமளவில் இறக்குமதி செய்த பின்னரே இங்குள்ள இரும்புத் தொழில் மறைந்துவிட்டதாகவும், திருவிதாங்கூர் வரலாறு" என்ற நூல் தெரிவிக்கிறது. இரும்பு உருக்கிய இடங்களில் உருக்கிய கழிவுப் பொருளான (சிஷ்டக்கல்) சிட்டங்கல் குன்று குன்றாக குவிந்திருப்பதை இன்றும் இங்குக் காணலாம்.

மருங்கூரின் தெற்கே அமைந்துள்ள, மருந்துவாழ்மலை, அகஸ்தீசுவர் கோவில், கன்னியாகுமரியில் விஸ்வநாதர்கோவில், குகநாதேசுவரர் கோவில், கன்னியாகுமரியின் கோவில் இவைகளில் எல்லாம் கணபதியைக் காணலாம். முருகனை காணமுடியவில்லை. இதனால் பாரதத்தின் தென்கோடி முருகன்கோவில் என்ற பெருமை குமரி மருங்கூர் பெற்றுள்ளது.

இவ்வாறு குமரி மாவட்டக் கோவில்கள் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு விளங்குவது மட்டுமல்ல பல்வேறு கலைகளை வளர்த்து சிறந்த கலைக் கூடங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இம்மாவட்டத்திலுள்ள கோவில் அமைப்புகள், கோவிலின் கலையம்சங்கள், வழிபாட்டு முறைகள் இவை தமிழகத்தின் பிற மாவட்டங்களைப் போல் அல்லாமல் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மண்ணுக்கும் கல்லுக்கும் மரத்திற்கும் உயிர்கொடுக்கும் மாபெரும் தெய்வீகக் கலையைக் கோவில்கள் மூலம் வளர்த்து கட்டடக்கலையிலும் வழிபாட்டு முறையிலும் தனித் தன்மை பெற்று குமரி மாவட்டம் பெருமைப்படுகிறது.

★ ★ ★

குமரி மாவட்ட குடிநீர்த் திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இரண்டு கோட்டங்கள் மூலமாக நகராட்சி குடிநீர்த் திட்டப் பணிகளும் மற்றும் ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளும், பராமரிப்பு கோட்டம் மூலமாக பராமரிப்பு பணிகளும் நடைபெற்றுவருகின்றது.

ஊரகக் குடிநீர்த் திட்டம்

1996-97ஆம் நிதியாண்டில் ஊரகக் குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ் 34 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டு ரூ.16.60 கோடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றுள் ரூ.1.7 கோடி செலவில் 21 குடியிருப்புகள் 1996-97ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் 22,715 மக்கள் பயனடைந்துள்ளனர். மீதமுள்ள 13 குடியிருப்புகள் 1997-98 ஆம் ஆண்டில் தொடரும் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டில் ஊரகக் குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ் தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டர் குடிநீர் விதியோக அளவுள்ள 112 குடியிருப்புகள் (கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட தொடரும் திட்டங்கள் 13 குடியிருப்புகள் உட்பட) எடுத்துக் கொள்ளப்பட்டு இதற்காக ரூ.4.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 85 குடியிருப்புகளுக்கு ரூ.4.16 கோடி செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் 63,173 மக்கள் பயனடைகின்றனர்.

1998-99ஆம் ஆண்டில் ஊரகக் குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ் 194 குடியிருப்புகள் (கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட தொடர் திட்டங்கள் உட்பட) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.60.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் டிசம்பர் 98 முடிய 47 குடியிருப்புகள் ரூ.23.49 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு 86,218 மக்கள் பயனடைந்துள்ளனர். மீதமுள்ள குடியிருப்புகள் மார்ச் 1999க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்படும்.

கிராமப் பேரூராட்சி மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

கணபதிபுரம் பேரூராட்சி மற்றும் அதனைச் சார்ந்த 6 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.78.57 இலட்சங்கள் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்று 1998ஆம் ஆண்டு முதல் சுமார் 15,000 மக்கள் பயன்பெறுகின்றனர்.

களியக்காவிளை, மெதுகும்மல் கிராமப் பேரூராட்சிகள் மற்றும் 19 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு திட்டப் பணிகள் முழுவதும் முடிவுற்று தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. தற்போது இத்திட்டத்தினால் சில பகுதி மக்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் முடிவுற்றதும் சுமார் 66,400 மக்கள் முழுமையாகப் பயன்பெறுவார்கள். இத்திட்டம் இவ்வாண்டு மார்ச் திங்களுக்குள் முழுவதுமாக பயனுக்குக் கொண்டு வரப்படும்.

காட்டாத்துறை, வாழ்வச்சகோஷ்டம், முளகுமூடு கிராம பேரூராட்சிகள் மற்றும் 55 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்றுவருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 98,600 மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம் மார்ச் 99க்குள் முடிவடையும்.

கொல்லங்கோடு, ஏழுதேசம் மற்றும் 21 வழியோர குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.4.38 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த்திட்டம் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 90,400 மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம் மார்ச் 99க்குள் முடிக்கப்படும்.

திருவிதாங்கோடு கிராம பேரூராட்சி மற்றும் 11 வழியோர' குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் உத்தேசமாக ரூ.2.32 கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தினால் சுமார் 25,549 மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம் டிசம்பர் 99க்குள் மக்கள் பயனுக்கு கொண்டுவரப்படும்.

புனரமைப்பு திட்டங்கள்

1996-97ஆம் ஆண்டு புனரமைப்பு திட்டத்தின் கீழ் 30 மின் விசையிறைப்பான் குடிநீர்த் திட்டங்கள் ரூ.38.15 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு திட்டங்கள் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டது. மேலும் 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூ.10.07 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டது.

1997-98ஆம் ஆண்டில் ஊரக பேரூராட்சி புனரமைப்பு திட்டத்தின் கீழ் 17 குடிநீர்த் திட்டங்கள் ரூ.28.35 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட்டது.

1997-98ஆம் ஆண்டு தரம் உயர்த்துதல் (Upgradation) திட்டத்தின்கீழ் 3 குடியிருப்புகளில் புதியதாக மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணிகள் ரூ.12.13 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இதுதவிர 12 குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ.8.98 இலட்சங்கள் செலவில் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1998-99ஆம் நிதியாண்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்காக வாரியத்தால் ரூ.30 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சியிடம் மதிப்பீட்டு தொகையில் 50 சதவீதம் பங்கு தொகையாகப் பெற்று மொத்தம் ரூ.60 இலட்சம் செலவில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சில ஊராட்சிகளிடம் 50 சதவீதம் நிதி பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பணிகளும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டம் **"அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"**. இத்திட்டத்தின்படி தமிழகத்தின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அந்த கிராமத்தின் குடியிருப்புகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படவேண்டும் என்பதாகும்.

அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 7 சட்டமன்ற தொகுதிகளிலுள்ள 7 கிராமங்கள் 1997-98 மற்றும் 1998-99ஆம் ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமங்களில் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சமத்துவபுரம் குடிநீர்த் திட்டம்

முஞ்சிறை ஒன்றியத்திற்குட்பட்ட ஏழுதேசம் பேரூராட்சியில் கலிங்கராஜபுரத்தின் அருகில் "சமத்துவபுரம்" அமைக்க தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டு அதற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டது.

நகராட்சி குடிநீர்த் திட்டம் – குளச்சல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

24,000 மக்கள் பயன்பெறும் வகையில் குளச்சல் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.17.17 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1998ஆம் ஆண்டு முடிவுற்றது.

நாகர்கோவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

நாகர்கோவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.17 கோடி மதிப்பீட்டில் சுமார் 2,00,000 மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2000ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் முடிவடையும்.

வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

இம்மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 11 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இக்குடிநீர்த் திட்டங்களினால் 20 ஊராட்சிகள், 18 ஊரக பேரூராட்சிகள், நகர பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சிக்குட்பட்ட 7 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டங்களினால் சுமார் 2,63,916 மக்கள் பயனடைகின்றனர். இக்குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்புக்காக 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.1.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆய்விலுள்ள குடிநீர்த் திட்டங்கள்

★ ரூ.9 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மற்றும் சுசீந்திரம் பேரூராட்சிகள் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

★ ரூ.22.81 கோடி மதிப்பீட்டில் 14 பேரூராட்சிகள், கடலோரக் கிராமங்கள் மற்றும் உப்பு நீரால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

★ ரூ.12.64 கோடி மதிப்பீட்டில் வேர்க்கிளம்பி மற்றும் 6 பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

★ ரூ.2 கோடி மதிப்பீட்டில், பூதப்பாண்டி, தாழக்குடி பேரூராட்சிகள் மற்றும் 20 வழியோர கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம். ★

சாலைப் போக்குவரத்தில் சாதனை

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில், 1996-97 நிதியாண்டின் தொடக்கத்தில் 125க்கும் அதிகமான பேருந்துகள், இஞ்சின் டயர், உதிரி பாகங்கள் இல்லாமையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தடம் முடங்கி கிடந்தன. 250க்கும் மேற்பட்ட பேருந்துகள் பழுதடைந்த நிலையில் இயக்கப் பட்டு வந்தன. இந்த அரசு பொறுப் பேற்றவுடன், எடுத்த தீவிர நடவடிக்கையால் நிறுத்தப்பட்டிருந்த அனைத்து பேருந்துகளும் சாலையில் இயக்கப்பட்டன. பழுதடைந்த பேருந்துகள் சீரமைக்கப்பட்டன.

1996-97 நிதியாண்டில், 41 புதிய பேருந்துகள், 1997-98 நிதியாண்டில் 175 புதிய பேருந்துகள் மற்றும் 1998-99 நிதியாண்டில், 31.12.98 முடிய 54 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு பேருந்து இயக்கம் தடையின்றித் தொடரப்பட்டு வருகிறது.

1997-98ஆம் ஆண்டில், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் இரண்டு பேருந்துகள் என்ற திட்டத்தின் கீழ் பதினான்கு பேருந்துகள், அனைத்துத் தொகுதிகளிலும் இயக்கப் பட்டுள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, 31.12.98 முடிய 270 பழைய பேருந்துகள் கழிக்கப்பட்டு, புதிய பேருந்துகள் பயணிகள் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும் 57 புதிய சர்வீஸ்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிகளில் 1.11.96 முதல் விவேகானந்தபுரத்தில் புதிதாக ஒரு பணிமனை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அதுபோல், கல்குளம் வட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் குளச்சலில் 1.10.97 அன்று ஒரு புதிய பணிமனை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1997-98ஆம் ஆண்டில் இயக்கப்பட்ட 30 சர்வீஸ்களில் 20 சர்வீஸ்கள் கிராமப் பகுதித் தேவைக்கென ஒதுக்கி இயக்கப்பட்டன. இதன் மூலம் 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குக் கூடுதல் பேருந்து வசதியும் 16 கிராமங்களுக்குப் புதிய பேருந்து இணைப்பு வசதியும் கொடுக்கப்பட்டன.

1998-99ஆம் ஆண்டில், எங்கும் நிற்கும் பேருந்துகளாக இயக்கப்பட்ட 27 பேருந்துகள் நிரந்தர பேருந்தாக இயக்கப்பட்டு போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளது.

ரயில் வந்து போகும் நேரங்களில் தனி நடைகள் (16) ரயில் நிலையங்களை தொட்டு இயக்கப்பட்டு, ரயில் மூலம் வந்து செல்லும் பயணிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய பேருந்துகள், ராணித்தோட்டம் கூண்டு கட்டும் பிரிவிலிருந்து 1996-97ஆம் ஆண்டு 58, 1997-98ஆம் ஆண்டு 205, 1998-99ஆம் ஆண்டு 44 (31.12.98 முடிய) கூண்டுகள் கட்டி முடிக்கப்பட்டன.

சமீபத்திய அரசு ஆணையின் அடிப்படையில் 20 நடைகளுக்கான கட்டணம் செலுத்தி 30 நடைகள் நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் சீசன் டிக்கட் முறை 1.6.98 முதல் முதன் முறையாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமல் செய்யப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கான டீசல் சேமிப்பில், திறன் அதிகரிப்பிற்கான முதல் பரிசு அகில இந்திய அளவில் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும், இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

சமூக நலத்துறையின் சீர்மிகு பணிகள்

1996-97 முதல் - 31.12.98 முடிய சமூக நல உதவிகள் பற்றிய விவரம்:

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 3,440 ஏழைப்பெண்களுக்கு ரூ.3.44 கோடி திருமண உதவியாக வழங்கப்பட்டது.

★ அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ், 43 பயனாளிகளுக்கு ரூ.4.30 இலட்சம் வழங்கப்பட்டது.

★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டத்தில் 23 பயனாளிகளுக்கு ரூ.1.31,000 வழங்கப்பட்டது.



★ விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ரூ.1,62,000 செலவில் 52 பேர் பயன்பெற்றனர்.

★ ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தில், 7 பயனாளிகளுக்கு ரூ.20,000 வழங்கப்பட்டது.



★ விதவைக் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் வழங்கும் திட்டத்தில், 1,125 பயனாளிகளுக்கு ரூ.1,25,500 செலவிடப்பட்டது.

★ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ், ரூ.19.56 இலட்சம் நிதியுதவி 5,880 கருவுற்ற மகளிர்க்கு வழங்கப்பட்டது.

★ இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில், ரூ.2.60 இலட்சம் செலவில் 135 பயனாளிகள் பயன்பெற்றனர்.

★ தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில், ரூ.31,80,000 செலவில் 2,120 குழந்தைகள் பயன் பெற்றனர்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

கிராமங்களின் அடிப்படை வசதியின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் **அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்** ஆரம்பிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு சட்டமன்ற தொகுதிகளில் அதிக மக்கள் தொகை கொண்ட ஏழு ஊராட்சிகள் இத்திட்டம் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளன.

அவைகள் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் தடிக்காரன்கோணம்; நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் மணக்குடி; குளச்சல் சட்டமன்ற தொகுதியில் முட்டம்; பத்மனாபபுரம் சட்டமன்ற தொகுதியில் ஆத்திவிளை; கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் இனையம் புத்தன்துறை; விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் தூத்தூர்; திருவட்டார் சட்டமன்ற தொகுதியில் வெள்ளாங்கோடு ஆகிய ஊராட்சிகள் ஆகும். இத்திட்டத்திற்கு ரூ.2.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டுத் தொகையில், 42 சாலைவேலைகள் ரூ. 66.23 இலட்சத்திலும்; 28 கட்டட வேலைகள் ரூ.35.54 இலட்சத் திலும்; 343 தொகுப்பு வீடுகள் ரூ. 108.36 இலட்சத்திலும்; 1 பாலம் ரூ. 2 இலட்சத்திலும்; 268 தெரு விளக்கு ரூ. 10.22 இலட்சத்திலும்; 3 நிழற்குடைகள் ரூ. 2.30 இலட்சத்திலும்; 2 கிணறுகள் ரூ. 4 இலட்சத்திலும்; 2 குடிநீர் இணைப்பு நீட்டித்தல் ரூ.3 இலட்சத்திலும்; 7 துணை சுகாதார நிலையங்கள் ரூ. 24.66 இலட்சத்திலும்; 3 இதர வேலைகள் ரூ. 7.18 இலட்சத்திலும் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

வேலைக்கு உறுதியளிப்புத் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், நாடாளு மன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களது தொகுதி மேம்பாடுத் திட்ட ஒதுக்கீட்டிலும் வேலைகள் தேர்வு செய்யப்பட்டு மேற்படி ஊராட்சிகளில் செயல் படுத்தப்படுகின்றன.

தேர்வு செய்யப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களில் பல்வேறு துறைகளின் மூலம் முகாம்கள் நடத்தப்படுகிறது. விவசாயத்துறை மூலம் மாதிரி விளக்கப்பண்ணைகள், சுகாதார நலத்துறை மூலம் உடல் நலம் பேணல், எயிட்ஸ் விழிப்புணர்வு, குடும்பக் கட்டுப்பாடு, கண்பார்வை குறைவுத் தடுப்பு, காசநோய், மலேரியா தடுப்பு முகாம்கள், ஊரக வளர்ச்சித்துறை மூலம் 100 சதம் தெருவிளக்கு எரிதலை உறுதி செய்தல், சமூக நலத்துறை முகாம் மூலம் சமூக விழிப்புணர்ச்சி, மது ஒழிப்பு, தீண்டாமை ஒழித்தல் போன்று பல முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மணக்குடியில் மீனவர் இளைப்பாறு கொட்டகை

மீனவர்கள் தங்களது மீன்பிடிக்கருவிகள், வலைகள் ஆகியவைகள் நிழலிலிருந்து சீர் செய்யவும் இளைப்பாறவும் மீனவர் இளைப்பாறு கொட்டகை கட்டப்பட்டுள்ளது. இதனால் சுமார் 100 மீனவர்கள் பயன் பெறுகின்றனர்.

மீனவர் குடியிருப்புகளுக்கு ஒரு கான்கிரீட் மற்றும் கழிவு நீர் கால்வாய் (ரூ.1 இலட்சம்)

சகதியும், சேருமாக இருந்த மீனவர் குடியிருப்புகளிலுள்ள இணைப்பு சந்துகளுக்குக் கான்கிரீட் தளம் அமைத்து கழிவுநீர் வடிகாலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 200 குடும்பங் களின் சுற்றுப்புறச் சூழல் மேம் பட்டுள்ளது.

தடிக்காரன் கோணம்

தடிக்காரன் கோணம் மூன்று பக்கங்களிலும் ஒதுக்கப்பட்ட காடுகளுள்ள (Reserve Forest) மலைப்பாங்கான பகுதியாகும். மக்கள் மேடான பகுதியிலிருந்து தாழ்வான பகுதிக்கும், தாழ்வான பகுதியிலிருந்து மேடான பகுதிக்கும் மலைச்சரிவுகளில் ஊர்ந்து சென்றார்கள். எனவே மலைச் சரிவில் ஓர் பக்கச் சுவர் கட்டி, படிக்கட்டுகளும் கட்டப்பட்டுள்ளன. இதனால் சுமார் 100 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

இணையம்புத்தன்துறை

இங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டப்

பட்டுள்ளது. இதற்கு முன்னால் இச்சுகாதார நிலையம் ஓர் இடிந்த ஓட்டுக்கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இப்புதிய கட்டடத்தால் இக்கிராம மக்கள் மட்டுமல்லாது சுற்று வட்டார மக்களும் பயன் பெறுவார்கள்.

நமக்கு நாமே திட்டம் 1997 - 98

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் நோக்குடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1997–1998ஆம் ஆண்டு ரூ.11 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பதினேழு ஊராட்சிகள் பயன்பெற்றுள்ளன.

இத்திட்டத்தில் 1997–98ஆம் ஆண்டில், சாலைகள் –9; தடுப்புச்சுவர் கட்டுப் பணிகள் –11; குடிநீர் வேலைகள் –2; படிப்பகம் கட்டும் பணி –2; தொலைக்காட்சி அறை கட்டும் பணி –1; சத்துணவு கூடம் –1; வடிகால் வசதி –2; புதிய தெருவிளக்கு –1, ஆகமொத்தம் 29 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பங்குத் தொகையாக பணமாக ரூ.25 இலட்சம் பெறப்பட்டு மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டன. 1998–99ஆம் ஆண்டிற்கு ரூ.18 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு 69 கிராமங்களில் 104 பணிகள் எடுக்கப்பட்டன. இவற்றில் 32 பணிகள் நிறைவு பெற்றுவிட்டன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருப்பதிசாரம் ஊராட்சி

நமக்கு நாமே திட்டத்தில் திருப்பதிசாரம் பெருமாள் கோவில் தெருவில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அறை ரூ.16,000 மதிப்பீட்டில் (பொதுமக்கள் பங்களிப்புத் தொகை ரூ.4,000) கட்டப்பட்டுள்ளது. தொலைக்காட்சிப் பெட்டி இருந்தும், அறை இல்லாமல் பயன்படுத்த முடியாத நிலை முன்பு இருந்தது. தற்போது தனியே தொலைக்காட்சி அறை கட்டப்பட்டு விட்டதால் பொது மக்கள் தொலைக்காட்சியைக் கண்டுகளிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சரல்விளை ஊராட்சி

சுமார் 200லிருந்து 300 ஏக்கர் விளை நிலங்களுக்கு இணைப்புச் சாலையின்றி வரப்புகளின் வழியே விவசாயிகள் தங்கள் நிலங்களுக்குச் செல்லவும் விளைப் பொருட்களை எடுத்து வரவும் முடியாமல் அல்லல்பட்டனர். நமக்கு நாமே திட்டத் தின் கீழ் அவர்கள் ஓர் இணைப்புச் சாலையும், பக்கச் சுவரும் அமைக்க முன் வந்தனர்.



இச்சாலையின் மதிப்பு ரூ.1.32 இலட்சம். இதில் பொது மக்களின் பங்குத் தொகை ரூ.33,000 ஆகும்.

மேலும் சுமார் 50 பட்டாதாரர்கள் தங்களின் நிலங்களில் அரை சென்ட் முதல் ஒரு சென்ட் நிலம்



இலவசமாக விட்டுக் கொடுத்து இவ்விணைப்புச் சாலை அமைக்க வழி வகுத்தனர்.

இச்சாலையின் தற்போதைய அகலம் 5.5 மீட்டராகும். எனவே இதில் லாரி போன்ற கனரக வாகனங்கள் சென்று விவசாய விளைபொருட்கள் எளிதில் கொண்டு செல்ல ஏதுவாக வுள்ளது. மேலும் இந்த இணைப்பு சாலையின் மறு புறத்தில் குடியிருப்பு மனைகள் உள்ளன.

இணைப்புச்சாலை அமைக்கப்பட்டுள்ளதால் தற்போது 50 குடியிருப்பு வீடுகள் கட்டவும் ஏதுவாகவுள்ளது.

★ ★ ★

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கன்னியாகுமரி மாவட்டக் கிளை, மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர், வாகன உரிமையாளர்கள் மற்றும் மருத்துவர்களின் கடன் தேவைகளை நிறைவேற்றுவதில் முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இதுவரை வழங்கப்பட்டப் புதிய கடன்கள் உதவி விவரம் பின்வருமாறு:

1996–97ல் சிறுதொழில் கடன்கள் – 32 நபர்களுக்கு ரூ.3.47 கோடியும், 1997–98ல் 40 நபர்களுக்கு ரூ.2.25 கோடியும், 1998ல் 26 நபர்களுக்கு ரூ.80.71 இலட்சமும் வழங்கப்பட்டது.

வாகனக் கடன்கள் 1996–97ல் 95 நபர்களுக்கு ரூ.1.34 கோடியும், 1997–98ல் 89 நபர்களுக்கு ரூ.1.19 கோடியும், 1998ல் 49 நபர்களுக்கு ரூ.70.82 இலட்சமும் வழங்கப்பட்டது.

தனியார் மருத்துவமனை கடன்கள் 1996–97ல் 4 நபர்களுக்கு ரூ.34.45 இலட்சமும், 1997–98ல் 5 நபர்களுக்கு ரூ.47.49 இலட்சமும், 1998ல் 1 நபருக்கு ரூ.8.20 இலட்சமும் வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டுவரும் முக்கிய தொழிலாகிய தானியங்கி இயந்திரங்கள் மூலம் மீன்பிடி வலை உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களது வளர்ச்சியில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதுவரை 35 தொழிற்சாலைகளுக்கு ரூ.9 கோடி கடனாக வழங்கி அத்தொழில் கன்னியாகுமரி மாவட்டத்தில் செழித்தோங்கி வளர உதவி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு நாகர்கோவில் மற்றும் சுற்றியுள்ள நகரங்களான குழித்துறை, தக்கலை, பூதப்பாண்டியில் தனியார் வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், குளிர்பதன வசதியுடன் கூடிய கிட்டங்கிகள் கட்ட நிதி உதவி வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் மற்றும் மகளிர் தொழிற்துறையில் ஈடுபட ஊக்குவிக்கும் பொருட்டு முதலீட்டில் 25 சதவிகிதம் வரை சுலபக்கடன்களை 1 சதவிகிதம் வட்டியில் வழங்கவும், அரசு வழங்கும் மானியங்களை கடன்தொகையுடன் உடனடியாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ★

வனவளம் கொழிக்கும் கன்னியாகுமரி

'வனம்' இந்நாட்டிற்குக் கிடைக்கப் பெற்ற ஒரு வரப்பிரசாதம். இம்மாவட்ட பசுமை மாறா வனத்திற்கு 75 மில்லியன் வருட வயது எனச் சொல்லப்படுகிறது. 1,67,130

ஹெக்டர் மாவட்ட பரப்பில் அரசுக் காடுகள் 50.486 ஹெக்டர் பரப்பில் அமைந்துள்ளன. இது இம்மாவட்ட பூகோளப் பரப்பில் 30.2 சதவீதமாகும்.

இக்கோட்டத்தில் அழகியபாண்டியபுரம், வேளிமலை, குலசேகரம். களியல், பூதப்பாண்டி ஆகிய ஐந்து வனச்சரக அலுவலகங்களும், தடிகள் விற்பனை மண்டி, வடசேரியில் வனமண்டி சரகங்களும் வனச் சட்டங்களை அமல்படுத்தும் பொருட்டு வனச் சட்டச் செயலாக்கச் சரகமும், வனங்களை பாதுகாக்கும் பொருட்டு வனக் காவல் நிலையச் சரகமும், தொழில்நுட்பச் சரகமும் ஆக மொத்தம் 9 சரகங்கள் செயல்படுகின்றன.

இம்மாவட்ட வனத்தில் கோங்கு, நாங்கு, மிளாசதையன், மயிலை போன்ற மரங்களும், நாய்த் தேக்கு போன்ற சிறிய மரங்களும், கொடிகளும், செடிகளும், மூலிகைகளும், கள்ளி இன வகைகளும், அநேக வகை பிரம்பு, பனை, கூந்தல் பனை, ஈச்சை பனை ஆகியவை உள்ளன. விலையுயர்ந்த தரமான தேக்கு, ஈட்டி, வேங்கை, ஆயினி போன்ற மரங்களும், மூங்கில், ஈத்தல், மென்மரம், புளி, எலுமிச்சை மணம் கொண்ட புல், ரப்பர், தென்னை, கமுகு, கடுக்காய், லவங்கம், நெல்லிக்காய், ஏலம் மாவு மற்றும் மருந்து வகைச் செடிகள் கிடைக்கின்றன; மருந்துவாழ்மலையில் அரிய மூலிகை வகைகள் கிடைக்கிறன. 4,785.70 ஹெக்டர் அரசு ரப்பர் தோட்டமும், 110 ஹெக்டர் கிராம்பு தோட்டமும் இம்மாவட்டத்தில் உள்ளன.

இம்மாவட்ட வனத்தில் 25 வகையான பாலூட்டிகளும், 14 வகையான இடம் பெயர்ந்து வரும் பறவைகளுடன்

சேர்த்து 60 வகையான பறவையினங்களும், பல்வேறு வகையான மீனினங்களும் ஊர்வன வகைகளும் உள்ளன. இவ்வனம் பல தரப்பட்ட உயிரினங்களுக்குப் பெட்டகமாக உள்ளது.

இவ்வனத்தில் தென்னிந்திய யானைகள், வரையாடுகள், பெரிய அணில்கள், காட்டெருமைகள், மலைப் பாம்புகள், காட்டுக் கோழிகள் ஆகிய அரிய வனவிலங்குகளும் உள்ளன. ★

கன்னியாகுமரி மாவட்டம்

மின்வசதி

கன்னியாகுமரி மின்பகிர்மான வட்டத்தில் 9ஆவது திட்டத்தில் நான்கு 110/11 கே.வி. மற்றும் ஒரு 33/11 கே.வி. துணை மின் நிலையத்திற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அதற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அதற்கான இதரப்பணி நடைபெறுகின்றன.

மீனாட்சிபுரம், தெங்கம்புதூர், திக்கணங்கோடு, மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் 110/11 கே.வி. துணை மின் நிலையங்களும், தடிக்காரன்கோணத்தில் 33/11 கே.வி. துணை மின் நிலையமும் அமைக்கப்படுகின்றன.

இலவச ஒரு குடிசை ஒரு விளக்குத் திட்டம்

ஒரு குடிசை ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படுகிறது. இதற்கான தகுதிகள் கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட இடங்களில் சுவர் மண்ணால் கட்டப்பட்டதாகவும், மேல்பாகம் கூரை மேவப்பட்டதாகவும், பரப்பளவு 200 சதுர அடிக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். மேலும் தே.ஊ.வே. திட்டம், ஊரக நிலம் அற்றோர் வேலைவாய்ப்பு திட்டம், ஜவகர் வேலை வாய்ப்பு திட்டம், மற்றும் தாட்கோ திட்டங்களின் மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்கு இச்சலுகை வழங்கப்படுகிறது.

விவசாய பம்பு செட்டுக்கான மின் இணைப்புத் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1996 மே திங்கள் முதல் 1998 டிசம்பர் திங்கள் விவசாயத்திற்காக 915 புதிய மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் குறைந்த மின் அழுத்த தொழில் நிறுவனங்களுக்காக 599 புதிய மின் இணைப்புகளும், 287 கூடுதல் மின்பளு இணைப்புகளும், 1 உயர் அழுத்த மின் இணைப்பும் 39,169 குடியிருப்புகளுக்கு புதிய மின் இணைப்புகளும், 164 நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. புதிதாக 8105 தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்காக செண்பகராமன்புதூரில் 230 கிலோ வோல்ட்டில் புதிய துணை மின் நிலையமும், வியன்னூரில் 110 கிலோ வோல்டில் ஒரு புதிய உபமின்நிலையம் ரூ.5,288 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.92.86 இலட்சம் செலவிடப்பட்டு நாகர்கோவில் மற்றும் மணவாளக்குறிச்சி உப மின் நிலையங்களில் மின் மாற்றிகளின் திறன் உயர்த்தப்பட்டுள்ளன. 135.282 கி.மீ. நீளத்தில் உயர் அழுத்த மின் பாதையும் 468 கி.மீ. நீளத்தில் தாழ்வழுத்த மின் பாதையும் அமைக்கப்பட்டுள்ளன.

குறைந்த மின் அழுத்தம் சரி செய்யவும் மின்மாற்றிகள் அமைக்கவும் ரூ.84.78 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ ★ ★

வட்டக்கோட்டை

பால் வளம்

கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 25.1.1949இல் நாஞ்சில் நாடு கூட்டுறவு பால் வினியோக சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு 7.2.1950 அன்று பணி துவங்கியது. தற்பொழுது 144 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பொது பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 81, மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 56, அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 4, ஆதிதிராவிட மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 3 எனச் சங்க உறுப்பினர்களின் கறவை மாநாடுகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் மருத்துவ வசதியும் ஒன்றியம் வழியாக நடைமுறைப் படுத்தி வருகிறது.

1996ஆம் ஆண்டு நாள் ஒன்றுக்கு 15,000 லிட்டர் பால் விற்பனையாக இருந்தது தற்பொழுது 18,000 லிட்டர்களாக உயர்ந்துள்ளது. இதை நாள் ஒன்றுக்கு 25,000 லிட்டர்களாக உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

அரசு நலத்திட்டங்கள்

தமிழக அரசு நலத்திட்டங்களை இவ்வொன்றியம் பெற்று நலிந்த பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கி அவர்கள் நிலை உயர உறுதுணையாக இருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் தாட்கோ திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு கறவை மாடு ஒன்றுக்கு ரூ.6,000 வீதம் 50 சதவீதம் அரசு மானியத்தில் வங்கி வழியாக கடன் வழங்கி உதவி வருகிறது. அதன் வகையில் 1996–97 முதல் 1997–98 வரை 104 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ.3,12,000 வழங்கப்பட்டுள்ளது.

கன்றுகள் வளர்ப்புத் திட்டம்

தாட்கோ மற்றும் ஆதிதிராவிடர் நலத் திட்டத்தில் 50 சதவீதம் மானியத்தில் கறவை மாடுகள் வாங்கிய உறுப்பினர்களின் கிடாரிக் கன்றுகளை உரிய வயதில் பருவத்திற்குக் கொண்டு வருவதற்காக 4வது மாதம் முதல் 32வது மாதம் வரையில் ஊட்டச்சத்து மிக்க கன்றுகள் தீவனம் இலவசமாக தமிழக அரசால் ஒன்றியம் வழியாக வழங்கி வருகிறது. 1996 முதல் 1998 வரை ரூ.5,28,388 மதிப்புள்ள கன்றுகள் தீவனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தில் 1996–97 ஆம் ஆண்டில் ரூ.2,12,697 மதிப்புள்ள 165 பால் கேன்கள் 50 சதவீதம் மானியத்தில் வாங்கப்பட்டுள்ளன.

ஐயாவைகுண்டர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.30,000 மதிப்புள்ள நவீன பால் பரிசோதனை கருவி ஒன்று 50 சதவீதம் தொகை ஐ.ஆர்.டி.பி. வழியாகவும் மீதம் 50 சதவீதம் தொகை தமிழக அரசு மானியமும் ஆக 100 சதவீத மானியத்தில் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டம்

தமிழக அரசு, ஒன்றியத்திற்கு மத்திய அரசின் ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தில் ரூ.96.45 இலட்சம் 100 சதவீத மானியமாகப் பெற்று தந்துள்ளது. இத்திட்டம் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 19.4.1998 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

அரசு அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்ட இந்நிறுவனம் கூட்டுறவுக் கொள்கையின் அடிப் படையில் உறுப்பினர்களின் பிரதிநிதிகளே நிர்வகிக்க வேண்டும் என்ற சீரிய கொள்கைக்கு ஏற்ப தேர்தல் நடத்தப்பட்டு 2.10.1998 முதல் புதிய நிர்வாகக்குழு பொறுப்பு ஏற்று நிர்வகித்து வருகிறது.

★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

இந்த இதழில்



★ சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை 2
★ சமத்துவபுர இல்லங்களால் மாநிலம் முழுவதும் சமத்துவ மணம் பரவும் 13
★ பாலங்கள்—சாலைகள் கட்டுமானப் பணிகள் தொடக்கம் 18
★ சாதிகளிடையே மோதிக்கொள்ளும் கொடியநிலை நீங்கவேண்டும் 20
★ முல்லைப்பாட்டு 23
★ பண்பாடு காப்பது தமிழனின் தனி இலக்கணம் 27
★ சென்னை மாநகரில் 10 புதிய மேம்பாலங்கள் 30
★ திருவட்டார் தொகுதி 31
★ மீனவர் நலன் 32
★ குளச்சல் தொகுதி மேம்பாடு 34
★ கன்னியாகுமரி மாவட்டத்தில் கைத்தறித் தொழில் 36
★ புனித சவேரியார் பேராலயம் 39
★ மாமேதை ஷெய்கு பீர்முஹம்மது 42
★ எங்கள் ஊர்ப் பிரச்சினை 43
★ தீண்டாமை ஒழிப்பிற்குத் தீவிரப் பிரச்சாரம் 48

திருக்குறள்

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது.

அறநெறியைப் போற்றாமலும், அவ்வழியில் நடக்காமலும்கூட இருக்கின்ற சிலர் மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசாமல் இருந்தால், அது அவர்களுக்கு நல்லது. - கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு – 2030
மாசி
பிப்ரவரி 16–28, 1999
மலர் : 30 இதழ் : 16
விலை ரூ.3

முதல் பக்க அட்டையில்

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை

கடைசிப் பக்க அட்டையில்

தமிழ்நாடு முழுதும் 102 பாலங்கள் – சாலைகள் கட்டுமானப் பணிகள் தொடக்க விழா
சென்னை மாநகரில் 10 புதிய மேம்பாலங்கள் கட்டுமானப் பணிகள் தொடக்கவிழா

சிக்கனம் செயல்திறன் மதிநுட்பம் வாய்ந்த நிதி நிருவாகம்

மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி பாராட்டு

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

பதினோராவது சட்டப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1999 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிப்பதோடு தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்று நான் நம்புகிறேன்.

2. மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து, மாநில அரசின் பொறுப்புகள் மிகவும் கூடியுள்ள இந்த காலக் கட்டத்தில், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி ஆதாரங்களை மாநில அரசுக்கு மாற்றுவது அவசியமாகியுள்ளது. சென்ற ஆண்டு அமைக்கப்பட்டுள்ள பதினோராவது நிதிக்குழு , அதன் அறிக்கையை 1999 ஆம் ஆண்டு இறுதிக்குள் அளித்திட உள்ளது. விவேகமான நிதி நிர்வாகத்துக்கு பெயர் பெற்ற தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களின் நிர்வாகச் செயல் திறனைக் கருதி கூடுதல் நிதி அளிக்கப்படுவதற்குப் பதிலாக, பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரை காரணமாக மத்திய அரசால் குறைந்த நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. பதினோராவது நிதிக்குழு இதற்கு உரிய முக்கியத்துவம் அளித்து, கூடுதல் நிதியாதாரங்களை நமக்கு அளிக்கப் பரிந்துரை செய்யும் என்று நம்புகிறோம்.

3. நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், மதச்சார்பின்மையையும் சமூக நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதோடு, மாநிலங்களுக்கு கூடுதலாக சுயாட்சி உரிமைகளைப் பெறுவதற்கும் அனைத்து மாநிலங்களின் ஆட்சி மொழிகளையும் மைய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்குவதற்கும், அதன் முதல் கட்டமாக தமிழ் மொழியை ஆக்குவதற்கும், சமூக நீதிக்கான இடஒதுக்கீட்டினை முடிவு செய்யும் அதிகாரத்தை மாநிலங்களுக்கே அளிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கும் இந்த அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. இவற்றில் அதிக முன்னேற்றம் எய்திட இயலவில்லை என்றாலும் இது குறித்து சட்டரீதியாகவும் நிர்வாக அடிப்படையிலும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

4. இம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பராமரிக்க இந்த அரசு எடுத்த உறுதியான தொடர் முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இவ்வகையில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனளித்துள்ளதுடன் மக்கள் முழுமனதுடன் நல்கிவரும் ஆதரவும் இம்மாநிலத்தில் தொடர்ந்து அமைதியும், மத நல்லிணக்கமும் பேணிக்காக்கப்படுவதை உறுதி செய்யும் என்று இந்த அரசு நம்புகிறது.

5. தமிழ்நாட்டின் வரலாற்றில் நீண்டகாலமாகவே சாதி மோதல்கள் இருந்து வந்துள்ளன. சாதி மோதல்களின் பின்னணியில் உள்ள காரணங்களைக் கண்டறிவதற்கும், இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறுவதைக் குறைக்க நீண்டகாலத் தீர்வுகளைக் காண்பதற்கும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க 22.10.98 மற்றும் 26.10.98 ஆகிய நாட்களில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உருவான ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கொள்கை முடிவெடுத்து அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது. மத நல்லிணக்கத்திற்கும் சமூக

ஒற்றுமைக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய, வன்முறையைத் தூண்டக் கூடிய ஊர்வலங்கள், பேரணிகள், கூட்டங்கள் முதலியவற்றிற்கு அனுமதியளிக்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகங்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது. சாதி, மத, வகுப்பு அமைப்புகள் வன்முறையைத் தூண்டக்கூடிய செய்திகளை அச்சிடுதல்/ வெளியிடுதல்/ சுவரொட்டிகள் ஒட்டுதல்/ சுவர்களில் எழுதுதல் ஆகியவற்றைத் தடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது. கிராம அளவில் "அமைதிக் குழுக்கள்" ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்கள் அடிமட்ட அளவிலான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைக்கும் பயனுள்ள பணியைச் செய்வதுடன், இனிவரும் ஆண்டுகளில் மோதல்களையும் பிணக்குகளையும் தீர்த்து வைக்கும் முக்கிய அமைப்புகளாகவும் செயல்படும்.

6. இந்த ஆண்டு நமது மாநிலத்தில் மழையளவு மனநிறைவளிப்பதாக இருந்தபோதிலும், சில மாவட்டங்களில் அதிக அளவு மழை பெய்ததனால் வெள்ளமும், வெள்ளச் சேதங்களும் ஏற்பட்டன. அரசு அமைப்புகள் உரிய காலத்தில் எடுத்த நடவடிக்கையினால் உயிரிழப்பும் சொத்துக்கள் இழப்பும் பெரிதும் குறைக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கவும், சேதமடைந்த சாலைகள், கரைகள் முதலியவற்றைச் சீரமைக்கவும், அரசு சுமார் ரூ.33 கோடி வழங்கியுள்ளது.

7. மக்களின் அன்றாடப் பயனுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலைகள் அதிகமாக உயர்ந்து வருவது இந்த அரசுக்கு மிகவும் கவலையளிக்கிறது. இன்றியமையாப் பொருட்களின் விலை நாடு முழுமைக்குமான பொதுவான பொருளாதாரக் கொள்கைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. மத்திய அரசினால் மட்டுமே விலைவாசி உயர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலும். மாநில அரசின் அமைப்புகள் இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து அதிக அளவில் சந்தையில் விற்பதன் மூலம், விலைவாசியை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே கட்டுப்படுத்த இயலும். கடந்த சில மாதங்களில் ஏற்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விலை உயர்வைத் தொடர்ந்து, அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு, யூரியா போன்றவற்றின் விலையை மத்திய அரசு அண்மையில் உயர்த்தியுள்ளது. ஏழை, நடுத்தர மக்களின் நலனில் அக்கறையும், பொறுப்பும் கொண்டுள்ள இந்த அரசு, மைய அரசு அறிவித்துள்ள அரிசி விலை உயர்வினால் கூடுதல் மானியமாக சுமார் ரூ.160 கோடி அளவுக்கு இந்த அரசுக்கு சுமை அதிகரித்த போதிலும், இந்த விலை உயர்வை நுகர்வோர் மீது சுமத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

8. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி முடிக்கப்பட்டு 142 இலட்சம் குடும்பங்கள் புதிய குடும்ப அட்டைகளைப் பெற்றுள்ளன. புதிய அட்டைகளின் அடிப்படையில் இன்றியமையாப் பொருட்களை வழங்குவது தொடங்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையின் கீழ் போதிய அளவு அரிசி கையிருப்பு வைத்துக் கொள்வதற்காக காவிரி கழிமுகப்பகுதிகளில் நடப்பு சம்பா பருவத்தின் போது ஏகபோகக் கொள்முதல் முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கும் மேல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

9. மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டினை எய்துவதில் இந்த அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4010 கோடி முழுவதுமாக எய்தப்பட்டது. 1998-99ஆம் ஆண்டிற்கு ஒப்புதலளிக்கப் பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4500 கோடியும் எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டு அளவை கணிசமான அளவிற்கு அதிகரிக்கச் செய்ய இந்த அரசு முயற்சி செய்யும்.

10. மாநிலத்தின் முக்கிய தேவையான உணவு உற்பத்தியைப் பெருக்கிடுவதற்கான வேளாண்மை வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள பாசன சீரமைப்புக்காகக் காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள கால்வாய்களிலும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஏரிகளிலும் தூர் வாரியதால், பாசனத்திற்கான நீர் கடைக் கோடியிலுள்ள பகுதிகளுக்கும் சென்றடைய முடிந்தது. மேலும், இப்பணியினால் இந்த ஆண்டில் பெருமழையின் பாதிப்பும் வெகுவாகக் குறைந்துள்ளது. பாசனக் கால்வாய்களைத் தூர்வாருவதற்கு அடுத்த ஆண்டில் அரசு கூடுதலாக நிதிஒதுக்கீடு செய்யும். கடந்த பருவத்தின் போது மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்ததாலும், பாசனத்திற்கு அதிக அளவு தண்ணீர் கிடைத்ததாலும் இந்த ஆண்டு சுமார் 98 இலட்சம் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், புன்செய் நில விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் அடுத்த ஆண்டில் 10,000 ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. நல்ல சாலைகள், குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் போன்ற தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், தரம் பிரித்தல் வசதிகளையும் செய்து கொடுத்திட விரைவுபடுத்தப்பட்ட தோட்டக் கலைப்பயிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் இந்த அரசு தொடங்கும். இந்த நடவடிக்கைகள் காய்கறி, பழங்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதால், விவசாயிகளும், நுகர்வோரும் பயனடைவர்.

11. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், அதிக வேலைவாய்ப்பளிப்பதற்கும், அரசு அமைப்புகள் பொதுமக்களுக்கு ஆற்றும் பணியின் திறனையும், தரத்தையும் மேம்படுத்துவதற்கும், தகவல் தொழில் நுட்பவியலில் உள்ள வளவாய்ப்பைக் கருத்திற்கொண்டு, அத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்துறையின்

முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் அறிவுரைகள் வழங்குவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் தகவல் தொழில்நுட்பப் பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல்தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் மேம்பாடு குறித்த புதிய கொள்கையை அறிவித்த முதல் மாநிலம் தமிழ்நாடாகும். தொழில் துறைக்கு அதிக தரம்வாய்ந்த பயிற்சி பெற்ற மனித ஆற்றலை வழங்கும் வகையில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை தரமணியில் ரூ.320 கோடி செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா ஒன்றை மாநில அரசு உருவாக்கி வருகிறது.

12. கணினி மற்றும் இணைய (Internet) வசதியை அனைவரும் எளிதாகப் பெறும் வகையில், இங்கிலாந்து நாட்டின் "வேர்ல்டுடெல்" நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு கூட்டு நிறுவனம் அமைத்து இந்தியாவில் முதலாவதாக மாநிலம் முழுவதிலும் வருமாண்டில் 1,500 சமுதாய இணைய மையங்களும், அடுத்த மூன்றாண்டுகளில் மேலும் 12000 இணைய மையங்களும் ஏற்படுத்தப்படும். இவை அனைத்தும் செயல்படும்போது நேரடியாகவும் இவற்றைச் சார்ந்த தொழில்களிலும் சுமார் 1,50,000 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்த

தீண்டாமைக்கு ஆதாரமில்லை



தீண்டாமை சமயத்தின் ஆதாரம் பெற்ற அனுஷ்டானம் அல்ல. அது சைத்தானின் ஒரு யுக்தியே. சைத்தான் எப்பொழுதுமே தனது செயல்களுக்கு சாஸ்திரங்களில் ஆதாரம் இருப்பதாகச் சொல்வது வழக்கம். ஆனால் எந்த சாஸ்திரமும் பகுத்தறிவையும், தர்க்க புத்தியையும் சத்தியத்தையும் மீறியதாய் இருக்க முடியாது.

– காந்தியடிகள்

இலக்கு எய்தப்படும். கணினி மென்பொருளுக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்ற தமிழ் வரிவடிவங்களை ஒரே சீராகத் தொகுத்து தரப்படுத்துவதற்கும், தமிழ்க் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் "தமிழ் இணையம் 99" என்ற சர்வதேச கருத்தரங்க மாநாடு பிப்ரவரி 7, 8 தேதிகளில் சென்னையில் நடத்தப்பட்டு ஒருமித்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழி அறியாதவர்களும் கணினியையும், இணைய வசதியையும் எளிதாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும் வகையில் தரப்படுத்தப்பட்ட இத்தகைய கணினி தமிழ் மென்பொருள் பெரிதும் உதவும்.

13. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் துறையின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். இந்த அரசின் ஒளிவு மறைவற்ற, தொழில் நேயமிகுந்த கொள்கை காரணமாக புகழ்வாய்ந்த பல பன்னாட்டு நிறுவனங்கள், இம்மாநிலத்தில் பெருமளவில் முதலீடு செய்ய ஈர்க்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் தமிழ்நாடு நாட்டில் ஐந்தாம் இடத்தில்

இருந்தது. 1998 அக்டோபர் வரை ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகளின் அடிப்படையில், தமிழ்நாடு இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருப்பது பெருமிதத்தையும், மனநிறைவையும் அளிக்கக் கூடியதாகும். கடந்த 32 மாதங்களில் இம்மாநிலத்தில் ரூ.48,497 கோடி அளவிற்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 'ஹூண்டாய்', 'மிட்சுபிஷி' மோட்டார் வண்டி நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. ஃபோர்டு மோட்டார் வண்டி நிறுவனம், 1999 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கும்.

14. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அளிக்கும் முயற்சியாக, இந்த அரசு 'சிப்காட்', 'டாசிட்' போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாகவும், தனியார் துறை தொழில் முனைவோருடன் இணைந்து கூட்டுத்துறை மூலமாகவும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் தொழில் பூங்காக்களையும், துணை நகரங்களையும் உருவாக்கி வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் எண்ணூரில் பெட்ரோலிய ரசாயன தொழிற் பூங்காவையும், நாங்குனேரியில் உயர் தொழில் நுட்பப் பூங்காவையும் சிங்கப்பெருமாள் கோயில் அருகே மோட்டார் வண்டி துணைப் பாகங்கள் பூங்காவையும், ஒசூரில் மலர்ச்செடி வகைகளை வளர்ப்பதற்கான அடிப்படை வசதி பூங்காவையும் கூட்டுத்துறையில் உருவாக்கி வருகிறது. இந்த வசதிகள் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குப் பெரும் ஊக்கத்தை அளிக்கும். அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் மேற்கொண்ட பயணம், அந்நாடுகளுக்கும் நமக்கும் இடையே உள்ள கலாச்சாரத் தொடர்பை வலுப்படுத்தியது மாத்திரமல்லாமல், அந்நாடுகளில் உள்ள தொழில் முனைவோர்களிடையே தமிழ்நாட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் தொழில்கள் தொடங்குவதிலும் முதலீடு செய்வதற்குப் பெருமளவு ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

15. தொழில், வாணிபம், வேளாண்மை போன்றவற்றின் வளர்ச்சிக்கு அதிகப்படியான மின் உற்பத்தி செய்வது இன்றியமையாததாகிறது. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியில் பெருமளவு தனியார் முதலீட்டை ஈர்ப்பதில் இந்த அரசு வெற்றி கண்டுள்ளது. அதையொட்டி இந்த அரசு பல்வேறு மின் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. 196 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட முதலாவது தனியார் மின் உற்பத்தித் திட்டம் சென்னையில் பேசின் பாலத்தில் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. சுமார் 2000 மெகாவாட் திறன் கொண்ட திட்டங்களுக்கான கட்டுமானப்பணிகள் அடுத்த சில மாதங்களில் தொடங்கப்படும். இதன் மூலம் முதல் கட்ட மின் உற்பத்தி 2000–2001 ஆம் ஆண்டில் தொடங்கும். ஜெயங்கொண்டத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி சுரங்க மின்உற்பத்தித் திட்டத்திற்கும், எண்ணூரில் திரவ இயற்கை வாயுவை அடிப்படையாகக் கொண்ட 2000 மெகாவாட் மின்உற்பத்தி திட்டத்திற்கும், பன்னாட்டளவிலான போட்டி ஏலத்தின் மூலம் வெளிப்படையான முறையில் ஒப்பந்தங்களை முடிவு

செய்து வழங்கியிருப்பது உலக அளவில் பாராட்டைப் பெற்றிருப்பதோடு முதலீட்டாளர்களிடையே தமிழக அரசின் மீதான நல்லெண்ணத்தையும், நம்பிக்கையும் பன்மடங்கு உயர்த்தியுள்ளது.

16. நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு பொதுச் சட்டம் இந்த அவையின் சென்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் முன்னேற்றத்திலும், மனிதவள மேம்பாட்டிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு இந்த அரசு உலகவங்கியை கோரியுள்ளது. இத்திட்டம் உலக வங்கியின் ஏற்பளிப்பிற்கான இறுதி நிலையில் உள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும் நகர்ப்பகுதி அமைப்புகளின் வளர்ச்சிக்கும் கணிசமான நிதியுதவி கிடைக்க இத்திட்டம் வகை செய்யும்.

17. மாநிலத்தின் தலைநகராகவும் முக்கிய வணிக மையமாகவும் திகழ்கிற சென்னைப் பெருநகர்ப்பகுதியின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. பெருநகர் விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடையும் போது மாநகரின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினை பெரிதும் குறையும். சென்னை மாநகரைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச் சாலைகளை அகலப்படுத்தி வலுவூட்டும் பணியும் விரைவில் தொடங்கப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக சென்னையில் முக்கியமான சந்திப்புகளில் பத்து சிறிய மேம்பாலங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு அடுத்த 15 மாதங்களுக்குள் முடிவு பெற இருக்கிறது. பெருநகர்ப்பகுதிக்கான வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி, கூவம், அடையாறு, பக்கிங்காம் வாய்க்கால், ஒட்டேரி நல்லா உள்ளிட்ட பகுதிகளில் விரைவில் தொடங்கப்படும். கோயம்பேட்டில் வெளியூர் பேருந்து முனையத்தைக் கட்டும் பணி அடுத்த மூன்று மாதங்களில் துவங்கும்.

18. ஊரக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் ஏழைக்குடும்பங்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களின் மீது அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. இந்த நோக்கங்களை அடைவதற்காக, இந்த அரசு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்குத் தேவையான அதிகாரங்களையும், நிதியையும் அளித்துள்ளது. ஊராட்சிகளுக்கு அதிகாரப் பகிர்வைத் தொடர்ந்து அளித்து வரும் நிலையில், அவற்றுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குவது பற்றி பரிந்துரை செய்ய அரசால் அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையை 11.1.1999 அன்று அளித்துள்ளது. இப்பரிந்துரைகளின் மீது அரசு விரைவில் முடிவெடுக்கும்.

19. 1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு மக்கள் நலனை மையமாகக் கொண்ட இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியது. அவை "நமக்கு நாமே" என்ற திட்டமும் "அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும்" ஆகும். இதுவரை 424 ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு 55,086 ஊரக உள்கட்டமைப்புப் பணிகள் ரூ.357.79 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தேவையால் உந்தப்பட்டு மக்கள் பங்குகொள்ளும் "நமக்கு நாமே" திட்டம் மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 9,171 பணிகள் ரூ.42.39 கோடி செலவில் "நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, நாள் ஒன்றுக்கு 10 லிட்டருக்குக் குறைவாக குடிநீர் வசதி பெறும் 5398 ஊரகக் குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வசதி அளிக்கும் பணி நடப்பாண்டில் தொடங்கி நடைபெற்று வருகிறது. மேலும் 6300 குடியிருப்புகளுக்கு முழுமையாகக் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் பணி 1999-2000ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். இதுவரை நகர்ப்பகுதிகளில் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த குடிநீர் வீட்டிணைப்பு வசதியை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த, ஐந்தாண்டு கால அளவில் ரூ.500 கோடி கடனுதவி பெறக்கூடிய வகையில் ஹட்கோ (HUDCO) நிறுவனத்துடன் உடன்பாட்டுக் குறிப்பில் (Memorandum of Understanding) அரசு கையொப்பமிட்டுள்ளது. சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் கடல்நீரைக் குடிநீராக்கும் அமைப்புகளை நிறுவ ஆஸ்திரிய அரசின் கடனுதவியை தமிழ்நாடு அரசு பெறவிருக்கிறது,

21. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சீரான சாலை வசதிகள் மிகவும் முக்கியமானவையாகும். நபார்டு (NABARD) வங்கியிடமிருந்து பெற்ற நிதியுதவியுடன் ரூ.702 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்ட 2661 பணிகளில், 1335 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஹட்கோ (HUDCO), நபார்டு (NABARD) வங்கி ஆகியவற்றின் நிதியுதவியுடன், ரூ.360 கோடி செலவில் 104 பாலங்களைக் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடனான தமிழ்நாடு சாலைப்பகுதித் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 750 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்படும்.

22. சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தை எய்தும் பொருட்டு, இந்தியாவிலேயே முதன்முதலாக இந்த அரசு சமத்துவபுரங்களை அமைத்து வருகிறது. இந்த சமத்துவபுரங்களில் அனைத்து சமூகத்தைச் சேர்ந்தவர்களும் நட்புறவுடனும் நல்லிணக்கத்துடனும், அமைதியாகவும், குடிநீர், மின்சாரம்,

சமுதாயக்கூடம், போன்ற பொது வசதிகளைப் பகிர்ந்து கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். இதுவரை 16 சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன, 83 சமத்துவபுரங்கள் உருவாகி வருகின்றன. இத்திட்டம் தொடர்ந்து முனைப்புடன் செயற்படுத்தப்படும்.

23. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக அரசு ஒவ்வோராண்டும் அதிக நிதி ஒதுக்கி வருவதோடு, அவர்களுக்காக புதுமையான திட்டங்களையும் தீட்டி செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினரின் வளர்ச்சிக்கும் கல்வி மிகமுக்கியமானதோர் திறவுகோல் என்பதால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்காக அரசு பயனுள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

24. மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை ரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கிய அதே மனிதாபிமான கொள்கையுடன், மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும் சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்றுவதற்காக சட்ட முன் வடிவு ஒன்றினை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வர இந்த அரசு முடிவு செய்துள்ளது.

25. விவசாயிகளின் குறைந்த பட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது. அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

26. 1998–99 ஆம் ஆண்டில் 300 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியது மட்டுமல்லாமல், சமத்துவபுர கிராமங்களிலும் அப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டுக்குள் 300க்கு அதிகமான மக்கள் தொகையுள்ள அனைத்து குக்கிராமங்களும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள், எளிதில் செல்லக்கூடிய வகையில் ஒரு தொடக்கப்பள்ளியைப் பெற்றுவிடும். அவற்றுக்கான கட்டமைப்புப் பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை எட்டும் பொருட்டு முதல் வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இலவச பாடநூல்களை இந்த அரசு வழங்கியுள்ளது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில் தமிழ்நாடு கட்டாயத் தொடக்கக் கல்விச் சட்டம் இக்கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த கல்வி ஆண்டிலிருந்து ஊரகப் பகுதி மாணவர்களுக்கு 15 விழுக்காடு அனைத்துத் தொழிற் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இது ஊரகப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் தொழிற் கல்வி வாய்ப்பினைப் பெறுவதற்கும், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் உதவும்.

27. கி.பி. 2000 ஆண்டுக்குள் "அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற இலக்கை எய்துவதில் மாநில அரசு அக்கறை கொண்டுள்ளது. கடந்த மூன்றாண்டு காலத்தில் 652 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் மாநிலத்தில் உள்ள அனைத்து தொடக்கச் சுகாதார நிலையங்களும் நிரந்தரமான கட்டிடங்களில் இயங்கும். மேலும், சிறந்த மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ நிறுவனங்களும் மருத்துவமனைகளும் போதிய சாதனங்களைப் பெறுவதோடு, அவை உரியவாறு பராமரிக்கப்படுவதையும் இந்த அரசு உறுதி செய்யும். இந்தியாவின் மிகப் பழமையான மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான சென்னை மருத்துவக் கல்லூரிக்கு நிகர் நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தூத்துக்குடியில் புதிய மருத்துவக் கல்லூரி வரும் கல்வி ஆண்டிலிருந்து செயல்படத் துவங்கும்.

28. கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிரளிக்கவும், மேம்படுத்தவும் இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு



நடவடிக்கைகளை இந்த அவை அறியும். கைத்தறித் துணி விற்பனைக்கான 20 சதவீதத் தள்ளுபடி ஆண்டு முழுவதும் கிடைக்க வகை செய்யப்பட்டது. பெருமளவு தேங்கியுள்ள முந்தைய ஆண்டுகளின் கைத்தறித் துணியின் தேக்கத்தைக் குறைப்பதற்காக நடப்பாண்டில் 1998 அக்டோபர் திங்கள் வரை 30 சதவீதத் தள்ளுபடி வழங்கப்பட்டது. இந்தச் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி தொடக்கக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள், 'கோ–ஆப்டெக்ஸ்' நிறுவனம் ஆகியவை ரூ.202 கோடி மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்ய முடிந்தது. இதுதவிர, விற்பனையாகாமல் பெருமளவில் லுங்கிகள் தேங்கிவிட்டதைக் கருத்திற் கொண்டு, அவற்றிற்கு 30 சதவீத சிறப்புத் தள்ளுபடியை 31.3.1999 ஆம் நாள் வரை நீட்டித்து அரசு வழங்கியுள்ளது.

29. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் 21 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று 2,80,556 கிராமப்புற பெண்கள், 14,374 சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராகி மகளிர் திட்டத்தின் கீழ் உதவி பெற்று வருகின்றனர். இவர்கள் குழுக்களாகச் செயல்பட்டு சேமித்துள்ள மொத்தத் தொகை சுமார் ரூ.19 கோடியாகும். இது வளர்ந்து வரக்கூடிய ஒரு சுழல் நிதியாகும். இந்த நிதித்தொகுப்பிலிருந்து உறுப்பினர்கள் தங்கள் அவசரத் தேவைக்கும் ஏனைய கடன் தேவைகளுக்கும் எளிதில் கடன் பெறுவதுடன், பெற்ற கடனை வட்டியுடன் திருப்பிச் செலுத்தி வருகின்றனர். வரும் ஆண்டில் எஞ்சியுள்ள ஏழு மாவட்டங்களும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு

வரப்படும். மேலும் நகர்ப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஒரு முன்னோடி திட்டமாக சேமிப்புடன் இணைந்த மகளிர்க்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்றை, இந்த அரசு முதற்கட்டமாக, சென்னையில் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் பிற நகர்ப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும்.

30. நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும், நடைமுறைச் சீர்திருத்தங்கள், நடவடிக்கைகள் குறித்த நீதிபதி திரு. இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு உரிய முடிவெடுத்து அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வறிக்கையும் அதன் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகளும் இக்கூட்டத் தொடரில் அவையில் வைக்கப்படும்.

31. அரசின் வளர்ச்சிப் பணிகளையும் ஒழுங்குமுறைப் பொறுப்புகளையும் ஆற்றுவதில், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், காவல் துறையினர், உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள் ஆகியோரின் முக்கிய பங்கினை முற்றிலும் அறிந்துள்ள இந்த அரசு, இந்தப் பணியாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் பரிவுடன் செயல்பட்டுள்ளது. கடுமையான நிதி நெருக்கடி இருந்த போதிலும், தமிழ்நாடு அரசு அதன் பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் மத்திய சம்பள வீதங்களை அளித்ததில், அதுவும் 1.1.1996 ஆம் நாளிலிருந்து முன்தேதியிட்டு அளித்ததன் மூலம் தென் மாநிலங்களிலேயே முதலிடம் வகிக்கிறது. பணிநியமன நடைமுறைகளைச் சீரமைத்ததன் வாயிலாகவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த மூப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டதன் மூலமும், அரசுப் பணிகளில் நியமனம் தொடர்பான புகார்கள் பெரும்பாலும் நீக்கப்பட்டுள்ளன.

32. பொருளாதாரத்தில் நிலவும் மந்த நிலையுடன், அதிகரித்து வருகின்ற அரசுச் செலவும் சேர்ந்து, மாநில அரசின் நிதி ஆதாரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சிக்கனம், செயல்திறன், மதிநுட்பம் வாய்ந்த நிதி நிருவாகம் ஆகியவை இந்த அரசின் கோட்பாடுகளாகத் தொடர்ந்து இருக்கும். பயனேதும் அளிக்க இயலாத திட்டங்கள் கைவிடப்பட்டு, பயனுள்ள திட்டப் பணிகளும் திட்டங்களும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அரசின் திட்டங்களும் திட்டப்பணிகளும் உரிய காலத்திற்குள் முடிவுறுவதை உறுதி செய்யும் வகையில் நிர்வாக இயந்திரம் முடுக்கிவிடப்படும்.

33. இந்த அரசின் சாதனைகள், கொள்கைகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை உங்கள் முன் எடுத்துரைத்துள்ளேன். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டவும், சமுதாய நலன்களைப் பேணிக்காத்திடவும், நலிவுற்ற மக்களின் நம்பிக்கை அரணாகத் திகழவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெருமைக்குரிய இந்த அவையில் உங்கள் விவாதமும் கருத்துப் பரிமாற்றங்களும் அரசு அதன் கொள்கை குறிக்கோளை எய்திட உதவும் என்ற எதிர்பார்ப்புடன் என் உரையை நிறைவு செய்கிறேன்.

மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி
தமிழ்நாடு சட்டப்பேரவையில் 17-2-1999 அன்று
ஆற்றிய உரை.

சமத்துவபுர இல்லங்களால் மாநிலம் முழுவதும் சமத்துவ மணம் பரவும்

- முதலமைச்சர் கலைஞர் உரை

நாமக்கல் மாவட்டத்தில் 15, 16ஆவது சமத்துவபுரங்கள் திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெள்ளம் போல் குழுமியிருக்கின்ற உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்கிறேன். இந்த அரசின் சார்பாக தொடங்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள், புதிய பணிகள், மக்களோடு தொடர்பு கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள புதியச் சாதனங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இன்றியமையாத கையேடாகத் திகழும் "மக்கள் சாசனம்"

இந்த அரசின் சாதனைகளில் ஒன்றாக ஒவ்வொரு துறையின் சார்பிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் சாசனம் என்ற ஒரு புத்தகம் வெளியிடப்படுகிறது. இந்தப் புத்தகத்தின் அவசியத்தை நீங்கள் படித்துப் பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும். அந்த அளவிற்கு இன்றியமையாத ஒரு கையேடாக மக்கள் சாசனம் என்கின்ற இந்த நூல் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் சார்பாக, அந்தந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரின் முயற்சியால் வெளியிடப்படுகிறது. இதில் எல்லாவிதமான துறைகளைப் பற்றிய விவரங்களும் இருக்கிறது.

சாதாரண சாமானிய மக்கள், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள், ஏன்? பேரூர், நகரங்களில் வாழ்கின்ற மக்கள் கூட என்னென்ன துறைகள் இருக்கின்றன, அந்தத் துறைகளின் சார்பாக நடைபெறுகின்ற காரியங்கள் எவை, எவை, எந்தெந்த அலுவலகத்திலே, எந்தெந்த அதிகாரிகளை அணுகினால் இந்தப் பயன்களைப் பெறமுடியும் என்கின்ற எல்லாவிதமான விவரங்கள் அடங்கியது இந்த மக்கள் சாசனம் என்கின்ற கையேடு. அதில் குறிப்பாக நாமக்கல் மாவட்டத்திற்காக ஆட்சித்தலைவர் முயற்சி எடுத்து வெளியிட்டு உள்ள இந்த கையேட்டில் பல செய்திகள் முன்னுரையாகவே அடங்கியிருக்கின்றன. இந்த மாவட்டம் ஒரு சிறிய



வரலாற்றை தனக்குள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டம் இன்றைக்கு சேலத்தில் இருந்து பிரிக்கப்பட்டு நாமக்கல் மாவட்டமாக இருந்தாலுங்கூட சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் எனக்கே கூட இந்த மக்கள் சாசனத்தைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு செய்தி இதில் வெளிவந்திருக்கிறது.

சேலம்-தருமபுரி மாவட்டங்கள் உருவான வரலாறு

கிழக்கிந்திய கம்பெனிப் படைக்கும், திப்பு சுல்தானுக்குமிடையே நடைபெற்ற போராட்டம் ஒரு முடிவுக்கு வந்து 1792ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. கிழக்கிந்திய கம்பெனி என்பது வெள்ளைக்காரர்களால், ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்ட கம்பெனி. அது கம்பெனியாக வந்து, இந்திய நாட்டையே அடிமைக்கொண்ட நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த ஒப்பந்தத்தின்படி திப்புசுல்தானிடமிருந்து பெறப்பட்ட பகுதிகளைக் கொண்டு "பாரமஹால் மற்றும் சேலம்" என்ற ஒரு மாவட்டம் 1792இல் உருவாக்கப்பட்டது. அப்போது இந்த மாவட்டத்திற்கு பெயரே பாரமஹால் மற்றும் சேலம். தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளைக் கொண்ட பாரமஹால் – அப்போது சமஸ்தானம் என்று பெயர். 12 சமஸ்தானங்களை கொண்ட தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பாரமஹால் மற்றும் சேலம் மாவட்டத்தில் சில பகுதிகள் இதில் அடங்கியிருந்தன.

இந்த இரண்டுக்கும் சேர்த்து முதல் ஆட்சித் தலைவராக அலெக்சாண்டர் பொறுப்பேற்றிருந்தார். அலெக்சாண்டர் என்றால் மாவீரர் அலெக்சாண்டர் அல்ல. ஆங்கிலேயர்களில் ஒரு துரை அலெக்சாண்டர் என்பவர். அவர் இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் ஆட்சித் தலைவராக அப்போது பொறுப்பேற்றிருந்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு இது கிருஷ்ணகிரியை தலைநகராகக் கொண்ட பாரமஹால் மாவட்டம் என்றும், சேலத்தை தலைநகராகக் கொண்ட தாலக்காடு மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

வீரபாண்டிக்குச் சொல்லிக் கொள்கிறேன். தாலக்காடு மாவட்டத்தை தலைநகராக சேலம் அன்றைக்கு இருந்தது. கிருஷ்ணகிரியை தலைநகராகக் கொண்டு பாரமஹால் மாவட்டம் அன்றைக்கு செயல்பட்டது. பின்னர் 1801இல் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டது. பின்னர் 1808இல் ஈ.ஆர். ஹார்க்ரேன் மாவட்ட ஆட்சித் தலைவராக பொறுப்பேற்றபோது இது சேலம் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தாலக்காடு மாவட்டத்திற்கு சேலம் மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாவட்ட தலைநகரம் தருமபுரியிலிருந்து சேலத்திற்கு 1830இல் மாற்றப்பட்டது. அதுவரையிலே தருமபுரி தலைநகரமாக இருந்தது. 1830இல் அது சேலத்திற்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து சில ஆண்டுகளில் தலைநகரம் ஒசூருக்கு மாற்றப்பட்டு 1860இல் மீண்டும் ஆட்சித் தலைவர் அலுவலகம் சேலத்திற்கு மாற்றப்பட்டது. இப்படியும் பந்தாடப்பட்டிருக்கிறது இரண்டு மாவட்டத்திற்கான தலைநகரங்கள்.

வரலாற்றுச் செய்திகளைக்கூட மக்கள் சாசனம் கொண்டுள்ளது

1965இல் சேலத்திலிருந்து சேர்வராயன் மலைக்கு வடக்கில் உள்ளப் பகுதிகள் தனியாக பிரிக்கப்பட்டு தருமபுரி மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது. 96–இல் சேலம் இரண்டாக பிரிக்கப்பட்டு இந்த ஆட்சியில், நாமக்கல்லைத் தலைநகராக கொண்ட நாமக்கல் மாவட்டமும், சேலத்தைத் தலைநகராக கொண்ட சேலம் மாவட்டமும் பிரிக்கப்பட்டன. அந்த நாமக்கல்லைத் தலைநகராக கொண்ட மாவட்டத்தில்தான் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்வளவும் நான் சொல்லக் காரணம் இவ்வளவுநாள் நான் இதுவரை தெரிந்து கொள்ளாத அரிய செய்திகளை, வரலாற்றுச் செய்திகளையெல்லாம் கூட உள்ளடக்கியதாகத்தான் இந்த மாவட்டத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள மக்கள் சாசனம் என்ற இந்த நூல் விளங்குகிறது. இவைகள் நம்முடைய அரசின் சார்பில் ஆங்காங்கு இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற மக்கள் நலப் பணியாளர்கள் மூலமாக மக்களுக்கு தெரிவிக்கப் படுகின்றன.

ஏற்கெனவே மக்கள் நலப் பணியாளர்கள் 1989–90 ஆண்டுகளிலே நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கால கட்டத்தில் ஏறத்தாழ 15 ஆயிரம் பேர் கிராமப்புறங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். 91–ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டு, புதிய ஆட்சி புரட்சிகரமான ஆட்சி (?) பொறுப்பேற்ற நேரத்தில் முதல் வேலையாக அந்த 15 ஆயிரம் பேரை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். பிறகு மீண்டும் நான்காவது முறையாக நான் பொறுப்பேற்ற பிறகு அந்த 15 ஆயிரம் பேரும் மீண்டும் மக்கள் நலப் பணியாளராக தொடர்ந்து பணியாற்றுகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

பொதுமக்களுக்குத் தெரிய வேண்டிய தெளிவடைய வேண்டிய விபரங்கள்

இந்த மக்கள் சாசனத்திலே குறிப்பிட்டிருக்கின்ற எல்லா விவரங்களும் பொதுமக்களுக்கு தெரிய வேண்டிய விவரங்கள். தெளிவடைய வேண்டிய விவரங்கள். எங்கே சென்றால்இதைப் பற்றி தெரிந்துக் கொள்ளலாம்.





இதற்காக உதவிகள் பெறலாம் என்கிற வரையிலே எல்லா மக்களுக்கும் தெரியக்கூடிய – தெரிய வேண்டிய விவரங்களை மக்கள் நலப் பணியாளர்கள் மூலமாக – அவர்கள் முதலிலே அதைப் படித்து அவர்கள் விளக்குவதற்கு – ஏற்ற வழிவகைகள் இந்த ஆட்சியிலே செய்யப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் இங்கு பேசிய மாவட்ட ஊராட்சித் தலைவர் தம்பி வீரப்பன் குறிப்பிட்டதைப்போல மக்களுக்கும், அரசுக்கும் இடையிலே உள்ள தொடர்புகள் மேலும் வலுவாக்கப்பட வேண்டும், விரிவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு இதைக் கூட செய்வதற்கு முன்பிருந்த அரசுகள் முயற்சிகள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்த மாவட்டத்திலே ஏற்கெனவே அடிக்கல் நாட்டப்பட்ட பணிகள் நிறைவுற்று, தொடங்கி வைக்கப்படுகின்ற பல திட்டங்கள். புதிதாக தொடங்குகிற திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிற நிகழ்ச்சிகள் இத்தனையும் இணைத்து ஏறத்தாழ பல்வேறு துறைகள் மூலமாக ரூ.42 கோடியே 67 இலட்சத்து 22 ஆயிரம் மதிப்பீட்டிலான வளர்ச்சிப் பணிகள் இந்த விழாவின் வாயிலாக நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு பயனளிக்கும் என்ற நல்ல செய்தியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமத்துவபுரத்திற்கான கருத்துரு எப்படி உருவானது ?

மேட்டுப்பட்டியிலும், குன்னமலையிலும் சமத்துவபுரங்கள் உருவாகி இருக்கின்றன. இந்த சமத்துவபுரங்கள் 15, 16–வது சமத்துவபுரங்கள் ஆகும். இந்த சமத்துவபுரங்களை உருவாக்க வேண்டும் என்கின்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது என்பதையெல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள். தமிழகத்தில் மக்களுக்காக – மக்களால் உருவாக்கப்பட்டு மக்களுக்காக நடைபெறுகின்ற இந்த ஆட்சி மக்களுக்கு செய்கின்ற திட்டங்கள் ஒழுங்காக சரியாக, செம்மையாக அவர்களுக்கு போய்ச் சேர்ந்து, அவர்களுடைய வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கக்கூடிய இந்நிலை இன்றைக்கு பல இடங்களில் ஏற்பட முடியாமல் ஆங்காங்கே சாதிச் சண்டைகள், மதவாத மோதல்கள் ஏற்படுவதை எல்லாம் கண்டபோது நான் துடித்துப் போனேன். பல நேரங்களில் ரத்தக் கண்ணீர் வடிக்கக் கூடிய அளவிற்கு நம்முடைய சமுதாய மக்கள் ஒருவரோடு ஒருவர் மோதி ஆங்காங்கு தெருக்களில், வீதிகளில் ரத்தத்தைச் சிந்திக் கொள்கின்ற காட்சியை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இவைகளை எப்படி சரி செய்வது என்று எண்ணியபோதுதான் இந்த அரசின் சார்பில் இத்தகைய ஒரு திட்டத்தை தொடங்கினால் என்ன என்ற ஒரு கருத்துரு உருவாகிற்று. அப்போது எனக்கு ஒரு ஐயம். எல்லா சமுதாயத்தில் உள்ள மக்களையும், 100 வீடுகளைக் கட்டி, ஒவ்வொரு பகுதியிலும் அந்த 100 வீடுகளில் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களை குடி அமர்த்தினால் நன்றாகத்தான் இருக்கும். திருப்திகரமாகத்தான் இருக்கும். சமத்துவ நோக்கத்தை உருவாக்கக்கூடியதாகத்தான் இருக்கும். ஆனால் அந்த மக்கள் வருவார்களா என்ற சந்தேகம் எனக்கு நிச்சயமாக ஏற்பட்டது.

பல திட்டத்தை தொடங்கி ஆங்காங்கு நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் – இங்கே நண்பர் நம்முடைய கட்டரியா போன்றவர்கள் – வேறு பல மாவட்டங்களிலே ஆங்காங்கு உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தப் பணியை வேகமாக நடைமுறைப்படுத்த முன்வந்ததும், எங்களுக்கு உங்களுக்கு என்ற அளவுக்கு ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு இந்த வீடுகளைப் பெறுகின்ற முயற்சியிலே பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டு அவர்களுக்கெல்லாம் நேர்மையான முறையில், நாணயமான முறையில் அவர்களைத் தேர்வு செய்கின்ற குழுக்கள் சில இடங்களிலே அமைக்கப்பட்டு – சில இடங்களில் குலுக்கல் முறையிலே அவர்களுக்கு இந்த இடங்களெல்லாம் வழங்கப்பட்டு இருக்கின்றன.

மேலும் 2 சமத்துவபுரங்கள் அமைய இருக்கின்றன

ஒரு மாவட்டத்தில் இன்றைக்கு இரண்டு சமத்துவபுரங்கள். மேலும் இதே நாமக்கல் மாவட்டத்தில் மூன்றாவது சமத்துவபுரம், இந்த மாவட்டத்தைப் பொறுத்த அளவில் மூன்றாவது சமத்துவபுரம். ராசிபுரம் வட்டம் – அர்த்தனூரில் அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில் 4–வது சமத்துவபுரம் திருச்செங்கோடு வட்டம், சிறுமொலசி கிராமத்தில் இன்றைய விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. நீங்கள் கேட்கலாம். யாரும் எண்ணலாம். ஒரு மாவட்டத்திலே 4 இடங்களிலே நூறு, நூறு வீடுகளைக் கட்டி அதற்கு சமத்துவபுரம் என்று பேர் வைத்தால் அந்த மாவட்டம் முழுவதும் சமத்துவபுரமாக ஆகிவிடுமா? என்றால் மெல்ல மெல்ல படிப்படியாக முதலிலே மாவட்டம் பிறகு மாநிலம், பிறகு நாடு சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

சமத்துவபுர இல்லங்களால் சமத்துவ மணம் பரவும்

இந்த மாவட்டம் முழுவதும் – ஒரு தோட்டத்தில் ஒரே ஒரு மல்லிகைச் செடி இருந்தாலுங்கூட, அதன் மணம் தோட்டம் முழுவதும் பரவுவதைப் போல – இந்த மாவட்டத்திலே, நாமக்கல் மாவட்டத்திலே இப்பொழுது 4 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டாலும், சமத்துவ மணம் இந்த மாவட்டம் முழுவதும் பரவும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டப்படுகின்ற இந்த சமத்துவபுர இல்லங்களால் மாநிலம் முழுவதும் இந்த மணம் பரவும். இந்த மணம் இப்படி பரவுவதை இங்கே உள்ள சில பேர் வேண்டுமானால் கேலி செய்யலாம். சமத்துவபுரம் கட்டினால் ஆதிதிராவிடர்களுக்கு எல்லா வளமும் குவிந்துவிடுமா? என்றெல்லாம் அவர்களை வைத்தே பிழைக்கின்ற சில தலைவர்கள் கூறலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இங்கே நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப்போல, தம்பி துரைமுருகன் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல என்னுடைய பொது வாழ்க்கை ஆரம்பம் இந்தித் திணிப்பு எதிர்ப்பு என்றாலுங்கூட மிகமிக தொடக்க நிலையில் பெரியார் அவர்களுடைய பாசறையில் இருந்த நான் முதலில் பெரியாருடைய கொள்கையைப் பிரச்சாரம் செய்த இடம் ஆதிதிராவிடர்களுடைய காலனிகள்தான் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால் அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு 69–ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் என்னென்ன துறைகள் இந்த அரசிலே இருக்கின்றன, எப்படி செயல்படுகின்றன என்ற ஒரு ஆய்வை நடத்தினேன். அப்படி நடத்தியபொழுதுதான் அரிஜன நலத்துறை, பிற்படுத்தப்பட்ட நலத்துறை இரண்டும் ஒரே துறையாக அன்றைக்கு இருந்தது. ஒரே அமைச்சர் அன்றைக்கு இரண்டு அமைச்சர் கிடையாது. ஒரே அமைச்சர்தான். அரிஜன நலத்துறையும் கவனிப்பார். பிற்படுத்தப்பட்ட நலத்துறையையும் கவனிப்பார். அதை நான் எண்ணிப் பார்த்தேன். இரண்டு துறைக்கும் ஒரே அமைச்சர். இரண்டு துறையும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட சமுதாய மக்களுக்காக இருக்கின்ற துறை இந்த இரண்டையும் ஒருவரே கவனித்தால் இரண்டு பேருக்கும் நன்மை கிடைக்காது என்று கருதி அப்பொழுதுதான் ஆதிதிராவிட நலத்துறை என்று தனியாக ஒரு துறையும், அதற்கு தனியாக ஒரு அமைச்சரையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்று தனியாக ஒரு துறையும், அதற்கு தனியாக ஒரு அமைச்சரையும் அன்றைக்கு நான் நியமித்தேன் என்ற வரலாற்றை இன்றைக்கு சமுதாய நலங்களைப் பற்றி பேசிக் கொண்டிருப்பவர்களுக்கு நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். அதன்பிறகு பிற்படுத்தப்பட்டவர் களிடையே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அதற்காக போராடி பழைய ஆட்சியில் பல பேர் உயிரிழந்தார்கள். இந்த உயிரிழந்தோர் குடும்பங்களுக்கும் நான்தான் நிதி உதவி செய்து அந்த மக்கள் எதற்காக போராடினார்களோ அதை நிறைவு செய்கின்ற வகையிலே 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்கி இன்றைக்கு அதனுடைய பலனை அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, ஆதிதிராவிட மக்களுக்கு ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியில் இருந்த இடஒதுக்கீட்டில் பதினைந்து சதவிகிதம்தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதை 16 ஆக ஆக்கி, 18–ஆக ஆக்கி இன்றைக்கு 18 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்கு, 1 சதவீதம் மலைவாழ் மக்களுக்கு என்று 19 சதவீதம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலை உருவாக்கியதும் தி.மு.கழக ஆட்சியில்தான். அண்ணாவுடைய உண்மையான தம்பியாகிய நாங்கள் நடத்தும் இந்த ஆட்சியிலேதான் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சாதாரண, சாமான்ய, நடுத்தர மக்களுக்காக பாட்டாளி மக்களுக்காக தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உங்களால் அமைக்கப்பட்டு உங்களுக்காக அரும்பணி ஆற்றிக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியினுடைய திட்டங்கள் உங்களுக்கு நல்ல வழியிலே வந்து சேருவதற்காகத்தான் பல பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

“எகனாமிக் டைம்ஸ்” ஏடு பாராட்டி எழுதிய கட்டுரை

இங்கே தம்பி வீரபாண்டி ஆறுமுகம் ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி, ‘நமக்கு நாமே’ திட்டத்தைப் பற்றி எடுத்துரைத்தார். புகழ்ந்து பேசினார். நாம் இதைப் பாராட்டுவதைவிட, புகழ்வதை விட ‘எகனாமிக்ஸ் டைம்ஸ்’ என்ற பத்திரிகை வெளிமாநிலத்திலிருந்து டெல்லியிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் 29.1.99 அதாவது ஜனவரி மாதம் 29–ஆம் தேதி. ஒரு நீண்ட கட்டுரை வெளிவந்திருக்கிறது. அது முழுவதையும் நான் படிக்க விரும்பவில்லை. கட்டுரைத் தலைப்பு. “சமத்துவபுரம் டுவர்ட்ஸ் ஈகுவாலிட்டி” (“Samathuvapuram Towards Equality”) என்பதாகும். இந்த தலைப்பில் இந்தக் கட்டுரை வெளியாகி இருக்கிறது. அஜய் மேனன் என்பவர் அந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார். மிக நீண்ட கட்டுரை. அதில் குறிப்பிடுகிறார்.

“The search for a just free & prosperous society has occupied the minds of visionaries the world over. The move towards fulfilling these aims has been epitomised in India by the serene counsel of Mahatma Gandhi who upheld the principles of Swadeshi, Swaraja & Self sufficiency. Tamil Nadu is fortunate that its Chief Minister M.Karunanidhi not only cherishes a vision but seeks to implement it through projects like the Anna Renaissance Scheme, the Self Help Programme and the Samathuvapuram (Equality Village) Initiative”

இதனுடைய தமிழாக்கம் :–

“உலக முழுவதிலும் தொலைநோக்குப் பார்வையுடன் சுதந்திரமும் வளமும் நிறைந்த ஒரு சமுதாயம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் அதனை உருவாக்குவதற்கான முயற்சி, சுதேசி, சுதந்திரம், தன்னிறைவு ஆகியவற்றை வலியுறுத்திய அமைதியின் தூதுவர் மகாத்மா காந்தியால் மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்ற ஒரு தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருப்பதோடு மட்டுமின்றி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் போன்ற திட்டங்களின் மூலம் அவற்றைச் செயல்படுத்தியும் வரும் முதல்வர் கருணாநிதி அவர்களைத் தமிழ்நாடு பெற்றிருப்பது நற்பேறாகும்”.

என்னை நீங்கள் பெற்றிருப்பது நற்பேறு என்று ஆங்கிலப் பத்திரிகை எகனாமிக் டைம்ஸ் கூறுகிறது. உங்களையெல்லாம் தமிழகத்தினுடைய பெருமக்களாகப் பெற்று உங்களை ஆள்வது நான் பெற்ற நற்பேறு என்று கூறி விடைபெறுகிறேன்.

– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
நாமக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டி மற்றும்
குன்னமலையில் சமத்துவபுரங்களைத் திறந்துவைத்து
10–2–1999 அன்று ஆற்றிய உரை.

அதங்கோட்டாசானும் தொல்காப்பியமும்

அகத்தியரின் 12 மாணவர்களில் தொல்காப்பியர், அதங்கோட்டாசான், பனம்பாரனார் ஆகியோர் முக்கிய மானவர்கள் என்ற இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியருக்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் அதங்கோட்டாசானை

அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டாசாற்கு அரிதபத் தெரிந்து

எனக் குறிப்பிடுகிறார். இதற்கு நச்சினார்க்கினியார் அறமே கூறும் நாவினை உடைய நான்கு வேதத் தினையும் முற்ற அறிந்த அதங்கோடு என்ற ஊர் ஆசிரியனுக்கு என்று பொருள் கூறுகின்றார்.

தொல்காப்பியரையும், அதங்கோட்டாசானையும் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்குக் குமரி மாவட்ட வழக்காற்றுச் சொற்கள் செய்திகள் ஆகியவற்றின் அடிப் படையில் வையாபுரிப்பிள்ளையும், அறவாணனும் காரணம் கூறுகின்றனர்.

தொல்காப்பியம் பாண்டி நாட்டில் அரங்கேற்றியது என்றும், தொல் காப்பியரின் சக மாணவரான அதங்கோட்டாசான் தென்பாட்டி நாட்டு அரசனின் கீழ் அடங்கிய பாண்டிய குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர் என்று உள்ள செய்திகளை ஒப்பு நோக்கும்போது தொல்காப்பியர் குமரி மாவட்டத்தினர் என்றும் கூறமுடியும். தொல்காப்பியர் குமரி மாவட்டத்தினர் என்பதற்கு நிறையவே காரணங்கள் கூறுகின்றார் அறவாணன். இவர் தொல்காப்பியத்தின் வழக்கு இன்றைய குமரி மாவட்டத்தில் நடைமுறையில் நிறையவே இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். இவரது காரணங்கள் பின்வருமாறு

தொல்காப்பியத்தில் உள்ள பல வழக்காறுகள் குமரி மாவட்டத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

தொல்காப்பியர் குழந்தை உறவு முறையை மக்கள் முறை என்கிறார். குமரி மாவட்டத்தில் குழந்தைகளை மக்கா என அழைக்கும் முறை உள்ளது. காதை செவி என்று கூறும் மரபு குமரி மாவட்டத்தில் உள்ளது. இவை தொல்காப்பியத்திலும் வருகிறது.

குழந்தை குட்டிகளைக் கன்று கயந்தலை எனக்கூறும் குமரி மாவட்ட வழக்கைத் தொல்காப்பியர் உவமையில் கூறுகிறார். (24) இவ்வழக்குப் பாலைக் கலிப்பாவிலும் வருகிறது.

குமரி மாவட்ட பேச்சு வழக்கு சொல்லான வாழைக்குலை என்றச் சொல்லைத் தொல்காப்பியர் மரபியலில் குறிக்கின்றார். புள்ளிமயங்கியலில் தாழக்கோல் என்பதன் புணர்ச்சி விதியைத் தொல்காப்பியர் கூறுகின்றார். சாவி என்றச் சொல்லைத் தாழக்கோல் என வழங்கும் மரபு குமரி மாவட்டத்தில் உள்ளது.

நாழி, உழக்கு என்ற முகத்தலளவு குமரி மாவட்டத்தில் இன்றும் நடைமுறையில் உள்ளது. இதனைத் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் கூறுகிறார். குமரி மாவட்ட வழக்காறுகளான வளி (ஆசனவாயு) விளித்தல் (கூப்பிடுதல்) குட்டி (குழந்தை) பட்டி (நாய்) ஆகியவற்றைத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

தொல்காப்பியர் குமரி மாவட்ட வழக்காறுகளைத் தன் நூலில் குறிப்பிடுவதற்கு அவர் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவராய் இருந்ததே காரணம் என்பர். தொல்காப்பியர் குறிப்பிடும் இவ்வழக்காறுகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. இன்று பிற மாவட்டங்களிலும் இவ்வழக்கு நடைமுறையில் இல்லை. எனவே தொல்காப்பியர் குமரி மாவட்டத்தினராக இருக்கலாம் என்பது வையாபுரிபிள்ளை, அறவாணன் ஆகியோரின் முடிவு.

நன்றி : கன்னியாகுமரி ஆய்வுப் பக்கங்கள்

பாலங்கள் - சாலைகள் கட்டுமானப் பணிகள் தொடக்கம்

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் போக்குவரதது மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை மிக இன்றியமையாதன. 1996ஆம் ஆண்டு மே மாதம் தமிழக ஆடசிப் பொறுப்பேற்ற மாண்புமிகு முதலமைச்சா் **கலைஞர்** அவா்கள் தமிழகத்தில் போக்குவரத்து வசதியை மேம்படுத்த 1997ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கென ஒரு தனி அமைச்சகத்தையும் 1998ஆம் ஆண்டு இத்துறைக்கென தனியே ஒரு அமைச்சரையும் நியமித்தாா். இம்முயற்சியின் விளைவுதான் தமிழகத்தில் சாலைகளையும் பாலங்களையும் சீரமைக்க இந்த விழா ஏற்பாடு செய்யபபட்டு உள்ளது.

தமிழகத்தில் அரசு பொறுப்பில உள்ள நெடுஞ்சாலைகளில் 1,315 மிகப்பெரிய பாலங்கள் 7,014 சிறு பாலங்கள், 89,855 மிகச்சிறு பாலங்கள் என 98,184 பாலங்கள உள்ளன என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் சுமாா் 3,357 பாலங்கள் சீரமைப்பு செய்ய வேண்டிய நிலையிலும் சில இடங்களில் புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன. மேலும், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட வெள்ள பெருக்கு காரணமாக தமிழகத்தில் பலவேறு கிராமங்களும், நகரங்களும் வெளியிடங்களுடன் தொடா்பு கொள்ள இயலாது துண்டிக்கப்பட்டு மக்கள் அவதியுற்றதைத் தொடர்ந்து நகா்ப்புற வீட்டு வசதி மேம்பாடு நிறுவனம் (HUDCO) மற்றும் தேசிய விவசாயம் மற்றும் கிராம வளா்ச்சி வங்கி (NABARD) ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் ரூ.360 கோடி செலவில் 106 பெரிய பாலங்களின் கட்டுமானப் பணிகளை மாணபுமிகு தமிழக முதல்வா் அவா்கள் 2.1.1999இல் துவக்கி வைத்துள்ளாா்கள். இப்பாலங்கள் யாவும் 2,000ஆம் ஆண்டு டிசம்பா் மாததத்திற்குள் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதைப்போல் தற்போது ரூ.95.44 கோடி செலவில் 102 புதிய பாலங்கள் கட்டுவதற்காக திட்டமிட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன் செயல்படுத்த மாநில அரசு ஆணையையும் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலைகளில் 67 பாலங்கள் அமைக்க, ரூ.59.85 கோடியும், ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 32 பாலங்கள் அமைக்க ரூ.28.54 கோடியும், சென்னை நகரை நோக்கி வரும் "ஆரச" சாலைகளில் 3 பாலங்கள் அமைக்க ரூ. 7.12 கோடியும், ஆக மொத்தம் 102 பாலங்கள் அமைக்க ரூ.95.44 கோடி ஒதுக்கீடு செய்யபபட்டு, இந்த 102 பாலங்களும் ஒப்பந்தக் காரா்களிடம் ஒப்படைக்கப்பட்டு டிசம்பா், 1999இல இருந்து ஏப்ரல 2001க்குள் கட்டி முடிக்கப்படும்.

கிராமச் சாலைகள்

தமிழகத்தில் விவசாயத்தையே பெருமளவு தொழிலாகக் கொண்ட கிராம மக்கள் தங்கள் விளைப் பொருட்களை நகரங்களுக்கு விரைவாக எடுத்துச் செல்ல வசதியாக கிராமச் சாலைகளை தாா்ச சாலையாக மாற்ற முடிவெடுதது இதற்கென "கிராமப்புறச் சாலைத் திட்டம்" என்ற தனி அலகினை உருவாக்கி தமிழக முதலமைச்சா் கலைஞா் அவா்கள் 1.7.1972இல் ஆணையிட்டாா். இத்திட்டத்தின்படி 1,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமச் சாலைகள் யாவும் தாா்ச்சாலையாக அமைக்கப்படும் திட்டத்தை நாட்டிலேயே முன்னோடியாக கலைஞா் அவா்கள் அறிவித்துள்ளாா்கள்.

1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 1500க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்கள் 3,672, 1,000–1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்கள் 2,568 ஆகும்.

1972ஆம் ஆண்டு கலைஞா் அவா்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 1990ஆண்டு முடிவுற்ற 7–வது ஐந்தாண்டு திட்டத்தில் 1,500க்கு மேல் மக்கள் தொகை கொண்ட 2,568 கிராமங்கள் தாா்ச்சாலை வசதியுடன் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தி அரசு சாலைகளுடன் இணைக்கப்பட்டன. படிப்படியாக இந்த இணைப்புச் சாலைகளும், அரசுச் சாலைகளாக மாற்றப்பட்டு அரசின் பராமரிப்பில் இருந்து வருகின்றன.

4ஆவது முறையாக மாண்புமிகு முதலமைச்சா் கலைஞா் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 1996ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தாா்ச் சாலை இணைப்பு பெறாத கிராமங்கள் 517 என கண்டறியப்பட்டன. அவைகளில்

1500க்கு மேல் மக்கள் தொகை உள்ள 140 கிராமங் களும், 1,000–1,500 மக்கள் உள்ள 377 கிராமங்கள் அடங்கும்.

இவையாவும் இந்த நிதியாண்டிற்குள்ளேயே தாா் சாலையினால் இணைத்திட அரசு அனுமதி அளித்து பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

1997–98 ஆம் ஆண்டில் 216 கிராமங்களில் ரூ.83.49 கோடி செலவில் தாா்ச்சாலைகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.

1998–99ஆம் ஆண்டில் 301 கிராமங்களில் தாா்ச்சாலை அமைக்கும் பணிகள் ரூ.101.73 செலவில் தொடங்கப்பட உள்ளன.

மேலே குறிப்பிட்ட நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு மாா்ச் 99க்குள் 1991ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கீட்டின்படி 1,000க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட அனைத்து கிராமங்களும் தாா்ச் சாலையினால் இணைக்கப்பட்டுவிடும்.

மேலும், தமிழக முதலமைச்சா் அவா்கள் 1998–99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை கொண்ட 4,986 கிராமங்களுக்கும் படிப்படியாக தாா்ச்சாலை இணைப்பு வழங்கப்படும் என அறிவித்தாா்கள். மேற்படி அறிவிப்பினை செயல்படுத்த இந்த ஆண்டு நபாா்டு வங்கி நிதியுதவியுடன் 373 தாா்ச்சாலைகள் ரூ.123.70 கோடி செலவில் 340 கிராமங்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் அனைத்தும் தேசிய விவசாயம் மற்றும் கிராம வளா்ச்சி வங்கியின் (NABARD) நிதியுதவியுடன் செயல்படுத்தப் படவுள்ளன.

இவைத்தவிர அரசு சாலைகளான 28 இதர மாவட்டச் சாலைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிறுவனத்தின் உதவியுடன் ரூ.15.86 கோடி செலவில் 184 கி.மீ. நீளத்திற்கு மேம்படுத்தவும் அரசு ஆணைகள் வழங்கியுள்ளது.

போக்குவரத்து செரிவு மிகுந்த சென்னை மற்றும் புறநகா் சாலைகள் போதிய அகலமும் வலிவும் இல்லாததால் வாகனப்போக்குவரதது பெருமளவு பாதிப்புக்குள்ளாகின்றது. இதனால் கால விரயமும் எரிபொருள் செலவினமும் மிக அதிகமாகின்றன. இந்நிலை தொடா்ந்தால் சென்னையிலும், சுற்றுப் பகுதிகளிலும் போக்குவரத்து தேக்கமும் அதன் தொடா்ச்சியாக பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படலாம் என அஞ்சப்படுவதால் அதனைக் களைந்திட தொலை நோக்குடன் முதலமைச்சா் அவா்களின் சீரிய ஆலோசனையின் பேரில் சென்னை நகரை நோக்கி சுமாா் 50 கி.மீ. சுற்றளவில் வரும் ஆரசசாலைகளை அகலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரை நோக்கி வரும் "ஆரச்" சாலைகளின் மொதத நீளம் 251.60 கி.மீ. என கண்டறியப்பட்டு, நகா்புற வீட்டு வசதி மேம்பாடு நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரூ.213 கோடி செலவில் மேம்படுதத மாநில அரசு ஒப்புதல அளித்துள்ளது. இப்பணிகள் அனைத்தும் 2,000ஆம் ஆண்டு அக்டோபா் மாதத்திற்குள் முடிக்கத திட்டமிடப்பட்டுள்ளது. ★

*102 பாலங்களின் கட்டுமானப் பணிகள், சென்னை மாநகரின் 212 கி.மீ. நீள ஆரச்சாலைகள் மற்றும் 373 கிராமச்சாலைகளின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 14.2.99 அன்று வண்டலூரில் தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள நான்கு பாலங்களை தகவல் தொழில்நுட்ப பணி முனைப்புக்குழுத் தலைவர் திரு. **முரசொலிமாறன்** எம்.பி., அவர்கள் திறந்து வைத்தார். விழாவில் விழாவிற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. தா. **கிருட்டிணன்** தலைமை வகித்தார். அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.* ●

சாதிகளிடையே மோதிக்கொள்ளும் கொடியநிலை நீங்க வேண்டும்.

– முதலமைச்சர் கலைஞர்

“இராசிங்காபுரம், ஒடைப்பட்டி ஆகிய இரு இடங்களில் சமத்துவபுர வீடுகளை திறந்துவைக்கவும், அரசின் சமுதாய நலத்திட்டங்கள் பலவற்றை வழங்கிடவும் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை நான் இங்கு பெற்றிருக்கிறேன்.

இன்று இராசிங்காபுரத்திலும், ஒடைப்பட்டியிலும் திறந்துவைக்கப்பட்டுள்ள இரண்டு சமத்துவபுரங்களை நான் காணும்போது அங்கே எப்படியெல்லாம் இந்தப் பணிகளை ஆற்றி முடித்திருக்கிறோம் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் பஷீர் அகமது ஐ.ஏ.எஸ். அவர்கள் என்னிடம் விளக்கியபோது மட்டில்லா மகிழ்ச்சி கொண்டேன்.

1997–98, 1998–99 ஆகிய இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளாக இதுபோன்ற 100 சமத்துவபுரங்களைத் தமிழகம் முழுவதும் உருவாக்குவதென்று ஏறத்தாழ அதற்காக 40 கோடி ரூபாய் அரசின் சார்பிலே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலே 12 சமத்துவபுரங்கள் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றன. இன்றைக்கு இராசிங்காபுரத்திலும், ஒடைப்பட்டியிலும் திறந்துவைக்கப்படும் சமத்துவபுரங்கள் 13ஆவது, 14ஆவது சமத்துவபுரங்கள் ஆகும்.

எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மிகுந்த ஆர்வத்தோடு இதுவரையிலே இந்த 12 சமத்துவ புரங்களைக் கட்டி முடித்து என்னை அழைத்து திறப்புவிழா நடத்தியிருக்கிறார்கள் என்றாலுங்கூட அந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் எல்லாம் அரசினுடைய கடமையை ஒரு அதிகாரி என்ற முறையிலே இணைந்து செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தோடு, ஆர்வத்தோடு அந்த சமத்துவபுரங்களை கட்டி முடித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே நம்முடைய பஷீர் அகமதுவைப் பொறுத்தவரையில், இந்தச் சமத்துவபுரத் திட்டத்தில் ‘இன்வால்வ்மென்ட்’ என்பார்களே ஆங்கிலத்திலே, அதைப்போல தன்னையே அதில் ஆட்படுத்திக் கொண்டு, தன்னையே அதில் இணைத்துக் கொண்டு இந்தப் பணிகளை ஆற்றியிருக்கின்றார் என்பதை நான் இங்கே கண்டு பூரித்துப் போகிறேன்.

தார்ச் சாலை போடப்படுகிறது. ஒரு ஐம்பது கிலோ மீட்டர் தூரம் வரை தார்ச் சாலை போடப்படுகிறது. கருப்பு திறமான தார்ச் சாலையில் சாதிச் சண்டைகளின் காரணமாக ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு அங்கே சிவப்பு நிறமும் சிந்தப்படுமேயானால் எப்படி தார்ச் சாலை போட முடியும்? எப்படி அதை நாம் சகித்துக் கொள்ள முடியும்?

இதை எல்லாம் எண்ணித்தான் சாதி, மதம் இவைகளை எல்லாம் ஒரு நல்லிணக்க வட்டத்திற்குள்ளே கொண்டு வரவேண்டும் என்கின்ற அந்தக் கருத்தோடுதான் எண்ணி எண்ணிப் பார்த்து இந்த சமத்துவபுரம் திட்டத்தை கடந்த ஆண்டு வகுத்து அளித்தேன்.

இராசிங்காபுரம் குடியிருப்பில் 40 பேர் ஆதிதிராவிடர்கள்

இராசிங்காபுரத்தில் அமைந்துள்ள இந்த குடியிருப்புக்களில் 40 பேர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்த இடத்திற்குள்ளே பல பிரிவுகள் இருக்கின்றன. அருந்ததியர் என்றும், பொதரை வண்ணார் என்றும், வள்ளுவர் என்றும், பி.ஆர்.பி.எல். என்றெல்லாம் பல பிரிவுகள் இருக்கின்றன. இந்த எல்லாப் பிரிவுகளையும் சேர்த்து மொத்தம் 40 பேர் இந்த நூறு வீடுகளிலே இராசிங்காபுரத்திலே வசிக்க தலைப்பட்டு இருக்கிறார்கள். பிரமலைக் கள்ளர் 9 பேர், குரும்பர் 8 பேர், சோளியன் செட்டியார் 2 பேர், கவுடர் ஒருவர், குலாளர் ஒருவர், மருத்துவர் ஒருவர், இத்தகைய மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 22 பேர்.

வக்களிகர் 7 பேர், மறவர் 5 பேர், தோளாங்கர் 4 பேர், கம்மாளர் 3 பேர், துளுவ வேளாளர் 3, முஸ்லீம் லப்பை 2, சாதிச்செட்டி 2, தெலுங்கு செட்டியார் ஒருவர், கிறிஸ்துவ வேளாளர் ஒருவர் – ஆக பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 28 பேர். இதுதவிர பிராமணர்கள் 7 பேர், வெள்ளாளர் 3 பேர், இந்த முன்னேறிய இனத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர். இதில் இருந்து நீங்கள் என்ன புரிந்து கொள்கிறீர்கள்?

பிராமணர்களில் இருந்து ஆதிதிராவிடர்கள் வரை அத்தனைப்பேரும் இந்த நூறு வீடுகளிலே ஒன்றாக வாழப்போகிறார்கள்.

இதைப்போலத்தான் ஒடைப்பட்டியில் சமத்துவபுர குடியிருப்பில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் 40 பேர். அதிலே அருந்ததியர் மாத்திரம் 20 பேர். மற்றவர்கள் 20 பேர். மொத்தம் 40 பேர். அம்பலக் காரர்கள் 5 பேர், குரும்பர் 5 பேர், சலவைத் தொழிலாளி 5 பேர், மறவர் 2 பேர், இசைவேளாளர் ஒருவர். பண்டாரம் ஒருவர், நாவிதர் மூன்று பேர். பிரமலைக்கள்ளர் ஒருவர். ஆக மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 23 பேர்.

வக்களிகர் 13, நாடார் 4, முஸ்லீம் லப்பை 3, வடுகர் 2, அனுப்ப கவுண்டர் ஒருவர். வெள்ளாளச் செட்டியார் ஒருவர், இல்லத்து பிள்ளைமார் ஒருவர், கிறித்துவ பறையர் ஒருவர், துளுவ வேளாளர் ஒருவர் – ஆக பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் 27 பேர். இங்கேயும் பிராமணர்கள் 7 பேர், கன்னடிய ஐயர் ஒருவர், சைவ வேளாளர் ஒருவர், சைவப் பிள்ளை ஒருவர், ஆக மொத்தம் 100 பேர் ஒடைப்பட்டியிலே வாழப்போகிறார்கள்.

இன்றைய தினம் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வாழ விருப்பம் தெரிவித்து வாழத் தொடங்குகிறார்கள். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதில் என்ன தவறு. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



இங்கே பேசினார்களே “சாதிகள் இல்லையடி பாப்பா” என்று பாரதியார் பாடியதை. “இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே” என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதை. “எம்மதமும் சம்மதமே” என்று உத்தமர் காந்தியடிகள் உரைத்ததை இங்கே கூறினார்களே, இவைகளை யெல்லாம் லேசாக மறந்துவிட்டு அவர்களுடைய படங்களுக்கு, சிலைகளுக்கு மாலை அணிவித்துக் கொண்டு இருக்கிறோம். அதற்கு நமக்கு தகுதி இருக்கின்றதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு – மூட்டை கட்டி வைத்தாலும் பரவா யில்லை. யாராவது அவிழ்த்து எடுத்துக் கொள்ளலாம். அவர்களுடைய கொள்கைகளை எல்லாம் மூட்டை கட்டி ஆற்றிலோ, குளத்திலோ தூக்கி எறிந்துவிட்டு பிறகு ஆண்டுதோறும் அவர்களுடைய படங்களுக்கு மாலை அணிவிப்பது என்றால் என்ன பொருள், யாரை ஏமாற்றுகின்றார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.



இதை எல்லாம் சிந்தித்துத்தான் இந்த சமத்துவ புரமாவது வழி காட்டாதா – தமிழகத்தை சமத்துவபுரமாக ஆக்க வழி காட்டாதா – ஏன் இந்தியாவையே சமத்துவபுரமாக ஆக்க வழிகாட்டாதா என்கின்ற என்னுடைய ஆசையை நிறைவேற்ற முடியும் என்கின்ற நம்பிக்கையோடு – உங்களுடைய ஒத்துழைப்பும் இருக்கும் என்ற நம்பிக்கையோடுதான் நான் இந்தப் பணியிலே அரசின் சார்பில் ஈடுபட்டிருக்கின்றேன்.

நம்முடைய விழாத் தலைவர் அவர்கள் இங்கே டில்லியிலிருந்து வெளிவருகின்ற ஆங்கில ஏட்டின் சில கருத்துக்களை எடுத்துக் காட்டினார்கள்.

சமத்துவபுரத்திற்கு ஆதரவாக – அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஆதரவாக–நமக்கு நாமே திட்டத்திற்கு ஆதரவாக 'எகனாமிக் டைம்ஸ்' ஏடு எழுதியுள்ள அந்த ஆங்கிலக் கட்டுரையின் மொழி பெயர்ப்பை – அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே கல்கத்தாவில் இருந்து வெளிவருகின்ற 'ஸ்டேட்ஸ்மேன்' என்ற பத்திரிகை **13.10.98** அன்று இந்த சமத்துவபுரம் திட்டத்தை பற்றி எழுதியுள்ளது.

அதாவது "திராவிட இயக்கம் சமூக நீதி மேம்பாட்டிற்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டு உள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் எழுச்சி பெறவும், பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காணவும், திராவிட இயக்கம் முக்கியப் பங்கு ஆற்றி உள்ளது. (இங்கேதான் அவர்கள் எச்சரிக்கிறார்கள்) சாதி அடிப்படையிலான கட்சிகள், தனித்துவிடப்பட்டால் சாதி மோதல்கள் குறைந்துவிடும் என்று" கல்கத்தாவில் இருந்து வெளிவருகின்ற 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகை நம்முடைய சமத்துவபுரம் திட்டத்தை பாராட்டுகின்ற நேரத்தில் வெளிப்படுத்துகின்ற கருத்து – அறிவுரையாகும்.

சாதிச் சண்டைகள் என்றால் நான் கேட்கிறேன். நீங்களே எண்ணி பாருங்கள். ஒரு ஊரிலே இருக்கின்ற ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் இன்னொரு ஊரிலே இருக்கின்ற இன்னொரு சாதியைச் சேர்ந்தவர்களோடு இன்றைக்கு மோதப் போகிறோம் என்று அந்த சாதியிலே இருக்கின்ற ஆயிரம் பேரும் அறிவித்து விட்டு அதைப்போல இன்னொரு சாதியிலே இருக்கின்ற ஆயிரம் பேரும் அறிவித்துவிட்டு மோதிக் கொள்கிறார்களா என்றால் இல்லை.

இங்கே இருக்கிற சாதியை வைத்து தான் பிழைக்க முடியுமா, தான் உயர முடியுமா, தான் செல்வாக்குப் பெற முடியுமா, தான் சுரண்ட முடியுமா, தான் சுருட்ட முடியுமா என்று எண்ணுகின்ற ஒருவர் அந்த சாதியிலே உள்ள மக்களைத் தூண்டிவிட்டு உங்களுக்காக நான் உயிர் கொடுப்பேன் என்று சொல்வதும், அதைப்போல அந்த சாதியிலே இருக்கின்ற இன்னொருவர் அவர் அந்த மக்களைத் தூண்டிவிட்டு நான் உங்களுக்காக உயிர் கொடுப்பேன் என்று சொல்வதும் இந்த இரண்டு சாதிகளும் மோதிக் கொள்ளும்போது அந்த இரண்டு தலைவர்களுமே ஊரிலே இல்லாமல் வேறு எங்கேயோ ஓடி ஒளிவதும், தூண்டி விடப்பட்ட மக்கள் இரத்தம் சிந்துவதும் தான் இன்று நாட்டிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. அதைப் பார்த்து நான் தினம் தினம் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கின்றேன்.

இந்த கொடிய நிலை நீங்கவேண்டும் என்பதற்காக என்னால் முடிந்த ஒரு சிறிய செயல்தான் சமத்துவபுரம் அமைப்பது. இந்த அமைப்புகள் மேலும் மேலும் வளர வேண்டும். அமைப்புகள் வளர்ந்தால் போதாது, அந்த உணர்வுகள் மேலும் மேலும் வளரவும், பெருகவும் உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை.

– தேனி மாவட்டம், இராசிங்காபுரம்,
ஓடைப்பட்டியில் சமத்துவபுரங்களை
***5–2–99** அன்று திறந்து வைத்து*
*முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய*
உரையிலிருந்து....

சங்க இலக்கிய நூல்களுள் முதற்கண் வைத்து எண்ணப்படுவது பத்துப்பாட்டு. அப்பத்து பாட்டினுள் ஐந்தாவதாக இடம் பெற்றிருப்பது முல்லைப்பாட்டு.

'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.'

– என்ற பழைய வெண்பாவின் மூலம் தெரிவதோடு அப்பத்துப் பாட்டுக்கள் எவை என்றும் உணரலாம்.

இம்முல்லைப் பாட்டுக்குப் பாடிய நப்பூதனார் என்றும் நல்லிசைப் புலவராவார். இவர் சோழ நாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் பொன் வாணிகம் செய்து வந்தனர்.

தெய்வம், பெரும்பொழுது சிறுபொழுது அந்நிலத்தில் வாழ்கின்ற மக்கள், அவர்தம் செய்தொழில் ஆகியவற்றைப் பாட்டின் தொடக்கத்தில் ஒரு சில வரிகளில் அமைத்திருக்கும் அருமை எண்ணி மகிழத்தக்கதாகும்.

இனி, பாட்டின்கண் வருகின்ற ஓவியங்களும் அவற்றின் நயங்களும் காண்போம் :

காதல் ஒருமித்த தலைவனும் தலைவியும் கூடி மணம் புரிந்து இல்லறத்தில் ஈடுபட்டு இன்புற்று மகிழ்ந்து வருகின்றனர். தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான். பொருளீட்டவோ, பரத்தையார் பால் காதல்கொண்டோ அவன் பிரிந்துச் செல்லவில்லை. பின் எதற்காகச் செல்கிறான். பகைவன்மேல் போர் தொடுக்க!

முல்லைப்பாட்டு

இதனால் இவரை 'காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்' என வழங்கப்படுவதாயிற்று.

இப்புலவர் பெருமான் முல்லைப் பாட்டைத் தவிர வேறு பாடல் பாடியிருப்பதாகப் பண்டைய இலக்கியங்களில் காணப்படவில்லை. நற்றினை 29ஆம் செய்யுளைப் பாடியப் புலவர் பூதனார் என்றிருப்பதால் இவர்தானா அவர் அல்லது வேறொருவரா? என்பது ஐயப்பாடாக உள்ளது.

பத்துப் பாட்டுகளில் அடிகளில் குறைந்தது முல்லைப்பட்டு. நூற்றி மூன்று அடிகளையுடையது என்றாலும் படிப்போர் உள்ளத்தில் இன்பம் விளைப்பதோடு புலவர்தம் சொல்லோவியங்கள் மனத்தின்கண் அழியாத ஓவியங்களாக நிலைபெறுகின்றன.

'ஐந்திணை என்பது அன்புடைக் காமம்' என்று நம்பி அகப்பொருள் கூறுகிறது. ஐந்திணை என்பது குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம்.

இம்முல்லைப்பாட்டு இருத்தலும் அதன் நிமித்தங்களுமாகிய ஒழுக்கத்தினை கூறும் பாட்டாகும். அகப்பொருள் நெறியில் முல்லைத் திணைக்குரிய

ஆம், தலைவிக்கு மட்டும் அவன் தலைவன் அல்லன்; நாட்டுமக்களுக்கும் அவன் தலைவன். மணிமுடி தாங்கிய மன்னன்.

போர்க்கோலம் பூண்டு வந்து நின்ற தலைவனைக் கண்டு கலங்கி நின்றாள் தலைவி.

'சென்று வருக, வென்று வருக!' என்று வாழ்த்தி வழியனுப்ப வேண்டிய நீயா இப்படிக் கலங்கி நிற்பது?" தலைவன் கேட்டான்.

வாழ்த்தவும் வழியனுப்பவும் நான் தயங்கவில்லை. வென்று வருவீர்கள் என்பதிலும் எனக்கு ஐயமில்லை. ஆனால்...?"

"ஆனால்... ஏன் நிறுத்தி விட்டாய்?"

"சென்று வரும்வரை பிரிந்திருக்க வேண்டுமே...!" அதற்குமேல் வார்த்தை வரவில்லை; அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

"இப்போது முதுவேனிற் காலம். இதுதான் படை நடத்திச் செல்வதற்கு ஏற்ற காலம். மேலும் போரைத் தவிர்க்க முடியாத நிலைமை, வினை முடித்துக் கார்காலத்

தொடக்கத்தில் வந்துவிடுவேன். அதுவரையில் நீ ஆற்றியிருக்க வேண்டியது உன் கடமை அல்லவா?" என்று பலவாறு ஆறுதல் கூறி விடை பெற்றுச் சென்றான்.

'ஒருநாள் எழுநாள் போல் செல்லும் சேண்சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.'

– என்ற வள்ளுவர் வாக்கின்படி நீண்ட முதுவேனிற் பருவத்தை எப்படியோ கழித்துவிட்டாள் தலைவி.

தலைவன் கூறிச்சென்ற கார்காலத் தொடக்கமாகிய ஆவணித் திங்கள் முதல் நாள் வந்தது.

கணவன் கட்டளையைக் கடமையாக ஏற்றுக் கொண்டு இத்துணை நாள்கள் ஆற்றியிருந்த தலைவி அவன் கூறிச் சென்ற கார்காலத் தொடக்க நாள் வந்ததும் வழிமேல் விழிவைத்து எதிர் நோக்கினாள்.

'காலை வாராதாயினும் மாலைக் காண்குவம்' என்ற நம்பிக்கை அவளது உயிரைத் தாங்கி நின்றது. என்றாலும் உள்ளத்தில் ஏக்கம் பிறக்காமல் இல்லை.

காலைப்பொழுது உச்சிப்போதாகி மாலைப் பொழுதும் வந்தது. பிரிவால் ஆற்றியிருப்போருக்கு உருமாறும் நோயை வள்ளுவரும்,

'காலை அரும்பிப் பகல்லெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்'

– எனக் கூறி போந்தார்.

தலைவன் சொன்ன சொல் தவறாதவன். குறித்த காலத்தில் தன் ஆருயிர் தலைவனைக் காணாததால் தலைவியின் உள்ளத்தில் துயரம் **குடிக்கொண்டது.** ஏக்கமும், அச்சமும் அவள் முகத்தில் நிழலாடின. கண்ணீர் கண்களில் தேங்கி நின்றது. முல்லைப் பாட்டின் தொடக்கமே இதுதான்.

அந்தி மாலை உலகத்தையே வளைத்துக் கொள்வதுபோல் வானத்தில் கார்மேகங்கள் சூழ்ந்தன.

பெருமழை பெய்து சற்று ஓய்ந்தது. அந்த நேரத்தில் தலைவி படுகின்ற துன்பத்தைக் கண்ட பெருமுது பெண்டிர் ஊர்ப் புறத்தே சென்றனர். தலைவன் வரவில்லை என்றால் தலைவி இறந்துபடுவாளே என்ற அச்சம் அவர்தம் உள்ளத்தில் சூழ்ந்தது. செருகளம் நோக்கி சென்றவனாயிற்றே! வெற்றியோ! தோல்வியோ? தலைவன் உயிருக்கு ஏதும் விளைந்ததோ என்னவோ? என்ற ஐயமும் அச்சமும் அவர்தம் உள்ளத்தை வருத்தின. எனவேதான் தலைவன் வருகையை எதிர்நோக்கி நன்மொழி கேட்க நெல்லையும் முல்லையும் தூவித் தெய்வத்தை வேண்டி நின்றனர்.

'இன்ன வடுகுவர் தாயர்' என்ற நன்மொழி அவர்தம் செவியில் விழுகிறது. தெய்வத்தைத் தொழுது நின்ற முதுபெண்டிர் நன்மொழி பிறந்த திசையில் தங்கள் பார்வையைத் திருப்பினர். அவர்கள் கண்ட அக்காட்சி :

அது ஒரு இடைச்சேரி. பன்னிற மணிகளை நிரல்பட கோத்தது போல தாம்புக் கயிற்றிலே பன்னிற ஆண் கன்றுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பாலுண்ணாமையால் வருந்தும் அக்கன்றுகள் சுற்றிச் சுழன்று நோக்குகின்றன. குளிராலே நடுங்கும் தனது தோளினை இரு கைகளால் சேர்த்துக் கட்டிக் கொண்டு நின்றிருந்த இடைமகள் ஒருத்தி அக்கன்றுகள் படும் துயரினை கண்டு அவற்றிற்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். இந்த அருமையான ஓவியத்தைப் புலவர் தரும் சொல்லோவியத்தில் காண்போம்.

'சிறுதரம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையன கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்'

நன்மொழி கேட்ட பெருமுது பெண்டிர் அகமகிழ்வோடு அரண்மனை திரும்பினர். பொன்னாலும் மணியாலும் அமைக்கப்பட்ட ஏழடுக்கு மாளிகையில் – அந்தப்புரத்தில் கலங்கிய கண்களோடு தலைவன் வருகையை எதிர்நோக்கி இருக்கும் தலைவியிடம் தாங்கள் கேட்ட நன்மொழியைக் கூறினர். 'நன்மை தரக்கூடிய நன்மொழியை நாங்கள் கேட்டோம். பகைவரை வென்று அவர்பால் பெற்ற திறைபொருளோடு வினை முடித்து நின் தலைவர் வருவது உறுதி. நீ உன் மனத் தடுமாற்றத்தால் ஏற்பட்ட வருத்தம் போக்கிக் கொள்' எனப் பலவாறு தேற்றினர்.

பாலுண்ணாமையால் வருந்தும் ஆண்கன்றிகள்பால் அன்பு கொண்ட ஆய்மகள் அவற்றைத் தேற்றுவதைப் போல தன் தலைவன் வரவு காணாது கலங்கும் தலைவியின்பால் பேரன்பு கொண்ட பெருமுது பெண்டிர் அவளைத் தேற்றுவதாக அமைத் திருக்கும் உவமைநயம் உள்ளத்தால் நினைக்கும் அளவுக்கு இன்பம் பயப்பதாகும்.

பெருமுது பெண்டிரின் தேறுதல் மொழி பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவியின் செவி ஏற்றாலும் உள்ளம் ஏற்கவில்லை. அதனால் பூப்போன்ற மையுண்ட அவள் கண்கள் முத்து முத்தாகக் கண்ணீர் சிந்தின.

'பூப்போன்ற உன்கண் புலம்பு முத்துறைப்ப' எனவரும் அடியோடு நிறுத்தி தலைவியின் கண்ணீருக்குக் காரணமான தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனின் நிலையையும், முல்லைத் திணையோடு பொருந்திய வஞ்சித்திணை என்னும் புறப்பொருள் பகுதிச் சேர்ந்த பாசறை இருப்பினை இடை பிறவரலாக இணைத்துக் கூறிய திறம் போற்றுதற்குரியதாம். மேலும்,

தலைவனது, பாசறை இருப்பினைக் கூறப்புகுந்த புலவர் நப்பூதனார், நம்மை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு சென்று ஒரு காட்டிடத்தே நிறுத்தி பாசறையைக் காணச் செய்யும் திறன் வியப்புக்குரியதாகும்.

பகைபுலத்த மண்ணில் நால்வகை அரண்களில் ஒன்றாகிட காட்டரண், காட்டாறுகள் சூழ்ந்தோடும் கொடிய காடு. பிடவமும், புதர்களும் நிறைந்திருக்கும் காடு. அத்தகைய காட்டில் பாசறை அமைக்கப் புகுந்த தலைவன், முதலில் வேட்டுவர்களை வென்று அவர்தம் அரண்களை அழித்தான். பிடவமும், புதர்களையும் வெட்டி எறிந்து, நாற்புறமும் முள்வேலியால் மதில் அமைத்தான் அந்தப் பாசறையில் வரிசை வரிசையாகப் படைஏர்க்குக் குடில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

குடில்களனைத்தும் தழையாலே வேயப்பட்டிருக்கின்றன. நற்சந்தியிலே காவலாக நிறுத்தப்பட்டிருக்கின்றன களிற்று யானைகள். அவற்றின் முன்னே கரும்பும், நெல்லும், அதிமதுரத் தழையும் மலைபோல் குவிந்து கிடக்கின்றன.

மதங்கொண்ட யானைகள் அவற்றைத் தின்னவில்லை. அவற்றாலே வண்டுகள் மொய்க்கும் நெற்றியைத் துடைத்துக் கொண்டும் கூரிய மரும்பின்மேல் தம் கையைப் போட்டுக் கொண்டும் நிற்கின்றன.

அவற்றின் பக்கத்தில் நின்றிருக்கும் யானைப்பாகர்கள் கவளம் உண்ணும்படி யானைகளை அதட்டியும், ஆது, ஆது, அப்புது, அப்புது என சில வடமொழிச் சொற்களைப் பலமுறை உறக்கச் சொல்லியும் குத்துக் கோலாலே அவற்றைக் குத்திக் கொண்டும் இருக்கின்றனர்.

தவவேடம் பூண்ட அந்தணர் துகிலைக் காவிக் கல்லில் தோய்த்தெடுத்து முக்கோலை நட்டு அதன்மீது துகிலைக் காயவைப்பது போல படை வீரர்கள் வலிமை மிக்க வில்லை சேர ஊன்றி, அவற்றின் மீது துணிகளைத் தொங்கவிட்டு, கூடமாகக் கால்களை நட்டுக் கயிற்றை வலித்துக் கட்டிய இருப்பிடத்தில் பூவேலை செய்யப்பட்ட குந்தக் கோல்களையும் ஊன்றி, தோற்பரிசைகளை நிரலாகப் பிணைத்துக் கட்டியிருக்கிறார்கள். இவ்வாறு அமைக்கப்பட்ட பல்வேறு படைஞர்களின் இருக்கைக்கு நடுவில் நெடிய குந்தக்கோலுடன் பல்வேறு கூறுபட்ட திறத்தினையுடைய மதிட்டிரையை வளைத்துக்கட்டி அதனகத்தில் அரசருக்குரிய இருக்கை அமைக்கப்பட்டிருக்கிறது. அரசரது இருக்கையில் பணிபுரியும் இளமங்கையர் கூந்தல் அசைய முதுகு அழகினைக் காட்டி வாளொடு கச்சினை வரிந்து கட்டிக்கொண்டு குறிய வளையல் அணிந்த கைகளில் நெய்யும் திரியும் ஏந்தி பாவைவிளக்கு அணையாதவாறு எரியூட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நடு யாமத்தில் உறக்கத்தையும் மறந்து ஒழுக்கத்தில் சிறந்த மெய் காப்பாளர்கள் மன்னனுக்குத் காவலாக நிற்கின்றனர்; நாழிகையை அளந்து கூறும் நாழிகைக் கணக்கர்கள் மன்னனைத் தொழுதவண்ணம் வாழ்த்திக்

கடந்த நாழிகையை அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

இயல்பாகவே வலிமை மிக்க உடலமைப்பும், குதிரை சம்மட்டியால் நெடுங்கக் கட்டின உடையும், அச்சம் தரக்கூடிய தோற்றமுள்ள யவன வீரர்களும் காவல் புரிகின்றனர். அழகிய மணிவிளக்கு எரியும் ஒப்பனை மிக்க அழகிய அறையினுள் உள்ளறையாகிய பள்ளியறையில் ஊமை மிலேச்சர் காவலாக மன்னன் அருகினில் இருக்கின்றனர்.

அந்தப் பள்ளியறையில் மன்னன் இருந்த நிலையை மிக அழகாகக் கூறுகிறார் நப்பூதனார்.

அன்பு மனைவியைப் பிரிந்து வந்தோமே! அவள் எப்படி ஆற்றியிருக்கிறாளோ! ஏக்கத்தால் அவள் மேனி வாடிப் போகுமே! என்று அவளைத் தழுவி இன்பம் காண்போம்! என்றெல்லாம் நினைத்துக் கொண்டா அவன் உறக்கத்தை இழந்தான்! அல்ல... அல்ல... பகைவர் மேல் கொண்ட போர் விருப்பத்தால் வெற்றி மாலை தழுவ வேண்டுமென்ற வேட்கையால் அவன் உறக்கத்தை இழந்தான். அதுமட்டுமல்ல, போர்க்களத்தில் பகைவர் எறிந்த வேல் பாய்ந்து புண்பட்டு தம்பிடி யானைகளை மறந்து துன்புறும் யானைகளை நினைத்துக் கொண்டான். அடிபட்ட பாம்பு துடிப்பது போல யானைகளின் பருத்த கைகளை வெட்டி வீழ்த்தி, வெற்றியைத் தேடித்தந்து விழுப்புண் ஏற்று உயிர் துறந்த மறவர்களை நினைத்துக் கொண்டான். கவசமாக அணியப்பட்ட தோற்பரிசையும் கிழித்துக் கொண்டு அம்புகள் தைத்திருப்பதால் புல்லைத் தின்னாமல் வருந்தி நிற்கும் குதிரைகளை நினைத்துக் கொண்டான். எப்படி வரும் தூக்கம்? உறக்கமிழந்த அவன் எப்படிப் படுத்திருந்தான்? ஒரு கையை படுக்கை மீதும், மற்றொரு கையால் தலையைத் தாங்கியும் படுத்திருந்தான்.

இப்படி ஒரு நாளா? இரண்டு நாளா? பல நாள்கள் கழிந்தன. வெற்றி மாதைத் தழுவத் துடிக்கும் அவன் தோள்கள் திணவெடுத்தன. வாளும் வில்லும் ஏந்தி செருகளம் நோக்கிச் சென்றான். வாள்வலியும், தோல் வலியும் கொண்ட அவன் பகைவரைச் சாய்த்தான். வாகை சூடினான். வெற்றி மாதைத் தழுவினான். பகை மன்னர் நடுங்கும்படி வெற்றி முரசு முழங்கியது, பாசறையில். அன்றிரவுதான் வெற்றிக் களிப்பில் இனிதாக உறங்கினான்.

இவ்வாறு பாசறையின் அமைப்பும், அப்பாசறையின் தலைவனிருந்த நிலைமையும் விளங்கக் காட்டிய புலவர் பெருந்தகை மீண்டும் நம்மை தலைவியின்பால் அழைத்துச் செல்கிறார்.

பூப்போன்ற மையுண்ட கண்கள் முத்து முத்தாகக் கண்ணீர் சிந்த தலைவன் பால் கொண்ட அன்பும் அவன் கூறிச் சென்ற கடமையும், அவள் உள்ளத்தில் போர் நிகழ்த்துகின்றன. கடமையை எண்ணி உள்ளத்தைத் தேற்றிக் கொள்கிறாள். துயரத்திலே உடல் மெலிந்து சுழலும் வளையலைத் திருத்திக் கொள்கிறாள். மீண்டும் மயங்குகிறாள். அம்பு தைத்த மயில்போல உடல் நடுங்கி அணிகலன்கள் நெகிழ்கின்றன. பொன்னாலும் மணியாலும் அமைக்கப்பட்ட ஏழடுக்கு மாளிகையில் பாவை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. காற்றாலே அதன் சுடர் ஆடி அசைகிறது. பாவை உள்ளமும் ஆடி அசைகிறது. மழை பொழிந்து கொண்டிருக்கிறது. மாளிகையின் கூடல் வாயிலில் மழைநீர் அருவியாகத் திரண்டு விழுவதால் இனிய இசை எழும்புகிறது. ஆற்றியிருக்கக் கருதிய தலைவி அந்த இசையைச் செவி மடுத்துக் கேட்டு ஒருவாறு தன் துன்பத்தை மறந்து இருக்கிறாள். புலவர் தரும் சொல்லோவியம் காண்போம் :

'நீடு நினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென அயிர்த்தும்
ஏவுறு மஞ்சையி னடுங்கி யிழை நெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி,
இன்பலிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்

இவ்வாறு இருந்த தலைவியின் நிலையை நீடிக்க விரும்பாத புலவர் பெருமான் 'அஞ்செவி நிறைய ஆலின' என்ற சிறு சொற்றொடராலே அவள் துன்பத்தைப் போக்கும் நயம் நினைத்து இன்புறத் தக்கதாகும்.

'எவை ஆவனா?' என்ற வினா நமக்குத்தான் எழுமே தவிர தலைவிக்கு எழாது. அப்படி எழுமானால்,

'இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின'

என்று கூறியிருக்கமாட்டார். தலைவிக்குத் தெரியும் எவை ஆலின என்று தலைவன் படுகின்ற நெடுந்தேர் பூட்டிய குதிரைகள்தாம் ஆரவாரித்தன என்று அவள் அறிந்து கொண்டாள்.

தலைவன் எப்படி வருகிறான், எத்தகைய வழிகளைக் கடந்து வருகிறான் என்பதனை அறிய வேண்டாமா? அவற்றையும் கூறிப் பாட்டை முடிக்கிறார் புலவர்.

– பெருங்கவிஞர் நெ. அ. பூபதி

பண்பாடு காப்பது : தமிழனின் தனி இலக்கணம்

– முதலமைச்சர் கலைஞர்

தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் இந்தத் தஞ்சையில் நவீனக் கலைக்கூடம் சிறப்புப் பூங்கா திறப்பு விழா நிகழ்ச்சியும் மற்றும் கலை வளாகத்திற்கான கால்கோள் விழா நிகழ்ச்சியும் நடைபெறுகிற நேரத்தில் உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக ஆக்குகின்ற வகையில் நம்முடைய புதுவை துணை நிலை ஆளுநர் ரஜினிராய் அவர்கள் தமிழிலேயே பேசியிருக்கிறார்.

அடுத்த முறை இந்த மகிழ்ச்சியை மும்மடங்காக ஆக்குகிற வகையில் நம்முடைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவி அவர்களும், புதுவை ஆளுநரை வெல்லும் வகையில் தமிழில் பேசுவார் என்று நான் இன்றைக்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்பாட்டு மையத்தின் முக்கிய நோக்கங்களை யெல்லாம் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பது என்னுடைய அவா.

தென்னகப் பண்பாட்டு மையத்தின் முக்கிய நோக்கங்கள்

இந்தியப் பண்பாட்டைப் பேணிக் காப்பதும் அதனை வளர்ப்பதும் தென்னகப் பண்பாட்டு மையத்தின் முக்கியமான நோக்கமாகும். அதற்காக கிராமியக் கலைகளையும், ஆதிவாசிகளின் கலை களையும் வளர்த்து அவைகளுக்குப் புத்துயிர் அளித்தல், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பளித்து, அவர்களது கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் – பயிற்சி அளித்தல்.

கலை நிகழ்ச்சிகளை அண்டை மாநிலங்களுக்கு ஏற்பாடு செய்து கலைஞர்களை அனுப்பி வைத்தும்,

அதைப் போலவே வேறு மாநிலங்களில் இருந்து கலைக்குழுக்களை வரவழைத்து இங்கு கலை நிகழ்ச்சிகளை நடத்தி வைத்தும் தேசிய ஒருமைப் பாட்டை வளர்த்தல்.

நலிந்து வரும் கலைகளை எதிர்காலத்தில் மறைந்துவிடாமல் பாதுகாத்தல், சிறபக்கலை, ஓவியக் கலை ஆகியவற்றை வளர்க்க இளைஞர்களுக்கு வாய்ப்பளித்து அதற்கான முகாம்கள் நடத்துதல்.

கைவினைப் பொருள்கள் செய்யும் கைவினைஞர்களின் பொருள்கள் விற்பனை ஆகும் வகையில் இந்தியாவில் பல நகர்களிலும் கைவினைப் பொருட்காட்சி நடத்துதல் ஆகிய பணிகளை இந்த மையம் மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.

தஞ்சையில் இருக்கும் இந்தப் பண்பாட்டு மையத்தைப் போலவே வேறு பல மையங்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலே இருக்கின்றன.



பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் ஒன்றும், உத்திரப்பிரதேசத்தில் அலகாபாத்தில் ஒன்றும், மாராட்டிய மாநிலத்தில் நாக்பூரில் ஒன்றும், இராஜஸ்தான் மாநிலத்தில் உதயப்பூரில் ஒன்றும், மேற்கு வங்க மாநிலத்தில் கல்கத்தாவில் ஒன்றும், நாகாலாந்து மாநிலம் திம்மாப்பூரில் ஒன்றுமாக இசையின் ஏழு சுரங்களைக் குறிக்கும் வகையில் மொத்தம் 7 இடங்களில் பண்பாட்டு மையங்கள் இந்த நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன.

தென்னகப் பண்பாட்டு மையத்தின் உறுப்பு மாநிலங்களாக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரம் ஆகியவைகளும், மத்திய அரசின் நேரடிப் பார்வையில் உள்ள பாண்டிச்சேரி, இலட்சத்தீவு, அந்தமான், நிக்கோபார் ஆகிய யூனியன் பிரதேசங்களும் இவைகளில் அடங்கும்.

இந்த மையத்திற்கு இதுவரை தனியாக கட்டிடம் ஏதும் இல்லாமல் இருந்தது. ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் உள்ள பழைய திறந்தவெளி சிறைச் சாலைக் கட்டிடங்களில் இம்மையம் இயங்கி வருகிறது. இனிமேல்தான் சிறையிலிருந்து வெளிவர வேண்டும். அதற்கான முயற்சிதான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தென்னகப் பண்பாட்டு
மையக்கட்டிடத்திற்கு 25 ஏக்கர் நிலம்

சொந்தக் கட்டிடம் இதற்கு கட்டுவதற்காக 1996ஆம் ஆண்டு இந்த அரசு 25 ஏக்கர் நிலத்தை வழங்கியது. இந்தச் செய்தியை வரவேற்புரையில் இதன் இயக்குநர் சொன்னபோது யாரும் கையொலி செய்யவில்லை. 25 ஏக்கர் நிலம் என்பது உங்களுக்கு அவ்வளவ சாதாரணமாக ஆகிவிட்டது என்று கருதுகிறேன்.

கலைவளாகம் அமைக்க
ரூ.2 கோடி ஒதுக்கீடு

மேலும் இந்த வளாகத்தில் கலை வளாகம் அமைக்க 28–3–98 அன்று நம்முடைய மையத்தின் தலைவராக விளங்குகின்ற மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் வைத்த வேண்டுகோளின் படி இந்த அரசின் சார்பில் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உடனடியாக ஒருகோடி ரூபாய் விடுவிக்கப் பட்டிருக்கிறது. மீதம் ஒரு கோடி ரூபாய் கட்டிடப் பணிகள் தொடங்கிய பிறகு வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

பழமை வாய்ந்த நவீன சிலைகள் -
சிற்பப் பூங்கா அமைப்பு

தஞ்சை தென்னகப் பண்பாட்டு மையத்தில் ஐந்து பெரும் சிற்பிகளைக் கொண்டு செய்த ஐந்து பெரும்சிலைகளையும், பழமை வாய்ந்த நவீன சிலைகளையும் ஏறத்தாழ ஐந்து இலட்ச ரூபாய் செலவில் நிறுவும் சிறபப் பூங்கா ஒன்றையும் அமைத்துள்ளது. அதன் திறப்பு விழாவும் இன்று நடைபெற்றிருக்கிறது.

ஏறத்தாழ 60க்கும் மேறபட்ட ஓவியங்களைக் கொண்ட நவீன ஓவியக்கூடம் ஒன்றும் இந்த மையத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழாவும் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது.

இந்தப் பண்பாடு, மனிதனுடைய உயிரைப்போல – உணர்வைப்போல, அவனுடைய உயிரோடு – உடலோடு ஒட்டியிருக்கக்கூடிய – ஒட்டியிருக்க வேண்டிய ஒன்று. அந்தப் பண்பாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இங்கே உரையாற்றிய நம்முடைய அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் விரிவாக இல்லா விட்டாலும் சுருக்கமாக விளக்கியிருக்கிறார்கள்.

பண்பாடு என்று சொல்லும்போதே – பண்பாடு ஒரு பெயர்ச்சொல்லாகவும் ஒலிக்கும். வினைச் சொல்லா கவும் ஒலிக்கும். பண்பாடு என்றால், பண்ணைப் பாடு – இசைபாடு என்று வினைச் சொல்லாகவும் ஒலிக்கும். இசையும், பண்பாடும் ஒன்றுதான். இசையில் எவ்வளவு இனிமையிருக்கிறதோ – எவ்வளவு சுகம் இருக்கிறதோ அதைப்போல பண்பாட்டினைப் போற்றிக் காப்பாற்றினால் அதிலும் சுகம் உண்டு. இன்பம் உண்டு.

தமிழர்களுடைய தனித்தன்மையே பண்பாடு போற்றுதல்தான். எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், முரண்பாடுகள் இருந்தாலும், கருத்து மாச்சரியங்கள் இருந்தாலும்கூட, அவற்றுக்கிடையே பண்பாட்டைப் போற்றுதல் பண்பாட்டைக் காப்பாற்றுதல்தான் தமிழனின் தனி இலக்கணமாகும். திராவிட இனத்தினுடைய தனி இலக்கணமாகும்.

எனவே, இந்தியாவிலேயே தென்னகப் பண்பாட்டு மையம் இவ்வளவு சிறப்புற ஓங்கி வளர்ந்திருக்கிறது என்றுதான் சொல்வேன்.

பண்பாட்டிலே ஒன்று வாய்மை. வாய்மையோடு நடந்தால் அதுவே பண்பாடுதான். வள்ளுவர் வாய்மையைத் தான் அதிகமாக வலியுறுத்துவார். வாய்மையை வலியுறுத்தும் வள்ளுவரே கூட – பொய் சொல்லலாம் என்று கூறியிருக்கிறார். நான் இதைக் கூறும்போது உங்களுக்கு வியப்பாக இருக்கும். வள்ளுவரா பொய்கூட சொல்லலாம் என்கிறார் என்று! ஒரு குறளிலே வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்கிறார். நன்மையைச் செய்யுமேயானால் – நாம் சொல்கிற பொய் ஒரு நன்மையைச் செய்யுமானால் அந்தப் பொய்கூட – வாய்மை என்ற இடத்திலே வைத்து கருததக்க அளவிற்கு சிறந்தது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

உதாரணமாக ஒரு வேடன் ஒரு மானை வேட்டையாட துரத்தி வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். ஓடிக் களைத்த மான் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு முனிவருடைய குடிசைக்குள் நுழைவதாக வைத்துக் கொள்ளுங்கள். நிலைமையைப் புரிந்துகொண்ட அந்த முனிவர் அந்த மானைக் காப்பாற்றுவதற்காக வீட்டிற்குள் ஒளித்து வைத்து விட்டு உட்கார்ந்திருக்கிறார். வேடன் ஓடோடி வந்து, "இங்கே வந்த மான் எங்கே"? என்று கேட்கிறான். பொய்யே சொல்லக் கூடாது என்ற நிலையிலே உள்ள தவமுனிவர் வேடனைப் பார்த்து, "மானா, இங்கே வரவில்லையே" என்கிறார். முனிவர் பொய் சொல்வாரா என்ற நம்பிக்கையோடு வேடன் திரும்பி விடுகிறான். மான் காப்பாற்றப்படுகிறது.

முனிவர் சொன்னது பொய் என்ற போதிலும் அது வாய்மையின் இடத்திலே வைக்கப்படுகிறது.

'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

என்கிற வள்ளுவருடைய குறளுக்கேற்பதான் இந்த நிகழ்ச்சியை நான் குறிப்பிட்டேன்.

ஆனால் மானைப்போல ஒரு கொள்ளைக்கார கொடியவன் போலீசுக்குப் பயந்து அல்லது தண்டனைக்குப் பயந்து ஓடிவருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். வருகின்றவனை அதே முனிவர் காப்பாற்றி இங்கே கொள்ளைக்காரன் வரவில்லையே என்று கொள்ளைக்காரனைக் காப்பாற்ற முனிவர் முயன்றால், அது வாய்மை இடத்திலே வைக்கக்கூடிய ஒன்றாக இருக்காது என்பதையும் இந்தப் பண்பாட்டு மையத்திலே எனக்குக் கிடைத்த வாய்ப்பின் மூலமாக உங்களுக்கு விளக்க வேண்டிய விதத்திலே விளக்கி இந்த அளவிலே விடைபெறுகிறேன்.

– தஞ்சாவூரில் 1.12.99 அன்று
நடைபெற்ற தென்னகப் பண்பாட்டு
மையக் கட்டிட கால்கோள் விழாவில்
முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை

சென்னை மாநகரில் 10 புதிய மேம்பாலங்கள்

சென்னை மாநகரில் பீட்டர்ஸ் சாலை, கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்;

பீட்டர்ஸ் சாலை - வெஸ்ட்காட் சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; பாந்தியன் சாலை - காசா மேசர் சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; புரசைவாக்கம் நெடுஞ்சாலை - ஹண்டர்ஸ் சாலை சந்திப்பில் 12 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை - டி.டி.கே. சாலைச் சந்திப்பு 15 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; ஆழ்வார்பேட்டை - எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் 11 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; சர்தார் படேல் சாலை - லாட்டிஸ் பாலம் சாலைச் சந்திப்பில் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும்; சர்தார் படேல் சாலை - காந்தி மண்டபம் சாலைச் சந்திப்பில் 7 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும் என மொத்தம் 115 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 10 மேம்பாலங்களை சென்னை மாநகராட்சி அமைக்கின்றது.

மாநகராட்சி சார்பில் அமைக்கப்படும் இந்த 10 புதிய மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31-1-1999 அன்று பெரம்பூரில் நடைப்பெற்ற விழாவில் தொடங்கி வைத்தார். விழாவிற்கு மேயர் திரு.மு.க. ஸ்டாலின் தலைமை வகித்தார். உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் முன்னிலை வகித்தார்.

விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலி மாறன், எம்.பி., மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு வீராசாமி, ஹட்கோ தலைவர் திரு.வி. சுரேஷ், மாநகராட்சி ஆணையர் திரு.பி.கோலப்பன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இது தவிர சென்னை மாநகரில் மேலும் 12 இடங்களில் மேம்பாலங்கள், பாலங்கள் அமைக்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

சேம்பியர்ஸ் சாலை - டர்ன் புல்ஸ் சாலைச் சந்திப்பு; உஸ்மான் சாலை - ஆர்காட் சாலைச் சந்திப்பு; எல்டாம்ஸ் சாலை - அண்ணா சாலைச் சந்திப்பு; வெங்கட நாராயண சாலை - அண்ணா சாலைச் சந்திப்பு; தங்கசாலைச் சந்திப்பு; கெல்லீஸ் சந்திப்பு; கொன்னூர் நெடுஞ்சாலை - மாதவரம் நெடுஞ்சாலைச் சந்திப்பு; சிமெண்ட்ரி சாலை - திருவெற்றியூர் நெடுஞ்சாலைச் சந்திப்பு; வள்ளுவர் கோட்டம் சந்திப்பு; ஜி.என்.செட்டி சாலை - திருமலைப்பிள்ளை சாலைச் சந்திப்பு; கிரீன்வேஸ் சாலை - துர்காபாய் தேஷ்முக் சாலை சந்திப்பு; ஆர்காட் சாலை - இன்னர் ரிங் சாலை (சுரங்கப்பாதை) ஆகிய 12 இடங்களில் மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனைக்கு ஏற்ப முடிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள், அதாவது இன்னும் இரண்டு மாதத்திற்கு உள்ளாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்று மேயர் விழாவில் அறிவித்தார். ★

கலைஞர் அரசு

திருவட்டார் சட்டமன்றத் தொகுதியில்

ஆற்றும் அரும் பணிகள்

வே. ஆல்பன்
சட்டப்பேரவை உறுப்பினர்

வெள்ளாங்கோடு ஊராட்சியில் 1997-98ஆம் ஆண்டு .அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.38 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1997-98ல் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.4.4 இலட்சத்தில் ஆவன்கோடு - உயர்நிலைப்பள்ளி மற்றும் காட்டாத்துறை - அரசு மேல்நிலைப்பள்ளி ஆக இரண்டு பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டப்பட்டன.

ரூ.75,000 செலவில் மருதன்கோடு ஊராட்சியில் படிப்பகக் கட்டடமும், ரூ. 1 இலட்சம் செலவில் பாகோடு ஊராட்சியில் குடிநீர் இணைப்பும், ரூ.2 இலட்சம் செலவில் பாகோடு ஊராட்சியில் 2 கிலோ மீட்டர் சாலை கருந்தளமும், ரூ. 2 இலட்சம் செலவில் அருமனை பேரூராட்சியில் சாலை கருந்தளமும் அமைக்கப்பட்டன.

ரூ. 2 இலட்சம் செலவில் ஆற்றூர் பேரூராட்சியில் புதியச் சாலை அமைக்கப்பட்டது. ரூ. 2 இலட்சம் செலவில் வேர்க்கிளம்பி பேரூராட்சியிலும், ரூ.2 இலட்சம் செலவில் திருவட்டார் பேரூராட்சியிலும், ரூ.2 இல்ட்சம் செலவில் பொன்மனை பேரூராட்சியிலும் சாலைகள் அமைக்கப்பட்டன.

1998-99ல் செறுகோல் ஊராட்சியில் ரூ.50 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள்.

1998-99ல் ரூ.2.5 இலட்சம் செலவில் திருவரம்பு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டப்படுகிறது. காட்டாத்துறை பேரூராட்சியில் ரூ. 2 இலட்சம் செலவில் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு இணைப்புச்சாலை அமைக்கப்பட்டது. ரூ.2 இலட்சம் செலவில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது. ரூ.2 இலட்சம் செலவில் ஆற்றூர் பேரூராட்சியில் வடிகால் கட்டப்பட்டது. ரூ.4.5 இலட்சம் செலவில் இரண்டு புதிய சாலைகளை அமைக்கப்பட்டது. திருவட்டார் பேரூராட்சியில் ரூ. 2 இலட்சம் செலவில் சாலைக் கருந்தளம் அமைக்கப்படுகிறது. ரூ.2 இலட்சம் செலவில் காட்டாத்துறை பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்படுகிறது. ரூ.1.5 இலட்சம் செலவில் புதிய சாலை அமைக்கப்படுகிறது. ரூ.2 இலட்சம் செலவில் குலசேகரம் பேரூராட்சியில் இணைப்புச்சாலை அமைக்கப்படுகிறது. ரூ.2 இலட்சம் செலவில் பொன்மனை பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது. ரூ.2 இலட்சம் செலவில் திற்பரப்பு பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது.

ரூ.2 இலட்சம் செலவில் திற்பரப்பு பேரூராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு புதிய சாலை அமைக்கப்பட்டது. ரூ. 4 இலட்சம் செலவில் திற்பரப்பு பேரூராட்சியில் நடைபாலம் கட்டப்படுகிறது. ரூ.2 இலட்சம் செலவில் பேச்சிப்பாறை பேரூராட்சியில் சாலைக் கருந்தளம் அமைக்கப்பட்டது. ரூ.1.75 இலட்சம் செலவில் வாகோடு பேரூராட்சியில் நடைபாலம் (இணைப்பு) கட்டப்பட்டது. ரூ.1.75 இலட்சம் செலவில் அருமனை பேரூராட்சியில் இணைப்புப் பாலம் கட்டப்படுகிறது.

கலைஞர் அரசு எனது தொகுதியில் மேற்கொண்ட பணிகளில் சிலவற்றை இங்குக் குறிப்பிட்டுள்ளேன். இன்னும் பல திட்டங்கள் செயல்படுத்த இருக்கின்றன.

★ ★ ★

மீனவர் நலன்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை 28 மீனவர் கிராமங்களுக்கு வீடு ஒன்று ரூ.32,000 செலவில் 994 வீடுகள் அரசு அனுமதி அளித்து, இதுவரை 815 வீடுகள் கட்டுமானப் பணி முடிவுற்று பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டில் 625 வீடுகள் 10 மீனவ கிராமங்களில் ஒரு வீடு ரூ.37,000 செலவில் அரசால் ஒப்பளிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மீனவர்களுக்கு இலவச விடுகள் பழுதுகள் நிவர்த்தி செய்தல்

1996–97ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர் குடியிருப்புகள் பழுது பார்க்க வீடு ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் ரூ.13.2 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, 256 வீடுகளில் பழுதுகள் நீக்கும் பணி முடிவடைந்து உள்ளன.

மீனவ கிராமங்களில் தெரு விளக்குகள்

1996–97ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் 11 மீனவ கிராமங்களில் 58 தெரு விளக்குகள் ரூ.2,37,220 செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 1997–98ஆம் ஆண்டில் 29 மீனவ கிராமங்களில் 216 தெரு விளக்குகள் அமைக்க ரூ.9,11,245 அரசினால் ஒப்பளிப்பு பெறப்பட்டு தெரு விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

1998–99ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் ஏழுதேசம் சின்னத்துறை, கோவளம், இரவிப்புத்தன்துறை, ராமன்துறை, வாணியக்குடி ஆகிய கிராமங்களில் 10 சோடியம் விளக்குகள் ரூ.1.10 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இணைப்புச் சாலைகள்

1996–97ஆம் ஆண்டு திட்டத்தில் மேலமுட்டம், சைமன்காலனி, கீழமணக்குடி ஆகிய 3 மீனவக் கிராமங்களில் 4.78 செலவில் 1.46 கி.மீ. இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

1996–97ஆம் ஆண்டு 35,648 மீனவர்களுக்கு சேமிப்பு–நிவாரணத்தொகை ரூ.3,79,62,540 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

1997–98ஆம் ஆண்டு 32,333 மீனவர்களுக்கு ரூ.3,42,77,445 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டு மீனவர் சேமிப்பு நிவாரணத் தொகை ரூ.2,32,79,000 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு விபத்தினாலோ அல்லது மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது இறக்க நேரிட்டால் அவர் வாரிசுதாரர்களுக்கு அல்லது முழுமையாக ஊனமுற்றால் அவருக்கு ரூ.25,000 நிவாரணமும், பகுதி ஊனமடைந்தால் அவருக்கு ரூ.12,500 நிவாரணமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மத்திய அரசு உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 25.3.1998 முதல் இத்திட்டத்தின் கீழ் ரூ.25,000க்கு பதிலாக ரூ.35,000 நிவாரணமும் பகுதி ஊனமுற்றால் ரூ.12,500க்கு பதிலாக ரூ.17,500ம் வழங்கப்பட்டு வருகிறது. 25.3.1998 முதல் தமிழ்நாடு அரசு மீனவர்களுக்கு புதிய மீனவர் விபத்துக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் மீனவர் விபத்தினால் மரணம் அடைந்தால் அவர் வாரிசுதாரர்களுக்கு ரூ.15,000ம் பகுதி ஊனம் அடைந்த மீனவர்களுக்கு ரூ.7,500 நிவாரணமும் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தினால் மீனவர்களுக்கு செலுத்தவேண்டிய காப்புறுதி பிரிமியம் தமிழ்நாடு அரசு செலுத்தி வருகிறது. 1996ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் 62 நபர்களுக்கு 32.25 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மீனவர்களைப் போல மீனவ மகளிருக்கும் விபத்துக் குழு காப்புறுதி

திட்டத்தில் பயனடையும் வகையில் அரசு ஆணையிட்டுள்ளது.

நைலான் வலைக்கு 50 சதவிகிதம் மானியம்

50 சதவிகிதம் நைலான் வலை மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் அதிக பட்சமாக ரூ.6,000 வரை மானியம் வழங்கப்படும். பயனாளிகளிடமிருந்து சுமார் 1,352 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

10 சதவிகிதம் மானியத்தில் வலைகள் வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில மீனவர் கூட்டுறவு இணையம் (டாப்கோபெட்) மூலம் மீனவர்களுக்கு வலைகள் வாங்க 10 சதவிகிதம் மானியமாக ரூ.2,000 வரை வழங்க இதுவரை 34 பயனாளிகளுக்கு ரூ.57,315 வழங்கப் பட்டுள்ளது.

மரைன் பிளைவுட் வள்ளம் (25 சதவிகித மானியம்)

25 சதவிகித மானியத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.22,000 வரை வழங்க அனுமதிக்கப்பட்டு 127 பயனாளிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மரைன் பிளைவுட் கட்டுமரம் (50 சதவிகித மானியம்)

50 சதவிகித மானியத் திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.25,000 வழங்க மனுக்கள் வரவேற்கப்பட்டுள்ளன.

வெளிப்பொருத்தும் இயந்திரம்

வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு 50 சதவிகித மானியம் அல்லது ரூ.10,000 இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. 1996–97ஆம் ஆண்டு 360 வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு ரூ.36 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1997–98ஆம் ஆண்டு 520 வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு ரூ.52 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டு 233 வெளிப்பொருத்தும் இயந்திரங்களுக்கு 50 சதவிகித மானியத்தில் ரூ.23.30 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது.

1998–99ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் 5 மீனவர்களுக்கு கடலில் மீன் இருக்கும் இடத்தை கண்டு பிடிக்கும் கருவி 25 சதவிகித மானியத்தில் வாங்க ரூ.0.81 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 100 சதவிகித மானியத் திட்டத்தில் 3 சக்கர சைக்கிள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தில் குளச்சல் மற்றும் கன்னியாகுமரி மீனவர் மகளிர் கூட்டுறவுச்சங்கங்களுக்கு 100 சதவிகித மானியத்தில் இரு ஆட்டோ டிரெயிலர் பெறப்பட்டுள்ளது. ஒரு ஆட்டோ டிரைலருக்கான மானியம் ரூ.1.25 இலட்சம்.

மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் அலுமினிய மீன்பாத்திரம் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்ட மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு 1,000 மீன்பாத்திரங்கள் வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி விசைப் படகுகளுக்கு டீசல் மானியம்

மீன்பிடி விசைப் படகுகளுக்கு டீசல் மானியமாக லிட்டருக்கு 35 பைசா வீதம் 1997–98ஆம் ஆண்டு ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1998–99ஆம் ஆண்டிற்கு டீசல் மானியம் லிட்டருக்கு, 45 பைசாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

வெளிப்பொருத்தும் இயந்திரத்திற்கு மண்ணெண்ணெய் டீசல் மானியம்

இத்திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய், டீசல் மானியமாக லிட்டருக்கு 0.50 பைசா வீதம், மாதம் ரூ.125யும் வருடத்திற்கு ரூ.1500யும் வழங்கப்படுகிறது.

★ ★ ★

குளச்சல் தொகுதி மேம்பாடு

இரா. பெர்னார்டு
*சட்டப்பேரவை உறுப்பினர், குளச்சல் தொகுதி
கன்னியாகுமரி மாவட்டம்*

தமிழகத்தின் தென் முனையாம் குமரியில் உலகப்பொதுமறை தந்த வள்ளுவனுக்கு சிலை எழுப்பும் இந்த பொன்னான தருணத்தில் மற்றைய மாநிலங்களுக்கு முன்னோடியாய் விளங்கும் சமத்துவபுரம் கண்ட சமூகநீதி காவலர் கலைஞரின் நல்லாட்சியில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினராய் இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தேர்தல் காலத்தில் எல்லோரையும் போலவே பல வாக்குறுதிகளை வழங்கி இருந்தாலும் கடந்த மூன்றாண்டுகளில் அவற்றில் பலவற்றை நிறைவேற்றியுள்ளேன். முக்கியமாக குளச்சலை துறைமுகமாக்க பலமுறை கோரிக்கை வைத்து வந்தேன். இது குறித்து சட்டசபையிலும் பலமுறை எடுத்து இயம்பி உள்ளேன். இதன் முதல் பயனாக தமிழினத் தலைவர் தமிழக முதல்வர் கலைஞரின் சிங்கப்பூர் பயணத்தின் போது குளச்சல் துறைமுகம் குறித்து கொடுத்த பேட்டி எனக்கும் பொதுமக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியுடன் கூடிய நம்பிக்கையை தந்துள்ளது. நிச்சயம் இவ்வாட்சியிலே குளச்சல் துறைமுகம் அமையும் என பெரிதும் நம்புகிறேன்.

குளச்சலில் அரசு பேருந்து பணிமனை அமைத்திடவும், சேனவிளையில் அரசு ஆரம்ப சுகாதார மையம் அமைத்திடவும் ஆவன செய்துள்ளேன்.

ஆசாரி பள்ளத்தில் சுமார் 110 ஏக்கர் உள்ளடக்கிய காசநோய் மருத்துவமனை வளாகத்தில் மருத்துவ கல்லூரி அமைத்திட கலைஞரிடம் நேரிலும், சட்டமன்றத்தில் பலமுறை வேண்டுகோள் கொடுத்து வருகிறேன். எனது தொகுதி மக்கள் என்னை அவ்வப்போது சந்தித்து குறைகேட்க திங்கள் சந்தையில் ஒரு நிரந்தர அலுவலகம் அமைத்து செயல்படுகிறேன். எனது தொகுதியில் கடந்த மூன்றாண்டுகளில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், இந்திரா கூட்டுக் குடியிருப்புத் திட்டம், மாவட்ட பரவலாக்கப்பட்ட பண்முகப்படுத்தப்பட்டத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற திட்டப் பணிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களில் பலதரப்பட்ட பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

எனது தொகுதியில் முடிந்த அளவு 100 சதவிகித குடிநீர் வசதியினை பெறுவதை நோக்கமாகக் கொண்டு, முட்டத்தில் 2 கிணறும் 2 நீர்த்தேக்கத் தொட்டியும், சைமன் காலணி, கோடிமுனை, குறும்பனை கிராமத்திற்கு தலா ஒரு குடிநீர்த் தொட்டியும் அமைக்கப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலா ரூ. 4.5 இலட்சம் செலவில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளை திங்கள் சந்தை, நெய்யூர், இராஜாக்கமங்கலம் துறை, பிள்ளைத்தோப்பு, எள்ளுவிளை ஆகிய இடங்களில் அமைக்கப்படுகின்றன.

இதுபோல 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளை பலவிதத் திட்டங்களின் மூலம் மனவிளை, கனியாகுளம், மாவிளை, பள்ளிச்சன் விளை, ஆலன்விளை, உன்னங்குளம், ரீத்தாபுரம், எரிசனாப்பள்ளி, கல்லுக்கூட்டம், தாராவிளை, பண்டாரத்தோப்பு, பெருவிளை ஆகிய இடங்களில் கட்டி தொகுதி மக்களுக்கு குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சமத்துவபுரம் கண்ட சான்றோனாம் கலைஞர் ஆட்சியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.616 இலட்சம் செலவில் சுமார் 23.70 கி.மீ. நீள மேற்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் குளச்சல் சட்டமன்ற தொகுதியில் பண்ணையூர் பாலம் ரூ.85.4 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது. சுமார் 63 கி.மீ. சாலைகளை கருந்தளம் அமைக்க நபார்டு உதவியுடன் ரூ.177 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் மா. சிங்காரவேலர் நினைவு இலவசக் குடியிருப்புத் திட்டத்தின் மூலம் 1996–97ஆம் ஆண்டில் முட்டம் – 30 வீடுகள், சின்னவிளை – 30 வீடுகள், குளச்சல் – 30 வீடுகள், வாணியக்குடி – 30 வீடுகள், சைமன் காலணி – 30 வீடுகள், மண்டைக்காடு புதூர் – 30 வீடுகள் ஆக மொத்தம் – 180 வீடுகளும்.

1997–98ஆம் ஆண்டில் கொட்டில்பாடு – 20 வீடுகள், குளச்சல் – 20 வீடுகள், கோடிமுனை – 20 வீடுகள், வாணியக்குடி – 100 வீடுகள், குறும்பனை – 20 வீடுகள் ஆகமொத்தம் – 180 வீடுகளும் கட்டப்பட்டு பொதுமக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

1998–99ஆம் ஆண்டில் வாணியக்குடி – 100 வீடுகள், கீழகடியப்பட்டணம் – 50 வீடுகள், கோடிமுனை – 50 வீடுகள், ஆகமொத்தம் 200 வீடுகள் கட்டப்பட உள்ளன.

1996–97ஆம் ஆண்டில் ரூ.20,550 செலவில் 5 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 1997–98ல் ரூ.3,20,300 செலவில் 11 மீனவ கிராமங்களில் தெருவிளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வாணியக்குடி மீனவ கிராமத்தில் ரூ.22,000 செலவில் 2 சோடியம் விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது. மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தில் 1996 முதல் 1999ஆம் ஆண்டு வரை 62 நபர்களுக்கு ரூ.32.25 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீனவ கிராமங்களில் இணைப்புச் சாலைகள் ரூ.3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 12 மீனவ கிராமங்களை சார்ந்தவர்களுக்கு 525 வெளிபொருத்தும் இயந்திரங்களுக்கு ரூ.52.5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

சாலை, குடிநீர் வசதி, குடியிருப்புகள், சமூக நலக்கூடம், பொதுவிநியோகக் கட்டடம், படிப்பகம், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள் என பல அத்தியாவசியப் பணிகளை மக்களுக்கு கிடைக்க ஆவண செய்துள்ளேன்.

இந்திய துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம் எனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயலாற்றிவரும் **கலைஞர்** ஆட்சியில் எனது **குளச்சல்** சட்டமன்றத் தொகுதியில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 1997–98ஆம் ஆண்டில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், முட்டம் ஊராட்சியில் ரூ.64.16 இலட்சம் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1998–99ஆம் ஆண்டில் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், சைமன் காலணி, ஊராட்சியில் ரூ.99.34 இலட்சம் செலவில் பல்வேறு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

குளச்சல் நகராட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு திட்டப் பணிகளில் 26 சாலைப் பணிகள் ரூ.49.57 இலட்ச செலவில் 23.30 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் பணிகள் ரூ.23.64 இலட்சத்தில் 2.95 கி.மீ. நீளத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 241 குழல் விளக்குகள் மற்றும் 26 சோடியம் விளக்குகள் ரூ.7.47 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப் பட்டுள்ளன. நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.4.95 இலட்சம் செலவில் 11 துப்புரவுப் பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குழித்துறை ஆற்றிலிருந்து ரூ.172 இலட்சம் செலவில் 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தண்ணீர் ஏற்றப்பட்டு பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

கல்வித்துறையில் 1997–98ஆம் ஆண்டில் கடியப்பட்டிணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, 1998–99ஆம் ஆண்டில் சுண்டப்பற்றிவிளை அரசு உயர்நிலைப்பள்ளி, கணபதிபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் ஒரப்பனவிளை உயர்நிலைப்பள்ளி, புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, ஆசாரிப்பள்ளம், தேவி உயர்நிலைப் பள்ளி, குளச்சல் ஆகிய மூன்று மேல்நிலைப்பள்ளிகளுக்கு தேர்வு மையம் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

ஆசாரிப்பள்ளம் காசநோய் மருத்துவமனை வளாகத்தில் கண்மருத்துவமனை பிரிவு தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதை தொடர்ந்து கண்மருத்துவமனை பிரிவு தொடங்கப்பட்டது. மேலும் குளச்சல் திக்கணங்கோடு ஆகிய இடங்களில் 110 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு எனது குளச்சல் சட்டமன்ற தொகுதிகளில் மின்னழுத்த குறைபாடு இல்லாத வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கிராம மக்கள் அனைவருக்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்வாயிலாக இந்தியத் துணைக் கண்டத்திற்கே முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தை முன்னேற்றிடும் வகையில், விரைந்து பணிகளைச் செயலாற்றிவரும் முதல்வர் **கலைஞர்** அவர்களின் ஆட்சியில், எங்கள் குளச்சல் தொகுதி பல்வேறு வளர்ச்சிகளில் முன்னிலை வகிக்கும் என்பதில் ஐயமில்லை. ●

கன்னியாகுமரி மாவட்டத்தில் கைத்தறித் தொழில்

தமிழகத்தில் இயங்கி வரும் சுமார் 4 இலட்சம் கைத்தறிகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 13,500 கைத்தறிகள் இயங்கி வருகின்றன. நெசவாளர்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்த அரசு பல வகைகளிலும் திட்டமிட்டு அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பளித்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 64 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 16 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் ஆக மொத்தம் 81 சங்கங்களும் ஒரு கூட்டுறவு நூற்பாலையும் இயங்கி வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1996—97ஆம் ஆண்டு ரூ.1980.90 இலட்சம் மதிப்புள்ள 126.91 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு அதில் 111.26 மீட்டர் ரூ.1949.77 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன. 1997—98ஆம் ஆண்டு ரூ.1728.29 இலட்சம் மதிப்புள்ள 106.67 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு 108.47 மீட்டர் ரூ.2060.97 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன. 1998—99ஆம் ஆண்டு டிசம்பர் முடிய ரூ.1518.60 மதிப்புள்ள 83.77 மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு 95.66 மீட்டர் ரூ.1857.78 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

18 வயதிற்கு மேற்பட்டு 60 வயதிற்குட்பட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர தகுதி உள்ளவர்களாவார்கள். இவர்களுக்குக் குறைந்தபட்சம் ரூ.100 பங்குத் தொகை இருக்க வேண்டும். உறுப்பினர்களது கூலியில் 8 பைசா சந்தா தொகையாக பிடித்தம் செய்யப்படுகிறது. சந்தா தொகைக்கு இணையாக 4 பைசா மத்திய அரசும், 4 பைசா மாநில அரசும் மானியமாக வழங்குகின்றன.

இத்திட்டத்திலுள்ள 60 வயதிற்குள் இறக்கும் உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு உறுப்பினர் சந்தா, அரசு சந்தா ஆகியவற்றிற் கான வட்டியுடன் ஆயுள் காப்பீட்டுக் கழகம் மூலம் ரூ.35,000மும் கோ—ஆப்டெக்ஸ் நல்வாழ்வு உதவித் தொகையாக ரூ.5,000மும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 69 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 4,663 உறுப்பினர்கள் உள்ளனர். மேற்படி திட்டத்தின் கீழ் 1996—97ஆம் ஆண்டிற்கு 4 சதவிகித மாநில அரசு சந்தாவாக ரூ.8.05 இலட்சமும், 7 சதவிகித வட்டியாக ரூ.16.68 இலட்சமும், 1997—98ஆம் ஆண்டிற்கு 4 சதவிகித மாநில அரசு சந்தா ரூ.10.24 இலட்சமும், 4 சதவிகித மத்திய அரசு மானியம் ரூ.15.70 இலட்சமும், 7 சதவிகித வட்டி ரூ.38 இலட்சமும், 1998—99ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 4 சதவிகித மத்திய அரசு மானியம் ரூ.2 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்

18 வயதிற்கு மேற்பட்டு 60 வயதிற்கு முந்தைய 5 ஆண்டுகளில் சங்க சராசரி உற்பத்தியில் 75 சதவிகிதம் குறையாமல் உற்பத்தி மேற்கொண்ட உறுப்பினர்கள் இத்திட்டத்தில் சேர தகுதி பெறுகிறார்கள். மேற்படி உறுப்பினர்கள் தாங்கள் பெறும் கூலியிலிருந்து ரூ.2 மாதமொன்றுக்குச் சந்தாவாக செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 60 வயதிற்குள் காலமாகும் உறுப்பினர்களின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1492 உறுப்பினர்கள் உள்ளனர். 16 குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர்.

முதியோர் ஓய்வூதியத் திட்டம்

சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் 60 வயதிற்கு மேற்பட்டும்



இரண்டு வருடங்கள் தொடர்ந்து வரவு செலவு செய்தும், சந்தா தொகையினை தவறாமல் செலுத்தி வரும் உறுப்பினர்கள் முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியுடையவராவார்கள். இத்திட்டத்தின் கீழ் 1997—98ஆம் ஆண்டில் 67 உறுப்பினர்களுக்கு ரூ.97,350க்கான பரிந்துரை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 31.12.98 முடிய 31 உறுப்பினர்களுக்கு ரூ.84,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

தள்ளுபடி மானியம்

இத்திட்டத்தின்படி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் 20 பைசா அரசு தள்ளுபடியாக வழங்கி வருகிறது. மேற்படி தள்ளுபடித் தொகை பருத்தி ரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.100க்கு மிகாமலும், பட்டு ரகங்களுக்கு ரூ.200க்கு மிகாமலும் வழங்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்திற்கு தள்ளுபடி மானியம் 1996—97ஆம் ஆண்டு ரூ.2.57 கோடியும், 1997—98ஆம் ஆண்டு ரூ.2.79 கோடியும், 1998—99ஆம் ஆண்டு டிசம்பர் முடிய ரூ.4.99 கோடியும் வழங்கப்பட்டன.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 81 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 42 சங்கங்களில் சுமார் 3 ஆயிரம் தறிகள் மூலம் வேட்டி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. சராசரியாக மாதமொன்றுக்கு 75 ஆயிரம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

1998—99ஆம் ஆண்டில் 8 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு கோ—ஆப்டெக்ஸ் மூலமாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தறிக்கூடத்துடன் கூடிய வீட்டு வசதி

சொந்த மனை உள்ள வீடற்ற நெசவாளர் களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய வீட்டு வசதித் திட்டம் மத்திய, மாநில அரசுகள் மூலமாக ஹட்கோ நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் குழு வீடுகள் அமைத்தல் மற்றும் பரவலாக வீடு கட்டும் திட்டங்கள் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்ட நெசவாளர்களுக்கு 1996—97ஆம் ஆண்டு 76 வீடுகள் கட்ட கடன் ரூ.19 இலட்சமும் மானியம் ரூ.17.48 இலட்சமும், 1997—98ஆம் ஆண்டு 106 வீடுகள் கட்ட ரூ.12.19 இலட்சமும் வழங்கப்பட்டன.

தொகுப்பு செறிவுத் திட்டம்

இத்திட்டமானது பகுதிவாரியான நெசவாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1994—95ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம்: நெசவு பயிற்சி அளித்தல், புதிய தறிகள் வழங்குதல், தறி உபகரணங்கள் வழங்குதல், மின் வசதி செய்து கொடுத்தல், கிராமபுறங்களில் விற்பனை மையம் அமைத்தல் ஆகியவை ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் இதுகாறும் 28 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 800 உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் 1996—97ஆம் ஆண்டு ரூ.22,44,975யும் 1997—98ஆம் ஆண்டு ரூ.14,71,050யும் இம்மாவட்டத் திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சுகாதார செறிவுத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசு நிதியுதவியுடன் நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென 1994—95ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்

பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களின் மருத்துவச் செலவினங்களை ஈடு செய்யும் வகையில் உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,500 வீதம் வழங்கப்படுகிறது. நெசவாளர் களின் கண் பரிசீலனைக்கு ரூ.40 வீதமும், கண்ணாடிக்கு ரூ.150 வீதமும் வழங்கப்படுகிறது.

குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு ரூ.100ம், மகப்பேற்றுக்கு ரூ.500ம் வழங்கப்படுகிறது. மேலும் சுகாதாரச் செறிவுத் திட்டத்தின் கீழ் 50 நெசவாளர் குடும்பங்களுக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்க ரூ.35,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஒரு இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டு இம்மாவட்டத்தில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

1996—97ஆம் ஆண்டு ரூ.5,83,228, 1997—98ஆம் ஆண்டு ரூ.2,66,250, 1998—99 டிசம்பர் வரை ரூ.7,89,750 மானியத் தொகைகள் அனுமதிக்கப் பட்டுள்ளது.

கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச்சாலை அமைக்கும் திட்டம்

இத்திட்டத்தின் நோக்கங்கள்:

கூட்டுறவுத்துறையில் அல்லாத நெசவாளர் களைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வருதல்,

புதிய வடிவமைப்புகளில் ரகங்கள் உற்பத்தி செய்ய பயிற்சியளித்தல்,

உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளை விற்பனை செய்ய (ஏற்றுமதி உட்பட) வழிவகை செய்தல்,

தரமான முறையில் சாயம் தோய்க்க சாயச்சாலை அமைத்தல்,

நெசவாளர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு அளித்தல் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 12 கைத்தறி வளர்ச்சி மையங்களும், ஒரு தரமான சாயச்சாலையும் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அரசு பங்கு மூலதனம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு தொகையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பங்கு மூலதனமாக 1997—98ஆம் ஆண்டில் 6 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தம் ரூ.2.40 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

விற்பனைக் கூடம் நவீனப்படுத்தும் திட்டம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையினை மேம்படுத்தும் நோக்கில் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் 1997—98ஆம் ஆண்டில் இரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மொத்தம் ரூ.6 இலட்சம் மானியமாக அனுமதித்து வழங்கப் பட்டுள்ளது. 1998—99ல் ரூ.50,000 வழங்கப் பட்டுள்ளது.

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை

இத்திட்டத்தின் கீழ் ஏழை நெசவாளர் களின் பங்குத் தொகையினை அதிகரிப்ப தற்காக தலா ரூ.2,000 அரசால் வழங்கப் படுகிறது. 1997—98ல் 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ரூ.75,000 வழங்கப்பட்டுள்ளது. 1998—99ல் ரூ.1,75,000 — 4 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

புனித சவேரியாரின் காலத்தில் கோட்டாறு ஒரு பெரிய ஊர்; சந்தை கூடும் இடம், எனவே எந்நேரமும் வியாபாரச் சந்தடிகள் நிறைந்த இடம். வெளியூர் வியாபாரிகள் அடிக்கடி இங்கு வந்து போவதுண்டு. கேரளாவைச் சேர்ந்த தோமையார் கிறிஸ்தவர்கள் சிலரும் இங்கு குடியேறியிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள்.

'பழையாறு' என்னும் ஆறானது கடலை நோக்கி வளையும் பகுதியில் இப்பேரூர் அமைந்திருந்ததினால் அதற்குக் 'கோட்டாறு'

கிறிஸ்துவர்களையும், சில பரதர், முக்குவர் கிறிஸ்தவக் குடும்பங்களையும் சந்திப்பதற்காகச் சவேரியார் அடிக்கடி கோட்டாறுக்கு வந்து போவது வழக்கம். அவர் அங்கு வந்து தங்கும்போதெல்லாம் பலி பூசையும், செபமும் செய்த இடம்தான் இன்று கோட்டாறு பேராலயம் உள்ளடக்கியுள்ள மரியன்னையின் சிற்றாலயம் என மக்கள் கருதுகின்றனர்.



கோட்டாறு
புனித சவேரியார் பேராலயம்

(ஆற்றின் வளைவு) என்ற பெயர் வழங்கலாயிற்று. கோட்டாறு ஒரு காலத்தில் வேணாடு என்ற மாநிலத்தின் தலைநகர். எனவே பல எல்லைப் போர்களுக்கும் அது களமாக விளங்கிற்று. இன்றைய நாகர்கோவில் நகர்ப்புறமானது பழைய கோட்டாறு பேரூரின் விரிவாகும்.

பரம்பரைக் கூற்றுப்படி, வணிக நோக்குடன் கோட்டாற்றில் குடியேறியிருந்த தோமையார்

கோட்டாற்றில் சவேரியார் தங்கிச் செபித்த அதே இடத்தில்தான், 1603ஆம் ஆண்டில் சுவாமி புச்சேரியோ எழுப்பிய புதிய சிற்றாலயத்தின் பீடமும், பீட முற்றமும் அமைந்திருந்தனவென்று 1699ஆம் ஆண்டு சுவாமி பீற்றர் மார்ட்டின் தன் மடல் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். இதே பரம்பரைக் கருத்தை 1719ஆம் ஆண்டில் சுவாமி வெனான்சியுஸ் பூசெ என்பவரும் ஆதரித்துப் பேசுகிறார்.



அலங்கார உபகார
அன்னை ஆலயம்

போர்ச்சுகீசியர்கள் இந்தியாவிற்கு வரும் முன்பே குமரிமுனையில் கிறிஸ்தவ ஆலயமும், கிறிஸ்தவ சமூகமும் இருந்ததாகத் தெரிய வருகிறது. தூய பிரான்சிஸ் சவேரியார் குமரிமுனைக்கு முதன்முறையாக வந்தபோது குமரி முனையில் மரியன்னை ஆலயம் ஒன்று இருந்ததாக இயேசு சபையினரின் பழங்கால குறிப்பேடுகள் தெரிவிக்கின்றன.

குமரி முனையை மறைபரப்பு மையமாகக் கொண்டு இராமநாதபுரத்திலிருந்து தூத்தூர் வரை இயேசு சபையினர் பணியாற்றியுள்ளனர். கன்னியாகுமரி பங்கு மேல மணக்குடி, கீழ மணக்குடி, தாமரைக்குளம், கோவளம், ஆரோக்கியபுரம் ஆகியவற்றை கிளைப் பங்குகளாக கொண்டிருந்தது. தற்போது சின்னமுட்டம்,அஞ்சுக்கூட்டுவிளை, புதுக் கிராமம், சிலுவைநகர் ஆகியவை கிளைப் பங்குகளாகச் செயல்பட்டு வருகின்றன.

தற்போதுள்ள ஆலயத்தின் அடிக்கல் 1900ஆம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி நாட்டப்பட்டு 1954ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

★ ★ ★

1603ஆம் ஆண்டில் களிமண்ணாலும், பலகையினாலும் உருவான முதற் சிற்றாலயம், மக்கள் வாரி வழங்கியப் பெருவாரியான காணிக்கைகளின் பலனால், 1640ஆம் ஆண்டு, முதல் முறையாகக் கற்களினால் கட்டப்பட்டது. இன்று சவேரியார் பேராலயம் உள்ளடக்கியுள்ள மரியன்னை சிற்றாலயத்திலுள்ள மரப் பீடம்தான் 1640ஆம் ஆண்டு உருவான அந்த முதல் கற்கோவிலின் பீடம் எனக் கருதலாம்.

ஆண்டுதோறும் பெருகி வந்த பக்தர்களின் வழிபாட்டுக்கு இம் முதல் சிற்றாலயத்தில் இடம் போதாமையினால் வேறொரு பெரிய ஆலயத்தை எழுப்ப இயேசு சபைக் குருக்கள் தீர்மானித்தனர். 1698ஆம் ஆண்டில் திருவாங்கூர் மாநிலத்தில் உருவாக்கப்பட்ட ''நேமம் மிஷன்'' என்ற வேதபோதகத் தளத்தில், சைமன் கர்வாலோ, பீற்றர் மார்ட்டின், பெர்னார்டு டி சா, செவேரியோ போர்கேசே போன்ற இயேசு சபைக் குருக்கள் பணியாற்ற வந்தனர். 1698ஆம் ஆண்டில் கோட்டாற்றில் புனித சவேரியாரின் முதல் சிற்றாலயத்திற்கருகே இயேசு சபைக் குருக்கள் ஒரு பெரிய கற்கோவிலை உருவாக்கினர்.

இப்பெரிய கற்கோவில்தான் 1865ஆம் ஆண்டில் மீண்டும் திருத்திப் பெரிதாக்கப்பட்டது. மேற்குப் புறமாக நீட்டப்பட்டு, வடக்கும் தெற்குமாகப் புறப்பகுதிகள் எழுப்பப்பட்டன. அதனால் ஆலயம் சிலுவை வடிவில் அமைந்தது. கூரையின் பழைய ஓடுகள் அகற்றப்பட்டுப் பீடத்தின் நேர் உயரே விதானமும், ஆலயத்தின் இருமருங்கிலும் வளைவு மண்டபங்களும் அமைக்கப்பட்டன. அதே சமயத்தில், இன்னமும் வெளியே தனித்திருந்த முதல் பழைய (மரியன்னை) சிற்றாலயத்தின் ஓட்டுக் கூரையும் அகற்றப்பட்டு அதற்கு ஒரு சிறு விதானம் கட்டப்பட்டது.

1876ஆம் ஆண்டில் கொல்லத்தைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் ஜோக்கின் பெர்னாண்டஸ்

கோட்டாறு புதிய கோவிலின் அழகியப் பிரதான மரப்பீடத்தை அமைத்தார். இப்பீடத்தில் உன்னதமாக வீற்றிருக்கும் புனித சவேரியாரின் திருச்சிலை கோவாவில் செய்யப்பட்டதாகும்.

பேராலயத்தின் முகப்பில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அழகியக் கல் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. இம் மண்டபத்திற்கான பெரிய கற்கள் ஆரல்வாய் மொழியி லிருந்து திருவாங்கூர் மகாராஜாவின் யானைகளால் இழுத்து வரப்பட்டன. இந்தியக் கலைப்பாணியில் தோன்றும் இவ்வழகிய மண்டபத்தைத் திருவாங்கூர் சமஸ்தானக் கட்டட நிபுணர் ஜான் லூயிஸ் பெர்னாண்டஸ் நிறுவினார்.

கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து பிரிக்கப் பட்டு 1930ஆம் ஆண்டு மே 26ல் கோட்டாறு தனி மறைமாவட்ட மாகியது. இப்புதிய மறைமாவட் டத்திற்குக் கோட்டாறு புனித சவேரியார் கோவில் தலைமைக் கோவிலாக உயர்ந்தது. அதன் பழமைச் சிறப்பினாலும், புனித சவேரியார் மீது வைத்த பக்தியினாலும் மக்கள் அதனைப் "பேராலயம்" எனப் பெருமையோடு அழைத்து வருகின்றனர்.

புனித சவேரியார் பேராலயம் 1955ஆம் ஆண்டு, சுவாமி பர்னபாஸ் பேராலயப் பங்குக் குருவாக இருந்த காலத்தில், மேலும் விரிவுபடுத்தப்பட்டது. வடக்குத் தெற்காக ஆலயத்தின் பக்கங்கள் நீட்டிக் கட்டப்பட்டன. அதனால் அதுவரை தனித்திருந்த மரியன்னை சிற்றாலயம் இப்போது பெரிய கோவிலின் ஒரு பகுதியாக உள்ளேயே அமைந்து விட்டது. ஆலயத்தின் மேற்குப் பகுதியும் நீட்டப்பட்டுச் சக்ரீஸ்தியாக மாறியது. இவ்வாறு விரிவுப்படுத்தப்பட்ட இப்பேராலயம் 1956ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி ஆயர் ஆஞ்ஞிசாமி அவர்களால் மந்திரிக்கப்பட்டது. இது 1930ஆம் ஆண்டில் உருவான கோட்டாறு மறை மாவட்டத்தின் வெள்ளிவிழா நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

புனித சவேரியார் இந்தியாவுக்கு வந்த 400வது ஆண்டு நிறைவாக 1942ஆம் ஆண்டில் கோட்டாறு பேராலய வளாகத்தில், வடகிழக்கு மூலையில், சவேரியாரின் திருவுருவைத் தாங்கிய ஓர் கோபுரமும், அதனையடுத்து லூர்து அன்னையின் கெபி ஒன்றும் அமைக்கப்பட்டன.

1975ஆம் ஆண்டு, அன்றையப் பேராலயப் பங்குக்குரு சுவாமி ஜோசபாத் மரியா ஆலய வளாகத்தில் அலங்கார மேடை ஒன்றை அமைத்தார்.

இவ்வாறு 1603ஆம் ஆண்டு களிமண்ணால் உருவாகி, இன்று அலங்கார மேடை வரை உயர்ந்து நிற்கும் புனித சவேரியாரின் பேராலயம் மக்களின் உள்ளங்களிலும் உயர்ந்து நிற்கிறது.

★ ★ ★

விவேகானந்தர் பாறை

மாமேதை ஷெய்கு பீர்முஹம்மது ஒலியுல்லா



இன்தமிழ் இறைமிலக்கியத்தின் தாயகமாம் மெய்ஞ்ஞானப் பேரொளி ஷெய்கு பீர் முஹம்மது ஒலியுல்லா (ரலி) அவர்கள் குற்றால அருவியின் குன்றாத இதமும் வற்றாத தாமிரபரணி வளைந்தோடும் எழிலும் தென்றலும் கொஞ்சும் தென்காசியில் சிறுமலுக்கர் என்னும் சிறப்புடையோர்க்கு மகவாய்ப் பிறந்தவர்தான் ஞான மாமேதை பீர்முகம்மது ஒலியுல்லா.

ஞான மாமேதை பீர்முகம்மது ஒலியுல்லா அவர்கள் இளையோராய் இருக்கும்போது உலகத்து அறிவிலோ, உற்றார் கூறிய உரைகளிலோ ஆர்வம் காட்டாதவராக இருந்தார். குன்று மேலிட்ட விளக்காய்த் தங்கள் குலக் கொழுந்து திகழ வேண்டுமென்று நினைத்த பெற்றோர்களுக்கு இது கவலையைக் கொடுத்தது. ஒரு நாள் அவரின் தந்தை வெளியே சென்றிருந்த வேளையில், தாயார் அவருக்கு அன்னம் தந்து கொண்டிருந்தார்கள். சோறு வாய்க்காகும், அறிவுரையின் சாறு உளம் செல்ல அது வாய்ப்பாகும் என்று எண்ணி, தாயார் மகனைப் பார்த்துச் சொன்னார் "செல்வமே, தீன் தழைக்கவே நம் குலம் வாழ்கிறது. உங்கள் பாட்டனாரைப் பாரு; ஊரில் அவர்களுக் கிருக்கின்ற உயர்ந்த இடத்தைப் பாரு. உன் தந்தையோ பன்மொழிகளும் பயின்றவர். மாற்று மதத்தவரும் கூட அவரைப் போற்றுகின்றனர்; ஐயம் போக்கிச் செல்கின்றனர். அந்த பரம்பரையில் வந்த நீ இப்படி (புராக்காக) இருக்கலாமா? படிக்க வேண்டாமா?" என்று. இந்த வேளையில் வெளியில் சென்றிருந்த அவரது தந்தையும் வீட்டிற்கு வந்தார். அறிவுரை கூறுகின்ற அன்னையையும் ஒளியும் உறுதியும் கலந்து உறவாடும் களங்கமற்ற முகத்தோடு கவனமாகக் கேட்கும் மைந்தனையும் அவர் ஒளிந்து நின்று பார்த்தார். மறுமொழிக்காக மழலை உதிர்ந்தது. "அம்மா, உங்கள் உயர்ந்த உள்ளத்தை நான் உணருகிறேன். உங்கள் கவலையும் எனக்குப் புரிகிறது. உங்களுக்கு ஐயம் வேண்டாம். தந்தையின் பெயர் சொல்லி நான் தரப்போகும் உரைகளை விந்தை என்று உலகம் வியக்கத்தான் போகிறது" என்று மைந்தன் விடை பகர்ந்தார்.

இறை ஞானம் அவர் நெஞ்சில் இழையோடி இருந்தது. பிறப்பிலே வந்த சிறப்பு என்றுதான் அதனைக் கூறவேண்டும். ஏகனைக் காண வேண்டும்; அதற்குத் தனிமை வேண்டும். அரவமில்லாத இடத்தில் அருந்தவம் இயற்ற வேண்டும் என்று அவர்கள் விரும்பினார். காடுகளும் மோன நிலை மேடுகளும் அவரைக் கவர்ந்தன. அணைக்கின்ற உறவு, பிணைக்கின்ற சுற்றம் இவைகளைத் துறக்கின்ற துணிவு அவருக்கு ஏற்பட்டு விட்டது.

ஆண்டுகள் பல கடந்தன. இப்போது நாம் காணும் கேரள மாநிலத்தின் வடகிழக்கு மலைப் பகுதிகளில் அவர்கள் நெடுங்காலம் கடும்தவம் புரிந்தார். பின்னால் ஆனைமலையில் ஏறக்குறைய 25 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் பீர்மேடு என்ற பகுதியில் வாழ்ந்திருந்ததனால்தான் அவ்விடத்திற்கு அப்பெயர் ஏற்பட்டதாக ஆராய்ச்சிக் குறிப்புகள் கூறுகின்றன.

தன்கலையைக் கற்பதற்குத் தழைக்கும் வழிதந்த பீர் முஹம்மது அவர்களைத் 'தற்கலையார்' என்று அழைத்தார்கள். ஏனென்றால் தங்க நகை பூணுதற்குத் தளிர்மேனி அங்கம்போல் தக்கலை இருந்தது. அப்போது தக்கலையின் பழமையான தொழில் நெசவுதான். அவர் செய்ததும் அதுதான். தூய தமிழ், தக்கலையின் தனிச்சொத்தாக இருந்தது. மெய்ஞ்ஞானத் தூது வந்த அவர் அதில் வித்தாக இருந்தார்.

இறைஞானத்திலும் இலக்கியத்திலும் வரலாறு படைத்த அவர் ரஜப் மாதம் பூரணப் பதினான்கு வெள்ளிக் கிழமை இரவு பூதவுடல் நீத்தார். அடிக்கரும்பின் சாறெடுத்துக் காய்ச்சி அடுக்கி வைத்த கட்டிகள் போல் இனிமைக்கு இலக்கணம் வகுக்கும் அவர்களது பாக்களில் மெய்ஞ்ஞானம் சாறெனக் கலந்து கற்போர் மனத்தளவிற்குக் கருத்துக்களை ஈந்து கொண்டிருக்கின்றன.

அவர்களது பாடல்களைப் படிக்கின்றபோது அகங்கள் பல அற்புதங்களைச் சந்திக்கின்றன. அவர்களது பாடல்கள், வாய்க்கு விருந்தாகலாம்; நோய்க்கு மருந்தாகலாம்; அவைகளை உணர்ந்தாலோ உலகை இருந்தாளலாம்.

அவைகள், ஞானப் புகழ்ச்சி, ஞானப் பால், ஞானப் பூட்டு, ஞான மணிமாலை, ஞானக் குறம், ஞான ரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திருமெய்ஞ்ஞான சரநூல், ஞான நடனம், ஞான முச்சுடர்ப் பதிகங்கள், ஞான விகட சமர்த்து, ஞானத் துறவுகோல், ஞானத் தித்தி. மெய்ஞானப் பேரொளி பீர்முகம்மது (ரலி) அவர்களின் தர்கா தக்கலை ஊரில் அமைந்துள்ளது.

பீர்முகம்மது (ரலி) அவர்களின் பேறுகொண்ட விழா, சமயநெறி விழா சன்மார்க்க விழாவாக இலங்கி வருகிறது. அவர்களது விழாவிற்குத் தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, அவர்கள் தங்கித் தவமிருந்த கேரள மாநிலத்திலிருந்தும் மதவேறுபாடின்றி திரளான மக்கள் வருகின்றனர். ●

எங்கள் ஊர்ப் பிரச்சினை

பிரச்சினை

பெரம்பலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், வங்குடி பஞ்சாயத்த வங்குடி கிராமத்திற்கு வடக்கு தெருவில் 10,000 லிட்டர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டுதல், சுடுகாடு மற்றும் சுடுகாட்டுப் பாதை அமைத்தல், பகுதிநேர நியாயவிலைக் கடை, ஊர் முழுவதுமான புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், பொதுக்குளத்தை தூர்வாரி, சுற்றுச்சுவர் மற்றும் வடிகால் மதகு அமைத்து தருவது ஆகியன தற்போதைய அவசியத் தேவையாகும்.

மற்ற பஞ்சாயத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எங்கள் பஞ்சாயத்து ஒடுக்கப்பட்ட, துண்டிக்கப்பட்ட பகுதியாக கருதுகிறோம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி விரைந்து நடவடிக்கை எடுக்க தக்க ஏற்பாடு செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

— வி.கே. திருநாவுக்கரசு, பொதுமக்கள் சார்பாக,
பெரம்பலூர் மாவட்டம்.

தீர்வு :

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் அவர்களின் பதில் :

இக்குடியிருப்பின் 1991 கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை 250 ஆகும். 1996இன் படி 279 ஆகும். இக்குடியிருப்புக்கென நடப்பு நிதியாண்டில் (1998—99இல்) ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய ஓர் நிரந்தரக் குடிநீர்த் திட்டம் ரூ.8.70 இலட்சத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே இவ்வாண்டிற்குள் திட்டம் முடிக்கப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதில் :

வங்குடி கிராமத்தில் சுடுகாடு மற்றும் சுடுகாட்டு பாதையினை அடுத்த நிதியாண்டில் (1999—2000) ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் பணிகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.

மாவட்ட வழங்கல் அலுவலர் பதில் :

வங்குடி கிராமத்தில் பகுதி நேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான கருத்துரு கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளரிடம் கோரப்பட்டுள்ளது. கருத்துரு பெறப்பட்டவுடன் பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க உத்தரவிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

உடையார்பாளையம் வட்டாட்சியர் பதில் :

வங்குடி கிராமத்தில் உள்ள புறம்போக்கு ஆக்கிரமிப்புகள் ஊராட்சி மன்றத் தலைவர் ஒத்துழைப்புடன் விரைவில் அகற்றப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பதில் :

வங்குடி கிராம பொதுக்குளம் சிறுபாசன குளத்தில் சேராததால், ஊராட்சி நிதியிலிருந்து மன்றத் தலைவர் மூலம் இந்த நிதி ஆண்டில் பொதுக்குளத்தை தூர்வாரி, சுற்றுச்சுவர் மற்றும் வடிகால் மதகு அமைத்து தருமாறு தெரிவிக்கப் படுகிறது.



பிரச்சினை:

எங்கள் ஊர் பாரியூர் நஞ்சக்கவுண்டன் பாளையம், இந்திராநகர் காவனி, கோபி தாலுக்கா, ஈரோடு மாவட்டம் மக்களுக்கு இதுவரை பஞ்சாயத்தில் பணமில்லை என்று தண்ணீர் வரவில்லை. இப்போது பணம் கட்டி தண்ணீர் வருகிறது. ஆனால், கொங்கு வேளாளர் கவுண்டர்களுக்கு எந்த நேரமும் தண்ணீர் செல்கிறது. இந்திரா நகர் காலனிக்கு தண்ணீர் வருவதில்லை. தண்ணீர் பற்றாக்குறையாக உள்ளது. காலை 5 மணியிலிருந்து 11 மணி வரைக்கும் தண்ணீர் வந்தால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எங்களுக்கு தண்ணீர் வரும் குழாய் பைப்பை தண்ணீர் எடுத்து வரும் ஊழியர்கள் சுயநலத்திற்காக நிறுத்தி வைத்துக்கொள்கிறார்கள். ஆகவே, தண்ணீர் எங்களுக்கு அதிகமாக வர, தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஊர் பொதுமக்கள், பாரியூர்,
ஈரோடு மாவட்டம்.

தீர்வு :

கோபி ஊராட்சி ஒன்றியம், பாரியூர் ஊராட்சி, நஞ்சக்கவுண்டன்பாளையம் இந்திரா நகர் ஆதிதிராவிடர் காலனி பொதுமக்களிடமிருந்து குடிநீர் வசதி கோரி வரப்பெற்ற கடிதம் தொடர்பாக கோபி ஊராட்சி ஒன்றிய ஆணையரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்திராநகர் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள நான்கு தெருக்களிலும், கூட்டுக்குடிநீர்த் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட பொதுக் குடிநீர்க் குழாய் ஒன்றும், ஆழ்குழாய்க் கிணறு மேல்நிலைத் தொட்டியிலிருந்து வழங்கப்படும் பொதுக்குடிநீர் குழாய் ஒன்றும் ஆக இரண்டு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும், தவிர, தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், 29-1-1999 அன்று நேரடியாக ஆய்வு மேற்கொண்டு விசாரித்ததில், இந்திரா நகர் மூன்றாவது வீதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறு மேல்நிலைத் தொட்டி குடிநீர்க் குழாயில் மட்டும் போதிய தண்ணீர் வருவதில்லையென ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் தெரிவித்ததாகவும், மேலும் அக்குழாயில் ஏற்கெனவே வந்த தண்ணீர் போதுமானதாக இருந்ததாகவும், தற்போது சுமார் ஒருமாத காலமாகத்தான் போதிய தண்ணீர் வருவதில்லை எனவும் தெரிவித்ததாகவும், சம்பந்தப்பட்ட குழாய் மெயின் குழாய் இணைப்பில் இருந்து சுமார் 35 அடி தூரம் உள்ளதாகவும் குடிநீர்க்குழாயில் ஏதாவது அடைப்பு இருக்கலாம் எனக் கருதி, மேற்படி குழாயினை அகற்றி அடைப்புகள் சரிபார்த்து மீண்டும் பொருத்தி குடிநீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்துமாறும் ஊராட்சித் தலைவரை கேட்டுக் கொண்டதாகவும், இது தவிர இந்திரா நகர் ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர் பிரச்சினை ஏதுமில்லை என்றும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதென்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்,
ஈரோடு மாவட்டம் (ஊ), ஈரோடு.

பிரச்சினை :

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் பனையப்பட்டி அஞ்சல் உதயசூரியபுரம் கிராமம் எங்கள் ஊராகும்.

எங்கள் ஊரின் வழியாக புதுக்கோட்டையிலிருந்து பொன்னமராவதி செல்லும் நெடுஞ் சாலை செல்கிறது. மேற்படி நெடுஞ்சாலையிலிருந்து மேலப்பனையூர் கிராமத்திற்கு செல்லும் குறுக்குச் சாலை செல்கிறது.

புதுக்கோட்டை பொன்னமராவதி நெடுஞ் சாலையிலிருந்து மேலப்பனையூர் அரசினர் காலனி வரை குறுக்குச் சாலையின் மிகவும் இருட்டான பகுதியில் செல்ல வேண்டியுள்ளதால் மின்சார இணைப்பு வேண்டி நீண்டநாள் போராட்டத் திற்குப் பிறகு பனையப்படி ஊராட்சி நிதியிலிருந்து மின்சார வாரியத்திற்கு பணம் கட்டி சுமார் 3 ஆண்டுகள் ஆகின்றன. கம்பங்கள் (போஸ்டர்கள்) கொண்டு வந்து போட்டு 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவற்றில் சில நட்டாச்சு, சில நடவில்லை.

இதுவரை கம்பம் நட்டு மின்சார இணைப்பு கொடுக்கவில்லை. எந்த வேலையும் நடைபெற வில்லை. இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாரியப்பன், பொதுமக்கள் சார்பாக
புதுக்கோட்டை மாவட்டம்.

தீர்வு :

உதயசூரியபுரத்திற்கு தெருவிளக்குகள் அனுமதிக் கப்பட்டுள்ள வேலை முடித்து தெரு விளக்குகள் எரிய விடப்பட்டுள்ளது என்பதைத் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்,
திருமயம் கிராமிய மின்சார கூட்டுறவு சங்கம்.

பிரச்சினை :

எங்கள் தெருவில் மக்களின் அடிப்படை தேவைகளான சாலைவசதி, சாக்கடைவசதி, தெருவிளக்கு வசதி போன்றவை இல்லாமையால் நாங்கள் மிகவும் அவதிப்படுகிறோம். இதுகுறித்து பல மனுக்கள் அனுப்பியும் எவ்வித பயனுமில்லை. இந்த தெருவில் கழிவுநீர் தேங்கி அனைத்து வியாதிகளின் உற்பத்தி ஸ்தலமாக மாறி வருகிறது. மழைகாலத்தில் தண்ணீர் தெருக்களில் தேங்கி, நடந்து செல்லவே முடியாத சூழ்நிலை உள்ளது. இந்தத் தெருவில் ஆரம்பப்பள்ளி ஒன்று உள்ளதால், பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் படும் அவதி சொல்லி மாளாது.

எனவே எங்கள் துயர்துடைக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

பாவாயம்மாள் தெருவாழ் மக்கள் 3ஆவது வார்டு,
ஜாகர்அம்மாபாளையம்,
சேலம் மாநகராட்சி 2ஆவது வட்டம்,
சேலம்.

தீர்வு :

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம் கோட்டம் எண்.3இல் உள்ள பாவாயம்மாள் தெருவாழ் மக்கள் பகுதிக்கு மணல் கொட்டி சமம் செய்து சாலைகள் தற்காலிகமாக சீரமைக்கப் பட்டுள்ளது. மேலும் சேலம் மாநகராட்சி நிதிநிலைமை அபிவிருத்தி அடைந்ததும், நடப்பு நிதியாண்டில் சாக்கடை வசதிகள் தார்ச்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி, சேலம்.

பிரச்சினை :

எங்கள் ஊர் சின்ன நெற்குணம் ஊராட்சி மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது எங்கள் ஊரில் குடிநீருக்கு அவதிபடுகின்றார்கள் என்று எங்கள் யூனியனில் ஒரு கைபம்பு இறக்கினார்கள், அதை இறக்கி மூன்று மாதம் ஆகின்றது, இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தண்ணீருக்காக மக்கள் அவதிபடுவதை நேரில் வந்து பார்வையிட்டாவது எங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க.தாமஸ், சின்ன நெற்குணம் ஊராட்சி,
வின்னனூர் வழி, சிதம்பரம் வட்டம்—608 704.

தீர்வு :

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம் சின்னநெற்குணம் ஊராட்சியில் 1997—98ஆம் 10ஆவது நிதிக்குழு திட்டத்தின்கீழ் சின்னநெற்குணம் சின்னகாலனியில் ஒரு கைப்பம்பு இறக்கப்பட்டுள்ளது. தற்போது வேலை முடிவுற்று மேற்படி கைப்பம்பு நல்ல நிலையில் இயங்கச் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம்,
மேல்புவனகிரி.

பிரச்சினை :

மூக்குப்பீறி கிராமத்திற்கு கடந்த 1—9—97 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ரூ.26.9 இலட்சத்தில் ஒரு இலட்சம் கொள்ளளவு மேல்நிலை நீர்த் தொட்டி ஒன்றும், தென்திருப்போருரை ஆத்தூரான்கால் அருகில் 7.5 குதிரை சக்தி கொண்ட ஒரு போர்வெல்லும், 7 கி.மீ. தொலைவிலிருந்து தண்ணீர் மேல்நிலை நீர்த்தொட்டிக்கு வருகிறது. ஆனால், எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தேதி முதல் இன்றைய தேதி வரைக்கும் குடிநீர் உந்து குழாய்கள் தரமற்றவையாக இருப்பதால் சுமார் ரூ.10,000 வரை செலவு செய்து உடைப்பு மற்றும் அடைப்புகளை நீக்கியுள்ளோம்.

நாளது தேதி வரையில் குடிநீர் உள்ள குழாய்கள் உடைப்பு நின்றபாடில்லை. ஆதலால் மேற்கூறிய பம்பிங் ரூமிலிருந்து சுமார் 7 கி.மீ. வரையில் உள்ள பி.யு.சி. குழாய்(தரமற்ற)களை மாற்றி ஜி.ஐ.

பைப்புகளாக மாற்றி கொடுத்தால் எங்கள் ஊருக்கு கிடைக்கும் குடிநீர் சீராக கிடைக்கும். ஆதலால் TWAD மூலமாக மேற்கூறிய குறைபாடுகளை நீக்க புதிதாக ஜி.ஐ. பைப்புகள் மாற்றித்தர போர்க்கால நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

பொதுமக்கள் சார்பாக
மு.செல்வக்கனி, தலைவர்,
மூக்குப்பீறி சிற்றூராட்சி, மூக்குப்பீறி,
தூத்துக்குடி மாவட்டம்.

தீர்வு :

ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் மூக்குப்பீறி சிற்றூராட்சி குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குடிநீர்த் திட்டத்தில் சுமார் 900 மீட்டர் நீளத்திற்கு பிரதானக்குழாய் ஆரம்பத்தில் 140 மி.மீ. பி.வி.சி. குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. இதில் கப்ளர்கள் சரியாக பொருந்தாமல் இருந்ததால் சோதனை ஓட்டத்தின்போது அடிக்கடி நீர் கசிவு ஏற்பட்டது. நீர்கசிவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு சுமார் 2 மாதங்கள் வாரியத்தால் சோதனை ஓட்டம் மேற்கொண்ட பின்பு 1—9—97 முதல் பராமரிப்பிற்காக ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஒரு வருடமாக இக்குடிநீர்த் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. கடந்த ஒரு வருடத்தில் திட்டத்திற்கு மின்சாரம் 30305 யூனிட் ஏற்பட்டுள்ளது. 9/98இல் மின் இறைபானில் பழுது ஏற்பட்டது. அது சரி செய்யப்பட்டு 29-10-98 முதல் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. நிதிநிலை காரணமாக மனுவில் குறிப்பிட்டுள்ளபடி பிவிசி பைப்புகள் எல்லாவற்றையும் ஜி.ஐ.பைப்புகளாக மாற்ற இயலாது.

மேலும் நடப்பு நிதியாண்டில் ஒய்யான்குடி குடிநீர் திட்டத்திற்கு இத்திட்டத்திலிருந்து குழாய் நீடிப்பு செய்து திட்டம் முடிவடைந்து ஊராட்சி யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் செயல்படுத்தியதால் தற்போது உள்ள மூக்குப்பீறி நீருந்து குழாய்களில் அழுத்தம் குறைந்து



உடைப்புகள் எப்பொழுதேனும் ஏற்படுவதும் நின்றுவிடும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாகப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்,
கிராமக்குடிநீர்த் திட்டக்கோட்டம்,
தூத்துக்குடி.

பிரச்சினை :

எங்கள் ஊர் கடலூர் மாவட்டம், நடுவீரிப்பட்டு. இங்கு குறிஞ்சிப்பாடி — பாலூர் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் இருக்கின்றன. சைக்கிளில் கூட செல்லமுடியாத நிலை இருக்கின்றது. அதிலும் குறிப்பாக இந்த சாலைகளின் நடுவில் உள்ள ஊர்களான பத்திரகோட்டை, நடுவிரப்பட்டு, பாலூர் வரை நெடுகிலும் பள்ளமாக ரோடு உள்ளது. இந்த சாலைகளின் வழியாக தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களும், பேருந்துகளும் செல்கின்றன. கடந்த 4 வருடங்களாகவே நெடுஞ்சாலை துறையினரால் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே ஊர் மக்களாகிய நாங்கள் ‘தமிழரசு’ மூலம் விடிவு காண விழைகின்றோம்.

ஊர் மக்கள் சார்பாக எஸ். சங்கரநாராயணன்
நடுவீரப்பட்டு. கடலூர் மாவட்டம்.

தீர்வு :

குறிஞ்சிப்பாடி — பாலூர் சாலை கி.மீ.0/0-21/3 வரை இக்கோட்ட பராமரிப்பிலுள்ள இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் அவ்வப்போது நிதி நிலைமைக்கேற்ப ஒரு சில கி.மீ . சாலை பகுதிகள் தனிச்சீர் மற்றும் காலமுறை சீரமைப்பு பணியின் கீழ் சீரமைக்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்வாண்டில் கி.மீ. 9/900—11/0 வரையில் ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் தார் புதுப்பித்தல் வேலை செய்யப்படவுள்ளது.

பழுதடைந்துள்ள சாலை பகுதிகள் வரும் நிதியாண்டில் நிதிநிலைமைகேற்ப முன்னுரிமை கொடுத்து சீர்செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா.சண்முகம்,
கோட்டப் பொறியாளர் (நெகிப)
கடலூர்—1.

பிரச்சினை :

நாகை மாவட்டம் சீர்காழி தாலுக்கா புதுத்துறை கிராமம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமமான திருநகரி, நெப்பத்தூர் போன்ற கிராமங்கள் வழியாக சீர்காழி — பெருந்தோட்டம் தடத்தில் இயங்கும் 5டி என்ற அரசு பேருந்து பயணிகள் பயணம் செய்யும் நிலையில் இல்லாது மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் இதைச் சார்ந்த கிராமங்களில் இருந்து செல்லும் பள்ளி, கல்லூரி மற்றும் அனைத்து பொதுமக்கள் மிகவும்

பாதிக்கப்படுகிறார்கள். இந்த தடத்தில் இயங்கும் ஒரே பேருந்தையாவது புதிய பேருந்தாக இயக்கினால் பொதுமக்களின் உயிருக்கு பாதுகாப்பு கிடைத்திடும்.

எனவே, தாங்கள் இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுமக்கள் சார்பாக ஆர்.மகேந்திரன்,
ஊராட்சிமன்ற துணைத்தலைவர்,
புதுத்துறை ஊராட்சி, நாகை மாவட்டம்.

தீர்வு :

சீர்காழி கிளையிலிருந்து, சீர்காழி— பெருந்தோட்டம் (வழி) புதுத்துறை, திருநகரி, நெப்பத்தூர் தடத்தில் கூண்டு முழுவதுமாக புதுப்பித்து கட்டப்பட்ட நல்ல நிலையில் உள்ள டிஎண்49/என்0620 என்ற பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
கும்பகோணம் கோட்டம்—1.

சிறப்பாக செயலாற்றும் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) சிறுதொழில் வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் தமிழக அரசால் 1970ஆம் ஆண்டு நிறுவப்பட்டு கீழ்க்கண்ட பணிகளை ஆற்றி வருகிறது.

தொழிற்பேட்டைகளை அமைத்து, அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய தொழிற்கூடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கி தொழில் முனைவோருக்கு தவணை முறை மற்றும் முழு விலையில் ஒதுக்கீடு செய்து வருகிறது.

அத்தியாவசிய மூலப்பொருட்களான இரும்பு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட், கல்கரி, காகிதம், ஈயம், துத்தநாகம் மற்றும் பாலிதீன் மூலப்பொருட்களை நியாய விலையில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

சிறுதொழில்களுக்கு விற்பனை உதவி திட்டத்தின் கீழ், அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்கு, உற்பத்தி பொருட்களை விற்பதற்கு ஆணைகள் பெற்று தருகிறது.

ஆர்வமுள்ள தொழில் முனைவர்களையும் சிறுதொழில் சங்கங்களையும் ஒருங்கிணைத்து தனியார் தொழில்பேட்டைகளை நிறுவுவதற்கு ஆலோசனை களையும் அனைத்து உதவிகளையும் சிட்கோ செய்து தருகின்றது.

மேற்கூறிய பணிகளை சிறப்பாக செயலாற்றும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1981ஆம் ஆண்டு கிளை அலுவலகம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தொழிற்பேட்டைகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோணம் (அகஸ்தீஸ்வரம் வட்டம்) மற்றும் மார்த்தாண்டம் (விளவங்கோடு வட்டம்) ஆகிய இரண்டு இடங்களில் தொழிற்பேட்டைகள் தமிழக அரசால் 1964ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டு சிட்கோவின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பின் கீழ் 1974முதல் இயங்கி வருகிறது.

கோணம் தொழிற்பேட்டை 20.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் 8 தொழிற்கூடங்கள், 27,மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 10 குறுந்தொழிற் கூடங்கள் அமைக்கப்பெற்று சிறுதொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் மூலமாக சுமார் 500 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றன.

மார்த்தாண்டம் தொழிற்பேட்டை 7.50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் 7 தொழிற்கூடமும் 8 மேம்படுத்தப்பட்ட மனைகளும் தொழில் முனைவோர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கு 4.46 ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்களின் மூலமாக சுமார் 20 தொழிலாளர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூ10 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றன.

மேற்கூறிய தொழிற்பேட்டைகளில் விரிவுபடுத் துவதற்கு இடம் இல்லாமையால் அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் தனியார் பட்டாநிலங்கள் புதிய தொழிற்பேட்டை தொடங்க தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

விற்பனை உதவி செய்தல்

இத்திட்டத்தின் கீழ் 54 சிறுதொழில் நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசு மற்றும்

அரசுத்துறை நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களை வழங்குவதற்காக சிறுதொழில் நிறுவனங்களின் சார்பாக ஒப்பந்தப் புள்ளிகளில் சிட்கோ பங்கு பெற்று சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கல் ஆணைகளை பெற்றுத்தருகிறது. சுமார் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள வழங்கல் ஆணைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் பெறப்பட்டு சிறுதொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ★

ஆண்டு முழுவதும் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்திட
மாநில விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

மாநில விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், சென்னை தரமணியிலுள்ள எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் 22-2-1999 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன், செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு.எஸ். இராஜரெத்தினம், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க. முத்துசாமி, முதலமைச்சர் அலுவலக ஒருங்கிணைப்பாளர் திரு.லெட்சுமிகாந்தன் பாரதி, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரத் தலைவர் திரு.முக்தா வீ.சீனிவாசன், தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மற்றும் திரைப்பட, தொலைக்காட்சி நிறுவன இயக்குநர் திரு.பி.அமிர்தம், சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு.என்.ஜி.சீனிவாசா, அகில இந்திய வானொலியின் சென்னை நிலைய இயக்குநர் திரு.பி.ஆர்.குமார், பத்திரிகைத் தகவல் தொடர்பு கூடுதல் தலைமைச் செய்தி அலுவலர் திரு.டி.ஜி. நல்லமுத்து மற்றும் மத்திய மாநில அரசுகளின் செய்தி -தகவல் தொடர்புத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.**வ.முல்லைவேந்தன்** அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் பின்வருமாறு :

*"தமிழகம், சாதி - சமயப்பிணக்கற்று நல்லிணக்கத்தோடு விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள், இந்த ஆண்டை "தீண்டாமை ஒழிப்பு - மதநல்லிணக்க ஆண்டாகக்" கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதோடு, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்கென ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடும் தந்துள்ளார். அதனடிப்படையில், செய்தி -மக்கள் தொடர்புத்துறை பல்வேறு பிரச்சாரப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறது.*

இதைப்போன்று மத்திய அரசின் பத்திரிகைத் தகவல்-செய்திப்பிரிவு, தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, விளம்பரத்துறை, கண்காட்சிப்பிரிவு, இசை-நாடகப் பிரிவு ஆகியவை தீண்டாமை ஒழிப்புக் குறித்தும், மதநல்லிணக்கத்தை வலியுறுத்தியும் விளம்பரங்களை வெளியிட வேண்டுமெனத் தமிழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்".

- என்று அமைச்சர் உரையில் குறிப்பிட்டார். ★

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தில்
மதுரை வானொலியின் புதிய முயற்சி

மதுரை வானொலியின் திரை இசைக்கிடையே - "குவா, குவா" - எனக் குழந்தையின் அழுகுரல் கேட்கிறது. அடுத்து -

பெண் குரல் : அழும் இந்தக் குரல் என்ன மதம்?

ஆண் குரல் : என்ன மொழி?

பெண் குரல் : என்ன ஜாதி?

இதைத்தொடர்ந்து, பள்ளிக்குழந்தைகளின் குதூகலக் குரலோசையும், சிரிப்பொலியும். மீண்டும் -

பெண் குரல் : இந்தச் சிரிப்பு என்ன மதம்?

ஆண் குரல் : என்ன மொழி?

பெண் குரல் : என்ன ஜாதி?

தொடர்ந்து -

ஆண் குரல் : காஷ்மீரின் பனிமலையும், குமரியின் கடலலையும், வங்கத்தின் பேரெழிலும், அரபிக் கடலலையின் சங்கநாதமும்

பெண் குரல் : மதம் அறியுமா? மொழி அறியுமா? ஜாதி அறியுமா?

ஆண் குரல் : இயற்கையிலும், குழந்தையிலும் வேறுபாட்டைக் காண்பது நியாயமா? நியாயமா?

பெண் குரல் : குருநானக்கின் உபதேச மொழியில், கபீரின் உன்னத வரிகளில், அக்பரின் தீன் இலாஹி, வள்ளலாரின் சன்மார்க்க நெறி

ஆண் குரல் : இப்படிப் பாரதம் தந்த சமத்துவத் தத்துவப் புதையல் எத்தனை? எத்தனை?

'சிந்தையில் ஆயிரம் சேர்ந்து வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே' - பாடல்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி:568926/568927/564906

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP

தமிழரசு

நமது அன்றாட
பழக்கவழக்கங்களால்,
எய்ட்ஸ் வராது.
அதற்கு நீங்களே
ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

இந்த இதழில்

★ மகளிர் சமுதாயத்திற்கு உதவும் உணர்வு பெறுவோம்! 2
– முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து
★ தமிழக திட்ட ஒதுக்கீடு 4
★ பெண் விடுதலை 6
★ கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணிகள் 7
★ சிறுதொழில் வளர்க்கும் சிட்கோ நிறுவனம் 9
★ இல்லாதவர்கள் 13
★ இன்றைய சாதனை நாளைய சரித்திரம் 16
★ மனிதக்கழிவை மனிதன் சுமக்கும் அவலம் அகற்றப்படும் 17
★ தமிழ் இலக்கியத்தில் பொருளியல் கோட்பாடுகள் 35
★ ஒரு மானிட ஏக்கம் 40
★ சிதராலில் சமணர்களின் பல்கலைக்கழகம் 41
★ வாசனைத் திரவியப் பயிர்கள் சாகுபடி ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் 42
★ மகளிருக்கு சிறு வணிகக் கடன் 43
★ 25வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி – 1999 47

திருக்குறள்

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்

பலரும் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்ந்துரைப்பார்கள்.

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு – 2030
மாசி–பங்குனி
மார்ச் 1–15, 1999
மலர் : 30 இதழ் : 17
விலை ரூ.3

முதல் பக்க அட்டையில்

25.2.99 அன்று புதுடில்லியில், மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1999–2000 ஆண்டு திட்ட ஒதுக்கீடு குறித்து கலந்துரையாடல்.

கடைசிப் பக்க அட்டையில்

உலக மகளிர் நாள்: 8–3–99

மகளிர் சமுதாயத்திற்கு உதவும் உணர்வு பெறுவோம்!

- முதலமைச்சர் கலைஞர் வாழ்த்து!

இன்று (8.3.99) உலக மகளிர் நாள். உலகில் ஏறத்தாழ சரிபாதியாக வாழும் பெண்கள் சமுதாயம் எதிர்கொள்ளும் இன்னல்கள் அகன்று - கல்வி, சமூக, பொருளாதார நிலைகளில் பெண்கள் முன்னேற்றம் எய்திடத்தக்க வகையில் கருத்தினைச் செலுத்தி கடமைகள் ஆற்றிடக்கூடிய உணர்வுகளை வளர்க்குமுகத்தான் 'உலக மகளிர் நாள்' ஆண்டுதோறும் மார்ச் திங்கள் 8ஆம் நாளன்று உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை இயக்க மாநாட்டிலும், அதன்பின் நடைபெற்ற பல்வேறு மாநாடுகளிலும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பெண்கள் முன்னேற்றம் குறித்த பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானங்களை நிறைவேற்றி, சமுதாயத்தில் பெண்கள் மேம்பாடு குறித்த விழிப்புணர்வை வளர்த்தனர்.

அப்பெருமக்களின் அடிச்சுவட்டில் இயங்கி வரும் இந்த அரசு, பெண்கள் மேம்பாட்டிற்கெனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருவதுடன், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறுவதன் மூலமே பெண்கள் தக்க பாதுகாப்பையும், முன்னேற்றத்தையும் பெற்றிட இயலும் என்பதை உணர்ந்து, அவற்றிற்கு வழிவகுக்கும் திட்டங்கள் பலவற்றை தொடர்ந்து உருவாக்கியும் செயல்படுத்தியும் வருகிறது.

பெண் காவலர்கள் நியமனத் திட்டம் - அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் - முதல் தலைமுறையாகத் தொழில் தொடங்கும் மகளிருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மானிய உதவி வழங்கும் திட்டம் - தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை வழங்கும் திட்டம் - 1000 மகளிருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் மகளிர் உயிர் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் திட்டம் - சிறு வணிக மகளிருக்குச் சேமிப்புடன் கூடிய கடன் வழங்குத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களை உருவாக்கியும் நடைமுறைப்படுத்தியும் பெண்களின் வேலை வாய்ப்புகளுக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி வகுத்து வருகிறது இந்த அரசு.

இவை மட்டுமல்லாமல், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியமை - பல்வேறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் ஏழை எளிய மகளிருக்கு நிதியுதவி வழங்கி வருகின்றமை - குறிப்பாக 1989இல் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் மூதாட்டியார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 1996இல் இந்த அரசு அமைந்தபின், 128 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 1 இலட்சத்து 28 ஆயிரம் மகளிருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் திருமண நிதியுதவி வழங்கியமை - 1996ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் 33 விழுக்காடு இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து, மாநகராட்சிகளில் 2 பெண் மேயர்கள் உட்பட ஏறத்தாழ 40 ஆயிரம் மகளிர் உள்ளாட்சி அமைப்புகளில் பங்குபெறச் செய்தமை முதலாகப் பல்வேறு சீரிய திட்டங்கள் நிறைவேற்றப்படுவதன் மூலம் தமிழகப் பெண்கள் சமுதாயம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் ஏற்றம் பெற்று வருகின்றது.

இந்த நிலை என்றும் தொடர - தமிழக மகளிர் சமுதாயம் தொடர்ந்து முன்னேறிட - மகளிர் சமுதாயத்திற்கு உதவும் உணர்வுகள் மாநில முழுதும் தழைத்துச் செழித்திட இந்த உலக மகளிர் நாளில் உயரிய சிந்தனைகள் முகிழ்க்கட்டும்! இந்நன்னாளில் மகளிர் சமுதாயத்திற்கு என் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

உலக மகளிர் நாளை முன்னிட்டு 8.3.99 அன்று
முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
விடுத்த வாழ்த்துச் செய்தி .

தமிழக திட்ட ஒதுக்கீடு

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 25.2.99 அன்று புதுடில்லியில் மத்திய திட்டக்குழு துணைத்தலைவர் திரு. கே.சி. பந்த் அவர்களுடனும் மத்திய திட்டக்குழு உறுப்பினர்களுடனும் தமிழகத் திட்டங்கள் குறித்து விவாதித்தார். மத்திய திட்டக்குழுவுடன் முதலமைச்சர் நடத்திய கலந்துரையாடலில் மாநில தலைமைச் செயலர், நிதித்துறை செயலர், முதலமைச்சரின் செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை செயலர் மற்றும் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் – செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். நீண்ட கலந்துரையாடலுக்குப் பின் தமிழக திட்ட ஒதுக்கீடு குறித்து இறுதி முடிவு காணப்பட்டது. அதன்படி 1999 – 2000 ஆண்டு திட்ட ஒதுக்கீடு ரூ.5,250 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு ஆண்டு திட்ட ஒதுக்கீடான ரூ.4,500 கோடியை விட ரூ.750 கோடி அதிகமாகும்.

மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவர் திரு.கே.சி.பந்த் அவர்கள் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதை வெகுவாகப் பாராட்டினார். தொழில் வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டுமானப் பணிகளிலும், கல்வி, மருத்துவம் மற்றும் சமூக நலத் துறைகளிலும் மாநில அரசு அதிகக் கவனம் செலுத்தி வருவதையும் புகழ்ந்துரைத்தார். வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறையில் மாநில அரசு மேற்கொண்டு வரும் முக்கியமான முயற்சிகளையும், தமிழக மக்கள் பயனுறும் வகையில் இணையத்தில் (Internet) தமிழின் பயன்பாட்டை மேலும் அதிகப்படுத்தும் வகையில் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் மத்திய திட்டக்குழுவின் கவனத்திற்கு முதலமைச்சர் கொண்டுவந்தார்.

மேலும் இந்தச் சந்திப்பின்போது முதலமைச்சர் கலைஞர் மாநிலத்தின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட சில முக்கியமான கோரிக்கைகளை முன் வைத்தார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் திட்டக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரை

மாண்புமிகு திட்டக்குழுவின் துணைத்தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளே!

முதலாவதாக இங்குக் குழுமியிருக்கும் எல்லோருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாம் ஆண்டில் தமிழ்நாடு, மாநிலத்தின் நிகர பொருளாதார உற்பத்தியில் (Net State Domestic Product) 6 விழுக்காடு வளர்ச்சியை அடைந்துள்ளது. நடப்பு ஆண்டிலும் வளர்ச்சி விகிதம் இதே அளவு இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநில அரசு திட்ட வளர்ச்சி இலக்கினை முழுமையாக எய்திட மைய அரசு போதுமான அளவு திட்ட நிதியினை ஒதுக்கீடு செய்யும் என மாநில அரசு எதிர்பார்க்கிறது.

அண்மையில் நடந்து முடிந்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் மாண்புமிகு திட்டக்குழுவின் துணைத் தலைவர் தெரிவித்ததுபோல, தமிழ்நாடு தனது நிதியாதாரத்தை மிகத் திறமையாக நிர்வகித்து, அங்கீகரிக்கப்பட்ட திட்ட இலக்கினைத் தொடர்ந்து எய்தி வருகிறது. அதேபோல நடப்பு ஆண்டின் திட்ட இலக்கான ரூ.4,500 கோடியையும் எய்திடும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

ரூ.5,200 கோடி ரூபாயை 1999–2000 ஆண்டிற்கான திட்ட இலக்காக மாநில அரசு நிர்ணயித்துள்ளது. இத்திட்ட இலக்கை முழுமையாக எய்திட, தேவையான நிதி ஆதாரங்களை மாநில அரசால் திரட்டிட இயலும்.

திட்டத்தின் ஒவ்வொரு பிரிவிலும் மாநில அரசு நிர்ணயித்துள்ள வளர்ச்சி இலக்கு மைய திட்டக் குழுவின் திட்ட இலக்கினை ஒத்துள்ளது. திட்ட ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு பொருளாதார கட்டமைப்பை மேம்படுத்திடவும், 35 விழுக்காடு சமூகத் துறையிலும், எஞ்சிய 25 விழுக்காடு வேளாண்மை, கிராமப்புற வளர்ச்சி போன்ற துறைகளிலும் செலவிடப்படுகிறது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் மாநில அரசு முக்கிய கவனம் செலுத்துகிறது. குடிநீர் விநியோகம், கிராமச் சாலைகள், கல்வி, சுகாதாரம், சத்துணவு போன்ற துறைகளில் மாநில அரசு திட்ட இலக்கினைத் தொடர்ந்து மிஞ்சி வருகிறது. இத்துறைகளில் தொடர்ந்து நாம் அடைந்து வரும் ஒட்டுமொத்த வளர்ச்சி, மாநிலத்தின் சாதகமான சமூகப் – பொருளாதார வளர்ச்சி குறியீடுகளில் பிரதிபலிக்கிறது.

சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் தகவல் தொழில்நுட்பத்திற்கு மாநில அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. மைய அரசு அமைக்க உத்தேசித்துள்ள தகவல் உயர் தொழில்நுட்ப மையங்களின் வரிசையில் சென்னையையும் சேர்க்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையை

ஏற்றுக் கொண்டதற்காக மைய திட்டக் குழுவிற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் சென்னையில் சர்வதேச தமிழ் இணைய மாநாடு ஒன்றை நடத்தி, அம்மாநாட்டில் கணினியில் பயன்படத்தக்க வகையில் தமிழ் எழுத்து வரிவடிவங்களும், கணினி தமிழ் விசைப் பலகையும் தரப்படுத்தப்பட்டன. இது தகவல் தொழில்நுட்பத்தில் தமிழைப் பெரிய அளவில் பயன்படுத்துவதற்கு உதவும். இங்கிலாந்து நாட்டின் 'வேர்ல்டு டெல்' (World Tel) நிறுவனத்துடன் இணைந்து 13,000 சமுதாய இணைய மையங்களை மாநிலம் முழுவதும் அமைக்க உத்தேசித்துள்ளோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தொடர்புள்ள பின்வரும் முக்கிய பொருட்களைப் பற்றி மைய திட்டக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் திட்டக்குழுவின் பரிந்துரையையும் நாடுகிறேன்.

சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் விரைவில் எடுத்துக்கொள்ளப் படுமென்றும், 3 அல்லது 4 ஆண்டுக் காலத்திற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஒன்பதாவது ஐந்தாண்டு கால திட்டத்தில் சேர்த்து அதற்குத் தேவையான நிதி வசதியை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு திட்டக் குழுத் துணைத்தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1997–98 வரை வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக தமிழகத்திற்கு மத்திய ஒதுக்கீடு 7.062 விழுக்காடாக இருந்தது. அது, 1998–99இல் 4.987 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. இப்படி குறைக்கப்பட்டமைக்காக மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்தது. இப்பிரச்சினை தேசிய வளர்ச்சிக் குழுவின் வல்லுநர் குழுவின் முடிவிற்கு விடப்பட்டுள்ளது. அவ்வல்லுநர் குழு இப்பிரச்சினை குறித்து ஒரு முடிவு எடுக்கும்வரை, தமிழ்நாட்டிற்குரிய ஒதுக்கீடு 7.062 விழுக்காடாகவே இருக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

தமிழ்நாடு எந்த ஒரு பெரிய பாசனத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. ஆதலால், விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்பாட்டுத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் உதவியைப் பெற முடியவில்லை; எனவே, Accelerated Irrigation Benefit Programme வழிகாட்டு நெறிமுறைகளில் நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்களையும் சேர்த்திடுமாறு திட்டக்குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாநிலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 16 மாவட்டங்களில் 134 ஒன்றியங்களின் வழியாகச் செல்கின்றன. கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் ஏறத்தாழ 32,000 சதுர மீட்டர் பகுதிகள் இயற்கைச் சூழல் மாசுபடும் நிலையில் உள்ளன. மாநில அரசு ஒன்பதாவது திட்டக் காலத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்திட திட்டமிட்டுள்ளது. ஒன்பதாவது திட்டத்தின் பணிக்குழு விவாதங்களின்போதும் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளை மேம்படுத்திட மத்திய அரசு இத்திட்டத்தை ஒன்பதாவது திட்டத்தில் சேர்த்து தனி ஒதுக்கீடாக நிதி வழங்கி நிறைவேற்றிட முன்வரவேண்டும் என வலியுறுத்த விரும்புகிறேன்.

சென்னையில் உள்ள கூவம், அடையாறு, பக்கிம்ஹாம், ஓட்டேரி நல்லா போன்ற நீர்வழிகளை சுத்தம் செய்வதற்காக தமிழக அரசு செயற்படுத்தவுள்ள திட்டத்தில் ஒரு பகுதியாக அவற்றின் கரைகளில் உள்ள குடிசைகளை வேறு இடங்களில் மாற்றி அமைப்பதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

மாநிலங்கள் தன் விரிவாக்கத் திட்டங்களுக்கான மூலதனங்களை பெறுவதற்கு இடையூறாக இரண்டு பிரச்சினைகள் உள்ளன. முதலாவது, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி மாநில அரசு ஊழியர்களின் ஊதியங்களை உயர்த்தியதன் மூலம் மாநிலங்களுக்கு ஏற்பட்ட கூடுதல் பணச்சுமை பற்றியதாகும். இதனை நிவர்த்தி செய்ய இந்த கூடுதல் பணச்சுமையில் 50 விழுக்காடு தொகையாவது மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிப்பது இன்றியமையாததாகும். இரண்டாவதாக, சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி வீதத்தினை மத்திய அரசு தற்போது குறைத்து அறிவித்துள்ளது. மாநிலங்களுக்கு இந்த சிறுசேமிப்புத் திட்டங்களின் மூலம் நிதி திரட்டுவதற்கு ஊறு விளைவிக்கும் வகையில் அமைந்துள்ளது. சிறுசேமிப்பு திட்டங்களுக்கான வட்டி வீதங்களை முன்பு இருந்த வீதத்திற்கே திரும்ப மாற்ற வேண்டி மத்திய அரசிடம் திட்டக்குழு பரிந்துரைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு திட்டக்குழு துணைத் தலைவர் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தீர்க்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறும் வகையிலும், புதிய வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும், வறுமை ஒழிப்பு, மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தல் ஆகியவற்றை அடைவதிலும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு முயற்சிகளுக்கும் திட்டக்குழு அளித்து வரும் ஆதரவைப் பாராட்டுகிறேன்; இந்த ஆதரவு தொடர வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

★ ★ ★

தமிழகத்தில் உள்ள பாசன வாய்க்கால்களையும் தூர் வாருவதற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யுமாறு முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். இதைப்பற்றி முதலமைச்சர் சொன்னபோது திட்டக்குழு துணைத் தலைவர் குறுக்கிட்டு இந்தப் பணியை கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொண்டது பற்றி மேலும் கேட்டறிந்ததோடு அந்தப் பணியை நிறைவேற்றியதற்காக தன்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டார்.

பெண் விடுதலை

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டில் எம்மிடங் காட்ட வந்தார், அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி!

நல்ல விலை கொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார்.

கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.

பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளப்பில்லை காணென்று கும்மியடி!

காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!

– பாரதியார்

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணிகள்

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்
திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் நேரடி ஆய்வு

கன்னியாகுமரியில் நடுக்கடலில் அமைக்கப்பட்டு வரும் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார். தொடர்ந்து திருவள்ளுவர் சிலை சுற்றுச் சுவர் அமைக்கும் பணியைத் தொடங்கி வைத்தார்.

அவருடன் செய்தி – மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.முத்துசாமி, குமரி மாவட்ட ஆட்சியர் திரு. பாண்டியன், துணை இயக்குநர்கள் திரு.பரதன், திரு.அண்ணாமலை, ஆகியோர் உடன் சென்றனர்.

தொடர்ந்து அமைச்சர் குமரி அரசு விருந்தினர் மாளிகையில் தென் மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரிகளின் களப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அதன்பிறகு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

"கன்னியாகுமரி கடலில் உள்ள பாறையில் 133 அடி திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணியில் 38 அடி ஆதார பீடம் முடிவுற்று உள்ளது. தொடர்ந்து சிலை அமைப்பு பணி நடந்து வருகிறது. இதில் 5 அடுக்குகள் முடிவுற்று 6ஆவது அடுக்கு பணி நடந்து வருகிறது. இதுவரை சிலை மட்டும் 30 அடி உயர்ந்து உள்ளது. மொத்தத்தில் ஆதார பீடமும் சேர்ந்து 68 அடி உயர்ந்து உள்ளது.

சிலைப் பணியில் ஒவ்வொரு அடுக்கும் 5 அடி உயரம் கொண்டதாகும். ஒவ்வொரு மாதமும் 10 அடி உயரம் சிலைப் பணி நடந்து வருகிறது. சிலையின்



மேல்பகுதி செல்லச் செல்லக் கற்கள் எண்ணிக்கை குறைவதால் சிலை பணியும் வேகமாக நடைபெற்று ஆகஸ்டு மாதத்துக்குள் முடிவுற்று விடும். சிலைப்பணி நடக்கும் போதே சுற்றுச்சுவர் அமைக்கும் பணியும் சிலையின் கீழ் இருந்து சிலையின் மேல் உச்சி தெரியும் வரையிலான அதிக சக்தி கொண்ட மின்விளக்கு அமைக்கும் பணியும் நடந்து வரும்.

முதலில் சிலை பணி முடிவுற்றதும் பார்வையாளர்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். பயணிகள் படகு மூலம் அழைத்து செல்லப்படுவார்கள்.



சிலைப் பணிக்கு மட்டும் ரூ.5 கோடியே 70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. திரு. கணபதி ஸ்தபதி மேற்பார்வையில் நடைபெறும் சிலை அமைப்பு பணிக்கு மட்டும் ரூ.4 கோடியே 63 இலட்சத்து 40 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. கப்பலோடை மற்றும் சாரம் அமைத்தல், பாறையைச் சமப்படுத்துதல் பணிக்கு மட்டும் ரூ.1 கோடியே 42 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

காமராஜர் நினைவு மண்டபம்

கன்னியாகுமரியில் காமராஜர் நினைவு மண்டபம் அமைக்க மத்திய அரசு அனுமதி கிடைக்கவில்லை. மத்திய அரசு அனுமதி கிடைக்கப் பெற்றதும் மணிமண்டபம் அமைக்கப்படும்.

தீண்டாமை ஒழிப்புக்காக செய்தி மற்றும் விளம்பரத்துறை மூலம் சினிமாப் படம் தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த படம் அந்தந்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் கிராமம் தோறும் மக்களுக்குக் காட்டப்படும்.

கடலூர் மற்றும் விழுப்புரத்தில் வானொலி நிலையம் ஏற்படுத்தவும் மத்திய அரசைக் கேட்டுள்ளோம். அனுமதி கிடைத்ததும் வானொலி நிலையம் அமைக்கப்படும்.

சினிமா கேளிக்கை வரி மூலம் அரசுக்கு ரூ.100 கோடி வருமானம் கிடைத்துள்ளது. கேபிள் டி.வி.யை வரைமுறைப்படுத்த அனைத்து மாநில அரசுகளும் மத்திய அரசைக் கேட்டுள்ளன.



கன்னியாகுமரியில் பொருட்காட்சி

அரசு பொருட்காட்சிகள் மூலம் 7 கோடியே 18 இலட்சம் ரூபாய் அரசுக்கு இலாபம் கிடைத்து உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை நடத்தப்பட்ட பொருட்காட்சி மூலம் அதிக அளவு இலாபம் கிடைத்துள்ளது. கன்னியாகுமரியிலும் பொருட்காட்சி நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்".

– இவ்வாறு கூறினார். ★

சிறுதொழில் வளர்க்கும் சிட்கோ நிறுவனம்

சிறுதொழில்களை தமிழகத்தில் பெருக்கவும் மற்றும் மாநிலத்தின் பிற்படுத்தப்பட்ட மற்றும் வளர்ச்சி அடையா பகுதிகளில் சிறுதொழில்கள் பரவலாக்கப்படுவதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, தமிழக அரசின் நிறுவனமான 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ)' நிறுவப்பட்டது. இந்நோக்கங்களின் அடிப்படையில் 'சிட்கோ' **14.10.1970** முதல் சிறு தொழில்நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பணியாற்றி வருகிறது.

நாட்டில் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், தொழில்வல்லுநர்கள், படித்த வேலையில்லா இளைஞர்கள் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அவர்கள் பயனடையும் பொருட்டும், 'சிட்கோ' பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும் சிறு தொழில்கள் வளர்ச்சியால் நேரிடையான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகள் ஒவ்வோர் ஆண்டும் நமது மாநிலத்தில் உருவாகிறது. இதனால் மனிதவள ஆதாரங்களை கண்டறிந்து அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்த ஏதுவாகிறது. மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி மேம்பாடடைய 'சிட்கோ' சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் வளர்ச்சிக்கு துணை புரிந்து தனது பங்கை செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

சிட்கோவின் முக்கிய நடவடிக்கைகள்

தொழிற்பேட்டைகளை உருவாக்கி, மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குதல், தொழிற்கூடங்கள் கட்டுதல் மற்றும் உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல். அத்துடன் அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டுதல். 'சிட்கோ' உதவியுடன் தனியார் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல், சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டு விற்பனை உதவித் திட்டம் (MAS), சிறுதொழில்களுக்கான சிட்கோவின் ஏற்றுமதி உதவித் திட்டம், பில் டிஸ்கவுண்டிங் உதவித் திட்டம், தொழிற்பேட்டைகளில் தொழில்கூடங்கள் மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

வளர்ச்சிக்கான உள்ளாற்றல் கொண்ட மையங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்குவதும், தொழில் முனைவோரின் தேவைக்கேற்ப தொழிற்கூடங்களை கட்டுவதும் சிட்கோவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். குடிநீர் வசதி, சாலை வசதி, கழிவுநீர்க்கான இணைப்புகள், மின்விளக்கு வசதி மற்றும் இது போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கி தொழிற்பேட்டைகளில் 'சிட்கோ' மேம்படுத்தப்பட்ட மனைகளை அமைக்கின்றது. தொழில் முனைவோர் தொழில் சார்ந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக தேவைகளை கருத்தில் கொண்டு இத்தகை தொழிற்கூடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் மாநிலத்தின் அனைத்துப் பகுதியிலும் பரவலாக உருவாக்கப்படுகிறது. இது 'சிட்கோ'வின் நடவடிக்கைகளில் முக்கிய ஒன்றாகும். மாநிலத்தில் பரந்து விரிந்திருக்கும் 77 தொழிற்பேட்டைகள் சிட்கோவினால் பராமரிக்கப்படுகின்றன. இவற்றில் 4 தனியார் தொழிற்பேட்டைகளும் அடங்கும். 'சிட்கோ'வின் தொழிற் பேட்டைகளில் சிறு தொழில்கள் மற்றும் குறுந்தொழில்களுக்கு உகந்த தொழிற் கூடங்களும், மேம்படுத்தப் பட்ட மனைகளும் உருவாக்கப்பட்டு சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதுகாறும் சுமார் **4,250** தொழில்கூடங்களும் **1840** குறுந்தொழில்கூடங்களும் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் கட்டப்பட்டுள்ளன.

ஒதுக்கீட்டுக்காக தயார் நிலையில் இருக்கும் தொழிற்கூடம் மற்றும் மனை விவரங்களை செய்தித் தாள்களில் 'சிட்கோ' விளம்பரம் செய்யும். விளம்பரத்தின்படி தொழில் கூடம்/மனை வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் சிட்கோ தலைமை அலுவலகத்திலோ அல்லது சிட்கோவின் கிளை அலுவலகங்களிலோ ஏற்றுக்கொள்ளப்படும்.

தொழிற்கூடம் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான விண்ணப்பங்கள் அந்தந்த தொழிற்பேட்டைகளில் மற்றும் மாவட்டத் தலைநகரில் உள்ள கிளை அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி விண்ணப்பங்கள் ஆய்வு செய்த பிறகு தலைமை அலுவலகத்தில் "ஒதுக்கீட்டு குழுவின்" பரிந்துரையின் பேரில் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். குறிப்பாக ஒதுக்கீட்டுக்குழு சமர்ப்பிக்கப்பட்ட தொழில் திட்டங்களை, ஆய்வு செய்து, தொழில் முனைவோர்களின் நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு சிறுதொழில் அமைக்க தொழிற்கூடம்/ மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் ஒதுக்கீடு கோரும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு தகுதியான தொழில் முனைவோர்களுக்கு தொழிற் கூடங்கள்/மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

மகளிர் தொழில் முனைவோருக்கு 30% வரையிலும், முன்னாள் இராணுவ வீரர்களுக்கு 10% வரையிலும், ஒதுக்கீடுகளில் முன்னுரிமை வழங்கப்படும்.

அதிக தேவை உள்ள பகுதிகளில் தொழிற்கூடங்களில் முழுத் தொகை செலுத்தும் வகையிலும், கிராக்கி இல்லாத இடங்களில் தொழிற்கூடங்கள் தவணை முறைத் திட்டத்திலும் வழங்கப்படுகின்றன.

சிட்கோ தொழிற்பேட்டைகளில் ஆரம்பிக்கும் தொழில்களுக்கு 15% மாநில முதலீட்டு மான்யமும், விற்பனை வரியை வட்டியில்லாமல் தள்ளிக்கட்டும் (ஐந்து வருடம் கழித்து) சலுகையும் அவ்வப்போது உள்ள அரசு ஆணைப்படி வழங்கப்படும்.

சுய மின் உற்பத்தித் திட்டம்

தற்போது ஏற்படும் மின் தடைகளை சமாளிக்கவும், தடையில்லா மின்சாரம் தொழிற்பேட்டைகளில் வழங்கிடவும் முக்கியமான மின் தேவை அதிகம் உள்ள தொழிற்பேட்டைகளில் "Captive Power Generation Plant" அமைக்கும் திட்டத்தை 'சிட்கோ' உருவாக்கி உள்ளது. இத்திட்டம் தொழிற் பேட்டையிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு தேவைப்படும் மின் சக்தியை அவர்களே சொந்தமாக உற்பத்தி செய்து கொள்ளும் திட்டமாகும். 'சிட்கோ தொழிற்பேட்டைகளில் உள்ள நிறுவனங்கள் இந்த Captive Power Generation Plant" கம்பெனியில் பங்குதாரர் களாக இருந்து, அந்தக் கம்பெனியை நடத்துவர். 'சிட்கோ' இதில் சிறிய அளவில் (Nominal Share) பங்கேற்று, இந்த "சுய மின் உற்பத்தித் திட்டத்தை" ஏற்று நடத்தும் கம்பெனிகளை தொழிற்பேட்டைகளில் நிறுவனம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யும்.



மூலப்பொருட்கள் பகிர்ந்து வழங்குதல்

சிறு தொழில்கள் பிரிவின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 'சிட்கோ' சில முக்கிய மூலப் பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு கல்கரி மற்றும் மெழுகு போன்றவைகளை பகிர்ந்தளிக்கிறது. மேற்கூறிய மூலப் பொருட்கள் தவிர ஈயம், துத்தநாகம், ஐபிசிஎல் பிளாஸ்டிக் மூலப் பொருள் பொட்டாசியம் குளோரேட் போன்ற மற்ற மூலப் பொருட்களையும் 'சிட்கோ' கையாளுகிறது. தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனத்தின் தயாரிப்பான காகிதத்தை விநியோகிக்கும், வழிப்படுத்தும் முகமையாகவும் 'சிட்கோ' செயல்படுகிறது.

மூலப் பொருட்கள் உதவிக்கான நடைமுறைகள்

தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் நிறுவனங்கள் தங்களது சிறுதொழில் சான்றிதழை காண்பித்து, சிட்கோவின் மூலப் பொருட்கள் கிடங்கிலிருந்து தேவையான இரும்பு மற்றும் எஃகு சார்ந்த பொருட்களை விலை கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் சிறு தொழில் நிறுவனங்கள் தங்களது வங்கியின் காப்புறுதியை கொடுத்து கடன் பேரிலும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். இந்திய எஃகு நிறுவனம் டாடா இரும்பு எஃகு நிறுவனம், விசாகப்பட்டினம் எஃகு நிறுவனம் மற்றும் இந்திய இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் போன்ற இரும்பு எஃகு உற்பத்தியாளர்களிடமிருந்து இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் மொத்த விலையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. சென்னை சுத்திகரிப்பு நிறுவனத்திலிருந்து மொத்த விலையில் பெறப்படும் மெழுகு மூலப் பொருட்களை சிறுதொழில் நிறுவனங்கள் தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரிட மிருந்துபெறப்பட்டஒதுக்கீட்டு அட்டையின் பேரில் விலை



கொடுத்து 'சிட்கோ' மூலப் பொருட்கள் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கோயம்புத்தூர் மூலப் பொருள் கிடங்கிலிருந்து கல்கரி (Coke)யை தாராளமாக விலை கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். இந்துஸ்தான் துத்தநாகம் (Zinc) நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் துத்தநாகம் ஈயம் (Lead) போன்ற பொருட்கள் அம்பத்தூர் மூலப் பொருட்கள் கிடங்கிலிருந்து விநியோகம் செய்யப்படுகிறது. கிண்டி, கோவில்பட்டி, சாத்தூர் மூலப் பொருட்கள் கிடங்குகளிலிருந்து பொட்டாசியம் குளோரேட் விநியோகம் செய்யப்படுகிறது.

விற்பனை உதவித் திட்டம்

சிறுதொழில்கள் வெற்றிகரமாக நடப்பதற்கு முக்கிய பகுதியானது 'விற்பனை' பகுதியாகும். போட்டிகரமான விலையில் சிறுதொழில்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவும் வகையில் 'சிட்கோ' ஏற்படுத்திய திட்டம் 'விற்பனை உதவித் திட்டம்' கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் பொருட்கள் கிடைக்க 'சிட்கோ' வகை செய்கிறது.

மேலும் அரசு நிறுவனங்கள் அழைக்கும் ஒப்பந்தப் புள்ளிகளில் சிறுதொழில்கள் பங்கேற்கும் வாய்ப்பினை உருவாக்கித் தருவதும் இந்த 'விற்பனை உதவித் திட்டம்' அரசு நிறுவனங்களுக்கும் சிறுதொழில்களுக்கும் இடையே பாலமாக இருந்து தொடர் நடவடிக்கைகளை 'சிட்கோ' செயல் திறமுடன் நடத்தி வருகிறது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 3050 சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன. இந்த நடப்பு ஆண்டில் திரவவியல் உருளை மற்றும் திறப்பான்கள், மின் தடையில்லா தரும் மின் வசதி பொருட்கள், ஆய்வுக்கூட/ மருத்துவமனை மற்றும் வேதியல் தயாரிப்பு கருவிகள், ரப்பர், வல்கனைசிங் சிமெண்ட் போன்ற சிறுதொழில் நிறுவனங்கள் 'சிட்கோ' விற்பனை உதவித் திட்டத்தில் பதிவு செய்துள்ளன.

விற்பனை உதவித் திட்ட நடைமுறைகள்

சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் சிறுதொழில் நிறுவனங்கள், சிட்கோவின் எந்தவொரு கிளை அலுவலகத்திலும், நிரந்தர சிறுதொழில் நிறுவன சான்றிதழ், கட்டணத் தொகை ரூ.100 மற்றும் தேவையான சான்றிதழ்களை சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ளலாம். சிட்கோ கிளை மேலாளர் பதிவுக்கு விண்ணப்பித்த சிறுதொழில் நிறுவனங்களை ஆய்வு செய்து, விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பதிவு செய்து, பதிவுச்சான்றிதழை அளிப்பார்.

சிறுதொழில்களுக்கான சிட்கோவின் ஏற்றுமதி உதவி

தமிழகத்தில் எண்ணற்ற சிறுதொழிற்கூடங்கள், உலகத்தரமும் தகுதியும் வாய்ந்த ஏற்றுமதிக்குரிய பொருட்களை உற்பத்தி செய்கின்றன. ஏற்கெனவே தோல் பொருட்கள், துணி வகைகள், வாகன உதிரிப் பொருட்கள், மென்பொருள் மற்றும் சேவைகள் போன்றவற்றை பல சிறுதொழிற் கூடங்கள் ஏற்றுமதி செய்து வருகின்றன. சர்வதேச தொடர்புகளால் சில சிறு தொழிற்கூடங்கள் ஏற்றுமதி சந்தையில் கால் பதிய முடிந்தாலும் அவை போன்ற சிறந்த ஏற்றுமதி தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்து சர்வதேச சந்தைக்கு வழங்கக்கூடிய ஆற்றலுள்ள மேலும் பல சிறுதொழிற் கூடங்களால் அவ்வாறு செய்ய இயலவில்லை. ஏற்றுமதி சந்தையைப் பற்றிய விழிப்பு நிலைஇன்மை, வெளிநாடுகளில் வாங்கும் ஆற்றல் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளாமை, அதற்கான வழி வகைகள் இன்மை, சர்வதேச சந்தைக்கு அறிமுகமின்மை, அரசுக்கொள்கைகள், ஊக்கங்கள் மற்றும் ஏற்றுமதி வழிமுறைகளைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளும் வழியின்மை ஆகிய பல காரணங்களால் அவ்வாறு செய்ய இயலவில்லை. இக்குறைகளை கடந்து முயற்சித்தாலும், செலவினங்கள் உயர்ந்து அம்முயற்சிதனை லாபமற்றதாக்கி போட்டியிட தகுதியற்றதாக்கி விடுகிறது.

இந்திய ஏற்றுமதி நிலவரத்தில் சிறுதொழிற்பொருட்களின் பங்கு 55 சதவீதத்திற்கும் மேலாகும். இது இந்திய சிறுதொழிற்பொருட்கள் உலகத் தரத்தினையும், போட்டியையும் சந்திக்கும் தகுதி யுடையதையேகுறிப்பிடுகிறது.உலக சந்தையில் நுழைய ஏராளமான வாய்ப்புகள் இந்திய சிறுதொழிற் பொருட்களுக்கு இருப்பினும், அத்தகையத் தொழிற்கூடங்களின் முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவு தற்போது தேவைப்படுகிறது. உலக மயமாக்கம் மற்றும் தாராளமயமாக்கம்

இத்தருணத்தில் இத்தகைய சிறுதொழிற்கூடங்களுக்கு தகவல் தொடர்பு வசதிகள் போன்றவைகளை, உலக சந்தைக்குள் நுழைவதற்காக அமைத்துக் கொடுப்பது இன்றியமையாததாகிறது.

தமிழகத்தில் சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு சேவை செய்து வரும் சிட்கோ தற்போது டான்ஸ்டியா–எப்.என்.எப் (TANSTIA-FNF) சேவை மையத்துடன் இணைந்து சிறுதொழிற்கூடங்களுக்கான ஏற்றுமதி உதவித் திட்டத்தை இன்டர்நெட் மூலம் துவக்கியுள்ளது.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பினை அறிய உதவி செய்வதே ஆகும். இதன் செயல்கள் :

“இன்டர்நெட்' வசதியில் ஒவ்வொரு சிறுதொழில் நிறுவனத்தினையும் நிலை நிறுத்துதல்.



சிறுதொழில் நிறுவனங்களின் முழுவிவரங்களும் மற்றும் அவை தயாரிக்கும் பொருட்களின் விவரங்களும் 'வெப்' (WEB) வசதியில் நிலை நிறுத்தி உலக சந்தைக்கு கிடைக்க வழி செய்தல்.

உறுப்பினர் நிறுவனங்களுக்கு மின்னியல் தபால் சேவை மூலம் அயல் நாட்டின் உள்ள வாங்கும் திறன் கொண்ட வர்த்தகர்களுடன் தகவல் பரிமாற்றம் செய்ய உதவுதல்.

'வெப்' இடத்தில் (WEBSITE) பார்வையிடும் தகுதியான வெளிநாட்டு வர்த்தகர்களுக்கும் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் இடையே தொடர்பு கொள்ள உதவுதல்.

ஏற்றுமதி ஆணைகளை தகவல் தொடர்பு வழியாக பெற வழி செய்தல்.

சுங்கத்துறை (CUSTOMS) மற்றும் ரிசர்வ் வங்கியின் ஏற்றுமதி தொடர்பான கட்டுப்பாடு விதிகளை நிறைவேற்றும் வழி அறிய உதவி செய்தல்.

ஏற்றுமதி அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்குதல்.

ஏற்றுமதி வணிகத்திற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதோடு, உலக வர்த்தகப் பொருட்காட்சிகளில் கலந்துக் கொள்ள உதவி செய்தல்.

உறுப்பினர் நிறுவனங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை வணிக வங்கிகள் மற்றும் வளர்ச்சி நிதி நிறுவனங்களிடமிருந்து பெறுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

இத்திட்டத்தின் கீழ் உதவிகள் நியாயமான கட்டணத்திற்குச் சிறுதொழிற்கூடங்களுக்கு வழங்கப்படும்.

பில் டிஸ்கவுண்டிங் உதவி

சிறிய மற்றும் குறுந்தொழில்கள், அரசு நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களை விநியோகம் செய்த பின் அந்த பொருட்களுக்கான விலைப்பட்டியல் தொகையை அந்தந்த நிறுவனங்களிடமிருந்து பெற தாமதம் ஏற்படுவதால் 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை பில் டிஸ்கவுண்டிங் உதவி மூலம் சிட்கோ நிறுவனமே அந்த தொகையை சிறுதொழில் நிறுவனங்களுக்கு கடனாக கொடுத்து உதவுகிறது.

தொழிற்திறமை வளர்ப்பு மையம்

சிறிய மற்றும் குறுந்தொழில்களுக்கு தேவையான தொழிலாளர்களின் திறமைகளை வளர்க்க தேவையான பயிற்சிகளை அளிக்க சிட்கோ தொழிற்பேட்டைகளில், தொழிற்திறமை வளர்ப்பு மையங்களை உருவாக்க சிட்கோ முயற்சிகளை எடுத்து வருகிறது.

வழிகாட்டி மையம்

புதிதாக தொழில் தொடங்க முனைவோர்களுக்கு உதவும் வகையில் வழிகாட்டி மையம் ஒன்று சிட்கோ ஏற்படுத்தியிருக்கிறது. இதன் மூலம் தொழில் முனைவோர்களுக்கு தேவையான சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய அனுமதிகளை நியாயமான கட்டணத்தில் பெற்றுத் தருகிறது.

இதுபோன்ற சீரிய செயல்களால் 'சிட்கோ' நிறுவனம் சிறுதொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகிறது.

★ ★ ★



- அகிலன் கண்ணன்

பேரம் பேசி சாத்துக்குடி வாங்கிவிட்டான். மாலை நேரப் பேருந்துப் பயணம் பாலனுக்கு ஒன்றும் புதிதல்ல. அலுவலகத்தில் பணி முடிந்து விடும்போது வழக்கமான ஆறேகால் ரயிலைத் தவறவிட்டு, இரு பஸ்கள் மாறி புறநகரத்தின் உள்ளே புகுந்து இருட்டிய பின்பே கசங்கிய நிலையில் வீடு திரும்ப நேர்வதுண்டு.

காலை ஏழு ஐம்பது ரயிலைப் பிடித்தால்தான் பீச் ஸ்டேஷனில் இறங்கி...மண்ணடி நெரிசலுக்குள் புகுந்து வந்து தனது அலுவலகப் பதிவேட்டில் கையெழுத்திட முடியும். மறைமலை நகரின் கடைசியில் உள்ள எழுநூறு ரூபாய் வாடகை வீட்டிலிருந்து நகருக்குள் எங்காவது அடுக்குமாடிக் குடியிருப்புகளில் புகுந்து விட ஆசைதான். தனியார் நிறுவன சம்பளத்தில் எட்டாக் கனியாகவே தொங்குகிறது பாலனின் ஃப்ளாட் கனவு.

மானேஜரின் தந்தை ஹார்ட் அட்டாக்கில் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த போதே போய்ப் பார்க்க நினைத்திருந்தான். கண்ணாடி அறையில் பார்வையாளர் தவிர்க்கப்பட்ட நிலையில் இவன் செல்வதைத் தவிர்த்தான். வீட்டுக்குக் கூட்டி வந்துவிட்டதாகப் ப்யூன் கேசவன் சொல்லக் கேட்டு இப்போது கிளம்பியிருக்கிறான்.

மரங்களடர்ந்த பாதையில் சினிமாவில் மட்டுமே பார்த்துப் பிரம்மித்திருக்கிற மாதிரியில் ஃப்ளாட்டினுள் நுழையவே பாலன் தயங்கினான். நுழைவாயிலின் இடது பக்க ஓரமாக பொதுத் தொலைபேசி பூத் வடிவில் அமைந்திருந்த கூர்க்காவின் இருப்பிடம் காலியாயிருந்தது. சுற்று முற்றும் பார்த்தான்; திரையரங்க வாசல் போல் வரிசை வரிசையாக இரு சக்கர வாகனங்கள். வலது பக்கக் காம்பவுண்டுச் சுவரை ஒட்டி வெள்ளை, சிவப்பு மாருதி முயல்கள், அண்ணாந்து பார்க்க, மாலைச் சூரியன் ஜன்னல் கண்ணாடிகளிலும் சுவரில் பதிக்கப்பட்டிருந்த பளிங்குக் கற்களிலும் சிவந்து பிரதிபலித்தான்.

காலை-மாலை நசுங்கிய ரயில் பயணத்தின் பின்னே சுமார் ஒரு கிலோமீட்டர் நடந்து சென்று வீட்டையும் தினசரிக் களைப்பு நீங்கிட, நகருக்குள் குடியிருப்புத் தனக்கு வாய்த்துவிடாதா என ஏக்கப் பெருமூச்சு எழுந்தது பாலனுள்.

வலது பக்கப் பாதை வழியே மூன்றாம் எண் ஃப்ளாட்டை அடைகிறான். வாசற் கதவு தாளிடப்படாது திறந்துள்ளது. சிகப்புக் கம்பளமும் பளபளத்த பளிங்குத் தரையும் வேலைப்பாடுகள் நிறைந்த சோபா செட்களும் பாலனை மிரள வைத்தன. அழைப்பு மணியை அடிக்கத் தயங்கி, திறந்திருந்த கதவை விரலால் மெதுவாய்த் தட்டி ஒலி எழுப்பினான் பாலன்.

சமையலறையிலிருந்து வெளிப்பட்ட பெண் 'யார்?' எனக் கேட்க, பாலன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

“வாங்க! அந்த ரூமிலதான் இருக்கார். மாமாவுக்கு மருந்து குடுத்திட்டுருக்கார்'' அறையைக் காண்பித்தார் அந்தப் பெண்மணி. செருப்பை வராந்தாவிலேயே கழட்டிப் போட்டுவிட்டு, உள் வாங்கும் மிதியடியில் கால் பதித்து மெது மெதுவாக நடந்து அறையினுள் நுழைந்தான் பாலன். அறுபது வயது மதிக்கத்தக்க பெரியவர் கட்டிலில் சரிந்து படுத்திருந்தார். உறக்கம். அருகே செய்தித் தாள், பத்திரிகைகள், மறுபக்கம் சிறிய மேஜையின் மீது மருந்துகள். ஏதேச்சையாகத் திரும்பிய மேனேஜர் பாலனை அன்புடன் வரவேற்றார்.

“வாங்க பாலு! உக்காருங்க!”

“பரவால்லை சார். அப்பாவைப் பார்த்துட்டுப் போகலாம்னு... ஆஸ்பத்திரிக்கே வரணும்னு. ஐ.சி.ல இருந்ததால தொந்தரவு பண்ண வேணாம்னு... இப்ப அப்பா எப்பிடி இருக்காங்க?”

“தேவலை. நல்ல வேளையாக சரியான நேரத்துல அட்மிட் பண்ணிட்டதால கடவுள் காப்பாத்திட்டாரு. இன்னும் ஆறு மாசத்துக்குக் கம்ப்ளீட் ரெஸ்டில் இருக்கணும்னுருக்கார் டாக்டர். எந்தவிதமான அதிர்ச்சியும் அவுங்களைப் பாதிக்கக் கூடாதுன்னு

கவனமாப் பாத்துக்கிட்டுருக்கோம். சத்தம் அதிகம் கேட்காம கொஞ்சம் நிம்மதியா இருக்கணும்னு சொன்னாங்க. அதனால்தான் காலிங்பெல் சப்தம் கூடத் தொந்தரவு பண்ணிடக் கூடாதுன்னு பகல்ல வாசக் கதவைக் கூடப் பூட்றதில்ல.”

“ஆமா. ஹார்ட் அட்டாக்குன்னா முதல்ல முழு ஓய்வுதான் முக்கியம்னு சொல்வாங்க. அப்பாவுக்கு வேற ஏதாவது ரத்தக் கொதிப்பு, சர்க்கரைன்னு...”

“நோ, நோ, அதெல்லாம் இல்ல. ஆனா பொதுவாவே அப்பாவுக்குக் கொஞ்சம் பலவீனமான ஹார்ட். பலமா சத்தம் கேட்டா, வேகமா நடந்தா, பளு தூக்கினா படபடத்துடும்”.

அவரது பேச்சைக் கேட்க முடியாதபடி வாசலிலிருந்து திடீரென காரின் ஹாரன் ஒலி

எழுகிறது. மேனேஜர் “சே !” என்று அலுத்துக்கொண்டே பதட்டத்துடன் ஓடிச்சென்று ஜன்னலைச் சாத்தினார். அங்கிருந்தபடியே அப்பாவைப் பார்த்தார். அவர் மெதுவாகப் புரண்டு படுத்தார், லேசாகக் கண்விழித்தார்.

மேனேஜர் ஓடி வந்தார். “தண்ணி குடிக்கிறீங்களாப்பா ?”

வேண்டாமெனத் தலையாட்டியபடியே கண் அயர்ந்தார் பெரியவர்.

காம்பவுண்டுக்குள் எழுந்த கார் ஹாரன் ஒலி நிற்கவில்லை. விட்டு, விட்டு எழுந்தது. மூடிய ஜன்னலையும் தாண்டி அறையினுள் பூதமாகப் பரவியது, ஒலி.

மேனேஜர் எழுந்து சென்று அறையின் அடுத்த ஜன்னலையும் மூடினார். ஒலி குறையவில்லை. பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்ட இருபது வயதுப் பையன் ஒருவன் வீட்டிலிருந்து வேகமாக வெளியேறினான்.

காரின் அழைப்பொலி நிற்கவில்லை.

மேனேஜர் திரும்பி வந்து அறையின் கதவையும் மூடினார்.

வெளியே கார்க் கதவு திறந்து மூடும் ஒலி எழுந்தது.

“நீ யார்டா என்னைச் சத்தம் போடாதேன்னு சொல்ல ?”

“வீட்ல ஹார்ட் பேஷண்ட் இருக்காங்க. காம்பவுண்டுக்குள் இப்பிடி கார் ஹாரன் சத்தத்தை அலறவிடாதீங்கன்னு தெனம் உங்கிட்ட சொல்றேன் !”

“நான் ட்ரைவர். இது எங்க வண்டி. எங்க கார் ஹாரனை நான் அமுத்துறேன் !”

‘ஒனக்கு மனுஷ பாஷை புரியாது !”

யாரோ யாரையோ அறையும் ஒலி.

கார் ஹாரன் சப்தம் நின்று விட்டது.

தெளிவாகப் புரியாதபடி கலவரமான உரத்த குரலில் கத்தல்கள்.

“நீ எப்பிடிடா என்னைக் கை நீட்டி அடிக்கலாம் ?”

“சொன்னாக் கேக்கலைன்னா இப்படித்தான்.”

“ராஸ்கல்...திமிருடா. காசுத் திமிரு. உன்னைப் பொரட்டி எடுக்கலைன்னா நான் ரத்னம் இல்லைடா !”

“விடு. விட்ரு ரத்னம்..சின்னப் பையன்...”

“என்ன பண்ணுவ? உங்க வீட்ல இப்படி யாராவது கஷ்டப்பட்டா அப்பத் தெரியும் உனக்கு?”

மானேஜர் புரியாதவராகப் பாய்ந்து ஜன்னலைத் திறந்து பார்த்தார். திகைத்துத் திரும்பிப் பார்த்தார்.

இவனைப் பார்த்து, “ஒரு நிமிஷம் அப்பாவைப் பாத்துக்குங்க !” என்று பதறியபடி கலவரத்துடன் வாசலுக்கு ஓடினார்.

கலவையாகக் கூச்சல், கூக்குரல்.

பாலன் படுக்கையிலிருக்கும் முதியவரைப் பார்த்தான். மெதுவாக ஜன்னலருகே சென்று வெளியே பார்த்தான்.

வாசலில் நின்ற வண்டியில் துணி அயர்ன் செய்பவர். ஆட்டோ டிரைவர், இவர்களின் நடுவே வெள்ளுடுப்பு டிரைவர்.

மேனேஜரின் மகன் தனியே...

“என்னைக் கை நீட்டி அடிச்சுட்டான்ல...என்ன பண்றேன் பாரு இப்ப இவனை...”

மேனேஜர் பையன் மீது பாய வந்தான். மேலும் இருவர் மேனேஜர் பையனின் காலரைப் பிடித்து இழுத்துத் தள்ளினர்.

“சேகர் ! உள்ள போடா !” மேனேஜர் தம் மகனைக் காப்பாற்றக் குறுக்கே பாய்ந்தார். அவரது மனைவி சேகரின் கையைப் பிடித்து இழுத்தார்.

டிரைவர் பக்கம் சம்பந்தப்பட்டவர், சம்பந்தப்படாதவர் எனப் பலர்.

பாலனுக்கு உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. தவித்தது மனம்.

“டிரைவர்ங்கறதுனாலதானடா என்னை அடிச்சுட்ட? நீ இனிமே எப்பிடி இந்தத் தெருவில நடக்கப் போறேன்னு பாத்துட்றேன் !”

ஆட்டோ டிரைவர் ஒருவர் பையன் மீது பாய்ந்தார்.

பாலன், தூங்கும் நோயாளிப் பெரியவரைப் பார்த்துவிட்டு வாசலுக்கு விரைந்தான்.

அந்த அடுக்கு மாடி மாளிகையின் ஜன்னல்கள் எங்கும் மனித முகங்கள்; வராந்தாவெங்கும் முகங்கள்.

போலீஸ் காவலர் ஒருவர் சைக்கிளில் வந்து தடியுடன் இறங்கினார்.

“என்னப்பா கலாட்டா இங்க? ஒரு பையன் டிரைவர் ஒருத்தர அடிச்சுட்டானாமே, யாரது?”

“இதோ இந்தப் பையன்தான். டிரைவரைப் போட்டு அடிச்சுப்புட்டான் சார் !”

கோரஸாகக் குரல்கள்.

மேனேஜர் பதறினார். “இந்த ட்ரைவர் சொல்லச் சொல்லக் கேக்காம கார் ஹாரனை அடிச்சுக்கிட்டே இருந்தாரு. உள்ள ஹார்ட் பேஷண்ட் படுத்திருக்காருன்னு சொல்லியும் இவரு சத்தம் குடுத்துகிட்டேயிருந்தாரு”.

“அதுக்காக? அடிச்சுட்றதா? சட்டத்த நீங்களே கைல எடுத்துக்கிறதா? வா. ஸ்டேஷனுக்கு... கம்ப்ளெய்ண்ட் குடுத்திருக்காங்க. விசாரிக்கணும் வா !”

“நாந்தான் சொல்றேனே...விட்ருங்க ?”

மேனேஜர் கோபமாகக் கத்த சேகர் நிதானப் படுத்தினான்.

“அப்பா ! நீங்க அம்மாவைக் கூட்டிக்கிட்டு உள்ள போங்க. வாங்க சார் போலாம்; ஸ்டேஷனுக்கு !”

சேகர் தெருவிலிறங்கி நடந்தான்.

மேனேஜர் பாலுவின் கைப்பிடித்து உள்ளே வந்தார். மேனேஜரின் மனைவி கண் கலங்கிப் பின் தொடர்ந்தார்.

“ஏங்க, நீங்க போயி கூட்டிட்டு வந்துடுங்க. பாவம் சேகர் !”

“பேசாம உள்ள வா !”

வீட்டினுள் வந்து, தந்தையின் அறையினுள் நுழைந்து, உறங்கும் அப்பாவைப் பார்த்தபடியே பாலனிடம் பேசினார் மேனேஜர்.

“பாலு ! நீங்க கொஞ்ச நேரம் இங்க அப்பாக்கிட்டயிருந்து பாத்துக்குங்களேன். நான் போயி சேகரைக் கூட்டிக்கிட்டு வந்துர்றேன்” என்றவர் தம் மனைவியிடம் “ஜானகி ! செலிபோன் புக்கையும் என் பர்ஸையும் குடு !” என்றார்.

“நீங்க போய்ட்டு வாங்க சார். நான் பாத்துக்குறேன் !” பாலு பதில் சொன்னான்.

ஈரக் கையைப் புடவைத் தலைப்பில் துடைத்தபடியே ஓடிவந்து டைரியையும் பர்ஸையும் எடுத்துத் தந்தார் ஜானகி.

அறையின் ஜன்னலைத் திறந்துவிட்டான் பாலு.

கார் டிரைவர்கள், ஆட்டோ ட்ரைவர் என ஒரு சிறு படையே போலீஸ் காவலர் பின்னே டிரைவருடன் சென்றது.

முன் செல்லும் கூட்டத்தின் பின்னே, தனியராய் நடந்தார் மேனேஜர்.

அடுக்கு மாளிகை ஆமை மனிதர்கள் தங்கள் முகங்களை அழகான ஓடுகளுக்குள் உள்ளிழுத்துக் கொண்டனர்.

உள்ளிறங்க மறுக்கும் எச்சிலை வறண்ட தொண்டையில் கஷ்டப்பட்டு விழுங்கினான் பாலு.

தலையைச் சிலிர்த்துக் கொண்டு தன் அடுக்கு மாடிக் கனவை உதறிக் கலைத்தபின் இருட்டிய வானத்தை அண்ணாந்து பார்த்தான் பாலு. தொலைவில் ஒற்றை நட்சத்திரம் சிரித்தபடி கண் சிமிட்டியது.

– ‘நெஞ்சோடு’ சிறுகதைத் தொகுப்பிலிருந்து...

இன்றைய சாதனை நாளைய சரித்திரம்

எஸ்.நாகராஜன்

விரிந்திருக்கும் பாரதத்தில் நிறைந்திருக்கும் கிராமங்களில்
அரும்பணிகள் பலசெய்து உள்ளத்தில் இடம்கொண்டாய்
திருவிளக்கே நீயிருந்தால் தெருவெங்கும் ஒளிவீசும்
வருங்காலம் உனக்கொரு வாழ்த்துப்பா வடித்துவைக்கும்

சாலைகளைச் சீராக்கிப் பாலங்கள் பலகட்டி,
ஆலயங்கள் பழுதுபார்த்து அகல்விளக்கை ஏற்றி வைப்பாய்
பாலகரைப் படிக்கவைத்து முதியவரை எழுதவைத்து,
ஏழையினைச் சிரிக்கவைத்து இறைவனையும் கண்டிடுவாய்.

ஏரிகுளம் தூர்வாரி, வான்மாரி நீர்சேர்த்து
சேரிகளில் பணிசெய்து எரிபொருளைச் சேமித்து
வாரிசூழ் உலகெல்லாம் அமைதிபெறும் பயிர்வளர்க்க
போராடும் நாட்டிலெல்லாம் வெண்புறாவாய் வலம்வருவாய்.

நீதியதை நிலைநாட்ட மனுநீதி நாள்தருவாய்
சாதிமதம் பாராமல் சமத்துவத்தை வளர்த்திடுவாய்
வேகமதில் ஐந்தாண்டு கல்விப்பணி ஆற்றிடுவாய்
பேதியதை ஒழித்திடவே சுகாதாரம் பேணிடுவாய்.

புதர்களையும் களைந்துநல்ல புதுப்பாதை அமைக்கின்றாய்
இதமான மொழிபேசி மனிதநேயம் வளர்க்கின்றாய்
முதியோர்க்குக் காப்பென்றாய் முதலுதவி செய்கின்றாய்
மதுபோதை ஒழித்துநல்ல புதுவாழ்வை நீதருவாய்.

முடமாகிப் போனவர்க்கு முதுகெலும்பு நீதானே
திடமான நம்பிக்கை உரமூட்டி உயிர்வளர்ப்பாய்

அடக்கத்தின் மறுஉருவே! ஆக்கத்தின் உயிர்வடிவே!
விடப்பாம்பும் உன்பணியில் குணம்மறந்து துணைசெய்யும்.

கண்தானம் செய்கின்றாய், நுகர்வோரைக் காக்கின்றாய்
மண்ணரிப்பைத் தடுத்திடவே மரங்களையும் நடுகின்றாய்
பெண் கொடுமை தீர்க்கின்றாய், வன்முறையை ஒழிக்கின்றாய்
இன்னுயிரைக் காத்திடவே செங்குருதி தருகின்றாய்.

பள்ளிகளைப் புதுப்பித்து, மைதானம் சீராக்கி
முள்வேலி அமைப்புடன், தண்ணீரைச் சேமிப்பாய்
கொள்ளைநோய் தீர்த்திடவே அருமருந்தை வழங்கிட்டாய்
பள்ளமேடு சமன்செய்து பயிர்வளர்க்கத் துணைசெய்வாய்.

சிசுவதையைத் தடுப்பதுடன் சிறுகுடும்பம் பேணிடுவாய்
பசுவதையை எதிர்த்திடுவாய், கொசு ஒழிக்க வழிசெய்வாய்
பசிகளையச் சுயதொழிலைப் பாரெங்கும் தொடங்கிவைப்பாய்
அசுத்தங்கள் அகற்றி நல்ல அரும்பணிகள் செய்திடுவாய்.

கால்நடையைக் காப்பதுடன் பால்வளத்தைப் பெருக்கிடுவாய்
வாழ்வதனை வளமாக்க சிக்கனத்தைப் பேணிடுவாய்
சூழ்ந்திருக்கும் குப்பையிலே எரிசக்தி பெற்றிடுவாய்
தோல்கருக்க உழைப்பவனை வாழ்வாங்கு வாழவைப்பாய்.

எரிசாண வாயுடன் எழுப்புத் திட்டமுண்டு
அரிவையர்க்குச் சுயவேலை; ஆடவர்க்கு நம்பிக்கை
உறிஞ்சுகின்ற குழிகளுடன், புகையில்லா அடுப்புமுண்டு
விரிவான தொலைநோக்குத் திட்டங்கள் பலவுண்டு. ★

மனிதக் கழிவை மனிதன் சுமக்கும் அவலம் அகற்றப்படும்; கழிவு சுமக்கிறவர்களுக்கு விரைவில் மாற்று வேலை

சட்டப்பேரவையில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

ஆளுநர் உரையின் மீது இதுவரையிலே இந்த அவையில் 38 உறுப்பினர்கள் ஏறத்தாழ 9 மணி நேரம் விவாதம் நடத்தி, அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளின் அடிப்படையில், எல்லாவற்றுக்கும் அல்ல், என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்த உரை குறித்து இங்கே கருத்துக்களைச் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன செய்திகளை இந்த அரசு, தான் கொண்டுள்ள பண்பாட்டின்படி நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதைத் தெளிவாக முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து, இங்கே திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்குத் தேவையான ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து அதற்கேற்ப இந்த அரசு தன்னுடைய செயல்முறைகளை வகுக்கும், இயன்ற வரையிலே நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் என்பதையும் நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டி, இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி, அவைகளையெல்லாம் தீர்த்துவைக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஆக்கபூர்வமாக பல உரைகள் இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்

எடுத்த எடுப்பில், பொத்தாம் பொதுவாக இது என்ன உரையா என்று கேட்கின்ற அளவில் உள்ளேயும் சிலர், வெளியேயும் சிலர் இந்த உரை பற்றிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரை வெறும் காகிதம், இது சுவைக்கு உதவாது என்றெல்லாம்கூட கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. பொறுப்பாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அல்ல. ஆனால், பொறுப்பிலே இருந்தவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள்.

இந்த உரையிலேதான், நீண்ட காலமாக நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் வலியுறுத்தி வருகின்ற, விவசாயிகளுடைய குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத் தொடரிலே அறிவிக்கப்படும், வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மிக முக்கியமான சமுதாயத் தொண்டாகக் கருதப்படுகின்ற மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்ற சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதனைக் கணினி ஆண்டாகவே கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்கேற்ப அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு குறித்து, பாராட்டும், வாழ்த்தும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றுதான். எல்லா உறுப்பினர்களுக்கும் கணினி வழங்க வேண்டும் என்பதுதான் சற்று சிக்கலான விஷயம். ஏனென்றால், கணினியும் வழங்கி, கற்றுத் தருகின்ற பயிற்சியும் அவர்களுக்குக் கொடுத்து, அதைப் பொறுமையோடு நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருந்து கற்றுக் கொள்வார்களானால், நிச்சயமாக அடுத்தத் தேர்தலிலே, அவர்களுடைய தொகுதிகளிலே அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதை இப்போதே என்னால் உறுதியாகக் கூறமுடியும். ஏனென்றால், அவ்வளவு அக்கறை கணினியிலே அவர்களுக்கு வருமேயானால், எதிர்க்கட்சித் தலைவரைவிட நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கணினிக்கான முயற்சியை முதலில் தொடங்கி வெற்றிகண்ட மாநிலம் தமிழகம்

தமிழ் வரி வடிவங்களை ஒரே சீராகத் தொகுத்து தரப்படுவதற்கும், தமிழ்க் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் 'தமிழ் இணையம் 99' என்று நடத்தப்பட்டு இந்த உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளில் தமிழர்கள் வாழுகின்ற நாடுகளிலிருந்து – வந்த தமிழ் மேதைகள் அரிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி– ஒன்றுபட்ட கருத்து உருவாகுமா என்று எதிர்பார்த்த நிலையில், ஒன்றுபட்ட கருத்து உருவாகி – இண்டர்நெட் என்று சொல்லப்படும் தமிழ் இணையத்தில் இனிமேல் வேறு மொழிகள் இடம் பெற்றாலுங்கூட தமிழ்மொழி தலையாய இடம் பெறும் – உலகத்தில் எந்தக் கோடியில் இருக்கின்ற தமிழனும் தமிழ் வாயிலாக செய்திகளை அறிந்து கொள்ள முடியும், தகவல்களைப் பெறமுடியும் என்ற நிலையை நாம் உருவாக்க இருக்கிறோம்.

இந்தியாவிலேயே இந்த முயற்சியை முதல் முதலாகத் தொடங்கி அதிலே வெற்றி காணவிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை எண்ணும்போது நாமனைவரும் பெருமிதம் கொள்ளலாம்.

தகவல் தொடர்பு என்பது இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு காலத்தில் 'ஆப்ரகாம் லிங்கன்' கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துதான் இலண்டனுக்கே தெரிய வந்தது என்பார்கள். அப்போது தந்தி என்ற சாதனம் இருந்தும்கூட லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துதான் இலண்டனுக்கு வந்து சேர்ந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால், இன்றைக்கு அப்படி அல்ல. ஆஸ்திரேலியாவில் ஆடுகின்ற கிரிக்கெட் ஆட்டத்தில் இப்போது யார் அவுட் ஆனார்கள் என்பதை உடனடியாக, நேரிலேயே தெரிந்து கொள்ளுகின்ற அளவுக்கு தகவல் தொடர்பு பெருகியிருக்கின்ற விஞ்ஞான உலகத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது மேலும் வளர்ந்து உலகம் என்பது ஒரு சிறிய குக்கிராமம், குக்கிராமத்தைவிட இன்னும் சிறிய அளவுக்கு சுருங்கிவிட்ட ஒரு வடிவம் என்ற நிலையை எதிர்காலத்திலே இந்தத் தகவல் தொடர்பு உருவாக்க இருக்கிறது. அந்த நேரத்திலே நம்முடைய தமிழ் அதிலே ஆக்கம் பெற வேண்டும், இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பெருமுயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

எல்லோராலும் பாராட்டப்பட்ட மகளிர்க்கான சிறு வணிகக் கடன் திட்டம்

இந்த உரையிலே மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வரியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனுடைய விளைவு, பயன் மகத்தானதாக எதிர்காலத்திலே இருக்கத்தான் போகிறது. மகளிர் தாங்கள் நடத்த விரும்புகின்ற சிறுசிறு தொழில்களுக்காகக் கடன் வாங்குவதற்கு வங்கிகளுக்குச் சென்றால், அதிக வட்டி தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அல்லது, யாராவது வியாபாரிகளிடத்திலே, வட்டிக்கடைக் காரர்களிடத்திலே சென்று கடன் பெற்றால், அதற்கு அளவுக்கு மீறிய வட்டி தர வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலே கொண்டு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, ஒரு ரூபாய் வட்டிக்கு, 500 ரூபாய் முதல் 2,000, 3,000 ரூபாய் வரை சிறு கடைகள், காய்கறி வியாபாரம் போன்ற சிறிய வியாபாரங்களில் ஈடுபடுகின்ற மகளிருக்கு கடன் தருவதற்கான ஒரு வழிவகை உருவாக்கப்பட்டு, சென்னை மாநகரத்திலே, முதலில் சேப்பாக்கத்திலே இது தொடங்கப்பட்டு, அண்ணா நகரில் அது தொடர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் இந்த சிறு வணிகக் கடன் திட்டம் மகளிருக்காக பரப்பப்பட இருக்கிறது. மாநகரங்களுக்கு மாத்திரமல்லாமல், எல்லா நகரங்களிலும் இந்தத் திட்டத்தை நாம் பரவலாக நடத்த இருக்கிறோம். நகரங்களில் முடிவுற்ற பிறகு, கிராமங்களிலேகூட இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் மகத்தானதாக, எல்லோராலும் பாராட்டப்படக்கூடியதாக, இந்தியாவிலே முதன்முதலாக தமிழகத்திலே உருவாக்கப்பட்ட திட்டமாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அதைப்போல, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், ஏற்கனவே இருக்கின்ற மாவட்டங்கள் அன்னியில் மேலும் ஏழு மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலேதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விரைவுபடுத்தப்பட்ட தோட்டக்கலைப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவிரி கழிமுகப் பகுதிகளிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலும் தூர்வாரும் பணிக்கு அதிக நிதி, எதிர்காலத்திலே ஒதுக்கப்படும் என்றும் இந்த உரை கூறுகின்றது. சென்னை தரமணியில் 320 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா Software Park அமைகிறது என்ற செய்தியையும் இந்த உரைதான் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

5ஆம் இடத்தில் இருந்த தமிழகம் தொழில் வளர்ச்சியில் 2ஆம் இடத்திற்கு உயர்வு

தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 1998 அக்டோபரில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி இருக்கின்ற செய்தியையும் இந்த உரைதான் விளக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்களை பற்றிய குறிப்புகளும் இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும், நகர்ப்பகுதி அமைப்புகளின் வசதிக்கும் கணிசமான நிதி உதவி கிடைத்திட, தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கு ஆரச்சாலைகளை அகலப்படுத்தி, வலுவூட்டும் பணி முக்கியமான, சந்திப்புகளில் 10 சிறு மேம்பாலங்கள் கட்டும் பணி, பெருநகர்ப் பகுதிக்கான வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரப் பகிர்வு தரப்படும் என்ற உறுதியும் இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய அனைவரும்

பாராட்டக்கூடிய இந்த திட்டங்களை மேலும் மேம்படுத்துவோம் என்ற உறுதிமொழியும் இந்த உரை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த 500 கோடி ரூபாயிலே திட்டம் தயார் என்று இந்த உரையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் ஆஸ்திரியா அரசின் உதவியோடு கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் வகுக்கப்படுவதையும் இந்த உரை எடுத்துக்காட்டுகிறது.

2.1.99 அன்று பெரியபாளையத்தில் பணி தொடங்கப்பட்ட 106 பாலங்கள் அன்னியில், மாநிலம் முழுவதும் 360 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு 104 பாலங்கள் கட்டுவதற்கான பணியும் அண்மையிலே தொடங்கப்பட்டிருக்கின்றது. உலக வங்கி நிதியுதவியோடு தமிழ்நாடு சாலைப் பகுதி திட்டம் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரங்கள் தொடரும் என்ற அறிவிப்பும் இந்த உரையில் இடம் பெற்றிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்ற செய்தியும் இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில், தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறிக்கோள் நிறைவேற அரசு பாடுபடும் என்ற கூற்றையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்கு புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள்

இந்த உரையின் வாயிலாக, கைத்தறி தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள் தொடர் முயற்சிகள் இவ்வளவும் கவர்னர் உரையிலே இடம் பெற்றிருக்கின்றன. நேர்மையான, ஒளிவு மறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிருவாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும் நீதிபதி இராமானுஜம் குழு பரிந்துரைகள் செயலாக்கம் பெற இந்த அவையிலேயே அந்த அறிக்கை அரசினுடைய குறிப்புகளோடு விரைவில் இந்தக் கூட்டத்தொடரிலே வைக்கப்படும் என்றும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர் சுந்தரம் அவர்கள் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கவில்லை என்றும், தமிழக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தனிநபர் வருமானம் இந்த ஆண்டும் உயர்வு

1996–97இல் தமிழகத்தினுடைய தனிநபர் சராசரி ஆண்டு வருமானம் 2,918 ரூபாய். 1997–98இல் தமிழ்நாட்டினுடைய தனிநபர் சராசரி வருமானம் 3,057ஆக உயர்ந்துள்ளது. புள்ளியியல் துறை மதிப்பீட்டின்படி இந்த ஆண்டும் தனிநபர் சராசரி வருமானம் ரூபாய் 3,164ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தனிநபர் சராசரி வருமானம் 1980–81ஆம் ஆண்டு விலைப் புள்ளிகளைக் கொண்டு மதிப்பிடப்பட்டதாகும். 1991–92ஆம் ஆண்டு விலைப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிநபர் வருமானம் மேலும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது நம்முடைய மாநிலம் என்பதை இங்கே எடுத்துக் கூறினேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று சில தொழில்கள் தொடரப்படாமலே முடிந்து விட்டதை எடுத்துக்காட்டினார்கள். குறிப்பாக பில்கிங்டன் கிளாஸ் தொழிற்சாலைப் பற்றி சொன்னார்கள்.

மார்க்கெட்டில் போதிய தேவை (demand) இல்லை என்று கணித்த காரணத்தால் பில்கிங்டன் நிறுவனம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது. இதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அவர்களே மார்க்கெட் நிலவரத்தை அறிந்து அதை கைவிட்டு விட்டார்கள். அதற்குக் காரணம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'செயின்ட் கோஃபெயின்' என்ற நிறுவனம் இந்த கிளாஸ் தொழிற்சாலையை வேகமாக உருவாக்கி வருகிறது. பெரிய அளவிலே அத்தொழிற்சாலையை தமிழகத்திலேயே அது உருவாக்கி வருகிற காரணத்தினால் அவர்களும் அந்தத் தொழிற்சாலையை கைவிட்டு விட்டார்கள்.

கும்ஹோ டயர் தொழிற்சாலைப் பற்றி சொன்னார்கள். அவருக்கும் தெரியும். உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். பொருளாதாரத்திலே ஏற்பட்ட மந்தநிலை எந்த அளவிற்குக் கொரியாவை தாக்கியது என்று நன்றாகத் தெரியும்.

இது தென்கொரியாவிலே உள்ள ஒரு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தொழிற்சாலையாகும். இந்தோனேஷியாவிலே தொடங்கி ஹாங்காங் போன்ற இடங்களில் பரவி கொரியா வரையிலே வியாபித்த இந்தப் பொருளாதார மந்த நிலையினால் தென்கொரியாவிலே உள்ள இந்தப் பிரச்சினையின் காரணமாக இந்த கும்ஹோ டயர் நிறுவனம் தனது திட்டத்தை அடியோடு இரத்து செய்துவிடவில்லை, தள்ளிப் போட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நார்க்ஸ் ஹைடிரோம், உலக அளவிலே பி.வி.சி.க்கு மார்க்கெட் குறைந்துள்ளதால் அதுவும் தனது திட்டத்தைக் கைவிட்டு விட்டது. ஆனால் அதே நேரத்தில் மிட்சுபிசி, ஹூண்டாய் போன்ற நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும் என்று கருதுகிறேன். ஃபோர்டு நிறுவனம் அக்டோபர் திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது.

கரும்புச் சக்கையிலிருந்து வரும் ஆண்டு மேலும் 100 மெகாவாட் மின்சாரம் தயாராகும்

கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு இதுவரையிலே தற்போது சுமார் 141 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். வரும் ஆண்டில் மேலும் சுமார் 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.



தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ்நாட்டைப் பார்த்தால் Centre for Monitoring Indian Economy என்கிற பெரிய நிறுவனம், மத்திய அரசு இந்திய அரசு; இவைகளினுடைய புள்ளி விவரங்களையெல்லாம் தருகின்ற ஒரு பெரிய நிறுவனம் Centre for Monitoring Indian Economy Survey of Investment Projects, May - 1996 அதன்படியும், அதற்குப் பிறகு எடுத்த சர்வேக்களின் படியும் உள்ள குறிப்புகளை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகின்றேன்.

1996ஆம் ஆண்டு மாநிலங்கள் தொழிலில் செய்துள்ள முதலீடுகள்

மே, 1996இல் Trends in total investment by States என்ற தலைப்பில் கர்நாடகாவில் ஒரு இலட்சத்து பதினொராயிரத்து நானூற்று அறுபத்தி நாலு கோடி ரூபாய்(இன்வெஸ்ட்மென்ட்)முதலீடு;

குஜராத்தில் ஒரு இலட்சத்து மூவாயிரத்து நானூற்று அறுபத்தொரு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட்;

ஒரிசாவில் ஒரு இலட்சத்து ஆயிரத்தொன்பது கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட்;

மராட்டியத்தில் ஒரு இலட்சத்து ஐந்நூற்று பதினாறு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட்;

தமிழ்நாடு தொன்னூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட் மே, 1996இல்.

அதற்கு கீழேதான் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் இவைகள் எல்லாம், இதற்கு அடுத்துதான் வருகின்றன. ஆறாவது, ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது இடங்களில் இவைகள் எல்லாம் வருகின்றன. இது 1996ஆம் ஆண்டு மே மாதத்தினுடைய நிலைமை. அப்போது, தமிழ்நாடு தொன்னூறு ஆயிரத்து அறுநூற்றி ஐம்பது கோடி ரூபாய் முதலீட்டிலே 5ஆவது இடத்தில் இருந்தது.

தொழில் முதலீட்டில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு

ஜனவரி, 1999 வரை இன்வெஸ்ட்மென்ட் என்ற அந்த ரேங்கைப் பார்த்தால் மகாராஷ்டிரம் ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரத்து ஐந்நூற்று தொன்னூற்றி எட்டு கோடி இன்வெஸ்ட்மென்ட்;

தமிழ்நாடு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்றி முப்பத்தியேழு கோடி ரூபாய். எனவே இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு வந்து விட்டது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கின்றோம்.

இதிலே என்ன வித்தியாசம் என்றால் மகாராஷ்டிரத்திலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்றி தொன்னூற்றி எட்டு கோடி இன்வெஸ்ட்மென்ட். தமிழ்நாட்டிலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்றி முப்பத்தேழு கோடி இன்வெஸ்ட்மென்ட், அது 11.52 சதவிகிதம் மகாராஷ்டிரா; தமிழ்நாடு 11.49 சதவிகிதம். அதாவது .03 அவ்வளவுதான் வித்தியாசம். மராட்டியத்தோடு வித்தியாசம் .03 தான். ஒரு சதவிகிதம் கூட அல்ல. .1 சதவிகிதம் கூட அல்ல; நாம் இரண்டாவது இடத்திற்கு வருகிறோம். அதே நேரத்தில் மற்ற

மாநிலங்கள் பற்றி நான் சொல்லவில்லை. குஜராத் மூன்றாவது இடத்திற்குப் போய் விடுகிறது; நாம் இரண்டாவது இடத்திற்கு வந்தது மாத்திரமல்ல, மராட்டியத்திலே மே, 1996ஆம் ஆண்டு முதலீட்டிற்கும் ஜனவரி 1999–க்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால் மராட்டியத்திலே ஐம்பத்தோராயிரத்து எண்பத்திரண்டு கோடி வித்தியாசம்.

தமிழ்நாடு அறுபதாயிரத்து ஐந்நூற்றி எண்பத்தி ஏழு கோடி வித்தியாசம், மராட்டியத்திலே 21.03 சதவிகிதம். தமிழ்நாடு 24.94 சதவிகிதம் 3.9 அதிகம். எனவே, இந்த வகையிலும் வித்தியாசம் என்ற வகையிலே தமிழ்நாடு முதலிடத்திற்கே வந்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு என்று எடுத்துக் கொண்டால் ஜனவரி 1999இல் பதிமூன்று இலட்சத்து பதினைந்தாயிரத்து அறுநூற்றி தொன்னூற்று இரண்டு கோடி அகில இந்திய மொத்த முதலீடு; அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தேழு கோடி.

இதேநிலை 1996இலே பார்த்தால் அகில இந்தியாவில் பத்து இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தி மூன்று; அப்பொழுது தமிழ்நாட்டில் தொன்னூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி, அதாவது 8.45 சதவிகிதம். இரண்டரை ஆண்டுகளிலே உயர்வு இந்திய அளவில் இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து பத்தொன்பது கோடி; தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தியேழு கோடி. இரண்டு இலட்சம் அகில இந்தியாவில் அதிகம். தமிழ்நாட்டிலே அறுபதாயிரம் கோடி அதிகம். இது 24.94 சதவிகிதம் என்பதை நாம் எண்ணிப்பார்த்து பெருமையடையலாம்.

மூடப்பட்ட - மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக அரசு வருத்தம்

இந்தத் தொழிற்சாலைகள் வளருகின்றன. தொழில்கள் வளருகின்றன என்று சொல்கிற நேரத்தில் சில தொழிற்சாலைகள் மூடப்படுகின்றனவே என்கின்ற ஆதங்கமும் நம்முடைய உறுப்பினர்களுக்கு இல்லாமல் இல்லை. இவர்கள் எல்லாம் இங்கே இதைக் குறிப்பிட்டு பேசியிருக்கின்றார்கள். மூடப்பட்ட அல்லது மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக இந்த அரசும் வருத்தப்படுகிறது, கவலையைத் தெரிவிக்கிறது. ஆனால், இயற்கையிலே பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது இயற்கை.

அதற்காக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டது சரிதான் என்று வாதிக்க விரும்பவில்லை. அதற்குப் பின்னாலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய வயிறு என்னுடைய நினைவுக்கு வருகிறது. அவர்களுடைய வாழ்க்கை என்னுடைய நினைவுக்கு வராமல் இல்லை. இருந்தாலும், வாழை மரம் வளர வளர, பிறகு கன்று வளர வளர ஏற்கெனவே இருந்த வாழை போய்விடுவதைப் போல தமிழ்நாட்டிலே சில தொழில்கள் நலிவடைந்து இருக்கின்றன என்பதை நாம் மறப்பதற்கில்லை.

இதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால் நீண்ட காலமாகவே இயங்காமல் இருக்கிற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் 43. இவை பெரும்பாலும் நிதிநெருக்கடி, பங்குதாரர்களுக்குள் மன வேறுபாடு ஆகிய காரணங்களினால் மாத்திரமே இயங்காமல் உள்ளன. இவைகள் தொழிலாளர் பிரச்சினையால் மூடப்பட்டவை அல்ல. அதேபோல, தொழில் தகராறு சட்டம் பிரிவு 25(ஒ)ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு, மூடப்பட்ட நிறுவனங்கள் எதுவும் இல்லை. மேற்கூறிய 43 நிறுவனங்களில் கலைப்பு அதிகாரி (official liquidator) முன் நிலுவையில் உள்ளது 11 நிறுவனங்கள் ஆகும். தொழில் நிதி மற்றும் புனரமைப்பு வாரியம் பி.ஐ.எஃப்.ஆர்., ஏ.ஏ.ஐ.எஃப்.ஆர்., முன்பு நிலுவையில் உள்ளவை 8 நிறுவனங்கள் ஆகும். 2 நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாததால், அந்த நிறுவனம் இவற்றை கையகப்படுத்தியுள்ளது. 3 நிறுவனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே உள்ளது. 12 நிறுவனங்கள் மூடப்பட்ட பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்கங்கள் எழுப்பிய தாவாக்களில் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்கு விட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

இவை தவிர, சென்னை பி அண்டு சி மில் கதவடைப்பு பிரச்சினையில் அரசு நீதிமன்றத் தீர்ப்பிற்கு அனுப்பிய பின். தமிழக அரசின் அறிவுரைப்படி 28–3–1998 அன்று தொழில் தகராறு சட்டம், பிரிவு 12(3)இன் கீழ் ஆலை மீண்டும் திறப்பது குறித்தும், தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல விருப்பம் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்தும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் அமலாக்கம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இயங்காமல் உள்ள இத்தகைய 43 நிறுவனங்கள் தவிர, தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் இயங்காமல் உள்ள 19 நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் 5 நிறுவனங்களின் பிரச்சினை அரசால் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பற்றி ஞானசேகரன் நேற்றைய தினம் குறிப்பிட்டார். அந்த நூற்பாலை புனரமைப்பு செய்யப்பட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆலை திறப்பது குறித்து கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை ஞானசேகரன் அவர்களுக்கு ஆறுதலாகக் கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்காமல் உள்ள நிறுவனங்கள் அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக மட்டுமே மூடப்பட்டு, இயங்காமல் உள்ளன. அவை தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. இவற்றில் தொழிலாளர் பிரச்சினை எதுவும் இல்லை. நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அரசு தரப்பிலே நிதி ஆதாரத்திலும், இப்போது உள்ள சூழ்நிலையிலும் அரசு அந்த அளவிற்கு அகல கால் வைப்பதற்கு தயாராக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே கூறியபடி இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கலைப்பு நடவடிக்கையிலும், பி.ஐ.எஃப்.ஆர். மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றின் முன் வழக்குகள் நிலுவையிலே உள்ள நிலைமையிலும், இவற்றின் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகத்தினர் பி.ஐ.எஃப்.ஆர். முன்பு எடுத்துச் சென்று, புனரமைப்புத் திட்டம் தயார் செய்து, ஒப்புதல் பெற்று, அதற்குரிய நிதி மூலதனத்தை உரிய நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகளிடமிருந்து பெற்று ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மூடப்பட்டு இயங்காமலேயே உள்ள நிறுவனங்களை திறந்து, நிதி பெற ஏதாவது வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராய தொழிலாளர் நலத்துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கத் தரப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளோடு மண்டல வாரியாக கூட்டங்கள் நடத்தி விவாதித்துள்ளார்கள். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த, தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகள் முன்னிலையிலேயே பேச்சுவார்த்தைகளும் நடவடிக்கைகளும் தொடரப்பட்டன. ஆனாலும், சுமுக முடிவு எதுவும் இதுவரையிலே ஏற்படவில்லை.

அரக்கோணம் எஃகு நிறுவன தொழிலாளர்களுக்கு பணம்

அரக்கோணம் எஃகு நிறுவனத்தைப் பொறுத்தவரை, அது நலிவடைந்தும், மூட வேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆலையிலே வேலை செய்து வந்த 722 தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து, தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் (Voluntary Retirement Scheme) செல்வதற்கு ஒப்புதல் தரப்பட்டதன் பேரில், அவர்களுக்கு 16,76,30,681 ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகள் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய சுப்புராயன் அவர்கள்கூட அதைப் பற்றி இங்கே எடுத்துக்காட்டினார்கள். கடந்த ஆட்சியில் திட்டமிட்டு தரம் குறைந்த பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்கி பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதால் கூட்டுறவு நூற்பாலைகளுடைய நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டது. தரமற்ற நூலை தயாரித்து விற்க முடியாமல் தத்தளிக்கும் நிலைமைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் தள்ளப்பட்டன. பணம் இல்லாமல் காசோலை வழங்கி அதன் காரணமாக நிர்வாக இயக்குநர்கள் கைது செய்யப்பட்ட நிலை எல்லாம் கடந்த ஆட்சியிலே நடைபெற்று, கூட்டுறவு நூற்பாலைகள் முடமாக்கப்பட்டதை நான் இங்கே வேதனையோடு நினைவு கூருகின்றேன்.

16 கூட்டுறவு நூற்பாலைகள் ரூ.185.25 கோடியில் புனரமைக்கும் திட்டம்

நலிவடைந்துள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 16 ஆலைகளுக்கு ரூ.185.25 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டத்தை ஏற்று, அரசு ஆணை வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் உடனடியாக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மட்டும் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி 'நபார்டு' புனரமைப்புத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. அரசு 5 ஆலைகளுக்கு ரூ.2.23 கோடி விளிம்புத் தொகை (Margin money) அளித்துள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான பஞ்சு வகைகள் 'டான்ஸ்பின்' Tamil Nadu Spinning Mills Federation மூலம் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகள் சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைப் பைசல் செய்யும் பொருட்டு ரூ.7.11 கோடி வழங்க அரசாணை பிறப்பித்து, அதிலே ரூ.1.7 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கடன் எல்லாம் எப்போது வாங்கப்பட்டது? கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட தொல்லைகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் அவர்கள்மேல் பரிதாபப்பட்டு அவர்களுடைய நிலைகளை எனக்கு அடிக்கடி உணர்த்துகின்ற பணியில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட ஈடுபட்டிருந்தார். இவைகளையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்தப் பணிகள் அரசின் சார்பாக முடுக்கிவிடப்பட்டன. ICICI, IFCI, IDBI போன்ற நிதி நிறுவனங்களுக்கு இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் செலுத்த வேண்டிய ரூ.4.4 கோடியை அரசுதான் வழங்கியது. கூட்டுறவு நூற்பாலைகள் தனியார் பஞ்சு வியாபாரிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் முதல் தவணையாக ரூ.1.65 கோடியையும்

இந்த அரசுதான் வழங்கியது. மீதியை விரைவில் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்று எவ்வளவு குறைத்துக் கொள்ளலாம் என்று ஒரு settlement வந்து, அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகையிலே ரூ.1.65 கோடியை அரசு வழங்கிவிட்டது. மீதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய இன்னல்களுக்கிடையிலே கூட இந்த அரசு திட்டங்களை, நிதி நிருவாகத்தைச் சரிவர நடத்தி வருகிறது என்பதற்கு யாரும் நமக்கு நற்சான்றிதழ் அளிப்பதற்கு முன்பாக திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்ற கே.சி.பந்த் அவர்கள், கோவிந்த வல்லப பந்த் அவர்களுடைய திருக்குமாரன் இன்றைக்கு திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்றார்.

பிப்ரவரி 19ஆம் தேதி, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர், கே.சி.பந்த் உரையாற்றும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார்:

"Projection of a plan, far beyond what the resources would warrant, leads to distortion of priorities and to thin spread of resources. I must hasten to add that a number of States are exceptions to this, for example, Goa, Gujarat, Karnataka, Kerala, Maharashtra and Tamil Nadu. Their prudence in deciding the Plan size and realising it,I am sure, makes a better impression on the public than announcing large Plans and not realising them"

– அதாவது நிதியாதாரத்திற்கு அதிகமாக திட்டத்தின் அளவை நிர்ணயிப்பது முன்னுரிமை திட்டங்களைப் பாதிக்கும். மேலும் நிதியாதாரங்களைச் சிதறச் செய்துவிடும். அப்படி இல்லாமல் சில மாநிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக, கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பெருமளவிலான திட்டங்களை அறிவித்துவிட்டு அவற்றைச் செயல்படுத்தாமல் இருப்பதைவிட விவேகமான முறையில் திட்டத்தின் அளவை நிறைவேற்றுவதுதான் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்று கூறி, தமிழ்நாடு அப்படித்தான் நிதி நிருவாகத்தை Financial Management நடத்துகிறது என்பதற்கான நற்சான்றை அவர் வழங்கியிருக்கின்றார்.

'அன்னையைச்' சந்தித்தபின்
'சென்னை'யில் விமர்சனம்

ஆனால் மேற்கு வங்கத்திலேயிருந்து வந்த ஒரு அம்மையார் மதுரையிலே ஒன்றும், மதராஸ் வீதியிலே ஒன்றுமாகப் பேசியதை நீங்கள் அறிவீர்கள். மதராஸ் என்று நானே சொல்வதற்காக மன்னிக்கவும். அடுக்குத் தொடராகச் சொல்லிவிட்டேன். சென்னையிலே ஒன்றுமாகப் பேசுகிறார்கள். சென்னையிலே "அன்னையைச்" சந்தித்த பிறகு அவர்களுடைய விமர்சனம் அதுவாக அமைந்தது.

தமிழ்நாட்டினுடைய நிதி நிருவாகத்திற்கு திட்டக்குழுவினுடைய துணைத் தலைவரே இந்தச் சான்று வழங்கிய பிறகு யாரோ மம்தா போன்றவர்கள் வந்து ஏதோ பேசிவிட்டு போனார்கள் என்பதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

டி.சுதர்சனம் : அன்னை என்று சொன்னால் இந்திராகாந்தியைத்தான் குறிக்கும். சாதாரண மானவர்கள் எல்லாம் அன்னை ஆக முடியாது.

கே. சுப்பராயன் : அன்னை கஸ்தூரிபாய் இருக்கிறார்கள்.

ச. அழகிரி : அன்னை என்று சொல்வதற்குப் பதிலாக "அக்காவை" சந்திக்கச் சென்றார்கள் என்று சொல்லுங்கள்.

முதல்வர் கலைஞர் : நான் அக்கா என்று சொன்னால் பொன்னம்மாள் அக்காவை குறிப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இங்கே உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்போது விளக்கம் அளித்தேன். இருந்தாலும் விரிவாக அதைப் பற்றிக் கூற விரும்புகிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 108 ஜாதிகளைச் சேர்த்துவிட்டு அதிலே 20% கொடுத்தால் நியாயமா என்ற ஒரு கேள்வி; இது மணி மாத்திரம் அல்ல; அந்தக் கட்சியினுடைய தலைவர் அன்புக்குரிய நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் இந்தக் கேள்வியை அடிக்கடி எழுப்பியிருக்கிறார். நம்முடைய கணேசன் அவர்களும் சென்ற முறை இங்கே பேசும்போது அதைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த 108 ஜாதிகள் என்று சொல்லும்போது மலைப்பாக இருக்கிறது. அடேயப்பா! 108 ஜாதிக்கு 20% தானா என்று ஒரு மலைப்பாக இருக்கிறது. இந்த உண்மை என்ன என்பதை அறிய வேண்டும்.

1982 ஆம் ஆண்டு அம்பாசங்கர் தலைமையிலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு. அதற்கு முன்பு முதல் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு நான் முதலமைச்சராக இருக்கும்போது அமைத்தேன். பிறகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைக்கப்பட்டது. அது 1985ஆம் ஆண்டு வழங்கிய அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வன்னியர் உள்ளிட்ட 109 ஜாதிவாரியான மக்கள் தொகை அறிவிக்கப்பட்டது. அதனுடைய விவரம் :

ஜாதி வாரியான மக்கள் தொகை

அந்த 109 ஜாதிகளுடைய மொத்த மக்கள் தொகை 1,23,34,987 பேர். அதிலே வன்னியர் மாத்திரம் 65,04,855 பேர். அதுதான் பெரும் எண்ணிக்கை. 1 கோடியே 23 இலட்சத்திலே 65 இலட்சம் பேர் வன்னியர் பெருமக்கள். அஃதன்னியில் மறவர், பிரமலைக்கள்ளர், அம்பலக்காரர், சேர்வை, அப்பநாடு கொண்டையம்பேட்டை மறவர், அம்பலக்காரர் (சூரியனூர்), கந்தர்வகோட்டை கள்ளர், கூட்டப்பால்கள்ளர், பெரியசூரியூர் கள்ளர், செம்பநாடு வளவு உட்பட உள்ள சீர்மரபினர் 17,18,532 பேர்.

இவைபோக எஞ்சியுள்ள 41,11,600 பேரில் எத்தனை ஜாதிகள் வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த எண்ணிக்கை என்ன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சலவைத் தொழிலாளிகள் 4,45,637, மருத்துவர், நாவிதர், மங்களார் என்று சொல்லப்படுகின்ற வகுப்பினர் 4,26,427, போயர், ஒட்டர் 4,09,567. ஆண்டிப்பண்டாரம் 2,23,770, இசை வேளாளர் 58,327, குலாளர் 3,01,179. குரும்பர் 1,83,689. மீனவர் 2,71,764. தொட்டிய நாயக்கர் 2,71,318. வேட்டுவகௌண்டர் 1,25,886. டொம்மாளார் 4,436. எரவல்லர் 1,377. கொரச்சார் 3,429. குருகினி செட்டி 4,225, நோக்கர் 7,559. முக்குவர் அல்லது முகையர் 4,358. பண்ணையர் 9,758. தொண்டமான் 14,036. பட்டுருக்கார் 441.(441 பேரெல்லாம் இருக்கிறார்கள். இதெல்லாம் சேர்த்துத்தான் 108 ஜாதிகள் என்கிறோம்) டோம்ஸ் 260 பேர். தொங்கபோயா 238. தொங்கவூர் கொரச்சார் 287. தேவகுடி தலையாரி 1,955. தொப்பைகுரச்சாஸ் வெறும் 51. குடுதாசைகள் 482. முண்டகுறவர் 196. முண்டகொல்லா 64. சேலம் மேலநாட்டுக்குறவர் 1,839. சேலம் உப்புக் குறவர் 2,782. சாரங்கபள்ளிக் குறவர் 54. தோகமலை குறவர் அல்லது கேப்மாரிகள் 512. வயல்பாடு அல்லது நாவல் பேடா கொறச்சான் 15. வடுவாங்கபட்டி குறவர் 381. வரகனேரிக் குறவர் 313.

இப்படி ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 14. 50,000த்திற்கு மேற்பட்ட ஆனால் 1 இலட்சத்திற்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 10. 10,000–த்திற்கு மேல் ஆனால் 50,000த்திற்குக் கீழே மக்கள்தொகை உள்ள ஜாதிகள் 19. 1000 முதல் 10,000 வரை மக்கள்தொகை உள்ள ஜாதிகள் 40. 1000–த்திற்கும் கீழே மக்கள்தொகை கொண்ட ஜாதிகள் 25. இப்படித்தான் 108 ஜாதிகளே அல்லாமல், இதிலே அதிகமான பலனைப் பெறக்கூடியவர்கள் நான் முதலிலே குறிப்பிட்ட இரண்டு வகுப்பினர்கள். வன்னியப் பெருமக்கள், அதற்கடுத்த அளவிற்கு பயனைப் பெறக்கூடியவர்கள் சீர் மரபினர் மற்றும் மறவர், பிரமலைக் கள்ளர் என்பவர்கள்தான்.

உடனடியாக 20 சதவிகிதத்தை
அறிவித்தது கழக அரசு

எனவே, 108 ஜாதிகளுக்கும் பிரித்து எல்லோருக்கும் குறைத்துக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு. இந்த 20% கொடுத்த பிறகு, பெரிய போராட்டத்தை நடத்தி அதிலே 28 பேரைப் பலி கொடுத்து அதற்குப் பிறகும் கிடைக்காத இந்த 20 சதவீதத்தை, 1989ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், உடனடியாக அந்தத் தலைவர்களை அழைத்துப் பேசி 20 சதவீதத்தை அறிவித்தது. அதன்பிறகு பட்டியலைப் பார்த்தால், நீங்கள் புரிந்து கொள்ளலாம். மருத்துவக் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில், வேளாண்மைக் கல்லூரியில் மற்றும் பல தொழிற் கல்லூரிகளில் எந்த அளவிற்கு இந்த மக்களுடைய விகிதாச்சாரம், இந்த 20% ஒதுக்கீடு காரணத்தால் உயர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அடுத்து, இங்கே பெரும்பாலான உறுப்பினர்களால் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு செய்தி, குடும்ப அட்டைகளைப் பற்றியது ஆகும். அதைப் பற்றி இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கோடிட்டுக் காட்டினார்கள். நம்முடைய ஞானசேகரன் அவர்கள்கூட ஒரு பத்திரிகையிலே அதைப்பற்றி எழுதியிருக்கிறார். எல்லோருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப் பட்டுவிட்டது என்று இந்த அரசு சொல்வது, முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிறது மாதிரி என்று சொல்லியிருக்கிறார். இந்த உதாரணத்தைப் பார்த்துவிட்டு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஏனென்றால், ஒரு முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற அளவுக்கு சோறு இருந்தால் தமிழ்நாடு எவ்வளவு வளமாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

சொல்லும்போது ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். நான் எப்போதும், சொல்லும்போதும், எழுதும்போதும் அப்படி எழுத மாட்டேன். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதுபோல என்று

சொன்னால், அந்த அளவுக்குச் சோறைக் கொட்டி, அதிலே பூசணிக்காயை மறைத்துவிடலாம். அதனாலே 'முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பதுபோல' அப்படி என்று போட்டால் சரியாக இருக்கும்.

ஏனென்றால், இலையையும் வைத்து மறைக்கலாம். இலையும் வருகிறது அதிலே மறைப்பதற்கு, சோறும் வருகிறது. அவருக்கும், மற்றும் அவரைப் போல இங்கே இந்த குடும்பக் கார்டு முறையிலே உள்ள குறைகளைச் சொன்ன அழகிரி போன்றவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் நம்முடைய அருமை நண்பர் லத்தீப் மற்றும் பழனிச்சாமி போன்றவர்களெல்லாம் சொன்ன அந்தக் கருத்திற்கு சில விளக்கங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமான விஷயமாக இருப்பதால், சில விளக்கங்களை நான் சொல்லியாக வேண்டும்.

இதுவரை தரப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை 142.79 இலட்சமாகும்

தமிழ்நாட்டினுடைய மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி உள்ள குடும்பங்கள் 136.95 இலட்சம் குடும்பங்கள். ஆனால், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குடும்பக் கார்டுகளின் எண்ணிக்கை 142.79 இலட்சம் அட்டைகள். மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலே உள்ள குடும்பங்களை விட அதிகமாகக் குடும்பக் கார்டுகள் தரப்பட்டிருப்பது 5.84 இலட்சம் ஆகும்.

இந்த அளவிற்கு அதிகமாக வரக் காரணம், ஒரே குடும்பத்தில் உள்ளவர்களே தனித்தனியாக இரண்டு கார்டுகளை, தந்தைக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றுமாக வாங்கியதால் இருக்கலாம். புதிய கார்டுகள் வழங்குவதற்கு முன்னதாக கடந்த முறைப் புழக்கத்தில் இருந்த உணவு கார்டுகளின் எண்ணிக்கை 148 இலட்சம். இதிலே போலி கார்டுகள் ஏராளமாக இருந்தது எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட்டது சுமார் 11 இலட்சம். அச்சடிக்கப்பட்டு பெற்றுக் கொள்ள யாரும் வராமல் இருக்கின்ற கார்டுகள் மட்டும் சுமார் இரண்டு இலட்சம் இருக்கின்றன. இந்த இரண்டு இலட்சம் கார்டுகளுக்கு உரியவர்கள் போலிகள் என்பதால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் வரவேயில்லை.

எனவே, பழைய குடும்ப அட்டைதாரர்களுக்கெல்லாம் எந்தவிதமான குழப்பமுமின்றி அட்டைகள் வழங்கப்பட்டு முடிவுபெற்று விட்டன. அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் இதற்கு முன்பு குடும்ப அட்டைகள் வைத்திருக்காமல் புதிதாக விண்ணப்பம் போட்டு அவ்வப்போது கார்டு பெற வேண்டியவர்கள் மாத்திரம்தான் தொடர்ந்து புதிய அட்டைகளைக் கோரி மனு கொடுத்து வருகின்றார்கள். அரசு பழைய அட்டைகளுக்கு பதிலாக மாற்று அட்டைகள் வழங்குகிற பணியிலே தொடர்ந்து அக்கறை செலுத்தி வந்ததால் புதிய மனுக்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவற்றுக்கும் கார்டுகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு முன்பு குடும்ப அட்டைகள் அல்லாமல் புதிய அட்டைகள் கோரி வந்த மனுக்கள் மாத்திரம் 22 இலட்சம் ஆகும். இந்த 22 இலட்சம் மனுக்கள் மீது ஒவ்வொரு மாவட்ட விநியோக அலுவலரும், கூட்டுறவுத்துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டபோது அது உண்மையானது என்று தெரிந்தது 4.5 இலட்சம் மனுக்கள்தான். இதிலும் 2 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 2.5 இலட்சம் மனுக்களுக்கான குடும்ப அட்டைகளும் தொடர்ந்து அச்சடித்து வழங்கப்படும் பணி முறையே நடந்து கொண்டுள்ளது.

குடும்பக் கார்டுகள் வழங்குவது முடிவுறாத திட்டமாகும்

இந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர்தான், உறுப்பினர்களை எல்லாம் சந்தித்து "எங்களுக்கு கார்டு வரவில்லை, கார்டு வரவில்லை" என்று ஆங்காங்கு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்ப அட்டைகள் பிரச்சினை இத்தோடு முடிந்துவிட முடியாது. தொடர்ந்துகொண்டே இருக்கக் கூடியது. புதிய புதிய குடும்ப அட்டைகள், தமிழகத்தில் புதிது புதிதாக குடும்பங்கள் தொடங்கப்படும்போதெல்லாம் அவர்கள் தங்களுக்கு தனியாக இந்தக் கார்டுகள் வேண்டும் என்று மனு கொடுத்துக் கொண்டேதான் இருப்பார்கள். எனவே, இது முடிவுறாத பணியாகும் என்று நான் முன்பு சொன்னதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இவ்வாறு இது, புதியதாகக் குடும்ப அட்டைகள் பெறுபவர்களுக்கு அவை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், உடனே ஒட்டுமொத்தமாக குடும்ப அட்டைகள் வழங்குவதில் கோளாறு என்று கூறுவதில் அர்த்தம் இருக்க முடியாது என்று மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறைகள் அறவே இல்லையென்று சொல்ல மாட்டேன். இங்கே எடுத்துக்காட்டுகின்ற அளவிற்குப் பூதாகாரமாக இதிலே குற்றம் இல்லை, குறையில்லை என்பதைத்தான் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

போலி கார்டுகளுடன் ஊழல் செய்யும் கூட்டம்

அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள இந்தக் குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினால், குறிப்பிட்ட குறைகள் இருக்குமேயானால் அவைகளை, இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தத் துறை நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. போலி கார்டுகளை வைத்துக்கொண்டு ஊழல் செய்வதற்காக ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. இந்தப் போலி கார்டுகளைக் கொண்டு ரேஷன் கடைகளிலே அரிசியை வாங்கி அல்லது ஏதாவது உணவுப்பொருட்களை வாங்கி அதை வேறு இடங்களிலே விற்று, அவற்றைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வேறு இடங்களிலே அதிக

விலைக்கு விற்று அதிலே சம்பாதிக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் தமிழகத்திலே அலைந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

இரண்டரை ஆண்டில் 1255 புதிய வழித்தடங்களில் பேருந்துகள்

இந்தக் குடும்ப அட்டைகளுக்கு அடுத்தப்படியாக போக்குவரத்துத் துறை பற்றித்தான் அதிகமாக இந்த அவையிலே ஆளுநர் உரையிலே பேசப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி நான்காவது முறையாக ஏற்பட்ட இந்த இரண்டரை ஆண்டுகளில் பேருந்துகள் இயக்கப்பட புதிய வழித்தடங்கள் உருவாக்கும் வகையில் 1,245 புதிய தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆட்சியிலே நஷ்டம் என்று கூறி நிறுத்தப்பட்ட வழித்தடங்களினுடைய எண்ணிக்கை 410. அதையும் இந்த ஆட்சியில் எடுத்து நடத்தியதில் மொத்தம் புதிய வழித்தடங்கள் 1,655 ஆகும். நடத்த முடியாது என்ற விட்டவையெல்லாம், தனியாருக்குச் சென்ற அந்தக் கதையெல்லாம் உங்களுக்கு தெரியும். அவைகளையெல்லாம் ஏற்று நடத்தி, நஷ்டத்தால் கைவிடப்பட்ட தடங்களையும் ஏற்று நடத்தி 1,255 புதிய வழித்தடங்கள் இந்த இரண்டரை ஆண்டு காலத்திலே இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

5 ஆண்டுகால, கடந்த கால ஆட்சியிலே வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை, 10 ஆயிரத்து 673. இந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியிலே வாங்கப்பட்ட பேருந்துகள் 7,212. போக்குவரத்துக் கழகங்களில், முந்தைய ஆட்சிக்காலத்திலே பேருந்துகளுக்கு உதிரிப் பாகங்கள் கொள்முதல் செய்தல், மேற்கூடுக் கட்டுதல் – பாடிக் கட்டுதல் – ஆகியவற்றில் ஊழல் மிகுந்து காணப்பட்டதால் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் புதிய கொள்முதல் முறை ஒன்று வகுக்கப்பட்டது. உதிரிப் பாகங்கள் கொள்முதல் முறை சீரமைக்கப்பட்டது. பேருந்து பாடிகளை, மேற்கூடுகளைக் கட்டும் பணி அந்தந்த அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனைகளிலேயே செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாற்றங்களினால் பேருந்து மேற்கூடு கட்டும் செலவு, 1995–96ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது 30 சதவீதத்திற்கு மேலாக குறைக்கப்பட்டு அந்த வகையிலே மாத்திரம் இந்த இரண்டரை ஆண்டுகளில் 48 கோடி ரூபாய் அளவிலே சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. தவிர, உதிரிப் பாகங்கள், டயர் போன்ற செலவினங்களில் 68 சதவீதம் குறைக்கப்பட்டு நடப்பாண்டில் ரூபாய் 14 கோடி அளவிலே சேமிப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்திலே பேருந்துகளை இயக்குவதற்கான பல்வேறு செலவுகள் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

சராசரியாகத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இயக்கப்படும் பேருந்து ஒவ்வொன்றும் அன்றாடம் 405 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் மூலம் அன்றாடம் இயக்கும் பேருந்துகளுடைய எண்ணிக்கை 15,346. 96–97ல் பேருந்தை ஒரு கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு டீசல் செலவு 2.12 ரூபாய் என்று இருந்தது. தற்போது அந்த செலவு 2.73 ரூபாயாக உயர்ந்துள்ளது. அதாவது 61 பைசா ஒரு கிலோ மீட்டருக்குக் கூடியுள்ளது.

பயணக்கட்டணம் இந்தியாவில் தமிழகத்திலேதான் குறைவு

அதேபோன்று வட்டிச் செலவு 96–97ல் ஒரு கிலோ மீட்டருக்கு 49 பைசாவாக இருந்தது தற்போது 71 பைசாவாக உள்ளது. சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஒரு கிலோ மீட்டருக்கு 96–97ல் 3.77 ரூபாயாக இருந்தது. தற்போது 4.48 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு சிரமங்கள் பலயிருந்தாலும்கூட, இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பயணக் கட்டணம் குறைவாக இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை. பயப்பட வேண்டாம். ஆந்திராவிலே புறநகருக்கு ஒரு கி.மீட்டருக்கு 24 காசு; கர்நாடகத்திலே 21 காசு; கேரளத்திலே 22 காசு; தமிழ்நாட்டிலே 18 காசு.

ஓரளவு சொகுசு உள்ள விரைவுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 34 காசு; கர்நாடகத்திலே 25.5 காசு; கேரளத்திலே 34 காசு; தமிழ்நாட்டிலே 20 காசு.

சொகுசுப் பேருந்துக்கு புறநகர் சொகுசுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 39 காசு; கர்நாடகத்திலே 31 காசு; கேரளத்திலே 39 காசு; தமிழ்நாட்டிலே 25 காசு.

இதையெல்லாம் சொன்னால், கட்டணமும் குறைவாக இருக்க வேண்டும், வசதியும் அதிகமாக இருக்க வேண்டும். கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்ற நிலைமையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் இந்த இரண்டு ஆசைகளிலே எந்த ஆசையைவிடப் போகிறார்கள் என்று நான் மிகுந்த பவ்வியமாகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய அரிய யோசனைகளெல்லாம் பட்ஜெட்டுக்கு முன்பு – இவ்வளவு யோசனைகளை யெல்லாம் சொன்னீர்கள். திருநாவுக்கரசு அருமையான யோசனைகளை யெல்லாம் சொன்னார். இதற்கும் ஒரு யோசனையை நீங்களெல்லாம் சொல்ல வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரும் மிக நிதானமாகச் சிந்திப்பவர். அதனால் அவரும் அதற்கு நல்ல யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்புக்கு விலை: தேர்தல் அறிக்கையில் கூறியது என்ன ?

கரும்பு விலையைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஆயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்களே, என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று சொன்னீர்கள். நானும் எப்படியோ ஏமாந்து போயிருக்கிறேன். எப்படியென்றால், இந்த ஆட்சி ஆரம்பித்தபோது நம்முடைய சுதர்சனம் தான் ஒரு கேள்வியைக் கேட்டார். ஆயிரம் ரூபாய் கரும்பு விலை என்று தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோமே, எப்பொழுது நிறைவேற்றப் போகிறீர்கள் என்று. சுதர்சனம் சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, நானும் அவர் பேச்சை நம்பி அன்றைக்கு இந்த அவையிலே விரைவில் ஆயிரம் என்பது ஒரு குறிக்கோள்தான், அதை நிச்சயமாக அடைந்து தீருவோம், மெல்ல மெல்ல அடைந்து தீருவோம் என்று சொல்லிவிட்டேன்.

அடிக்கடி பேசப் பேச அப்படி ஒரு வாசகத்தைத் தேர்தல் அறிக்கையிலேயே போட்டிருக்கிறோமா என்று – தேர்தல் அறிக்கையை எடுத்து வந்து பார்த்தேன். இது தேர்தல் அறிக்கை. 96ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, அதிலே எங்கேயும் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லவே இல்லை. இது புதுசா பிரிண்ட் பண்ணியது இல்லை. தமிழ் மாநிலக் காங்கிரஸ் ஆபீசிலேகூட இருக்கும். அது கம்யூனிஸ்ட் கட்சி ஆபிசிலேயும் இருக்கும். எடுத்துப் பார்க்கலாம். அதில் என்ன போட்டிருக்கிறோம் என்றால், "கரும்புக்கு அதிக விலை" என்கிற தலைப்பிலே, என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம் என்றால், "மற்ற மாநிலங்களைப்போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை" முதலியவைகளை ஆலையே ஏற்று கரும்பு விலையை உயர்த்தி நிர்ணயிக்கும் விதத்தில் – அதுகூட நிர்ணயிக்கச் சொல்லவில்லை – "முத்தரப்பு மாநாடு கூட்டி எல்லோருடைய யோசனையையும் பெற்று உரிய முடிவெடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்". தேர்தல் அறிக்கையிலே இதுதான் போட்டிருக்கிறோம்.

ஜி.பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை. திருச்சியில் நடைபெற்ற 96வது மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே அறிவித்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

முதல்வர் கலைஞர் : அதுவும் ஞாபகம் என்றுதான் சொல்கிறார் அவர்.

முதல்வர் கலைஞர் : மகாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கலாம். அந்தத் தீர்மானத்தை மறு பரிசீலனை பண்ணித்தான் தேர்தல் அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது. நான் அதற்காகப் பின்வாங்குவதாக அர்த்தம் அல்ல. கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன். கரும்பு விலையைப் பொறுத்தவரையிலும், ஒரு ஒப்பீடு பார்த்தால், இந்த விலை, சர்க்கரைக் கட்டுமானம் (Recovery) பிழிதிறன் என்பதை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இதில் Recovery குறைவாக இருந்தாலும்கூட, அதிகமாகக் கொடுப்பது நாம்தான்.

உதாரணமாக, ஆந்திராவில் சர்க்கரைக் கட்டுமானம் Recovery 10.22 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு கொடுக்கப்படும் விலை 630 ரூபாய். கர்நாடகாவில் recovery 10.54 சதவீதம். அங்கே 730 ரூபாய் டன் ஒன்றுக்கு விலையாகக் கொடுக்கிறார்கள். மராட்டியத்தில் recovery 11.11 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 680 ரூபாய். குஜராத்தில் சர்க்கரைக் கட்டுமானம் recovery 10.72 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 648 ரூபாய். தமிழ்நாட்டில் recovery 10ம் இல்லை, 11ம் இல்லை, 9ம் இல்லை. 8.94 சதவீதம் recovery அதற்கு நாம் தருகின்ற விலை 753 ரூபாய். எல்லா மாநிலத்தையும் விட அதிகமாகக் கொடுக்கிறோமே நாம், பாராட்ட வேண்டாமா நீங்கள்?

கூட்டுறவு மற்றும் பொதுத்துறையில் இயங்கி வரும் 19 சர்க்கரை ஆலைகளில் 1997–98ஆம் ஆண்டு முடிய 364 கோடி ரூபாய் திரண்ட நட்டம் (Cumulative loss) ஏற்பட்டுள்ளது. இந்தப் பெரிய நட்டத்திற்குக் காரணம், சர்க்கரை உற்பத்திக்கு ஆகும் செலவை ஈடுகட்ட முடியாத நிலை. 1994–95 மற்றும் 1995–96ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூடுதல் கரும்பு உற்பத்தி காரணமாக, அரவைக் காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் கட்டுமானமே குறைந்தது. (ரெக்கவரியே குறைந்து போச்சு).

1997–98ல் அரவைப் பருவத்தில் பெருமழை. அதே 1997–98 அரவைப் பருவத்தில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம். கடந்த ஆட்சியில் விரிவாக்கப் பணிகளை காலத்திலே அவர்கள் முடிக்கவில்லை என்பதும் ஒரு காரணம்.

விவசாயிகளுக்குரிய நிலுவை தீபாவளிக்கு முன்பே வழங்கப்பட்டது

கடந்த ஆட்சியில் சில ஆலைகளில் உபரி கரும்பு, இதர ஆலைகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. அதுவும் ஒரு காரணம். இப்படி தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், 14 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 1997–98ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கான மாநில அரசு மற்றும் மைய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கான வித்தியாசத் தொகையை வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்த வித்தியாசத் தொகையை வழங்க முடியாத சூழ்நிலை அந்த ஆலைகளுக்கு ஏற்பட்டது.

கரும்பு விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று 14 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு 82 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியது. எதற்காக? அந்த ஆலைகளுக்கு அல்ல, அந்த விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணத்திற்காக 82 கோடி ரூபாயை இந்த அரசு உதவியாக வழங்கியது. கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவையை, தீபாவளிக்கு முன்பே வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது. கழக அரசு வழங்கிய நிதியுதவியின் காரணமாக 70,263 கரும்பு விவசாயிகள் பயன் அடைந்தார்கள். இதற்கு மேலும் நம்முடைய ஞானசேகரன் அவர்கள், ஐ. கணேசன் போன்றவர்கள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறீர்கள் என்று சொல்லாமல் இருந்தால் நலம் என்று நம்புகின்றேன். இதற்கு மேலும் தருவதற்கு முத்தரப்பு மாநாட்டை நாம் நடத்தி அதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையில் தங்கள் மூலமாக கரும்பு விவசாயிகளுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள், ராசிபுரம் தொகுதிக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நானும் அதிர்ச்சியடைந்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அவரிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெற்றேன். அந்த அறிக்கையின்படி, ராசிபுரம் தொகுதியில் நான் எல்லாப் பணிகளையும் சொல்லவில்லை, நேரமாகும். இந்த இரண்டரை ஆண்டுகளில் நடைபெற்ற பணிகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

ராசிபுரத்தில் இரண்டரை ஆண்டில் நடைபெற்ற பணிகளின் விபரம் ஊரக வளர்ச்சித் துறை மூலம், சமத்துவபுரப் பணிகள் நடைபெற்றவை 101. செலவு 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அண்ணா மறுமலர்ச்சித் திட்டப்பணிகள் 39 – செலவு 48 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய். நமக்கு நாமே திட்டப் பணிகள் 16. செலவு 16 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய். தொகுப்பு வீடுகள் 769. செலவு 2 கோடியே 16 இலட்சம் ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 61. செலவு 33 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய். வேளாண்மைப் பொறியியல் துறைப் பணிகள் 59, செலவு ரூ.87 இலட்சத்து 33 ஆயிரம். மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இதர பணிகள் உள்ளிட்ட துறையின் மூலமாக மாத்திரம் 7,227 பணிகள், செலவு 11.18 கோடி ரூபாய்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் 47 Transformers அமைக்கச் செலவு 70 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். உயர் மற்றும் குறைந்த மின்னழுத்த இணைப்புகள் கொடுக்க 1.53 கோடி ரூபாய். உயர் அழுத்த மின் இணைப்பு 3 தர 6 இலட்சம் ரூபாய். விவசாயத்திற்கு 466 மின் இணைப்புத் தர 1 கோடியே 63 இலட்சம் ரூபாய். 162 குடிசைகளுக்கு மின் இணைப்புத் தர 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய். தெருவிளக்குகள் 396 அமைக்க 19 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். மேல்நிலை குடிநீர்த் தொட்டி 55க்கு 22 இலட்சம் ரூபாய். இப்படி மின் துறை மூலமாக ஆன செலவு 7 கோடியே 19 இலட்சம் ரூபாய்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 84 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கியதற்குச் செலவு 1 கோடியே 39 இலட்சம் ரூபாய்; வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்குச் செலவு 1.47 கோடி ரூபாய்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 514 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கியதற்கான செலவு 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

பொதுப்பணித் துறை மூலமாக சிங்களாண்டபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

இராசிபுரம் அரசு மருத்துவமனையிலே புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட 20 இலட்சம் ரூபாய்.

உடையார்பாளையம்; ஆர்.புதுப்பாளையம் மற்றும் வெண்ணந்தூர் உயர்நிலைப் பள்ளிகளிலே கூடுதல் வகுப்பறை கட்ட 15 இலட்சம் ரூபாய்.

இராசிபுரம் மேல்நிலைப் பள்ளியிலே அறிவியல் ஆய்வுக் கூடம் கட்ட 18 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக 84 கிலோ மீட்டர் நீளச் சாலை பராமரிப்புப் பணிக்காக 1.55 கோடி ரூபாய்.

போக்குவரத்துத் துறை மூலம் பேருந்து வழித்தடம் 5 புதிய பேருந்து வழித்தடங்கள் மற்றும் 23 புதிய பேருந்துகள், 33 மினி பேருந்துகள்.

முழு நேர நியாய விலைக் கடை மற்றும் 14 பகுதி நேர நியாய விலைக் கடைகள் இந்தத் தொகுதியிலே புதியதாக இரண்டரை ஆண்டுகளில் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கல்வித் துறை மூலமாக ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு பள்ளி பிளஸ் டூ தேர்வு மையமாக புதியதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

ரூ.52.41 கோடிக்கு பணிகளும், பயன்களும்

ஒட்டுமொத்தமாக, எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த இரண்டரை – மூன்று ஆண்டு காலத்தில் மொத்தமாக 52.41 கோடி ரூபாய் அளவுக்குப் பணிகளும், பயன்களும் இராசிபுரம் தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் தாமரைக்கனி அவர்கள் ஒரு புகாரைச் சொன்னார். திருவில்லிபுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். குறை இருக்கலாம். ஆனால் எப்போதுமே அவர் அதிகமாகத்தான் சொல்வார். 500 பேர் என்றால் 5000 பேர் என்பார். 500 பேர் வந்திருந்தால் 5000 பேர் வந்திருந்தார்கள்; 5000 பேர் வந்திருந்தால், 50,000 பேர் வந்திருந்தார்கள் என்றெல்லாம் கூட்டத்திலே சொல்லும்போது சொல்லலாம். 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். அதைப் பற்றி விசாரித்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் இணைப் பதிவாளரிடமிருந்து அறிக்கைப் பெற்று எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். அவர் அனுப்பிய தகவல்படி, அந்த வங்கியின் மூலமாக நுகர்பொருள் கடன் மாத்திரம் 362 பேருக்கு 61 இலட்சம்தான் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் ரிப்பேர் கடன் என்ற தலைப்பில் 130 பேருக்கு ரூ.53.88 இலட்சம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைச்சாரா கடன்கள் என்ற தலைப்பில் 31 பேருக்கு 14.02 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியின் மூலமாக இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களே ஒரு கோடியே 29 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய்தான்.

எங்கே ஊழல் நடந்தாலும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்போம்

அவர் 15 கோடி ரூபாய்க்கு அந்தச் சொஸைட்டியிலே ஊழல் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார். அதன் மீது விசாரித்த அளவில் கூட்டுறவு துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுப்பிய விவரத்தில் அங்கே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதற்கான ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கொடுக்கப்பட்ட கடனே ஒரு கோடியே சொச்ச ரூபாய்தான் என்கிறபோது 15 கோடிக்கு ஊழல் நடைபெற்றிருக்க இயலாது. இந்த ஒரு கோடி ரூபாய்க்குள் ஊழல் நடைபெற்றிருக்குமேயானால் தாமரைக்கனி அதைச் சுட்டிக் காட்டுவாரேயானால் நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன், எங்கே ஊழல் நடைபெற்றாலும், அதை இந்த அரசு நிச்சயமாக கண்டிபிடித்து நடவடிக்கை எடுக்கும் என்பதிலே தாமரைக்கனிக்கு சந்தேகம் தேவையேயில்லை என்பதை சொல்லிக் கொள்கின்றேன்.

தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகளிடத்தில் ஜப்தி நடைபெறுகிறது என்பதைப் பற்றி நம்முடைய பழனிச்சாமி அவர்களும், மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எல்லா உறுப்பினர்களும் சொல்லாவிட்டாலும், குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் ஜப்தியைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளுக்கான கடனை நாம் திருப்பிச் செலுத்தாவிட்டால்,மீண்டும் அந்த நிறுவனங்களிட மிருந்து கடனைப் பெற முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்த எளிமையான இலக்கணம்தான்.

30.6.1999 தேதியின்படி அந்தப் பகுதியிலே மொத்தமாக ஏற்படும் இந்தக் கூட்டுறவுக் கடன் தவணைத் தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய். இந்தத் தொகையில் குறைந்தது 40 சதவீதம் அளவுக்காவது வசூல் செய்தால்தான் வருகிற ஆண்டு மீண்டும் நாம் நபார்டு வங்கியின் மூலம் தொகையைப் பெற்று விவசாயிகளுக்கு மீண்டும் சலுகை வட்டியிலே கடன் தர இயலும். அந்த உரிமையை நாம் ஏன் இழக்க வேண்டும். முழுக்கக் கேட்கவில்லை. 40 சதவீதம்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட ஏற்கெனவே வசூல் செய்யப்பட வேண்டிய 43 கோடி ரூபாயில் 40 சதவீதம் என்பது 17.24 கோடி ரூபாய்தான். இதில் 17.2.1999ஆம் நாள் வரை வசூலிக்கப்பட்ட தொகை வெறும் 36 இலட்சம்தான். இன்னும் வசூலிக்க வேண்டிய தொகை 16.88 கோடி ரூபாய். இந்தக் கடன் தொகையை கட்ட தவணைத் தவறிய விவசாயிகளுடைய எண்ணிக்கை 81,553. மொத்தம் தவணை தவறிய தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய்.

கடனை திருப்பிச் செலுத்தாத பெரிய விவசாயிகளுக்கு நோட்டீஸ்

இதிலே பெரிய விவசாயிகள் 21,898 பேர். இந்தப் பெரிய விவசாயிகள் மாத்திரம் தரவேண்டிய கடன் 19 கோடியே 22 இலட்சம். பெரிய விவசாயிகள் என்றால் யார்? 5 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்கள். டிராக்டர் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்பவர்கள், நிலங்களை அன்னியில் மாத ஊதியம் பெற்று வேலையில் இருப்பவர்கள், இவர்கள்தான் பெரிய விவசாயிகள் என்ற அந்த வரம்பில் வருகிறார்கள். மொத்தம் 81,553 தவணை தவறிய விவசாயிகளில் சுமார் 60,000 பேர் சிறு விவசாயிகள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு நோட்டீஸ்கூட அனுப்பப்படவில்லை. பெரிய விவசாயிகளை 21 ஆயிரம் பேருக்கு மாத்திரம்தான் உடனடியாக கடன் தொகையை, அந்த 40 சதவீதத்தைக் கட்ட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டது. இதிலே தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில் நோட்டீஸ் மாத்திரம்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. யாரையும் ஜப்தி செய்யவில்லை.

கும்பகோணம் சங்கத்தின் மூலம், அதிலே திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், நாகை மாவட்டம் எல்லாம் இருக்கிறது. இந்த கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மாத்திரம் 60 பேர் மீது; அதாவது திருவாரூர் மாவட்டத்தில் 10 பேர் மீதும், தஞ்சை மாவட்டத்தில் 29 பேர் மீதும், நாகை மாவட்டத்தில் 21 பேர் மீதும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் எல்லாம் யார்? அவர்கள் கட்சி பெயரை சொல்ல விரும்பவில்லை நான். எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று. பெயரை மாத்திரம் சொல்கிறேன். சுவாமிநாதன் அவர் கடன் வாங்கியது 1991ல், செலுத்த வேண்டிய தொகை 1 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய். இந்தப் பெரிய விவசாயிடமிருந்து கடன் தொகையைக் கேட்கக் கூடாதா? 40 சதவீதத்தைக் கொடுக்கக் கூடாதா அவர்? சுவாமிக்கண்ணு, 74 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கினார், கொடுக்கவில்லை. சண்முகவேல் 85 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கிய கடன். எம். மாரியப்பன் 1996ல் வாங்கிய கடன் 53 ஆயிரம் ரூபாய். சம்பந்தம் 1991ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். கலியமூர்த்தி குடும்பம் 1992ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். இவர் விவசாயச் சங்கத் தலைவர்கூட. கண்ணபிரான் 1990ல் வாங்கிய கடன் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய். எஸ். செந்தில் 1992ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய். கோபாலகிருஷ்ணன் 1993ல் வாங்கிய கடன் இலட்சம் ரூபாய். திருஞானசம்பந்தம் 1996ல் வாங்கிய கடன் 59 ஆயிரம் ரூபாய். சுந்தரப்பா 1996ல் வாங்கிய கடன் 79 ஆயிரம் ரூபாய். மந்திரமூப்பனார் 1 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் 1996ல் வாங்கிய கடன். சண்முகம் 1995ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய். சேரன் குடும்பத்தார் 1995ல் வாங்கியிருக்கிறார்கள். 1991லும் வாங்கியிருக்கிறார்கள் ஒன்பது இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய். விவசாயச் சங்கக் கூட்டுக் குழுவின் தலைவர் அவர். அவர் கட்ட வேண்டாமா? 40 சதவீதம்கூட அவர் கட்ட வேண்டாமா? சுந்தரமூர்த்தி 1996ல் வாங்கிய கடன் இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். ராமகிருஷ்ணன், 1994ல் வாங்கிய கடன் இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். ஆனந்தன் 1992ல் வாங்கிய கடன் 74 ஆயிரம் ரூபாய். குணசேகரன் 1996ல் வாங்கிய கடன் 61 ஆயிரம் ரூபாய். இந்த மாதிரி வந்து கொண்டே இருக்கிறது.

சில எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் இருக்கின்றார்கள். நான் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. சொல்லிவிட்டு, அவர் முகத்தைப் பார்க்க எனக்கும் கஷ்டமாக இருக்கும். அவர்களுக்கும் கஷ்டமாக இருக்கும். இதிலே இந்த ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில் ஆர். மகாலிங்கம், பூண்டி, இவர் கட்ட வேண்டிய தொகை 18 ஆயிரத்து 902 ரூபாய். இவருக்கு 8.78 ஏக்கர் நிலம் சொந்தம். அரிசி ஆலை நடத்திக் கொண்டிருக்கிறார். அவரிடம் கேட்கக் கூடாதா? கட்டாயப்படுத்தக் கூடாதா?

பன்னீர் செல்வம், ஆச்சாள்புரம், கட்ட வேண்டிய தொகை 32 ஆயிரத்து 410 ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது, கல்யாண மண்டபம் இருக்கிறது, நெல் வியாபாரம் இருக்கிறது. உரக்கடையும் இருக்கிறது. இவ்வளவும் இருக்கிறது. சிறிய விவசாயியா இவர்?

ராஜதுரை, தேவனாஞ்சேரி, பாக்கித் தொகை 15 ஆயிரம் ரூபாய்தான் இவருக்கு 8 ஏக்கர் நிலம் இருக்கிறது. சொந்தத்தில் டிராக்டர் உள்ளது.

மணிவண்ணன், செம்பியமாதேவி 43 ஆயிரம் ரூபாய் பாக்கி. இவருக்கு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது. அஞ்சல் துறையில் பணியாற்றுகிறார்.

பெருமாள், வலங்கைமான், பாக்கி 19 ஆயிரம் ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஜவுளிக்கடை சொந்தத்தில் நடத்துகிறார்.

ஆதிதிராவிடர்களை தூண்டிவிடுவது போல் பேசுவதா?

எம். ராணி திருப்புறம்பியம், 23 ஆயிரம் ரூபாய் பாக்கி, 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. செங்கல் காளவாய் போட்டு செங்கல் வியாபாரம் செய்கிறார். இவர்களிடமிருந்தெல்லாம் பாக்கி வசூல் பண்ணக் கூடாதா? அதுவெல்லாம் ஜப்தி என்று சொல்லி பழனிச்சாமி போன்றவர்கள் எல்லாம் சொன்னால் கம்யூனிசத் தத்துவத்தை எப்போது மாற்றிக் கொண்டீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மிக முக்கியமாக டாக்டர் கிருஷ்ணசாமி ஒன்று சொன்னார். யாரோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொன்னார். நானும் கொடுத்ததாகத் தெரியவில்லை. நிதித்துறையையும் கேட்டேன், அவர்களும் கொடுக்கவில்லை யென்று சொல்கிறார்கள். ஏதோ தவறான தகவல் அது. அதேநேரத்தில் கொலை செய்யப்படுகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் அல்லது ஆதிதிராவிடர் அல்லாத மக்களாக இருந்தாலும், சாதிச் சண்டையில் கொலை செய்யப்பட்டால், ஏற்கனவே 50 ஆயிரம் ரூபாய் இருந்ததை இலட்சம் ரூபாயாக ஆக்கி, இப்போது 2 இலட்சம் ரூபாய். அவர்கள் ஜாதி இந்துக்களாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, இரண்டு பேருக்கும் 2 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இதிலே, ஏதோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் கொடுத்தோம் என்று கூறி ஆதிதிராவிட மக்களைத் தூண்டிவிடுகின்ற முறையிலே பேசுவது சரியில்லையென்றே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. லத்தீப் அவர்கள் பேசியதைப் பற்றியும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். இதற்கிடையிலே இந்த ஆளுநர் உரை வெறும் தாள் என்று சொன்னார்களே, அதில் என்னுடைய உள்ளத்தைக் கவருகின்ற ஒரு திட்டம், உணர்ச்சிமயமான ஒரு திட்டம் மனிதக் கழிவுகளை அகற்றும் இழிநிலை போக்குகின்ற ஒரு திட்டமாகும்.

அனைவரும் பாராட்டியுள்ள சமத்துவபுரத் திட்டம்

இதுபோன்றத் திட்டங்களை இந்த அரசு இன்றல்ல; நான் முதல் முறையாக முதலமைச்சராக ஆன அந்தக் காலந்தொட்டு இதுவரையிலே தொடர்ந்து நடந்து வருகின்றது. கண்ணொளி வழங்குகின்றத் திட்டம் பரவலாக தமிழகம் முழுவதும் நடத்தப்படுகின்றத்

திட்டம். கைரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா இலவசமாக வழங்கியத் திட்டம், இந்த அரசு அறிமுகப்படுத்தியத் திட்டம். தொழுநோய் இரவலருக்கு ஏறத்தாழ 4 ஆயிரம் பேர், 5 ஆயிரம் பேருக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரவலர் விடுதிகள், மறுவாழ்வு இல்லங்களை அமைத்து அவர்களைப் பராமரித்து வருகின்றத் திட்டம்; அப்பொழுது 1976க்கு முன்பே ஆரம்பித்து தொடர்ந்து நடந்து வருகின்றத் திட்டம். ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக நடத்தப்படுகின்றத் திட்டம். சமத்துவபுரம் திட்டம். நீங்கள் அனைவரும் பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள்.

ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலே முதன்முதலாக இலவசமாக கான்கிரீட்டு வீடு கட்டிய திட்டத்தை தமிழகத்திலே தி.மு.க. ஆட்சியிலேதான் நாம் அறிமுகப்படுத்தினோம். குடிசை மாற்று வாரியம், முன்பெல்லாம் குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது. அதை மாற்றி மேம்பாடு ஒரு பக்கம் நடைபெறட்டும்; 'ஸ்லம் கிளியரன்ஸ்' – இருக்கின்ற குடிசைகளை அகற்றிவிட்டு, அங்கு மாடி வீடுகளைக் கட்டித் தருவது; குடிசைவாசிகளுக்கு இந்தத் திட்டம் இந்தியாவுக்கு வழி காட்டுகின்ற முறையிலே தமிழ்நாட்டிலேதான் தொடங்கினோம்.

பிளஸ் 2 மாணவர்களுக்கு பஸ் பாஸ் இலவசமாக வழங்குகின்றத் திட்டம். இப்படிப் பல திட்டங்கள் ஏழை எளிய மக்களை அடிப்படையாக வைத்து நடத்தப்படுகிற திட்டம். எப்படி மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாவை அகற்றினோமோ, அதைப்போல மனிதக் கழிவுகளை அகற்றுகின்ற இழிநிலையை மனிதனிடமிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசிய சில பேர், பல பேர் பாராட்டியும் குறையும் சொல்லிப் பேசி இருக்கின்றீர்கள்; அதுவேறு விஷயம்; எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமே என்று எதிர்த்துப் பேசியவர்கள், இந்தத் திட்டத்தையாவது ஆதரிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் அதையும்கூட ஆதரிக்க வில்லை.

ஒரு நல்ல பார்லி மென்டேரியன் என்பது பற்றி ஏ.டி.பன்னீர்செல்வம் ஒரு தடவை சொல்லி யிருக்கிறார். அவரை ஒருவர் கேள்வி கேட்கிறார். "நீங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறீர்களே; நீங்கள் ஆக்கப்பூர்வமாக என்ன செய்தீர்கள்" என்று. ஆக்கபூர்வமாக செய்த காரியங்களை எல்லாம் சொல்கிறார். திடீரென்று கேள்வி கேட்கிறார் செய்தியாளர். "அரசு ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தருகிறது என்று சொன்னால் அதை நீங்கள் ஆதரிப்பீர்களா" என்று கேட்டார். உடனே ஏ.டி.பி. சொன்னார் "ஆதரிப்பேன். ஆதரித்துவிட்டு, வீடு கட்டித் தந்தால் மட்டும் போதாது; ஆளுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் அப்படீன்னு சொல்வேன்" என்று சொன்னார்.

அதுமாதிரி, நீங்கள் ஆக்கபூர்வமாக சொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒரு எதிர்க்கட்சி, அந்த மாதிரி ஆக்கப் பூர்வமாக ஈடுபடலாம். ஆனால், இருக்கிற எந்தத் திட்டத்தையுமே ஒரு நல்ல திட்டத்தைக்கூட ஆதரிக்காமல், இந்த கவர்னர் உரை வெறும் வெற்றுத்தாள்; வெறும் காகிதம் என்றால்; காகிதத்தில்தான் கவர்னர் உரையை அச்சடிக்க முடியும்; கரன்சி நோட்டிலேயா அச்சடிக்க முடியும்? கரன்சி நோட்டிலே அச்சடிக்கப்பட்ட கவர்னர் உரை அல்ல இது; இது காகிதத்திலேதான் அச்சடித்து இருக்கிறோம். ஏழை எளிய மக்களுடைய இரத்தத்தைத் துடைக்க, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க காலங்காலமாக இருந்து வருகின்ற இழிவைப் போக்க, மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார் – இவர்கள் எல்லாம் எதற்காகப் பாடுபட்டார்கள்? மனிதனுடைய இழிவுகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள்; அவர்களுடைய சுயமரியாதைக்காகப் பாடுபட்டார்கள். அதை மனதிலே வைத்துத்தான் இந்தத் திட்டத்தை நான் அறிவித்து இருக்கிறேன்.

டாக்டர் வா.செ. குழந்தைசாமி
தினமணி மூலம் அளித்த நற்சான்று

இந்தத் திட்டம் பற்றி நேற்றைய தினம் தினமணி பத்திரிகையிலே டாக்டர் வா.செ. குழந்தைசாமி, முன்னாள் துணைவேந்தராக அண்ணா

பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பெருந்தகை சொல்கிறார் :

"இந்த ஆண்டு ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல இருக்கலாம். ஆனால், என் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிவிப்பு. இனம் அறிய இயலாத ஒரு மனநிறைவு அங்கம் முழுவதும் அலை போலப் பரவச் செய்த ஒரு பிரகடனம். 'மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலே இருந்து விரைவில் மறையும்' என்பதுதான். மாந்தர் கழித்ததை மாந்தர் சுமக்கும் அவலத்தை அகற்றும் இந்த முடிவு ஒரு நிகழ்ச்சியை என் நினைவிற்கு கொண்டு வருகிறது. 1989–90ஆம் நிதியாண்டில் கலைஞர் தலைமையில் நடந்த தமிழகத் திட்டக்குழுக் கூட்டம் ஒன்றில் இக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. அப்போது மைய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் தேசிய அளவில் இந்தப் பழக்கத்தை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதாக முதல்வர் கலைஞரிடம் கூறினார். எனவே, அதைப்பற்றிக் குழு விவாதிக்கவில்லை. பின்னர் மைய அரசு கவிழ்ந்தது. மாநில அரசும் கலைக்கப்பட்டது. இந்தச் சாபக்கேடு தொடர்ந்தது.

கங்கை வெள்ளமும் கழுவ இயலாத இந்தக் களங்கத்தைத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்து, வயிற்றைக் கழுவி, வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் உள்ளக் குமுறல்களின் உருவகமாக அமைந்தது, பின்வரும் கவிதை என்று அவர் எழுதிய கவிதையில் 4 வரி மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்:

"மாந்தர் கழித்தலை மாந்தர் சுமந்திடும்
வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே,
போந்த சுதந்திரம், பேசு சமத்துவம்
பொய்யடா; யாவையும் ஏட்டினிலே".

இந்த ஆண்டு முதல் மனித இனத்தையே மாசுபடுத்தி வந்த ஓர் இழிவு மறைகிறது. தன்மான உணர்வுள்ள சமுதாயம் தலைகுனிய வேண்டிய ஒரு மாசு அகல்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் சரிதையில் கறை படிந்த பக்கம் கடந்த காலச் செய்தியாகிறது. ஆளுநர் உரையில் ஒரு நீண்ட வாக்கியத்தின் சிறு பகுதியாக மட்டுமே இடம் பெற்றிருக்கும் இந்த அறிவிப்பு, ஒரு சாதாரண திட்டம் அன்று; தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம். வரலாறு பதிவு செய்யத் தவறாது. இதன் தாக்கம் மற்ற மாநிலங்களிலும் எதிரொலிக்கும். வைதீக மொழியில் கூறுவதானால், வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்"

– என்று குழந்தைச்சாமி அவர்கள் இப்படி ஒரு நற்சான்றை தினமணி பத்திரிகையிலே எழுதி இருக்கிறார்.

கழிவை சுமக்கின்றவர்களுக்கு
விரைவில் மாற்று வேலை

இதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும். இதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு, கழிவைச் சுமக்கின்றவர்களுக்கு மாற்று வேலை தருகின்ற திட்டத்தினை வெகுவிரைவிலே இந்த அரசு அறிவிக்கும். 6,7 மாதங்களுக்குள்ளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, திரு.அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். என் மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை இந்த அரசு மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தியதோடு மாத்திரமல்ல; இஸ்லாமிய சமுதாயத்தின் மீது, சிறுபான்மையின சமுதாயத்தின் மீது, அது இஸ்லாமியராக இருந்தாலும், கிறிஸ்துவராக இருந்தாலும், சிறுபான்மையினருக்கு என்றைக்கும் தி.மு.க. ஆட்சி துணையாக இருக்கும்; இன்னும் சொல்லப் போனால் அமைந்திருக்கின்ற தி.மு.க. கூட்டணி என்றைக்கும் துணையாக இருக்கும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும், இங்கே வீற்றிருக்கின்ற மற்ற தோழமைக் கட்சிகளின் சார்பிலும், நான் லத்தீப் அவர்களுக்கும், இஸ்லாமிய சமூகத்தினருக்கும் தெரிவித்துக் கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே யாரும் சிறுபான்மையினர் சமுதாயம் சீரழிக்கப்பட வேண்டும்; சீர் குலைக்கப்பட வேண்டும்; வன்முறைக்கு ஆளாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்றுக் கொள்பவர்கள் அல்ல. லத்தீப் அவர்கள் சொன்ன ஒரே ஒரு குறை, தீவிரவாதிகளை வேட்டையாடுவது என்கின்ற பெயரால் அப்பாவி மக்களை துன்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இதை எடுத்துச் சொல்லச் சொல்ல – காவலர்கள் அதில் எவ்வளவு நிதானமாக நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவு நிதானமாக நடக்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே சொன்ன உதாரணத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளி வகுப்பில் ஆசிரியருடைய பேனா காணாமல் போய்விட்டது என்றால் அவர் உடனே இவன்தான் எடுத்திருப்பான் என்று 2 பேரைக் கூப்பிட்டு, "நீதான் எடுத்தாய்" என்று சொன்னால் வம்பு வரும். அதற்காக என்ன செய்வார் என்றால், அந்த ஆசிரியர் எல்லா பையன்களும் கையிலே வைத்திருக்கிற பையைத் திறந்து காட்டுங்கள் என்று சொல்வார். எல்லோரும் கையில் உள்ள பையைத் திறந்து காட்டுவார்கள். அப்போதுதான் மற்றவர்களுக்கு இவர் மீது கோபம் வராது. நம்மை திருடன் என்று நினைத்து விட்டாரே

என்று கோபம் வராது. எல்லோருடைய பைகளையும் திறந்து பார்த்து, உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதைப் போல, சில காரியங்கள் தமிழகத்திலே காவல்துறை மூலம் நடைபெற்றிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக இஸ்லாமியப் பெருமக்களானாலும் சரி, கிறிஸ்தவ பெருமக்களானாலும் சரி, மனம் வருந்தத் தேவையில்லை என்பதை எடுத்துக் காட்டிக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும்

இன்றைக்கு இந்தியா முழுவதும் ஆங்காங்கே நடைபெறுகின்ற வன்முறைகள், சிறுபான்மை சமுதாயத்திற்கு இன்றைக்கு அறைகூவல் விடுகின்ற முறையிலே நடைபெறுகின்ற வன்முறைகளையெல்லாம் இந்த மாமன்றம் கண்டித்திருக்கிறது. நம்முடைய மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசும்போது, விலைவாசி உயர்வைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். பீகார் அரசு கலைப்பை கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கண்டிப்பேன். வெளியிலேயும் கண்டிப்பேன், உள்ளேயும் கண்டிப்பேன். கவர்னர் உரையின் மூலமாகக் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும் என்பதை மணி அவர்கள் உணராதவர் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உரைக்கு நன்றியுரை பகர்ந்தவர்களுக்கும், கருத்துரை பகர்ந்தவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து சட்டப்பேரவையில் 23-2-1999 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...



குடும்பத்தைச் செம்மையாக வழிநடத்திச் செல்லும் மனவலிமையும், துன்பங்களைஎதிர்பார்த்து இன்முகத்துடன் சமாளிக்கும் தைரியமும் பெண்ணுக்கு இயற்கையளித்த கொடையாகும்.

- காந்தியடிகள்

சமுதாயச் சீர்திருத்தம்

சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரால் இங்கும் அங்கும் ஏதோ மாறுதல்களைச் செய்வதோ, ஒட்டு வேலை - மேல் பூச்சு வேலை செய்வதோ பயன்தராது. இன்றையச் சமுதாய அமைப்பையே அடியோடு ஒழித்து விட்டுப் புதியதொரு சமுதாய அமைப்பை - சாதியற்ற, உயர்தாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்.

- தந்தை பெரியார்

சாதிகள் இருந்தாக வேண்டும் என்று எண்ணுபவர்கள், எவ்வழி உலகம் செல்கிறது என்பதை அறியாத ஏமாளிகள். காலத்தின் தாக்குதலைக் கயவரின் தாக்குதல் என்றும், பகுத்தறிவின் வேகத்தைப் பாப காரியம் என்றும் தவறாகக் கருதும் பக்குவமற்றவர்கள்.

- அண்ணா

தமிழ் இலக்கியத்தில் பொருளியல் கோட்பாடுகள்

– முனைவர் ச.ரா.நடராஜன்

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. மக்களின் வாழ்வியல் நெறியிலிருந்து வடித்தெடுப்பது இலக்கியமாகும். பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, கலாச்சாரம், நாகரிகம் மற்றும் பண்பாடு இவற்றை பிரதிபலிப்பனவே இலக்கியங்கள் ஆகும். இத்தகு இலக்கியங்கள் கால வெள்ளத்துக்கு ஏற்ப பல மாற்றங்களை அடைகின்றன. சில கால வெள்ளத்தில் மூழ்கி மறைந்து விட்டன. சில இலக்கியங்கள் காலத்தை வென்று என்றும் நிலவுகின்றன. தமிழ் இலக்கியத்தை காலத்தின் அடிப்படையில் சங்ககால இலக்கியங்கள், சங்கமருவிய கால இலக்கியங்கள், காப்பியகால இலக்கியங்கள் மற்றும் உரையாளர் கால இலக்கியங்கள் என்றும், அரசியலை அடிப்படையாகக் கொண்டு பல்லவர்க்கு முந்திய கால இலக்கியம், பல்லவர்கால இலக்கியம், சோழர்கால இலக்கியம் மற்றும் நாயக்கர்கால இலக்கியம் என்று பகுக்கலாம். இலக்கியங்கள் உணர்த்தும் பொருளைக் கொண்டு அகப்பொருள் இலக்கியங்கள் என்றும் புறப்பொருள் இலக்கியங்கள் என்றும் இருகூறுகளாகவும் பகுக்கலாம். அகப்பொருள் இலக்கியங்கள் பொதுவாகத் தலைவன், தலைவி இருவருக்கும் இடையே இலங்கும் உள்ள உணர்வுகளைப் பற்றியதாகும். புறப்பொருள் இலக்கியங்கள், போர், வீரம் கொடை, புகழ், அறநெறி போன்ற புறக்கூறுகளைப் பற்றியதாகும். பொதுவாக இலக்கியங்கள் மூன்று முக்கிய வாழ்வியல் நெறிகளை – காதல், வீரம், பக்தி நெறிகளை – விளக்குகின்றன. மக்களின் வாழ்வியல் நெறிகள் அவர்தம் நாட்டின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன.

பொருளாதாரம் என்பது மார்ஷல் என்பவரின் கூற்றுப்படி மனிதனின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் ஆய்வு ஆகும்.

"Economics is the study of human behaviour in the ordinery business of life"

- Alferd Marshall



மக்களின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பொருளியல் கோட்பாடுகள் எழுந்தன. அவற்றுள் வர்த்தகம் அல்லது வாணிபத்தை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு (Mercantalism) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பருப்பொருள் ஆக்க கோட்பாடு (Psysiocracy) என இரண்டு அடிப்படை பொருளியல் கோட்பாடுகள் பொருளாதாரத்தில் இலங்குகின்றன. இக்கோட்பாடுகள் நம் தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு நின்று நிலவுகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வர்த்தக கோட்பாட்டின்படி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அல்லது முன்னேற்றம் என்பது அந்நாட்டின் கருவூலத்தில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் விலை மதிப்புமிக்க உலோகங்களின் இருப்பைக் கொண்ட நிர்ணயிக்க முடியும். இத்தகைய மதிப்புமிக்க உலோகத்தின் இருப்பைப் பெருக்க அந்த நாட்டில் சுரங்கங்கள் இருப்பின் இந்த உலோகங்களின் இருப்பினை அதிகரிக்க முடியும். சுரங்கங்கள் இல்லை எனில் தங்கத்தின் இருப்பைப் பெருக்க அண்டை நாடுகளுடன் போரிட்டு அங்கிருந்து கருவூலகத்தைக் கவர்ந்து வந்து தங்கத்தின் இருப்பினை அதிகரிக்கலாம். மேலும் பிற நாடுகளுக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து அதற்கு ஈடாக தங்கத்தைப் பெற்று நாட்டின் தங்கத்தை இருப்பை அதிகரிக்கலாம். பண்டங்களை உற்பத்தி செய்ய தொழிற்சாலைகளையும், வாணிபத்தையும் பெருக்க வேண்டும். தொழிற்சாலைகளில் பணியாற்றவும், வெளிநாடுகளுடன் வாணிபம் செய்யவும், போரில் ஈடுபடவும் மக்கள் தேவைப்படுகின்றனர். எனவே அதிக மக்கட்பெருக்கம் அதிக வளத்துக்கு வழிகாட்டும் என்று வர்த்தகக் கோட்பாட்டினர் சொன்ன இக்கருத்துக்களை வள்ளுவன்

பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறு அல்லபிற

– என்னும் குறளில் மக்கள் செல்வத்தின் சிறப்பினை வலியுறுத்தி கூறியுள்ளார்.

பகைநாட்டவருடன் போர்புரியவென நம் தமிழரசர்கள் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை மற்றும் காலாட்படைகளை வைத்திருந்தனர் என்பதற்கு நம் தமிழ் இலக்கியத்தில் சான்றுகள் பல உள.

யானைப்படையின் சிறப்பாக – போர் பயிற்சி நன்குடைய யானைகள் மலையோ என பகைவர் மருளும் உயர்ந்த உருவமுடையனவாயும், சினம் மிகுந்து போரில் பகை மறவரைக் கொன்று செருக்கி திரிந்தன என்றும் பகைவர் மேல் பாயும் புரவிகளின் குளம்பு கிண்ட எழுந்த நிறமிக்க தூளி விண்ணிடத்தே வெயிலை

மறைப்பவும். தாவுகின்ற குதிரைகளைப் பூட்டி விரைந்து செல்லும் இயல்புடைய உறுதியானத் தேர்கள், சூறைக்காற்றுப் போல் விரைந்து சுழலவும், வாட்போரின் மிகுந்த வண்ணம் உடைய காலாட்படை மறவர்தம் தோள்களாலே இயற்றும் முறை பிறழாப்போரினைச் செய்து வெற்றியை முற்றச் செய்யும் பெற்றுடையவராய் இருந்தனர் என்றும் மதுரைக் காஞ்சி சான்று பகர்கின்றது. இதிலிருந்து நம் தமிழரசர்கள் பகை நாட்டவரோடு பொருதுவதற்குப் பெரும்படை உடையவராக இருந்தனர் என்பது விளங்கும்.

அயல்நாடுகளுடன் போர்புரியவும், கடல் வாணிபம் செய்யவும் நம் தமிழரசர்கள் விசும்பினோடே கலந்து ஒன்றுபட்டுத் தோன்றுதலையுடைய பெரியதாய் மூன்று நீர்மையை உடைய கரிய கடலிடத்தே எழும் அலைகளைக் குறுக்கே பிளந்து ஓடும் நெடிய கொடி உயர்த்தப்பட்டு பாய் விரிக்கப்பட்டு இனியமுரசம் முழங்கப் பொன் மிகுதற்குக் காரணமான சிறந்த பண்டங்களை ஏற்றிக் கொணர்ந்த பெரிய மரக்கலங்கள் நிற்கும் துறைமுகத்தினை கொண்டிருந்தனர் என்று மதுரைக் காஞ்சி செப்புகின்றது. நாட்டின் வளத்தினைப் பெருக்கவும், வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்புக் கொள்ளவும் நம் தமிழகத்தில் தொண்டி, முசிறி, கொற்கை போன்ற இடங்களில் துறைமுகங்களை நிறுவி அயல்நாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கியதாக தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ஆவியன்ன ஆடைகளையும், சந்தனம், மிளகு, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களையும் வாங்கிச்செல்ல அரபியர்களும், ரோமர்களும், யவனர்களும் தமிழகத்து சந்தைகளுக்கு வந்து சென்றதற்கான சான்றுகள் பல உள்ளன.

கரிகால்பெருவளத்தான் மீது கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பாடப்பட்ட பட்டினப்பாலையின் பாடல் ஏற்றுமதி இறக்குமதிக்கு உதவும் பண்டகச்சாலை முற்றம் எவ்வாறு இருந்தது என்பதை விளங்கா நிற்கும்.

வான்முகந் நீர்மலைப் பொழியவும்
மலைப் பொழிந்த நீர் கடற்பரப்பவும்
மாரி பெய்யும் பருவம் போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன
புலிப்பொருத்தி புறம்போக்கி
நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும்பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்
கங்கை வாரியும் காவிரி பயிறும்
ஈழத்துணவும் தாழகத்தாக்கமும்
அரியவும் பெரியவும் ஈண்டி
வலிந்தலை மயங்கிய நனந்தலைமறுகின்

– என்ற பாடலில் கரிகால் பெருவளத்தானின் துறைமுகத்தில் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலிமை மிக்க குதிரைகளும், ஏற்றுமதிக்கென மிளகும், பொன்னும், மணியும், அகில் போன்ற வாசனைத் திரவியங்களும், ஆடை ஆபரணங்களும், முத்தும், கங்கை மற்றும் காவிரித்துறையில் விளைந்த விளைப்பொருட்களும் மலைப்போல் குவிந்து கிடந்தன என்னும் செய்தியிலிருந்து பன்னாட்டு வாணிபத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் தமிழகத்தில் தரப்பட்டது என்பது சொல்லாவிளங்கும்.

வாணிபத்தின் சிறப்பினைக் கருதியே திரைக்கடலோடியும் திரவியம் தேடு என்னும் பழமொழி நம் இலக்கியத்தில் இன்றும் நின்று நிலவுகிறது. பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடுவோர்க்குப் பெருவணிகன் என்னும் பட்டத்தை வழங்கி அரசன் அயல்நாட்டு வாணிபத்தை ஊக்குவித்தனர். நாட்டின் வளத்தைப் பெருக்க பல்வேறு ஆயத்தீர்வுகளையும், நிலத்தீர்வை, சுங்கவரி போன்றவற்றை வசூலித்தனர். தமிழ் மன்னர்கள் பல்வேறு நாடுகளுடன் போரிட்டு அந்த நாட்டின் செல்வங்களை கவர்ந்து வந்து தன் நாட்டின் கருவறையில் நிரப்பினர். சுமத்ரா, ஜாவா, போர்நியோ போன்ற நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்தனர் என்றும் நம் தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இக்காலத்தில் நடத்தப்படும் தொழில் மற்றும் வணிக பொருட்காட்சிகளைப் போல் நம் பழந்தமிழகத்தில் இந்திர விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டத்திலிருந்து உள்நாட்டு வாணிபத்தைப் பெருக்க இந்த விழாக்களை நம் தமிழர் பயன்படுத்திக் கொண்டனர்.

வலிமையும், வளமும் மிக்க அரசனின் கருவூலம் சுங்கப் பொருள்களாலும், பகைவரிடம் இருந்து திரையாகப் பெற்றப் பொருள்களாலும் நிறைந்து இருக்கும் என்று வள்ளுவர்

உறுபொருளும் உல்கு பொருளும் தன்ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்

– என்னும் குறளில் தெளிவுபடுத்தி உள்ளார்.

ஆற்றல் மிக்க நாடு எது என்று கேட்கும்போது வள்ளுவர்

பெரும் பொருளால் பெட்டகத்தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு

என்னும் குறளில் ஆற்றல் மிக்க நாடு பெரும் பொருள் வளத்தால் சிறப்புப் பெற்று இருக்கும் என்னும் வர்த்தகக் கோட்பாட்டினை வலியுறுத்துகின்றார்.

நம் தமிழகத்தின் சந்தைகளில் சிறுகுடி என்னும் உழவர்களும், பெருந்தொழுவர் என்னும் பெருவணிகர்களும், ஏனைய நால்வகை நிலங்களில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வாணிபம் நடத்தினர் என்றும் அவ்வாணிபம்

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற்செயின் – குறள்

தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉ மிகைக்கொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித்துவன்றிருக்கை
- பட்டினப்பாலை

வரிகளிலிருந்து வாணிபம் பெருகியது என்பதை அறியலாம். இச்சந்தைகளில் சூல் முற்றி ஒளி முதிர்ந்த சீரிய முத்துக்களும், சங்குகளும், நிலம் பொறுக்கவியலாத பொருட்குவியலையும், கெடாத பெருக்கத்தை உடைய புதுவருவாயும் இருந்தன என அறிகிறோம். நம் பழந்தமிழகத்தில் நாளங்காடியும், அல்லங்காடியும் இருந்தன.

தமிழகத்தின் கடை வீதிகள் ஆறுகிடந்தென்ன அகன்ற தெருவாகிய கடை வீதியின் இருபுறங்களில் உள்ள கடைகளில் பல்வேறு மொழி பேசும் (யவணம், அராபியம், கிரேக்கம்) பல்வேறு தேசத்து வணிக மக்களும் ஒன்று திரண்டு பேசும் மொழியின் ஆராவாரமும் சேர்ந்து அங்காடியில் பல்வேறு பண்ணியம் பகர்வோரும், வாசனை மலர்களை விற்போரும், வெற்றிலைப்பாக்கு விற்போரும் திரண்டுகொண்டிருந்தனர். மதுரை மாநகரத்து நாளங்காடி பண்டங்கள் மக்கள் கொள்ளக் கொள்ளக் குறையமாலும் வணிகர்கள் மேலும் மேலும் கொண்டுவரக் கொண்டுவர நிறைவுராமலும் இருந்தது. முகில் கொள்ளுதலால் குறையாமலும், ஆறுகள் புகுதலால் பறந்து கிடக்கும் கடலைப்போன்று நாளங்காடி இருந்ததாக மதுரைக் காஞ்சி சான்று பகர்கின்றது. இந்த அங்காடியில் சங்குகளை அறுத்து வளையல் முதலியனவாக கடைவாரும், மணிகளை துளையிடுவோரும், பொன்னை உரையிட்டு அறுதியிடும் பொன் வணிகரும், புடவை விற்பாரும், செம்பினை நிறுத்தி வாங்குவோரும், பூக்களையும் சாந்தையும் ஆராய்ந்து விற்போரும், ஓவியம் எழுதுவோரும் பிறரும் திரண்டு ஒருவர் காலோடு ஒருவர் கால் பொருந்துமாறு நின்று வாணிபம் செய்தனர். அல்லங்காடியில் நல்ல பாய்களை விரித்து காற்றுக் கொண்டு வருகின்ற மரக்கலங்களிற் கொணர்ந்த பல்வேறு பண்டங்களை இறக்கும் ஓசையும், யவணர் போன்ற அயல்நாட்டு வணிகர் நம் தமிழகத்தில் செய்த ஆடை அணிகலன்களை வாங்க உலாவுதலால் எழும் ஓசையும் கொண்டிருந்ததாக அறிய வருகின்றது. இந்த அங்காடியில் சிவந்து நுண்ணிதாகும் வடிவாலே கண்களைக் கவரும் ஒன்றிய பூத்தொழிலையுடைய ஆடைகளும், பொன்னிட்ட உடைவாளும், மாணிக்கமாலை அணிந்த மார்புடைய பெருநிதிக்கிழார்கள் வாணிகம் செய்தனர். வணிகர் வீதி பலவாய் வேறுபட்ட பண்டங்களோட உணவுப் பொருள்களும், மிக்க அழகு பெற்று மலையிடத்தும், நிலமிடத்தும், நீரிடத்தும் பிற இடங்களிலிருந்தும் பெறப்பட்ட மணி, முத்து, பவழம், பொன் முதலியவற்றை பண்ட மாற்றாக பெற்று அயல் நாடுகளினின்றும் கொணர்ந்த பண்டங்களை விற்கும் வணிகர் உறைந்தனர்.

வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉ மிகைக் கொளாது
கொடுப்பதூஉங் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்து

– என்னும் வரிகளில் இருந்து பழந்தமிழகத்தில் அல்லும் பகலும் வாணிபம்அயராது நடந்து நாட்டின் வளம் பெருக வழிகோளியது என்பது வெள்ளிடைமலை.

பருப்பொருள் ஆக்கக்கோட்பாடு

தமிழர்தம் நாகரிகம் இயற்கையோடு இயைந்ததொன்றாகும். இயற்கையை அடியொற்றிதாம் வாழ்ந்த நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பகுத்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தொழிலை வகுத்து பழங்காலத்தே (Territorial Division of Labour) நிலம் சார்ந்த பணிப்பகுபாடு செய்து வாழ்ந்தனர்.

பருப்பொருள் ஆக்கக் கோட்பாட்டினர் நாட்டின் வாட்டத்தைப் போக்கி பொருளாதாரத்துக்கு ஆக்கம் தர வல்லது விவசாயமே என்று கருதினர். ஏனெனில் விவசாயம் இயற்கையோடு இரண்டறக் கலந்துள்ளதாகும். ஒரு நெல்மணியிலிருந்து பல நெல்கதிர்கள் கிடைக்கின்றன.

இதனையே மதுரைக் காஞ்சியில் –

"தொடுப்பின் வித்தியது ஆயிரம் விளைய"

என்னும் வரியில் ஒரு விதைப்பின்கண் வித்திய விதை ஆயிரமாக விளையும் என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே உபரி உற்பத்தி என்பது விவசாயத்தில் மட்டுமே கிடைக்கும். வாணிபத்திலும் தொழிலிலும் உபரி உற்பத்திக்கு வாய்ப்பில்லை. விவசாயம் மட்டுமே செல்வத்தை ஆக்கவல்லது. விவசாயத்துக்குப் புறம்பான செயல்கள் யாவும் நாட்டு முன்னேற்றத்துக்குத் தடையாக அமைவன. விவசாய வளர்ச்சிக்கு வழிவகுக்கும்

மனிதன் பெண்களைத் தன்னுடைய சொத்தாக மதிக்கிறானே ஒழிய, தன்னைப்போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள மனித வர்க்கம் என்று மதிக்கிறானா?

– பெரியார்

செயல்கள் யாவும் பொருளாதார முன்னேற்றத்துக்கு வித்திட்டு நாட்டு முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்று கருதினார். எனவே உழவே ஒரு நாட்டினை வலிமை உடையதாக மாற்றும் என்னும் இக்கருத்தை வள்ளுவர்

பல்குடை நிழலும் தம்முடைக்கீழ்க் காண்பர்
அல்குடை நிழலவர் – என்னும் குறளில்

நெற்கதிர்களின் நிழலையே தமக்குடையதாக கொண்ட உழவர்கள் உள்ள நாட்டின் அரசன் மற்ற அரசர்களின் ஆதிக்கத்தில் உள்ள நிலத்தையும் தன் ஆதிக்கத்தில்கொண்டு வரும் வல்லமை பெறுவர் என்று கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது விவசாயமே என்பதற்குப் பின்வரும்பாடல் சான்று பகர்கி றது

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்
நெல்உயர குடி. உயரும், குடி உயர கோல் உயரும்.

இவ்வரிகள் விவசாயத்தின் வளர்ச்சி எவ்வாறு நாட்டின் வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றது என்பதைத் தெள்ளிதின் விளக்குகின்றன

உழவே நாட்டின் உயிர்நாடி என்பதை வள்ளுவர்

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – அதனால்
உழந்தும் உழவே தலை – என்றும்

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதற்றது
எழுதுவாரையெல்லாம் பொருத்து – என்று

உழுபவர் உலகத்தவர்க்கு அச்சாணி போன்றவர் என்று வள்ளுவர் கூறியுள்ள இக்கருத்துக்கள் யாவும் பருப்பொருள் ஆக்கக்கோட்பாட்டினர் கூறிய கருத்துக்கள் நம் தமிழ் இலக்கியத்தில் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நின்று நிலவி வந்துள்ளது என்பது விளங்கும்

நல அரசுகள்

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு உலகில்உள்ள எல்லா நாடுகளும் தங்களின் பொருளாதாரக் கோட்பாடு எதுவாயினும் நல அரசினை அமைப்பது தமது குறிக்கோளாக கொண்டுள்ளன. நல அரசு என்பது தம் மக்களின் நல்வாழ்விற்கு அடிப்படையான செயல்களில் ஈடுபடுவது என்பதாகும். நலஅரசுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற இக்கால பொருளியல் விற்பன்னர்களின் கருத்துக்களை வள்ளுவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பின்வரும் குறள்களில் விளக்குகின்றார்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்
சேராது இருப்பது நாடு

என்னும் குறளில் மிக்கப்பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும்பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடு என்றும்

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்தும்

என்னும் குறளில் நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள்வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறியுள்ளார்.

நல அரசுகளின் முடிவார்ந்த குறிக்கோள்

நல அரசின் குறிக்கோள் தம் நாட்டு மக்களுக்குத் தேவைப்படும் பண்டங்களை வரைவிலாது வழங்க வேண்டும். மக்களின் நுகர்ச்சியால் எந்த அளவு பண்டத்தின் அளவு, குறைகின்றதோ அந்த அளவிற்கு அந்த பண்டங்களின் அளிப்பு மிக வேண்டும். எந்த அளவிற்கு பண்டத்தின் அளிப்பு மிகுகின்றதோ அந்த அளவிற்கு அந்த நாடு வளமுடையதாக கருதப்படும் என்ற இக்கோட்பாட்டை மதுரைக் காஞ்சி பின்வருமாறு அறிவிக்கின்றது

பண்ணியம் கமழ்நறும் பூவோடு மனைமனைமறுக
மழை கொள்ளக்குறையாது புனல்புகமிகாது
கரைபொரு திரங்கு முந்நீர்ப் போலக்
கொள்ளக் கொள்ளக் குறையாது தரத்தர மிகாது

என்ற வரிகளில் முகில் முகக்க குறைவுபடாமல் ஆறுகள் பாய்வதனால் மிகுதலைச் செய்யாமல் கரையை மோதி ஒலிக்கும் கடல்போல பலரும் வந்து கொள்ளக் கொள்ள குறையாமல் பலரும் மென்மேலும் கொண்டுவர கொண்டுவர மிகாமல் நிறையுற்ற அங்காடிகள் பல மதுரையில் இருந்ததாக மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில் தெரிவித்துள்ளார். இதிலிருந்து தலையாலங்கானத்து செறுவென்ற நெடுஞ்செழியன் தன் நாட்டில் மக்களுக்குத் தேவைப்படும் எல்லாப் பண்டங்களையும் குறைவர வழங்கினான் என்பதால் நல அரசு கோட்பாடு அன்றே நம் தமிழகத்தில் இருந்துள்ளது என்பது விளங்கும்.

பொது நிதி

நல அரசினை ஏற்படுத்த நாடுகள் பொது நிதியத்தை பயன்படுத்துகின்றன. பொது நிதியம் என்பது வரி, பொதுக்கடன், பொதுச்செலவினம் மற்றும் வரவு செலவு திட்டத்தால் ஏற்படுத்தப்படுவதாகும்.

நாட்டின் நலத்துக்கு என்று நம் தமிழ் மன்னர்கள் பல்வேறு வரிகளை விதித்து தமது வருவாயை பெருக்கியுள்ளனர். தண்டல் நாயக்கர் என்போர் குசக்காணம், வண்ணான்துறை போன்றவற்றிற்கு வரிவிதித்தும் அயல் நாடுகளில் இருந்து வாங்கப்படும் பொருள்களுக்கு சுங்கவரி விதித்தும் அரசின் நிதியை ஆக்கம் செய்துள்ளனர். தமக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும்போது தன் நாட்டில் வசிக்கும் வணிகப் பெருங்குடிகளிடம் இருந்து அரசன் கடன் பெற்றான் என்பதை கோவலனின் தந்தை மாசாத்துவான் சோழ அரசனுக்குத் தேவைப்படும்போது கடன் வழங்கியுள்ளான் என்னும் சிலப்பதிகார செய்தியின் மூலம் பழந்தமிழகத்தில் பொதுக்கடன் பெறும் வழக்கம் இருந்துள்ளது என்பது தெரியவருகிறது.

இவ்வாறு பலவாறாக ஆக்கப்பெற்ற நிதியை நம் தமிழ் மன்னர்கள் மக்களின் நலத்திற்கென்று இக்காலத்தைப் போன்றே பல்வேறு வாரியங்களை – ஏரி வாரியம், பொன் வாரியம், நீர் வாரியம் – ஏற்படுத்தி நாட்டு மக்களின் வளத்தை மேம்படுத்துவதென பொதுச் செலவினங்களை மேற்கொண்டனர் என்பதில் இருந்து பொது நிதி பழந்தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு.

இவ்வாறாக நம் தமிழ் இலக்கியத்தில் இக்கால பொருளியல் கோட்பாடுகள் மலிந்து இருக்கின்றன என்பது தெள்ளிதின் விளங்கும். ★

ஆளப்பிறந்தவன் ஆண்மகன். அவன் இஷ்டத்துக்கு ஓடிப் பிழைக்க வேண்டியவள் பெண் மகள். இப்படிப் பேசிடும் பண்பு இருக்கும்வரை நம் நாடு உருப்பட முடியுமா?

– அண்ணா

பெண் உரிமை பற்றி காந்தியடிகள்

- ★ என்னைப் பொறுத்தவரையில் பெண்ணினம், ஒரு பலவீனமான பாலன்று. ஒருவேளை, நான் பெண்ணாகப் பிறந்திருந்தால், இத்தகைய உரிமையற்ற இந்நிலையையும், ஆணினத்தின் ஆணவப் போக்கையும் எதிர்த்துப் போராடியிருப்பேன்.
- ★ ஒத்த வாழ்க்கையை மேற்கொள்ளும் நிலையிலுள்ள பெண்களும், ஆண்களைப் போல் அடிப்படை உரிமையுள்ளவர்கள் என்ற சிந்தனை உருவாக வேண்டும்.
- ★ ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் சாத்வீகத்தை ஏற்றுக்கொள்ளும் சக்தி, இயற்கையால் வழங்கப்பட்டுள்ளது.
- ★ வரதட்சணை என்பது மனித உறவைக் கீழ்த்தரமாக்கி, அழிவுக்குக் கொண்டு சென்று முடமாக்கிவிடும்.
- ★ "ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு என்பது, புறப்பார்வையில் மட்டுமே; வேறு எவ்வகையிலும் பிரித்துப் பார்க்க என்னால் இயலாது".

ஒரு மானிட ஏக்கம்

★ இயற்கை இயலை
இதயத்தில் நிறுத்தி
சிந்தனையை
சிறிது கிளறிப்பார்த்தேன்.

★ பகலில் ஒளி பூமிமேல் விழுகின்றது
இரவின் இருள் பூமியை கவ்வுகின்றது
மழை பூமியை மலரச் செய்கின்றது
காற்று பூமியை ஆராதிக்கின்றது
பனி பூமிக்கு நகையைப் பூட்டுகின்றது.

ஆனால் இவைகள்
எப்பொழுதும் பூமியை
எனதென்று சொந்தம் கொண்டாடியதில்லை.

★ பகலும் இரவும் கலந்தும்
பூமிக்கு புதுவண்ணம் பூசுகின்றது
காற்றும் பனியும் சேர்ந்தும்
பூமியை ஊஞ்சலில் ஆட்டுகின்றது
மழையும் வெயிலும் கலந்தும்
பூமிக்கு சந்தனம் பூசி குளிப்பாட்டுகின்றது.

ஆனால் இவைகள்
என்னால்தான் பூமி
அழகானதென்று ஏகத்தாளமில்லை.

★ காற்று பூமிக்கு உயிர் தருகின்றது
மழை பூமிக்கு உடல் தருகின்றது
வெயில் பூமிக்கு ஆரோக்யம் தருகின்றது
பனி பூமிக்கு அழகு தருகின்றது
இரவு பூமிக்கு காதல் தருகின்றது.

ஆனால் இவைகள்
"நான்" தான் பூமிக்கு முக்கியமென
திமிராக திரிவதில்லை.

★ என்னால்தான்
நதிகள் ஓடுகின்றன
மழை இப்படி கூறுவதில்லை

ஏன் எனில்,

★ காற்று
நதியை வழி நடத்தி செல்வதை
மழை அறிந்திருக்கின்றது.

★ என்னால்தான் மலர்கள்
இதழ் விரிக்கின்றன
பனி இப்படி சொல்லுவதில்லை.

ஏன் எனில்,

★ இளம் வெயில் ஒளிக்கயிறால்
மலரின் இதழ்களை
கட்டி இழுப்பதை
பனி புரிந்திருக்கின்றது!

★ என்னால்தான் ஒளிச்சேர்க்கை
நடைப்பெறுகிறது
வெயில் இப்படி உரைப்பதில்லை.

ஏன் எனில்

★ காற்று தன்னுடலை
கவசமாக்கிக் கொண்டால்
தான் பூமியை தொட முடியாததை
வெயில் விளங்கியிருக்கின்றது.

★ என்னால்தான்
மன்மதம் மலர்ந்து முக்தியில்
மூழ்கின்றது
இரவு இப்படி இரைப்பதில்லை.

ஏன் எனில்,

★ பகல்
மன்மதனையும் ரதியையும்
தன் வீட்டிற்கு அனுப்பி கதவு
சாத்திக்கொள்ளச் சொன்ன பெருந்தன்மையை
இரவு புரிந்திருக்கின்றது.

★ என் தீண்டலினால்தான்
மழைப் பொழிகின்றது
காற்று இப்படி கர்வம் கொள்வதில்லை!

ஏன் எனில்,

★ மேகங்கள் தாகமெடுத்து
கடலை தன் வழியே
அள்ளி பருகிய அவஸ்தையை
காற்று கண்டு வைத்திருக்கின்றது!

முடிவாக,

★ "நான்" தான் முதலில் படைக்கப்பட்டேன் என
முதலிடம் பிடிக்கும்
முண்டி சண்டையும் இவைகளிடமில்லை.

★ நான்தான் இறைவனுக்கு
மிகவும் அருகிலிலுள்ளவன் – என
இவைகளிடம் ஆன்மீக சர்ச்சைகளுமில்லை.

★ நான்தான் பூமியின்மேல்
அதிக காலம் நிலைத்திருப்பேன் – என
நிலையியல் தத்துவமும் இவைகளிடமில்லை.

ஆகவே, இப்படி

★ காற்றைப் போல!...
வெயிலைப் போல!...
இருளைப் போல!...
மழையைப் போல!...
பனியைப் போல!...

★ பூமியிலுள்ள ஒவ்வொரு
மதமும் இருந்தால்
அதுவும் இயற்கையின்
ஒரு அங்கமாகி விடுமல்லவா!...

– கவிச்சிற்பி

சிதராலில் சமணர்களின் பல்கலைக் கழகம்

– டாக்டர் எஸ். பத்மநாபன்

குமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் சிதரால் மலையில் பகவதி கோயில் ஒன்று உள்ளது. இந்த மலை ஒரு காலத்தில் திருச்சாரணத்து மலை என்று அழைக்கப்பட்டு வந்தது. இங்குச் சமணத் துறவிகள் பலர் தாவளமிட்டு சமயக் கல்வியூட்டி வந்துள்ளனர் என்றும், அவர்களில் பலர் பெண்களாக இருந்தனர் என்றும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. அங்கு கற்ற மாணவர்கள் பல்வேறு திசைகளுக்குச் சென்று சமண சமயக் கருத்துக்களைப் பரப்பினார்கள் என்று கழுகுமலைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. கழுகுமலைக் கல்வெட்டுகளிலிருந்து அங்கு தங்கியிருந்த சமண சமயத் துறவிகளுள் பலர் பெண்களாக இருந்தார்கள் என்றும், அவர்களில் பெரும்பாலோர் குமரி மண்ணைச் சார்ந்தவர்கள் என்றும் அறியலாம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் அன்றைய குமரிப் பகுதிகளை ஆண்டு வந்த ஆய்குல மன்னனான விக்கிரமாதித்த வரகுணன் சமண சமயத்தைச் சார்ந்திருந்ததாக கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

சிதரால் மலையின் உச்சியில் இயற்கையான அமைந்த ஒரு தொங்கு பாறையின் அடியில் மண்டபம், தாழ்வாரம், மடப்பள்ளி இவற்றைக் கொண்ட ஒரு குகைக்கோயில் உள்ளது. இக்கோயில் மூன்று அறைகளைக் கொண்டது. முதல் அறையில் சமணர்கள் வணங்குகின்ற பத்மாவதியும், நடு அறையில் மகாவீரரும், மூன்றாவது அறையில் பார்சுவநாதரும் காணப்படுகின்றனர். இன்று பத்மாவதி தேவியை இவ்வட்டாரத்தினர் பகவதியாக வணங்குகின்றனர். தேவிக்கு மட்டுமே இங்கு பூஜை நடைபெறுகின்றது.

தொங்கு பாறையின் மேலே பாழடைந்த ஒரு கோபுரம் உள்ளது. கோயிலின் வடக்கே அமைந்த பாறையில் சமணர்கள் வணங்கும் 24 தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.

இவற்றைச் செதுக்கியவர்கள் பெயர்களும் அங்கே காணப் படுகின்றன. அச்சணந்தி, உத்தனந்தி, வரகுணன், வீரநந்தி ஆகியோர் இந்த பெயர்ப் பட்டியலில் அடங்கும். இவர்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருநெடும்பாறை, தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருநறுங்கொண்டை ஆகிய தலங்களிலிருந்து இங்கு வந்தவர்களாகும். ஆய்குல மன்னன் வரகுணன் பெயரும் இங்கு காணப்படுகின்றது.

வரகுணன் காலத்திய வேறு இரண்டு கல்வெட்டுகளும் இம்மலையிலே கிடைக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் முத்தளக்குறிச்சி நாராயண குரத்தியர், குணந்தாங்கிக் குரத்தியர் இருவரையும் குறிப்பிடுகின்றன. குரத்தியர் என்பது சமண சமயப் பெண் துறவிகளைக் குறிக்கும்.

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கழுகுமலைக் கல்வெட்டுகள் திருச்சாரணத்துமலை பள்ளியிலே கல்வி புகட்டிய பெண் துறவிகளைப் பற்றியும் அவர்களது மாணவிகள் பற்றியும் தெரிவிக்கின்றன.

திருச்சாரணத்துமலை (சிதரால்) கழுகுமலை ஆகிய இரண்டு இடங்களில் உள்ள கல்வெட்டுகளையும் ஆராய்ந்த தொல்லியல் அறிஞர் டாக்டர் சிவல் இரண்டும் ஒரே காலத்தவை என்று குறிப்பிடுகிறார்.

திருச்சாரணத்து மலை இந்திய தொல்லியல் துறையினர் பாதுகாப்பில் உள்ளது. ஆனால் இந்த பழமையான கோயில் பாழடைந்த நிலையில் காணப்படுவது வருந்தத்தக்கது. இந்த மலையிலே கற்களை வெடி வைத்து பிளந்து எடுக்கிறார்கள்.

இந்நிலை தொடர்ந்தால் அந்த பழம்பெரும் மலை கூடிய விரைவில் அழிந்துவிடும். இச்செயலை தடுத்து நிறுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க திருச்சாரணத்து மலையைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். ★

வாசனைத் திரவியப் பயிர்கள் சாகுபடி ஊக்குவிப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தின் காலநிலை, மண்வாகு, மழை அளவு முதலானவைகள் வாசனைத் திரவியப் பயிர்கள் சாகுபடிக்கு மிகவும் உகந்ததாகும். வாசனைத் திரவியப் பயிர்களில் மரவகை விதை வகைகளில் மரவகைகளைச் சார்ந்த கிராம்பு, மிளகு, ஏலம், ஜாதிக்காய், இலவங்கப்பட்டை போன்றவைகள் இம்மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் சார்ந்த பகுதிகளில் குறிப்பாக தோவாளை, கல்குளம் வட்டங்களை உள்ளடங்கிய இடங்களில் அதிக அளவில் சாகுபடியாகிறது.

இவைகளில் கிராம்பு பயிர் மாநில மொத்த சாகுபடி பரப்பான 821 எக்டேரில் 528 எக்டேர் அதாவது 64சதவிகிதம் நமது மாவட்டத்தில் சாகுபடிச் செய்யப்பட்டு 510 மெ.டன் கிராம்பு உற்பத்திச் செய்யப்பட்டு முதல்நிலை வகிக்கின்றது. அதைப் போன்று மிளகுப் பயிரும் 200க்கும் அதிகமான எக்டேர் பரப்பில் சாகுபடியாகிறது. இந்த வாசனைத் திரவியப் பயிர்களின் மேம்பாட்டுக்காக மைய அரசின் உதவியுடன் மானியத் திட்டங்கள், இம்மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாகவே செயல்பாட்டில் உள்ளது. மிளகு, கிராம்பு, இலவங்கப்பட்டை போன்ற வாசனைத் திரவியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் சுமார் 3.15 இலட்சம் செடிகள் மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த வகை வாசனைத் திரவியப் பயிர்களின் செடிகளின் உற்பத்தி இம்மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த பண்ணையில் உற்பத்தி மேற்கொள்ளப்படுவது சிறப்பம்சமாகும். மேலும் மிளகுப்பயிரில் சீரிய உழவியல் தொழில் நுட்பங்களைக் கையாண்டு மகசூலை அதிகரிக்கும் இலக்கைக் கொண்ட பரப்பு அதிகரிப்புத் திட்டத்தின்படி எக்டேருக்கு ரூ.5,000 இடுபொருட்கள் 50 சதவீத மானியம் முதல் வருடத்தில் தொடங்கி தொடர்ந்து இரண்டு மூன்றாம் வருடங்களில் முறையே ரூ. 3,000 (40 சதம்) மற்றும் ரூ.2,000 (20 சதம்) இடுபொருட்கள் மானியம் வழங்கப்படுகிறது. இது போக, சிறு செயல் விளக்கத் திடல்கள் 25 சென்ட் பரப்பில் அமைத்திட ரூ.225 மதிப்புடைய இடுபொருள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதுடன், தொடர்ந்து இரண்டு மற்றும் மூன்றாம் வருடங்களில் முறையே ரூ.140 மற்றும் ரூ.140 பராமரிப்புக்கான 50 சதவீத இடுபொருள் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோக வாடல் நோய் கட்டுப்படுத்தும் நோக்குடன் ரூ.1,860 மதிப்புடைய பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. இதுபோலவே 50 சென்ட் பரப்புக்கான கிராம்பு சீரிய உழவியல் நுட்பத்தைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் செயல் விளக்கத்திடல் அமைத்திட முதல் வருடம் ரூ.400 மதிப்புடைய இடுபொருட்கள் 33 சதவீதமானியத்திலும், தொடர்ந்து 2 முதல் 5 ஆண்டுகள் ரூ. 150 முதல் ரூ.170 மதிப்புடைய இடுபொருட்கள் 20 சதவீத மானியத்தில் வழங்கப் படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வாசனைத் திரவியப் பயிர்களின் மேம்பாட்டின் பொருட்டு சுமார் ரூ.7 இலட்சம் மதிப்பிலான மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாசனை திரவியப் பயிர்களில் கிராம்புக்குத் தற்போது கிடைக்கும் சந்தை விலை மும்பையை விடக் குறைந்துள்ளதால் இச்சாகுபடியாளர்கள் மத்தியில் ஆர்வம் குறையும் நிலை எனினும் இதற்கு நேர் மாறாக மிளகுக்கு அதிகச் சந்தை விலை கிடைப்பதன் காரணமாக இப்பயிர் சாகுபடியில் சாகுபடியாளர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். இப்பயிர் சாகுபடிப் பரப்பு அதிகரிப்புக்கு சாதகமான நிலை நிலவுகிறது மகிழ்ச்சிக்குரியது.

★ ★ ★

மகளிருக்கு சிறு வணிகக் கடன்

இலவச காங்கிரீட் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டித்தந்தது. ஏழையெளிய பெண்களுக்கு திருமண உதவி நிதி பத்தாயிரம் ரூபாய் தருவது, பெண்களுக்குச் சொத்திலே சமஉரிமை வழங்குகின்ற சட்டத்தை இயற்றியது, பெண்களுக்கு வேலை வாய்ப்பில் முப்பது சதவிகிதம் என்ற சூழ்நிலையை உருவாக்கி அதை நடைமுறைப் படுத்துவது, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து அதை நடைமுறைப் படுத்தி அதிலே வெற்றி கண்டிருப்பது இதுபோன்ற பல திட்டங்களை நாம் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கியிருக்கிறோம். அந்த வரிசையிலே ஒன்றுதான் இன்றைக்கு நாம் தொடங்குகின்ற மகளிர் சிறு வணிகக் கடன் வழங்கும் திட்டம்.

இதை கூட்டுறவுத் துறை மூலமாக நாம் செய்கிறோம். கூட்டுறவுத் துறை என்பது தம்பி மாறன் எடுத்துக்காட்டியதைப் போல ஒரு காலத்தில் மிட்டா மிராசுகள், செல்வச் சீமான்கள், கனதனவான்கள், பெரும் பணக்காரர்கள் இடத்திலே தான் இருந்தது. அப்படியிருந்தபோது இவர்கள் பெரும் பணக்காரர்கள், ஆகவே கூட்டுறவுத் துறையிலே தவறு நடக்காது என்றெல்லாம் அப்போது எண்ணப் பட்டது. நம்பப்பட்டது. ஆனால் பெரியவர்கள் செய்கிற வேலைதான் பலபேருக்குத் தெரியவில்லை என்பதைப் போல அன்றைக்குக் கனதனவான்கள் பலபேர் கூட்டுறவுத் துறையிலே கை வைத்ததுண்டு.

அதை மாற்றி இந்தத் துறை மக்களுக்காகப் பணியாற்றக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களுடைய பணியே மகேசன் பணி என்று எண்ணுகின்ற சாதாரண சாமான்ய மக்களிடத்திலே இந்தத் துறை வரவேண்டுமென்று எண்ணி அதற்கான வியூகம் வகுத்தவர் நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஏழையெளியவர்களிடத்திலே இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் வந்தாக வேண்டுமென்று எண்ணி, நடைமுறைப்படுத்த முற்பட்ட காலத்தில் மறைந்து விட்டார்கள். அந்தப் பொறுப்பு நம்முடைய தோள் மீது சுமத்தப்பட்டது.

மேகங்களைப் போல கூடுங்கள் காகங்களைப் போல பகிர்ந்து கொள்ளாதீர்

நான் பல கூட்டுறவு விழாக்களில் பேசியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே இயக்குநர்களாக இருப்பவர்களானாலும் சரி, நிர்வாகிகளானாலும் சரி, கூட்டுறவு நிறுவனங்களின் உறுப்பினர்களானாலும் சரி, கூட்டுறவு துறையிலே ஆங்காங்கு இருக்கின்ற பல்வேறு கிளைகளின் தலைவர்களானாலும் சரி அல்லது மாவட்டத் தலைவர்களானாலும் சரி இவர்கள் எல்லாம் இந்தக் கூட்டுறவுத் துறையை எப்படி கட்டிக் காக்க வேண்டுமென்றால் கூட்டுறவுத் துறை என்பது மேகங்கள் கூடி மழை பொழிவது போல் இருக்கவேண்டும். மேகங்கள் கூடினால் மழை பொழியும். காகங்கள் கூடினால் இருப்பதை பகிர்ந்துண்டு விட்டு போய் விடும். எனவே மேகங்களைப் போல கூடுங்கள் — காகங்களைப் போல கூடி இருப்பதைப் பகிர்ந்து கொண்டுபோய் விடாதீர்கள் என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை அந்தப் பொன்மொழியை கூட்டுறவுத் துறையிலே இடம் பெற்றிருக்கின்ற எல்லா கட்சி நண்பர்களையும் நம்முடைய திமுக. தோழர்கள் இடம் பெற்றிருப்பார்களேயானால் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது தான் நாம் எண்ணுகிற காரியங்களை ஏழையெளியவர்களுக்காக, சாதாரண சாமான்ய மக்களுக்காக செய்ய வேண்டுமென்று எண்ணுகின்ற அந்தச் செயல்களை நல்ல முறையிலே செய்து முடிக்க முடியும்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இது சுலபமான வட்டிக்கு — குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கின்ற ஒரு திட்டம். மாறன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல அதிக வட்டி கிடைக்குமென்பதற்காக சில திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு அந்த விளம்பரங்கள் பத்திரிகைகளிலே ஒரு பக்க விளம்பரங்களாக வந்து தொலைக் காட்சியிலே விளம்பரங்களாக வந்து அதை நம்பி தாய்மார்கள், பெரியவர்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வங்கியிலே போட்டால் குறைந்த வட்டி தானே கிடைக்கிறது, இவர்கள் 30 சதவிகிதம் தருவதாகச் சொல்கிறார்களே என்று ஏமாந்து எத்தனை நிதி நிறுவனங்கள் இலட்சக்கணக்கான மக்களை ஏமாற்றியிருக்கின்றன என்பதை நாய்

உணர்ந்து கொள்ள முடிகிறது. அதிலே வேடிக்கையான வேதனை என்னவென்றால் கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் இப்படி பல நிதி நிறுவனங்களுடைய மோசடிகளுக்கு ஆட்பட்டு நடுத்தெருவிற்கு வந்த மக்கள் மேலும் மேலும் இன்னமும் ஏமாறத் தயாராக இருக்கிறார்கள்.

அதிக வட்டி என்று சொன்னால் போதும், ஒரு ஆசை, உடனடியாக அங்கே ஓடுகிறார்கள். மீண்டும் ஏமாறுகிறார்கள். அரசாங்கம் அந்த மோசடிக் காரர்களைக் கைது செய்கிறது. அவர்களுடைய சொத்துக்களை பறிமுதல் செய்யத் திட்டமிடுகிறது. வழக்கு நீதி மன்றங்களுக்குச் செல்கிறது. அங்கே வழக்குகள் உடனடியாக முடிவதில்லை. அந்த வழக்கு முடிந்து தாங்கள் இழந்த சொத்து மீண்டும் கைக்கு வருகிற வரையிலே வட்டி அதிகமாக வருமென்று எண்ணி அன்றைக்குப் பணத்தைக் கொடுத்தவர்கள் கைபிசைந்து நிற்கிறார்கள். அரசாங்கத்திடம் முறையிடுகிறார்கள். அரசாங்கம் நீங்கள் செய்கின்ற தவறுக்கு என்ன செய்ய முடியும்? சிக்கிக் கொண்டீர்கள், உங்களைக் காப்பாற்ற அரசாங்கம் கைகொடுக்க முன் வருகிறது. ஆனால் சட்டப்படிதான் எந்தக் காரியத்தையும் செய்ய முடிகிறது.

அதிக வட்டி வருகிறதென்று யாரும் ஏமாற வேண்டாம்

நிதி நிறுவனங்களானாலும் கூட ஒரு கோடி இரண்டு கோடி அல்லது ஐம்பது அறுபது கோடி என்று மோசடி செய்திருக்கிறார்கள். ஆயிரம் கோடி மோசடி செய்தவர்களையே சுலபத்தில் நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி இன்னமும் தண்டனை வாங்கித் தர முடியவில்லை என்கிறபோது இந்த நூறு கோடி, ஐம்பது கோடி ஏமாற்றியவர்களை உடனடியாக என்ன செய்ய முடியும்? எனவே இனிமேலாவது அதிக வட்டி வருகிறதென்று எண்ணி யாரும் ஏமாற வேண்டாம், மோசடிக்கு உள்ளாக வேண்டாமென்று நான் இந்த விழாவிலே மெத்த பணிவன்போடு பொதுமக்களை — அதிக வட்டி கிடைக்குமென்று ஆசைப்படு கிறவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இதைப் பொறுத்தவரையிலே இதுவும் வட்டி விவகாரம்தான். ஆனால் எப்படி வட்டி விவகாரமென்றால் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கிறோம் என்று அழைப்பு விடுகின்ற திட்டம் இத்திட்டம். 100 ரூபாய் இன்று மாலையிலே கடன் வாங்கினால் நாளை மாலையிலே பத்து ரூபாய் வட்டி சேர்த்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையை மாற்றி ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் — அந்த ஒரு ரூபாயிலேகூட சேவைக்காகவும், சேமிப்புக்காகவும் ஐம்பது அல்லது எழுபத்தைந்து காசு வரை வைத்துக் கொண்டு மீதத்தைத் தான் வட்டியாக நீங்கள் செலுத்த வேண்டும் என்கிற அருமையான திட்டம். இது சாதாரண ஏழையெளிய பெண்களுக்காக அமைக்கப்படுகின்ற திட்டமாகும்.

இது ஏன் பெண்களுக்கு மாத்திரம் இந்தக் கடனைத் தருகிறோம் என்றால் ஆண்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவர்கள்தான் ஒழுங்காகத் திருப்பித் தருவார்கள் என்ற நம்பிக்கைதான் காரணம். தாய்மார்களுக்குத் தெரியும். ஒரு வீட்டிலே சர்க்கரையோ, உப்போ, உளுந்தோ இல்லையென்றால் பக்கத்து வீட்டிற்குச் சென்று "அடி கமலம்!" ஒரு கிண்ணம் உப்புக் கொடு. அல்லது ஒரு கிண்ணம் சர்க்கரை கொடு, நாளைக்குத் திருப்பி கொடுத்துடுறேன்" என்பார்கள். அவர்களும் கொடுப்பார்கள். அடுத்த நாள் நாணயமாக திரும்பக் கொண்டு போய் கொடுத்து விடுவார்கள். ஆனால், அந்த உப்புக்கோ சர்க்கரைக்கோ வட்டி கிடையாது. இதற்கு வட்டி உண்டு. இந்த வட்டி 100க்கு 10 என்ற முறையிலே உள்ள வட்டி அல்ல. 100க்கு ஒரு ரூபாய் தான் வட்டி.

நாணயம் என்று ஏன் அதற்குப் பெயர் வந்தது தெரியுமா? அதைப் புரிந்து கொள்ளவேண்டும். நாணயமாக மனிதன் இருந்தால்தான் அவன் பயன்படுத்துவதுதான் நாணயம். அதனால்தான் இந்த ரூபாய்க்கே நாணயம் என்று பெயர் வந்தது. தங்க நாணயம், வெள்ளி நாணயம் என்றெல்லாம் சொல்கிறோமே, நாணயமாக நடந்துகொள்ள வேண்டும் ரூபாய் விஷயத்தில். ஆடவர்கள் வேண்டுமென்று கொடுக்கக்கூடாது என்று அல்ல. அவர்கள் கொடுக்கலாம் என்று இருக்கும்போது வேறு செலவு வந்து விடும்.

ஆண்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. பேசுகின்ற நானும் ஆண் தானே. வட்டியைப் போட்டு திருப்பிக் கொடுக்கலாம் என்று போகும்போது, போகிற வழியில் ஒரு கடை இருக்கும்! அது என்ன கடையோ உங்களுக்குத் தெரியும். அல்லது வேறு யாராவது சிலர் திண்ணையிலே ஆடிக் கொண்டிருப்பார்கள். சரி நாமும் அவர்களோடு உட்கார்ந்தால் நான்கு காசு கூட கிடைக்காதா என்ற எண்ணம் வரும். இருப்பதையும் கொடுத்து விட்டு வட்டியையும் கடனையும் கொடுக்க முடியாமல் ஆண்கள் திண்டாடுவார்கள்.

பெண்கள் அப்படியல்ல. பெண்கள் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தக் கூடியவர்கள். 100க்கு 99 பேர் அப்படி. ஒன்று, இரண்டு — பெண்களிலும் சில ஆண்கள் இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் 100க்கு 99 பெண்கள் வாங்கிய கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தக் கூடியவர்கள் என்பதால்தான் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் என்று இத்திட்டத்தை நாம் தொடங்கியிருக்கிறோம்.

இதைத் தாய்மார்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் எத்தகைய பெண்கள் இன்றைய துவக்க விழாவிலே பயன்பெறுகிறார்கள் என்றால் — இன்றைக்குக் கடன் பெறுகிறவர்கள் 767 பெண்கள்; இவர்களில் ஆதிதிராவிட சமுதாய மகளிர் 141 பேர்; பிற்படுத்தப்பட்ட சமுதாய மகளிர் 307 பேர்; மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மகளிர் 226 பேர்; மற்ற வகுப்பினர் 93 பேர். இந்த 767 மகளிரில் சிறுபான்மை சமுதாயத்தை — கிறிஸ்தவ, முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிர் 107 பேர் இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடும் பெருமகிழ்ச்சியோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 767 பெண்களில் படிப்பறிவில்லாதவர்கள் 473 பேர்; ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்கள் 136 பேர். 6ஆம் வகுப்பிலிருந்து 8ஆம் வகுப்பு வரை படித்தவர்கள் 106 பேர்; 9ஆம் வகுப்புக்கு மேல் படித்தவர்கள் 52 பேர். இந்த 767 பெண்களில் திருமணம் ஆகாதவர்கள் 66 பேர். திருமணம் ஆனவர்கள் 537 பேர்; விதவைகள் 134 பேர். கணவனால் கைவிடப் பட்டவர்கள் 40 பேர்; 767 பேரில் ஊன முற்றவர்கள் 37 பேர். 767 மகளிரில் பூ விற்பனை செய்பவர்கள் 181 பேர்; காய்கறி விற்பனை செய்பவர் 249 பேர்; பழம் விற்பனை செய்பவர் 101 பேர்; துணி வியாபாரம் செய்பவர் 104 பேர்; பிளாஸ்டிக் பொருட்கள் விற்பவர்கள் 71 பேர்; இதர வியாபாரம் செய்பவர்கள் — நம்முடைய

ரெங்கநாதன் குறிப்பிட்டதைப் போல இட்லி கடை போன்ற வியாபாரங்களை செய்பவர்கள் 61 பேர்;

இந்த 767 பேரில் இன்றைக்குக் கடன் பெறுகிறவர்கள் 500 ரூபாய் கடன் பெறுகிறவர்கள் 82 பேர்; 500லிருந்து 1000 ரூபாய் வரை கடன்



பெறுகிறவர்கள் 607 பேர்; 1001லிருந்து 1500 ரூபாய் வரை கடன் பெறுபவர்கள் 65 பேர்; 1501லிருந்து 2000 ரூபாய் வரை கடன் பெறுபவர்கள் 13 பேர்; இதில் நாள்தோறும் கடனைத் திருப்பிச் செலுத்துபவர்கள் 408 பேர்; வாரந்தோறும் திருப்பிச் செலுத்துபவர்கள் 289 பேர்; 15 நாட்களுக்கு ஒருமுறை செலுத்துபவர்கள் 52 பேர்; மாதந்தோறும் செலுத்துபவர்கள் 18 பேர். ஆக மொத்தம் 767 பேர். இவர்கள் வாங்கிய கடனை நேர்மையாக, நாணயமாக இந்தக் குறைந்த வட்டி என்பதைப் பயன்படுத்திக் கொண்டு செலுத்துவார்களேயானால் வட்டி போக எஞ்சிய சேமிப்புத் தொகை திருப்பி உங்களுக்கே தரும்போது அது வட்டியோடு திருப்பித் தரப்படும் என்பதையும் நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ளலாம்.

கூட்டுறவுத் துறையே உங்களுக்குக் கடன் கொடுக்கிறது

அந்தக் காலத்திலே கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கைவேந்தன் என்று ஒரு பாடல் உண்டு. ராவணன் கலங்கினானாம். எப்படியென்றால், அப்படி கலங்கியதற்கு வேறு உதாரணமே சொல்லவில்லை அந்தகாலத்துப் புலவன். கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன். கடன் பட்டவனுடைய நெஞ்சம் அப்படி கலங்குமாம். இப்போது அப்படி இல்லை. கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கைவேந்தன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதனால் கடன், கொடுப்பது தனிப்பட்ட ஆள் இல்லை. கூட்டுறவுத் துறையே உங்களுக்குக் கடன் கொடுக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நானே உங்களுக்குக் கொடுப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நான் ஆட்சியிலே இருக்கிற வரை கூட்டுறவுத் துறை என் துறைதான்.

அதனால் நான் தம்பி நேருவைக் கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே உள்ள ஐந்தாறு கூட்டுறவு வங்கிகள் மட்டும் இதிலே பங்கேற்பது போதாது. அடுத்தடுத்து எல்லா நகரங்களிலும், பேரூராட்சிகளிலும் அதற்கடுத்து கிராமங்களிலும் இது பெருகி இன்னும் மீதமிருக்கிற இரண்டரை ஆண்டுக் காலம் — அதற்குப் பிறகும் இருக்கிறது. இருந்தாலும் இந்தத் தேர்தலில் மீதமிருக்கின்ற இரண்டரை ஆண்டுக் காலத்தில் தமிழகம் முழுவதும் மகளிர் இந்த இயக்கத்திலே சேர்ந்து கடன் பெறுகிறார்கள். அதன்மூலம் பயன்பெறுகிறார்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த இனிய துவக்க விழாவிலே கலந்து கொண்ட உங்கள் அனைவரையும் நான் வாழ்த்தி — கடன் பெறுகிறவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துவதிலே கடமை தவறாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

– கூட்டுறவுத் துறையின் சார்பில் மகளிர்
சிறுவணிகக் கடன் திட்டத்தை
சென்னை சேப்பாக்கம் தொகுதியில்
தொடங்கிவைத்து
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
ஆற்றிய உரை.

எந்தச் சமூக மக்கள் சாதி முறையை ஒழிக்க ஆர்வம் கொண்டிருக்கின்றனரோ, அந்த சமூக மக்களுக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டும். அப்படி அளித்தால், அவர்கள் நிச்சயமாய் சாதி முறையை அழித்து விடுவார்கள்.

– அம்பேத்கர்

25-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1999

“சென்னை நகர வாசிகளுக்குப் பொழுது போக்கு அம்சமாக அமைவது மெரினா கடற்கரை. அதற்கடுத்து திரையரங்குகள். இவையன்றி ஆண்டுதோறும் ஜனவரி முதல் மார்ச் வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி உள்ளபடியே நல்லதொரு பொழுதுபோக்கு அம்சமாக திகழ்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இவ்வாண்டு நடத்தப்படும் 25வது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி 7.1.99 அன்று தொடங்கப்பட்டு 50 நாட்களைக் கடந்து நடைபெற்று வருகிறது. 22 மாநில அரசுத் துறைகள், 10 மாநில அரசு நிறுவனங்கள், 29 மாவட்டங்கள், 7 பிறமாநில அரசுத் துறைகள் மற்றும் மத்திய அரசுத் துறைகள்/நிறுவனங்கள் பங்கேற்றுள்ள இப்பொருட்காட்சி முற்றிலும் மாறுபட்ட பொருட்காட்சியாக விளங்குகிறது.

பொதுவாக பொதுமக்களின் கருத்தினைக் கேட்டபொழுது, சுற்றுலாப் பொருட்காட்சியென்றால் பெரிய பேனர்கள், கட் அவுட்கள், அப்பளக் கடைகள், பஞ்சு மிட்டாய் என்ற வழக்கமான காட்சிகள் தான் இடம்பெறும் என்ற நிலை மாறி, இவ்வாண்டு புதிய அணுகுமுறையில் புதிதாகப் பலகாட்சிப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்கள். அவற்றின் விவரங்கள் சில கீழ்வருமாறு :—

ஜுராசிக் பார்க்

முற்றிலும் இயந்திர மயமாக்கப்பட்ட நான்கு வகையான டைனோசர்கள் எறியும் எப்பொருளையும் எளிதில் கௌவிப்பிடித்து அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இதுபோல் ராட்சப் பறவையும் பறக்கும் தோரணையுடன் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக அமைக்கப்பெறும் இந்த ஜுராசிக் பார்க் எல்லாத் தரப்பினரையும் கவரும் வகையில் உள்ளது.

பார்முலா டைப் கார்

ஒருவர் மற்றும் இருவர் அமர்ந்து இயக்கி



செல்லக்கூடியதும் உற்சாகமூட்டுவதுமான கோ—கார்ட் எனப்படும் மினியேச்சர் பார்முலா டைப் கார் மற்றும் மோ—பைக் இவ்வாண்டு பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளது. இதற்காக பிரத்தியேக ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான அறிவியல் அரங்கம்

பள்ளி மாணவ மாணவியரின் அறிவியல் ஆற்றலை விளக்கும் வண்ணம் பல்வேறு அற்புதக் காட்சிகள் விஞ்ஞான அறிவியல் அரங்கில் இடம் பெற்றுள்ளன.

இவ்வாண்டின் சிறப்பு அம்சமாக ஒவ்வொரு நாளும் பல்வேறு அரசு மற்றும் பொதுத் துறைகளும் தங்களின் சாதனைகளை விளக்கும் வண்ணம் "தினம் ஒரு விழா" அந்தந்தத் துறையின் சார்பாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முன்னோடியாக ஒரிசா சுற்றுலாத்துறை 23.1.99 அன்று பொருட்காட்சியில் "ஒரிசா தினம்" கொண்டாடியது.

இவையன்றி தமிழக அரசின் பல்வேறுத் துறை அரங்குகளான காவல் துறை, தீயணைப்புத்துறை, மின்வாரியம், சுற்றுலாத்துறை, சென்னை மாநகராட்சி, இந்து சமய அறநிலையத் துறை, தொழில் துறை மற்றும் பல அரசுத் துறை அரங்குகளில் முந்தைய ஆண்டுகளைப் போல் வெறும் படங்களும், பொது மக்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத விளக்கத்துடன் கூடிய காட்சிகளும், இவவாண்டு சுற்றுலாப் பொருட்காட்சியில் முற்றிலும் தவிர்க்கப்பட்டு பொது மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் செயல்முறை விளக்கங்களோடு அந்தந்தத் துறைகளின் உண்மையான சாதனைகள் விளக்கங்களோடு அமைக்கப்பட்டுள்ளன.

இவைகள் தவிர குழந்தைகள் உல்லாச உலகம், சிறுவர் இரயில், ராட்ச ராட்டினங்கள், டோரா — டோரா, சினிமா, நாடகம், கிராமியக் கலை நிகழ்ச்சிகள், நடனம், மேஜிக் ஷோ, பலகுரல் நிகழ்ச்சி, பொம்மலாட்டம், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் சிறப்பு நிகழ்ச்சிகளாக கோலப் போட்டி, பாரம்பரிய ஆடை அலங்கார அணிவகுப்பு, பாரம்பரிய உணவுக் கண்காட்சி போன்றவை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு மாதகாலத்திற்கு நடைபெறவுள்ள இச்சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி உண்மையிலேயே சென்னைவாழ் மக்களுக்குக் குறைந்த செலவில் குடும்பத்துடன் கண்டுகளிக்க ஒரு நல்ல பொழுதுபோக்கு மையமாக அமைந்துள்ளதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

★ ★ ★

"எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல.
அது போலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல.
ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும்
இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள்.
இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

— தந்தை பெரியார்

"சாதி முறையை நாம் எதிர்க்கிறோம் என்றால்,
பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும்,
நிலைத்திருக்கச் செய்வதுமான கொடிய
ஏற்பாட்டைத் தகர்க்கிறோம் என்று பொருள்.
அதாவது சமதர்மத்திற்கான சூழ்நிலையை
ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்".

— அண்ணா

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப. இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை—தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை—600 002.
தொலைபேசி:568926/568927/564906

உலக மகளிர் நாள் : 8–3–1999



நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

இந்த இதழில்

★ ரூ.1700 கோடியில் கார் தொழிற்சாலை 2
★ அறநிலையத்துறையின் பணிகள் 5
★ தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 1999–2000 9
★ இ–மெயில் 37
★ பார்வையற்றோர்க்கு உதவி முதலமைச்சர் ஆணை 41
★ பெரம்பலூர் மாவட்ட வனப்பாதுகாப்பில் மக்கள் 42
★ எங்கள் ஊர்ப் பிரச்சினை 44

திருக்குறள்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

தீயவர்கள் தீவினை செய்ய அஞ்சமாட்டார்கள்; தீவினையால் மகிழ்ச்சி ஏற்படுவதாயினும் அதனைச் செய்திடச் சான்றோர் அஞ்சி நடுங்குவார்கள்.

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

முதல் பக்க அட்டையில்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1999–2000ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றப் பேரவை முன்வைத்து உரையாற்றுகிறார்.

கடைசிப் பக்க அட்டையில்

மறைமலை நகரில் ஃபோர்டு கார் தொழிற்சாலை தொடக்க விழா.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு – 2030
பங்குனி
மார்ச் 16–31, 1999
மலர் : 30 இதழ் : 18
விலை ரூ.3

மறைமலைநகரில் ரூ. 1700 கோடியில் ஃபோர்டு கார் தொழிற்சாலை

சென்னையை அடுத்த மறைமலைநகரில் ரூ.1,700 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டுள்ள ஃபோர்டு கார் தொழிற்சாலை உற்பத்தியினை 19.3.99 அன்று மேதகு ஆளுநர் செல்வி. பாத்திமாபீவி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மணிமகுடத்தில் வைரக்கல்

தமிழக அரசு தொழில்துறை வளர முயற்சியெடுத்து வருவது பாராட்டுக்குரியது. ஃபோர்டு கார் தொழிற்சாலை தமிழகத்தின் மணிமகுடத்தில் மற்றுமொரு வைரக் கல்லாகும். ஃபோர்டு நிறுவனம் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கியிருப்பதும், மாணவர்களின் கல்விக்கு உதவித்தொகைகளை வழங்குவதும் போற்றத்தக்கது என்று விழாவில் ஆளுநர் அவர்கள் பாராட்டினார்.

முதலமைச்சர் உரை

மறைமலை நகரில் தொடங்கப்படுகின்ற இந்த ஃபோர்டு கார் தொழிற்சாலையினுடைய விழாவிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் காண்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கின்றேன்.

ஃபோர்டு மோட்டார் கம்பெனி 1903ஆம் ஆண்டு ஹென்றி ஃபோர்டு அவர்களால் முதலில் 11 பங்குதாரர்களைக் கொண்டு தொடங்கப்பட்டதாகும். அது படிப்படியாக வளர்ந்து கார் உற்பத்தியில் உலகத்திலேயே மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி, ஓர் உலக நிறுவனமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டு இருக்கின்றது.



அந்த ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் துணை நிறுவனம்தான் இந்த ஃபோர்டு இந்தியா லிமிடெட் கம்பெனி ஆகும். உலக அளவில் ஃபோர்டு மோட்டார் கம்பெனியின் 1998ஆம் ஆண்டு விற்பனையினுடைய மதிப்பு 160 பில்லியன் அமெரிக்க டாலர், அதாவது 6 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய். இந்நிர்வாகத்தில் 70 விழுக்காட்டுக்கு மேற்பட்ட விற்பனையாளர்கள் சென்னையையும் தமிழகத்தையும் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் கட்டுமானப் பணி விரைந்து நடைபெற அரசு உதவி

தமிழ்நாடு "இந்தியாவின் டெட்ராய்ட்" என்ற சிறப்பினைப் பெறுவதற்கு ஏற்ற வாய்ப்புகளைக் கொண்டுள்ளது என்பதினை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். ஃபோர்டு நிறுவனம், மேலும் 1000 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டில் தமிழகத்தில் Ford Business Service Centre, Ford Credit ஆகியவற்றைத் தொடங்கிடவும் திட்டமிட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்தக் கம்பெனிகளுடைய கட்டுமானப் பணிகளின் போது தமிழக அரசு பெரிதும் துணை நின்று உதவியுள்ளது என்பதை நாடு மிக நன்றாக அறியும். கெய்டன்ஸ் (guidance) டிட்கோ (Tidco) தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை ஆகியவை உடனுக்குடன் உதவிகளைச் செய்து தொழிற்சாலையினுடைய கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற பெரும் உதவி புரிந்துள்ளன.

இந்த ஆட்சி 1996ஆம் ஆண்டு நான்காவது முறையாக அமைந்தபிறகு தமிழகத்திலே புதிய கார் தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதற்கு மிகுந்த அளவில் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. 'மிட்சுபஷி' என்ற கார் தொழிற்சாலை இங்கே உரையாற்றிய முரசொலி மாறன் குறிப்பிட்டதைப் போல 14.4.97 அன்று தொடங்கப்பட்டு, ஓராண்டு காலத்திலே கட்டி முடிக்கப்பட்டு 14.4.98 அன்று சோதனை உற்பத்தியைத் தொடங்கி சாதனை படைத்துள்ளது.

300 கோடி ரூபாய் முதலீட்டில் 103 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலையில் 800 பேருக்கு நேரடியான வேலைவாய்ப்பும், ஏறத்தாழ 6,400 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்பும் கிடைத்து வருகின்றது.

அதேபோல ஹுண்டாய் கார் தொழிற்சாலை 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் 54.3 ஏக்கர் பரப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இரண்டு இலட்சம் கார்கள் உற்பத்தி செய்கின்ற இந்த ஹுண்டாய் கார் தொழிற்சாலையின் மூலம் 2,500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், ஏறத்தாழ 20 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கின்ற நிலை பெருகியுள்ளது. இந்தத் தொழிற்சாலை 9.10.98 அன்று தொடங்கப்பட்டது.

மூன்றாவது புதிய கார் தொழிற்சாலையாக இங்கே மறைமலை நகரில் அமைக்கப்பட்டுள்ள மகேந்திரா

ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை இன்று உற்பத்தியைத் தொடங்குகிறது என்பதை அறிந்து நான் மிக மிக மகிழ்ச்சியும், உற்சாகமும் கொள்கின்றேன்.

அரசு மேலும் பல தொழிற்சாலைகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தனை தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு மேலும் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட திட்டமிடுகின்ற இந்தக் கால கட்டத்திலேதான் சிலபேர் இந்த அரசிலே தொழிற்சாலைகளே இல்லை என்று கூறுகிறார்கள். அவர்களுக்காக பிரத்யேகமாக அவர்களுடைய பார்வை சரியாக இருப்பதற்காக ஒரு மூக்குக் கண்ணாடி தொழிற்சாலை அமைக்கலாம் என்கின்ற எண்ணம்கூட எனக்கு இருக்கின்றது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

1,700 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை, ஏறத்தாழ 2,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 10,000 பேருக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்குகிறது என்பது பெருமையுடையதாகும்.

மார்க் நிக்கல்சன் என்கிற தலை சிறந்த பத்திரிகை நிருபர், 10.4.1997 நாளிட்ட Financial Times பத்திரிகையில் "Tamil Nadu raise upto achieve car ambitions" என்னும் தலைப்பிலே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிடுகிறார்.

"Tamil Nadu's car industry is perhaps the most spectacular result of the race between States to attract foreign investment and develop new Industries".

அதாவது "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக் கிடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது" என்று குறிப்பிடுகிறார். அவர் மேலும் சொல்கிறார்.

"I don't think anywhere else in the world at this point offers this level of opportunities to the British Auto component Industries", says Mr. Bernard Fintlay; International Trade Manager for the British Society of Motor Manufacturers and Traders recently after a reconnaissance in Madras"

அதாவது "பிரிட்டிஷ் வாகன உதிரி பாகத் தொழில்களுக்குத் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற அளவிற்கு உதவிகளும் வாய்ப்புகளும் உலகத்தில் எந்தப் பகுதியிலும் கிடைக்கும் என்று நான் கருதவில்லை" என்று அவ்வளவு பெருமையாக, சிறப்பாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஃபோர்டு மோட்டார்ஸ் இந்தியா தொழிற்சாலையை இன்று தொடங்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உலகின் இரண்டாவது மிகப்பெரிய மோட்டார் நிறுவனமான ஃபோர்டு மோட்டார்ஸ் நிறுவனம் தங்கள் தொழிற்சாலையை அமைப்பதற்குச் சென்னையை தேர்ந்தெடுத்ததற்காக நான் மேலும் மகிழ்ச்சியடைகிறேன்.

6 கண்டங்களில் 200 நாடுகளில் ஃபோர்டு நிறுவனம் தனது கிளைகளை அமைத்திருப்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். உலகின் ஆட்டோமொபைல் வரலாற்றில் ஹென்ரி போர்டின் பெயர் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

முறையான தொழில் சூழல், அரசின் வெளிப் படையான கொள்கைகள், அளிக்கப்படும் சலுகைகள், பெருமளவிலான மனிதவளம் ஆகியவற்றால் தமிழ்நாடு இத்தகைய பெரிய நிறுவனங்களை ஈர்த்துள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்று, இன்னும் பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டுக்கு வரும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

இத்திட்டத்திற்குப் பொறுப்பானவர்கள் அனை வரையும் நான் பாராட்டுகிறேன். இத்திட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து மேலும் மேலும் வலிவடைய நான் வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

– விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு.முரசொலி மாறன், எம்.பி., ஃபோர்டு இந்தியா நிறுவனத்தின் நிருவாக இயக்குநர், அமெரிக்கத் துணைத்தூதர், மஹிந்திரா அண்டு மஹிந்திரா நிறுவன நிருவாக இயக்குநர் ஆகியோர் கலந்துக் கொண்டு உரையாற்றினர்.

★ ★ ★

மக்கள், என்றைக்கு மூடப்பழக்க வழக்கங்களை, அறிவுக்கு ஒத்துவராத சாதி மத வெறிகளை ஒழிக்க முற்படுகின்றனரோ அன்றுதான் நம்நாட்டின் உண்மையான விடுதலையை நாம் அடைய முடியும்.

– தந்தை பெரியார்

அறநிலையத்துறையின் பணிகள்

ஒரு கால பூசை நிதி உதவித்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் (1996-97, 1997-98) திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் 6,260 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூ.15.65 கோடி செலவிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் திருப்பணி *மற்றும் அறப்பணி நல நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஆதிதிராவிடர் மிக பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களின் குடியிருப்புகளில் உள்ள அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கிராமக் கோயில்களுக்கு ஆண்டொன்றுக்கு 50 கோயில்களுக்கு ரூ.25,000 வீதம் திருப்பணி செய்ய நிதியுதவி வழங்கும் இத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 50 திருக்கோயில்களுக்கு மொத்தம் ரூ.12.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.*

திருக்கோயில்களில் **தமிழ் புலவர்களை நியமனம்** *செய்யும் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு திருக்கோயில்களில் 110 தமிழ் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டு ரூ.1,500 தொகுப்பூதியமாக மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்பொருட்டு ஆண்டொன்றுக்கு ரூ.19.8 இலட்சம் செலவிடப்படுகிறது.*

திருக்கோயில்களில் **கருணை இல்லம்** *மற்றும்* **முதியோர்கள் பராமரிப்பு இல்லங்கள்** *உருவாக்கப்பட்டு கடந்த 2 ஆண்டுகளில் 403 சிறுவர் சிறுமியர்கள் சேர்க்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் உணவு வகை செலவுக்கு ரூ.600 வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.29.01 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.*

திருக்கோயில்களில் **தல வரலாறுகளை** *வெளியிடும் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள பல்வேறு சிறப்பும் மகத்துவமும் மிக்க திருக்கோயில்களின் தலவரலாறு - 1360, சிற்றட்டைகள் - 226, பிள்ளைத்தமிழ் - 2, கலம்பகம் - 2, தலபுராணம் - 9 என திருக்கோயில்களுக்கு வெளியிடப்பட்டுள்ளது.*

இந்து சமய கருத்துக்களைப் பரப்புதல் மற்றும் வேத ஆகமங்களைப் பாதுகாத்தல் திட்டத்தின் கீழ் 5 திருக்கோயில்களில், **வேத ஆகம பள்ளி** *துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.*

திருக்கோயில்களில் **திருப்பணி தொடங்குதல்** *திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள 1,131 திருக்கோயில்களில், கடந்த இரண்டு ஆண்டுகளில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு குடமுழக்கு செய்யப்பட்டுள்ளன.*



திருக்கோயில்களில் இலவசத் திருமணம் நடத்தும் திட்டத்தின் கீழ், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள திருக்கோயில்களின் மூலமாக கடந்த 2 ஆண்டுகளில் வறுமைக்கோட்டின் விளிம்பில் வாழ்ந்து வருகின்ற 1,031 இணைகளுக்குத் திருமணம் செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் ரூ.30.93 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

ஓதுவார் *மற்றும்* **அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம்** *உயர்த்துதல் கிராமப்புற பூசாரிகளுக்கு ஓய்வூதியம்*

வழங்குதல் திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 165 நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

அதுபோன்றே, கிராமக்கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 622 நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.500 வீதம் ரூ.3.11 இலட்சம் அரசு பணம் செலவிடப்படுகிறது.

திருக்கோயில் பணியாளர்களின் குறைகளைக் களைய நால்வர் குழு அமைக்கப்பட்டு, அக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்கிய வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முதுநிலை அல்லது திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.5.73 கோடியும், முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.3.19 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

சாதிவெறி

"நெறிகெட்ட மாந்தரால்
நீணிலம் நாளும்
தறிகெட்டு வாடுதே
தீதாய் – வெறியால்
கொலையுள்ளம் கொண்ட
கொடியவரை ஓட்டித்
தலைநிமிர்வோம் சாதிவெறி
சாய்த்து!"

சாய்ப்போம்!

– பாவலர் இடிமுரசார்

1997-98 ஆம் நிதியாண்டில், திருக்கோயில்களில் உள்ள கருணை இல்லங்கள் செலவில் 50 சதவீதத்தை அரசு ஏற்றல் திருக்கோயில்களின் கருணை இல்லங்களைக் கூடுதலாக துவக்குதல் திட்டத்தில், இதுவரையிலும் 13 திருக்கோயில்களில் கூடுதல் கருணை இல்லங்கள் துவக்கப்பட்டும், செலவினத்தில் ஐம்பது விழுக்காட்டினை மானியமாக அரசு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களில் திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை, நாலடியார் போன்ற நூல்களைப் பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இளைய தலைமுறையினருக்கு உரிய வழி முறைகளோடு தமிழ் இசை கற்பிக்க 3 சைவக்கோயில்களிலும் 7 வைணவக் கோயில்களிலும் இசைப்பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன.

நாதசுர இசை பயிற்சிப் பள்ளிகள் புதியதாக 10 திருக்கோயில்களில் ஏற்படுத்தி பள்ளி ஒன்றுக்கு 15 பேர் விதம உணவு உடை உதவித்தொகை வழங்கி பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 156 மாணவர்கள பயிற்சிப்பெற்று வருகின்றனர். இவர்களுக்கு ஆண்டொன்றக்கு ஊக்கத்தொகையாக ரூ.93,600 செலவிடப்படுகிறது.

அர்ச்சனைகளைத் தமிழில் செய்வதை ஒரு முழக்கமாக உருவாக்க வேண்டும் என்கிற இத்திட்டத்தின் கீழ், தமிழ் அருச்சனை நடைமுறைப்படுத்த மேம்படுத்த பல்வேறு கட்ட நடவடிக்கைகளும் செயல்பாடுகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓதுவார்கள், அர்ச்சகர்கள், நாதசுர இசைக்கலைஞர்கள் ஆகியோர்களுக்குத் தத்தம் பிரிவுகளில் புத்தொளி பயிற்சி நடத்தி கலைகளை வளர்க்கும் இத்திட்டத்தின் கீழ் கடந்த இரு ஆண்டுகளில் 251 நபர்கள் பயனடைந்துள்ளனர். தற்பொழுது 10 மையங்களில் 180 பயிற்சியாளர்களும், குறுகிய கால பயிற்சிகள் 34 மையங்களில் 296 பேர் பயனடைந்து வருகின்றனர்.

முதற்கட்டமாக திருவாரூர், மதுரை, காஞ்சிபுரம், பழனி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம் திருக்கோயில்களில் தலா ரூ.1.10 இலட்சம் செலவில் ஓவியங்கள், சிற்பங்கள் குறித்த ஒலி

ஒளி நாடாக்கள் தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை, மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் பழமையான ஓவியங்கள்/வண்ணக்கலவை மூலம் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ் ரூ.26.6 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உபயதாரர்கள் மூலமாக ரூ.5.92 இலட்சம் உபயமாக பெறப்பட்டு இப்பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

திருக்கோவில் நிலம், மனை மற்றும் கட்டடத்தினை அனுபவித்து வாடகை செலுத்தும் உண்மை குத்தகைதாரர்களுக்கு சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்து மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை/வாடகை உரிமை மாற்றம் செய்து ஆலயப்பதிவேடுகளில் பதிந்திடுதல் பெயர் மாற்றம் செய்தல் திட்டத்தின் கீழ், உரிய சட்டபிரிவுகளின் கீழ் இதுகாறும் 692 திருக்கோவில்களில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது, பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.



திருக்கோவில் நகைகள் சரிபார்த்தல் பணியாளர்களுக்கு மின் அளவைத் தராசு வழங்குவதற்கான திட்ட நடவடிக்கையின் விளைவாக இதுகாறும் மொத்தமுள்ள 11 நகை சரிபார்ப்பு அலுவலகங்களில் 6க்கு மின் அளவை தராசு வழங்கப்பட்டுள்ளது. மேலும் எஞ்சியுள்ள 5 நகை சரிபார்ப்பு அலுவலகங்களுக்கு மின் அளவை தராசு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சட்டப்படி அல்லாத வேறு எவரேனும் அறநிலையத்திற்குச் சொந்தமான நிலத்தினை வைத்திருப்பின் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் குறித்தான சட்டதிருத்தங்கள் செய்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1998–99 ஆம் ஆண்டு புதிய திட்டங்கள்

திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மற்றும் பார்வை மையத்திற்கு ரூ.48.45 இலட்சம் செலவில் இணைப்புக் கட்டடம் கட்டப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக நடப்பு நிதியாண்டில் (1998-99) ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள 30,000 கல்வெட்டுக் களில் உள்ள குறிப்புகளை அச்சிட்டு புத்தகமாக வெளியிடப் படவுள்ளது. முதற்கட்டமாக நடப்பு ஆண்டில் 10,000 கல்வெட்டுக் குறிப்புகளைப் புத்தகமாக அச்சிட்டு வெளியிட நடப்பு நிதியாண்டில் ரூ.8.25 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அறநிலையத்துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக 100 திருக்கோயில்களுக்கு ரூ.25 இலட்சம் நிதியுதவி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது ஆண்டுதோறும் திருக்கோயில் திருப்பணிக்காக வழங்கி வரும் அரசு மானியத்தை ரூ.45 இலட்சத்திலிருந்து

ரூ.75 இலட்சமாக உயர்த்தப்பட்டு வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற 50 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழக்கு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடல்பெற்ற மங்களாசாசனம் மற்றும் சரித்திரப்புகழ் வாய்ந்த 20 திருக்கோயில்களில் நாதசுரம் தவில் மற்றும் தாளம் கலைஞர்கள் பணியிடம் புதியதாக தோற்றுவித்து செயல்பட நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ரூ.21 இலட்சம் செலவில் 99 திருக்கோயில்களில் கூடுதலாக 100 ஓதுவார்கள் நியமனம் செய்யும் அறிவிப்பின் பேரில் நடவடிக்கை மேற்கொண்டு ஓதுவார் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1000 திருக்கோயில்களில் ஒரு கால பூசை நிதியுதவித் திட்டம் கூடுதலாக அமுல்படுத்தும் அறிவிப்பின் பேரில், இதுகாறும் நடப்பு நிதியாண்டில் மட்டும் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 350 திருக்கோயில்களுக்கு ரூ.87,50,000 செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களில் வழிபடுவோர் தங்குவதற்காக பலநோக்கு தங்கும் விடுதிகள் (Multipurpose dormitor) தலா ரூ.5 இலட்சம் என வரையறுக்கப்பட்ட செலவில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சைவத்திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்ய பிரபந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்தி நடத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களில் தமிழ்புலவர்களை நியமனம் செய்யும் திட்டத்தின் கீழ் 40 புலவர்கள் ரூ.1,500 தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இலவச திருமணத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் இத்துறை ஆளுகையின் கீழ் உள்ள வசதி வாய்ப்புகள் உள்ள திருக்கோயில்கள் மூலம் 142 இணைகளுக்குத் தலா ரூ.3,000 வீதம் ஆக மொத்தம் ரூ.4,26,000 செலவிடப்பட்டுள்ளது.

திருக்கோயில் சொத்துக்கள் மற்றும் பணியாளர்கள் விவரங்களைக் கணிப்பொறியில் சேகரித்தல் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில், தலைமையிடத்திற்கு ரூ.3.44 இலட்சமும், 10 சார்நிலை அலுவலகங்களுக்கு ரூ.8.44 இலட்சத்திலும் ஆக கூடுதல் தொகை ரூ.11.88 இலட்சத்தில் கணிப்பொறி வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அறநிலையத்துறை ஆற்றிவரும் அரும்பணிகளில் சில குறிப்பிடப்பட்டுள்ளன.

சமத்துவபுரமே ஆனந்தபுரம்

சமத்துவ புரம் வளரட்டுமே!
"சகோதரத்துவம்" எங்கும் பரவட்டுமே!
"சமாதானம்" என்றும் நிலைக்கட்டுமே!
"சாதி" சண்டைகள் இனி அழியட்டுமே!
சமுதாய ஒற்றுமை ஓங்கட்டுமே!
வேற்றுமைகளை வேரோடு ஒழிப்போமே!
சாற்றுவோமே தரணி யெங்கும்,
"ஒன்றே குலம்", "ஒருவனே தெய்வம்"
என்றே பரப்பு வோமே!

தீண்டாமை ஒழித்திட தம்
வாழ் நாளும் போராடிய
ஆன்றோரில் 'காந்தி மகான்'
கனவு நனவாகிறது
சமத்துவ புரத்திலே
சாதிகள் இல்லையடி பாப்பா,
"சாடி" பாடிய பாரதியே
சாதியில்லா சமத்துவ புரத்தை
நேரடி காண நீ யில்லையே!

ஆடுவோமே! "பள்ளு பாடுவோமே"
"ஆனந்தபுரத்தில்" அனைவரும்
"ஒன்றே" என்ற பரவச கீதம்
பாடி மகிழ்வோமே!

பாரதி கண்ட கனவை
நனவாய் சமத்துவ புரத்தை
"சாரதி" யாய் நின்று நிறைவேற்றும்
தமிழக தந்தையே!
"கலைஞரே" நின் கொற்றம்
வாழிய! வாழியவே!

- சவுகத் அலி

தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள், 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1999 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாளன்று ஆற்றும் உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட்டு உண்மையான கூட்டாட்சி தத்துவம் உருவாக்கப்படவும், மாநில சுயாட்சி மலரவும், மத்திய ஆட்சி மொழிகளாக அனைத்து தேசிய மொழிகள் இடம் பெறவும், முதல் கட்டமாக தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி கிடைத்திடவும், திராவிட இயக்கத்தின் சமூக நீதிக் கொள்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிடவும், ஏழை எளிய நடுத்தர மக்களின் முன்னேற்றத்தையும், சிறுபான்மை சமுதாயத்து மக்களின் பாதுகாப்பையும், மத நல்லிணக்கம் மனித நேயம் இணைந்த சமூக ஒற்றுமையையும்

பேணிக் காத்திடவும் கழக அரசு தொடர்ந்து அண்ணா வழியில் அயராது பணியாற்றும் என்ற உறுதி மொழியுடன் 1998–99ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1999–2000ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீடுகளையும் இந்த அவைமுன் வைக்கிறேன்.

பொருளாதார வளர்ச்சி

2. நமது தமிழகத்தின் பொருளாதார நிலை 1997–98 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1998–99 ஆம் ஆண்டில் வளரும் பிறையாகவே திகழ்கிறது எனலாம். 1993–94 ஆம் ஆண்டின் விலைகளின் அடிப்படையில், சென்ற ஆண்டு 6.31 விழுக்காடாக இருந்த மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Gross State Domestic Product) இந்த ஆண்டில் 6.78 விழுக்காடாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வோர் தொகை கிராமப் பகுதிகளில் 1993–94ல் 32.48 விழுக்காடாக இருந்து 1997–98–ல் 24.72 விழுக்காடாகவும், நகர்ப் பகுதிகளில் 39.77 விழுக்காடாக இருந்து 32.70 விழுக்காடாகவும் குறைந்துள்ளது. மொத்தத்தில் தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்வோரின் தொகை 35.03 விழுக்காடாக இருந்து 27.58 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

மத்திய மாநில நிதி உறவுகள்

3. 1997 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசு அறிவித்தவாறு மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 விழுக்காட்டினை 1–4–96 ஆம் நாளிலிருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இன்னமும் நிறைவேற்றப் படவில்லை என்பதும், ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கு இதுவரை நிதியுதவி அளிக்கப்படவில்லை என்பதும் பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

4. மத்திய அரசின் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வருமான வரி மற்றும் மத்திய. கலால் வரி ஆகியவற்றிலிருந்து வருவாயை அதிகரிக்க மேல் வரி மற்றும் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து வரும் ஏறத்தாழ ரூ.3,000 கோடி கூடுதல் வருவாயையும் மாநிலங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகின்றேன்.

5. வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படையை நடப்பு நிதி ஆண்டு முதல் மத்திய அரசு மாற்றியுள்ளதால் திட்டங்களை செம்மையாகச் செயல்படுத்தி வறுமையின் அளவை குறைத்துள்ள தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய பங்கு ஏதோ ஒரு "விபரீத பரிசு" போல 7.062 விழுக்காட்டிலிருந்து 4.987 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதனை மத்திய திட்டக் குழுவின் கவனத்திற்கும், மத்திய அரசின் கவனத்திற்கும் நான் கொண்டு சென்று, நிதி குறைக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தியிருந்தேன். அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இது குறித்து முழுமையாக ஆராய வல்லுநர் குழு ஒன்று அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் முடிவு ஏற்படும் வரை முன்பிருந்த அடிப்படையிலேயே தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

உள்ளாட்சி அமைப்புகள்

6. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கும் – அவர்தம் ஊர் நலன்களுக்கும் – அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பரவலாக வரவேண்டு மென்பதற்காகவே, உறுதியளித்தவாறு உள்ளாட்சி மன்றத் தேர்தலை உடனடியாக இந்த அரசு நடத்தியது. அதேபோல, மாநில அரசின் மொத்த வரி வருவாயில் 8 விழுக்காட்டினை உள்ளாட்சி மன்றங்களுக்கு முதன் முதலில் பகிர்ந்தளித்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இதனால் உள்ளாட்சி மன்றங்கள் 1997–98 ஆம் ஆண்டில் ரூ.685 கோடியும், நடப்பு நிதி ஆண்டில் ரூ.762 கோடியும் பெற்றன. வரும் நிதி ஆண்டில் இது ரூ.845 கோடியாக உயர்வதோடு, கேளிக்கை வரியில் 90 சதவீதப் பங்காக ரூ.80 கோடியும், பத்தாவது நிதிக்குழு மானியமாக மூலதனப் பணிகளுக்கென ரூ.101 கோடியும், மாநில அரசின் நிதியிலிருந்து அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக மாநகராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.10 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், மக்கள் தொகை வளர்ந்துவரும் நகர்ப் பகுதிகளில் குடிநீர் வசதியைப் பெருக்க புதிய பொன்விழாத் திட்டத்திற்கு ரூ.50 கோடியும் ஒதுக்கப்படும்.

7. மொத்தத்தில், மாநில அரசால் கொடுக்கப்படும் பல்வேறு மானியங்கள், வரி வருவாய் பங்கீடு மற்றும் **உள்ளாட்சி மன்றங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் வரும் நிதி ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ரூ.2,023 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது நமது மாநிலத்தின் வரி வருவாயில் 19 விழுக்காடாகும்.**

8. இவற்றையன்னியில் விரைவில் உலக வங்கியின் ஒப்புதல் பெறவுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தில், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக முறை, கணினிமயமாக்கல், போன்றவற்றிற்காக ரூ.105 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. உள்ளாட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவது குறித்து ஆய்வு செய்ய உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்ட குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள் உள்ளாட்சித் துறையின் மானியக் கோரிக்கையோடு இணைத்து இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்கப்படும்.

நிர்வாகச் சீரமைப்பு

10. தவறிழைப்போர் யாராயினும் தப்பிட இயலாது எனும் நீதி வழியில் பயணம் நடத்துவோம் என்று சூளுரைத்துப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, **நேர்மையான, செயல்திறன் மிக்க நிர்வாகத்தை உறுதிப்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும், நடைமுறை சீரமைப்புச் செய்திட அமைத்திட்ட நீதிபதி திரு இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் இக்கூட்டத்தொடரில் அவையில் வைக்கப்படும்.**

11. கடந்த ஆண்டு இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டத்திற்கு அண்மையில் குடியரசு தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

12. திருவாரூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், கரூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ.38.54 கோடி செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

13. அனைத்து வட்டங்களிலும் உள்ள நிலப் பதிவுருக்களை (Land Records) கணினி மயமாக்க முடிவு செய்யப்பட்டு, 7 மாவட்டங்களில் உள்ள 35 வட்டங்களில் இதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டுவிட்டன. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நிலப்பதிவுருக்களைக் கணினிமயமாக்கும் பணி அடுத்த ஆண்டிற்குள் முடிவடையும்.

14. கணிப்பொறி இணையத்தில் (Internet) அரசு உருவாக்கியுள்ள தகவல் களத்தில் (Web site) எண்பது வகையான விண்ணப்பப் படிவங்கள் ஏற்கெனவே மக்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளோம். **இன்னும் ஓராண்டில் அரசு விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இணையத்தில் கிடைக்கும். அரசின் பல்வேறு துறைகள் வெளியிட்டுள்ள மக்கள் சாசனங்களையும் இணையத்தின் வாயிலாகப் பெறமுடியும்.**

15. பள்ளிப்படிப்பை முடித்தபின் மேற்படிப்புக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் குடும்ப வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றன. 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே மாணவர்களால் இச்சான்றிதழ்களுக்குத் தேவையான விண்ணப்பங்கள் நிறைவு செய்யப்பட்டு, தலைமை ஆசிரியர் ஒப்புதலுடன் வட்டாட்சியருக்கு அனுப்பப்படும். வட்டாட்சியரின் விசாரணைக்குப் பின் சான்றிதழ்கள் பள்ளிகளுக்கு அனுப்பப்படும். படிப்பை முடித்து பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) பெறும் சமயத்தில் பள்ளியில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இந்தப் புதிய ஏற்பாட்டினால் மாணவர்கள் இனிமேல் இந்தச் சான்றிதழ்கள் பெறுவதற்கு வட்டாட்சியர் அலுவலகம் சென்று காத்திருக்கத் தேவையில்லை.

ஊரக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்

16. ஏழை, எளிய, நடுத்தர, சாதாரண சாமானிய மக்களின் வாழ்வை மையமாக வைத்தே எமது ஆட்சிச் சக்கரம் சுழலும் என்றுரைத்த இனிய தலைவர் பெயரால் அமைந்துள்ள "அண்ணா மறுமலர்ச்சித் திட்ட"த்தின் கீழ், நடப்பு நிதி ஆண்டில், ரூ.182 கோடி செலவில் 212 ஊராட்சிகளில் சாலை, குடிநீர், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற 25,171 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக வரும் நிதி ஆண்டிற்கு ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. இந்த அரசின் மற்றொரு புதிய திட்டமான "நமக்கு நாமே" திட்டத்திற்கு மக்கள் பெருமளவில் ஆதரவளித்து வருகின்றனர். இதன்கீழ் நடப்பு நிதி ஆண்டில் ரூ.24.19 கோடி மதிப்பில் கிராமத் தேவைகளுக்கென 4,231 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

18. மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ள முன்வரும் மனப்பான்மையை வளர்த்திடும் "நமக்கு நாமே திட்டம்" வரும் நிதி ஆண்டிலிருந்து நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படும்.

19. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலா ரூ. 35 இலட்சம் வீதம் நடப்பு நிதி ஆண்டில் சாலைகள், பாலங்கள், கல்வி நிலையங்கள் போன்ற 6,389



பணிகள் ரூ.82.25 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு, வரும் நிதி ஆண்டில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படும்.

20. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் 1,420 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் பணிகள் உட்பட நியாய விலைக்கடைகள், சத்துணவு நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் போன்ற 43,533 ஊராட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இந்தத் திட்டத்திற்கான மாநில அரசின் பங்காக ரூ.48.90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

21. இலவச கான்கீரிட் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ், கான்கீரிட் கூரை அமைப்பதற்கான செலவுத் தொகை நடப்பு நிதி ஆண்டில் ரூ.7,000த்திலிருந்து ரூ.12,000 ஆக உயர்த்தப்பட்டு, வீடு ஒன்றுக்கு ரூ.32,000 செலவு செய்யப் படுகின்றது. **வரும் நிதி ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ.19.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இந்த வீடுகளுக்காக கான்கீரிட் கூரை அமைப்பதற்கான மொத்தச் செலவான ரூ.55.51 கோடியை மாநில அரசே ஒதுக்கி சுமார் 46,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.**

22. நடப்பு நிதியாண்டில், வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (Employment Assurance Scheme) கீழ், 3,519 கிலோமீட்டர் தார்ச்சாலைப்பணிகள், 1,449 பள்ளிக்கட்டிடங்கள், 2,992 இதர கட்டிடப்பணிகள், 2,834 சிறுபாசனப் பணிகள், 8,521 நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப் பட்டுள்ளன. **இந்தத் திட்டத்திற்காக, வரும் நிதி ஆண்டில் மாநில அரசின் பங்காக ரூ.47.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

23. கிராமங்களில் தெரு விளக்கு வசதியே இல்லாத குடியிருப்புப் பகுதிகளில் கடந்த நிதி ஆண்டில் 20,000 தெருவிளக்குகள் அமைத்ததன்னியில் மேலும் 25,714 தெருவிளக்குகள் அமைத்திட நடப்பு நிதி ஆண்டில் அரசு ரூ.12.6 கோடி ஒதுக்கியுள்ளது.

24. மக்கள் நலப் பணியாளர்கள் தற்போது மதிப்பூதியமாக மாதம் ரூ.500 பெறுகிறார்கள். அரசின் பல

திட்டங்களை மக்களுக்கு விளக்கி அதன் பயன்களை மக்கள் துய்த்திட துணைநிற்கும் அவர்தம் நற்பணியைக் கவனத்தில் கொண்டு, அவர்கள் மேலும் ஆர்வமுடன் செயல்பட அவர்களின் மாத மதிப்பூதியம் ரூ.750 ஆக உயர்த்தப்படுகிறது. பயணப்படியாக மாதம் ரூ.50 அளிக்கப்படும்.

ஊரகக் குடிநீர் வழங்கல்

25. மண் வளமுறவும் மனிதர் நலமுறவும் "நீரின்றி அமையாது உலகு" எனும் குறளை நினைவிற்கொள்ள வேண்டுமென்ற சிந்தனையுடன் செயலாற்றும் இந்த அரசு, ஊரகக் குடிநீர் வழங்கல் பணிக்காக நடப்பு நிதி ஆண்டின் ஒதுக்கீடான ரூ.330 கோடி என்பதை வரும் நிதி ஆண்டில் ரூ.450 கோடியாக உயர்த்தியுள்ளது. குறைவாகக் குடிநீர் பெற்றுவரும் 6,300 குடியிருப்புகளுக்கு முழு அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கும் பணி வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

26. ஊரகப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு அளிக்க இந்த அரசு எடுத்துள்ள முடிவு நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. ஆகவே, இனிவரும் காலங்களில் கூடுதல் வீட்டிணைப்புத் தேவையையும் சேர்த்து, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கும் வகையில் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் வடிவமைக்கப்படும்.

நகர்ப்புறக் குடிநீர் வழங்கல்

27. குறைவாகக் குடிநீர் பெற்றுவரும் நகர்ப்புறங்களில் முதற்கட்டமாக 10 நகராட்சிகளிலும், 25 பேரூராட்சிகளிலும் குடிநீர் வழங்கலை மேம்படுத்த பொன்விழா ஆண்டு சிறப்புத் திட்டம் ஒன்று ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, ரூ.100 கோடிக்கு மேல் நிதி நிறுவனங்களிலிருந்து கடனாகப் பெறப்பட்டு, வரும் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும்.

28. சென்னை நகரில் தொடர்ந்து நாளொன்றுக்கு 440 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதைச் செயலாக்க முடிந்தமைக்கான காரணம் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திலிருந்து தேவையான தண்ணீர் கிடைக்கப் பெறுவதேயாகும். குடிநீர் அளவினை உயர்த்தியுள்ள அதே நேரத்தில், குடிநீர் விநியோக ஏற்பாடுகளை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு, நடப்பு நிதி ஆண்டில் வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி ஆகிய இரண்டு பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன. மீதமுள்ள 10 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணிகள் வேகமாக நடந்துவருகின்றன.

29. வரும் நிதி ஆண்டில் சென்னைக் குடிநீர் இரண்டாம் திட்டத்திற்காக ரூ.105 கோடியும், சென்னை கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டத்திற்காக ரூ.75 கோடியும் ஒதுக்கப் பட்டுள்ளது.

நகர்ப்புற வளர்ச்சி

30. நமது நாட்டில் மிக அதிகமாக நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்றாகும். அடுத்த சில ஆண்டுகளில், நமது மாநிலத்தின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் நகர்ப் பகுதிகளில் வாழ்ந்து வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. அதிலும் குறிப்பாக, நமது மாநிலத் தலைநகரமாம் சென்னைப் பெருநகர்ப் பகுதி, இந்நாட்டிலுள்ள முக்கியமான தொழில் மற்றும் வணிக மையங்களில் ஒன்றாக விளங்குகிறது. அதன் விளைவாக இம்மாநகரில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

32. விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகளுக்காக மாநில அரசு, தேவைப்படும் அரசு நிலங்களை இலவசமாக அளிப்பதோடு, திட்டச் செலவின் மூன்றில் இரண்டு பங்கையும் ஏற்றுக்கொள்கிறது. **இந்த இரயில் பாதையை, பரங்கிமலை வரை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**

33. கடற்கரை–தாம்பரம் புறநகர் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் பணியும், மாநில அரசின்

50 விழுக்காடு பங்குத் தொகையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **இத்திட்டத்தின் கீழ், இந்தப்பாதையில் உள்ள இருப்புப் பாதைக் கடவுகள் (Level Crossings), மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகளாக மாற்றப்படும்.**

34. தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரை மாநகரப் புறவழிச் சாலை, கோயம்பேட்டில் வெளியூர் பேருந்து முனையம், மாநகரில் பல சிறு மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் ஆகிய பணிகள் நிறைவடையும்போது சென்னை மாநகரின் போக்குவரத்து நெருக்கடி கணிசமாகக் குறையும்.

35. சென்னை வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டத்தின் கீழ் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா ஆகியவை தூர்வாரப்பட்டு சீரமைக்கப்படும். இப்பணியை மேற்கொள்வதற்கு வசதியாக, ஆற்றின் கரைகளில் தற்போது வசித்து வருகின்ற குடிசை வாழ்மக்களை வேறு இடத்தில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணி நிறைவடைந்ததும் இந்த ஆறுகளின் கரையோரப் பகுதிகளைச் செம்மைப்படுத்தி, பொது மக்களுக்குத் தேவையான கூடுதல் வணிக வசதிகளும் மனமகிழ் வசதிகளும் உருவாக்கப்படும். இப்பெருந்திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஓரிரு மாதங்களில் பணி தொடங்கப்படும். மாநகர் சென்னையை தூய்மையும், அழகும் நிறைந்ததாக மாற்றிக் காட்ட மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டுகிறேன்.

பொதுவிநியோகம்

36. நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையான பகுத்துண்டு பல்லுயிர் வாழ்வதற்கேற்ப, மக்களுக்கு உணவுப்பொருள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கும், அரிசியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் பொது விநியோகமுறையில் இடையறாத அக்கறை காட்டுகிறது இந்த அரசு. அதனால்தான் பொதுவிநியோகத்தில் வழங்கப்படும் அரிசியின் சராசரி கொள்முதல் விலை 1995-96 ஆம் ஆண்டில் கிலோ ஒன்றுக்கு ரூ. 6.70 என்று இருந்து, தற்போது ரூ.8.08 ஆக அதிகரித்துள்ளபோதிலும் அரசு அரிசி விலையை உயர்த்தவில்லை. இதனால் 1995-96ல் ரூ.653 கோடியாக இருந்த அரசு வழங்கும்



உணவு மானியம், 1998-99ல் ரூ.1,000 கோடியாக உயர்ந்துள்ளது. இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி உயர்விலிருந்து மக்கள் மீளாத நிலையில், மத்திய அரசு அண்மையில் அரிசி, கோதுமை, சர்க்கரை, யூரியா, சமையல் எரி வாயு போன்றவற்றின் விலையை உயர்த்தியுள்ளது, ஏழை எளிய நடுத்தர மக்களையும் விவசாயப் பெருங்குடி மக்களையும் தண்டிப்பதாகும். முக்கியமாக அரிசி **விலையின் உயர்வு மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்பதாலும், வெளிச்சந்தையிலும் விலை உயரலாம் என்பதாலும், அரிசி விலை உயர்வை மக்கள் மீது சுமத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளோம். இந்த முடிவின் காரணமாக, மாநில அரசின் சுமை ஆண்டொன்றுக்கு மேலும் சுமார் ரூ.160 கோடி அதிகரிக்கும்.**

37. குடும்ப அட்டைதாரர்களுக்கு **மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதை சீரமைப்பதற்காக, நாட்டிலேயே முன்னோடியாக மண்ணெண்ணெய் விநியோக நிலையங்களை ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்றை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. நீண்ட வரிசையில் நெடுநேரம் காத்திருக்கின்ற நிலையை அகற்றிடவும், நியாய விலைக்கடைகளில் விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெயின் அளவுக்குறைவைத் தடுத்திடவும் இவை உதவியுள்ளன. 334 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களுக்கு இதுவரை அனுமதியளிக்கப்பட்டு, 121 செயல்படத் தொடங்கியுள்ளன. மீதமுள்ளவை அனைத்தும் அடுத்த சில மாதங்களில் செயல்படத் தொடங்கும்.**

வேளாண்மை

38. உழுதுண்டு வாழ்வோராய் மற்றவரையும் வாழவைப்போராய் மாநிலத்தின் மக்கள் தொகையில் 65 விழுக்காட்டினர் வேளாண்மைத் தொழிலைச் **சார்ந்திருக்கின்றனர். அவர்தம் அயரா உழைப்பால் சென்ற நிதி ஆண்டில் 85 இலட்சம் டன்னாக இருந்த உணவுப் பொருள் உற்பத்தி நடப்பு நிதி ஆண்டில் 98 இலட்சம் டன்னாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.**

39. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 15 விழுக்காடு தரிசு நிலம் ஆகும். இத்தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கான வரலாற்றில் இடம்பெறும் பெருந் திட்டமொன்று வரும் நிதி ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 10,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும். தரிசு நிலங்களின் தன்மை அறிந்து அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதில் தான் தமிழ்நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் ஏழ்மை நிலையில் வாழும் மக்களின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. அதற்கான ஆக்கப் பணிகளை வரையறுத்து செயல்படுத்திட வல்லுநர்கள் கொண்ட தரிசு நில மேம்பாட்டு ஆணையம் (Wasteland Development Authority) உருவாக்கப்படும்.

40. கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அறுவடை செய்தவுடன் உரிய விலையைப் பெறுவதற்கும் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துள்ள சர்க்கரை ஆலைகள் வழிவகை செய்வது போன்ற சட்டபூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி; **காய்கறிகள் பழங்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அப்பொருள்களை நகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று நியாயமான விலையில் விற்பதற்கும், தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் பங்கேற்கும் திட்டமொன்று வரும் நிதி ஆண்டிலிருந்து துவங்கப்படும்.**

41. தோட்டக்கலை உற்பத்திப் பொருட்கள் உபரியாக இருக்கின்ற காலத்தில், உழவர்கள் அவற்றைச் சேமித்து வைத்து நியாயமான விலை பெறுவதற்கு ஏதுவாக, குளிர்ப்பதன சேமிப்புக் கிடங்குகள் கட்டி செயல்படுத்தும் திட்டம் ரூ.40.52 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு ரூ.4.7 கோடி செலவில் சென்னை, திண்டுக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

42. வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு வரும் நிதி ஆண்டில் ரூ.21 கோடியும் டேனிடா நிதியுதவியுடனான தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்திற்கு ரூ.6.23 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

43. தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் தொகையைக் கட்டாமல் தவணை தவறிய விவசாயிகளின் எண்ணிக்கை 81,553. இதில் 21,898 பேர் பெரிய விவசாயிகள். ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் எனது பதிலுரையில் அறிவித்திருந்தவாறு மீதமுள்ள சுமார் 60 ஆயிரம் சிறு, குறுவிவசாயிகள் மீது கூட்டுறவு வங்கிகளினால் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மற்ற மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

பாசனம்

44. நீரோடை நிலங்கிழித்து வீணாகப் போகாமல், 'நீர்வள ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்தைச்' செயல்படுத்தி உலக வங்கி உதவியுடன் இந்த அரசு பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துவதற்கும், கால்வாய்களை மேம்படுத்துவதன் மூலம் பாசனத் திறனை அதிகரிப்பதற்கும், முடிவடையாமலுள்ள ஒன்பது பாசனத் திட்டங்களை விரைந்து முடிப்பதற்கும் முனைந்துள்ளது. இதுவரை ரூ.344 கோடி மதிப்பீட்டுச் செலவில் 174 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூ.219 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணியில் விவசாயிகள் பங்கு கொள்ளும் வகையில் விவசாயிகளின் குழுக்கள் உருவாக்கப்படும்.

45. பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதை அதிகரிக்கச் செய்வதிலும், வெள்ளம் விரைவில் வடிந்தோடச் செய்வதிலும் தூர் வாரும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு, சென்ற இரண்டாண்டுகளாக ரூ.58 கோடி செலவில் இப்பணியினைச்

செயல்படுத்தியுள்ளது. **இத்திட்டத்தின் நற்பயனையும் விவசாயிகளின் நல்வரவேற்பினையும் கருத்தில் கொண்டு, வரும் நிதி ஆண்டில் ரூ.50 கோடி ஒதுக்கீட்டில் 472 கிலோமீட்டர் நீளத்திற்கு ஆற்றுப்படுகை, 1,624 கிலோமீட்டர் நீளத்திற்கு வடிகால்கள், 1,816 கிலோமீட்டர் நீளத்திற்கு கால்வாய்கள் மற்றும் 136 குளங்கள் ஆகியவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

46. ரூ.665 கோடி மதிப்பீட்டில் 53 நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில் ரூ.8.94 கோடி மதிப்பீட்டில் மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள நிலங்கள் பயன்பெறும் நிலையூர் கால்வாய்த் திட்டம், ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மிருகண்டா நதி நீர்த்தேக்கத் திட்டம், ரூ.23 கோடி மதிப்பீட்டில் நெல்லை மாவட்டத்தில் உள்ளாறு நீர்த்தேக்கத்திட்டம், ரூ.6 கோடி மதிப்பீட்டில் காவிரியில் மேலணை (முக்கொம்பு) பலப்படுத்தும் திட்டம், ரூ.9.5 கோடி மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறையார் திட்டம் மற்றும் ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் தேனி மாவட்டத்தில் 18–ம் கால்வாய்த்திட்டம் ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படும்.

மீனவர் நலன்

47. சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் கீழ், இது வரை 12,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, 7,155 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில், இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டிற்கான செலவு ரூ.32,000 த்திலிருந்து ரூ.37,000 ஆக உயர்த்தப்பட்டது. வரும் நிதி ஆண்டில் ரூ.14.80 கோடி ஒதுக்கீட்டில் மேலும் 4,000 வீடுகள் கட்டப்படும்.

48. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 1.69 இலட்சம் கடலோர மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக அரசு இதுவரை ரூ.12.75 கோடி அனுமதித்துள்ளது. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக சிறு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலைப் போக்க, ஏறத்தாழ 20,000 நாட்டுப் படகுகளுக்கு மண்ணெண்ணெய் மற்றும் டீசல் மானியமாக ரூ.3 கோடியை இந்த அரசு அனுமதித்துள்ளது. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படும். **உள்நாட்டு மீனவர் அமைப்புகளின் கோரிக்கைகளைப் பரிசீலித்து அவர்களின் மேம்பாட்டிற்காக திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.**

கால்நடை வளர்ப்பு

49. கடந்த மூன்றாண்டுகளில் இந்த அரசு ரூ.2.68 கோடி செலவில் 100 புதிய கால்நடை மருந்தகங்களைத் தொடங்கியுள்ளது. 50 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் 10 புதிய கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்படும்.

50. 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரசு, பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களான விவசாயிகளுக்கு பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.1.50 அதிகரித்து வழங்க முடிவெடுத்தது. இதனால் 1997–98–ல் 12.36 இலட்சம் லிட்டராக இருந்த சராசரி தினசரி பால் கொள்முதல், நடப்பு நிதி ஆண்டில் 15.10 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனவளம்

51. தோல்பதனிடும் தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசுக்கேட்டைத் தடுத்திட அரசு 26 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுமதி அளித்து, அதில் 12 நிலையங்கள் செயல்படத் துவங்கியுள்ளன. மேலும் சாயத்தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசுக் கேட்டைத் தடுத்திட அரசு 22 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுமதி அளித்து, அதில் 5 நிலையங்கள் செயல்பட துவங்கியுள்ளன. எஞ்சியவை கட்டப்பட்டு வருகின்றன. இதே போல ஜவ்வரிசி ஆலைகளால் ஏற்படும் மாசுக்கேட்டைத் தடுத்திட பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்கும் திட்டத்திற்கும் உதவித் தொகை அளிக்குமாறு மத்திய அரசைக் கோரியுள்ளோம்.

52. 1996–97 ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய நதி நீர் செயல் திட்டத்தின் கீழ் பவானி, ஈரோடு, குமாரபாளையம், பள்ளிப்பாளையம், திருச்சி ஆகிய நகரங்களில் காவிரி ஆற்றில் மாசு தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் நிதி ஆண்டில் இதற்காக ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

53. தமிழ்நாடு வனவளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் வனப்பகுதிக்கு அருகேயுள்ள 200 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாண்டுகளில் சுமார் 1,50,000 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டு வன நிர்வாக ஏற்பாடு (Joint Forest Management) மூலம் உள்ளூர் மக்களின் பங்கேற்புடன், 75,850 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணியை மேற்கொள்வதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.96.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாலைகள்

54. 1972 ஆம் ஆண்டிலேயே கழக அரசு பொறுப்பில் இருந்தபோது, 1,500 க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலைகளோடு இணைக்கின்ற முதற்கட்ட முயற்சி தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அடுத்தக் கட்ட முயற்சியாக 1,000 பேருக்கு மேற்பட்ட மக்கட் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கவும் 1990 ஆம் ஆண்டு கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றில் மீதமிருந்த 517 கிராமங்களில், 216 கிராமங்களுக்கு கடந்த நிதியாண்டில் இணைப்புச்சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. **எஞ்சியுள்ள 301 கிராமங்களுக்கு இந்த நிதியாண்டு இறுதிக்குள் இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன்பயனாக இணைப்புச் சாலை வசதிகள் இல்லாத 1000க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை அடைந்திடுவோம். அடுத்து, 500 முதல் 1,000 வரையிலான மக்கள் தொகையை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத 340 கிராமங்களுக்கு முதற்கட்டமாக வரும் நிதி ஆண்டில் இவ்வசதி செய்யப்படும்.**

55. கடந்த மூன்றாண்டுகளில் சாலை மேம்பாட்டுக்காக நபார்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (Rural Infrastructure Development Fund) உதவியுடன் ரூ.702 கோடி மதிப்புள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டிற்கு ரூ.256 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

56. ரூ.450 கோடி செலவில் 208 பாலங்கள் கட்டும் பணி அண்மையில் தொடங்கப்பட்டு விரைந்து நடைபெற்று வருகிறது. ரூ.20 கோடி செலவில் காரனோடைப் பாலம், ரூ.12 கோடி செலவில் கரூர் பாலம், தாம்பரத்திலிருந்து மதுரவாயல் வரை ரூ.43 கோடி செலவில் சென்னை புறவழிச் சாலை, ரூ.36 கோடி செலவில் மதுரை புறவழிச் சாலை, மேலும், ரூ.92 கோடி செலவில் கோயம்புத்தூர் புறவழிச் சாலை, ஆகியவற்றுக்காக தொடங்கப்பட்டுள்ள பணிகள் இரண்டு ஆண்டுகளில் நிறைவடையும். சென்னை மாநகரிலுள்ள ஆரச் சாலைகளை (Radial Roads) ரூ.212 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி அடுத்த மாதம் தொடங்கப்படும்.

57. சாலைப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு நிதி ஆண்டில் ரூ.254 கோடி என்றிருப்பது, வரும் நிதி ஆண்டுக்கு ரூ.270 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சாலை மீளமைப்புப் பணியின் தரம் பொதுமக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, வரும் நிதி ஆண்டிலிருந்து நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி, சாலைகளை மீளமைப்பதற்கு ஒவ்வோராண்டும் மேற்சொன்ன சாலைப் பராமரிப்பு நிதியிலிருந்து சிறப்பாக ரூ.100 கோடி ஒதுக்கப்படும்.

போக்குவரத்து

58. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தம் திறமையான செயல்பாட்டின் அடிப்படையில், தேசிய அளவில் பல விருதுகளைப் பெற்றுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில், 7,309 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. இக்கழகங்களில் கொள்முதல் நிர்வாக முறையைச் சீரமைத்ததன் மூலம், செலவு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நாட்டிலேயே மிகக் குறைந்த கட்டணமாக தமிழ்நாட்டின் பேருந்துக் கட்டணம் தொடர்ந்து இருந்து வருவதால், நடப்பு நிதி ஆண்டில் சுமார் ரூ.400 கோடி அளவுக்கு இழப்பு ஏற்படும். வரும் நிதி ஆண்டில் அரசின் பங்குத் தொகையாக வழங்குவதற்கு ரூ.100 கோடியும், மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்கியதற்கான ஈட்டுத்தொகைக்காக ரூ.80 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

59. மினி பஸ் திட்டம் தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களின் வரவேற்பைப் பெற்று வருகிறது. தற்போது சுமார் 320 மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் பெருகும்.

மின் வசதி

60. வரும் நிதியாண்டில் தமிழ்நாடு மின் வாரியத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.1,034 கோடியாக அதிகரிக்கும்.

61. சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதியில் 196 மெகாவாட் திறன் கொண்ட முதலாவது தனியார் மின்திட்டம் நடப்பாண்டில் உற்பத்தியைத் தொடங்கி, அதன் திறப்பு விழா வரும் 28ஆம் தேதி நடைபெற உள்ளது. மேலும், நாகப்பட்டினம் மாவட்டம், பிள்ளைப்பெருமாள்நல்லூரில் 330 மெகாவாட் மின் திட்டம், நெய்வேலியில் 250 மெகாவாட் மின் திட்டம் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன. சமயநல்லூரில் 106 மெகாவாட் மின் திட்டம், சாமல்பட்டியில் 106 மெகாவாட் மின் திட்டம் ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணி இந்த மாதத்தில் தொடங்கப்படும். இவை அனைத்தும் தனியார் முதலீடு செய்யும் மின்திட்டங்களாகும்.

62. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வாயிலாக இயற்கை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு, நாகப்பட்டினம் மாவட்டம் கோவில்களப்பாலில் 90 மெகாவாட், இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளத்தில் 60 மெகாவாட், நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலத்தில் 60 மெகாவாட் மின்திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகளும் வரும் நிதி ஆண்டில் தொடங்கப்படும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் புதுப்பித்து, நவீனமயமாக்கும் பணி வரும் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

63. மின் அனுப்புகை மற்றும் விநியோகத்தின் போது ஏற்படும் மின் இழப்பு மிகக் குறைவாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும். மின் விநியோகத்தை மேம்படுத்துவதற்கும், சீரமைப்பதற்கும் வரும் நிதி ஆண்டில் ஒதுக்கீடு ரூ.427 கோடியாக இருக்கும்.

தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு

64. தொழில்வளர்ச்சியில் நேர்மையும் நேயமும் நிறைந்த அணுகுமுறையை இந்த அரசு பின்பற்றி வருகிறது. தொழில் முனைவோரின் திட்டங்களுக்குத் தாமதமின்றி ஒப்புதலளிக்க ஒற்றைச் சாளர முறையும் (single window), தகவல் தொழில்நுட்பம் போன்ற வேகமாக வளர்ச்சி அடையக்கூடிய துறைகளுக்கு தனிக் கொள்கைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

65. நடப்பு நிதி ஆண்டில், நமது மாநிலத்தில் ஹூண்டாய், மிட்சுபிஷி மோட்டார் தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை இம்மாதம் 19 ஆம் தேதி காலையில் உற்பத்தியைத் தொடங்க உள்ளது.

66. தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்குத் தேவையான தொழில் வளர்ச்சி மையங்களும் வளாகங்களும் அமைப்பதற்காக 15,301 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. இதுவரை 6,160 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. கும்மிடிப் பூண்டியில் ரூ.19.90 கோடி திட்ட மதிப்பீட்டிலான ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா உருவாக்கும்பணி முடியும் தருவாயில் உள்ளது. பெருந்துறை வளர்ச்சி மையத்தின் முதல் கட்ட மேம்பாட்டு பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடையும்.

67. பொதுத்துறை நிறுவனங்களின் செயல் திறனை சீரமைப்பதற்கான வழிமுறைகள் குறித்து பரிந்துரைகள் செய்வதற்காக திரு எஸ்.வி.எஸ் இராகவன் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

68. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகமும் (TACID) தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சிக் கழகமும் (SIPCOT) ஒரே பணியினை மேற்கொள்வதால் டாசிட் நிறுவனம் சிப்காட்டுடன் இணைக்கப்படும். அவ்வாறு இணைக்கப்பட்ட பின்பு, சிப்காட் நிறுவனம், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணியில் மட்டும் ஈடுபடும். சிப்காட் இதுவரை மேற்கொண்டிருந்த கடன் வழங்கும் பணி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு (TIIC) மாற்றப்படும்.

69. போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவி கழகத்தையும் (TDFC) தமிழ்நாடு மின்சக்தி நிதியுதவிக் கழகத்தையும் (POWER FINANCE) இணைத்து தமிழ்நாடு கட்டமைப்பு வசதி நிதிக் கழகம் (TIFC) அமைக்கப்படும்.

70. தொழில் வழிகாட்டி நிறுவனம் (TAMIL NADU GUIDANCE BUREAU) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தோடு (TIDCO) இணைக்கப்பட்டு அதன் ஒரு பிரிவாக செயல்படும். இக்குழுவின் ஏனைய பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன.

தகவல் தொழில் நுட்பம்

71. நேற்றிருந்த புதுமை இன்றில்லை எனும் பெருமை படைத்த இந்த விஞ்ஞான உலகத்தில், இன்றைய புதுமையாக

விளங்கும் தகவல் தொழில் நுட்பவியலை நமது சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பெருமளவில் பயன்படுத்த முடிவு செய்துள்ளோம்.

72. **பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது அரசின் விழைவாகும். நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பாடமுறையை உருவாக்கி கணினியில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலம், கணினிகளை நிறுவி, மாநில முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11-12 வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் வரும் கல்வியாண்டில் இருந்து தொடங்கப்படும். இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 40 மாணவர் என்ற அடிப்படையில், சுமார் 48,000 மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் (Software) துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள்.**

73. கணினிப் பயன்பாடுகளில் உலக அளவில் பொதுவான தமிழ்க் குறியீடுகள் இல்லாததால் தமிழ் மென்பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை. இதைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு 'தமிழ்நெட் 99' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை கடந்த பிப்ரவரித் திங்கள் 7 மற்றும் 8 தேதிகளில் சென்னையில் நடத்தியது. பொதுவான தமிழ்க் குறியீடுகளை வடிவமைக்கவும், தமிழ் விசைப்பலகையைத் தரப்படுத்தும் நோக்கத்தோடும் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் ஏழு நாடுகளைச் சேர்ந்த 150 வல்லுநர்கள் கலந்து கொண்டு ஒருமித்த முடிவுகளை எடுத்துள்ளனர்.

74. தமிழ் மென்பொருள் விரைவான வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக 'தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி' ஒன்றை தமிழக அரசு உருவாக்கும். உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Tamil Virtual University) ஒன்றினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட முயற்சிகளால் இணையம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயன்களைத் தமிழகம் மட்டுமின்றி உலகெங்கிலுமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் பெறுவார்கள்.

75. இங்கிலாந்திலுள்ள வேர்ல்டு டெல் (World Tel) நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் கூட்டுத் தொழில் முயற்சி, இம்மாநிலம் முழுவதிலும் பரவலாக இணையத் தொடர்பு வசதிகளை அளிப்பதோடு மட்டுமல்லாமல், சுமார் 1,50,000 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்திட வழி வகுக்கும். இதன் வாயிலாக, கணினி சொந்தமாகப் பெற்றிராத, தமிழ் மொழியை மட்டுமே அறிந்த மக்களும், தங்களது இல்லங்களுக்கு அருகில் அமைந்துள்ள சமுதாய இணைய மையங்களில் தங்களின் அன்றாடத் தேவைகள் பலவற்றிற்காக, நியாயமான கட்டணத்தில் இணைய வசதிகளைப் பெற இயலும்.

76. **கணினியைப் பயன்படுத்தி நெடுந்தொலைவிற்கு** அப்பால் உள்ள மருத்துவ வல்லுநர்களிடமிருந்து அறிவுரை மற்றும் வழிகாட்டுதலுடன் நவீன மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கு "தொலைத் தொடர்பு வழி மருத்துவ" (Telemedicine) வசதி நமது மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்படும். தொடக்கத்தில், வட்ட மருத்துவமனை ஒன்று மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்றுடன் கணினி மூலமாக இணைக்கப்படும். இவ்வசதி படிப்படியாக மாநிலமெங்கும் விரிவாக்கப்படும்.

கல்வி

77. வாழும் உயிர்க்கு எண்ணும் எழுத்தும் ஒளியுமிழ் இரு கண்ணாகும் என்றுணர்ந்து கடமையாற்றும் இந்த அரசு கல்வித் துறைக்கு வரும் நிதி ஆண்டில் ரூ.4,092 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

78. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, அனைத்துச் சிறார்களுக்கும் 14 வயது



வரை கட்டாயக் கல்வியை அளிக்கும் நோக்கத்துடன், தொடக்கக் கல்விக்கு உயர் முன்னுரிமையை இந்த அரசு அளித்து வருகிறது. தொடக்கக்கல்வி அனைவருக்கும் கிடைத்திட "தொடக்கக் கல்வி இயக்கம்" ஒன்று வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். **தொடக்கக் கல்வியின் அவசியத்தை மக்களிடையே பரப்புவதற்கு விழிப்புணர்ச்சி முகாம்கள் பள்ளி தொடங்குவதற்கு முந்தைய மாதமான மே மாதம் நடத்தப்படும். உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள், கல்வியில் அக்கறை கொண்ட பொதுமக்கள், கிராமசபையினர், ஆசிரியர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் அனைத்து சிறார்களையும் பள்ளிகளில் முழுமையாகச் சேர்ப்பதற்கு இந்த முகாம்கள் பயன்படுத்தப்படும்.**

79. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று கூறியிருந்தேன். அதற்கேற்ப நடப்பு நிதி ஆண்டில் 300 தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுவிட்டன. வரும் நிதியாண்டில் எஞ்சியுள்ள தொடக்கப் பள்ளிகளையும் துவங்கி, சொன்னதைச் செய்வோம் என்பதை நிரூபிப்போம்.

80. ஆரோக்கியமான உடலே ஆரோக்கியமான உள்ளத்தின் உறைவிடமாகும். உடற்பயிற்சியோடு விளையாட்டுகளின் மூலம் கட்டுப்பாடு (Discipline), குழு உணர்வு (Team Spirit), தலைமைப் பண்புகள் (Leadership Qualities) போன்றவை இளம் பருவத்திலேயே உருவாகின்றன. பரப்பளவிலும் மக்கட்தொகையிலும் குறைந்த இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான கிரிக்கெட் கிளப்புகளும், கால் பந்தாட்டக் கிளப்புகளும் இருக்கின்றன. ஆனால் இங்கு அரசு முனைப்பு காட்டி உற்சாகமூட்ட வேண்டிய நிலை இருக்கிறது. **கால்பந்து, கூடைப்பந்து, கிரிக்கெட், கபடி, ஹாக்கி, ஓட்டப் பந்தயங்கள் போன்ற அனைத்து முக்கிய விளையாட்டுகளையும் ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, இனி ஒவ்வோராண்டும் உயர்நிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவிலான போட்டிகளும், அவை முடிந்த பிறகு மாவட்டங்களுக்கு இடையிலான மாநில அளவுப் போட்டியும் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படும். ஆண்டுதோறும் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கான பரிசுகளையும், சுழற்கோப்பைகளையும் அளித்து உதவுமாறு தனியார் துறையினரும் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.**

81. பல்கலைக்கழகங்களுக்கான ஒட்டு மொத்த மானியம் கடைசியாக 1992 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. நடப்பு நிதி ஆண்டிலிருந்து இந்த மானியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

82. சென்ற நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு பல்தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு 'ஒற்றைச்சாளரமுறை' அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

83. உலக வங்கியுதவியுடனான தொழில்நுட்பக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக, வரும் நிதி ஆண்டில் ரூ.19.7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

84. இந்த அரசு அனைத்துத் தொழிற் கல்லூரிகளிலும் 15 விழுக்காடு இடங்களை கிராமப்புற மாணவர்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் நகர்ப்புற எல்லைகளிலுள்ள கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் நகர்ப்புற மாணவர்கள் சிலரும் பயன் பெற்று கிராமப்புற மாணவர்களின் வாய்ப்பு, குறைவதைக் கருதி, இந்த ஒதுக்கீட்டின் முழுப்பயனும் மெய்யான கிராமப்புற மாணவர்களுக்கு மட்டும் கிடைப்பதற்கு, உரிய முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

85. 1997ஆம் ஆண்டு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, மாவட்டங்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை நீக்கி, 15 பல்கலைக் கழகங்களில் அந்தத் தலைவர்களின் பெயர்களால் தலா ரூ.25 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்து 28 அறக்கட்டளைகளை ஏற்படுத்தி, அதற்கு ரூ.7 கோடி வழங்கப்பட்டது. இந்த அறக்கட்டளைகளிலிருந்து படிப்புதவித் தொகை வழங்கும் அடிப்படையை அரசு மாற்றியமைத்துள்ளது. ஆண்டு வருமானம் ரூ.44,500 என்ற உச்சவரம்பை நீக்கவும், ஆதிதிராவிடர், பழங்குடியினர்,

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பிறவகையான படிப்புதவித் தொகை பெற்றிருப்பினும் இதற்கும் தகுதியுடையவர்களாக இருப்பர் என்றும் அரசு தற்போது முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் அனைத்துத் தரப்பு மாணவர்கள் ஆண்டுதோறும் 1,500 பேர் பயனடைவார்கள்.

தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாடு

86. தமிழ்மொழி காக்கும் போரில் விழுப்புண் பெற்ற கழக அரசு, தமிழ்மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதற்காகவே ஆணையொன்றை இந்த ஆண்டு பிறப்பித்துள்ளது. தமிழகத்தில் மொழி சிறுபான்மையினருக்கான பள்ளிகள் தவிர, பிற பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடங்கள் தமிழ் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் – குறிப்பாக மழலையர் பயிலும் பள்ளிகளில் ஆங்கிலத்தில் மட்டும் கற்பிப்பதை மாற்றியமைக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இனி வரும் காலங்களில் ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடங்களில் கணிதம், அறிவியல், சமூகவியல் ஆகிய மூன்றில் குறைந்தபட்சம் இரண்டினை தமிழில் கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு மட்டும் ஏற்பளிப்பது என்று அரசு முடிவெடுத்துள்ளது. முற்றிலும் தமிழ் வழியில் பாடங்கள் நடத்தப்படும் பள்ளிகளுக்கு பதிவுக் கட்டணத்தை அரசு பாதியாகக் குறைத்துள்ளதோடு மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களையும் வழங்கும். ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு அங்கீகரித்துள்ள பள்ளிகளில் சேர விண்ணப்பிக்கும்போது அப்பள்ளிகளில் தேர்வு நடத்தி அத்தேர்வுகளின் அடிப்படையிலேயே உரிய வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

87. ஒவ்வொரு மாவட்டத்திலும் இசைப் பள்ளியைத் தொடங்கும் நோக்கத்துடன், இரண்டு ஆண்டுகளில் பத்து இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. **வரும் நிதி ஆண்டில், மேலும் ஐந்து மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் தொடங்கப்படும்.**

88. **வரலாற்றுக்கு முந்தைய காலம் (Pre-historic period), தொல்**



பழங்காலம், சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை உள்ள தமிழக வரலாற்றைத் தொகுத்து நிரந்தரக் கண்காட்சியாக வைக்கப்படும். இதற்காக வல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையைப் பெற்று, ஒரு தனி அமைப்பின் மூலம் அந்த வரலாற்றுக் கண்காட்சி உருவாக்கப்படும்.

89. **கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலும், 18 ஆம் நூற்றாண்டிலும் சீர்காழியில் வாழ்ந்த இசை மேதைகளான முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர், மாரிமுத்தா பிள்ளை ஆகிய மூவரும் தமிழில் கீர்த்தனைகளை இயற்றி தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனர். சீர்காழியில் இவர்களுடைய சிலைகள் அமைந்த மணிமண்டபம் ஒன்று நிறுவப்படும். ஆண்டுதோறும் அங்கே மாபெரும் தமிழிசை விழா நடைபெறவும் ஏற்பாடு செய்யப்படும்.**

இந்து சமய அறநிலைய நிர்வாகம்

90. கோயில்கள் கொள்ளையடிப்போர் கூடாரமாய் மாறிவிடக்கூடாது என்பதற்காக அவற்றுக்குரிய சொத்துக்களைக் கணக்கெடுத்து அவற்றைப் பாதுகாக்கவும், அவற்றிலிருந்து கோயில்களுக்கு வரவேண்டிய வருமானத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும், கோயில்களில் சொத்து பதிவேடுகள் தயாரிக்கும் பணி முனைப்புடன் நடைபெற்று வருகிறது. கடந்த 70 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகள் 1,192. கடந்த மூன்றே ஆண்டுகளில் இந்த ஆட்சியில் உருவாக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகள் 1,660. மீதமுள்ள 122 கோயில்களுக்கான பதிவேடுகளும் விரைவில் தயாரிக்கப்படும்.

91. **1996 ஜுன் முதல் கோயில்களுக்குச் சொந்தமான**

நிலங்கள் 273 ஏக்கரும், மனை நிலங்கள் 253 கிரவுண்டும் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. நியாய வாடகை நிர்ணயம் செய்த பிறகு கோயில்களுக்கு ரூ.6 கோடி அதிக வருமானம் வந்துள்ளது.

மக்கள் நல்வாழ்வு – குடும்ப நலன்

92. நகர்ப்புற வாசிகள் மட்டுமின்றி – கிராமப்புறங்களிலும் நலிவுற்றோர் நல்ல மருத்துவ வசதி பெற்றிட நாளும் பணியாற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வரும் நிதி ஆண்டில் ரூ.1,079 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

93. கடந்த மூன்று ஆண்டுகளில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டித்தர அரசு அனுமதியளித்து, அதில் 434 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 157 கட்டிடங்கள் இம்மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும். எஞ்சியவை வரும் நிதி ஆண்டில் கட்டப்படும்.

94. தூத்துக்குடியில் மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவங்க அரசு ஆணையிட்டுள்ளது. இக்கல்லூரிக்கு இதுவரை இந்திய மருத்துவ மன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. ஒப்புதல் பெற்ற பின், வரும் கல்வி ஆண்டிலிருந்து இக்கல்லூரி செயல்படத் துவங்கும். வேலூரில் அதற்கு அடுத்த கல்வி ஆண்டில் புதிய மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவங்கவும் அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

95. ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பராமரிக்க, முதற்கட்டமாக 40 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்தேன். இதுவரை 42 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

96. 1972–73ல் கழக அரசினால் கண்ணொளி வழங்கும் திட்டம் தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்டு வந்தது. அத்திட்டத்தில் இடையில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி, கண்மருத்துவ சிகிச்சை வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்திட, அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளில் உள்ள கண் சிகிச்சைப் பிரிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு முக்கிய வட்ட மருத்துவமனைகளில் கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளும், 29 மாவட்டங்களிலும் நடமாடும் கண்சிகிச்சைப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **கண் உள் ஆடி (intra ocular lens) பொருத்துவதில் கண் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதோடு, வரும் நிதி ஆண்டில் ஒரு இலட்சம் பேருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அந்த ஆடி (lens) இலவசமாக வழங்கப்படும்.**

வாழ்வொளித் திட்டம்

97. **பள்ளிச் சிறார்களின் உடல் நலம்பேணிக் காப்பது மிக அவசியம். சிறுவயதில் சில நோய்கள், பள்ளிப்படிப்பில் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியதாகவும், வருங்காலத்தில் பெரிய நோய்களாகவும், ஊனங்களாகவும் உருவாகும் தன்மை கொண்டவையாகும். எனவே ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலரும் வாரத்தில் ஒரு நாள் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களைப் பரிசோதித்து தேவையிருப்பின் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று சிகிச்சை அளிப்பார்.** மாநில அளவில் பள்ளி மாணவர்களுக்கான இந்த "வாழ்வொளித் திட்டம்" வரும் கல்வி ஆண்டு முதல் தீவிரமாக செயல்படுத்தப்படும். தற்போது சென்னை

★ தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்கான வரலாற்றில் இடம் பெறும் பெருந்திட்டமொன்று 10,000 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும்.

★ ரூ.91 கோடியில் ஆறு புதிய பாசனத் திட்டங்கள்.

✦ சமத்துவபுரம் திட்டத்திற்கு அடிகோலியவன் நான் என்றாலும், இத்திட்டம் என்னை ஆளாக்கிய பெரியார் பெயரால் "பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்" என்று அழைக்கப்படும்.

மாநகராட்சியில் இந்தத் திட்டம் முன்னோடியாக செயல்பட்டு வருகிறது.

சத்துணவு

98. டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்திற்கு வரும் நிதி ஆண்டில் ரூ.532 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் வாயிலாக 74.78 இலட்சம் சிறார்கள் பயனடைந்து வருகின்றனர். சத்துணவுத் திட்டச் செயல்பாட்டையும், இந்த அரசு தொடங்கிய வாரம் ஒரு முட்டை வழங்கும் திட்டத்தையும் கண்காணித்து, திறம்படச் செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் சத்துணவு மையங்களின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்து, குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்கும்.

மகளிர் நலன்

99. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்துவர் என்பதை மெய்ப்பித்துக் காட்டி வரும் இந்த அரசு, மகளிர் மேம்பாட்டுக்காக, வரும் நிதி ஆண்டில் ரூ.94.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஏழை எளிய பெண்களுக்காகவும்,ஏழை விதவையர்களின் பெண்களுக்காகவும், விதவைகளுக்காகவும் கலப்புத் திருமணத் திற்காகவும் பல்வேறு திருமண உதவித் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூ.70 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயன்பெறுவோர் 70,000 மணப்பெண்கள் ஆவர். **இத்திட்டத்தை செயல்படுத்துவதில் குறிப்பாக வயது, கல்வி சான்றிதழ் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தையும், முறைகேடுகளையும் களையும்பொருட்டு, இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கான கல்வித் தகுதியைப் பத்தாவது வகுப்பாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் வரும் நிதி ஆண்டிலும் 70 ஆயிரம் பெண்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.**

100. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், வரும் நிதி ஆண்டில் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

101. மதுரை மாவட்டத்தில் 15 இடங்களிலும், மற்ற சில மாவட்டங்களிலும் மகளிரே நடத்தும் நியாயவிலைக் கடைகள் சிறப்பாக செயல்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. நியாய விலைக் கடைகள் மற்ற இடங்களிலும் இவ்வாறு நல்ல முறையில் செயல்பட மேலும் அதிக அளவில் நியாய விலைக் கடைகளை மகளிரே நடத்த அரசு ஊக்கம் அளிக்கும்.

மகளிர்க்கு குறைந்த வட்டியில் கூட்டுறவுக் கடன்

102. நகர்ப்பகுதிகளில் வாழும் ஏழை எளிய மகளிர் தம் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காகவும், சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வதற்காகவும், கூட்டுறவு வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டியில் அவர்களுக்குக் கடன் வழங்க ஏற்பாடு செய்திட, நகர்ப்புற ஏழை மகளிருக்கான "சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்" ஒன்றை 1.1.1999 முதல் அரசு தொடங்கியுள்ளது. சிறு வியாபாரம் செய்து அதன் மூலம் தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்ற மகளிருக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சென்னையில் தொடங்கிய இத்திட்டம் சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் தொடங்கப்பட்டு ஆயிரக்கணக்கான மகளிர் பயன் பெற்று வருகின்றனர். அவற்றைத் தொடர்ந்து எல்லா நகர்ப்பகுதிகளிலும் மேலும் விரிவுபடுத்தப்படும்.

ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலன்

103. அடித்தட்டு மக்களை சமுதாயப் பொருளாதாரத் துறையில் கைதூக்கிவிட கங்கணம் கட்டிக் காரியமாற்றும் இந்த அரசு தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதியை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. வரும் நிதி ஆண்டில் இது ரூ.509 கோடியாக இருக்கும்.

104. தனிநபர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்கள், தொழில் துறையிலும் சேவைத் துறையிலும் தொழில் முனைவர்களாக விளங்கிட வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. கணினி, தட்டச்சு, சுருக்கெழுத்து, துணித் தொழில் வடிவமைப்பு, பிளாஸ்டிக் செய்முறைகள் போன்ற வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

105. சுதந்திரப் பொன்விழா ஆண்டில் துவங்கி சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.17.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலும் 50 இடங்களில் சமத்துவபுரங்கள் உருவாக்கப்படும். **சமத்துவபுரம் திட்டத்திற்கு நான் அடிகோலியவன் என்றாலும், இத்தகைய கொள்கை வழிச் சாதனை புரிந்திட என்னை ஆளாக்கிய பெரியார் பெயரால் "பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்" என இத்திட்டம் இனி அழைக்கப்படும்.**

106. அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதுவோருக்கு பயிற்சி அளிக்க சென்னையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒன்றும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒன்றும், ஆக இரண்டு பயிற்சி நிலையங்கள் உள்ளன. **இப்பயிற்சியின் தரத்தை உயர்த்தவும், நம்மாநிலத்திலிருந்து அகில இந்தியப் பணிகளுக்கு தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், இவ்விரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து வசதிகளையும் தரத்தையும் மேம்படுத்துவது** பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர்-மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

107. பிற்படுத்தப்பட்டோர்–மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வுக்காகவும் அவர்கள் சேதாரமின்றிப் பயன்கள் பெறுவதற்காகவும் தனித்துறை, தனி அமைச்சர் அமைத்தது கழக அரசேதான். அத்துறைக்கென வரும் நிதி ஆண்டில் ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

108. கடந்த ஆண்டு இந்த அரசு தொடங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர வகுப்பினர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ரூ.18 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

109. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத் துறை வருமாண்டுகளில் மிகப் பெருமளவு வேலை வாய்ப்புகளை அளிக்கும் என்பதால், அவர்களில் 5,000 பேருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

அரசுப் பணிகளில் நியமனம் பற்றிய குழுக்கள்

110. **ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அரசுத் துறைப் பணிகளிலும், அரசு நிறுவனப் பணிகளிலும் பணி நியமனம் பற்றி**

இரு துறைகளின் குழுக்களால் ஆராயப்பட்டு அக்குழுக்களின் அறிக்கைகள் அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவற்றை அமைச்சர்கள், அத்துறைகளின் செயலாளர்கள் கொண்ட குழு பரிசீலித்து வருகிறது. அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் முடிவினை அரசு அறிவிக்கும்.

கைத்தறி நெசவாளர் நலன்

111. உழவுத் தொழிலுக்கடுத்து மக்களின் உயிரனைய தொழிலான நெசவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் இந்த அரசு, சென்ற நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு, கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட உயர் நிலைக் குழுவின் அறிக்கையைப் பெற்று அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று செயல்படுத்தி வருவதை அனைவரும் அறிவீர்கள்.

112. 60 வயதை அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை ரூ.25,000 லிருந்து ரூ.35,000 ஆக நடப்பு நிதி ஆண்டில் இந்த அரசு உயர்த்தியுள்ளது. வரும் நிதி ஆண்டிலிருந்து இத்தொகை ரூ.40,000 ஆக உயர்த்தப்படும்.

113. ரூ.185.26 கோடி மதிப்பீட்டுச் செலவில் 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் புனரமைப்புத் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

தொழிலாளர் நலன்

114. சென்ற நிதி நிலை அறிக்கையில், நிர்வாகம், தொழிலாளர் மற்றும் அரசுப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாநில அளவிலான அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களின் நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டு, பல்வேறு தொழிலாளர் நல உதவித் தொகைத் திட்டங்கள் வரும் நிதி ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும் என்று கூறியிருந்தேன். அதற்கிணங்க ஒன்பது தொழிலாளர் பிரதிநிதிகளையும், ஒன்பது நிர்வாகப் பிரதிநிதிகளையும், ஆறு அரசு அலுவலர்களையும் கொண்ட நல வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். **அமைப்பு ரீதியில் இல்லாத தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் (Group Personal Accident Relief Scheme), மகப்பேறு நலத்திட்டம் (Maternity Benefit Scheme), பணி முடிவு நலத் திட்டம் (Terminal Benefit Scheme) ஆகிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் அமைப்பு ரீதியில் இல்லாத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.**

115. கொத்தடிமைகளைக் கண்டறிவதற்காக 1997-ல் ஆய்வு செய்யப்பட்டு 25,008 பேர் கொத்தடிமைத் தொழிலாளர்களாக இருப்பது கண்டறியப்பட்டது. அரசு எடுத்த நடவடிக்கைகளினால் இதுவரை 4,774 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வுக்கான நிதியுதவி அளிக்கப்பட்டது. மீதமுள்ள கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளபபடுகிறது.

116. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் குறித்த திரு கோலப்பன் குழுவின் அறிக்கையின் மீது அரசு உரிய முடிவு எடுத்து இக்கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

பத்திரிகையாளர் நலன்

117. 1996-97 ஆம் ஆண்டு பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டது. **தற்போது அவர்களின் கோரிக்கையை ஏற்று ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. பணிபுரியும்போது பத்திரிகையாளர்கள்**

இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.25,000 லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

118. கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு, நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஆதரவற்ற விதவையர், உடல் ஊனமுற்றோர் போன்ற பல்வேறு நலிந்த பிரிவினருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.150 ஆக உயர்த்தப்பட்டு, அதனால் 8,43,295 நபர்கள் பயன் பெறுகின்றனர். இது தவிர, அவர்களுக்கு தீபாவளி மற்றும் பொங்கல் நாட்களில் வேட்டி, சேலைகளும் சத்துணவு நிலையங்களில் மதிய உணவும், வாரம் ஒருமுறை அரை கிலோ அரிசியும், மதிய உணவு அருந்தாதவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

119. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கும், அகதி முகாம்களிலிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும், முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கும் பொங்கல் நாளையொட்டி 70 இலட்சம் இலவச வேட்டிகளும், 77 இலட்சம் இலவச சேலைகளும் ரூ.100 கோடி செலவில் நடப்பு நிதி ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

120. இந்த அரசு கடைப்பிடிக்கும் மனித நேயக் கொள்கையின் அடிப்படையில், மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்றுவதற்கான சட்டமுன் வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு, தொழில் செய்ய வசதி போன்ற மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த போதுமான நிதி வரும் நிதி ஆண்டிலேயே ஒதுக்கப்படும்.

சமூக சீர்திருத்தத் துறை

121. சாதிக் கலவரங்களைத் தவிர்ப்பது குறித்து விவாதிக்க, கூட்டப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் சமத்துவ சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்த அரசாங்கத்தில் தனியாக சமூக சீர்திருத்தத்துறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தத் துறையை அமைப்பது குறித்து, சமூகவியல் வல்லுநர்கள் கொண்ட ஆய்வுக் குழு பேராசிரியர் சுந்தரம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் குழுவின் அறிக்கையை விரைவில் பெற்று தலைமைச் செயலகத்தில் இந்தப் புதிய துறை செயல்படத் தொடங்கும்.

தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சி

122. உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு மோகன் தலைமையில் அரசு நியமித்த உயர்மட்டக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திடவும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கிடவும் அரசு சார்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தறிந்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

வீட்டு வசதி

123. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பு நிதி ஆண்டில் ரூ.252 கோடி மதிப்பீட்டு செலவில் 15,500 குடியிருப்புக்களைக் கட்டி முடிக்கும். ரூ.44.61 கோடி செலவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புதிய விடுதி கட்டும் பணி வரும் நிதி ஆண்டில் முடிவடையும்.

124. 1970 ஆம் ஆண்டு கழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் இதுவரை 66,014 அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.389.48 கோடி செலவில் குடிசை வாழ் மக்களுக்காக கட்டியுள்ளது. தற்போது மேலும் 3,000 அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆறு

மாநகராட்சிப் பகுதிகளில் 50,025 குடும்பங்கள் ஆட்சேபனை இல்லாத இடங்களில் குடிசைகளில் வசித்து வருகின்றனர். சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தவாறு 7,936 குடும்பங்களுக்கு ரூபாய் ஐந்து கோடி செலவில் இந்த நிதி ஆண்டில் கல்நார் தகடுகளிலான கூரை கொண்ட வீட்டுவசதி செய்யப்பட்டுள்ளது. **மீதமுள்ள அனைத்து குடிசை வாழ் குடும்பங்களுக்கும் தீப்பற்றாத கல்நார் தகடுகளிலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகளை அடுத்த இரண்டாண்டுகளில் அமைத்துத் தர ஒரு பெரும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடுத்து வரும் இரண்டாண்டுகளில் ரூ.52.6 கோடி செலவில் 42,089 குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டப்படும். மாநகராட்சிகளைத் தொடர்ந்து படிப்படியாக மற்ற நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.**

125. **சென்னை மாநகரில் நதி மற்றும் கால்வாய் சீரமைப்புத் தூய்மைப் பணி மேற்கொள்வதற்காக அங்குள்ள குடிசை வாழ் குடும்பங்களை அப்புறப்படுத்தி முதற்கட்டமாக ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடியமர்த்த ரூ.37.5 கோடி செலவில் 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்படும்.** மற்றும் ரூ.60 கோடி மதிப்பீட்டில் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 6500 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வரும் பணி விரைவில் முடிவுபெறும். வரும் நிதி ஆண்டில் இதற்காக ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

126. **சென்னையிலும், ஏனைய நகரங்களிலும் குடிசைப் பகுதிகளில் வாழும் 30,000 குடும்பங்களுக்கு ரூ.6 கோடி செலவில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.**

சுதந்திரப் பொன் விழா ஆண்டு

127. கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தேசத் தியாகிகளையும், மொழிக் காவலர்களையும் போற்றிடும் இந்த அரசின் சார்பில் கடந்த நிதி நிலை அறிக்கையில் கூறியவாறு சுதந்திரப் பொன் விழா ஆண்டையொட்டி தியாகிகளின் நினைவாக, காந்தி மண்டபம் அருகே, கிண்டியில் ரூ.30 இலட்சம் செலவில் தியாகிகள் மணிமண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மதுரை திருமங்கலத்தில் விடுதலைப்போராளி தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவாக ரூ.62 இலட்சம் செலவில் நினைவு இல்லம் உருவாக்கப்பட்டுள்ளது.

128. திருநெல்வேலி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவன் நினைவாக புதிய மாளிகை ரூ.57 இலட்சம் செலவில் எழுப்பப்பட்டு பூலித்தேவன் சிலையும் அமைக்கப் பட்டுள்ளது.

129. ரூ.25 இலட்சம் செலவில் முன்னாள் முதல்வர் பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு சென்னையில் நினைவிடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

130. வேலூர் சிப்பாய் கலவரம் எனும் சுதந்திரப் போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த இந்தியப் படைவீரர்களின் நினைவாக ரூ.3 இலட்சம் செலவில் நினைவுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது .

131. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில், பாட்டுக்கோட்டையாக உயர்ந்து நின்ற கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவகம் ஒன்று அமைப்பதற்காக ரூ.20.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணி நடந்தேறி வருகிறது.

132. கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலையில் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களுக்கு ரூ.20.50 இலட்சம் செலவில் நினைவகம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

133. **வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 200வது ஆண்டை நினைவு கூர்ந்திடும் வகையில் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி, தூத்துக்குடி மாவட்டம் கயத்தாற்றில் இந்த அரசின் சார்பில் புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்படும்.**

134. **அதேபோல் மானங்காத்த சீமையின் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்ட 200ஆம் ஆண்டினை நினைவு கொள்ளும் வகையில் 2001ம் ஆண்டு அக்டோபர் திங்களில் புகழாஞ்சலி நிகழ்ச்சி அரசு சார்பில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடத்தப்படும்.**

135. கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்தவாறு அரசியல் வித்தகர், அடிமட்டத்து மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் டாக்டர் அம்பேத்கர் மணி மண்டபம் அமைக்கும் பணி 23-10-98 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

136. **இனமானம் போற்றிய தமிழ்த்துறவி குன்றக்குடி அடிகளார் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் அவர்களின் நினைவாக குன்றக்குடியில் நினைவு மண்டபம் உருவாக்கி அதில் நூலகமும் அமைக்கப்படும்.**

137. **தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதற்காக உண்ணா நோன்பிருந்து உயிர் விட்ட விடுதலை வீரர் உத்தமத் தியாகி சங்கரலிங்கனார் சிலையும், பிரிட்டிஷ் கொடியை இறக்கிவிட்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக உயிரைப் பொருட்படுத்தாமல் கொடிக்கம்பத்தின் உச்சியில் ஏறி கொடி ஏற்றியவரும் நாட்டு விடுதலைக்காக பலமுறை சிறை சென்றவருமான ஆர்யா என்ற பாஷ்யம் அவர்களின் சிலையும் சென்னையில் உள்ள தியாகிகள் மணி மண்டபத்தின் முகப்பில் அமைக்கப்படும்.**

138. **வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து, அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்காக பெயர்கள் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் மொழிக் காவலர்களின் வாரிசுகளுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.**

குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை

139. வான்புகழ் கொண்ட வள்ளுவரின் திருவுருவச் சிலை ரூ.8.79 கோடி மதிப்பீட்டுச் செலவில் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் அமைக்கப்படுகின்ற சீரிய பணி வரும் நிதி ஆண்டில் முடிவடையும் என்பதை அளவற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பணியாளர் நலன்

140. இம்மாநிலத்தில் அரசு அலுவலர்களுக்கு ஊதியம் மற்றும் சலுகைகள் பொதுவாக மத்திய அரசுக்கு இணையாகவும், ஒருசில இனங்களில் அதற்கு மேலாகவும் 1989ஆம் ஆண்டிலேயே அளித்தது கழக அரசுதான் என்பதை அனைவரும் அறிவீர்கள். அதைத் தொடர்ந்து, சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்தபடி அரசு அலுவலர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் மத்திய ஊதியம் மற்றும் ஓய்வூதிய விகிதத்தை 1.1.96லிருந்து முன்தேதியிட்டு நிலுவை உட்பட ரூ.3,630 கோடி ரூபாய் கூடுதல் செலவில் இந்த அரசு அளித்துள்ளது. தென் மாநிலங்களில் கேரள மாநிலம் இந்த ஊதிய விகிதங்களை அதன் பணியாளர்களுக்கு 1.3.97-லிருந்தும், கருநாடக மாநிலம் 1.4.98-லிருந்தும் அளித்துள்ளன என்பதும், ஆந்திர மாநிலத்தில் இதுவரை திருத்திய ஊதிய விகிதங்கள் அளிக்கப்படவில்லை என்பதுய குறிப்பிடத்தக்கவை.

141. திரு.சிவசுப்ரமணியம் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஆசிரியர்கள், அலுவலக கண்காணிப்பாளர்கள், காவலர்கள் போன்ற பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்களைத் திருத்தி அமைத்துள்ளோம். இது தவிர, அமைச்சுப் பணியாளர்களுக்கும், அவர்கள் நிலையிலுள்ள பிற பணியாளர்களுக்கும் 5 விழுக்காடு தனி ஊதியம் வழங்கியுள்ளோம். சத்துணவுத் திட்ட பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், இரவுக் காவலர்கள் ஆகியோரின் ஊதியமும், முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களின் ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றுக்காக ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு மேலும் கூடுதலாக ரூ.196 கோடி செலவாகும்.

142. பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தை பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது. இதனைப் பின்பற்றி மாநில அரசும் இவர்களின் ஊதிய விகிதத்தை 1-1-96 முதல் மாற்றியமைக்க முடிவு எடுத்து ஆணைகள் விரைவில் வெளியிடப்பட உள்ளன.

143. அரசு அலுவலர்கள் சொந்த வீடு கட்ட நடப்பு நிதி ஆண்டில் ரூ.82.75 கோடி கடன் வழங்கப்படும். மேலும், ஹட்கோ (HUDCO) எச்.டி.எப்.சி (HDFC) போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து அரசு கடன் பெற்று, வீடு கட்ட முன் பணம் அளித்திட வரும் நிதி ஆண்டில் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

144. மத்திய அரசு 1996க்கு முன்பு ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதியத்தை மீண்டும் அதிகரித்துள்ளது. மாநில அரசும், மத்திய அரசு அறிவித்த அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை 1-4-99 முதல் அளிக்க முடிவு எடுத்துள்ளது.

145. மத்திய அரசைப் பின்பற்றி மாநில ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் 1.1.96 முதல் மாற்றியமைக்கப்பட்டபோது, அரசு அலுவலர்களைப் போலவே 40 விழுக்காடு ரொக்கமாக இரண்டு தவணைகளிலும், மீதம் உள்ள 60 விழுக்காடு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு வட்டியோடு திருப்பி அளிக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். ஓய்வூதியர்கள் தங்கள் வயதினைக் கருதி நிலுவைத் தொகை அனைத்தும் ரொக்கமாக அளிக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தனர். **அவர்கள் கோரிக்கையையும் அரசின் தற்போதைய நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு நடப்பு நிதி ஆண்டில் அளித்த நிலுவைத் தொகையில் 20 விழுக்காடு போக 40 விழுக்காடு வரும் நிதி ஆண்டிலும், மீதமுள்ள 40 விழுக்காடு அடுத்த நிதி ஆண்டிலும் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.** இதனால் வரும் நிதி ஆண்டில் அரசுக்குக் கூடுதலாக ரூ.25 கோடி செலவும், அடுத்த நிதியாண்டில் சுமார் ரூ.50 கோடி செலவும் ஏற்படும்.

- சாதி சான்றிதழ் விண்ணப்பங்கள் 10 அல்லது 12ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே தலைமை ஆசிரியர் ஒப்புதலுடன் வட்டாட்சியருக்கு அனுப்பி, வட்டாட்சியர் விசாரணைக்குப்பின் சான்றிதழ் பெற்று, மாணவர் படிப்பை முடித்து மாற்றுச் சான்றிதழ் பெறும் சமயத்தில் வழங்கப்படும்.
- தொடக்கக்கல்வி அனைவருக்கும் கிடைத்திட "தொடக்கக் கல்வி இயக்கம்" ஒன்று வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.

ஆண்டுத் திட்டம்

146. ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஒவ்வோராண்டும் தொடர்ந்து எய்தி வரும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. இதை மத்திய திட்டக் குழு பாராட்டியுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலும் ரூ.4,500 கோடி திட்ட ஒதுக்கீடு முழுமையாக எய்தப்படும். மத்திய திட்டக் குழுவுடன் கலந்து ஆலோசித்த பிறகு, வரும் நிதி ஆண்டிற்குரிய திட்ட ஒதுக்கீடு ரூ.5,250 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நடப்பு நிதி ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைவிட 17 விழுக்காடு அதிகமாகும்.

நிதி நிலைமை

147. நடப்பு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை 1998 மார்ச் திங்களில் அவையில் வைத்த போது, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.15039.46 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18048.04 கோடியாகவும் இருந்தன. இவ்வாண்டிற்கான திருத்த மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.14198.52 கோடியாகவும் வருவாய்க் கணக்கில் செலவு ரூ.17183.94 கோடியாகவும் குறைந்துள்ளன.

148. 1998-99 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்த பற்றாக்குறை ரூ.876.67 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. ஆனால், திருத்த மதிப்பீட்டில் அப்பற்றாக்குறை ரூ.235.73 கோடியாகக் குறைந்துள்ளது.

149. 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், வருவாய் கணக்கில் வரவுகள் ரூ.15867.78 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18500.32 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

150. 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அனைத்துக் கணக்குகளிலும் நிகரப் பற்றாக்குறை ரூ.790.13 கோடியாக அதிகரித்துள்ளது. இப்பற்றாக்குறையைக் குறைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

வணிக வரிகள்

151. அனைத்து மாநிலங்களிலும் வணிகவரி வீதங்கள் ஒரே சீராக இருந்தால் மாநிலங்களிடையே வரி மாற்றங்களில் போட்டி இல்லாமல் தொழிலையும் வாணிபத்தையும் ஊக்குவிப்பதோடு மாநிலங்களின் வருவாயையும் பெருக்கிட முடியும். அகில இந்திய அளவில் இதற்கான முயற்சிகள் கடந்த சில ஆண்டுகளாக எடுக்கப்பட்டு வந்தபோதிலும் இதுவரை இதில் ஒரு இறுதியான முடிவு எடுக்க இயலவில்லை. எனினும் நமது மாநிலத்தில் மேற்கண்ட கருத்தின் அடிப்படையில் பல பொருள்களின் வரி வீதத்தை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது.

152. தமிழக வரலாற்றில் முதல் முறையாக நிதி நிலை அறிக்கை தயாரிக்குமுன்பு மாநிலத்தில் உள்ள அனைத்து வர்த்தக சங்கங்கள், உயர் மட்ட பல்தொழில் முனைவோர் சங்கங்கள் மற்றும் வணிகர் கழகங்களின் உறுப்பினர்களை அழைத்து அவர்களுடைய கருத்தினைக் கேட்டு அவற்றைப் பரிசீலித்து அண்மை மாநிலமான கர்நாடகத்தில் இருப்பது போலவே பின்வரும் வரி மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

* கணினிகள் மற்றும் புற உறுப்புகள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. அவற்றின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி நீக்கம் செய்யப்படுகிறது,
* தடையிலா மின் வழங்கும் அமைவுகளுக்கு விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.
* தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட அட்டவணை பிரிவு டி-18ல் உள்ள மின்னணு படிபெருக்கிப் பொறிகள் முதலானவற்றுக்கும், வரிசை எண் 19-ல் உள்ள மின்னணு அட்டவணையிடும் பொறிகள் முதலானவற்றுக்கும், வரிசை எண் 20-ல் உள்ள மின்னணு தொலையச்சுப்பொறி மற்றும் தொலை நகல் பொறிகள், வரிசை எண் 21-ல் உள்ள மின்னணு தட்டச்சுப் பொறிகள், வரிசை எண் 26-ல் உள்ள ஒலித்தட்டை இயக்கச் செய்யும் கருவிகள் முதலானவைகள், வரிசை எண் 52-ல் உள்ள ஒலிப்பதிவு மற்றும் மறு ஒலிக்கருவிகள் போன்றவை, வரிசை எண் 58-ல் உள்ள தொலைக்காட்சி படம் எடுக்கும் கருவிகள் முதலியவை மற்றும் வரிசை எண் 61-ல் உள்ள படம் பதிவு செய்யும் கருவிகள் முதலானவைகளுக்கு விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.
* செல்லுலார் தொலைபேசிகளுக்கு விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.
* அட்டவணை பகுதி-சி வரிசை எண் 18 மற்றும் 49-ல் உள்ள ரொக்கம் பதிவு செய்யும் மின்னணு பொறிகள், டிராட்சிஸ்டர்கள் போன்றவற்றிற்கு விதிக்கப்படும் வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.
* தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி 4 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக உயர்த்தப் படுகிறது.
* தங்கம், வெள்ளிக் கட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது. இவற்றின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி நீக்கப்படுகிறது.
* பழுதடைந்த அல்லது தேய்ந்த நகைகளுக்கு விதிக்கப்படும் கொள்முதல் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக்

குறைக்கப்படுகிறது.

* இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்ட அமைப்புகள் தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்கும் தங்கத்திற்கு முழு விற்பனை வரி விலக்கும் மற்றும் அவ்வாறு விற்கப்பட்ட தங்கத்திற்கு, தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு பிரிவு 7–அ வின் கீழ் விதிக்கப்படும் கொள்முதல் வரியிலிருந்து விலக்கும் அளிக்கப்படுகிறது.

* முதலாம் அட்டவணை பகுதி–இ வரிசை எண் 20–ல் உள்ள வைரம் முதலான விலை மதிப்புள்ள கற்களுக்கு விதிக்கப்படும்வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* முதலாம் அட்டவணை பகுதி ஜி வரிசைஎண் 6–ல் உள்ள படிபெருக்கிஇயந்திரங்கள் முதலானவற்றிற்கு விதிக்கப்படும் வரி 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* வணிகச்சின்னம் இடப்பட்ட ரஸ்க் மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து ரொட்டிக்கு இணையாக 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

* அடக்கமான பேரொளி குழல் விளக்குகள் (Compact Fluorescent Lamp) மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப் படுகிறது.

✦ தமிழ் மென்பொருள் விரைவான வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காக 'தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி' ஒன்றை தமிழக அரசு உருவாக்கும்.

✦ உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Tamil Virtual University) ஒன்றினை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

✦ நவீன மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கு "தொலைத் தொடர்பு வழி மருத்துவம்" (Telemedicine) வசதி நமது மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

* அனைத்து வகை மோட்டார் வாகனங்களில் பொருத்தப்படும் பல்புகள் மற்றும் ஒலிப்பான்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது,

* வாழ்த்து அட்டைகள், அழைப்பிதழ்கள் போன்றவை மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் (REP licences) போன்றவற்றிற்கும், விசை உழுக்கருவிகளின் இழுவைகள், இரும்பு வகையல்லாத உலோகங்களின் கழிவுகள், கம்பளியால் பின்னப்பட்ட பொருள்கள், சர்பத்துகள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள் மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

* காகித உறைகள், தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக் காகிதம், தட்டச்சு படிபெருக்கும் காகிதம், உயர்தன்மைக் காகிதம் மற்றும் மின்சார உதவி இல்லாமல் தயார் செய்யப்படும் தகர கொள்கலன்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

* **செயற்கை இழைநூலுக்கும், செயற்கை இழைகளுக்கும் (man made fibre and yarn) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் 26.3.99 வரை 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக அளிக்கப்பட்ட வரிக் குறைப்பு அதே நிபந்தனைக்குட்பட்டு காலவரையின்றி நீட்டிக்கப் படுகின்றது.**

* **தமிழ்நாடு பொது விற்பனைச் சட்டம் பிரிவு 3(4)–ன் கீழ் விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு** விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. மேலும் மாதம் ஒரு முறை வழங்க வேண்டிய படிவம் 17, வருடத்திற்கு ஒரு முறை வழங்கினால் போதுமானது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

* சித்த மருந்துகள், சூரிய ஒளியால் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள் (saree falls) மற்றும் காலணிப்பட்டிகள் ஆகியவற்றிற்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

* காஸ் (Gauze), பாண்டேஜ் துணிகளுக்கான (bandage) வரிவிலக்கு வரம்பு ரூ.50 லட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்படுகிறது.

* தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம் பகுதி –டி வரிசை எண் 67–ல் உள்ள எந்த அட்டவணையிலும் இடம்பெறாத பிற பொருட்கள் அவற்றிற்கு ஈடான பொருள்கள் இடம்பெறும் பகுதிகளில் சேர்க்கப்படும்.

153. இம்மாற்றங்களால் வரி வருவாயில் ஏற்படும் விளைவுகளை ஓர் ஆண்டுக்குப் பின் பரிசீலித்து எதிர்பார்த்த கூடுதல் வரி வருவாய் கிடைக்கவில்லை என்றால் இவற்றில் தக்க மாற்றம் செய்ய நேரிடும்.

154. பான்மசாலா மீது விதிக்கப்படும் வரி 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்தப்படுகிறது.

155. சிகரெட் பிடிப்பது மக்களின் நல்வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும் பழக்கமாகும். எனவே அதனால் விளையும் கேட்டினை பெருமளவு குறைப்பதற்காக பீடி நீங்கலாக சிகரெட், போன்ற ஆடம்பரப் புகையிலைப் பொருள்களுக்கு வரும் நிதி ஆண்டிலிருந்து அண்டை மாநிலங்களில் உள்ளது போல 5 சதவிகிதம் ஆடம்பர வரி விதிக்கப்படும்.

156. வணிகராகப் பதிவு செய்ய மொத்த விற்பனைத் தொகை சென்ற நிதி நிலை அறிக்கையில் ரூ.75,000 லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டது. வரி விதிப்பிலிருந்து விலக்குக்கான வரம்பையும் வணிகராக பதிவு செய்ய உள்ள வரம்பையும் ஒரே சீராக ஆக்க முடிவெடுத்து பதிவு செய்ய மொத்த விற்பனைக்கான வரம்பு ரூ.3,00,000 ஆக உயர்த்தப்படுகிறது. இந்த மாற்றத்தால் 20,000–த்திற்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் பயன் அடைவார்கள்.

157. தற்போது குடிமுறைப் பொறியியல் வேலைகளுக்கு (Civil Engineering Works) இணக்க (compound) முறையில் வரி செலுத்தும் விருப்பத்தேர்வு ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல் மற்ற வேலை ஒப்பந்தங்களுக்கும் இணக்க வரி முறை அனுமதிக்கப்பட்டு, வரிவீதம் மொத்த விற்பனையளவில் 4 விழுக்காடு என்று நிர்ணயிக்கப்படுகிறது.

ஆயத்தீர்வை

158. மது இனங்களின் மீதான ஆயத்தீர்வையை புருப் லிட்டர் (Proof Littre) ஒன்றுக்கு ரூ.10 வீதம் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் கள்ளச் சாராயத்தைத் தடுக்கும் நோக்கத்தோடு 100 மில்லி லிட்டர் பாட்டில்களில் வரும் சாதாரண மது வகைகளுக்கு ஆயத்தீர்வை அதிகரிக்கப்பட மாட்டாது.

மோட்டார் வாகன வரி

159. தனியார் சேவை வாகனங்கள் மீதான வரி ஒரு இருக்கைக்கு காலாண்டுக்கு ரூ.50 லிருந்து ரூ.75 ஆக உயர்த்தப்படுகிறது. வாடகைப் பெருவண்டிகளுக்கு (Maxi Cab) தற்போதுள்ள வரி ஒரு இருக்கைக்கு காலாண்டுக்கு ரூ.1800 லிருந்து ரூ.2100 ஆக உயர்த்தப்படுகிறது.

160. மோட்டார் வாகன வரி செலுத்தும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளைக் குறைக்க கடந்த நிதி ஆண்டிலிருந்து ஒப்பந்த ஊர்திகள் மோட்டார் வாகன உரிமக் கட்டணம் செலுத்தும் போது அத்துடன் மோட்டார் வாகன வரியும் 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வசூலிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை பெற்றுள்ள நல்ல வரவேற்பைக் கருத்தில் கொண்டு, வரும் நிதி ஆண்டிலிருந்து இதனை சரக்கு (Goods Carriages) வாகனங்களுக்கும் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றிற்கு இதன் கீழ் வரி செலுத்துவது விருப்பத்தின்

அடிப்படையில் இருக்கும்.

கூடுதல் நிதி ஆதாரங்கள்

161. வரிவிதிப்பை மட்டுமே நம்பியிராமல், மாநிலத்தின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு வழிகள் பலவற்றையும் நாம் கண்டுள்ளோம். சென்ற நிதி ஆண்டில் சிறுசேமிப்பு நிகர வசூலிலிருந்து மத்திய அரசிடம் ரூ.397 கோடி கடனாக பெற்றதற்கு மாறாக, இந்த நிதி ஆண்டில் ரூ.779 கோடி பெற்றுள்ளோம். மேலும், கூடுதல் நிதி கிடைப்பதற்கு மாநிலத்தில் சிறு சேமிப்பு வசூலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

162. தமிழ்நாடு மின்சார வாரியம் பத்திரங்கள் வெளியிடுவதன் வாயிலாக, மூலதனச் சந்தையிலிருந்து நடப்பு நிதி ஆண்டில் ரூ.297 கோடி திரட்டியுள்ளது. வரும் நிதி ஆண்டில், அடிப்படைக் கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்காக மூலதனச் சந்தையிலிருந்து மேலும் அதிக நிதியாதாரங்கள் திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

163. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு (TAMIN) வழங்கப்பட்டு, அந்நிறுவனத்தினால் பயன்படுத்தப்படாமல் உள்ள கிரானைட் குத்தகைகளை அக்கனிம வளங்களைப் பயன்படுத்தும் திறமையுள்ள நிறுவனங்களுக்கு ஏல முறையில் அளிப்பதன் மூலம் மேலும் வருவாய் அதிகரிக்கும்.

164. குறைவான மதிப்பில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக, ஏராளமான ஆவணங்கள் சிறப்பு துணை மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிடம் நிலுவையாக உள்ளன. அவற்றின்மீது விரைவில் முடிவு எடுத்து அரசுக்கு அதிக வருவாய் ஈட்டுவதற்காக, புதிய திட்டம் ஒன்று 1.3.1999 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, பத்திரங்களைப் பதிவு செய்தோர், பதிவுத்துறை நிர்ணயித்த வரிக்கும் அவர்கள் செலுத்திய வரிக்கும் இடையே உள்ள வித்தியாசத் தொகையில் 50 விழுக்காட்டினை 1999 ஜூன் திங்களுக்குள் செலுத்தினால் பத்திரங்கள் அவர்களுக்குத் திருப்பி அளிக்கப்படும்.

- 42,089 குடும்பங்களுக்கு ரூ.52.6 கோடி செலவில் தீப்பற்றாத [illegible] தடுப்புகளுடன் கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள்.
- குடிசை வாழ் குடும்பங்களுக்கு 3,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள், ரூ.37.5 கோடியில் உருவாக்கப்படும்.
- சிப்காட் மேற்கொண்டிருந்த கடன் வழங்கும் பணி தமிழ்நாடு தொழில்முதலீட்டுக் கழகத்திற்கு (TIIC) மாற்றப்படும்.
- போக்குவரத்து மேம்பாட்டு நிதியுதவி கழகத்தையும் தமிழ்நாடு மின்சக்தி நிதியுதவிக் கழகத்தையும் இணைத்து தமிழ்நாடு கட்டமைப்பு வசதி நிதிக்கழகம் அமைக்கப்படும்.

இத்திட்டத்தினால் முத்திரை வரி மூலம் அரசுக்கு வருவாய் கணிசமாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

165. வணிக வரி நிலுவைகளை முனைப்புடன் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்ற நிதி ஆண்டில் ரூ.43 கோடியாக இருந்த வணிகவரி நிலுவை வசூல், நடப்பு நிதி ஆண்டில் பிப்ரவரித் திங்கள் வரை ரூ.130 கோடியாக உயர்ந்துள்ளது. வரி நிலுவைகளைக் குறைக்க சட்ட மாற்றங்கள் செய்வது பற்றியும் பரிசீலித்து வருகிறோம். வணிகவரி பற்றிய மேல் முறையீடுகள் பல்வேறு மேல் முறையீட்டு நிலைகளில் பல்லாண்டுகளாகத் தேங்கி கிடப்பதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் கோடிக்கணக்கில் நிலுவையில் உள்ளது. இந்தத் தொகையில் கணிசமான பகுதியை விரைவில் வசூலித்திட, மத்திய அரசு செயல்படுத்திய "சமாதான்" திட்டம் போன்ற ஒன்றை நமது மாநிலத்தில் செயல்படுத்துவது பற்றி பரிசீலித்து வருகிறோம்.

166. நம்மாநிலத்திற்கு சந்தன மர ஏற்றுமதி வாயிலாக, அதிக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆண்டு ஒன்றுக்கு 1500 டன் சந்தன மரக்கட்டைகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதியைக் கோரியுள்ளோம். இதை பிரதமர் மற்றும் தொடர்புடைய மத்திய அமைச்சர் ஆகியோரது நேரடிக் கவனத்திற்குக் கொண்டு சென்ற பின்னரும், இதற்கு ஒப்புதல் இதுவரை கிடைக்கவில்லை. இது தொடர்பாக தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

167. நமது மாநிலத்தின் முக்கியமான கனிம வளமான பழுப்பு நிலக்கரி(lignite) குறித்த உரியத் தொகை (royalty) 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு திருத்தியமைக்கப்படவில்லை. இது, மாநில அரசுக்குக் கணிசமான வருவாய் ஆதாரமாக இருப்பதால், பழுப்பு நிலக்கரிக்கான உரியத் தொகையை உயர்த்துமாறு மத்திய அரசைக்கோரியுள்ளோம். மத்திய அரசு இது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை.

168. பயனேதும் அளிக்க இயலாத திட்டங்கள் கைவிடப்பட்டு, பயனுள்ள திட்டப் பணிகளும் திட்டங்களும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு, செயல்திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்ததற்கேற்ப தற்போது அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்திவரும் திட்டங்களை ஆய்வு செய்து உரிய பரிந்துரைகள் அளிக்குமாறு மாநிலத்திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

169. வரிவிதிப்புகள் மூலம் கிடைக்கும் கூடுதல் வருவாயான ரூ.261 கோடியை கணக்கில் கொண்டபின்பு வரவு–செலவு இறுதிப்பற்றாக்குறை ரூ.529.13 கோடியாக இருக்கும்.

பேரவைத் தலைவர் அவர்களே,

170. இந்த நிதி நிலை அறிக்கை, அவையில் உள்ள அன்புக்குரிய உறுப்பினர்களின் கரங்களில் தவழ்வதற்கும்,தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை இயன்ற வரையில் இடையறாது பணியாற்றி நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப் படுவதற்கும், என்னுடன் அயர்வின்றி ஒத்துழைத்துக் கடமையாற்றியுள்ள நிதித்துறைச் செயலாளர் திரு.பி.வி.ராஜாராமன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அரசின் அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞானத்தால்
பராக்கிரமத்தால், அன்பால்
உன்னத இமமலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

கைத்திறச் சித்திரங்கள்,
கணிதங்கள் வான நூற்கள்,
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம், காவியங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தகசாலை எங்கும்
புதுக்கு நாள் எந்த நாளோ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்,
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண் வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏக்கங் கொண்டு கனவு கண்ட அந்த நாளை உருவாக்க நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், தீட்டும் திட்டங்கள், ஓர் அணிற் குஞ்சின் முயற்சியாகவாவது இருக்குமென்று 1996–97 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கவிஞர் பெருமகன் எழுப்பியுள்ள கேள்விக்கு விடையளிக்கும் வகையில்;

அந்நாள் இந்நாள் எனும்படியாக அந்தப் பொன்னாள் கண்டிட தூய்மை நிறை பொதுவாழ்வில் தோய்ந்துள்ளோர் அனைவரும் துணை நிற்க வாரீர் என அழைத்து இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

சென்னை
1999 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 17 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2030,
பங்குனி திங்கள் 3 ஆம் நாள்.

தமிழ் நாடு வரவு-செலவுத் திட்டம் 1999-2000
TAMIL NADU BUDGET 1999-2000

(ரூபாய் கோடியில்)
(Rupees in Crores)

விவரங்கள் (1)	ITEMS (2)	1997-98 கணக்குகள் ACCOUNTS (3)	1998-99 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு BUDGET ESTIMATES (4)	1998-99 திருத்த மதிப்பீடு REVISED ESTIMATES (5)	1999-2000 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு BUDGET ESTIMATES (6)
I. தொகு நிதி	**I. CONSOLIDATED FUND**				
வருவாய் கணக்கில் வரவுகள்	Revenue Receipts	13,586.95	15,039.46	14,198.52	15,867.78
வருவாயிலிருந்து செய்யப்பட்ட செலவு	Expenditure met from Revenue	14,950.85	18,048.04	17,183.94	18,500.32
வருவாய்க் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை	**Surplus or *Deficit* on Revenue Account**	**(-)1,363.90**	**(-)3,008.58**	**(-)2,985.42**	**(-)2,632.54**
பொதுக்கடன் - வரவுகள்	Public Debt - Receipts	2,132.70	4,665.71	4,845.64	4,921.49
பொதுக்கடன் திருப்பிச் செலுத்துதல்	Public Debt - Repayment	407.78	2,144.50	2,470.69	2,459.42
பொதுக்கடன் (நிகரம்)	**Public Debt (Net)**	**(+)1,724.92**	**(+)2,521.21**	**(+)2,374.95**	**(+)2,462.07**
பொதுக்கடன் நீங்கலாக. முன் பணங்கள் உட்பட. மூலதனத்திலிருந்து செய்யப்பட்ட செலவு (நிகரம்)	Expenditure met from Capital excluding Public Debt and including Loans and Advances (Net)	757.83	1,802.69	1,398.23	1,612.11
மூலதனக் கணக்கில் உபரி அல்லது பற்றாக்குறை	***Deficit* or Surplus on Capital Account**	**(+)967.09**	**(+)718.52**	**(+)976.72**	**(+)849.96**
மொத்தம் - தொகுநிதி (நிகரம்)	**Total** - Consolidated Fund (Net)	**(-)396.81**	**(-)2,290.06**	**(-)2,008.70**	**(-)1,782.58**
II. எதிர்பாராச் செலவு நிதி (நிகரம்)	II. CONTINGENCY FUND (Net)	(+)5.30	.....	.....	.....
III. பொதுக் கணக்கு (நிகரம்)	III. PUBLIC ACCOUNT (Net)	(+)403.95	(+)1,413.39	(+)1,772.97	(+)992.45
வரவு - செலவுகளின் மொத்தம் (I+II+III)	TOTAL - TRANSACTIONS (I+II+III)	**(+)12.44**	**(-)876.67**	**(-)235.73**	**(-)790.13**
தொடக்க இருப்பு	Opening Balance	(+)74.70	(+)71.39	(+)87.14	(-)148.59
இறுதி இருப்பு	Closing Balance	(+)87.14	(-)805.28	(-)148.59	(-)938.72

எலெக்ட்ரானிக் மெயில் இ-மெயில்

இன்று தனிமனிதர்களுக்கிடையில் செய்தி பரிமாற்றத்துக்கான வசதிகளில் அதிசயித்தக்க அளவில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. எலெக்ட்ரானிக் மெயில் அல்லது இ-மெயில் வசதியை இந்த வளர்ச்சியின் உச்சம் என்று கூறலாம்.

அச்சு இயந்திரமும், எலெக்ட்ரானிக் சாதனங்களும் பொதுமக்களுக்கான செய்தி தொடர்பில் பெரும் புரட்சியை ஏற்படுத்தின. தனி மனிதர்களுக்கிடையிலான செய்தி பரிமாற்றத்திலும் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு வரையில் கூட செவி வழியாக செய்தி பரவுவதுதான் பொதுமக்களுக்கான செய்தி தொடர்பிற்கு இருந்த ஒரே வசதி. இந்த முறையில் ஒரு செய்தி ஒரு நாட்டுக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தெரிய மாதக்கணக்கில் அல்லது ஆண்டுக்கணக்கில் கூட ஆகும். இந்த நிலையில் அந்தச் செய்தி மற்றொரு நாட்டுக்கு தெரிவது என்பது நடக்காத காரியமாக இருந்தது.

ஆனால், பின்னர் தபால் முறையும் அச்சு இயந்திரமும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இந்த நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இன்று எலெக்ட்ரானிக் சாதனங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி காரணமாக ஒரு செய்தி அது நிகழும் போதே (Real time) உலகம் முழுவதும் தெரிந்துவிடக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக கடந்த சில ஆண்டுகளில் தான் தகவல் தொடர்பில் வியக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஃபேக்சும் (Fax) அதைத் தொடர்ந்து விரைவிலேயே உருவான லான் (lan-local area network) போன்ற வட்டார கம்ப்யூட்டர் இணையங்களும் தகவல்



தொடர்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின.

இன்று இண்டர்நெட் போன்ற கம்ப்யூட்டர் இணையங்கள் உலகை பட்டனை அழுத்தும் நேரத்திற்குள் சுருக்கியுள்ளன. இந்த கம்ப்யூட்டர் இணையங்களின் விளைவாக தனி மனிதர்களுக்கிடையிலான செய்தி பரிமாற்றத்திற்கான மிகச்சிறந்த வசதியாக இ-மெயில் (E-mail) உருவாகியது.

கம்ப்யூட்டர் இணையங்களில் ஒருவர் மற்றொருவருக்கு செய்தி அனுப்பும் முறைதான் இ-மெயில் எனப்படுகிறது. நாம் எழுதும் தபால் பல்வேறு நிலையங்களால் பாதை காட்டிவிடப்பட்டு இறுதியாக உரியவருக்கு போய்ச் சேருவது போலவே, கம்ப்யூட்டர் இணையங்களின் வழியாக ஒருவர் அனுப்பும் செய்தியும் பல்வேறு கம்ப்யூட்டர்களினால் பாதை காட்டிவிடப்பட்டு இறுதியாக உரியவருக்கு போய்ச்சேருகிறது.

ஆனால், இ-மெயில் வசதியை பயன்படுத்திக்கொள்ள செய்தியை அனுப்புபவரும் பெறுபவரும் பெர்சனல் கம்ப்யூட்டர், மோடம், கம்ப்யூட்டர் இணையத்துடன் இணைப்பு போன்ற சாதனங்களை சொந்தமாக வைத்திருக்கவேண்டும்.

இந்தியாவில் விதேஷ் சஞ்சார் நிகம் லிமிடெட் (Videsh Sanchar Nigam Ltd) சுருக்கமாகக வி.எஸ்.என்.எல்) இ-மெயில் இணைப்புகளை வழங்கிவருகிறது. பொதுவாக மூன்று வழிகளில் இந்த இணைப்பை பெறலாம்.

முதலாவதாக, வி.எஸ்.என்.எல் நிறுவனம் நேரடி

தொடர்பு (On Line) லைன்களை (Lines) குத்தகைக்கு (Lease) விடுகிறது. ஒருவர் இந்த லைன்களில் ஒன்றை குத்தகைக்கு எடுத்து கம்ப்யூட்டர் இணையத்துடன் இணைப்பை ஏற்படுத்தி இ-மெயில் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அடுத்து சில தொழில் நிறுவனங்கள் இ-மெயில் இணைப்பு வழங்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்கள் வி.எஸ்.எம்.எல் நிறுவனத்திடம் மொத்தமாக லைன்களை குத்தகைக்கு எடுத்து அவர்களுடைய சேவைகளை பயன்படுத்திக் கொள்ள விரும்புபவர்களுக்கு துணை குத்தகைக்கு (Sub lease) விடுகின்றனர்.

இண்டர்நெட்டில் இ-மெயில்

இண்டர்நெட்டை பயன்படுத்துபவர்களுக்கு இ-மெயில் வசதியும் கிடைக்கிறது. இண்டர்நெட்டில் சமீபகாலம் வரையிலும் சுருக்கமான குறிப்புகளைத்தான் இ-மெயில் மூலம் அனுப்பி வைக்க முடிந்தது. படங்களையோ அட்டவணை தகவல்களையோ அனுப்ப முடியாது.

ஆனால், மல்டிபர்ப்பஸ் இண்டர்நெட் மெயில் எக்ஸ்டென்சன் (Multipurpose internet mainl extension சுருக்கமாக mime) மற்றும் யூயூ என்கோடு (uuencode) போன்ற வேறு வகையான குறியீட்டு முறைகள் (Encoding schemes) ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் செய்திகளை மட்டுமல்லாமல் வடிவமைக்கப்பட்ட டாக்குமெண்டுகள், புகைப்படங்கள், ஒலி கோப்புகள் (sound files) வீடியோ கோப்புகள்

இணையமொழி

பாவலர். கருமலைத் தமிழாழன்

ஆலைகளாய்த் தொழிற்புரட்சி ஏந்தி ரத்தால்
அகிலமெலாம் வந்ததுபோல்; செயற்கைக் கோளின்
வேலையினால் ஞாலத்தின் செய்தி யெல்லாம்
விரைந்தனைவர் அறிதல்போல்; நினைவிற் கொள்ளும்
மூளையெனும் கணிப் பொறியில் தகவல் தம்மை
முழுவதுமாய்ப் பெறுதல்போல்; இணையத் தாலே
ஓலைதனில் இருந்த தமிழ் மேன்மை யெல்லாம்
ஓங்கிவளர்ந் துலகமெல்லாம் ஒளிக்கு தின்று!

அறிவியலுக் கேற்றமொழி அல்ல வென்னும்
அறிவிலிகள் கூற்றெல்லாம் பொய்யா யாகி
செறிவானக் கணிப்பொறியின் மொழியா யாகி
செம்மையானக் குறியீட்டின் எழுத்து மாகி
அறிகின்ற விசைப்பலகை பொதுவா யாகி
அறிஞரெலாம் போற்றுகின்ற சொல்தொகுப்பும்
நெறியான மென்பொருளின் தளம மைந்தே
நிகரில்லா இணையமொழி ஆன தின்று!

தொல்காப்பி யர்மொழியை வள்ளு வர்தம்
தொல்குறளை கம்பர்சொல் கவிந யத்தை
உள்ளத்தை உருக்குகின்ற தேவா ரத்தை
உரிமைக்குரல் பாரதியை தாசன் தம்மை
எல்லைக்குள் இல்லாமல் ஞால மெல்லாம்
எம்மொழியில் அறிதற்கும் இணைய மென்னும்
நல்வலையுள் நற்றமிழோ உலகமொழி ஆனதின்று!
*நுழைய வைத்தக் **கலைஞ ராலே**!*

(video files) போன்றவற்றையும் இணைப்புகளாக (Attachments) அனுப்பி வைக்க முடியும்.

இப்போதுள்ள இ-மெயில் செயல்திட்டங்கள் அனைத்துமே பல பொதுவான அம்சங்களைக் கொண்டவைதான் என்றாலும் அவற்றை உங்களுடைய வசதிக்கேற்ப மாற்றிக் கொண்டால் (customise) இ-மெயில் செய்தியை அனுப்புவதும், பெறுவதும் மிகவும் எளிதாகி விடும்.

ஆனால், அதற்கு முன்னர் முதலில் நீங்கள் உங்களுடைய இ-மெயில் செயல் திட்டத்தை இண்டர்நெட்டுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு மெயில் சேர்வரின் (Mail Server) ஐபி முகவரி (IP Address) உங்களுடைய பெயர் மற்றும் இ-மெயில் முகவரி, (வி.எஸ்.என்.எல். நிறுவனத்திடம் இவை பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ளலாம்). ஆகியவற்றை உங்களுடைய இ-மெயில் செயல் திட்டத்திற்கு வழங்க வேண்டும்.

மைக்ரோசாப் இண்டர்நெட் மெயில் செயல் திட்டத்தை நீங்கள் பயன்படுத்தினால் உங்களுடைய கம்ப்யூட்டரில் தோன்றும் முதல் திரையில் இ-மெயில் செய்தி அனுப்பும் போது நீங்கள் அடிக்கடி மேற்கொள்ள வேண்டிய திருக்கும் செயல்களுக்கான சின்னங்களை (Icon's) டூல்பாரில் (Toolbar) காணலாம். அதற்கு கீழே அப்போதைய போல்டரின் (Folder) பெயர் இருக்கும். நீங்கள் கோம்போ பாக்ஸ் (Combo box) பட்டனை அழுத்தினால் அந்த செயல் திட்டத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து போஸ்டர்களின் பட்டியலை பார்க்கலாம்.

பெரும்பாலான மெயில் செயல் திட்டங்களில் உள்ளே கட்டம் (inbox) வெளியே கட்டம் (outbox) அனுப்பப்பட்ட அயிட்டங்கள் (Sentitems) அழிக்கப்பட்ட அயிட்டங்கள் (Deleted items) ஆகிய நான்கு போல்டர்கள் எதுவும் குறிப்பிடாத நிலையில் (Default) கிடைக்கின்றன. மற்ற போல்டர்களை தேவைப்படும்போது நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம்.

உள்ளே கட்டத்தில் உங்களுக்கு வந்த கடிதங்களை வைத்துக் கொள்ளலாம். வெளியே கட்டத்தில் அனுப்புவதற்கு தயாராக இருக்கும் கடிதங்கள் இருக்கும். அனுப்பப்பட்ட கடிதங்களை அதற்கான போல்டருக்கும் அழிக்கப்பட்ட கடிதங்களை அதற்கான போல்டருக்கும் நகர்த்திக் கொள்ளலாம்.

இந்த நான்கு டீபால்ட் (Default) போல்டர்களும் நிரந்தரமானவை. இவற்றை நீங்கள் அழிக்க முடியாது. ஆனால், தேவைக்கேற்ப நீங்கள் உருவாக்கும் மற்ற போல்டர்களை அவற்றின் வேலை முடிந்ததும் நீங்கள் அழித்துவிடலாம்.

அதேபோல், இ-மெயில் செய்தி அனுப்பும் போது நீங்கள் அடிக்கடி மேற்கொள்ள வேண்டியதிருக்கும் செயல்களை (அதாவது யாருக்கு அனுப்புவது, அனுப்புதல் பெறுதல், அழித்தல் போன்றவை) மவுஸினால் அவற்றிற்கான சின்னங்களில் கிளிக்செய்வதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, ஒரு இ-மெயில் கடிதம் எழுதுவதற்கு டூல்பாரில் (toolbar) உள்ள கம்போஸ் நியூ மெசேஜ் (Compose New Message) என்னும் பட்டனில் கிளிக் செய்தால் ஒரு காலியான மெயில் படிவம் (Mail form) திரையில் தோன்றும்.

அதில் பின்வரும் பகுதிகள் இருக்கும்.

டு (To) இந்தப் பகுதியில் செய்தியை யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவருடைய இ-மெயில் முகவரியை டைப் செய்ய வேண்டும்.

சிசி (CC) இந்தப் பகுதியில் இந்தச் செய்தியை யாருக்கெல்லாம் அனுப்ப வேண்டுமோ அவர்களடைய இ-மெயில் முகவரியை டைப் செய்ய வேண்டும்.

பொருள் (subject) இந்தப்பகுதியில் இந்தச் செய்தி பற்றிய சுருக்கமான விளக்கத்தை டைப் செய்ய வேண்டும்.

உடல் (Body) அனுப்ப வேண்டிய செய்தியை இங்கு டைப் செய்ய வேண்டும்.

இவை தவிர, மெயில் செயல்திட்டங்கள் அனைத்திலும் அட்ரஸ் புக் (Address book) சிக்னேச்சர் பீச்சர் (Signature feature) அட்டாச்மெண்ட் பெசிலிட்டி (Attachment facility) போன்ற வேறு சில வசதிகளும் கிடைக்கின்றன.

அட்ரஸ் புக் (Address Book)

இந்தப் பகுதியில் நீங்கள் இ-மெயில் மூலம் அடிக்கடி தொடர்பு கொள்பவர்கள் பற்றிய விவரங்களை சேமித்து வைத்துக் கொள்ளலாம். அதாவது அவர்களுடைய பெயர் இ-மெயில் முகவரி போன்றவற்றை இந்தப் பகுதியில் சேமித்து வைத்துக் கொண்டால் பின்னர் ஒவ்வொருமுறை அவர்களுக்கு கடிதம் அனுப்பும்போதும் நீங்கள் இந்த விவரங்களை மீண்டும் டைப் செய்ய வேண்டிய தேவை இல்லை.

செய்தியை யாருக்கு அனுப்ப வேண்டும் என்பதை நீங்கள் தேர்வு செய்தால் போதும் அவருடைய பெயரும், இ-மெயில்

> *போற்றப்பட வேண்டியவை உண்மை, உழைப்பு, உயர்வு; பின்பற்றப்பட வேண்டியவை கனிவு, பணிவு, துணிவு; பேணப்பட வேண்டியவை, 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'.*
>
> **– தந்தை பெரியார்**

முகவரியும் தானாகவே மெயில் படிவத்தில் சேர்க்கப்பட்டுவிடும்.

இந்தப் பகுதியில் நீங்கள் புதிய இ-மெயில் முகவரிகளை சேர்த்துக் கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு கடிதம் அனுப்ப வேண்டுமெனில் ஒரு குழுவை உருவாக்கிக் கொள்ளலாம். பழைய முகவரிகளில் மாறுதல் செய்யலாம். தேவையற்ற முகவரிகளை அழித்துவிடலாம். ஒருவருக்கு இரண்டு இ-மெயில் முகவரிகள் இருந்தால் அவற்றின் ஒன்றை டீபால்ட் (Default) முகவரியாக ஆக்கிக் கொள்ளலாம்.

சிக்னேச்சர் பீச்சர்
(Sigment Feature)

இ-மெயில் செய்தியின் இறுதியில் ஒவ்வொரு முறையும் உங்களுடைய பெயரையும், இ-மெயில் முகவரியையும் டைப் செய்து கொண்டிருப்பது உங்களுக்கு சலிப்பாக இருக்கிறதா?

அப்படியானால், மெயில் செயல்திட்டத்தில் கிடைக்கும் கையெழுத்து வசதியை (Sigments feature) நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களுடைய பெயர், முகவரி, யூஆர்எல் அல்லது பின்குறிப்பு ஆகியவற்றை கையெழுத்து அம்சமாக பயன்படுத்தலாம்.

நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் இந்த கையெழுத்து அம்சம் இடம்பெறும் வகையில் இ-மெயில் செயல் திட்டத்தை நீங்கள் அமைத்துக் கொள்ளலாம்.

இணைப்பு வசதி
(Attachment Facility)

இ-மெயில் செய்தியில் படங்கள், அட்டவணைகள் போன்றவற்றை சேர்க்க முடியாது. ஆனால், அவற்றை இணைப்புகளாக (Attachment) சேர்த்துக் கொள்ளலாம். எந்த ஒரு கோப்பையும் (File) நீங்கள் இ-மெயிலுடன் இணைக்க முடியும். இ-மெயிலுடன் இணைப்பதற்கான கோப்புகளை அழுத்தி சுருக்கிக் கொள்வது நல்லது.

மெயிலுடன் கோப்புகளை இணைப்பதற்கு பிகேஜிப் (pkzip) போன்ற வசதிகளை பயன்படுத்தினால் அவை கோப்புகளின் அளவை சிறிதாக்கிவிடும். இதனால் இ-மெயில் அனுப்பும்போது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தலாம்.

இ-மெயிலுடன் ஒரு கோப்பை இணைக்க விரும்பினால் டூல் பாரில் உள்ள பேப்பர் கிளிப்பின் படத்தைக் கொண்ட சின்னத்தில் கிளிக் செய்யவேண்டும். அதைத் தொடர்ந்து கம்ப்யூட்டர் திரையில் தோன்றும் உரையாடல் கட்டத்தில் (Dialog Box) நீங்கள் இணைக்க விரும்பும் கோப்பின் பெயர் மற்றும் அது இணைக்கப்பட வேண்டிய இடம் ஆகிய விவரங்களை டைப் செய்ய வேண்டும்.

இதுபோல உரையாடல் கட்டம் முறைப்படி நிரப்பப்பட்டதும் அந்த கோப்பு மெயிலுடன் இணைக்கப்பட்டு விடும். பேப்பர்கிளிப் சின்னம் இருந்தால்அந்த மெயிலுடன் ஒரு இணைப்பு உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

முன்னுரிமையை நிர்ணயித்தல்

நீங்கள் அனுப்பும் ஒரு இ-மெயில் செய்திக்கு முன்னுரிமைகளை நிர்ணயிக்க முடியும். இதுபோல ஒரு இ-மெயில் செய்திக்கு முன்னுரிமை (priority) யை நிர்ணயிக்கும் போது நாம் தேர்ந்தெடுக்க லோ (low) நார்மல் (Normal) ஹை (high) ஆகிய மூன்று வகை முன்னுரிமைகள் இருக்கின்றன.

ஒரு இ-மெயில் செய்திக்கு (high) முன்னுரிமையை ஏற்படுத்துவதன் மூலம் அந்த செய்தி உடனடியாக கவனிக்கப்பட வேண்டும் என்பதை நாம் தெரிவிக்கிறோம். இதுபோன்ற ஹை முன்னுரிமை செய்திகள் அவை உடனடியாக கவனிக்கப்பட வேண்டும் என்பதை குறிக்கும் வகையில் சிவப்பு குறியிடப்பட்டிருக்கும்.

ஆனால், ஒவ்வொரு கடிதத்திற்கும் இந்த ஹை முன்னுரிமையை வழங்குவது நல்ல பழக்கமல்ல. அவசியமானால் மட்டும் அந்த முன்னுரிமையை பயன்படுத்த வேண்டும். எதுவும் குறிப்பிடப்பட வில்லையெனில் (Default) அந்த செய்தி நார்மல் (Normal) முன்னுரிமையை கொண்டதாக பாவிக்கப்படும்.

நன்றி : திரு. தமையந்திரன் எழுதிய இண்டர்நெட் (ஒரு நவீனபந்தம்) என்ற நூலிருந்து

வெளியீடு: பூங்கொடிபதிப்பகம், சென்னை.

★

பார்வையற்ற ஆசிரியர்கள் நியமனம் மாணவர்களுக்கு உதவித் தொகை உயர்வு

– முதலமைச்சர் கலைஞர் ஆணை

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12.3.1999 அன்று தலைமைச் செயலகத்தில் பார்வையற்ற கல்லூரி மாண்வர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைப் பரிவுடன் கேட்டார். அவர்களுடன் விவாதித்ததைத் தொடர்ந்து, பார்வையற்ற மாணவர்களும் பட்டதாரிகளும் பயனடையும் வகையில் சலுகைகள் வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

அதன்படி தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் 7.3.1999 அன்று வெளியிட்ட விளம்பரத்தின்படி நிரப்பப்படாமல் உள்ள இரண்டு ஆங்கில விரிவுரையாளர் பணியிடங்களையும், தற்போது காலியாக உள்ள சரித்திர விரிவுரையாளர் பணியிடம் ஒன்றையும் பார்வையற்றவர்களைக் கொண்டு நிரப்புவதற்கும், கூடுதலாக தமிழ் விரிவுரையாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கும், நிரப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 23 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில், வரும் கல்வியாண்டில் பார்வையற்றோரை நியமனம் செய்வதுடன் பார்வையற்றோருக்காக வரும் ஆண்டில் ஏற்படும் காலி இடங்களிலும், சமூக நலத்துறை நடத்திடும் சிறப்புப் பள்ளிகளில் தற்போது காலியாகவுள்ள 6 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களிலும் தகுதி வாய்ந்த பார்வையற்றோரை நிரப்புவதற்கும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

மேலும் ஆண்டுக்கு 9 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் 9 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 85 ரூபாயை 110 ரூபாயாகவும், பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 125 ரூபாயை 150 ரூபாயாகவும், முதுநிலைப் பட்டப்படிப்பு, பொறியியல், மருத்துவம், தொழில் மற்றும் சட்டப் படிப்பு பயில்வோருக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 170 ரூபாயை 195 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.



இவையல்லாமல், புத்தகம் கட்டும் பயிற்சி முடித்த 14 பேரை ஏழு அரசு அச்சகங்களில் தற்காலிகமாக நியமனம் செய்திடவும், 21 அரசு போக்குவரத்துக் கழகங்களில் - ஒவ்வொன்றிலும் ஒரு பார்வையற்றோரைப் பொருத்துநர் பணிக்கு நியமனம் செய்திடவும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

★ ★ ★

> **ஒரு மனிதனை இன்னொருவனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களைச் சேர்த்து வைப்பதுதான் அவற்றின் நோக்கம்.**
>
> **– காந்தியடிகள்**

பெரம்பலூர் மாவட்டத்தில்

வனப்பாதுகாப்பில் மக்கள் ஈடுபாடு

பொதுவாக வனத்துறையினர் வனத்தை பாதுகாப்பதற்கும் மரங்களை உற்பத்தி செய்வதற்கும் மட்டும் செயல்பட்டு வருகிறார்கள் என்ற எண்ணம்தான் நம்மிடம் உள்ளது. ஆனால் வனத்துறையினர் மக்கள் நலவாழ்வுபணிகளுக்கு, வனத்தையே நம்பி வாழும் கிராமப் பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு திட்டமிட்டே பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். மழை வளத்திற்கும், நல்ல இயற்கை சூழலுக்கும் காரணமாக உள்ள வனத்தை அழிக்காமலும் அழிந்து கொண்டிருக்கிற வனத்தை மீண்டும் புத்துயிர் அளித்து தேவையான அளவிற்கு மரச்செடிகளை நட்டு, அவைகளை பாதுகாக்க மக்களிடையே ஈடுபாட்டை வளர்க்க வனத்துறையினர் செயல்பட்டு வருகின்றனர். மரங்களை வெட்டி, காட்டையழித்து அன்றாட செலவுக்கு வழிதேடிக்கொண்டிருந்த மக்களை கண்டறிந்து, அவர்கள் மரங்கள் வெட்டுவதை தடுத்து, அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தொழில் நடத்த பயிற்சி அளிப்பதுடன், உதவியும் வனத்துறை மூலம் செய்து வருகின்றனர். அவ்வாறு பயன்பெறும் கிராம மக்கள் வனத்தை பாதுகாப்பதில் பெரிதும் அக்கறை காட்டி வருகிறார்கள். ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் பெரம்பலூர் மாவட்டத்தில் அடைக்கம்பட்டி, மருதடி, கீழக்கணவாய், தாமரைக்குளம் ஆகிய 4 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, 5 ஆண்டு வன வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் 350 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.143.29 இலட்சம் மதிப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் கிராம அளவில் ஒரு வனக்குழு அமைத்து, அக்குழுவில் அக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் தலைவராகவும், 7 அல்லது 8 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவும், ஒவ்வொரு குடும்பத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு பெண், ஒரு ஆண் வீதம் சேர்க்கப்பட்டு கிராம உறுப்பினர்கள் அடங்கிய பொதுக்குழுவும் இயங்கி வருகிறது. கிராம வனக்குழுவிற்கு வனசரக அலுவலர் செயலராக பணிபுரிகிறார். இக்கிராம வனக்குழு பரிந்துரையில் அப்பகுதிகளில் மரச்செடிகள் தயாரிக்கப்பட்டு மலைப்பகுதிகளில் நடப்பட்டு, வளர்க்கப்படுகின்றன. நடப்படும் மரக்கன்றுகள் வளர்ந்தபின் அவற்றின் பயன் இந்த கிராமத்தையே சென்றடையும். வனத்தை பெருக்கும் மரக்கன்றுகளுடன் புளி, நெல்லி, மூங்கில், நாவல், போன்ற பலன் தரும் மரங்களும் நடப்பட்டுள்ளன.

இவ்வாறு கிராம வனக்குழு சார்பில் களரம்பட்டி கிராமத்தில் 40 ஆயிரம் மரக்கன்றுகளும், புதுநகரில் 20 ஆயிரம் மரச்செடிகளும் வளர்க்கப் படுகிறது.

நடப்பாண்டில் இதுவரை அடைக்கம்பட்டி கிராம மலைப்பகுதியில் 1,23,200 மரச்செடிகளும், மருதடி கிராமத்தில் 1,24,750 மரச்செடிகளும், கீழக்கணவாய் கிராமத்தில் 1,21,850 மரச்செடிகளும், தாமரைக்குளம் கிராமத்தில் 1,22,750 மரச்செடிகளும் நடப்பட்டு, வனக்குழுவினரால் பாதுகாக்கப்பட்டு வருவதாக கோட்ட வன அலுவலர் எ.ரகமத் அலி தெரிவித்தார்.

அதேபோன்று வனப்பகுதியில் கிடைக்கும் மழைநீரை தடுப்பணைகள், கசிவுநீர் குட்டை ஆகியவை மூலம் கட்டுமானம் செய்து நீர் அறுவடை செய்து வனவளத்திற்கும் கிராம விவசாயத்திற்கும் பயனளிக்குமாறு பணிகள் செயல்படுத்தப்படுகிறது. இந்த வகையில் இந்த 4 கிராமங்களில் 3 கசிவுநீர் குட்டைகளும் 77 தடுப்பணைகளும் கட்டப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக மறுவாழ்வு பணியாக வனத்தையே நம்பி மரம் வெட்டுதல், ஆடுமாடுகள் மேய்த்தல் போன்ற தொழில் செய்து வனத்தையே அழித்து ஜீவனம் செய்து வந்த நபர்களை கண்டறிந்து, அவர்களையும் கிராம வனக்குழுவில் இணைத்து, அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பை உருவாக்கி பிழைக்க வழி செய்தல் போன்ற சமுதாய நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு ஒரு கிராமத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் நான்கு கிராமங்களுக்கும் ரூ.12 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் 70 சதவீதம் தனி மனித மறுவாழ்விற்காகவும், 30 சதவீதம் கிராம சமுதாய நலப்பணிகளுக்காகவும் செலவிடப்பட்டு வருகிறது.

தனி மனித மறுவாழ்விற்காக தச்சுத்தொழில், கொல்லம்பட்டறை, கல் உடைக்கும் தொழில், சவரத் தொழில், கிணறு வெட்டுதல் போன்ற தொழில்களில் ஈடுபடுவோருக்கு தொழிற்கருவிகள் வாங்கிக் கொடுத்தல், டீ கடை நடத்த உதவி செய்தல், தையல் தொழிலுக்கானக் கருவிகள், விவசாயக் கருவிகள் வழங்குதல் போன்ற உதவிகள் செய்யப்பட்டு வருகிறது. கிராம சமுதாய நலப்பணிகளாக கிராமத்திற்கு பயன்படும் வகையில் கசிவுநீர் குட்டைகளில் மீன்குஞ்சு வளர்த்தல், குடிநீருக்காக ஆழ்குழாய் அமைத்தல், நூலகத்திற்கு புத்தகங்களை வாங்கிக் கொடுத்தல், தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப் படுகின்றன.

அடைக்கம்பட்டி புதுநகர் வனக்குழு தலைவர் துரைசாமி அவர்கள் கூறும்போது இக்கிராமத்தில் 3 மாதத்திற்கு ஒருமுறை வனக்குழு கூட்டப்படுவதாகவும், கிராமத்திற்கு தேவையான நலத்திட்டங்கள் வனத்துறை மூலம் பெற்று செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அவ்வாறு செயல்படுத்தப் பட்டு வரும் சில பணிகள்

இக்கிராமத்தில் உள்ள ஒரு தெருவிற்கு வனக்குழு பரிந்துரையின் பேரில் தொலைக்காட்சி பெட்டி ரூ.17,000 மதிப்பில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த தொலைக்காட்சி பெட்டியால் நாள்தோறும் சுமார் 80 பேர் பயன்பெற்று வருகின்றனர். இதற்கு தொலைக்காட்சி அறை கட்ட வனத்துறை 5 மூட்டை சிமெண்ட் கொடுத்து உள்ளதாகவும், பொதுமக்கள் நன்கொடையாக ரூ.5,000மும் பெற்று கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதேபோன்று

ஏழை மக்களுக்கு
உதவி செய்வது என்பது, ஏழ்மை,
மனித சமுகத்தில்
இல்லாதிருக்கும் படி
செய்வதே ஆகும்.
- தந்தை பெரியார்

இக்கிராமத்தில் உள்ள உயர்தர தொடக்கப் பள்ளிக்கு ஊராட்சியின் சார்பில் வழங்கப்படும் குடிநீர் அப்பள்ளியில் பயிலும் 500 மாணவர்களுக்கு போதாமல் இருந்தது. அப்பள்ளிக்கு வனத்துறை மூலம் புதிதாக ஆழ்குழாய் ரூ.35,000 செலவில் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக அப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆர்.பெரியசாமி தெரிவித்தார். தனிநபர் வருமானத்தை பெருக்கும் வகையில், இக்கிராமத்தில் பள்ளியிறுதி வகுப்புவரை படித்து கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்த 20 பெண்களுக்கு தையற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக 4 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தையற்பயிற்சி பெறும் பெண்கள் பயிற்சி பெறும்போதே நாள்தோறும் சட்டை தைத்து ரூ.50 வருமானம் பெறுவதாக கூறினர்.

இக்கிராமத்தில் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட 60 வீடுகள் அடங்கிய காலனி தெருவிற்கு போதுமான அளவில் குடிநீர் வசதி இல்லாமல் இருந்து வந்தது. அக்காலனிக்கு நடுவில் ஒரு விவசாயக் கிணறு நல்ல நீருடன் இருந்துள்ளது. ஆனால் அது யாரும் கவனிப்பாரன்றி தூர்வாரப் படாமல் இருந்ததால், நீரை பயன்படுத்த முடியாத நிலையில் இருந்துள்ளது. அதை இக்குழு மூலம் ரூ.53 ஆயிரம் செலவில் தூர்வாரி, கைப்பிடி சுவர்கட்டி தற்போது அக்கிராம மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து அக்காலனி பெண்கள் வனத்துறை அலுவலர்களை பெரிதும் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

அடுத்து இப்பகுதியில் டி. களத்தூரில் உள்ள அரசு உயர் நிலைப்பள்ளிக்கு குழு பரிந்துரை மூலம் ரூ.88 ஆயிரம் செலவில் ஆழ்குழாய் அமைத்து, நீர்தேக்கத் தொட்டியும் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிந்து 250 பேர்கள் படிக்கும் இப்பள்ளி மாணவர்களுக்கு குடிநீர் வழங்கப்படும் என இக்கிராம வனச்சரக அலுவலர் பி.வரதராஜ் தெரிவித்தார்.

இப்பணிகள் காரணமாக வேலைவாய்ப்பும், தனிநபர் வருமானம் பெருகுவதுடன், வனப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள நீர் நிலைகளான கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து பயிர்சாகுபடி முறையில் மாற்றமும் ஏற்படும். இதனால் விவசாய பொருளாதாரம் உயர வழி அமைவதுடன் வனக்குழுவின் பல பணிகளால் வனம் பாதுகாக்கப்படும். அழிந்து வரும் வனமும் புத்துயிர் பெறும் என்பது கண்கூடு. ●

எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

எங்கள் ஊர் திருவாரூர் மாவட்டம் - திருத்துறைப் பூண்டி தாலுக்கா - முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கீழநம்மங்குறிச்சி பஞ்சாயத்தை சேர்ந்தது. மங்கலூர்-வடக்கு அரிசனத் தெரு எங்கள் ஊருக்கு மண்சாலை உள்ளது. கப்பி, தார்ச்சாலை, வேண்டியும் பல கோரிக்கை அடங்கிய மனுக்கள் கொடுக்கப்பட்டும் எந்தவித பலனும் இல்லை. குடிதண்ணீர் இல்லாமல், குளம், குட்டை, தண்ணீரை குடிக்க வேண்டியுள்ளது. மின்சாரம் ஊருக்கு வழங்கப்பட்டும், தேவையான நேரத்தில் அதாவது 6 முதல் 9 மணி முடிய பவர் இல்லாமல் மண்ணெண்ணெய் விளக்கை ஏற்றி வைத்து உணவு அருந்த வேண்டியுள்ளது. மயானச் சாலை இல்லை. மயான கொட்டகையும் இல்லை. மழைகாலங்களில் பிணத்தை எரிக்க மிகவும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. இங்குள்ள கிராம அங்காடி நலிந்த மக்கள் வாங்கி சாப்பிடுகிறவர்கள் பகுதியில் இல்லாமல் உள்ளது. வரும் பொருள்கள் அனைத்தும் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டு

எங்களுக்கு கிடைப்பதில்லை. மேலே குறிப்பிட்ட அனைத்தும் சாதி இந்துக்கள் உள்ள பகுதியில் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த ''கலைஞரின்'' பொற்கால ஆட்சியிலாவது இந்த நீண்ட காலப் பிரச்சினையை தீர்த்து வைக்க தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கா.சுப்பிரமணியன் மற்றும்
ஊர்பொதுமக்கள்
மங்கலூர்–வடக்கு
திருவாரூர் மாவட்டம்.

தீர்வு :

சாலை வசதி

மங்கலூர் வடக்கு அரிசனத் தெரு மண் சாலையாக உள்ளது. மழைக்காலங்களில் போக்குவரத்து சிரமமாக உள்ளது. நடப்பு நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தில் சேர்த்து செப்பனிட ஊராட்சி மன்றம் தீர்மானம் இயற்றி மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைக்கப் பெற்றதும் சீர் செய்யப்படும்.

குடிநீர் வசதி

மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி இணைப்புகள் இன்னும் கொடுக்கப்படவில்லை. மாற்று வசதியாக 9 கைபம்புகள் அமைத்து அனைத்தும் நல்லமுறையில் இயங்கிவருகின்றன. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இணைப்பு கொடுக்க நடவடிக்கையில் உள்ளது. 1,530 மீட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பைப்லைன் குழாய் நீட்டிப்புக்கு மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பணி முடிவுற்றதும்

நம்மை விட சிலர்
தாழ்ந்தவர்களென்று நாம் கருதுவது
நம்மிடையே தீமை மிகுதியாக
இருக்கிறதென்பதைக் காட்டுகிறது.
இந்த தீமையை நாம் ஒழிக்காவிட்டால்
அது நம்மை ஒழித்துவிடும்.
– காந்தியடிகள்

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க இயலும்.

மின்வசதி

குறைந்த மின் அழுத்தம் காரணமாக இப்பகுதி முழுமையும் மின் விளக்குகள் சரிவர எரிவதில்லை, மின் வாரியத்துடன் தொடர்பு கொண்டு வேறு மின் மாற்றி அமைக்க நடவடிக்கையில் உள்ளது.

மயானச் சாலை

மயானச் சாலையில் ஆக்கிரமிப்புக்கள் உள்ளன. அவைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மயான கொட்டகை இல்லை. ஏதேனும் திட்ட உதவி கிடைத்தால் செய்து தரப்படும்.

கிராம அங்காடி

மனுதாரர் குறிப்பிட்டிருப்பது போல் அத்தியாவசிய பொருள்கள் எதுவும் அதிகவிலைக்கு விற்கப் படவில்லை. மேலும், அங்காடி, பொதுமக்கள் அதிகம் வசிக்கும் இடத்தில்தான் உள்ளது. மேலும் பொருள்கள் அனைத்தும் அரசு நிர்ணயம் செய்துள்ள விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்)
ஊராட்சி ஒன்றியம், முத்துப்பேட்டை.
திருவாரூர் மாவட்டம்.

பிரச்சினை :

கோவை மாநகராட்சி, ரேஸ் கோர்ஸ் அரசு ஊழியர் குடியிருப்பில் உள்ள அமுதம் நியாயவிலைக் கடை எண்.17ல் (டி.என்.சி.எஸ்.சி.) சுமார் 2,700 உறுப்பினர்கள் உள்ளனர். இதனால் அவசியப் பொருட்கள் வாங்க நீண்ட நேரம் வரிசையில் நிற்கும் அவலம் உள்ளது. மேலும் அரசுப் பணிக்குச் செல்ல வேண்டியுள்ளதால் பொருட்கள் வாங்க தவறிவிடுகிறது. எனவே, இந்த கடை எண்.17ஐ 2 அல்லது 3 கடைகளாக பிரித்து அரசு ஊழியர்கள் ரேஷன் பொருட்களை எளிதில் வாங்க ஏற்பாடு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தி.எல். ரங்கராஜன்
ராமநாதபுரம், கோவை மாவட்டம்.

தீர்வு :

கோவை மாவட்டம், கோவை ராமநாதபுரம் 33, ரூபா நகர் எக்ஸ்டென்சன் என்ற விலாசத்தில் குடியிருக்கும் திரு.தி.எல்.ரங்கராஜன் என்பவரின் கோரிக்கை தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டது. கோவை நகரம் ரேஸ்கோர்ஸ் அரசு அலுவலர் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாயவிலைக் கடை எண்.17ஐ இரண்டாக பிரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. ரேஸ்கோர்ஸ் பகுதியில் அமைந்துள்ள நியாயவிலைக் கடை எண்.17, 85 மற்றும் 7 ஆகியவற்றில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கார்டுகள் இணைக்கப்பட்டுள்ளதால் அவற்றை பிரித்து தனியாக ஒரு புதிய நியாய விலைக் கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய நியாயவிலைக் கடை திறப்பதன் மூலம் கடை எண்.17ல் அதிக கூட்டம், ஏற்படும் நிலை தவிர்க்கப்படும் என்பதையும் மனுதாரரின் கோரிக்கை குறித்து ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கோவை மாவட்டம்

பிரச்சினை :

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டத்திலுள்ள பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடம் பெரணமல்லூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம் உள்ளது. மருத்துவ ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. பேரூராட்சியாக உள்ள முக்கியமான அவ்வூருக்கு வந்தவாசியில் தாலுக்கா அலுவலகம் உள்ளது. ஆனால், ஆரணியிலிருந்து வந்தவாசி சாலையில் உள்ள சடந்தாங்கலிலிருந்து 2 கி.மீ. உள்ளே உள்ள பெரணமல்லூருக்கு வந்து செல்லத்தக்க அளவில் ஒரே ஒரு அரசுப் பேருந்து மட்டும் (தடம் எண்.241) இயங்கி வந்தது. இப்பேருந்து குடியாத்தம் -வந்தவாசி வழியில் இயங்கி வந்தது. ஆனால், இரண்டு மாத காலமாக இப்பேருந்து பெரணமல்லூருக்கு வந்து செல்லாமல் நேராக வந்தவாசி-ஆரணி வழியே குடியாத்தம் சென்று

விடுகிறது. பொதுமக்கள் போக்குவரத்து ஊழியர்களை விசாரித்தால், 'நாங்கள் என்ன செய்வது.. சாலை சரியில்லை.' பெரணமல்லூர் உள்ளே வந்து போக கூடுதலாக 5 கி.மீ. ஆகிறது என்ற சாக்குப் போக்கைச் சொல்லி கடத்தாங்கல் கூட்டுப் பாதையிலேயே பெரணமல்லூர் வாசிகளை இறக்கிவிடும் கொடுமை நடக்கிறது. ஒரு பேருந்து கூட ஊருக்கு வந்து செல்லாத இந்நிலையில் நூற்றுக் கணக்கான மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வந்தவாசி - ஆரணி சாலையில் செல்லும் அனைத்து அரசுப் பேருந்துகளையும், பெரணமல்லூருக்குள் விடவில்லையென்றாலும் ஏற்கெனவே சென்று கொண்டிருந்த குடியாத்தம்-வந்தவாசிப் பேருந்தை (தடம் எண். 241)யையாவது பெரணமல்லூருக்குள் வந்து செல்ல போக்குவரத்து நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

சேகரன், பெரணமல்லூர்
திருவண்ணாமலை மாவட்டம்.

தீர்வு :

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் இயக்கப்பட்டு வரும் மாவட்டத் தடம் எண்.214 குடியாத்தம்-மேல்மருவத்தூர் (வழி) வேலூர், ஆரணி, வந்தவாசி, என இயக்கப்படும் 2 நடைகளில் எந்தவித நடை இழப்பின்றி இயக்க சம்பந்தப்பட்ட கிளைமேலாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர் தமிழ்நாடு அரசு
போக்குவரத்துக் கழகம், வேலூர்.

பிரச்சினை :

சின்னசேலம் பேரூராட்சியில் காந்தி நகருக்குச் சொந்தமான மயானத்தை அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்த நிலச்சுவான் தாரர் இரா. சக்கரபாணி என்பவர் பட்டா வாங்கி விட்டார். பொதுமக்கள் பிரேதம் புதைக்கப் போகும்போது என் பட்டாவில் புதைக்கக்கூடாது என்று கூறுகிறார். இது குறித்து, கோட்டாட்சியரிடம் மனு கொடுத்ததின் பேரில் கோப்பு உருவாகி, பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டது; பட்டாவை ரத்து செய்து மயானமாக மாற்றித்தர கோப்பு எண்.அ9/2630/95ம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சென்றது. மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும் ரத்துசெய்து மயானமாக மாற்றித்தருகிறேன் என்றும் கூறினார். ஆனால் இதுவரையில் அவ்வாறு மாற்றப்படவில்லை. எனவே தாங்கள், சின்ன சேலம் வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர், கோட்டாட்சியர் அனைவரும் விசாரணை செய்து பரிந்துரை செய்தது போலவே மயானமாக மாற்றித்தர தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

த.செல்வராசு, பொதுமக்கள் சார்பாக
கவுன்சிலர், சின்னசேலம்.

தீர்வு :

சின்னசேலம், காந்திநகர் காலனி மக்கள் புலஎண். 558/5-0.18.5 ஏர்ஸ் நிலத்தினை மயானமாக பயன்படுத்தி வருவதாகவும், 4,000 மக்கள் தொகை கொண்ட காலனிக்கு இப்பரப்பு போதுமானதல்ல என்பதால், மயானத்தின் மேற்கு புறத்தில் புல எண்.558/7- 0.54.0 ஏர்ஸ் நிலத்தை ஒப்படை மூலம் திரு.ராமசாமி என்பவருக்கு வழங்கி தற்பொழுது அவரது மகன் சக்கரபாணி பெயரில் பட்டவாக உள்ளதாகவும், மேற்படி நபர் தனக்கு பட்டா செய்துள்ள இடத்தில் 0.25 சென்ட் நிலத்தை மயான விரிவாக்கத்திற்கு தர சம்மதித்து வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று கள்ளக்குறிச்சி கோட்டாட்சியர் தெரிவித்து உள்ளார்.

மாவட்ட ஆட்சியர்
விழுப்புரம் மாவட்டம்.

பிரச்சினை :

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் குன்னம் வட்டத்தில் கீழ்பபெரம்பலூர் கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று செயல்பட்டு வருகின்றது.

1983-84ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டு 15 ஆண்டுகள் ஆனபின்பும் மாணவர்கள் எண்ணிக்கை 470 ஆனபின்பும் இதுவரை அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் வழங்கப் படவில்லை. இப்பள்ளியானது 1992-93 முதல் 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து 10ஆம் வகுப்பில் 80 சதவிகிதத்திற்கு மேல் தேர்ச்சியினைப் பெற்று மிகவும் பின்தங்கிய மாணவர்களை தரத்தில் உயர்த்தி வருகிறது.

அறிவியல் ஆசிரியர் இல்லாத நிலையில் அறிவியலில் 100 சதவீதம் பெறவியலா காரணத்தால் 10ஆம் வகுப்பில் 100 சதவீதம் எட்டவியலாத நிலை

தொடர்ந்து வருகிறது. இப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 470 ஆகும். 7 இடைநிலை ஆசிரியர் பணியாற்ற வேண்டிய நிலையில் 3 இடைநிலை (அதில் ஒன்று காலிப் பணியிடம்) ஆசிரியர்களே பணிபுரிந்து வருகின்றனர். 4 இடைநிலை ஆசிரியர்களும், ஒரு பட்டதாரி அறிவியல் ஆசிரியரும், கலை ஆசிரியர் ஒருவரும் அரசினால் அனுமதிக்கப்பட்டால் பின்தங்கிய பகுதியிலுள்ள இப்பள்ளி மேலும் சிறப்பாக செயலாற்ற இயலும்.

சிறிதும் பெரிதுமான 50 வேப்ப மரங்கள் வளர்க்கப்பட்டு அவற்றின் நிழலில் 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவர்கள் சுமார் 230 பேர் கல்வி பயின்று வருகின்றனர். கட்டட வசதி இன்மையால் மழைக்காலங்களில் இவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இரு வகுப்பறைகள் கொண்ட ஒரு கட்டடம் சுமார் 6 மாதத்திற்கு முன் அனுமதிக்கப்பட்டிருந்தும் இதுநாள் வரை கட்டடப் பணி தொடங்கப்படவில்லை. மேற்கண்ட கட்டடத்தை விரைவில் கட்டி முடிக்கவும், மேலும் போதுமான கட்டட வசதி செய்து கொடுக்கவும் மேலும் தேவையான ஆசிரியர்களை நியமிக்கவும் ஆவன செய்ய வேண்டுகிறோம்.

க. பழமலை தலைவர்,
பெற்றோர் ஆசிரியர் கழகம், பெரம்பலூர் மாவட்டம்.

தீர்வு :

1997-98ஆம் ஆண்டில், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் கீழப்பெரம்பலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ.2,50,000 மதிப்பீட்டில் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது.

உயர்நிலைப்பள்ளிக் கட்டிட வேலையை ஆரம்பித்து செயல்படுத்திட திட்ட அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

விரைவில், உதவி கோட்டப் பொறியாளரிடம் டெண்டர் இசைவு பெற்று இம்மாத இறுதிக்குள் கட்டிட வேலையை துவக்கிவிடுகிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர், ஊராட்சி ஒன்றியம்,
வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்.

பல்வேறு சாதியினர்
சட்டத்தினால் மட்டும் ஒன்று
சேர்ந்து இருக்க முடியாது.
அன்பு காட்டும் ஒரே ஒரு
வழியில்தான் அவர்களை ஒன்று
சேர்த்து வைக்க முடியும்.
- டாக்டர் அம்பேத்கர்

கீழப்பெரம்பலூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் பணியிடம் அரசால் அனுமதிக்கப்பட்ட பின் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் அனுமதியின் பேரில் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன்மை கல்வி அலுவலர்,
பெரம்பலூர் மாவட்டம்.

பிரச்சினை :

ஈரோடு மாவட்டம், இந்திரா நகர் காலனியில் ஆற்று தண்ணீர் ஒழுங்காக வருவதில்லை. ஒருநாளைக்கு அரை மணி நேரம் தான் தண்ணீர் வருகின்றது. வீட்டிற்கு 1 குடம் தண்ணீர் கூட கிடைப்பது இல்லை. ஆனால், கவுண்டர் வீட்டிற்கும், பட்டி தொட்டிக்கும், மாட்டுக் கொட்டகைக்கும் எல்லாம் தண்ணீர் நிறைந்து ஓடுகிறது. எங்களுக்குக் குடிக்கக்கூட தண்ணீர் கிடைப்பது இல்லை. எங்களுக்கு வரும் தண்ணீர் பைப் கேட் வால்வை அடைத்து விடுகிறார்கள். ஐயா, எங்களுக்குத் தண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். காலை 5 மணி முதல் 11 மணி வரை, தண்ணீர் வந்தால் எங்களுக்கு போதுமான அளவு இருக்கும். தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஊர் பொதுமக்கள், இந்திரா நகர் காலனி,
பாரியூர் நக்கவுண்டம் பாளையம்,
கோபி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்.

தீர்வு :

கோபி ஊராட்சி ஒன்றியம், பாரியூர் ஊராட்சி இந்திரா நகர் அருந்ததியர் காலனிக்கு விசைப்பம்பு திட்ட குடிநீர் விநியோக குழாயிலிருந்த அடைப்புகள் நீக்கப்பட்டு போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆற்றுநீரும் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி குடியிருப்பில் குடிநீர் தட்டுப்பாடு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவி இயக்குநர் ஊரக வளர்ச்சி,
ஈரோடு மாவட்டம்.

பிரச்சினை :

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் தாலூக்கா, பங்கயற்செல்வி கிராமத்தைச் சேர்ந்தவர். எங்கள் பகுதியில் டோல்கேட் பிச்சாண்டார் கோவில் என்ற பகுதியில் நாங்கள் பஸ் ஏறி திருச்சிக்குச் செல்வது வழக்கம். வால்குடி - திருச்சி பேருந்தும், சமயபுரம் திருச்சி பேருந்தும், மண்ணச்சநல்லூர் - திருச்சி பேருந்தும் (டவுன் பஸ்) எங்கள் பகுதி டோல்கேட் வழியாகத்தான் திருச்சி செல்ல வேண்டும். காலை சுமார் 9-10 இடைவெளியில் 4 தடவை டோல்கேட்டிலிருந்து திருச்சிக்கு டவுன் பஸ் விட்டால் நன்றாக இருக்கும். ஏனெனில் காலை நேரத்தில் பள்ளிகள், கல்லூரிகள், வேலைக்குச் செல்வோர் என பல தரப்பினர் கூட்டமாக செல்வதால் பஸ்ஸில் தொங்கிக் கொண்டு செல்வதைப் பார்க்க பயங்கரமாக இருக்கிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படுகிறது. எனவே, காலை நேரத்தில் கூடுதலாக பஸ் விட்டு எங்கள் பிரச்சினையை தீர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆர். கலியபெருமாள், பங்கயற்செல்வி கிராமம்,
பிச்சாண்டார் கோயில், திருச்சி மாவட்டம்.

தீர்வு :

திருச்சி டோல்கேட் பகுதியிலிருந்து காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள்ளாக சத்திரம் பேருந்து நிலையத்திற்கு கூடுதலாக நான்கு நடைகள் இயக்கக் கோரியுள்ளார்கள்.

லால்குடி, சமயபுரம் மற்றும் மணச்சநல்லூர் ஆகிய ஊர்களிலிருந்து சத்திரம் பேருந்து நிலையத்திற்கு காலை 9 முதல் 10 மணிக்குள்ளாக 24 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

மேலும் 20.9.98 முதல் சத்திரம் பேருந்து நிலையம் - மண்ணச்சநல்லூர் வழித்தடத்தில் ஒரு புதிய நகரப் பேருந்து மூலம் கூடுதலாக 28 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொதுமேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

மதி நலம் கமழும் நிதிநிலை அறிக்கை

மதிநுட்பக் கலைஞர் சட்ட
மன்றத்தில் வழங்கி யுள்ள
நிதிநிலை அறிக்கை கண்டால்
நெஞ்செலாம் மகிழும்! தில்லி
புதுவரிச் சுமைக ளாலே
பொழுதெலாம் வாட்டும் போது
இதமாக வரிகு றைத்த
ஏந்தலை வாழ்த்து வோம்நாம்!

‘கணினி’யை, ‘இணைய’ மென்னும்
காலத்தின் கொடைகள் தம்மை
அணிகளாய்ப் பெற்று நாமும்
அன்றாடம் உயர்வதற்கே
துணிவோடு வரிகுறைத்தார்
தொலைநோக்குப் பார்வை யாலே
வணிகரின் சுமை இறங்க
வரிகளில் சலுகை தந்தார்!

‘தாலி’யை, ‘மெட்டி’ தன்னைச்
சராசரிப் பெண்கள் கூட
காலமும் அணிந்து கொள்ள
கழித்திட்டார் வரியை! தொன்மை
சீலத்தால் சிறந்தே நிற்கும்
‘சித்தம ருந்து கட்கே
மூலநோய் போலி ருந்த
முழுவரி எடுத்து விட்டார்!

புதுவரி கொஞ்சம் போட்டார்
புகைக்கும் ‘சிகரெட்’ மீது!
‘மது’வெனும் அரக்க னுக்கோ
வரிஎனும் விலங்கை இட்டார்!
புதுநஞ்சுப் ‘பான்ம சாலா’
பொல்லாத மயக்கம் ஒய
விதித்திட்டார் வரியை! அன்னார்
வித்தகம் என்ன சொல்வோம்?

சாதிநோய் தீய்ந்து மாயச்
‘சமத்துவ புரங்கள்’ கண்ட
சாதனை வேந்தர் அந்தச்
சரித்திரத் திட்டத் திற்கே
வாதிட்ட ‘அய்யா’ வின்பேர்
வைத்திங்கே பெருமை கொண்டார்!
ஆதாரம் கிராமம் என்றே
ஆயிரம் திட்டம் கண்டார்!

பெற்ற‘தாய் மொழி’ம றந்தே
‘பிறமொழி’ வால்பி டித்துப்
புற்றீசல் போலே நித்தம்
புறப்பட்ட மழலைப் பள்ளி
கற்றிடும் வகையில் ஈங்கே
கணக்கிட்டுப் பாடம் சொன்னார்!
கொற்றவர் வாழ்க! அன்னார்
கோல்வாழ்க! நீடு வாழ்க!

– கவிவேந்தர் கா.வேழவேந்தன்
நன்றி : முரசொலி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
... அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:568926/568927/564906

2/9/562

தூய
பட்டு
தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

பதிவு எண் . M 8676
Licence No. TN/MS(C)/PP-23